வழிகாட்டி



வெளியீடு

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம்

2013

சமூக எழுச்சி இயக்க இலக்குகள்



R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

எழுச்சிப்பாதை

1947ஆம் ஆண்டில் மாவையில் தோற்றுவிக்கப்பட்ட சமூக எழுச்சி இயக்கத்தினதும் அதன் வழிவந்த மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், பிதாமகராகவும் பெருந்தலைவராகவும், கோட்பாட்டாளராகவும், செயற்பாட்டாளராகவும் இருந்து கடந்த 65 ஆண்டுகாலமாக மக்கள் சமுதாய மேம்பாட்டிற்கு தன்னையே முழுமையாக அர்ப்பணித்த உத்தமர் ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் வாழ்வியலை வரலாற்று ஆவணம் ஆக்குவதன் மூலம், இன்று மறுமலர்ச்சி பெற்று விளங்கும் முதன்மைப்பயனாளிகளான நாவிதர் சமூகத்தின் நன்றியையும் பாராட்டுதலையும் உலகறியச் செய்வதே இந்நூலின் முதன்மையான நோக்கமாகும்.

குறித்த எழுச்சி இயக்கம், மன்றம், சமாசம், நிதியம் ஆகியவற்றின் சமூக எழுச்சிச் சிந்தனைகள், கோட்பாடுகள், செயற்பாடுகள் ஆகியவற்றையும் குறிப்பாக அவை இச்சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்திய தாக்கங்களையும் மாறுதல்களையும் ஆய்வு நோக்கில் பதிவு செய்ய இந்நூல் விளைந்துள்ளது.

வெளியீடு

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்
புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம்

நூல் தரவு

நூல் - எழுச்சிப் பாதை

நூற் குழுவினர் - **மதியுரைஞர்**

பேராசிரியர் சபா.ஜெயராசா
உயர்திரு. உடுவை சி. தில்லைநடராஜா
உயர்திரு. க. சண்முகலிங்கம்

- **தொகுப்பாசிரியர் குழு**

கலாபூசணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை (பிரதம தொகுப்பாசிரியர்)
உயர்திரு. வி. இராஜேந்திரம் (உதவி ஆசிரியர்)
உயர்திரு. செ.சந்திரகுமார் (நிழற்படத்தொகுப்பு)

- **நூற்குழு அங்கத்தவர்கள்:-**

உயர்திரு. கி. கணேஸ் (தலைவர்)
உயர்திரு. செ. ஜெகதாசன் (செயலாளர்)
உயர்திரு. க. சிவஞானம் (பொருளாளர்)
உயர்திரு. க. மாயாதிரவியம்
உயர்திரு. க. சுப்பிரமணியம்
உயர்திரு. சி. செல்லத்துரை
உயர்திரு. இ. சாந்தகுமார்
உயர்திரு. வே. திருச்செல்வம்
உயர்திரு. க. பாஸ்கரன்
உயர்திரு. செ. கோபிநாத்
திருமதி. புஸ்பராசமணி ஆனந்தராசா
திருமதி. நவமணி ராஜ்குமார்

உரிமை - சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்- புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்

முதல் பதிப்பு - 28 July 2013

பக்கம் - 465

பதிப்பகம் - கீதா பதிப்பகம், கொழும்பு - 13
தொலைபேசி இலக்கம்: 077350088,
மின்னஞ்சல்: vrajenthiram@yahoo.com

வெளியீடு - சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் - புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்

தமிழ்த்தாய் வாழ்த்து



நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!
பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்து துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே!!

– மனோன்மணியம் சுந்தரனார்

எழுச்சி காண்போம் வாரீர்

சமூக எழுச்சி இயக்கம்	–	1947
மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம்	–	1955
சமூக முன்னெற்றக் கழகங்களின் சமாசம்	–	1981
புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்	–	1993

சமூக எழுச்சி இயக்கம் வாழீ ! மன்றம் வாழீ!!
சமாசம் வாழீ!! நிதியம் வாழீ!!
பிதாமகர் ஆர்.எம்.என். வாழீ!!
எழுச்சித் தந்தை நாகலிங்கம் வாழீ!!
எம் உயர்ச்சிக்கு அவர் தந்த வழிமுறை வாழீ!!
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வென உணர்வோம்
வேற்றுமை ஒழித்தே ஒற்றுமை காப்போம் வாரீர்.
பிச்சை புகினும் கற்கை நன்றென உணர்வோம்.
கல்விப் புலமை பெருக்கிக் கற்றோராவோம் வாரீர்.
மரபுவழித் தொழில்முறை விலங்கென உணர்வோம்.
தொழிற்பெயர்ச்சி செய்தே புரட்சிச் செம்மல்களாக வாழ்வோம் வாரீர்.
தொழில் அடிமை, சிறுவர் கொடுமை ஆகியன ஒழிப்போம்.
சமூக சீர்நெறி தழைத்தோங்க வழிகாண்போம் வாரீர்.
வறியோர் நலிவோர்க்குக் கைகொடுப்போம்.
எல்லோரும் வளமாக வாழ வழியமைப்போம் வாரீர்.
உயர்வான ஒழுக்க கலாசார பண்பாட்டு விழுமியம் காப்போம்
விழுமியச் செம்மல்களாக மதிப்புற வாழ்வோம் வாரீர்
சமூக இன சமத்துவத்தோடு சமூக நீதி தழைத்தோங்கி
எல்லோரும் இன்புற்று வாழத் துணை நிற்போம் வாரீர்.
என்றும் நல்லதையே சிந்திப்போம்
எப்பொழுதும் நல்லதையே சொல்வோம்
எல்லோர்க்கும் நல்லதையே செய்வோம்
மனிதகுலம் உய்ய இவ்வழி நிற்போம் வாரீர்.

பொருளடக்கம்

1. முதலாம் பகுதி 11–28
– அணிசேர் விடயங்கள்.

2. இரண்டாம் பகுதி 29–132
– எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் கல்வி, தொழில், தலைமைத்துவப் புலமைகள்.

3. மூன்றாம் பகுதி 133–324
– எழுச்சி இயக்கம் பற்றிய சிந்தனைகள், கோட்பாடுகள், செயற்பாடுகள்.

4. நான்காம் பகுதி 325–378
– எழுச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள், சான்றோர்கள், சாதனையாளர்கள், புலமைப்பரிசில் பெற்றோர்.

5. ஐந்தாம் பகுதி 379–466
– இணைப்புக்கள்.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் பிரதான உத்தியோகத்தர்கள் 1981 –2013

தலைவர்கள்:

திரு. இராமு முருகேசு நாகலிங்கம்	15.04.1981	- 1988
திரு. நாகமுத்து தங்கவடிவேல்	1989	- 2003
திரு. கணபதி மயில்வாகனம்	14.01.2004	- 2012
திரு. இராசரட்ணம் சாந்தகுமார்	18.03.2012	- இன்றுவரை

பொதுச்செயலாளர்கள்

திரு. கந்தையா மாயாதிரவியம்	15.04.1981	- 1988
திரு. சபாபதி சின்னையா	1989	- 2003
திரு. கந்தையா நடேசன்	2003	- 2004
திரு. யேசுதாசன் காணிக்கைநாதன்	2004	- 2012
திரு. வீரசிங்கம் குகநேசன்	2012	- இன்றுவரை

பிரதம பொருளாளர்கள்

திரு. கதிரேசு நவரத்தினம்	1981	- 1998
திரு. சிதம்பரப்பிள்ளை நாகேஸ்வரன்	1998	- 2012
திரு. யோ.பிரான்சிஸ் சேவியர்	2012	- இற்றைவரை

போஷகர்கள்

பிரதம போஷகர்

திரு. இராமு நாகலிங்கம் 1989 - இற்றைவரை


போஷகர்

திரு. கதிரேசு நவரத்தினம்	1998	- 04.06.2007
திரு. கணபதி மயில்வாகனம்	2012	- இற்றைவரை
திரு. சின்னத்தம்பி செல்லத்துரை	2012	- இற்றைவரை
திரு. கதிரேசு சுப்பிரமணியம்	18.03.2012	- இற்றைவரை
திரு. சபாபதி சின்னையா	01.06.2013	- இற்றைவரை

பிரதம அமைப்பாளர்கள்

திரு. பரமு பாலசுப்பிரமணியம்	1981	- 1985
திரு. சின்னத்தம்பி செல்லத்துரை	2004	- 2012
திரு. யேசுதாசன் காணிக்கைநாதன்	2012	- இற்றைவரை

உயிர் நீத்த சமூக முன்னணித் தலைவர்கள்



மாவைப்பதி சமூகப்பற்றாளர்
சிதம்பரி சின்னத்தம்பி
தோற்றம்:1981.05.06 மறைவு:2005.11.18



மாவைப்பதி சமூகப்பற்றாளர்
பொன்னர் கந்தையா
தோற்றம்:1929.01.29 மறைவு:1998.06.16



உரும்பிராய்ப்பதி சமூகஜோதி
எஸ். வி. தம்பையா
தோற்றம்:1932.10.25 மறைவு:2002.01.09



பண்டத்தரிப்புப்பதி சமூகப்பற்றாளர்
சோதிமுத்து முருகேசு
தோற்றம் :1933.08.03 மறைவு:2002.08.01



இளவாலைப்பதி சமூகப்பற்றாளர்
உயர்திரு. கணபதி தம்பிராசா
தோற்றம்:1939.04.16 மறைவு:1990.02.21



அரியாலைப்பதி சமூகஜோதி
கதிரேசு நவரத்தினம்
தோற்றம்:1934.03.09 மறைவு:2007.06.04



நல்லூர்ப்பதி சமூகப்பற்றாளர்
நாகரத்தினம் யோகராசா



நல்லூர்ப்பதி சமூகப்பற்றாளர்
முத்தையா செல்லத்தம்பி
தோற்றம் :1929.05.17 மறைவு:2002.11.27



நல்லூர்ப்பதி சமூகப்பற்றாளர்
மார்க்கண்டு லோகேஸ்வரன்
தோற்றம்:1957.12.12 மறைவு:1999.08.02



அச்செழுப்பதி சமூகப்பற்றாளர்
கந்தையா வெற்றிவேல்
தோற்றம்:1962.08.27 மறைவு:2005.02.09



சங்கத்தானைப்பதி சமூகப்பற்றாளர்
கந்தையா தம்பிராசா
தோற்றம்:1938.06.22 மறைவு:2010.01.30



வேலணைப்பதி சமூகப்பற்றாளர்
யோ. ஞானப்பிரகாசம்



சங்கானைப்பதி யோகக்கலாஜோதி
வைரவி சண்முகம்



நல்லூர்ப்பதி சமூகப்பற்றாளர்
மாணிக்கம் சம்புலிங்கம்
தோற்றம்:1950.04.16 மறைவு:2010.09.12



நீர்வேலிப்பதி சமூகப்பற்றாளர்
நாகமுத்து சோதிலிங்கம்
தோற்றம்:1959.10.17 மறைவு:2012.04.10



நீர்வேலிப்பதி சமூகப்பற்றாளர்
சின்னப்பொடி கந்தையா
தோற்றம்:1931.03.15 மறைவு:2003.11.18



நாவற்குழிப்பதி சமூகப்பற்றாளர்
கணபதி பொன்னுத்துரை
தோற்றம்: மறைவு:2012



மூளாய்ப்பதி சமூகப்பற்றாளர்
செல்லையா கதிரவேலு

மதியுரைஞர் சபை அங்கத்தவர்கள்



பெயர் : பேராசிரியர் சபா. ஜெயராசா
ஊர் : இணுவில்
பட்டங்கள் : கல்விமாணி, முதுமாணி (கல்வி), கலாநிதி (Ph.D), இலக்கியக் கலாநிதி (D.Lit)
எழுதிய நூல்கள் : 75 இற்குமேல்
வகித்த பதவிகள் : பல்கலைக்கழகப் பேராசிரியர், துறைத் தலைவர் - கல்வித் துறை, இராமநாதன் நுண்கலைக் கழகம் - யாழ். பல்கலைக்கழகம்
தற்போதைய பதவிகள் : வருகைப் பேராசிரியர் - கொழும்பு பல்கலைக்கழகம் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் பரீட்சகர் தலைவர் - கொழும்புத் தமிழ்ச் சங்கம்.




பெயர் : கலாபூசணம் சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை
ஊர் : இளவாலை
வகித்த பதவிகள் : இளவாலை மெய்கண்டானின் புகழ் பூத்த அதிபர் நூலாசிரியர், உரையாசிரியர், கவிஞர், நாடக ஆசிரியர், பேச்சாளர்
தற்போதைய பதவிகள் : சைவப்புலவர் சங்கத் தேர்வுச் செயலாளர் கொழும்புத் தமிழ்ச் சங்க உப போசகர் சைவ சித்தாந்த திருமுறை விரிவுரையாளர்



பெயர் : பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் மோகனதாஸ்
ஊர் : அரியாலை
பட்டங்கள் : விஞ்ஞான இளமாணி (இரசாயனவியல் சிறப்புப் பட்டம்) கலாநிதி (விவசாய இரசாயனவியல்) C.Chem. F.I.Chem.
வகித்த பதவிகள் : மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் தெங்கு மற்றும் பனை ஆராய்ச்சியாளர் யாழ். பல்கலைக்கழக விவசாய இரசாயனவியல் பீடாதிபதி யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர்
தற்போதைய பதவிகள் : பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினர்




பெயர் : பேராசிரியர் சோமசுந்தரம். சந்திரசேகரன்
ஊர் : பதுளை
பட்டங்கள் : கல்விமாணி, முதுகலைமாணி,
வகித்த பதவிகள் : பல்கலைக்கழக பேராசிரியர், கல்விப் பீடாதிபதி அதிதி பேராசிரியர் ஐக்கிய அமெரிக்காவின் ஓசோன் பல்கலைக் கழகம், ஜப்பானிய ஹிரோசீமாப் பல்கலைக்கழகம்
தற்போதைய பதவிகள் : தேசிய கல்வி நிறுவகப் பேரவை உறுப்பினர் தேசிய கல்வி ஆணைக்குழு உறுப்பினர்



பெயர் : உடுவை திரு சிங்காரம்பிள்ளை தில்லைநடராஜா
ஊர் : உடுப்பிட்டி
பட்டங்கள் : கல்விமாணி, முதுகலைமாணி,
வகித்த பதவிகள் : பொலிஸ் திணைக்கள எழுதுனர், கூட்டுறவு உதவி ஆணையாளர் பணிப்பாளர் - கடற்தொழில் திணைக்களம் மேலதிகச் செயலாளர் கல்வி அமைச்சு அரச அதிபர், நிதி ஆணைக்குழு மதியுரைஞர்
தற்போதைய பதவிகள் : அரச பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினர்

நூற்குழுக்கள்

மதியுரைஞர் குழு



பேராசிரியர் சபா. ஜெயராசா
முன்னாள் கல்விப் பீடாதிபதி
யாழ் பல்கலைக்கழகம்



உயர்திரு. உடுவை சி.தில்லைநடராஜா
அரச பொதுச்சேவை ஆணைக்குழு அங்கத்தவர்
முன்னாள் மேலதிகச் செயலாளர் கல்வி அமைச்சு.



உயர்திரு. க. சண்முகலிங்கம்
முன்னாள் செயலாளர் கல்வி அமைச்சு
வடகிழக்கு மாகாண சபை

தொகுப்பாசிரியர் குழு



பிரதம ஆசிரியர்
கலாபூசணம், சைவப்புலவர். சு. செல்லத்துரை
முன்னாள் கல்லூரி அதிபர்



ஆசிரியர்
உயர்திரு. வி. இராஜேந்திரம்
ஆசிரிய ஆலோசகர்



ஆசிரியர் (நிழற்படத்தொகுப்பு)
உயர்திரு. செ. சந்திரகுமார்
முகாமைப் பணிப்பாளர் ரேவதி ஸ்ரூடியோ

பிரதம நூற் குழுவினர்



தலைவர்
உயர்திரு. கி கணேஸ்
சமூக எழுச்சி இயக்கத்தின்
முன்னோடித் தலைவர்



செயலாளர்
உயர்திரு. செ. ஜெகதாசன்
சமூக எழுச்சி இயக்கத்தின்
முன்னோடித் தலைவர்



பொருளாளர்
உயர்திரு. க. சிவஞானம்
சமூக எழுச்சி இயக்கத்தின்
முன்னோடித் தலைவர்



உயர்திரு. க. மாயாதிரவியம்
சமூக எழுச்சி இயக்கத்தின்
முன்னோடித் தலைவர்



உயர்திரு. க. சுப்பிரமணியம்
சமூக எழுச்சி இயக்கத்தின்
முன்னோடித் தலைவர்



உயர்திரு. சி. செல்லத்துரை
சமூக எழுச்சி இயக்கத்தின்
முன்னோடித் தலைவர்



உயர்திரு. இ. சாந்தகுமார்
தலைவர் சமூக முன்னேற்றக்
கழகங்களின் சமாசம்



உயர்திரு. வே. திருச்செல்வம்
நிதிப்பணிப்பாளர் புனர்வாழ்வு,
கல்வி அபிவிருத்தி நிதியம்



உயர்திரு. ச. பாஸ்கரன்
பணிப்பாளர், புனர்வாழ்வு, கல்வி
அபிவிருத்தி நிதியம்



உயர்திரு. செ. கோபிநாத்
பணிப்பாளர், புனர்வாழ்வு, கல்வி
அபிவிருத்தி நிதியம்



திருமதி. புஸ்பராசமணி ஆனந்தராசா
சிரேஷ்ட பிரதித் தலைவர்
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்



திருமதி. நவமணி ராஜ்குமார்
தலைவி, கலை இலக்கியக் குழு

முதலாம் பகுதி

அணிசேர் விடயங்கள்

விடயம்

பக்கம்

01. ஆசியுரை 13
- **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**
நல்லை ஆதீன குருமுதல்வர் - யாழ். நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்.

02. ஆசியுரை 14
- **சுவாமி சர்வரூபானந்தா**
தலைவர் - இராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை), கொழும்பு.

03. வாழ்த்துச் செய்தி 15
- **திரு. சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர் - யாழ்ப்பாண மாவட்டம்.

04. வாழ்த்துச் செய்தி 16
- **பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்**
துணைவேந்தர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

05. வாழ்த்துச் செய்தி 17
- **திருமதி சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர் - இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் , கொழும்பு.

06. வாழ்த்துச் செய்தி 18
- **திரு. முத்தையா கதிர்காமநாதன்**
பொதுச்செயலாளர் - அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு

07. வாழ்த்துச் செய்தி 19
- **திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**
பொதுச் செயலாளர் - கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு.

08. அணிந்துரையும் அறிபரவலும் 20
- **பேராசிரியர் கலாநிதி சபா. ஜெயராசா**
முன்னாள் கல்விப் பீடாதிபதி - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

09. தொகுப்பாசிரியர் உள்ளத்திலிருந்து
- **கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை** 24
ஓய்வுநிலை அதிபர்

10. பதிப்புரை 27
- **திரு. கிருஷ்ணப்பிள்ளை கணேஸ்** - **தலைவர்**
- **திரு. செல்லத்துரை ஜெகதாசன்** - **செயலாளர்**
- **திரு.கந்தையா சிவஞானம்** - **பொருளாளர்**

} நூல் வெளியீட்டுக்குழு





சிவமயம்
குருபாதம்





நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

ஸ்தாபிதம் : 1966

யாழ்த்தித்துரை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
021 222 2870

21/06/2013

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி

''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்ற பொன் மொழியைச் சிரமேற்கொண்டு கடந்த 65 ஆண்டுகள் தொடர்ந்து மக்கள் சேவை செய்த நிறுவனத்தின் பணிகளை அறியும் போது மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது. தமக்கென ஒரு எழுச்சிப் பாதையை வகுத்து அப்பாதையில் நின்று தம் மக்களுக்குப் பணி செய்துவரும் சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசமும், புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியமும் செய்துவரும் செயற்கரிய செயல்களை ஆவணப்படுத்தும் ''எழுச்சிப்பாதை'' எனும் இம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மன நிறைவு கொள்கிறேன்.

அதேவேளை இந்த நிறுவனங்களைத் தோற்றுவித்து அதற்கு முன்னோடியாக இருந்து இந்நாள்வரை 65 ஆண்டு காலமாக, சமூக எழுச்சி இயக்கத்தின் தந்தையாகவும், பெருந் தலைவராகவும் கோட்பாட்டாளராகவும் இருந்துவரும் உயர்திரு. ஆர்.எம். நாகலிங்கம் அவர்களின் அளப்பரிய சேவைகளை எடுத்துக் காட்டும் மலராகவும் இது அமைந்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி தருகின்றது.

தன்னைப் போலத் தன் சமூகமும் உயர்வடைய வேண்டுமென்று நினைப்பவர்கள் மிகச்சிலரே. இவர் அவ்விதம் நினைத்ததோடு தனது 65 ஆண்டுகாலப் பணியின் மூலம் அவ்விதம் ஆக்கி வைத்த பெருமைக்கும் உரியவர்.

வள்ளுவப் பெருமானின் ''செயற்கரிய செய்வர் பெரியர்சிறியர்
செயற்கரிய செய்க லாதார்''

என்ற குறளுக்கு மிகப் பொருத்தமான ''செயற்கரிய செய்த பெரியார்'' ஆக இருக்கும் எழுச்சித்தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களதும், இந்த நிறுவனங்களினதும் பணிகளை அவரின் எழுச்சிப் பாதையில் தொடர்ந்து, இளைய தலைமுறையினரும் முன்னெடுத்து மக்கள் சேவை செய்ய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
நல்லை ஆதீன குரு முதல்வர்
யாழ்ப்பாணத்து நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்

RAMAKRISHNA MISSION
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

Phone - 2588253 & 5013805
Fax -2361438
Email - rkmcey@gmail.com

இராமகிருஷ்ண மிஷன் தலைவரின் ஆசிச் செய்தி

இலங்கை, புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதிய பணிப்பாளர் சபையானது, திரு. ஆர்.எம்.நாலிங்கம் அவர்கள் சமூக மேம்பாட்டிற்காக ஆற்றிய சேவைக்காக, அவரைப் பாராட்டிக் கௌரவிக்க இருப்பதையும், அத்துடன் 'எழுச்சிப்பாதை' என்ற நூல் ஒன்றினை வெளியிட இருப்பதையும் அறிந்து மகிழ்வுறுகிறேன்.

இவ்விரு நிகழ்வுகளும் சீரும் சிறப்புடன் நிறைவேற எல்லாம் வல்ல இறைவனின் அருளையும் ஆசியையும் வேண்டுவதோடு, என் அன்பையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

திரு. ஆர். எம். நாகலிங்கம் அவர்கள் பல்லாண்டு காலம் மேலும் தன் சேவைகளைத் தொடர்ந்து சிறப்புடன் செய்ய, அவருக்கு நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும் கொடுக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இறைபணியில்

சுவாமி சர்வரூபானந்த
தலைவர்
இராமகிருஷ்ண மிஷன்
(இலங்கைக் கிளை)
கொழும்பு

15.05.2013

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
දුරකථනය தொலைபேசி Telephone 021-222 2235

දුරකථනය பொது தொலைபேசி General Telephone 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
ෆැක්ස් பக்ஸ் Fax 021-222 2355
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
E-mail: gajaffna@sltnet.lk
District Secretariat, Jaffna.

මගේ අංකය எனது எண் My No. Message from GA

ඔබේ අංකය உமது எண் Your No.

දිනය திகதி Date 17.08.2012

யாழ். அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

பல்வேறு சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட வலிகாமம் பிரதேசத்தில் தனித்துவம் மிக்க கிராமமாக விளங்கும் மாவிட்டபுரம் வாழ் மக்களின் எழுச்சிக்காகவும், வளர்ச்சிக்காகவும் மாவையில் தோற்றம் பெற்ற சமூக எழுச்சி இயக்கத்தினால் ''எழுச்சிப் பாதை'' எனும் ஆய்வு நூல் வெளியிடப்படுவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு சமூகத்தின் கட்டமைப்பு அந்தக் கிராமத்தின் வளர்ச்சியிற் தங்கியுள்ளது. கிராமத்தின் வளர்ச்சி அந்தக் கிராமங்களில் இயங்கும் பொது அமைப்புக்களிற் தங்கியுள்ளது. இந்த வகையில் தமது கிராம மக்களின் கல்வி, கலாசார, சமய, பண்பாட்டு விழுமியங்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு 1947இல் சமூக எழுச்சி இயக்கம் என்ற பெயரில் தோற்றம் பெற்ற இவ் இயக்கமானது உயரிய ஒழுக்க, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்த்தல், மக்களின் மத்தியில் கசப்புணர்வை ஒழித்து ஐக்கியத்தை வளர்த்தல், கல்வி மேம்பாட்டுக்கான பணிகளை முன்னெடுத்தல், தொழில் மேம்பாட்டுக்கான பணிகளை முன்னெடுத்தல், வறுமை முதலான சமூகப் பிரச்சினைகளை ஒழித்தல், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஒரு சமூக வங்கியாக பரிணமிக்கச் செய்து வருமானத்தை ஈட்டல் போன்ற ஆக்கபூர்வமான சேவைகளை முன்னெடுத்து வருவது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

இவ்வாறு சமூக நலனில் அக்கறைகொண்டு செயல்பட்டு இவ்வமைப்பினரால் நாளைய சந்ததிக்காய் ஆவணப்படுத்தும் நோக்கில் வெளியிடப்படவுள்ள ''எழுச்சிப் பாதை'' எனும் நூலிற்கு எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், இதன் செயற்பாடுகள் யாவும் சிறந்த முறையில் முன்னெடுத்துச் சென்று மக்களுக்குச் சிறந்த சேவைகளைத் தொடர்ந்திடவும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.சுந்தரம் அருமைநாயகம்

திரு.சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்,
யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் தோற்றம், வரலாறு, கோட்பாடுகள், செயற்பாடுகள், அதன் பிதாமகர் ஆகியவை பற்றிய 'எழுச்சிப் பாதை' என்னும் இந்நூல் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். எழுச்சி இயக்கத்தினால் தோற்றுவிக்கப்பட்ட சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம் என்பன பலவகையான சமூக, கல்வி, தொழில், பண்பாடு சார்ந்த மேம்பாட்டுக்கான நற்பணிகளை ஆற்றிவருகின்றன.

சமூகத் தொண்டாற்றுபவருக்கு சமூகஜோதி விருது, பல்துறைசார் விற்பன்னர்களுக்கு துறைசார் வித்தகர் விருது, சமூகப் பற்றாளர் விருது, சமூக முன்னோடிகளையும் சமாதான நீதவான்களையும் கௌரவித்தல் போன்றவற்றுடன் முதுமாணிப் பட்டங்களைப் பெற்றவர்கள், இளமாணிப் பட்டங்களைப் பெற்றவர்கள் தேசிய டிப்ளோமா பெற்றவர்கள் போன்றோரையும் கௌரவிக்கின்றது. அத்துடன் பல புலமைப்பரிசில்களையும், போட்டிப் பரிசில்களையும், வருடாந்த நன்கொடைகளையும், நலிவுற்ற சமாச அங்கத்தவர்களுக்கு நன்கொடைகளையும் வழங்கி அளப்பெரும் பணிபுரிந்து வருகின்றன. இந்த அமைப்புகளை அமைக்க காரணகர்த்தாவாக இருந்த திரு.ஆர்.எம்.நாகலிங்கத்தினதும் அவருடன் இணைந்து பணியாற்றும் பலரின் சேவைகளும் வியக்கத்தக்கதொன்றாகும். இத்தகைய நலன்விரும்பிகளில் சுயநலமற்ற, பொதுநலமே சிந்தனையாகக் கொண்ட பெரியோர்கள் பலர் உள்ளனர். இப்பூவுலகம் உயர்வடைய இவ்வமைப்புகளின் சேவை மேலும்மேலும் தொடரவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்
துணைவேந்தர்
யாழ்.பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

අධ්‍යක්ෂක பணிப்பாளர் Director 2552643
දුරකථන பொது General 2552641
ෆැක්ස් தொலைநகல் Fax 2552825
ඊමේල් மின் அஞ்சல் E-Mail info@hindudept.gov.lk
වෙබ් අඩවිය இணையதளம் Website www.hindudept.gov.lk

මගේ අංකය எனது இல. My No.
ඔබේ අංකය உமது இல. Your No.
දිනය திகதி Date 09.05.2013

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்படும் 'எழுச்சிப்பாதை' எனும் நூலிற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சமூக நிறுவனமானது சமூகத்தின் மீது பாரிய அக்கறை கொண்டு பல அரும்பெரும் பணிகளை மக்களுக்கு வழங்கி வருகின்றது. இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு மாவட்டம், மாகாணம் மற்றும் தேசிய ரீதியாக பல நிறுவனங்களை நிறுவி பணியாற்றி வருகின்றது. மக்கள் மத்தியில், உரிய கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபையின் பிதாமகனாக விளங்கும் எழுச்சித் தந்தை திரு. ஆர். எம். நாகலிங்கம் அவர்கள் ஆற்றிய சமூகப் பணிகளைப் பாராட்டிக் கௌரவிப்பதுடன், அவற்றை ஆவணப்படுத்தும் முகமாகவும் 'எழுச்சிப்பாதை' என்ற நூல் வெளியிடப்படுவது பாராட்டுக்குரியதாகும்.

அந்தவகையில், 'எழுச்சிப்பாதை' என்ற நூலை வெளியிட முன்வந்துள்ள புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபையினரை நான் விதந்து பாராட்டுவதுடன் இவர்களின் பணிகள் மேலும் சிறக்க மனமார வாழ்த்துகின்றேன்.

திருமதி சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
கொழும்பு

248, 1/1, ගාල්ල පාර, කොළඹ - 4 248, 1/1, காலி வீதி, கொழும்பு - 4 248, 1/1, Galle Road, Colombo - 4

சிவமயம்

அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)

ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Trusts in Sri Lanka)

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைத் தலைவர்
Chairman of the Board of Trustees
வி. கயிலாசபிள்ளை
V. Kailasapillai
T.P. 2575566 Fax. 2575472
E-mail. hariomak@gmail.com

தலைவர் President
கந்தையா நீலகண்டன்
Kandiah Neelakandan
T.P. 2371100 (off) 2580807 (Res)
Fax. 2371111, 2371122
E-mail. neela@mnlaw.lk
Mob. 071-2723456

பொதுச் செயலாளர்
General Secretary
முத்தையா கதிர்காமநாதன்
Muthiah Kathirgamanathan
T.P. 2582139 (Res) Fax. 2361381
E-mail. mknathan21@yahoo.com
Mob. 077-7656070

பொருளாளர்
Treasurer
வே. கந்தசாமி
V. Kanthasamy
T.P. 2586620 (Res)
E-mail. vkandasami@gmail.com
Mob. 071-5349150

அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

1947ஆம் ஆண்டு மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் வழியில் 1955ஆம் ஆண்டு மாவை பாரதி வாசிகசாலை, அதனைத் தொடர்ந்து மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம் போன்றவற்றின் நிறுவனர் எழுச்சித்தந்தை திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் சமூக நலப்பணிகளைப் பாராட்டிக் கௌரவிப்பதையும், அவரின் எழுச்சிச் சிந்தனைகள், கோட்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் போன்றவற்றை ஆவணப்படுத்துவதையும் முதன்மை நோக்கமாகக் கொண்டு ''எழுச்சிப்பாதை'' என்னும் நூல் வெளியிடப்படுவது பாராட்டுக்குரியதாகும்.

இந்நிறுவனங்கள் ஏனைய சமூக நிறுவனங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக ஆற்றும் பணிகள் மற்றும் எதிர்காலத்தில் ஆற்றவுள்ள பணிகள் என்பவை பாராட்டுக்குரியதாகும். கல்வி, தொழில், பண்பாடு ஆகிய துறைகளில் மக்களை வளர்ச்சியுறச் செய்வதற்கு இந்நிறுவனங்கள் வழங்கிய பங்களிப்பு, பயனாளிகள் தேவையையொட்டி நல்ல பயனை அறுவடை செய்துள்ளதை நாம் நன்கறிவோம்.

திரு.ஆர்.எம்.நாகலிங்கம் தலைமையிலான அமைப்பின் தன்னலமற்ற அர்ப்பணிப்பும், தியாகமும் பாராட்டுக்குரியனவாகும்.

இவர்களின் பணிகள், தொடரவும், பயனாளிகள் தொடர்ந்து பயன்பெற்று வளம் பெறவும், வாழ்த்துகின்றோம்.

திரு.முத்தையா கதிர்காமநாதன்
பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம் - கொழும்பு

தலைமையகம்: இல. 91/5 சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை கொழும்பு - 02. இலங்கை
Head Office: No. 91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo – 02, Sri Lanka
தொ.பேசி / Tel : 2434990 Website: www.hinducongress.lk E-mail: hinducongress@gmail.com தொ.நகல் / Fax: 2344720



கொழும்புத் தமிழ்ச் சங்கம்

Colombo Tamil Sangam Society Ltd.

Reg No. 73

கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை அங்கத்தவர் எழுச்சித்தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் 1947 ஆம் ஆண்டு முதல் கடந்த 65 ஆண்டு காலமாக மக்கள் சமூகத்தின் மேம்பாட்டுக்காக ஆற்றிய அரும்பணிகளைப் பாராட்டிக் கௌரவிப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு வெளியிடப்படவுள்ள ''எழுச்சிப்பாதை'' என்னும் இந்நூலுக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். எழுச்சித்தந்தை அவர்களின் சமூக மேம்பாட்டுப் பணிகள், பிரதானமாகக் கூட்டுறவு மேம்பாடு, வீடமைப்பு அபிவிருத்தி மேம்பாடு, சமூக நிறுவனங்களின் ஊடாக சமூக மேம்பாடு ஆகிய மூன்று துறைகளையும் கொண்டதாகும். மாவை வாசிகசாலை (1955), மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் (1971), சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் (1981), புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் (1993) ஆகிய நிறுவனங்களைத் தாபித்து அந்நிறுவனங்களினூடாக மக்கள் சமூகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அவர் பலதரப்பினரதும் சிறந்த ஒத்துழைப்பைப் பெற்று பெரும் தொண்டாற்றி வந்துள்ளார். இச்சமூக நிறுவனங்கள் பலதரப்பட்ட சவால்களுக்கும் முகம் கொடுத்து நிலைத்து நின்று வளர்ச்சிப் பாதையில் முன்னேற்றம் கண்டு வருவதைக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். மக்கள் மத்தியில் நிறுவன ரீதியான தலைமையின் கீழ் மக்களை ஐக்கியப்படுத்துவதற்கும் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் தொழில் மேம்பாட்டுக்கும் சமூகக் கொடுமைகளை ஒழிப்பதற்கும் ஒழுக்க, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை மேம் படுத்துவதற்கும், ஆற்றிவரும் சமூகப் பணிகளைத் தெய்வீகப் பணியாகக் கருதி அப்பணிகள் மேலும் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
பொதுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம் - கொழும்பு

இல. 7, 57வது ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை.
Tel : +94 112 363 759
Web : www.colombotamilsangam.com

No. 7, 57th Lane, Colombo - 06, Sri Lanka.
Fax : +94 112 361 381
E-mail : tamilsangamcolombo@yahoo.com

அணிந்துரையும் அறிபரவலும்

உயர்திரு ஆர். எம். நாகலிங்கம் அவர்களின் வாழ்க்கை சமூக மாற்றத்துக்கான செய்தி ஆகின்றது. ''எழுச்சிப் பாதை'' என்ற தலைப்பில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் வெளியிட்டுள்ள நூல் அவரின் வாழ்க்கைச் செய்தியை உள்ளடக்கிய ஆவணப் பதிவாகின்றது.

பகுதி ஒன்று, பகுதி இரண்டு, பகுதி மூன்று, பகுதி நான்கு, பகுதி ஐந்து என்ற நிலைகளில் வெளிவந்துள்ள இந்த ஆக்கம் முழுமையான நீள் காட்சியைக் கொண்டுள்ளது. உயர்திரு கி.கணேஸ் அவர்களினதும் நூற்பதிப்புக் குழுவினரது அயராத முயற்சியும், ஆற்றல் மிக்க தேடலும் பயனுறுதி மிக்க பதிவுகளை வெளிக் கொண்டு வந்துள்ளன. சமூக மாற்றத்தை நேசிக்கும் கருத்தியல் தெளிவோடு ஆக்கங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் சிந்தனைகளும் செயலாற்றுகையும் இடைவெளிகள் இல்லாத நிறைவைக் கொண்டவை. சிந்தனை நிலையிலே பல்வேறு தத்துவங்களுடனான ஊடாட்டங்களும் அவற்றிலிருந்து நல்லவற்றைத் தெரிவு செய்து ஒன்றிணைக்கும் (ECLETIC) நலன் தெரியும் ஆற்றல் அவரிடத்தே காணப்படுகின்றது. அதுவே அவருக்குரிய கருத்தியற் பலமாகின்றது.

காந்தியம், மார்க்சியம், பயன்பாட்டுவாதம், (Pragmatism) சைவசித்தாந்தம் முதலாம் கோட்பாடுகளிலிருந்து நலன் தருபவற்றைத் தெரிந்தெடுத்துத் தமக்குரிய கருத்தியலாக அவர் வகுத்துக் கொண்டார். அத்தகைய தெரிவுகளினூடாக பயனுறுதி மிக்க சமூகப் பணிகளை முன்னெடுப்பதற்குரிய செயற்பாட்டுச் சட்டகத்தை வகுத்துக் கொண்டார். அதுவே அவருக்குரிய பலமாயிற்று.

தமக்குரிய கோட்பாட்டினுக்குப் பலம் சேர்க்கும் ஆளுமைப் பரிமாணங்களும் அவரிடத்தே காணப்படுகின்றன. நேர்மை, தியாகம், புரிந்துணர்வு, பிறர் நலன்களில் அக்கறை முதலியவற்றோடு எழுச்சிப் பாதையைத் திட்டமிட்டு முன்னெடுத்து வரும் வினையாற்றலைக் காணமுடிகிறது.

அறிகை நிலையில் அவரது செயற்பாடுகள் முக்கியமானவை. சமூக நிலைவரங்களைப் பகுப்பாய்வு செய்து எழுச்சி வினைப்பாடுகளுக்குரிய அறிகைத் தளத்தை (Cognitive Base) உருவாக்கியமை விதந்து குறிப்பிடப் படவேண்டிய ஒரு நிகழ்ச்சியாகும். எத்தகைய சமூக எழுச்சிச் செயற்பாடுகளுக்கும் கருத்தியல் தெளிவுள்ள அறிகைக் கட்டமைப்பு அவசியமாகும்.

சோவியத்தின் சோசலிசப் புரட்சிக்குரிய அறிகைக் கட்டமைப்பாக மார்க்சிய லெனினிசச் சிந்தனைகள் அமைந்தன. இந்திய அரசியல் விடுதலை இயக்கத்துக்குரிய அறிகைக் கட்டமைப்பைக் காந்தியச் சிந்தனைகள் வடிவமைத்தன. அவ்வாறே சமூக எழுச்சிச் செயற்பாட்டுக்குரிய தெளிவான கருத்தியற் கட்டமைப்பை இ.மு.நாகலிங்கம் அவர்கள்

வடிவமைத்தார். அத்தகைய நடவடிக்கை வினையாற்றல் மிக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அடிப்படையாக அமைந்தது.

சமூக இருப்பு, சமூக அழுத்தங்கள், நிலமானிய சமூக அமைப்பின் சமகால இயக்கம், கல்வி உள்ளீடுகள், உலகமயமாக்கற் செயற்பாடுகள், புலச்சிதறல் போன்ற அனைத்து விசைகளையும் கருத்திலே கொண்டு அவர் தெளிவான செயற்பாதையை முன்னெடுத்து ஆற்றுப்படுத்தலை மேற்கொண்டுள்ளார்.

அந்தச் செயற்பாதையின் வழியே பாரதி மறுமலர்ச்சி மன்றம், மாவை சமூக எழுச்சி இயக்கம், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் முதலியன முகிழ்ந்தெழுந்தன. அந்நிலையில் அவரது செயற்பாடுகளை ''எழுச்சித் தந்தை'' என்ற தொடரால் அடையாளப் படுத்தும் மரபு வளர்ச்சியடைந்தது.

நவீன சமூக உளவியலும் முகாமைத்துவ உளவியலிலும் பேசப்படும் ஒரு சிறப்புப் பொருளாக இருப்பது மனவெழுச்சி நுண்மதி (E.Q) அது சமூக நுண்மதி என்றும் குறித்துரைக்கப்படும், சமூக மாற்றத்துக்கும் எழுச்சிக்குமான மனவெழுச்சி நுண்மதியைக் கட்டியெழுப்புதலும், அதனைச் சிதறவிடாது முன்னெடுத்துச் செல்லலும் அதனூடாக ஆக்க விளைவுகளை உருவாக்குதலுமான செயற்பாடுகள் வினைத்திறன் மிக்க தலைமைத்துவத்தின் உயர்ந்த பண்பாகக் கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் தலைமைத்துவ ஆற்றலைக் கண்டுகொள்ள முடிகிறது.

நேர் மற்றும் எதிர்விசைகளினூடே ஆக்கச் செயற்பாடுகளைப் பழுதின்றி முன்னெடுத்துச் செல்லும் இயக்கவியல் தலைமைத்துவப் பண்பு அவரிடத்தே மேலோங்கியுள்ளது. அதனாலேதான் அனைத்து நேர்விசைகளையும் அவரால் ஒன்றிணைக்க முடிந்தது. அந்த ஒன்றிணைப்பு வியத்தகு ஆக்கப் பெறுபேறுகளைச் சமூகத்தில் உருவாக்கியுள்ளது.

சமூக எழுச்சிக்கான வினைப்பாட்டுக்கு அடிப்படையாக அமைவது கல்வி. கல்வி நிலைக்குத்தான மேல் நோக்கிய சமூக அசைவியத்தை (Social Mobility) ஏற்படுத்த வல்லது. அவ்வாறு மேலுயர்ந்தோர் அனைவரும் சமூக எழுச்சிக்கும் முன்னேற்றத்துக்குமான பங்களிப்பைச் செய்வதில்லை.

திரு.இ.மு.நா. போன்ற ஒரு சிலரே சமூக எழுச்சிக்கு விசையூட்டும் வினைப்பாட்டாளராக (Activist) இயங்கி வருகின்றனர். அவர் மிகுந்த இடர்களுக்கும் அழுத்தங்களுக்கும் மத்தியிலே தமது கல்வியைத் தளர விடாது முன்னெடுத்து உயர்ந்த கல்வி இலக்குகளை ஈட்டியவர்.

கணக்கியல் மற்றும் முகாமையியல் முதலாம் கல்வித்துறைகள் அவரது காலத்திலே வேகமாக வளர்ச்சியடையத் தொடங்கி விட்டன. கடினமான அந்தப் பாடநெறிகளிலே ஈடுபட்டுக் கற்பதற்குப் பலர் தயக்கம் கொண்டிருந்தவேளை துணிவுடனும், விருப்புடனும் ஈடுபாட்டுடனும் அந்தப் பாடங்களைக் கற்று விரிவுரையாளராக உயர்ந்தவை அவரின் கல்வி ஆளுமைக்குச் சான்றாகின்றது.

அவர் ஈடுபாடு கொண்டிருந்த கூட்டுறவுத் துறை சமூக எழுச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் துணை நிற்கும் ஆற்றலைக் கொண்டது. நவீன கூட்டுறவுத் துறை பிரித்தானியாவிலே

தோற்றம் பெற்றது. கைத்தொழில் வளர்ச்சியினாலே தோற்றம் பெற்ற சமூக இடர்களுக்கு முகம் கொடுக்கும் கருத்தியல் முன்னெடுப்புக்களோடு அது தோற்றம் பெற்று பின்னர் பல்வேறு நாடுகளுக்கும் பரவலுற்றது.

நவீன கூட்டுறவு முறைமையின் பல்வேறு பரிமாணங்களையும் ஆழமாக அறிந்து கொண்ட அவர், அவற்றைச் சமூக எழுச்சிக்குப் பிரயோகிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

பொருளாதார முன்னேற்றத்துக்கு மட்டுமன்றி, சமூக முன்னேற்றத்துக்குமான பரிமாணங்களைக் கொண்ட கூட்டுறவின் அடிப்படையாக அவர் மேற்கொண்ட முயற்சி காலத்தின் பதிவுகளுக்குரியது.

எமது சூழலுக்குரிய தனித்துவமான சமூக முகாமைத்துவக் கோட்பாட்டினை உருவாக்கிக் கொண்டமை அவரின் தனித்துவத்தை அவர் தமக்குரிய கல்வியாலும், தெளிவான சமூகப் புலக்காட்சியாலும் உருவாக்கிக் கொண்டார்.

அவர் மேற்கொண்ட ''கண்காணிப்புடன் கூடிய தடை விதியாக் கொள்கை'' என்பது உளவியலிலே குறிப்பிடப்படும் ஊக்கல் (Motivation) உபாயத்தையும், முகாமையியலிலே குறிப்பிடப்படும் தன்னெழுச்சி வருவித்தல் உபாயத்தையும் அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொருவரதும் சுய ஆளுமைக்கும், தனித்துவத்துக்கும் மதிப்புக் கொடுத்தலை ''தடைவிதியா'' செயற்பாடு புலப்படுத்துகின்றது. முன்னேறிச் செல்லும் ஒரு சமூக எழுச்சி ஒரு புள்ளியிலே தனித்து நின்றுவிடாது ''தொடர்ச்சியாக'' ஏற்றம் பெற்றுச் செல்லல் முக்கியமானது. திரு.இ.மு.நா.அவர்கள் தொடர்ச்சியான எழுச்சிக்கு விசையூட்டிக் கொண்டிருத்தல் அவருக்குரிய சிறப்புத் தலைமைத்துவப் பண்பாக அமைகின்றது.

சமூக எழுச்சியை அவர் கிராம அடித்தளத்தில் இருந்து முன்னெடுத்தார். ''கிராமங்களுக்குத் திரும்புதல்'' (Back to Village) என்ற கருத்து இந்திய சுதந்திரப் போராட்ட காலத்திலே முன் வைக்கப்பட்டது. கிராமிய மறுமலர்ச்சியை இலக்காகக் கொண்டு அந்தக் கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் அந்த வரையறையோடு மட்டும் இ.மு.நா. அவர்கள் நின்றுவிடவில்லை.

கிராமக் கட்டமைப்பினூடே இறுக்கமடைந்து நின்ற நிலமானிய எதிர்விசைகளைத் தகர்த்து நேர் விசைகளுக்கு வலுவூட்ட முயன்றார். அதிலே வெற்றியையும் கண்டார். அந்த அடிப்படை அனுபவங்களைப் பயன்படுத்தி அவர் மாவட்ட மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம், சர்வதேச மட்டம் ஆகிய நிலைகளிலே தமது செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

புலச்சிதறல் (Diaspora) நிலையில் உலகெங்கும் சிதறி வாழும் எழுச்சி உள்ளம் கொண்டவர்களின் ஆற்றலை சமூக மாற்றத்துக்கும் எழுச்சிக்குமான விசையாகத் திரட்டுவதற்கு அவர் மேற்கொண்ட செயற்பாடுகள் அதிக முக்கியத்துவம் பெறுபவை.

புலம் சிதறி வாழ்வோரின் ஆற்றல்களையும் வளங்களையும் நம்பகரமாகப் பராமரித்துப் பயனுள்ள ஆக்கப்பணிகளை மேற்கொள்வதற்குரிய கட்டமைப்பாக்கத்தின் சிற்பியாக அமைந்த அவரின் செயற்பாடுகள், சமகாலத் தமிழ்ச் சூழலுக்கு ஆரோக்கியமான எடுத்துக்

காட்டாகவுள்ளது. அந்த வகையில் அவர் வகிபாக மாதிரி வடிவினராகவும் (Role model) இருத்தல் குறிப்பிடத்தக்கது.

கிராமிய மட்டத்திலிருந்து சர்வதேச மட்டத்துக்கு மேலுயர்ச்சி பெறும் மட்டங்கள் ஒவ்வொன்றிலும் வினையாற்றல் மிக்க பெறுபேறுகளையும் விளைவுகளையும் உண்டாக்க வல்ல நிறுவனங்களை ஒழுங்கமைத்தமை அவரின் தனித்துவத்தை மேலும் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது.

ஒவ்வொரு மட்டங்களும் அவற்றுக்குரிய தனித்துவங்களைக் கொண்டிருக்கும். அந்தத் தனித்துவங்களை உருவாக்கும் நுண்ணிய அலகுகளை இனங்கண்டு சவால்களுக்கு முகம் கொடுக்கும் வினைப்பாடுகளை உருவாக்கிக் கொண்டிருத்தல் அவரின் தலைமைத்துவத் திறன்களுடன் இணைந்த செயற்பாடாகின்றது.

இத்தொகுதியில் இடம் பெற்றுள்ள ஆய்வுகளும் ஆக்கங்களும் சமூக மாற்றத்தையும் அதற்குரிய நேர்நிலை வினைப்பாடுகளின் இயல்புகளையும் ஆய்வு நேர்மையோடு எடுத்தியம்பும் ஆக்கங்கள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன. ஆய்வுகள் திட்டவட்டமான இலக்குகளின் அடிப்படையாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சமூக ஆய்வுகள் முக்கியத்துவம் பெற்றுவரும் சமகாலத்தில் இத்தகைய முன்னெடுப்புக்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. சமூக மாற்றத்துக்கும் முன்னேற்றத்துக்குமான விசைகளின் வெளிப்பாடுகள் இங்குள்ள ஆய்வுக்கட்டுரைகள் வழியாக மேற்கிளம்பியுள்ளன. சமூக நேர் வினைகளும் உறுத்தும் எழுவினாக்களும் கண்டறியப்பட்டுள்ளன.

சமூக மாற்றம் பற்றிய விஞ்ஞான பூர்வமான முன்மொழிவுகளும், கண்டறிதல்களும், புரிதல்களும் கட்டுரைகளில் இடம் பெற்றுள்ளன. மிகுந்த நிதானத்துடன் அவை பரிசீலிக்கப்பட்டுள்ளன.

சமூகத்தில் நிகழும் விலகல்கள் இருவகைப் பாகுபாடு கொண்டவை. நேர் விலகலும் எதிர் விலகலும் என்றவாறு அந்த இருவகைப்பாடுகளும் அமையும். எமது சமூகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் நேர்விலகல்களைக் கண்டறிவதற்கு இத்தொகுதியில் உள்ள ஆக்கங்கள் துணை நிற்கின்றன. நேர்விலகல் ஆக்க எழுச்சியினதும், சமூக மாற்றத்தினதும் குறியீடாக அமையும்.

மொத்தத்தில் சமூகப் பயனுள்ள எழுத்தாக்கங்களின் தொகுதி ஒன்றினை வாசிக்கும் உளநிறைவு ஏற்படுகின்றது. சமூக மாற்றத்தை வேண்டும் சூழலுக்குரிய பயனுள்ள உசாத்துணை நூலாகவும் இந்த ஆக்கம் இடம் பெற்றுள்ளது. பயனுள்ள ஒரு பெரும் ஆக்கத்தை உருவாக்கிய முன்னோடிகள் பாராட்டுக்குரியவர்கள்.

பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா
முன்னாள் கல்விப்பீடாதிபதி
யாழ்.பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம

தொகுப்பாசிரியர் உள்ளத்திலிருந்து

இந்த நூல் 'எழுச்சிப்பாதையின்' வெற்றிப்பீடம். பிறந்த மண்ணில் நலிவுற்று, வாழும் வழிதெரியாமல் திகைத்துக் கிடந்தது ஒரு சமூகம். இதனைக் கண்டு விழித்தெழுகிறார் ஒருவர். இதோ எழுங்கள் என்னுடன் வாருங்கள் என அழைப்பு விடுக்கிறார். வழியில் கிடந்த காடும் மேடும், கல்லும் முள்ளும், கரடும் முரடும், மேடும் பள்ளமுமாய் சமூகத் தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்தார். பாதையைச் செப்பனிட்டு அதை எழுச்சிப் பாதையாக்கினார். இன்று தன்னுடன் வழிநடந்த அந்த நலிவுற்ற சமூகத்தை வெற்றிப்பீடத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்.

அவர்தான் எழுச்சித்தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள். இவர் ஒரு வரலாற்று நாயகர்; தன்னலங்கருதாமல் பொதுநலமே தன்னலமாகக் கொண்டு 65 ஆண்டுகாலம் அயராது வழிநடத்திய பெருமனிதர். தன் அறிவும் ஆற்றலும், அனுபவமும், ஆளுமையும் செல்வாக்கும் செய்திறனும் எல்லாம் தன் சமூகத்திற்கே என அர்ப்பணித்த பெருந்தலைவர். தன்னுடன் எழுச்சிப் பாதையில் நடந்து வந்தவர்களையும் தலைவர்களாக மலர வைத்த மறுமலர்ச்சி மாமனிதர் இவர்.

இந்த வெற்றிப்பீடத்தில் நின்று நடந்துவந்த எழுச்சிப் பாதையைத் திரும்பிப்பார்த்தும், பாதையில் ஏற்பட்ட தடைகளையும் அவற்றைத் தகர்த்துப் பாதையைச் செப்பனிட்ட முறையையும், அப்பாதையில் இணைந்து நடந்து வந்து பெற்றுக் கொண்ட வெற்றிக்கனியான விழுமியங்களையும் மீள் வாசிப்புக்கு உட்படுத்தி உலகு அறிந்து பயன்கொள்ள வைப்பதுதான் இந்த ''எழுச்சிப்பாதை''யின் இலக்கு எனலாம்.

இதற்கேற்ற வகையில் இந்த நூல் ஐந்து பகுதிகளாக வகுக்கப்பட்டுத் தொகுக்கப் பட்டுள்ளது. முதலாவது பகுதியில் நூலை அணிசெய்யும் ஆசியும் வாழ்த்தும் அணிந்துரை, தொகுப்புரை, முன்னுரை, பதிப்புரைகள் முதலாய அணிசேர் விடயங்கள்அமைந்துள்ளன.

இரண்டாவது பகுதி எழுச்சித்தந்தை இ.மு.நாகலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு தொடக்கம் அவரின் மக்கள் மேம்பாட்டுப் பணிகளுக்கு உந்துசக்திகளாக இருந்து வருபவர்களின் வகிபாகம் வரை அவரை நன்கறிந்த 19 புலமையாளர்களின் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இப்பகுதியில் அவரின் 65 ஆண்டுகாலத் தலைமைத்துவ வழிகாட்டலுக்கான மூலதனமான அவரின் கல்வி, தொழில், தலைமைத்துவப் புலமைகள், ஆளுமைகள் பற்றிய செய்திகள் அடங்கியுள்ளன. இவை எழுச்சி இயக்கத்தின் தந்தையாகவும், பெருந்தலைவராகவும், கோட்பாட்டாளராகவும் இருந்து வரும் ஆர்.எம்.என் அவர்களின் செயற்கரும் செயல்களை

விபரித்து எழுச்சித் தந்தையாய் இருந்தவரை இந்த 'எழுச்சிப்பாதை' என்னும் வெற்றிப் பீடத்தில் எழுச்சி மன்னராக முடிசூட்டி நிற்கின்றன.

மூன்றாம் பகுதி அவரால், உருவாக்கி வளர்க்கப்பட்ட மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினதும், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் செயற்பாடுகளையும் வரலாற்றினையும் எடுத்துக் காட்டுகின்றது. இப்பகுதியில் ''மாவையில் தோன்றிய எழுச்சி இயக்கத்தின் தோற்றமும் பரிணாம வளர்ச்சியும்,'' என்பது தொடங்கி ''மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டம்'' என்பதுவரை துறைசார்ந்த நிபுணர்களாலும் கல்விமான்களாலும் எழுதப்பட்ட 26 கட்டுரைகள் இடம்பெறுகின்றன. இப்பகுதி எழுச்சித்தந்தையின் நீண்டகால உழைப்பால் கிடைத்த விழுமியங்களையும் சிந்தனைகள், கோட்பாடுகள், செயற்பாடுகளையும் எடுத்துரைக்கின்றது.

பகுதி நான்கில் எழுச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள், சான்றோர்கள், சாதனையாளர்களின் விபரங்கள் தரப்பட்டுள்ளன. இப்பகுதி எழுச்சிப்பாதையில் தொடர்ந்து உழைத்தவர்களையும், உருவாக்கப்பட்டவர்களையும், கௌரவிக்கப்பட்டவர்களையும் அடையாளப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எழுச்சிப்பாதையின் பலத்தை இப்பகுதியில் பார்க்கலாம்.

இணைப்புக்கள் எனும் ஐந்தாம் பகுதியில் அங்குரார்ப்பணப் பிரகடனம் தொடக்கம் இன்றைய எழுச்சிவிழா வரையான சகல ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இப்பகுதி முன்னைய நான்கு பகுதிகளிலும் சொல்லப்பட்ட செய்திகளின் உண்மைத் தன்மைக்கு உரைகல்லாக இருப்பது தனிச்சிறப்பு எனலாம்.

ஐந்து பகுதிகளைக் கொண்ட எழுச்சிப்பாதை எனும் இந்நூல் நலிவுற்றிருந்த ஒரு சமூகம் எழுச்சி கொண்டு பன்முக வளர்ச்சி கண்டு, உலகம் வியக்கும் விதத்தில் மறுமலர்ச்சி பெற்றிருப்பதைக் காட்டும் தனித்துவம் மிக்க நூல் ஆகும். இன்று நலிவுற்றிருக்கும் சமூகங்களுக்கு வழிகாட்டும் தலைசிறந்த நூலாக மிளிரும் சிறப்பும் இதற்குண்டு.

இந்த எழுச்சி இயக்கம் 1947இல் மாவை விநாயகர் அம்பாள் ஆலய வழிபாட்டில் கால்கொண்டது. 1955இல் மாவை பாரதி வாசிகசாலையாகியது. 1971 இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் ஆகியது. 1972இல் மாவை பாரதி சனசமூகநிலையமாகியது. 1980இல் ஆறு அம்சத்திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு தேசிய இயக்கமாகப் பரிணமித்தது. 1981 இல் சமூக முன்னேற்றக் கழகங்கள் உதயமாகிச் சமாசம் ஆகியது. 1993இல் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் தோற்றம் பெற்று 1995 இல் மதியுரைஞர் சபையும் உருவாக்கப்பட்டது. 1999இல் டிசம்பர் 17 இல் 52ஆம் இலக்க புனர்வாழ்வு. கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர்

சபைச்சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தால் பதிவு செய்யப் பெற்றுப் பெருவளர்ச்சி கண்டது. இன்று எழுச்சிப் பாதை எனும் ஆவணமாகி உலகத்தின் கவனத்தை ஈர்த்து நிற்கிறது.

இவ்வெற்றிக்கு மூலகாரணமாக அமைந்தவை அங்குரார்ப்பணப் பிரகடனமும்,ஆறு அம்சப் பிரகடனமும் அவற்றில் இடம்பெற்ற சிந்தனைகளும் ஆகும். இயக்கத்தின் நோக்கங்களைத் திட்டவட்டமாக முன்னிலைப்படுத்திச், சமூக இருப்பில் கல்வியின் இருப்புப் பற்றிய சிந்தனைகள், பண்பாட்டு, ஆன்மீக, கலாசாரச் சிந்தனைகள், தொழிற் பெயர்ச்சி பற்றிய சிந்தனைகள், இவற்றைச் செயற்படுத்துவதற்குரிய சிந்தனைகள் எனச் சிந்தனை வட்டத்தைக் காலத்துக்குக் காலம் விரிவுபடுத்தி ஓயாது உழைத்த உழைப்பும், அதற்கு வாய்ப்பாகக் கிடைத்த பின்புலங்களுமேயாகும். படிப்படியாக விரிவடைந்த பரிணாம வளர்ச்சிப் படிகள் ஏனைய நலிவடைந்த சமூகத்துக்கு வழிகாட்டலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இது ஒரு வரலாற்று ஆவணம் எனினும் நிர்வாகிகளாலோ அல்லது தனி ஒருவராலோ எழுதப்பட்ட வரலாறு அல்ல. பல்கலைக்கழக உபவேந்தர்கள், பேராசிரியர்கள், அரசாங்க அதிபர்கள் முதலான அரச நிர்வாக உயர்பதவி நிலை நிர்வாகிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் முதலான பல்துறைப்பட்ட புலமையாளர்களின் பன்முகப் பார்வையில் மலர்ந்த புதுமையான, உண்மை விளம்பும் உயரிய நூல்.

பல்கலைக்கழகங்கள் முதலான உயர்கல்வி நிலையங்கள் ஆய்வு செய்து பயன் கொள்ளத் தக்க கனதியான ஆக்கம் இது எனப் பொருந்தும்.

கலாபூஷணம், சைவப்புலவர்
சு.செல்லத்துரை
ஓய்வுநிலை அதிபர

பதிப்புரை

தனது சமூகத்தில் காலங்காலமாக நிலவிய சமூக அவலங்களைக் கண்டு மனம் வெதும்பி அதன் எழுச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக 1947ஆம் ஆண்டில் மாவையில் தோற்றுவிக்கப்பட்ட சமூக எழுச்சி இயக்கத்தினதும் அதன் வழிவந்த மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பிதாமகராகவும் பெருந்தலைவராகவும் கோட்பாட்டாளராகவும் செயற்பாட்டாளராகவும் இருந்து கடந்த 65 ஆண்டு காலமாக மக்கள் சமுதாய மேம்பாட்டிற்கு தன்னையே முழுமையாக அர்ப்பணித்த உத்தமர் திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் வாழ்வியலை வரலாற்று ஆவணம் ஆக்குவதன் மூலம், இன்று மறுமலர்ச்சி பெற்று விளங்கும் முதன்மைப் பயனாளிகளான நாவிதர் சமூகம் தனது நன்றியையும் பாராட்டுதலையும் உலகறியச் செய்வதே இந்நூலின் முதன்மை நோக்கமாகும்.

திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் வாழ்வியற் பண்பு, கல்விப் புலமை, தொழிற்புலமை, பன்முக ஆளுமைத் திறன், நிகரற்ற தலைமைத்துவம், கோட்பாடுகள், செயற்பாடுகள் ஆகியவற்றையும் அவற்றின் வழி வளர்த்தெடுக்கப்பட்ட சமூக எழுச்சி இயக்கம், மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் சமூக எழுச்சிச் சிந்தனைகள், கோட்பாடுகள், செயற்பாடுகள் ஆகியவற்றையும் குறிப்பாக அவை முதன்மைப் பயனாளி மக்கள் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள், மாறுதல்கள் பற்றியும் ஆய்வு நோக்கில் பதிவு செய்ய இந்நூல் விளைந்துள்ளது.

இடம்பெயர்வுகள், புலம்பெயர்வுகள், தலைமுறை மாற்றங்கள் என சமூக அரங்கில் குறுகிய காலத்திற்குள் பல விரைவான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தமையினால், தகவல்களைப் புள்ளி விபரங்களுடன் பூரணப்படுத்த இடையூறுகள் இருந்தமையையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம்.

இத்தகைய ஒரு நூலை வெளியிடும் எமது பேரவாவிற்கு வழித்தடமிட்டு, கௌரவ ஆலோசகராக இருந்து வழிகாட்டிய அமரர். பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களை என்றென்றும் நன்றியுடன் நினைவிற் கொள்கிறோம்.

இவ் ஆவண நூல் முழுமையாகவும், சிறப்பாகவும் வெளிவர வேண்டுமென எமக்கு எல்லா வகையிலும் ஊக்கமளித்து, அரிய ஆலோசனைகளை வழங்கி, பெருவிருப்புடன் மதியுரை அறிஞர்களாக தமது பங்களிப்பினை வழங்கிய யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், முன்னாள் யாழ். பல்கலைக்கழக கல்விப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா, கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர், உடுவை உயர்திரு. எஸ். தில்லைநடராசா, வடகிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் உயர்திரு.க.சண்முகலிங்கம், கலாபூஷணம், சைவப்புலவர், சு.செல்லத்துரை எனும் அறிஞர் பெருமக்களின் வகிபாகத்தினை நன்றியுணர்வோடு பதிவு செய்கின்றோம்.

இந்நூலை முழுமையாக்கும் எமது முயற்சியில் உற்சாகத்துடனும் பேருவகையுடனும் எம்முடன் கரம் கோர்த்த ஏனைய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சிரேஷ்ட சிவில் நிர்வாக உத்தியோகத்தர்கள், திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களுடன் சகாலத்தில் பணியாற்றிய சக உத்தியோகத்தர்கள், அவரின் மாணவர்கள், முற்போக்கு சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் ஆக்கங்கள் தந்துதவிய அனைவருக்கும் பிரதம நூற்குழுவின் சார்பில் எமது நெஞ்சார்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலைத் திட்டமிட்ட முறையில் விரைவாக வெளியிடுவதற்கு சிரமங்களைப் பொருட்படுத்தாது, பிரதிபலன் கருதாது பிரதம தொகுப்பாசிரியருக்கான பொறுப்பைச் செவ்வனே நிறைவு செய்ய உதவிய கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களுக்கும் எமது விசேட பாராட்டுதல்களும் நன்றியறிதல்களும் உரித்தாகட்டும்.

''கீதா பதிப்பகம்'' உரிமையாளர் வி.இராஜேந்திரம் அவர்களின் சலியாமை, விடாமுயற்சி, நெகிழ்வுத்தன்மை, செய்வன திருந்தச் செய்தல் போன்ற உயரிய பண்புகள் எமது பணிகளை இலகுவாக்கி, மகிழ்வு தந்துள்ளன. அவருக்கு அணுசரணையாக, இந்நூலை கணனியேற்றம் செய்ததுடன், பிரதிகளை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினூடு, செம்மைப்படுத்த அயராது ஒத்துழைத்த திருமதி. கமலாம்பிகை இரட்ணராஜ், நிழற் படங்களை முறையாக வடிவமைத்த திரு.எஸ். சாந்தபிரகாஷ் (கண்ணா) ஆகியோருக்கும் எமது பாராட்டுதல்களும், நன்றிகளும் உரியன.

கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் மேலான பரிணாம வளர்ச்சியில் சிறப்பாக, கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மிகவும் கனதியாகவும், அமைதியாகவும், வெற்றிகரமாகவும், சேவையை மட்டும் நோக்கமாகக் கொண்டு பணியாற்றும் எமது நிறுவனங்களின் மீதான சமகால கல்வியியல், சமூகவியல், மற்றும் அரசியல் சிந்தனையாளர்களின் அவதானிப்பும், ஆய்ந்தறிதலும் தூண்டப்படுவதற்கும்,மேலும் உயர்நிலையிலான ஆய்வு நூலொன்று வெளிவருவதற்கும் இந்நூல் கால்கோள் இடும் என எதிர்பார்க்கின்றோம்.

கிருஷ்ணப்பிள்ளை கணேஷ் - தலைவர்
செல்லத்துரை ஜெகதாசன் - செயலாளர்
கந்தையா சிவஞானம் - பொருளாளர்
('எழுச்சிப்பாதை' நூல் வெளியீட்டுக்குழு)

இரண்டாம் பகுதி

எழுச்சித் தந்தை
ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின்
கல்வி, தொழில், தலைமைத்துவ புலமைகள்

விடயம் பக்கம்

1. **எழுச்சித்தந்தை இ.மு. நாகலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு** 37
- திருமதி புஸ்பராசமணி ஆனந்தராசா B.A.(Hons) (Dip-in-Ed)
கல்லூரி உப அதிபர், சிரேஷ்ட பிரதித்தலைவர் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்.

2. **எழுச்சித்தந்தை திரு. இராமு முருகேசு நாகலிங்கம் அவர்களின் புலமைகள்** 42
- திரு. கிருஷ்ணபிள்ளை கணேஷ் M.B.A. (Sri. Jaya.)
பணிப்பாளர், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்.
சந்தைப்படுத்தல் முகாமைத்துவ மதியுரைஞர்.

3. **எழுச்சித் தந்தையின் சமூக எழுச்சிச் சிந்தனைகளும் கோட்பாடுகளும்** 53
- திரு.வி.இராஜேந்திரம்,
ஆசிரிய ஆலோசகர், கொழும்பு

4. **ஆர்.எம்.நாகலிங்கம் சமூக மேம்பாட்டாளர்.** 57
- திரு. எஸ். பத்மநாதன் B.A(Hons) (Dip-in-Ed)

5. **மாமனிதன் ஆர்.எம்.நாகலிங்கத்தின் சமூகப்பணிகளும் சாதனைகளும்** 59
- பேராசிரியர் சோ.சந்திரசேகரன்
முன்னாள் கல்விப்பீடாதிபதி, கொழும்புப் பல்கலைக் கழகம்

6. **எழுச்சித் தந்தையின் சமூக விருத்திக்கான சிந்தனைகளும் செயற்பாடுகளும்** 63
- திரு.சி.கோணேஸ்வரன்
சிரேஷ்ட முகாமைத்துவ ஆலோசகர்,
ஓய்வு நிலை அதிபர், வடகிழக்கு மாகாணக் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம்

7. **MR.R.M.NAGALINGAM THE CO-OPERATIVE EDUCATOR** 75
- Dr.K.Paramothayan

8. கூட்டுறவுத் துறையில் ஆர்.எம்.என்.அவர்களின் வகிபாகம் 79
- திரு. சு. கணேசமூர்த்தி
ஓய்வுநிலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

9. கூட்டுறவுப் பெரியார் திரு. ஆர்.எம். நாகலிங்கம் அவர்களின் கூட்டுறவுக் கல்வி மற்றும் கூட்டுறவு அபிவிருத்திப் பணிகள் 89
- திரு. ச.பாலசுப்பிரமணியம்
ஓய்வு நிலை கூட்டுறவுப் பரிசோதகர்,
உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

10. நான் கண்ட நாகா 93
- திரு. இ.அன்னலிங்கம்
முன்னாள் மேலதிக பொது முகாமையாளர், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,

11. MR. R.M. NAGALINGAM - HOUSING DEVELOPMENT 97
- Mr. W.D. Ailapperuma
Former Secretary - Ministry of Housing, Construction and Urban Development

12. சமுதாய மலர்ச்சிக்கு எழுச்சித்தந்தை ஆர்.எம்.என் அவர்களின் வகிபாகத்தின் முக்கியத்துவம் 98
- திரு. வீ. தனபாலசிங்கம்
பிரதம ஆசிரியர் - தினக்குரல்

13. திரு. ஆர்.எம். நாகலிங்கம் அவர்களும் சமூக மேம்பாடும் 102
- பேராசிரியர் சு.மோகனதாஸ்
முன்னாள் துணைவேந்தர் - யாழ் பல்கலைக்கழகம்.

14. எழுச்சித் தந்தையின் ஆன்மீக பலம் 106
- கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை
ஓய்வுநிலை கல்லூரி அதிபர்

15. எழுச்சி தந்தையும் தலைமைத்துவமும் 112
- திரு. வே.திருச்செல்வம்
கணக்காளர் - துறைமுக அதிகார சபை

16. சமூக உயர்ச்சிக்கு வித்திட்ட செம்மல் 115
- திரு. மாயாதிரவியம் கந்தையா
முன்னாள் பொதுச் செயலாளர் - சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

17. சமூக அநீதிக்கெதிராக அறிவை ஆயுதமாக்கியோன் 117
- அராலி. ச. ஆனந்தன்
முன்னாள் முகாமைப் பணிப்பாளர், - புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்

18. எழுச்சித்தந்தை ஆர்.எம்.நாகலிகங்கம் அவர்களின் மக்கள் மேம்பாட்டுப் பணிகளுக்கு உந்து சக்தியாக இருந்தவர்களின் வகிபாகம் 118
- திரு. இ.சாந்தகுமார்
செயலாளர் - சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்


19. **MR. R. M. NAGALINGAM FATHER OF SOCIAL UPLIFTMENT** 129
- Prof.Saba. Jeyarasa
Former Dean,Faculty of Education, University of Jaffna

20. **APPENDIX - I** 131
PROFESSIONAL QUALIFICATIONS AND ACHIEVEMENTS OF R.M.N.

21. **APPENDIX - II** 132
ROLES PLAYED BY R.M.N UNDER THE GOVERNMENT SERVICE

எழுச்சித் தந்தை

ஆர். எம். நாகலிங்கம் அவர்கள்



பிதாமகர்

சமூக எழுச்சி இயக்கம் - 1947

மாவை பாரதி வாசிக சாலை - 1955


மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் -1971

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் - 1981

புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம் - 1993



நாகலிங்கம் தங்கம்மா தம்பதியர்



ஆர். எம் நாகலிங்கம் அவர்களின் பெற்றோர்



ஆர். எம் நாகலிங்கம் அவர்களின் குடும்பம்

நிகழ்வுகள்



1973/1974 ஆண்டில் லண்டன் சர்வதேச கூட்டுறவுக் கல்லூரியில் கல்வி கற்றவேளையில் ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் சக மாணவர்களுடன் காணப்படுகிறார்



15-04-1981 தொண்டமானாறு செல்வச் சந்நிதி தேசிய மாநாட்டில் சமூகமளித்திருந்த மாணவ மாணவிகளின் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர் மன்றத்தின் நிர்வாக சபை - இது முதலாவது சபையாகும்.



1982ம் ஆண்டு தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் திரு. ஆர்.எம்.நாகலிங்கம் தலைமையில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழாவில் அப்போதைய பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பிரதமவிருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகிறார்.



அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக 1983 ல் உண்டியல் மூலம் நிதி வசூலிக்கும் முறை சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



A ceremony was held at the Colombo Ramakrishna Mission Hall to felicitate Mr. Krishnapillai Kanesh for his devoted social work and on his being awarded the Degree in Master of Business Administration (MBA) by the Sri Jayawardenapura University. It was organised and conducted by the Federation of Community Advancement Societies and the Rehabilitation and Education Development Fund.

எழுச்சித்தந்தை இ.மு. நாகலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

திருமதி புஸ்பராசமணி ஆனந்தராசா
B.A.(Hons) (Dip-in-Ed)
கல்லூரி உப அதிபர்
சிரேஷ்ட பிரதித்தலைவர்
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

பிறப்பும் குடும்பப் பின்னணியும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆன்மீகமும், கலைச்செழிப்பு, பொருளாதார வளமும் பெற்ற தலைசிறந்த கிராமமான "மாவை" என்றழைக்கப்படும் மாவிட்டபுரம் வரலாற்றுப் பெருமை மிக்கது. இப்பெருமைசேர் கிராமத்தில் இராமு - சிதம்பரம் தம்பதிகளின் புதல்வனாக அவதரித்த முருகேசு இவரது தந்தையாராவார். திரு. இராமு முருகேசு திரு. தாமோதரம் பொன்னம்மா தம்பதிகளின் புத்திரி கற்பகத்தைத் திருமணம் செய்து மாவையிலே இல்லற வாழ்க்கையை இனிதே நடத்தினார்கள். இவர்களது இல்லற வாழ்க்கை வரலாறு பலசோதனைக் கட்டங்களைக் கொண்டது. முதலாவதாகப் பெற்றெடுத்த பெண் குழந்தை பிறந்த சில மாதங்களிலேயே மறைந்துவிட்டது. 1931ம் ஆண்டு பெற்றெடுத்த இரண்டாவது அன்புக் குழந்தை தான் இறுதிவரை இணைபிரியாமல் இருந்து ஆதரித்த அருமை மகள் தங்கம்மா ஆவார். புத்திரன் வேண்டிச் செய்த தெய்வ வழிபாடுகளின் பலனாக 14.10.1936ல் இ.மு.நாகலிங்கம் என்னும் தெய்வப்புதல்வனைப் பெற்று மகிழ்ச்சி அடைந்தார்கள். இவர் பிறந்து சில மாதங்களுள் செல்வம் தேடித் தந்தையார் மலேசியா சென்று இரண்டாவது உலக மகா யுத்தத்தின் விளைவால் 1947ம் ஆண்டு வரை திரும்பி வராமல் ஒரு சோதனை மிக்க நீண்டகால வாழ்க்கையை வாழ்ந்தார்கள். 1947ம் ஆண்டில் தந்தையாரின் வருகை இவர்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. இவரது அருமைச் சகோதரியின் திருமணமும் இவ்வாண்டில் மிகச் சிறப்பாக நிறைவேறியது. 1948 ஆம் ஆண்டில் இவரது தங்கை நல்லம்மாவின் தோற்றம் மேலும் மகிழ்வூட்டியது.

மீண்டும் தந்தையார் 1949இல் மலேசியா சென்று 1952இல் திரும்பவும் குடும்பத்துடன் வந்து சேர்ந்தார். 1947க்குப் பிந்திய காலம் பொருளாதார இல்லறச் சிறப்பு மிக்க காலமாகும்.

இவரது தந்தையார் 31.12.1953 இல் இறைவனடி சேர்ந்தார். இதனால் 36 ஆண்டுகள் கணவனை இழந்து வாழவேண்டியநிலை இவரது தாயாரிற்கு ஏற்பட்டது. இ.மு.நாகலிங்கத்தையும் சகோதரிகள் இருவரையும் பராமரித்து வழிப்படுத்தி ஆளாக்கும் தலைமைப் பொறுப்பு தாயாரிற்கு ஏற்பட்டது. இரண்டாம் உலக மகா யுத்த காலப் பாதிப்பினால் 11 ஆண்டுகள் தந்தையின் பராமரிப்பில்லாமல் தவித்த காலத்தில் இவரது அருமை அண்ணன் தாமோதரம் அவர்களின் ஆதரவு இவர்களுக்குப் பக்கபலமாக அமைந்தது. 1953ம் ஆண்டு தந்தை இறந்த பின்னுள்ள காலப்பகுதியில் அருமைச் சகோதரி தங்கம்மாவினதும் அவரது

அருமைக் கணவன் வல்லிபுரத்தினதும் அன்பும் ஆதரவும் இவர்களுக்குப் பெரும் துணையாக அமைந்தது. எனவே இவரது குடும்பப் பின்னணியில் சாதாரண குடும்பத்தில் பிறந்தாலும் கல்வியின் அவசியத்தை இவரது பெற்றோர் நன்கு அறிந்திருந்தனர். தம் தனயன் நன்கு படித்துச் சிறப்புடன் வாழ வேண்டும் என்பதே இவர்களது பேரவாவாக இருந்தது.

இல்லற வாழ்வியல்

திரு.இ.மு நாகலிங்கம் அவர்களது இல்லற வாழ்வியல் தொடர்பாக அவரது மனைவியைத் தேர்ந்தெடுக்கும் விடயத்தில் அவரது தாயாரின் தீர்மானம் முக்கிய பங்கை வகித்தது. தாயாரின் விருப்பத்திற்கேற்ப நுணாவிலைச் சேர்ந்த அவரின் உறவினரான காலம் சென்ற சின்னத்தம்பி சின்னம்மா ஆகியோரின் மூத்த புதல்வி தங்கம்மாவை 27.01.1965 இல் திருமணம் செய்து கொண்டார். அன்று தொட்டு மருமகளை தன் பிள்ளைகளில் ஒருவராக்கி தனது ஏனைய பிள்ளைகளிலும் பார்க்கக் கூடிய பாசத்துடன் 25 ஆண்டுகளாக இணைபிரியாது வாழ்ந்து வந்தார்கள். இல்லற வாழ்க்கையில் ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது'' என்னும் திருவள்ளுவர் வாக்கிற்கு இணங்க திரு.இ.மு.நாகலிங்கம் அவர்கள் தன் வாழ்க்கைத் துணையுடன் இல்லற வாழ்க்கையில் சிறப்புடன் வாழ்ந்து முருகதாசன், இராமதாசன், கணேசதாசன், நடேசதாசன் என்னும் நான்கு புத்திரர்களைப் பெற்றெடுத்து அவர்களுக்குச் சிறந்த கல்வியுடன் நல்லொழுக்கம் சமயவிழுமியப்பண்புகளையூட்டி வளர்த்தெடுத்துள்ளார்கள். பெற்றோர் அகமகிழும் படியாக இவர்களது புத்திரர்கள் தற்போது கொழும்பு, கனடா, இலண்டன் ஆகிய இடங்களில் தொழில் வாய்ப்பைப் பெற்றும் திருமணமாகி வாழ்க்கைச் சிறப்பைப் பெற்றும், பிள்ளைகளுடன் சிறப்பாக வாழ்ந்து வருகிறார்கள்.

''குடும்ப ஒற்றுமையே அமைதியான வாழ்விற்கு அவசியம்'' என்ற கோட்பாட்டைத் தனது தாயார் வாழ்ந்து காட்டிய அவ்வழியே செல்லத் தன்னைப் பக்குவப்படுத்தி வளர்த்தார். என்றும் தாய்மனையில் கூட்டுக்குடும்பமாக ஒரே பானையில் சமைத்து உண்ணும் பழக்கத்தைத் தன் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மத்தியிலும் வளர்த்தமையின் பேறாக குடும்ப ஒற்றுமை என்றும் ஆரோக்கியம் பெற்று விளங்கியது என்று தாயாரின் நினைவு நூலில் இ.மு.நாகலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி மேம்பாடும் தொழிற்சிறப்பும்

திரு.இ.மு.நா. அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அவரது தாயாரின் விடாமுயற்சியும் அர்ப்பணிப்பும் தான் காரணமாகும். தாயாரிடம் இயற்கையாகக் காணப்பட்ட கல்வி ஆர்வம்தான் பல இன்னல்கள் மத்தியிலும் தளராத உறுதி பூண்டு இவரைக் கற்க வழி அமைத்துக் கொடுத்தது. தாயாரின் தியாகமும் உயரிய நோக்கமும் இவரது கல்விக்குச் சிறந்த உரமாக அமைந்தது. இவரது தாயார் 1989 இல் இறைவனடி சேர்ந்த போது வெளியிட்ட நினைவு மலரில் இவர் குறிப்பிட்டிருக்கும் செய்தி இங்கு கவனிக்கத்தக்கது. **''பட்டினிவரினும் படிக்க வைப்பேன் என்று சபதம் பூண்டு உறுதியோடு என் கல்வி வளர்ச்சிக்குப் பங்களித்ததன் விளைவாகக் கல்வித் துறையில் கணிசமான முன்னேற்றமடைய வழிகாட்டியவர்.**

கல்வித் துறையில் பின் தங்கிய சமூகங்கள் 5ஆம் வகுப்புடன் படிப்பை நிறுத்திய காலகட்டத்தில் பல இன்னல்களையும் தாங்கி என்னைப் படிக்கவைத்துள்ளார்" என்ற கூற்று இவரது உயர்ச்சிக்குத் தாயாரின் உன்னதமான பங்களிப்பு எத்தகையது என சான்று பகர்கின்றது.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மாவை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றார். இடைநிலை உயர்கல்வியை யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கற்றுச் சிறந்த மாணவனாகத் திகழ்ந்தார். கல்லூரியில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கினார். கல்லூரிகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி கல்லூரிக்குப் பெருமை தேடிக் கொடுத்தார். காற்பந்து, கரப்பந்து, தாச்சி போன்ற விளையாட்டுக்களில் இல்லத் தலைவனாக இருந்து தமது அணிகளின் வெற்றிக்கு வழிகாட்டியாக இருந்தார். அத்துடன் கல்லூரித் தமிழ்ச்சங்கத்தின் செயலாளராக வும் H.S.C. Union பொருளாளராகவும் சேவையாற்றியுள்ளார்.

''விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்ற முதுமொழிக்கிணங்கத் தனது கல்லூரி வாழ்க்கையில் சிறந்த மாணாக்கனாக விளங்கிய அவரது பலதரப்பட்ட செயலாற்றல்கள் தான் இன்று இ.மு.நாகலிங்கம் அவர்களது சமூக சேவைக்கு மேலும் உரமூட்டுகின்றன எனின் மிகையாகாது.

சமய ஆன்மீக மேம்பாடு

இவரது தாயார் அசையாத தெய்வ நம்பிக்கை உடையவராக விளங்கிப் பல விரதங்களையும் அனுஷ்டித்து வந்தார். இவர் பிறந்த ஆண்டிலேயே கதிர்காமக் கந்தன் குடிகொண்ட கதிரமலை ஏறி இவரது பிறப்பிற்காக வைத்த நேர்த்தியை நிறைவேற்றினார். குல தெய்வமான மாவை அம்பாளைச் சரண் புகுந்து குழந்தைப் பராயத்தில் இவருக்கு உயிர் ஆபத்தான நோயைக் குணப்படுத்தினார். இவருக்கு ஏற்பட்ட இந்த ஆபத்தான நோயினால் உயிர் பிழைக்க மாட்டார் என்று எல்லோரும் கைவிட்டுக் கதறிய நேரத்தில் தாயார் அசையாத தெய்வ நம்பிக்கை கொண்டு அம்பாளைச் சரண்புகுந்து நோயைக் குணப்படுத்தினார். பல ஆண்டுகள் தொடர்ச்சியாக மாவைக் கந்தன் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு 25 திருவிழா நாட்களும் விரதம் அனுசரித்து அடியளித்து முருகப்பெருமானை வழிபடுவதை சிரமேற் கொண்டவர். குல தெய்வங்களாக விளங்கும் மாவை அம்பாள், மாவை சித்தி விநாயகர் ஆலயங்களில் ஆரம்பகாலம் தொட்டு பலவகையான தொண்டுகளைச் செய்து வழிபட்டதுடன் அவ்வாலயங்களில் நிர்வாகச் சிறப்பிற்கும் உதவி வந்துள்ளார். தாயாரின் ஆழ்ந்த சமய நம்பிக்கையும் பக்தியும் தான் திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களை சிறுவயதிலிருந்து சமய பக்தி இறை வழிபாடுகளில் ஈடுபடச் செய்து அத்துறையில் ஆர்வத்தை பலவழிகளிலும் ஏற்படுத்தி வைத்தது. இவ்வாறு வளர்க்கப்பட்ட ஆர்வத்தின் பேறாக மாவை அம்பாள் ஆலயம், மாவை சித்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் நிர்வாகங்களில் ஆழமாக ஈடுபட வைத்து, தர்மகர்த்தா சபைகளை ஸ்தாபிப்பதற்கும் உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் அமைந்தது எனலாம். 1947ஆம் ஆண்டு மாவை சித்தி விநாயகர்

ஆலயத்தினதும், மாவை அம்பாள் ஆலயத்தினதும் முன்னோடித் தொண்டர் தலைவராக இருந்து சேவையாற்றியுள்ளார். 1984இல் இரண்டு ஆலயங்களுக்கும் தனித்தனி தர்மகர்த்தா சபை அமைக்கப்பட்டு ஆலயங்களின் சொத்துக்களும் நிர்வாகங்களும் தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைப்பதற்கு 15 வருட காலமாக விடாமுயற்சி செய்து ஈற்றில் வெற்றிபெறுவதற்கு இவர் முன்னணித் தலைவராக இருந்து செயற்பட்டுள்ளார்.

தனது குலதெய்வங்களான மாவை அம்பாள், மாவை சித்தி விநாயகர் ஆலயங்களில் தனது சிறுபராயத்திலிருந்து அருட்பாடல்களை பண்ணிசையோடு கூட்டுப்பிரார்த்தனை செய்வதற்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் வழிசமைத்துக் கொடுத்தார். தனது நாளாந்தக் கடமையாக காலை மாலையில் தனது இல்லத்தில் இறைவழிபாட்டிலும் தியானத்திலும் ஈடுபடுவதை யாவரும் அறிவர்.

இவர் 1947இல் ஆலயங்களைத் தளமாகக் கொண்டு சமூகப் பணிகளை ஆரம்பித்தார். மாவை சித்தி விநாயகர் ஆலயம், மாவை அம்பாள் ஆலயம் என்பவற்றில் கோயில் வழிபாடு ஒழுங்குகள், பண்ணிசை வகுப்பு, பஜனை செய்தல், யோகாசனப் பயிற்சி, தியானப்பயிற்சி, சிரமதானப்பணிகள் என்பனவற்றினூடாகச் சிறுவர்களையும், வயதான வர்களையும் ஒன்றிணைத்து சமூக விழிப்புணர்ச்சிப் பணிகளைத் தொடங்கி இன்றுவரை பெரு வெற்றியுடன் செயற்படுத்தி வருகிறார். மிகச்சிறப்பாக இவரது தலைமைத்துவத்தால் வளர்த்தெடுத்த இவ்விரு ஆலயங்களும் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு செயலிழந்து காணப்பட்டன. இவ்வாலயங்கள் மீண்டும் தொழிற்பட திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் தலைமையில் ஆலயத் தொண்டர்கள், தர்மகத்தாசபையினர் அனைவரும் ஒன்று கூடிச் சிரமதானப்பணிகள் செய்து பூசைகள் நடாத்தப்படுகின்றன. ஆலயங்களின் புனருத்தாரணப்பணிக்கான பணம் சேகரிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராம மட்டத்திலான சமூகப் பணிகள்

தன்னை ஆளாக்கிய தாயாரின் **''கண்காணிப்புடன் கூடிய தடைவிதியாக் கொள்கை''** தான் தன்னை சமூகப் பணிகளில் ஆழமாக ஈடுபடச் செய்து தவறுகளைக் கண்காணித்து சமூகத்திற்கு பங்களிப்புச் செய்யத் தூண்டியது என தாயாரின் நினைவு நூலிலே வெளிப்படுத்தியுள்ளமை கவனிக்கத் தக்கதாகும்.

தனது உத்தியோக வாழ்வு சமூகத்தில் நல்ல நிலைக்குத் தன்னை வளர்த்திருந்தாலும் தான் சார்ந்த சமூகத்தின் நலிவுகண்டு மனம் வெதும்பினார். தனது இளமைக்காலம் தொட்டே சமூக மறுமலர்ச்சி அமைப்புக்களில் பங்கு கொண்டு உழைத்ததுடன் தன் சமூகத்தின் விடிவுக்கான செயற்பாடுகளில் நாட்டம் செலுத்தினார். இதன் அடிப்படையில் உருவாக்கப் பட்டதே எமது சமூக எழுச்சி இயக்கமாகும். 1980.09.12ம் திகதியன்று திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் அயராத முயற்சியால் பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் வெள்ளி விழா மகாநாட்டில் ஒரு தேசிய எழுச்சி இயக்கமாகத் தோற்றம் பெற்றது.

மாவட்ட, மாகாண, தேசிய ரீதியிலான பங்களிப்பு

இவரது சமூக எழுச்சிச் சிந்தனையின் பேறாக உதயமான சமூக எழுச்சி இயக்கத்தின் ஸ்தாபகராக இருந்து அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்துக் கொண்டு வருகிறார். கிராம மட்டத்தில் 24 சமூக முன்னேற்றக் கழங்களை அமைத்து எழுச்சிக் கூட்டங்களை மாவட்டரீதியாகவும், மாகாண ரீதியாகவும் நடாத்தி அக்கழகங்களின் ஆதரவுடன் 15.04.1981இல் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வளாகத்தில் எழுச்சி இயக்கத்தின் தேசிய மகாநாட்டை நடாத்திச் சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசத்தை தேசிய ரீதியில் ஸ்தாபித்த பெருமை எமது எழுச்சித்தந்தை இ.மு.நாகலிங்கம் அவர்களைச் சாரும். இதனைத் தொடர்ந்து 1993இல் தோன்றிய புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் ஸ்தாபகத் தலைவராவார். சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தையும், நிதியத்தையும் இன்றுவரை பல சவால்களுக்கு முகம் கொடுத்து வியக்கத்தக்க முறையில் அவற்றை வளர்த்து வருகின்ற வழிகாட்டித் தலைவராக இவர் தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறார். ஆரம்ப காலத்தில் பல்வேறு காரணங்களால் பிளவுபட்டு வாழ்ந்து வந்த மக்களை சகோதர உணர்வோடும் ஐக்கிய உணர்வோடும் ஒன்று பட்டு வாழ்வதற்கு இ.மு.நாகலிங்கம் அவர்களின் முயற்சி பெரும் மகத்தான பங்களிப்பை வழங்கியது. இத்தகைய ஐக்கிய வளர்ச்சிக்கான முயற்சி மாவிட்டபுரக்கிராமத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் யாழ் மாவட்டத்தையும் ஏனைய வடக்கு கிழக்கு மாகாணங்களையும் இலக்காகக் கொண்டு பேதமின்றித் தொடரப்பட்டது. இத்தகைய ஐக்கிய வளர்ச்சி இன்று தேசிய ரீதியில் சமாசத்தைச் சார்ந்த மக்கள் சமூகம் பெரும் சக்தியாக பரிணமித்து எழுச்சி கொண்ட மக்களாக வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருவது பெருமைப்படக் கூடிய ஒரு சாதனையாகும்.

எழுச்சித் தந்தையின் தலைமையை மதித்து அவரின் சிந்தனைகள், கோட்பாடுகள், செயற்திட்டங்கள் ஆகியவற்றை வெற்றி பெறச் செய்வதற்குச் சமூக முன்னோடிகள், சமூக முன்னணி இளம் தலைவர்கள், தலைவிகள், நிர்வாகிகள், பயனாளிகள் சமூகம் ஆகிய அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்போடு சேவையாற்றி வந்துள்ளார்கள்.

எழுச்சித் தந்தையின் சிந்தனையில் தோன்றிய சமூக எழுச்சிச் சிந்தனைகள் பெரிய ஆலமரம் போல் வான் நோக்கி வளர்ந்து பல விழுதுகளைத் தாங்கி சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் எனக் கைகோர்த்து இணைந்து அவரது கனவுகளை நனவாக்கி வருகிறது. எழுச்சித்தந்தை இ.மு.நாகலிங்கம் அவர்களின் பல்நோக்கு சிந்தனைகளின் வெற்றிகள், செயற்பாடுகளை வார்த்தைகளால் வடிக்க முடியாது. "வாழ்க எழுச்சித் தந்தையின் செயற்பாடுகள்". 'தொடர்க அவர்பணி, ஓங்குக அவர் புகழ்'.

எழுச்சித்தந்தை திரு. இராமு முருகேசு நாகலிங்கம் அவர்களின் புலமைகள்

திரு. கிருஷ்ணபிள்ளை கணேஷ்
M.B.A. (Sri. Jaya.)
பணிப்பாளர்
புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியம்
சந்தைப்படுத்தல் முகாமைத்துவ மதியுரைஞர்

''நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு. (குறள் 994)''

''The world applauds the character of those whose usefulness results from their equity and charity.''

''நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும்
பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.''

தலைமைத்துவப் பண்புகள் :

தலைமைத்துவப் பண்பு என்பது ஒரு குழுவினர் குறித்த ஒரு இலக்கை அடைவதற்கு உந்துசக்தியாகிச் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றல் என்று வரைவிலக்கணம் செய்வார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஒருவரின் தனிப்பட்ட குணாதிசயங்களும் பண்புகளுமே, தலைவர்களையும், தலைமைத்துவ பண்பு அற்றோரையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன என்கிறது, '' Traits Theory ''. இத்தகைய குணாதிசயங்கள் எனப்படுவன இலட்சியமும் மனோவலிமையும், தலைமை தாங்கும் விருப்பு, நேர்மையும் நாணயமும், தன்னம்பிக்கை, நுண்ணறிவு, மிகுந்த சுய கண்காணிப்பு மற்றும் தேவையான விடயங்களில் ஆழ்ந்த அறிவு என விபரிக்கப்படுகின்றன.

இந்தத் தலைமைத்துவத் தத்துவம், தலைவர்கள் இயல்பாகவே இத்தகைய குணாதிசயங்களுடன் பிறக்கின்றார்களேயன்றி, காலப்போக்கில் அல்லது பயிற்சியில் அவர்கள் முகிழ்ப்பதில்லை என்று சொல்கிறது.

இந்தத் தத்துவார்த்தத்தின் அடிப்படையில் நோக்கும் போது திரு. இ.மு. நாகலிங்கம் அவர்கள் இயல்பாகவே தலைமைத்துவப் பண்புகளுடன் தோற்றம் பெற்றவராக விளங்குகின்றார். மிக இளம் பராயத்திலேயே தனித்துவமான ஆளுமைத் திறனைக் கொண்டவராக அவர் விளங்கியமைக்குச் சான்றாக சிறுவர்கள் மாணவர்களுக்கு உதவுதல், அயலவர்களுக்கு முன்னின்று உதவுதல், உறவினர்களின் சமூக வைபவங்களான திருமணம்,

மரணச் சடங்கு போன்ற நிகழ்வுகளில் முன்னின்று செயற்படுதல், மாவை சித்தி விநாயகர், மாவை அம்பாள் ஆலயத் திருப்பணிக் கருமங்களில் முன்னணியில் நின்று பணி செய்தல், சமூக சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்து வழிநடத்துதல், சைவப் பண்பாட்டைக் கட்டி வளர்த்தல், சமூகத்தை நேசித்தல், நலிவுற்றோருக்குப் பணி புரிதல், ஒழுக்க சீலராய் பெரியோரை மதித்து நடத்தல் எனப் பல அரிய பண்புகளை அவரிடம் காணக் கூடியதாக இருந்தது.

ஆரம்பக்கல்வி :

திரு. இ.மு.நா அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை மாவிட்டபுரம் அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையில் பயின்றார். சைவத்தமிழ் பாடசாலைகளில் சாதியின் பெயரால் மாணவர்கள் மத்தியில் தீவிரமான முறையில் பாகுபாடு காட்டப்பட்டு கல்வி கற்பதற்கான சமத்துவ உரிமை ஒரு பகுதியினருக்கு மறுக்கப்பட்ட காலத்தில் மிஷனரிப் பாடசாலைகள் உரிமை மறுக்கப்பட்ட சமூகத்தினைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் கல்வி கற்று முன்னிலை பெற அருந்தொண்டாற்றியுள்ளன. இக்கல்லூரியில் வழங்கப்பட்ட சிறப்பான ஆரம்பக் கல்வியின் காரணமாக தனது வாசிப்பு, எழுத்து, பேச்சுத் திறனுக்கான அத்திவாரத்தை மிக உறுதியாக மிகஇளவயதில் இட்டுக் கொள்ள முடிந்தது.

தொடர்ந்து பெற்றோரின் பெருவிருப்புக்கமைய தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் 1947இல் சேர்ந்து தனது க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்றார். கல்வியில் சிறந்து விளங்கியதோடு நற்பண்புகள் நிறைந்த மாணவனாகவும் தன்னை வளர்த்துக் கொண்டார். தன் வீட்டுச் சுற்றாடலில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாக கல்வி கற்பித்ததுடன் அச்சூழலில் வாழ்ந்த மக்களின் நாளாந்த அறிவுசார் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பெரிதும் துணை புரிந்தார்.

கல்லூரிக் காலத்தில் அரசியல், சமூகவியல், நடைமுறை வாழ்வியல் அறிவையும் விருத்தி செய்து கொண்டார். அரசியல் விவகாரங்கள், சமூக சமத்துவப் போராட்டங்கள், மற்றும் சமூக உரிமை மீறலுக்கு எதிரான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் வளர்த்தல் போன்றவற்றுக்கான சமூக இயக்கங்களில் மிகக்கரிசனையுடனும் துணிச்சலுடனும் இவர் பங்குபற்றி வந்துள்ளார்.

இடதுசாரி இயக்கத்தின் செல்வாக்கும், அரசியல் ஈடுபாடும் :

இடதுசாரி இயக்கமானது இலங்கையில் 1932ஆம் ஆண்டளவில் உதயமானது. காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியில் இடதுசாரி இயக்கத்தின் தொழிற்பாடுகள் இலங்கை பாராளுமன்றத்துக்கான முதலாவது பொதுத்தேர்தலுடன் 1948ஆம் ஆண்டில் ஆரம்பமானது. வழக்கறிஞர் பொ. நாகலிங்கம் தலைமையில் காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியில் அறிமுகமான இலங்கை சமசமாஜக் கட்சியின், சமூக சமத்துவம், இனசமத்துவம், மொழி சமத்துவம், பொருளாதார சமத்துவம் ஆகிய சமத்துவக் கோட்பாடுகளினால் ஈர்க்கப்பட்டவர்களுள் இ.மு.நா உம் ஒருவராவார். இலங்கை சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையில் தனது சகாக்களுடன் அங்கத்தவராகச் சேர்ந்து அக்கட்சியின் கொள்ளைகள்,

தத்துவங்கள், வேலைத்திட்டம் ஆகியவற்றை பிரசார இயக்கத்தின் மூலம் விளக்கம் பெறுவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார். இவர் சமசமாஜக்கட்சியின் ஆதரவுடன் சமூக சமத்துவம் மறுக்கப்பட்ட மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குப் பெரும் பங்காற்றி இக்கட்சிக்கான ஒரு கிளையினை மாவிட்டபுரத்தில் ஆரம்பிப்பதற்கு அனுசரணையாக இருந்ததுடன் அதன் செயலாளராகவும் பணியாற்றினார். இவ்வரசியல் பணிகளின் தொடர்ச்சியாக சமூக மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு சமூக நிறுவனம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்ற கருத்து இ.மு.நாவிடம் மென்மேலும் வலுப்பெற்றது.

சமூக சமத்துவப் போராட்டத்தின் செல்வாக்கு :

விரும்பிய பாடசாலைகளைத் தெரிவு செய்யும் உரிமை, சமத்துவத்துடன் பாடசாலைகளில் படிக்கும் உரிமை, ஆலயங்களுக்குள் சென்று வழிபடும் உரிமை, பொதுக் கிணறுகள் நீர் நிலைகளைப் பாவிக்கும் உரிமை, விரும்பிய தொழிலைத் தெரிவு செய்யும் உரிமை, விரும்பிய இடங்களில் குடியிருப்புக்களை அமைக்கும் உரிமை ஆகிய இன்னோரன்ன உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகக் குழுமங்கள் மத்தியில் இடதுசாரி இயக்கத்தின் செல்வாக்கு, அமெரிக்கப் பாதிரிமாரின் கல்விச் செல்வாக்கு, இலவசக் கல்வி முறையின் செல்வாக்கு, அரசியல் கட்சி முறையின் செல்வாக்கு போன்ற காரணிகளின் மூலம் பெரும் விழிப்புணர்ச்சியும், சிந்தனை மாற்றமும் ஏற்பட்டு அம்மக்களை எழுச்சி கொள்ளச் செய்தன. இத்தகைய எழுச்சி கொண்ட கிராமமட்டத்திலான சமூகத்தலைவர்களின் வரிசையில் இ.மு.நா.ஒரு முன்னோடி என்றால் மிகையாகாது.

சமத்துவப் போராட்டத்திற்கான புரட்சி இயக்கத்தை இ.மு.நா மிக அமைதியான முறையிலும் சுயவழிகாட்டலுடனும் 1947ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்து வந்துள்ளார் எனலாம். தெல்லிப்பளை கிராமச்சபையைச் சேர்ந்த 17ஆம் வட்டாரத்திற்கான தேர்தலில் உரிமைகள் மறுக்கப்பட்ட சமூக குழுமங்களின் பிரதிநிதிகள் சுழற்சி முறையில் வெற்றி பெற்று கிராம சபையில் பிரதிநிதித்துவம் செய்வதற்கான இயக்கமொன்றைத் தந்திரோபாயங்கள் வகுத்து துணிச்சலுடன் செயற்பட்டு வெற்றி பெறவைத்த முன்னணித் தலைவர்களின் வரிசையில் இ.மு.நாவின் பங்களிப்பு சிறப்பானது.

இம்முயற்சியின் பயனாக திருவாளர்களான தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை, கதிரேசு வேதாரணியம், எ.வைரமுத்து, இ.நடேசு, முருகேசு முத்துலிங்கம் ஆகியோர் 17ஆம் வட்டாரத்திலிருந்து தெல்லிப்பளை கிராமசபைக்கு அங்கத்தவர்களாக வெற்றிபெற்றனர். இது போன்று சமத்துவப் போராட்டத்திற்கான முயற்சிகளை மேலும் மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள்மயப்படுத்தப்பட்ட நிறுவனரீதியான தலைமையை ஸ்தாபிக்க வேண்டுமென்று இ.மு.நா தூண்டப்பட்டார்.

கூட்டுறவுக் கல்வி மேம்பாட்டுச் சேவையும் தொழிற்புலமையும் :

திரு. இ.மு.நா அவர்கள் தனது பாடசாலைக் கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் முடித்த பின்னர் தொழிற்கல்விக்காக கூட்டுறவுத் துறையைத் தெரிவு செய்து

கொண்டார். 1959ஆம் ஆண்டு யாழ் கூட்டுறவுக்கல்விப் பாடசாலையில் Cooperative Employees Certificate என்ற முழுநேரப் பயிற்சி நெறியினை அதிஉயர் சித்திகளுடன் நிறைவேற்றியமை அவர் பிற்காலத்தில் கூட்டுறவுக் கல்வித்துறையில் ஆற்றிய அளப்பரிய சேவைகளுக்கு அடித்தளமாக அமைந்தது.

இவற்றைத் தொடர்ந்து 01 ஏப்ரல் 1960இல் கூட்டுறவுத் திணைக்களத்தில் கூட்டுறவுப் பரிசோதகராக இணைந்தார். தம்பலகாமம் மற்றும் கந்தளாய் பிரதேசங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தராக ஒன்பது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொறுப்பாக இருந்து அவர்களுடைய கணக்கியல், வியாபார, முகாமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்துவதற்குப் பெரிதும் பங்காற்றினார்.

1962 இலும் 1967 இலும் பொல்கொல்லை இலங்கைக் கூட்டுறவுத் தேசியக் கல்லூரியில் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான முழுநேர வதிவிடப் பயிற்சிநெறிகளை மேற்கொண்டு இரண்டு நிலைகளிலும் மிகத்திறமைச் சித்தி பெற்றதோடு மட்டுமன்றி பரீட்சையில் முதலாவது இடத்தையும் பெற்று கற்கை நெறியினை வெற்றிகரமாக நிறைவேற்றினார்.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்கான பங்களிப்பு :

திருகோணமலை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் பணியாற்றிய காலத்தில் அன்றைய உதவிக்கூட்டுறவு ஆணையாளராக விளங்கிய திரு. எம். மதிபாலசிங்கம் அவர்களினதும் மற்றும் ஏனைய அப்பிரதேசத்துக் கூட்டுறவாளர்களினதும் நம்பிக்கையினையும், நன்மதிப்பையும் முழுமையாகப் பெற்றிருந்தார். அக்காலகட்டத்தில் நெல்கொள்வனவு உத்தரவாத விலைத்திட்டம் சார்ந்த பணிகளில் ஊழலற்ற நேர்மையான செயற்றிட்டங்களை வெற்றிகரமாக அமுல்படுத்தியமையே இத்தகைய கௌரவத்தை அவர் பெறக் காரணமாய் அமைந்தது.

1960 - 61ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் அவர் கூட்டுறவுச் சங்கங்களின் எண் பார்வைகளை மீளாய்வு செய்யும் பணியினையும் ஆற்றினார். ஒரு இளநிலை உத்தியோகத்தராக இருந்தபோதும் அவரின் அதீத திறமையினால் முதுநிலை உத்தியோகத்தர்களின் கணக்குகள் எண்பார்வை செய்யும்படி அவர் பணிக்கப்பட்டமையினால் பல எதிர்ப்புகளை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இருப்பினும் எதற்கும் அஞ்சாது தனது கடமையைச் சரிவரச் செய்தமையினால் அவரின் மேலதிகாரி திரு. எம். மதிபாலசிங்கம் அவர்களினால் பெரிதும் பாராட்டப்பட்டார்.

1961ஆம் ஆண்டில் திருகோணமலை மாவட்டக் கூட்டுறவுப் பாடசாலை நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் திரு. இ.மு.நா அவர்கள் Book Keeping பாடத்தினை பகுதிநேரமாக விரிவுரையாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. ஆனால் அதற்கு முதுநிலை விரிவுரையாளர்களின் எதிர்ப்புகள் இருந்ததால் பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் விரிவுரைகளை நிகழ்த்தி மாணவர்களின் முன்னேற்றத்திற்கு உதவினார்.

1962 - 64ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் திருகோணமலை மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றியதுடன் திருகோணமலை மாவட்டக் கூட்டுறவு

வங்கி மற்றும் அதன் கிளைகளினதும் உள்ளகக் கணக்காய்வாளராகப் பணியாற்றினார். அது மட்டுமன்றி அவரிடம் கற்ற மாணவர்கள் இறுதிப் பரீட்சைகளில் அகில இலங்கை ரீதியாகமிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1963ஆம் ஆண்டில் திரு. எம். மதிபாலசிங்கம் அவர்கள் யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அவரைத் தொடர்ந்து பதவியேற்ற திரு.S.R.ஆசீர்வாதம் அவர்கள் திரு. இ.மு.நா வகித்த பொறுப்புகளையிட்டுத் திருப்தியற்றவராக இருந்தார். இதற்குக் காரணம் பல்வேறு முதுநிலை உத்தியோகத்தர்கள் இருக்கையில் இ.மு.நா அவர்கள் ஒரு இளநிலை உத்தியோகத்தராக இப்பதவிகளுக்குப் பொருத்தப்பாடு உடையவராகமாட்டார் என்பது அவரின் கருத்தாக இருந்தது. ஆயினும் பல்வேறு அழுத்தங்களின் பேரில் திரு. இ.மு.நா அவர்கள் தனது வழமையான பணிகளைத் தொடர அனுமதிக்கப்பட்டார்.

1964ஆம் ஆண்டு திருகோணமலை மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கம் ஒரு மிகப்பெரிய பிரியாவிடை வைபவத்தை திரு. இ.மு.நா அவர்களுக்கு திருகோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்தது. இவ்வைபவத்தில் இ.மு.நா அவர்களுக்கு ''கூட்டுறவு இளவல்'' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் திரு. S.R.ஆசீர்வாதம் அவர்கள் இ.மு.நா அவர்களை ஒரு ''கர்மயோகி'' என விளித்துப் பெருமைப்படுத்திப் பேசியதுடன் ஸ்ரீ பகவத் கீதையிலிருந்து உதாரணம் காட்டிப் பாராட்டிக் கௌரவித்தார்.

திரு. எம். மதிபாலசிங்கம் அவர்களின் வேண்டுகோளின்படி 1965 ஜனவரியில் திரு. இ.மு.நா அவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றார். இவ்விடமாற்றம் வடகிழக்கு மாகாண சிரேஷ்ட கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட புதிய உயர்தர கூட்டுறவுப் பயிற்சிப் பாடநெறிக்கான விரிவுரையாளர் குழாமில் அவர் இணைந்து கொள்வதற்காகவே ஆகும். இவ்விரிவுரையாளர் குழாமில் மறைந்த திரு. ஹன்டி பேரின்பநாயகம் போன்ற பேராசான்களும் இருந்தமை பெருமை சேர்ப்பதாக இருந்தது.

1971ஆம் ஆண்டு பட்டதாரிப் பயிலுநர்களுக்கான பயிற்சி நெறிகளுக்குப் பொறுப்பான விரிவுரையாளராக புதிய பதவி திரு. இ.மு.நா அவர்களுக்கு வழங்கப்பட்டது. வடபிராந்திய கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் திரு. இ.மு.நா அவர்களின் சேவையினை 1968, 1969, 1970 ஆம் ஆண்டுகளில் அவரது வருடாந்த இடமாற்ற உத்தரவுக்கு மாறாகப் பெற்றுக்கொண்டது. தொடர்ந்து ஏழு வருடங்களாக ஒரு விரிவுரையாளராக யாழ் கூட்டுறவுக் கல்லூரியில் கடமையாற்றினார். இறுதியாக 1971இல் பதவி உயர்வு பெற்று பொல்கொல்லையில் உள்ள தேசிய கூட்டுறவுக் கல்லூரியில் விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

இக்காலகட்டத்தில் பல்வேறு புதிய கற்கை நெறிகளும், பயிற்சிப் பட்டறைகளும், களப்பயிற்சிப் பாடநெறிகளும், கூட்டுறவுக் கல்விப் பாடசாலையினதும், உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திணைக்களத்தின் கூட்டிணைப்பில் ஒழுங்கு செய்யப்பட்டு வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

1968 - 1970ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் திரு. இ.மு.நா அவர்களின் சேவையினைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதில் வடபிராந்திய கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வெற்றி கண்டது. தொடர்ந்து ஏழு வருடங்களாக வடபிராந்திய கூட்டுறவுப் பாடசாலையில் திரு. இ.மு.நா அவர்கள் விரிவுரையாளராகக் கடமையாற்றும் வாய்ப்பு இதனால் கிடைத்தது. அரசாங்கத் திணைக்களங்களில் இடம்பெறும் வருடாந்த இடமாற்றல் முறைமைக்கு, அமைவாகப் பல தடவைகள் திரு. இ.மு.நா அவர்களை வேறு மாவட்டங்களுக்கு இடமாற்றும் முயற்சி, வடபிராந்திய கூட்டுறவு சமாசத்தின் பெருமுயற்சி யினால் தாமதப்படுத்தப்பட்டு அவரின் சேவை ஏழு ஆண்டுகளாக தொடர்ச்சியாகக் கிடைக்கும் வகையில் அமைந்தது. இருப்பினும் அவரது பதவியுயர்வுக்கான சந்தர்ப்பமாக 1971ஆம் ஆண்டின் இறுதியில், கூட்டுறவுக் கல்வியின் தேசியப் பாடசாலையாக விளங்கிய பொல்கொல்லை தேசியக் கூட்டுறவுக் கல்லூரிக்கு சிரேஷ்ட விரிவுரையாளராக இடமாற்றம் பெறக் கிடைத்த சந்தர்ப்பத்தினை திரு. இ.மு.நா அவர்களின் நலன்கருதி எதுவித ஆட்சேபனையுமின்றி வடபிராந்தியக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது ஒப்புதலை வழங்கியது.

திரு. இ.மு.நா அவர்கள் ஒரு இளநிலை உத்தியோகத்தராக இருந்து கொண்டு சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொறுப்பில் அமர்த்தப்படுவதற்கு ஆரம்பத்தில் தொழிற்சங்க ஆட்சேபங்கள் கூட எழுந்தன. இறுதியில் 1972 ஜனவரியில் அப்போது பிரதிக் கூட்டுறவு ஆணையாளராகவும் கூட்டுறவுக் கல்வித் துறைக்குப் பொறுப்பாகவும் இருந்த திரு. R.B. இராஜகுரு அவர்கள் திரு. இ.மு.நா அவர்களின் கற்பித்தல் திறனையும் இத்துறையில் அவருக்கு இருந்த பாண்டித்தியத்தையும் தெரிந்து கொண்டு இப்பதவிக்கு அவரை நியமிக்குமாறு கல்லூரியின் அதிபர் திரு. R.G.D. சில்வா அவர்களுக்குத் தனது உறுதியான பரிந்துரையைச் செய்தார்.

அன்றிலிருந்து கணக்கியல், முகாமைத்துவம், எண்பார்வை செய்தல் போன்ற பயிற்சி நெறிகளை சிறப்புடன் நடாத்தவும் கூட்டுறவுக் கல்லூரியின் கல்விசார் மற்றும் கல்விசாரா நடவடிக்கைகளை மேம்படுத்தவும் 1980 மே மாதம் வரை திரு. இ.மு.நா அவர்கள் ஆற்றிய சேவை என்றும் விதந்துரைக்கத்தக்கது. இக்காலகட்டத்தில் கூட்டுறவுத்துறை விசேட ஆலோசகராகவும், தனது நிபுணத்துவத்தை முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் துறைகளில் வழங்கவும் திரு. இ.மு.நா அவர்கள் தவறவில்லை.

திரு. இ.மு.நா அவர்களின் கூட்டுறவுக் கல்வி மேம்பாட்டில் மிகவும் முத்தாய்ப்பாக அமைந்தது, அவர் 1973 - 1974ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பிரித்தானியாவுக்குச் சென்று முடித்த வதிவிடக் கற்கைநெறியாகும். கொழும்புத் திட்டத்தின் கீழ் பிரித்தானியா அரசாங்கத்தின் புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்திலுள்ள Loughborough சர்வதேசக் கூட்டுறவுக் கல்லூரியில் Loughborough தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் ஸ்தாபிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கான கூட்டுறவு அபிவிருத்தி டிப்ளோமா ஓராண்டு காலப்பயிற்சியை வெற்றிகரமாக முடித்து பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட பரீட்சையில் சிறப்புச் சித்தி அடைந்ததுடன்

சித்தியடைந்தோர் பட்டியலில் முதலாவது திறமையானவராகவும் வந்து இலங்கைக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்துள்ளார்.

இப்பயிற்சிக் காலத்தில் இவர் ''East Midland Housing Association'' எனும் கூட்டுறவு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட ''கூட்டுறவும் மக்களைக் குடியமர்த்தலும்'' என்ற கட்டுரைப் போட்டியில் பங்குகொண்டு பரிசும் பெற்றுள்ளார். ''அஸ்பி'' பரிசுக்காக விவசாயக் கூட்டுறவுக் கல்விக்கான புளங்கெற் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட போட்டிக்கு திரு. இ.மு.நா அவர்கள் சமர்ப்பித்த ஒரு விவசாய சங்கத்தைப் பற்றிய அறிக்கை அமோகமான பாராட்டைப் பெற்றது. 'Wales' தேசத்திலுள்ள ஒரு விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தை நேரில் சென்று களஆராய்ச்சி செய்தபின் அச்சங்கத்தைப் பற்றிய அறிக்கையே இப்போட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தினால் கூட்டுறவு இயக்கத்தினை மேம்படுத்தவும், வலுப்படுத்தவும் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு Dr. A. F. Laid Law அவர்களின் தலைமையில் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பதற்கு திரு. இ.மு.நா அவர்களைத் தலைமையாகக் கொண்ட குழுவில் திரு. N. நடராஜா - செயலாளர், Dr. K. பரமோதயன் - அதிபர் கூட்டுறவுக் கல்லூரி, திரு. S. ஹன்டி பேரின்பநாயகம் - வருகை விரிவுரையாளர், திரு. M. சின்னத்தம்பி - விரிவுரையாளர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

திரு. இ.மு.நா அவர்கள் அமரர் எம். மதிபாலசிங்கம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நூலக நிதியத்தினை ஸ்தாபிப்பதில் முக்கிய பங்கை வகித்ததுடன் அந்நிதியத்தின் செயலாளராகவும் கடமையாற்றினார். இந்நிதியம் பெருமளவு நிதியைச் சேகரித்ததுடன் யாழ் கூட்டுறவுக் கல்லூரியில் தனித்துவமாக இந்நினைவு நூலகத்தை நிறுவுவதில் வெற்றிகரமாகத் தொழிற்பட்டது.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் 1980ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ''கூட்டுறவுக்கு ஒரு அறிமுகமும் நானும்'' என்ற தலைப்பினாலான நூலினை எழுதுவதில் மறைந்த திரு. வி. எஸ். சிவஞானம் அவர்களின் முயற்சியில் இ.மு.நா அவர்களின் பங்களிப்பு மிகவும் காத்திரமானது. இந்நூலின் மீள்பதிப்பை திரு. எஸ். கோணேஸ்வரன் - முகாமைத்துவ ஆலோசகர், இலங்கைக் கூட்டுறவுக் கல்வி நிறுவனம் அவர்கள் 1998ஆம் ஆண்டு செய்த பொழுது திரு. இ.மு.நா அவர்கள் தனது ஆலோசனைகளையும், பங்களிப்பையும் வழங்கியிருந்தமையும் இவ்விடத்தில் பதிவு செய்யத்தக்கது. மேலும் வடபிராந்திய கூட்டுறவுச் சமாசத்தினால் பிரசுரிக்கப்பட்ட ''ஐக்கிய தீபம்'' சஞ்சிகையில் முகாமைத்துவக் கணக்கியல், நிதி முகாமைத்துவம் ஆகிய துறைகளில் திரு. இ.மு.நா பல்வேறு கட்டுரைகளை எழுதியிருந்தார். இத்துறைகளில் அவருக்கிருந்த பாண்டித்தியத்தினை தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கமும் பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கமும் நிபுணத்துவ சேவையாகப் பெற்றுக் கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வீடமைப்பு அபிவிருத்திச் சேவையும் தொழிற்புலமையும்

திரு. இ.மு.நா அவர்கள் 1980ஆம் ஆண்டு மே மாதம் ஒரு கணக்காளராக இலங்கைத் தேசிய வீடமைப்பு அதிகாரசபையில் தனது சேவையை ஆரம்பித்தார். ஆயினும் மிகத்துரிதமாக திறமை அடிப்படையில் ஐந்து பதவியுயர்வுகளைப் பெற்று சிரேஷ்ட கணக்காளரானார். ஆரம்பத்தில் திணைக்களத்திற்கான வரவுசெலவுத் திட்டம் தயாரித்தல், 'கம் - உதாவ' 1980 இற்கான கணக்குவழக்குகளைப் பராமரித்தல் போன்றவை அவரது பொறுப்புகளாக இருந்தன. ஆயினும் தனது தொழிலில் காட்டிய அதீத திறமையினால் நிர்மாண வேலைத் திட்டங்களுக்குப் பொறுப்பான கணக்காளராக வெகுவிரைவிலேயே பொறுப்புகளில் மாற்றம் பெற்றார். இதனைத் தொடர்ந்து 1982ஆம் ஆண்டு வழங்கல்கள், களஞ்சியம், மற்றும் கணக்கியல் என்பவற்றுக்கான சிரேஷ்ட முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றார்.

தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் இப்பதவியை மிகுந்த சவால்களுக்கு மத்தியில் வகித்துச் சிறப்பாகவும் நேர்மையாகவும் பணியாற்றியதால் பிரதம உள்ளகக் கணக்காய்வாளராக அதிவிசேட அந்தஸ்தினை 1986 மார்ச் மாதத்தில் பெற்றுக் கொண்டார். இதன்மூலம் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைமைப் பணிமனை, 25 நிர்வாக மாவட்ட அலுவலகங்கள் ஏனைய வீடமைப்புத் துறை சார்ந்த அலுவலகங்கள் என்பவற்றின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கும், கணக்காய்வு செய்வதற்கும், செயல்திறன்களை பரிசீலனை செய்வதற்கும் பொறுப்பான உயர்பதவி அவரைத் தேடிவந்தது.

இதன் பின்னர் ஒரு மாறுதலாக உத்தியோகபூர்வ விடுமுறையில் ஓர் ஆண்டு Bahrainஇல் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வழங்கல்களுக்குப் பொறுப்பான கணக்காளராக அந்நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் திணைக்களத்தில் கடமையாற்றினார்.

மீண்டும் இலங்கை திரும்பி தேசியவீடமைப்பு அதிகாரசபையில் இணைந்து திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பகுதிக்கான தலைவராக தனது கடமையைத் தொடர்ந்தார். திரு. இ.மு.நா அவர்களின் அனுபவ முதிர்ச்சியினையும் துறைசார் அறிவினையும் தொழில்ரீதியாக அவர் ஆற்றிய சிறப்பான சேவையினையும் கருத்தில் கொண்டு திட்டமிடல் மற்றும் கண்காணிப்புத் துறைக்குப் பொறுப்பான உதவிப் பொது முகாமையாளராக சிரேஷ்ட பதவி உயர்வினை எய்தினார். இக்காலத்தில் வீடமைப்பு அதிகார சபையின் சிரேஷ்ட நிர்வாகத்தின் பல பணிகளில் திரு. இ.மு.நா அவர்களின் பங்களிப்பு அதி முக்கியத்துவம் மிக்கதாக அமைந்திருந்தது. தான் ஓய்வு பெறும் வரை இப்பதவியை வகித்த திரு. இ.மு.நா அவர்கள் தேசியவீடமைப்பு அதிகார சபையின் அக்காலத்தைய முகாமைத்துவச் சமூகத்தில் பெரிதும் மதிப்பிற்கும், கௌரவத்திற்கும் உரிய புத்திஜீவியாகத் திகழ்ந்தார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையில் அவர் கடமையாற்றிய காலம் மிகவும் சவால்கள் நிறைந்தது எனக் கூறலாம். திரு. ஆர். பிரேமதாசா அவர்கள் வீடமைப்புத்துறை அமைச்சராக இருந்த காலத்தில் மிகப் பிரபலமாக இருந்த 'கம் - உதாவ' வீடமைப்புத்திட்டச் செயற்பாடுகளில் திரு. இ.மு.நா அவர்கள் கணக்கியல் முகாமைத்துவத்திலும், வழங்கல் முகாமைத்துவத்திலும் பொறுப்புள்ள பதவிகளை வகித்திருந்தார்.

குறித்த காலக் கட்டுப்பாடுகள், பல்வேறு அரசியல், நிர்வாக, திணைக்கள நெருக்குவாரங்கள், நிர்வாகச் சவால்கள் என்பவற்றுக்கு மத்தியில் தனது உயரதிகாரிகளின் நம்பிக்கையையும் சக ஊழியர்களின் நன்மதிப்பையும் பெற்று எத்தகைய சவாலான செயல்திட்டங்களையும் உரிய நேரத்தில் சிறப்பாகச் செய்து முடிக்கும் செயற்றிறன் மிக்க அதிகாரியாக விளங்கி அனைவரினதும் பாராட்டைப் பெற்றார்.

பலதடவை அவரின் மேலதிகாரிகளும் அவரது திணைக்களத்தில் வேலைபார்த்த இடைநிலை, கடைநிலை, ஊழியர்களும் தொழில் தேவையின் நிமித்தமின்றி அவர்மீது மிகுந்த அன்பையும் மதிப்பையும் பாராட்டுவதை நான் நேரில் கண்டிருக்கிறேன். இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரும் அவருக்குச் செலுத்தும் கௌரவமும், அன்பும் அவரின் தனிப் பண்புத்திறம் என்று சொல்வதே பொருத்தமானதாகும். இன்றும்கூட அவருடன் பல்வேறு கட்டங்களில் பணியாற்றியோரும் அவரின் முன்னாள் மாணவர்களும் அவரை சிறப்பு மிகு நண்பராக மதித்துப் போற்றுவதைக் காண்கிறோம். அதற்குப் பிரதான காரணமாய் அமைந்தது தொழில் சார்ந்தோ அன்றி சாராமலோ ஒவ்வொருவருக்கும் வருகின்ற இடர்களின் போதெல்லாம் தன்னலம் கருதாது, பசி நோக்காது, கண் தூங்காது, பொருள் நஷ்டங்களைக் கருதாது தன்னால் முடிந்தளவு உதவும் அவரின் பண்பு என உறுதியாகச் சொல்லலாம். அவரிடம் நன்றிக்கடன் பட்டோர் ஏராளம். அந்தப் பட்டியல் இன்றும் நீண்டு கொண்டே போகிறது.

தொழில்சார் நிபுணத்துவமும், உயர்கல்விச் சாதனைகளும்

கூட்டுறவு முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொருட்கள் மற்றும் வழங்கல் முகாமைத்துவம், எண்பார்வை மற்றும் முகாமைத்துவக்கணக்கியல், முகாமைத்துவ திட்டமிடலும் மற்றும் கண்காணிப்பும் ஆகிய துறைகளில் அவருக்கிருந்த அபார பிரயோக அறிவும், அனுபவரீதியான வெற்றிகளும் பல துறை சார் நிறுவனங்களில் அங்கத்துவம் பெற ஏதுவானது. இதன் பயனாய், Institute of Management of Sri Lanka, Institute of Supplies and Materials Management ஆகிய நிறுவனங்களில் சிரேஷ்ட அங்கத்துவத்தையும் அவர் பெற்றிருந்தார்.

இதைதவிர, Housing Development Finance Corporation - India, Securities Council & The Securities Institute of Australia என்பவற்றால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ பயிற்சிப் பட்டறைகளிலும் கலந்து கொண்டு தனது திறமையை மேலும் மேம்படுத்தினார்.

தனது தொழிலிலும், சமூகப்பணிகளிலும் முழு ஈடுபாட்டுடன் சிறந்து விளங்கிய அதே நேரத்தில் தனது உயர்கல்வியினை விருத்தி செய்வதிலும் ஒரு போதும் அவர் தளர்ந்ததில்லை. 1986ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் ''Executive Diploma in Business Administration'' எனும் ஓராண்டு காலக் கற்கை நெறியை மேற்கொண்டு வெற்றிகரமாக நிறைவு செய்தார். வயதோ, தொழில் மற்றும் பொது சேவைப் பொறுப்புக்களோ, குடும்பப் பொறுப்புக்களோ, வேறு எந்த நெருக்கடிகளுமோ அவரின் சுயகல்வி முன்னேற்றத்திற்கு இடையூறுகளாக ஒருபோதும் இருந்ததில்லை. இந்த வகையில், இன்றைய தலைமுறையினருக்கு திரு. இ.மு.நா அவர்கள் மிகச்சிறந்தத் முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்.

பன்முக ஆளுமைப்புலமை

''அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு (குறள் 382)''

திரு. இ.மு.நா அவர்களின் பன்முக ஆளுமை மிகவும் விரிவுபட்டது. அநீதிக்கும், பகைவர்க்கும் பயப்படாதிருப்பது, வேண்டியோருக்கு வேண்டியதைக் கொடுப்பது, அறிவாற்றல், உயர்ந்த குறிக்கோளை எட்டும் முயற்சி என்பன ஒரு தலைவனின் சிறப்புத் தகுதிகளாகும் என்பார், பொய்யாமொழிப் புலவர். இத்தகைய இலக்கணங்களுக்கு பொருத்தமான தலைமைத்துவ ஆளுமை திரு. இ.மு.நா அவர்களிடம் காணக்கிடைக்கின்றது.

அவர் வளர்த்தெடுத்த சமூக நிறுவனங்களுக்கும், சமூக மக்களுக்கும் இடர்கள் வந்த போதெல்லாம் துணிச்சலாக முகம் கொடுத்துப் போராடி பாதுகாத்தமைக்கு நிறைய உதாரணங்கள் உண்டு. இரக்க சிந்தனையுடன் உதவி தேவைப்படுவோரைத் தேடியறிந்து அறிவு - ஆலோசனை, உதவி மற்றும் பொருள் உதவி செய்யும் பண்பை, தனித்தும், தான் தாபித்த நிறுவனங்கள் மூலமாகவும் இன்று வரை அவர் செய்யும் சேவைகள் பறை சாற்றும். அவரின் துறைசார், சாரா அறிவுத்திறம் என்பது தன்னிகரற்றது. ஒரு சிறு பொறியாக, மிக இளம் பராயத்தில் அவரிடம் குடிகொண்டிருந்த சமூக எழுச்சிச்சிந்தனை, இன்று பல பரிணாமங்களைக் கடந்து புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியம் என்ற சமூக வங்கி நிறுவனமாய் ஜொலித்து நிற்கின்றமை, அனைவரையும் பெருமிதப்பட வைக்கின்றது.

சுய ஒழுக்கக் கட்டுப்பாடு என்பது திரு. இ.மு.நா அவர்களுக்கு மிகவும் ஆற்றொழுக் கானது. தியானம், யோகப்பயிற்சி, இறைவழிபாடு, புலால் உண்ணாமை, அனாவசிய பொழுதுபோக்குகளில் ஈடுபடாமை, அபார மன ஒருமைப்பாடு, குறித்த இலக்கை நோக்கிய பயணத்திலிருந்து வழுவாமை, தனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், பொது நலனிற்கும் தன்னை நாடி வருவோருக்கும் பயனுள்ளதாய் மாற்றுவது, அவ்வாறான சந்தர்ப்பங்களைத் தேடி அடைவது, அனைவரையும் அரவணைத்துக் காரியமாற்றுவது, புதிய புதிய உத்திகளை அறிமுகப்படுத்திப் பயன்படுத்துவது என்னும் பல்வேறு குணாதிசயங்கள் அவருக்கே உரித்தானவை.

எமது சமூக எழுச்சி இயக்கத்தின் நீண்ட வரலாற்றில் பல முன்னோடித் தலைவர்களும், ஆதரவாளர்களும் நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் புலம் பெயர்ந்த போதும், சிலர் அமரர்களானபோதும் எமது சமூக நிறுவனங்களின் நிர்வாகத்தினை தளம்பவிடாது, எத்தகைய சவால்களுக்கும் முகம் கொடுத்து அடுத்தடுத்த நிர்வாக உத்தியோகத்தர்களை இனங்கண்டு உள்வாங்கி, சமூகப்பணி தொடர்வதை என்றென்றும் உறுதி செய்துள்ளார்.

சமூகப்பணியில் தன்னுடன் கைகோர்த்துப் பயணித்த முன்னோடித் தலைவர்களையும், சிறப்பான ஆளுமைகளை வெளிப்படுத்தி உயர்கல்வியிலும், சிறப்புத் தொழில்களிலும் சாதனை படைத்த சமூக மாணவர்களையும், உற்சாகப்படுத்தி கௌரவப்படுத்தும் வகையில் அவர்களுக்குப் பாராட்டு விழாக்கள் நிகழ்த்தி மகிழ்ந்திருக்கின்றார். இத்தகைய பாராட்டும்

கலாசாரத்தினை எமது சமூக நிறுவன அமைப்பு முறைமைக்குள் புகுத்தி ஏனைய சமூக புத்திஜீவிகளும், எமது சமூகத்தின் அடுத்த தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் எமது சமூக உறுப்பினர்களின் அர்ப்பணிப்பையும் சாதனைகளையும் தெரிந்து கொள்ளும் வகை செய்தமையும், திரு. இ.மு.நா அவர்களின் உயரிய தலைமைத்துவப் பண்புகளில் ஒன்றாக பதிவு செய்யப்படவேண்டியதாகும்.

திரு. இ.மு.நா அவர்கள் எப்பணியை மேற்கொண்டாலும், அதனை மிகவும் விருப்புடன் முழுப்புலனையும் செலுத்தி உழைப்பவராக இருந்தமையே அவரின் வெற்றிகளுக்கு அடித்தளமாக இருந்து வருகிறது. அவர் தமது தொழிற்துறைகளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட கூட்டுறவுத்துறையும், வறியோருக்கான வீடமைப்பு அபிவிருத்தித்துறையும் முழுமையான இலாபநோக்கற்ற சமூக மேம்பாட்டுக்கான பொது வேலைத்திட்டங்கள் சார்ந்தவையாக இருந்தமையும், அவற்றினூடு பெற்ற அனுபவங்களும் சமூக எழுச்சி இயக்கத்தின் செயற்பாடுகளிலும், கொள்கைகளிலும், பல்வேறு வேலைத்திட்டங்களிலும் நிர்வாக கட்டமைப்பிலும் பெரும் செல்வாக்குச் செலுத்துவதை உணரமுடியும். இவ்வாறு, கூட்டிணைவான முகாமைத்துவத் தத்துவத்தின் அடிப்படையில் நடைமுறைச் சாத்தியமான ஒரு சமூக அபிவிருத்தி இயக்கத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று நிறுவியமை திரு. இ.மு.நா. அவர்களின் முகாமைத்துவ ஆளுமை வெளிப்பாட்டின் உச்சநிலையாக சமூக வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டியதாகும்.

இவை தவிர, செயற்திட்டங்களை வரைவதில் அவரின் வல்லமை மிகவும் வியக்கத்தக்கது. இலக்கு, திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நிர்வாக கட்டமைப்பு, பொறுப்புக்களை சிறிது சிறிதாக உரியோருக்கு பிரித்து கொடுத்து முன்னேற்றங்களைக் கண்காணித்தல், கால அட்டவணை, வரவு - செலவுத்திட்டம், குழுக்களாகச் சேர்ந்து இயங்கி இறுதி இலக்கை அடைதல் எனும் முகாமைத்துவக் கோட்பாடுகளை நடைமுறைச் சாத்தியமாக மாற்றுவது அவருக்குக் கைவந்த கலையாகும்.

அவரின் எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் அனைவரையும் வியக்க வைக்கும். விடயங்களைத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும், இயல்பாகவும், முழுமையாகவும் கேட்பவரையும், வாசிப்பவரையும் சென்றடையும் வகையில் அவரின் எண்ண வெளிப்பாடுகள் அமைந்திருக்கும்.

இவ்வாறான, தனிச் சிறப்புமிகு ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்டு தனது சுயநலம் கருதி வாழாது தான் சார்ந்த சமூகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்குமாய் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட மானுடநேயனுக்கு எமது மனமார்ந்த நன்றியறிதல்களை பதிவு செய்து மகிழ்கின்றோம்.

எழுச்சித் தந்தையின் சமூக எழுச்சிச் சிந்தனைகளும் கோட்பாடுகளும்

திரு.வி.இராஜேந்திரம்
ஆசிரிய ஆலோசகர்
கொழும்பு

அறிமுகம்:

சமூகம் என்பது ஒத்த நோக்கங்கள், குறிக்கோள்கள், இலக்குகள், எண்ணங்கள், கலை கலாசார பண்புகள், ஒருமித்த சிந்தனைகள், கோட்பாடுகளை கொண்ட மனித குழுமமாகும். இத்தகைய சமூகத்தின் எழுச்சிக்கும், மலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக பல காரணிகள் இருக்கின்ற போதிலும் இவற்றையெல்லாம் ஒருமுகப் படுத்தத்தக்க சிறந்த தலைமைத்துவமே அச்சமூகத்தின் வளர்ச்சிக்கான மூல வேராகும். இத்தலைமைத்துவம் உயர் சமூக சிந்தனை கொண்டதாகவும், தியாக உணர்வுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

இத்தகைய தலைமைத்துவப் பண்புகள் பிறப்பாலும் (பரம்பரையாலும்) சூழலாலும் உருவாகின்றது என சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதாவது ஒரு பிள்ளை கருவில் இருக்கும் போதே எண்ணப் பதிவுகள் இடம்பெறுவதாக தற்கால விஞ்ஞானம் கூறுகின்றது. இந்த வகையில் தாய் தந்தையரது சமூகநலச் சிந்தனை காரணமாகச் பிறக்கும் குழந்தையும் அச்சிந்தனையை இயல்பாகவே பெற்றிருப்பதாக நம்பப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் அப்பிள்ளையின் மூதாதையர்கள் சமூகநலச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பின் அவர்கள் பரம்பரையில் பிறக்கும் பிள்ளைக்கும் அவ்வெண்ணங்கள் கடத்தப்படுவதாக குறிப்பிடுகின்றார் கள். அதேபோல ஒரு குழந்தை வாழும் சூழல், உறவினர்கள், நண்பர்கள், பாடசாலைச் சமூகம், தொழிற் சமூகம் என்பனவும் சமூக நலச் சிந்தனைகளைத் தூண்டவல்லதாக அமைகிறது.

அந்த வகையில் எழுச்சித் தந்தையும் பிறப்பால் சமூக நலச் சிந்தனையுடையவராக இருந்திருக்க வேண்டும். அவரது மூதாதையர்களும் சமூகநலச் சிந்தனை கொண்டவர்களாக இருந்திருப்பர் என்பது எனது நம்பிக்கையாகும். அத்துடன் அவர் வாழ்ந்த சூழலும் அவர்களது இச்சிந்தனையைத் தூண்டவல்லதாக அமைந்திருக்கும். இத்தகைய நிலையே திரு.இ.மு.நாகலிங்கம் அவர்கள் சமூக எழுச்சியில் இத்தகைய ஆழ்ந்த ஈடுபாடு கொள்வதற்கு அடிப்படையாக அமைந்திருக்கும்.

சமூக எழுச்சியில், வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் பல்வேறு வகிபாகங்களைக் கொண்டிருப்பதாக அவதானிக்கின்றோம். பொதுவாக ஐந்து வகையான வகிபாகங்களில் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ அல்லது பலவற்றையோ கொண்டிருக்கலாம். அவையாவன:

1. சமூக நலச் சிந்தனை கொண்டவர்கள்

2. சமூக எழுச்சிக்கான வழிகாட்டிகள்

3. சமூக முன்னோடித் தலைவர்கள்

4. சமூக வளர்ச்சிக்கு நிதி ஏற்பாடு செய்வோர்

5. சமூக வளர்ச்சிக்கு நிதி வழங்குவோர்

இத்தகைய வகிபாகங்கள் அனைத்தையும் திரு.ஆர்.எம்.என் அவர்கள் வகித்திருக்கிறார்கள்.

இத்தகைய வழியில் சமூக எழுச்சிக்கும் மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உழைத்து வருபவர் மட்டுமல்லாமல் பல்துறை ஆற்றல் மிக்கவராகவும் சமநிலை ஆளுமைப் பண்புகளைக் கொண்டவராகவும் இருப்பதை நாம் காண்கின்றோம். இதனாலேயே இவரால் கூட்டுறவுத்துறையில் முகாமைத்துவம், கணக்கியல், நிதியியல், விரிவுரையாளராகவும், வீடமைப்புத் துறையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையில் கணக்காளர், உள்ளகக் கணக்காய்வாளர், திட்டமிடல் பிரிவுத் தலைவர் போன்ற பல பதவிகளை இவரால் ஆற்ற முடிந்தது.

அத்துடன் இவர் 1947ஆம் ஆண்டு முதல் சுமார் 66 ஆண்டுகள் சமூக எழுச்சிக்காக அயராது உழைத்து வருகின்றார். சமூக எழுச்சிக்காகவும் வளர்ச்சிக்காகவும் இவரது மனத்தில் உதயமான சிந்தனைகளையும் அச்சிந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வகுத்த கோட்பாடுகளையும் பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

1. தேசிய வளர்ச்சியும் எழுச்சியும் தனிமனிதனிலிருந்து குடும்பம், சமூகம், இனம், தேசம் என்ற சங்கிலித் தொடர்ச்சியான வளர்ச்சிப் படிமுறையைக் கொண்டதாகும்.

2. ஒருவரின் கௌரவமும், அந்தஸ்தும், அவர் சார்ந்த குடும்பமும், சமூகமும், இனமும் வளர்த்துக் கொண்ட அந்தஸ்தில் தங்கியுள்ளன.

3. தானும் தன் குடும்பமும் என்கிற சுயநல எல்லையைக் கடந்து சமூகத்தினதும் இனத்தினதும் வளர்ச்சியில் கரிசனையுடைய மக்களைக் கொண்ட சமூகமும் இனமுமே உயர்வு பெற முடியும்.

4. இன,மத,பிரதேச, சாதி, சமூக அரசியல் கசப்புணர்வுகளை ஒழித்துக்கட்ட மனித நேயம், மதிப்புணர்வு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, பரஸ்பர உதவி ஆகியன இன்றியமையாத பண்புகளாகும்.

5. பட்டினி கிடக்க நேரினும் உயர் கல்வியோடு உயர் தொழிற் புலமை பெருக்கித் தகைமைசால் தொழில் வளம் கொள்வது வளர்ச்சிக்கு அடிப்படையாகும்.

6. நலிவுற்றோருக்குக் கைகொடுத்து வாழவழி சமைத்தல் எம்கடனே - இது ஒரு தெய்வீகப் பணி

7. உயர்ந்த ஒழுக்க நியமங்களைப் பேணி கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செயல்படும் கூட்டுறவு முறையே வெற்றிபெறும்.

8. மக்கள் சமுதாயத்தின் வளர்ச்சியையும் சமூக சமத்துவத்தையும் சமூக அந்தஸ்த்தையும் உயர்ச்சியையும் நோக்கமாகக் கொண்ட சமூக எழுச்சி இயக்கம் ஒன்றின் வெற்றியானது அதன் பயனாளி மக்களின் விசுவாசம், பற்று, தியாகம், மனவுறுதி ஆகியவற்றின் கனதியில் தங்கியுள்ளது.

9. ஒரு சமூக எழுச்சி இயக்கமானது நிலைத்து நின்று சிறப்பாகச் சேவையாற்றுவதற்கு சனநாயக முகாமைக் கட்டமைப்பு முறையைக் கொண்ட நிறுவனமயப்படுத்தப்பட்ட தலைமை இன்றியமையாததாகும்.

10. ஒரு சமூக எழுச்சி இயக்கத்தின் முகாமைக் கட்டமைப்பு முறையானது அக,புறச் சூழல்களின் மாற்றத்திற்கு ஏற்ப காலத்திற்குக் காலம் மறுசீரமைக்கப்பட்டு வலுப்பெறச் செய்யவேண்டும்.

11. பாரம்பரிய, மரபு முறைகளில் இருந்து விடுபடவும் நவீன கோட்பாடுகளை கொள்கைகளை உள்வாங்கவும் மக்கள் மத்தியில் போதிய மனமாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய தொடர்ச்சியான கருத்துப் புரட்சி இயக்கம் அவசியமாகும்.

12. சமூகப் பற்று, இனப்பற்று, தேசப்பற்று, முகாமைத்திறன், தலைமைப்பண்பு, தியாக உணர்வு ஆகிய பண்புகளைக் கொண்ட அங்கத்தவர்களைக் காலத்திற்குக் காலம் அடையாளங்கண்டு முன்னணித் தலைவர்களை இணைத்து அவ்வரிசையை வளர்த்து வருவது சமூக நிறுவனங்களின் மலர்ச்சிக்கு அவசியமாகும்..

13. மக்கள் சமுதாயத்தின் வளர்ச்சியில் கரிசனை கொண்ட அறிஞர்கள், சமூகப் பெரியார்கள், சமயப் பெரியார்கள், உயர் தொழிற் புலமையாளர்கள் போன்றோர்களைக் கொண்ட மதியுரைஞர் குழுவை அமைத்து சமூக நிறுவனங்கள் பயன்கொள்ளல் வேண்டும்.

14. பொருத்தமான சமூக நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தனிநபர்களுடன் நல்லுறவை வளர்த்துச் சமூக எழுச்சி இயக்கத்திற்கு உரமூட்ட வேண்டும்.

15. அரசியல் கட்சிகளின் தொழிற்பாடுகளில் ஈடுபாடு கொள்வதை தவிர்த்து அரசியல் நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றுவது எழுச்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமாக அமையும்.

16. வளர்ச்சிப் போக்குக் கொண்ட சமூக நிறுவனம் ஒன்றுக்குப் போதிய நிதிவளத்தை வழங்கவல்லதும் அதனுடன் இணைந்து செயற்படக் கூடியதான தனித்துவமான நிதி முகாமைக் கட்டமைப்பு முறையைக் கொண்ட சமூக வங்கி முறை பயனுடையதாகும்.

17. சமூக நிறுவனமும், சமூக வங்கிகளும், சட்ட அந்தஸ்துக் கொண்ட கூட்டிணைக்கப் பெற்ற நிறுவனங்களாக அமைந்திருக்க வேண்டும்.

18. ஒரு சமூக எழுச்சி இயக்கத்தின் பாதுகாவலர்கள் அதன் முன்னணித் தலைவர்களும், நிருவாகிகளும், தொண்டர்களுமாவர்.

19. தூரநோக்கு, இலக்கு, கொள்கைகள், மூலஉபாயங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய திட்டங்கள் அங்கத்தவர்களின் அங்கீகாரத்துடன் வரையறுக்கப்படுவதுடன் அவற்றை முறையாக அமுல்படுத்துவதற்கான பொறிமுறையும் இருக்க வேண்டும்.

20. நாம் நல்லதையே சிந்திப்போம், நல்லதையே நாடுவோம், நல்லதையே சொல்வோம், நல்லதையே செய்வோம் - நன்மை நம்மைத் தேடிவரும்.

இவ்வாறான சமூக எழுச்சிச் சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் கடைப்பிடித்து எழுச்சித் தந்தை அவர்கள் பல்வேறு துறைகளிலும் சமூகத்தை உன்னத நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார். தொடர்ச்சியாக இவற்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சமூகத்தை அதி உன்னத நிலைக்கு வளர்ச்சியடையச் செய்வதன் மூலம் தேசிய வளர்ச்சிக்கும் பங்களிப்பினை வழங்க முடியும்.

ஆர். எம். நாகலிங்கம் சமூக மேம்பாட்டாளர்

திரு. எஸ். பத்மநாதன்
B.A(Hons) (Dip-in-Ed)

சமூகப் பற்றுடனும் இனப்பற்றுடனும் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து அதற்காகவே தன் வாழ்நாள் முழுவதையும் தியாகம் செய்து, தொடர்ந்தும் சமூகப் பணிபுரியும் ஆர்.எம். நாகலிங்கம் அவர்களது வாழ்வு முழுவதும் பல்வேறு சாதனைகளின் நிகழ்வாகும். கூட்டுறவுத்துறை விரிவுரையாளர், பல்வேறு மன்றங்களின் ஸ்தாபகர், சிறந்த கணக்காளர், சிறந்த நிர்வாகி, சமூக முன்னேற்றக் கழகங்களின் தலைவர், சமூகப் பெயர்ச்சியின் பிதாமகன் என்பதற்கும் மேலாக ஒரு சிறந்த பண்பாளர் ஆகிய பன்முக ஆளுமை கொண்ட அவரின் சமூக மேம்பாட்டு உணர்வு எல்லாவற்றிலும் தலை சிறந்து நிற்கின்றது.

ஒரு புறத்தில் தனது கல்வித்துறையில் மேன்மை பெற்றாலும் எமது சமூகத்தின் மீது அவருக்கிருந்த ஈடுபாடு எல்லாவற்றினையும் விட உயர்ந்து நின்றது. தனது 11 வயதிலேயே சமூகம் சார்ந்த பணிகளில் ஈடுபடலானார். தனது குடும்ப நன்மையில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளவர்கள் மத்தியில் இவர் முற்றிலும் வேறானார். மாவிட்டபுரத்தில் 1947 முதல் ஆலயங்கள் மூலமாக சமய சமூகப் பணிகளை ஆரம்பித்த இவர் முதன் முதலாக சிறுவர்களுக்கான கோயில் வழிபாடு, பண்ணிசை, யோகப் பயிற்சி, சிரமதானம் என்பவற்றினை அறிமுகம் செய்து வைத்தார். 12.09.1955இல் மாவை அம்பாள் ஆலயத்தில் இவரது முயற்சியால் 'மாவை பாரதி வாசிகசாலை' ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து வளர்ச்சி பெற்ற இந்நிலையம் 'மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம்' என்ற பெயரில் மாற்றம் கண்டது. 12.09.1980ல் வெள்ளி விழா கொண்டாடப்பட்டு வெள்ளி விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அத்துடன் இதே ஆண்டு எமது சமூக எழுச்சி இயக்கமும் தோன்றியது.

இவர் ஒரு தனி மனித நிறுவனமாகச் செயற்பட்டு இன்று நூற்றுக்கணக்கான தொண்டர்களையும் உருவாக்கியுள்ளார். இதன் மூலம் 66 வருடங்களாக எமது மக்களின் மறுமலர்ச்சிக்காக செயற்பட்டு வரும் ஒரு தந்தை போன்று விளங்குகின்றார். தனிமரமும் ஒரு தோப்பாகும் என்ற நிலையில் தோப்பாக நின்று செயல்பட்ட இவர் சிதறியிருந்த விதைகளை முளைக்கப் பண்ணி மரமாக்கினார். சமூகத்தில் அக்கறையில்லாத வர்களை

சமூகப் பற்றாளராக்கினார். மேடையில் ஏறி பேசமுடியாதவர்களை மேடையில் ஏறிப் பேச வைத்தார். 'நிர்வாகம் என்றால் என்ன? என்று தெரியாதவர்களை நிர்வாகிகளாக்கினார்' 'திட்டமிடமுடியாதவர்களைத் திட்டம் போடவைத்தார்' நேரம் காலம் தெரியாதவர்களை நேரத்தின் அருமையைத் தெரிய வைத்தார்' ஊதாரித்தனமாக செலவு செய்தவர்களை சிறந்த சேமிப்பாளராக்கினார். இத்தகைய புதுமையான மதிப்புமிக்க தலைவராக திகழ்கின்றார்.

ஆர்.எம்.என் அவர்கள் தனது சமூகமொன்றின் உயர்வுக்காகப் பல கஷ்டங்களையும், சோதனைகளையும் சந்தித்த ஒருவர். அவரது கல்வித்தகைமையுடன் இங்கிலாந்தில் கூடச் சிறந்த பதவிகளைப் பெற்றிருக்க முடியும். ஆனால் சமூகப் பற்று காரணமாகவே தாயகம் திரும்பி தனது நேர்மையான எண்ணத்தினைப் புரிய வைத்தார். அவர் பல்வேறு துறைகளில் கல்வி கற்றமையால் அதன் சிறப்புக்களையும், தகுதிகளையும் எமது சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்தி வருகிறார். அவர் சமூகம் ஒன்று உயர்வு பெற கல்வி, பொருளாதாரம் உயர்வு பெறவேண்டுமென்பதில் உறுதி கொண்டவர். நல்லதை நினைத்து, நல்லதைச் சொல்லி நல்லதைச் செய்த ஒரு பெருந்தகை இவர். உண்மையில் எமது சமூகத்தின் சகல மேம்பாடுகளிலும் தன் ஆளுமையைப் பதிவு செய்து வருகிறார் என்று திடமாகக் கூறமுடியும்.

மாமனிதன் ஆர். எம். நாகலிங்கத்தின் சமூகப்பணிகளும் சாதனைகளும்

பேராசிரியர் சோ.சந்திரசேகரன்
முன்னாள் கல்விப்பீடாதிபதி
கொழும்புப் பல்கலைக் கழகம்

சமூக பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய மக்கட் பிரிவினரின் மேம்பாட்டுக்கான வழிமுறைகள் பற்றிச் சிந்திப்போர் எடுத்துக் கூறும் ஒரு பிரதான கருத்து. இத்தகைய மக்களுக்கு ஒரு சிறந்த தலைமைத்துவமும் அவர்களுடைய பிரச்சனைகளுக்கான தீர்வுகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய சிவில் அமைப்புகளும் ஆகும். இன்றைய சிந்தனைகளின் படி சிறந்த தலைமைத்துவம் என்பது ஒரு சிறந்த தொலைநோக்கினைக் கொண்டது. சிறந்த தலைவர்கள் தாம் மேற்கொண்டுள்ள பணிகளுக்கான ஒரு சிறந்த தொலைநோக்கினை உருவாக்கி அதற்கான ஒப்புதலை மற்றவர்களிடம் இருந்து பெறுகின்றார்கள். அத்துடன் அத்தொலைநோக்கினை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பு, தியாகம், செயற்றிறன் முதலாம் உயர்தரமான தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொண்டு மற்றவர்களின் நல்லபிமானத்தைப் பெற்றுக் கொள்கின்றார். நாளாந்தப் பிரச்சனைகளின் விவகாரங்களிலும், மற்றும் அக்கறை செலுத்தாது முழுச் சமூகமும் எங்கே சென்றடைய வேண்டும் என அவர்கள் இலக்கு வகுத்து கொள்கின்றனர். இந்த முறையில் "தலைவர்கள்" சாதாரண முகாமையாளரிடம் இருந்து வேறுபடுகின்றனர். இவ்வாறான முறையில் தலைமைத்துவம் பற்றிய சிந்தனைகள் விரிந்தும், பரந்தும் செல்லுகின்றது. திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களுடைய சமூகப் பணிகளையும் சாதனைகளையும் சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால், ஏறத்தாழ 5 தசாப்த காலங்களுக்கு மேலாக அவற்றின் தலைமைத்துவம் பற்றி இன்றைய சிந்தனையாளர்கள் எடுத்துக் கூறும் ஏராளமான பண்புகள் பொதிந்து காணப்படுகின்றன. அவர்களுடைய வாழ்க்கைப் பணிகளை ஆய்வு செய்து ஓர் ஆய்வாளர் இவ்வாறான தலைமைத்துவத்திற்குரிய அரிய பண்புகளை நிச்சயமாக பிரித்தறியப் முடியும். எவ்வாறாயினும் பெரியார் திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் என் பணி, "பணி செய்து கிடப்பதே" என்ற முதுமொழிக்கு இணங்க, எதுவித ஆரவாரமும் இன்றி அடக்கத்துடன் தமது பணிகளை ஆற்றி வந்து உள்ளார் என்பது எமது அவதானமாகும்.

இன்று மக்கள் பணி, சமூக மேம்பாடு என்று வரும்போது அனைத்து நன்மைகளையும் விளைவுகளையும் அரசிடம் இருந்து எதிர்பார்க்க இயலாத நிலை தோன்றி உள்ளது.

அரசானது பல்வேறு விவகாரங்களில் ஈடுபாடு காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால் அது பின்தங்கிய நிலையில் ஆங்காங்கு ஒதுங்கி வாழும் விசேட தேவை உடைய மக்களைக் கருத்திற் கொண்டு செயலாற்றுவதில் பல சிரமங்கள் உண்டு. இலங்கையிற் கூடக் கடந்த 7 தசாப்த காலங்களாக அரச கொள்கைகள் பின் தங்கிய சமூகங்களின் மேம்பாடு கருதியவையாக இருந்தபோதிலும், மிகமிகப் பின் தங்கிய பல பிரிவினர்களை அரச செயற்பாடுகள் சரியாக எட்டவில்லை. இதற்கு இலங்கையில் பல உதாரணங்களை எடுத்துக் கூறமுடியும். மிகப் பொதுப்பட கூறினால் இன்றும் கூட வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பல லட்சம் மக்கள் அரசிடம் இருந்து (வறுமை நிவாரணத்தை) நாட வேண்டியவர்கள் ஆக உள்ளனர். இத்தகைய பிரிவினர்களில் தூரப் பிரதேச மக்கள், கஷ்டப் பிரதேச வாசிகள், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், வடபகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றும் காலங்காலமாக சமூக பொருளாதார நிலமைகளில் பின்தங்கியவர்கள் எனப் பல தரப்பட்டவர்களை இனங்காண முடியும். இப்படியான மக்களின் மேம்பாட்டுக்குச் சிறந்த தலைமைத்துவம் ஒன்றின் அவசியம் பற்றி மேலே வலியுறுத்திக் கூறினோம். அதனைத் தொடர்ந்து இத்தகைய மக்களின் நலன் கருதிய சிவில் அமைப்புகள் மக்கள் மத்தியில் உருவாக வேண்டியதன் அவசியத்தை இவ்விடத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

மாமனிதர் திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் ஒரு மகத்தான பங்களிப்பு அத்தகைய மக்கள் அமைப்பு ஒன்றைத் தொடக்கி வைத்து அதனுடைய தொடர்ச்சியான இயக்கத்திற்கு அவர் காரணமாகவும் இருந்தார். தனது மக்களை இயக்க ரீதியாக ஒழுங்கமைப்பதின் ஊடாகத்தான் அம்மக்கள் சமூகம் மேம்பாடு அடைய முடியும் என்ற முறையில் சிந்தித்த அவர் அதற்கான செயற்பாடுகளில் தீவிரமாக இயங்கிப் புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்தையும் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் ஒன்றையும் ஏற்படுத்தினார்.

வீடமைப்பு அதிகாரசபையின் நிறுவனத் திட்டமிடல் பகுதித் தலைவர், பொல்கொல கூட்டுறவு கல்லூரியில் விரிவுரையாளர் போன்ற பல பதவிகளை வகித்த திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் மாவிட்டபுரம் பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் ஸ்தாபகர் ஆகவும் மேற்படி நிதியம், சமாசம் என்பவற்றின் ஸ்தாபகராகவும் பணியாற்றினார். 1950களிலேயே இவரது நிறுவனப் பணிகள் ஆரம்பித்துவிட்டன. இளமைக்காலத்திலேயே இத்தகைய பல மன்றங்களின் தலைவராக அவர் பணியாற்றினார்.

இவர் உருவாக்கிய சமூக எழுச்சி இயக்கம் 1980களில் உருவாகி பெரிய மாற்றங்களுக்கான அடித்தளத்தை இட்டது. இதன் பணிகள் மாவிட்டபுரம் பிரதேசத்திற்குள் மட்டும் அமையாது, மாவட்டம், மாகாணம் எனப் பரவலாக நாட்டின் நாலா பக்கங்களிலும் தனது பணிகளை விரிவு செய்தது. இதன் பிரதான தொலைநோக்கு 1980 ஆம் ஆண்டு

பிரகடனம் செய்யப்பட்டது. வடகிழக்கு மாகாணத்தைத் தாயகமாகக் கொண்ட பின் தங்கிய மக்கள் சமூகம் ஒன்றின் எழுச்சிக்கும் உயர்ச்சிக்கும் பாடுபடுவது அம்மக்களுக்குச் சமத்துவ அந்தஸ்தைப் பெற்றுக் கொடுப்பதும் ஒரு பிரதான நோக்கமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் தாம் சார்ந்த சமூகம் மட்டும் அன்றி சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும், பின்தங்கிய ஏனைய சமூகங்களின் மேம்பாட்டை மட்டுமன்றி ஒட்டுமொத்த தமிழ் இனத்தினதும் தமிழ் மொழி பண்பாட்டினதும் மேம்பாட்டிற்கும் பங்களிப்பு செய்வதே மற்றொரு நோக்காகவும் பிரகடனம் செய்யப்பட்டது. அத்துடன் நில்லாது நாடளாவிய ரீதியில் தேசிய வளர்ச்சியையும் இவ்வியக்கம் கருத்திற் கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

இத்தகைய சமூகம் சார்ந்த தேசியம் சார்ந்த பொது மற்றும் சிறப்புத் தொலைநோக்குகளை உருவாக்குவதற்கு திரு.ஆர்.எம்.நாகலிங்கம்அவர்கள் காரண கர்த்தாவாக இருந்தார். இத்தகைய உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்ட ஓர் அமைப்பினை உருவாக்கி அதற்கான தொலை நோக்குகளை வடிவமைப்பதற்குத் தேவையான அனுபவம், அறிவு, ஆளுமை என்பவற்றைத் தன்னகத்தே கொண்டவராக திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் இத்தகைய இவ்வியக்கத்தை வழிநடத்துவதற்கான தலைமை பொறுப்பை ஏற்றுக்கொண்டமை மிகப் பொருத்தமானதாக காணப்பட்டது. சம்பந்தப்பட்ட உறுப்பினர்களும் மக்களும் இவரைத் தலைமைப் பொறுப்பை ஏற்கச் செய்தமையில் எதுவித ஆச்சரியமும் இல்லை.

இவ்வியக்கத்தைக் கட்டி எழுப்புவதிலும் அதற்கான தொலைநோக்கு மற்றும் கொள்கைத் திட்டங்களை வகுப்பதிலும் அவர் தொடர்ச்சியாக மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்திப் பல இணக்கங்களைக் கண்டார். இவரது தலைமைத்துவத்தின் மற்றொரு அம்சம் இவ்வாறான சனநாயகப் பாங்கான தன்மையும் ஆகும். ''மேலிருந்து கீழாகக்'' கருத்துக்களைக் கொண்டுச்செல்லாது ''கீழிருந்து மேலாகக்'' கருத்துக்களைக் கண்டறிந்து தமது கொள்கைத் திட்டங்களுக்கான அடிப்படைகளை அச்சிந்தனைகளிலிருத்து வகுத்துக் கொண்டு சனநாயகப் பாங்கான ஒரு சமூக நல அமைப்பின் வளர்ச்சிக்கு அவர் வழிகோலினார். இதன் காரணமாகவே இவ்வியக்கம் வகுத்த ஆறு அம்சக் கொள்கைகளின் முதலாவது அம்சம் சனநாயக வழியில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தை வளர்த்தல் எனக் கூறுகின்றது. இந்த அம்சங்களில் பாராட்டப்பட வேண்டிய மூன்றாவது அம்சம் கற்றோராய் உயர்ச்சி பெறப் பட்டினி இருக்க நேரினும் படித்தல், படிக்க வைத்தல் என்பதாகும். இதிலிருந்து பின்தங்கிய சமூகங்கள் பசி என்னும் உடல் தேவைக்குக் கூட முக்கியத்துவத்தை வழங்காது கல்விக்கே முக்கியத்துவம் வழங்கவேண்டும். கல்விக்காக எத்தகைய தியாகத்தையும் செய்திட ஆயத்தமாக இருத்தல் வேண்டும் என்ற உயரிய கருத்து வற்புறுத்தப்பட திரு.ஆர்.எம்.நாகலிங்கம்

காரணமாக இருந்தார். கல்வி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, நலிந்த பிரிவினர்க்கு உதவுதல் என்பவற்றோடு உயரிய ஒழுக்க, கலை, கலாசார, ஆன்மீக, பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்த்து மனிதநேய உணர்வுடன், கண்ணியத்துடன் செயலாற்றுதல் என்னும் அம்சமும் வலியுறுத்திக் கூறப்பட்டது.

திரு. நாகலிங்கம் அவர்களின் அயராத உழைப்பு, முயற்சியின் காரணமாக 2004 ஆம் ஆண்டு தொடக்கம் சமூக எழுச்சி இயக்கத்தின் பணிகளும் சேவைகளும் பெரிய அளவில் விஸ்தரிக்கப்பட்டன. சுனாமி அனர்த்த நிவாரண நிதிதிட்டம் செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக 13 இலட்சம் ரூபா பெறுமதியான உதவிகளை மக்களுக்கு வினியோகம் செய்தது. தகவல் தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்கான பங்களிப்பை மேம்படுத்தும் திட்டத்திலும் அவர் முன்னின்று உழைத்தார். 4 இலட்சம் ரூபா பெறுமதியான தகவல் தொழில் நுட்ப நூற் பிரதிகள் 1400 மாணவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. 2009 ஆம் ஆண்டு வன்னிப் போரினால் பாதிக்கப்பட்ட ஏராளமான மக்களுக்கு நிவாரணம் வழங்கும் ஏற்பாடுகளையும் அவர் செய்தார். இம்மக்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கான நிதி உதவிகளும் செய்யப்பட்டு வருகிறது.

திரு. நாகலிங்கம் அவர்களின் சாதனைப் பயணம் வெற்றியை நோக்கி நடைபோட, அவர்கள் வகுத்துக் கொண்ட தொலை நோக்கமும் ஆறு அம்சத் திட்டமொன்றும் காரணமாக இருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக திரு.நாகலிங்கம் அவர்களின் தொடர்ச்சியான உழைப்பும் அர்ப்பணிப்பும் தியாக உணர்வும் அவருடைய முன்னோக்கிய நடைப் பயணத்திற்குக் காரணமாக இருந்தது. அமைதி, அடக்கம் என்பவற்றின் துணையோடு, இலக்கு நோக்கி அனைவரையும் அணைத்துச் செல்லும் பக்குவமும் செயற்றிறனும் அவருக்குத் துணை நின்றன.

எமது நோக்கில், அவரது சாதனைகளும் பணிகளும் சேவைகளும் நிலைபேறான தன்மையுடன் விளங்க வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துடன், பொருத்தமான கட்டமைப்புக்களையும் மனித வளத்தையும் திரு.நாகலிங்கம் அவர்கள் ஏற்கனவே திட்டமிட்டு அமைத்துள்ளார் எனக் கருதுகின்றோம். அவர் வகுத்த வழி, உபாயங்கள், சிந்தனைகள், ஏற்பாடு செய்த கட்டமைப்புக்கள், இவற்றுக்கு உந்து சக்தியாக அமைந்த தத்துவங்கள் என்பவை பற்றிய விரிவான புரிந்துணர்வு அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் எதிர்காலப் பணிகளுக்கு வலுச் சேர்க்கும் எனக் கருதுகின்றோம்.

எழுச்சித் தந்தையின் சமூக விருத்திக்கான சிந்தனைகளும் செயற்பாடுகளும்

திரு.சி.கோணேஸ்வரன்
சிரேஷ்ட முகாமைத்துவ ஆலோசகர்,
ஓய்வு நிலை அதிபர்,
வடகிழக்கு மாகாணக் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனம்
திட்ட ஆலோசகர், கமிதிரிய, கமநகும உலகவங்கித் திட்டம்

உயர்திரு ஆர் எம் என் அவர்களின் 75 ஆண்டுகள் பூர்த்தி பவளவிழா வைபவத்தை யிட்டு அன்பர்கள் பலரும் அவரது ஆளுமை, கல்விப் பணிகள், சமய, பண்பாட்டுப் பணிகள், சமூகப் பணிகள் என்பன பற்றி நினைவு கூரும் இவ்வினிய சந்தர்ப்பத்தில் இச்சான்றோனின் சமூகப் பணிகளே ஏனைய யாவற்றையும் விட முக்கியத்துவம் பெறுவதால் இதுபற்றி விபரிப்பது காலத்தின் பணியெனக் கருதுகின்றேன். இவரது மாணவர் என்ற ரீதியில் இவரது கல்வி ஆளுமையும் பணிகளும் என்பது பற்றி முன்பும் நினைவுகூரும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. இவரது கல்விப் பணிகளால் என்போன்ற பலர் பயன்பெற்றிடினும் இவரது சமூகப் பணிகளே தற்போதைய தலைமுறையினர் பலராற் பேசப்படும் ஒன்றாகவிருப்பதால் இப்பணிகளால் பயன்பெற்றோர் பலரது வேண்டுதல் கருதி இவர்தம் சமூகப் பணிகள் பற்றியும் இவை தொடர்பிலான இவரது சிந்தனைகளின் தாக்கம் பற்றியும் எடுத்தாள விளைகின்றேன்.

சமூகப்பணியே பயன்மிகு வாழ்வு

"வாழ்வாங்கு வாழ்ந்தோர்" வரலாற்றைப் புரட்டிப் பார்க்கின் அவர்கள் வரலாறு சமூகப் பணிகளுடன் தொடர்பு பட்டதாக இருக்கும். சமூக நலனுக்காக உழைத்தவர்கள் வாழ்வே பயன்மிகு வாழ்வாகும். தன் சுகபோக வாழ்வு தன் குடும்பப் பெருமைக்கான உழைப்பு என்பன தாம் வாழும் காலத்துடன் அல்லது அடுத்த தலைமுறையுடன் முடிந்துபோகும். ஆயின் சமூகப் பணி தலைமுறை தலைமுறையாக ஏனையோருக்குப் பயன்தரத்தக்கதுடன் பலன் அடைந்த பலரால் பணிசெய்தோர் நாமம் பேசப்படும்.

சமூகப் பணிகளின் போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும்.எனினும் நல்ல எண்ணத்துடன் இடையறாது செய்யப்புகும் பணி வெற்றிதரத்தக்கது. மற்றவர்களுக்காக வாழ்வோர் அன்புள்ளவராக இருத்தல் அவசியம். தனது பிள்ளைகள், மனைவியை நேசிப்பவனே அடுத்த சொந்த பந்தங்கள் சமூகம் என்பவற்றில் பற்றுள்ளவனாக இருக்க முடியும். அன்புள்ளவர்கள் என்பதற்காக எல்லாம் எம்கட்டுப்பாட்டினுள் வந்துவிடாது. இயன்றவரை சூழ்நிலைகளைச் சாதகமாக்கிக் கொள்ள முயற்சித்தாலும் பல விடயங்கள் எமது கட்டுப்பாட்டை இழந்து விடுகின்றன. இவ்வகையில் திரு.ஆர்.எம்.என் அவர்களின் வாழ்வு எச்சமயத்திலும் கட்டுப்பாட்டை இழந்துவிடாமல் அன்பைப் பேணும் வாழ்வாக அமைந்தது.

மனிதன் ஓர் சமூக மிருகம். மனிதனால் தனித்து வாழ முடியாது. மனிதன் தனது தேவையை நிறைவு செய்ய சமூகத்துடன் ஒன்றி வாழத் தலைப்படுகின்றான். பல்வேறு

சமூகக் குழாங்களுக்கிடையே ஒவ்வொரு சமூகமும் போட்டியிடவேண்டியுள்ளது.சமூகப் பிணைப்புக்கள் மனித வாழ்வுக்கு பல்வேறு பாதுகாப்பைத் தருகின்றன. எனினும் சமூகத்துடன் பிணைந்துவிட்டால் மாத்திரம் ஒருவனது தேவை நிறைவடையாது. அவன் தனக்கும் தன் குடும்பத்துக்கும் உழைக்க வேண்டும்.தொடர்ந்து இயந்திரத் தன்மையுடன் உழைக்கும் மக்களுக்கு எது சரி எது பிழை எப்படி வாழவேண்டும் என்பதற்கு வழிகாட்டப் பலம் மிகுந்த சமூகத் தாபனங்கள் அவசியமாகும். அத்தகைய தாபனங்கள் நின்று நிலைத்திடவும் கொள்கைவழி பிறளாமல் செயற்படவும் நல்ல சிந்தனைத்திறனும் ஒழுக்கமும் நிறைந்த வழிகாட்டிகள் அவசியம்.

இறைவன் படைப்பில் அனைவரும் சமமே

மனித வாழ்வுக்கு சமயம் ஒர் மூலகாரணமாக இருந்த போதும் அவற்றில் தோன்றிய இடைப் புகுத்தல்களால் வறிய சமூகங்களை வழிநடத்துவதில் அவற்றுள் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இக்குறைபாடுகளை சரிக்கட்டுவனபோல் ஏனைய சமயங்கள் பல உள்நுழைந்து சமய மாற்றங்களுக்குக் காரணமாகவும் அமைந்து விடுகின்றன. மனித வரலாற்றில் சமயமே வாழ்க்கையின் அடிப்படையாயிருந்து வந்துள்ளது. சமூகத்தில் பல்வேறு பிரிவுகளைத் தோற்றுவிப்பதிலும் சமயம் மூலகாரணமாக இருந்து வந்துள்ளது. இந்துசமயத்தில் பல நல்ல பயன்தரும் படிப்பினைகள் இருந்துள்ள போதிலும் சாதி வேற்றுமையின் இறுக்கமான தன்மை , பயனற்ற சடங்குகள் என்பன இம் மதத்தில் காணப்பட்ட பிரதான குறைபாடுகளாகும். யாழ்ப்பாணத்தில் இவ்வேற்றுமை சுதந்திரத்தின் பின்னரும் இறுக்கமாக இருந்து வந்தது. நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலைமைகள், சமூகங்களிடையே காணப்படும் பொருளாதார மாற்றம் என்பன சாதிமுறையின் கெடுபிடிகளை ஓரளவு தகர்த்துள்ள போதிலும் இக்குறைபாடு முற்றாக மறைந்துவிட்டது எனக் கூறுவதற்கில்லை. வர்ணாச்சிரமத்தின் அறுந்து செல்லும் வேர்களும் குறைந்து வரும் நில உடமையாளர்கள் மற்றும் சாதி மதம் பேசி தமது குடும்ப பாரம்பரியங் களை நேசிப்போரும், இதனைத் தமது பொருளாதார நலன்களுக்குப் பயன்படுத்துவோரும் இருக்கும் வரை இவற்றின் தாக்கம் சிறிதளவாவது இருக்கவே செய்யும்.

திரு.ஆர்.எம்.என் அவர்கள் இளமைக்காலந் தொட்டு யாழ்ப்பாணத்தில் நிலவிய சாதிக்கொடுமைகள் பற்றி நிறையவே அறிந்திருந்தார். தனது உத்தியோக வாழ்வு சமூகத்தில் நல்ல நிலைக்குத் தன்னை வளர்த்திருந்தாலும் தான் சார்ந்த சமூகம், தனது இனம் என்பவற்றில் அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார்.குறிப்பாக இன முரண்பாடுகள் களையப் பெறாது தமிழ் இனம் வருந்தும் நிலையிலும் தமிழ் மக்களிடையே சமூக முரண்பாடுகளும் தொடர்ந்திருப்பதைக் கண்டு மனம் வருந்தினார். இதற்கான மாற்றுவழியைக் காண முயன்றார்.

விழிப்புணர்வுக்கு அவசியம் பயனுள்ள சமூகத் தாபனங்கள்

தனது இளமைக்காலந்தொட்டே சமூக மறுமலர்ச்சி அமைப்புகளில் பங்கு கொண்டு உழைத்ததுடன் பல்வேறு சமூகங்களின் விடிவுக்கான செயற்பாடுகளில் நாட்டம் செலுத்தினார். பலம்பொருந்திய சமூகத்தாபனங்கள் மூலமே விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்பதில் நம்பிக்கை கொண்டார். இதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே சமூக எழுச்சி இயக்கமாகும். 1980.09.12ஆந் திகதியன்று திரு.ஆர்.எம்.என் அவர்களின் அயராத முயற்சியால் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் வெள்ளிவிழா மகாநாட்டில் இவ்வமைப்பு தோற்றம் பெற்றது.

இவ்வமைப்பைத் தோற்றுவிப்பதிலும் இதனை வளர்த்தெடுப்பதிலும் இவரது பங்கு அளப்பரியது. இவ்வமைப்பு ஆரம்பித்ததன் பின்னர் சமூக அடிப்படையில் பல முன்னேற்றகரமான சிந்தனைகள் துளிர்விட ஆரம்பித்தன. முதலில் தனது சமூகம் தாழ்வு நிலையிலிருந்து விடுதலை அடைய வேண்டும். அதே நேரம் தனது இனம்,மொழி பற்றிய கரிசனையும் அவசியமாகும் என்ற கருத்தை வளர்ப்பதில் உறுதியாக இருந்தார். சமூகரீதியிலான பிரச்சினைகள் மாற்றமடையும் போதுதான் இனம், மொழி ரீதியிலான போராட்டங்கள் வெற்றி பெற முடியும் என்பது அக்காலத்தில் தோன்றிய பல்வேறு சமூகக் குழுக்களின் எண்ணப்பாங்காக இருந்தது.சமூகவியல் சிந்தனைத் தார்ப்பரியத்தின் பிரகாரமும் இக்கருத்து ஏற்கத்தக்கதே. தமிழ் மக்களிடையே காணப்பட்ட சமூக ஏற்றத் தாழ்வுகள், பூசல்கள் என்பனவும் இனவிடுதலைக்கான பாதையில் பெருந்தடைக்கல்லாக இருந்தன என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

சமூக எழுச்சி இயக்கத்தின் பிரதான நோக்கங்கள்

திரு.ஆர்.எம்.என் தனது 11ஆவது வயதிலேயே தனது பெற்றோரின் வழிகாட்டுதலால் கோயில் வழிபாட்டில் கரிசனை காட்டினார். திரு.ஆர்.எம்.என் தனது மாவை வதிவிடத்திற்கருகில் அமையப்பெற்ற விநாயகர், அம்பாள் ஆலயங்களுக்குச் சென்று அங்கு இடம்பெறும் சமய பண்பாட்டு நிகழ்வுகளில் பங்கு கொண்டார். இதுவே 1947இல் சமூக எழுச்சி இயக்கம் தோற்றம் பெற அடித்தளமாக அமைந்தது. பின்னர் இளம் வயதிலேயே தான் பெற்ற அனுபவங்களைக் கொண்டு தனது நண்பர்குழாமுடன் சேர்ந்து 1955 செப்ரம்பர் மாதம் மாவை பாரதி வாசிகசாலையினைத் தோற்றுவித்தார். இவ்வாசிகசாலை பரிணாம வளர்ச்சி பெற்று 1971இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் என்று பெயர் மாற்றப்பட்டது. மாவை எல்லைக்கப்பாலும் சேவைகளை விரிவாக்கும் நோக்குடன் 1980 செப்டம்பரில் சமூக எழுச்சி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வமைப்பு பரிணாம வளர்ச்சிக்காக 25 ஆண்டுகளை எடுத்துக் கொண்டமையையும் கிராமக் குறிச்சியில் இருந்து கிராம அமைப்பாக உருவெடுத்து, மாவட்ட ரீதியிலும் பின்னர் தேசிய ரீதியிலும் வளர்த்தெடுக்கப்படுவதையும் அவதானிக்க முடியும்.

சமூகம், கல்வி, தொழில், பொருளாதாரம், கலை, கலாசாரம், பண்பாடு ஆகிய அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி குன்றிய பின்னணியைக் கொண்ட எமது சமூகத்தை அபிவிருத்தி அடைந்த சமூகமாக வளர்ச்சியடையச் செய்வதையும் அதனை ஏனைய சமூகக் குழுக்களின் மத்தியில் சமத்துவம், கௌரவம் மற்றும் அந்தஸ்துப் பெற்ற சமூகமாக உயர்வடையச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு சமூக எழுச்சி இயக்கம் தனது சேவையை வியாபித்தது.

பல்வேறு கருத்தரங்குகள், மகாநாடுகள் மூலம் இவ்வமைப்பின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டதுடன் சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் பலனாக இவற்றை நிறுவனமயப்படுத்தும் நோக்குடன் 1981.04.15ஆம் திகதி சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் உருவாக்கப்பட்டது. இதில் இவ்வமைப்புக்கான யாப்பும் உருவாக்கப்பட்டது. இம்மகாநாட்டின் போது மூலநோக்கம், சிறப்பான நோக்கம், மூல உபாயங்கள் என்பன வெளிப்படுத்தப்பட்டன. இவற்றுள் மூல உபாயம் கொண்டுள்ள கருத்துக்கள் பலரும் அறிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமென்பதால் அவற்றைக் கீழே காண்போம்.

- பட்டினி கிடக்க நேரிடினும் பிள்ளைகளைக் கற்றவராக்குதல்
- வேறுபாடுகளைக் களைந்து மக்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்தல்
- மரபுத்தொழில் முறையினின்று அகன்று தொழில்வளம் பெருக்குதல்
- சாதியத்தின் மூலவேரான குடிமைத்தொழில் சாதியமுறையை ஒழித்தல்
- பாடசாலைக்கல்வியைப் பெறவிடாமல் பிள்ளைகளை வேலைக்கமர்த்தும் சமூகக்கொடுமைகளை ஒழித்தல்
- உயர்ந்த ஒழுக்க. கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தல்

இக் கொள்கைச் சித்தாந்தங்கள் பல்வேறு தேவைகள் கருதி எழுந்தவை என்பதுடன் இச்சிந்தனைகளில் பல சமூகவியல் அம்சங்கள் செறிந்துள்ளன. இவ்வெண்ணக் கருக்களில் திரு.ஆர்.எம்.என். அவர்களின் சிந்தனைச் செல்வாக்கு பெருமளவில் ஆதிக்கஞ் செலுத்தியுள்ளதால் இம்மூலோபாயங்கள் பற்றிய நுண் ஆய்வு பலருக்கும் பயன்படுமென்பதுடன் திரு.ஆர்.எம்.என். அவர்களின் ஆளுமையை அறிந்து கொள்ள மாவை வாய்ப்பாக அமைவதால் சமூகவியல் நோக்கில் இவற்றை இங்கு வெவ்வேறாக நோக்குதல் நலமாகும்.

- **பட்டினி கிடக்க நேரிடினும் பிள்ளைகளைக் கற்றவராக்குதல்**

'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'' எனும் முதுமொழிக்கமைய அமைந்த இக்கொள்கை சமூக மறுமலர்ச்சிக்கான அத்திவாரமாகும். கல்வியினால் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளை மாற்றியமைக்க முடியும். கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. கற்றோன் தன் சந்ததியையும் கற்க வைப்பான். கற்றோனுக்கு மற்றைய சமூகத்தில் மட்டுமல்ல தமது சமூகத்திலும் ஓர் நன்மதிப்பு உருவாகும். கற்றோரைப் பார்த்துத் தாமும் படிக்க முயற்சிப்பர். கல்வியினால் மாற்று வேலை முறைக்கு ஓர் சமூகம் உந்தப்படும். இதனால் காலப் போக்கில் ஏற்றத்தாழ்வற்ற சமூகம் உருவாகும் என்ற உயரிய சிந்தனையுடன் இக்கொள்கை உருவானது.

இக்கொள்கை கேட்பதற்கு இனிமையாக இருப்பினும் நடைமுறையில் பொருத்த முள்ளதாக்கும் அவசியம் பற்றி திருஆர்.எம்.என் உணர்ந்திருந்தார்.மனிதனுக்கு அவன் உடலியல் தேவைகளான பசி, தாகம், தூக்கம், கழிவகற்றல் என்பன ஏனைய உளவியல் தேவைகளை விட வலிமை கூடியன. பசியுடன் இருப்பவர் மற்றெல்லாவற்றையும் விட்டு உணவைத் தேடியே அலைவான். பிற தேவைகள் எல்லாம் பின்னுக்கு சென்றுவிடும் என்கிறார் ஏப்பிரகாம் மாசிலொ என்ற அறிஞர். பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்பது தமிழ் முதுமொழி. பசி ஒருவனிடம் ஆதிக்கம் பெற அதைத் தணிப்பதற்காக அவனுடைய நுண்மதி, ஞாபகம் ஆகியனவும் பல்வேறு புலன் உறுப்புகளும் பயன்படுகின்றன. அவனுடைய கனவு, சிந்தனை என்பன உணவு மற்றும் அடிப்படைத் தேவைகள் பற்றியதாகவேயிருக்கும். பிள்ளைகளின் உடலியல்தேவை பூர்த்தியாகாவிட்டால் பாடசாலையில் அவர்கள் நன்றாக கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள். இந்த உண்மைகளைக் கருத்திற்கொண்டு பிற்காலத்தில் உருவாக்கப்பட்டதுதான் **புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியமாகும்.**

- **வேறுபாடுகளைக் களைந்து மக்கள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்தல்**

வேறுபாடுகள் இரண்டு வகையில் சமூகங்களில் நிலவும். முதலாவது உள்ளக வேறுபாடுகள் அடுத்தது வெளியாருடனான வேறுபாடுகள். இவையிரண்டும் சமமாக அமையாவிடில்

சமூக முரண்பாடுகள் உருவாகும். இன்றைய வாழ்க்கை முறைகளில் மனிதத் தொடர்புகள் முக்கிய இடம் வகிக்கின்றன. சமூகத்துடனும் சமூக நியமங்களுடனும் ஒத்துவாழும் ஒருவன் தன் வாழ்வில் எதிர்ப்படும் பிரச்சினைகளை எளிதாகத் தீர்த்துக் கொள்வான். எமது நடத்தைகள் அதிக அளவில் சமூகத்துடன் தொடர்பானவையே. எம்மால் சமூக உணர்வின்றி எதையும் செய்ய முடியாது. நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, சமூக பழக்க வழக்கங்கள், சமய வழிபாட்டு முறைகள் எல்லாம் சமூகத்துடன் தொடர்பானவை. எமது வாழ்க்கை முறைகளை பிறருடன் பகிர்ந்து வாழ்வதே நாகரீகத்தின் சிறப்பாகும். பிறருடன் திருப்தியான தொடர்பு கொள்ளும் வகையிலேயே எமது ஒழுக்கப் பண்புகளை விருத்தி செய்கின்றோம். ஒத்துழைத்தல், சண்டையிடல், போட்டி, பின்பற்றல் ஆகியன மூலம் சமூகத்தில் எமக்கென இடத்தை தக்க வைத்துக் கொள்கிறோம். இத்தொழிற்பாடு சமூக மயமாதல் (socialisation) எனப்படும்.

ஒவ்வோர் சமூகத்துள்ளும் பல்வேறு பிரச்சினைகள் நிலவுகின்றன. இது உள்ளக பிரச்சனைகளாகும். தமிழர் சமூகம் தமக்குள்ளே சாதி ,சமயம் என முரண்படுகின்றமையை உள்ளகப் பிரச்சினைகள் என்கின்றோம். அதே வேளை இன முரண்பாடுகள் போன்ற வெளியகப் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய சூழல் காணப்படுகின்றது. முதலில் தமது சமூகத்துள் காணப்படும் பிரச்சினைகளை தீர்க்கும் முயற்சியிலும் அதே வேளையில் இனமுரண்பாடுகள் தொடர்பிலான போராட்டங்களை ஆதரிக்க வேண்டும் என்பதிலும் மாவை சமூக எழுச்சி இயக்கம் முனைப்புடன் செயற்பட்டது.

- **மரபுத்தொழில் முறையினின்று அகன்று தொழில்வளம் பெருக்குதல்**

சமூகமொன்று தொடர்ச்சியாக நிலைபெறுவது அதன் அங்கத்தவர்களின் திறமையிலேயே தங்கியுள்ளது. சமூகத்தில் சேரும் புதிய அங்கத்தினர்களும் அத்திறமையைப் பெறவேண்டும். அதன்படி நோக்கினால் ஒர் பரம்பரை இன்னொரு பரம்பரைக்கு அந்த சமூகத் திறமையை வழங்குதலும் சமூகமயமாதல் தன்மைகளுள் ஒன்றாகும். விஞ்ஞான முகாமைக்கோட்பாட்டாளர் டபிள்யு ரெயிலர் அவர்களின் கோட்பாடுகளுக்கமைய தொழில்திறன் விருத்திக்கும் இது பொருந்துவதாகும்.

இருப்பினும் இத்திறன்களை நவீனமாக்காதவிடத்து பொருளாதாரப் பின்னடைவு ஏற்படுகின்றது. இப்பொருளாதாரப் பின்னடைவை பொருளாதாரத்தில் நன்னிலையில் உள்ள சமூகம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் போது சமூக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. பாரம்பரியமாக இந்நிலையைத் தொடர விடுதல் முறையன்று. இம்மரபு முறையை மாற்றுதற்கு இலகுவான வழிகளுள் ஒன்று கல்வி மேம்பாடு. கல்விச் சிறப்பினால் உயர்நிலையடையும் சந்தர்ப்பம் அதிகமெனினும் யாவரும் கல்வியினால் சிறப்படையும் சந்தர்ப்பங்கள் நிலவாது. இதற்கு மாற்று வழி மரபுரிமையான வேலைகளை நவீனமயப்படுத்தல், நிறுவனமயப்படுத்தல், மாற்றுத் தொழில் முறைகளை நாடுதல் என்பனவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

வழிகாட்டல் என்ற பதம் ஆரம்ப கட்டங்களில் தொழில் தெரிவுகளையே மையமாகக் கொண்டிருந்தது. அவரவர் தமது தொழில்களைத் தமது சந்ததியினருக்குச் சொல்லிக் கொடுத்தனர். ஆயினும் பின்னர் வழிகாட்டல் எனும் பதம் தொழில் தெரிவுக்கும் அப்பால் வளர்ச்சியடைந்து இன்று ஒருவனுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டும் பல்வேறு அம்சங்களை

யும் உள்ளடக்கிய கல்வி முறையாக வளர்ந்துள்ளது. இவற்றை ஒழுங்கு முறைப்படுத்தி பயன்பெறுவதன் மூலம் பல்வேறு நன்மைகளை மனித இனம் பெற்றுக்கொள்ளலாம்.

பல்வேறு புதிய தொழில் நுட்பப் பிரிவுகளைச் சேர்ந்த தொழில்கள் இன்று முன்னுரிமை பெற்றுள்ளன. இற்றைக்கு சில தசாப்தங்களுக்கு முன்னர் சமூகத்தில் முன்னுரிமை பெற்ற தொழில்கள் பல அற்றுப்போய் விட்டன. இயந்திரம் அல்லது நவீன உபகரணங்கள் இன்று வேலைகளை இலகுவாக்கி விடுகின்றன. நகரமயமாதல், இயந்திரமயமாதல் காரணிகள் மக்களுக்குப் பல்வேறு சமூக நன்மைகளையும் அதேவேளை பல வசதியீனங்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

மரபுத்தொழில் செய்வோர் அதிலிருந்து விடுபட்டு மேலும் வருமானம் தரும் தொழில்களில் ஈடுபடுகின்றனர். பல மரபுத் தொழில்களுக்கு ஆட்களேயில்லாத நிலை பெருகிவருகின்றது. இதற்கெல்லாம் காரணம் யுத்தம், உள்நாட்டு வெளிநாட்டு இடப் பெயர்வு அத்துடன் நவீன தொழில் உத்திகள் என்பனவற்றுடன் இத்தகைய சமூக மறுமலர்ச்சி இயக்கங்கள் போன்ற அமைப்புக்களின் நிறுவன ரீதியான பங்களிப்புக்களுமாகும் என்பதை மறுப்பதற்கில்லை.

- **சாதியத்தின் மூலவேரான குடிமைத்தொழில் சாதியமுறையை ஒழித்தல்**

சமூக மயமாக்கலில் செல்வாக்குச்செலுத்தும் சமூக நிறுவனங்களில் மிக முக்கியமானது குடும்பமாகும். இது தாய், தந்தை பிள்ளைகள் என தனியார்கள் அங்கத்துவம் பெறும் ஆரம்ப நிறுவனம் ஆகும். குடும்பத்தின் அமைப்பொன்றை தீர்மானிக்கும் ஏதுக்களுள் அச்சமூக வர்க்க இயல்பும் பொருளாதார நிலையும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. கீழ் நிலைப் பொருளாதார மட்ட நிலையில் உள்ள குடும்பங்களில் சாதாரண குற்றங்கள். கல்வியறிவின்மை, பாலியல் குற்றங்கள் ஆகியன பரவலாகக் காணப்படும் என பல்வேறு ஆய்வுகள் நிரூபித்துள்ளன. எல்லா ஏழைக் குடும்பங்களிலும் இந்நிலை காணப்படாத போதிலும் பெரும்பாலான ஏழைக்குடும்பங்களில் இந்நிலை பொதுவானது.தேவையான உணவு,உடை,உறையுள் இன்மையினால் பிள்ளைகளின் மன எழுச்சிச் சமன்பாட்டுத் தொழிற்திறன் பாதிக்கப்படும். தொடர்ந்து உயர்கல்வி இலட்சியங்கள் பாதிக்கப்படும். ஆதலின் கல்வி வளர்ச்சிக்கான நிறுவனமயப் படுத்தும் நடவடிக்கைகளுடன் தொழில் மாற்று முறையை ஊக்குவித்தல், தொழில் செய்யும் முறைகளை மாற்றுதல் அல்லது நவீனமயப்படுத்தல், இன்றைய நாகரீகப் பரம்பரை விரும்பும் வகையில் மரபுத் தொழில்களுடன் முக அலங்காரம், உடல் அலங்காரம், அதற்கான மருத்துவ முறைகள் ஒருங்கமைக்கப்பட்டு வருமானம் பெருக்கும் தொழிலாக மாற்றியமைத்தல் வேண்டும். வருமானம் தரும் தொழில்கள் பின்னர் உயர் தொழில் அந்தஸ்தைப் பெறும். வருமானமீட்டும் பொருட்டு ஏனைய சமூகத்தவர்களும் இத் தொழில்களில் ஈடுபடுவர். இக் கொள்கைக்கு ஏற்ப நகர்ப்புறங்களில் இன்று அழகுக் கலை நிலையங்கள்.உடல் வலுவாக்கல் நிலையங்கள், தொடுகைச் சிகிச்சை நிலையங்கள், மணப்பெண் அலங்கார நிலையங்கள் என பணம் புரளும் தொழில்கள் நடைபெறுகின்றன. இவ்வாறான மாற்றங்கள் கல்வி மற்றும் பயிற்சிகளால் உருவானவை. இவற்றை பல்வேறு சமுகத்தினரும் சிந்திக்கத் தூண்டவும் மெருகேற்றவும் இச்சமுக எழுச்சி இயக்கத்தின் தோற்றம் அதன் கொள்கைகள், செயற்பாடுகள் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது.

சாதியத்தின் மூலவேரான குடிமைத்தொழில் சாதியமுறையை ஒழித்தல் எனும் இக் கோட்பாடு மேற்கூறிய கருத்திலும் பார்க்க உண்மையில் தொழில் மாற்று முறையை ஊக்குவிப்பதாகவே அமைகின்றது. எவ்வளவுதான் நவீன ரீதியில் அதே தொழில்களைச் செய்தாலும் பணம் ஈட்டும் தன்மை காணப்பட்டாலும் மனித பேதங்களை வைத்துப் பிழைப்பு நடத்துவோர் இருக்கும் வரை ஏதோ ஒரு வகையில் சாதிமுறைக்கு உயிரூட்டவே எத்தனிப்பர்.இதனாலேயே குடியுரிமைத் தொழிலை செய்யாது புதிய தொழில்களை நாடுவதே சிறந்ததென்பது சமூகவியலாளர்களின் வாதமாகும்.

யுத்தத்தின் பின்னரான யாழ் சமூக வாழ்வினைப் புடம் போடும் ஒருவர் யாழ்ப்பாணத்தின் பல்வேறு கிராமங்களில் வாழும் பல சமூகத்தவர்களும் தமது குடியுரிமைத் தொழிலில் இருந்தும் விலகி பல்வேறுபட்ட தொழில்களைச் செய்வதை இன்று பரவலாகக் காணமுடியும். வெளிநாடுகளுக்குத் தொழில் நிமித்தம் செல்வோர் பலரும் அந்நாடுகளில் பல்வேறு தொழில்களைச் செய்கின்றனர்.அந் நாடுகளில் தொழில் மகத்துவ நிலை பேணப்படுவதனால் யாரும் தமது பொருளாதார முன்னேற்றம் கருதி எத்தொழிலையும் ஏற்கும் நிலை தோன்றியுள்ளது. இதன் தாக்கம் யாழ்ப்பாண சமூகத்திலும் கணிசமான மாற்றங்களைக் கொண்டமைவது ஒர் ஆரோக்கியமான அம்சமாகும். இவ்வாறு இரண்டு மூன்று தலைமுறைக்கு தொழில் மாற்றம் ஏற்பட்டு திருமண பந்தங்களிலும் மாற்றம் ஏற்படுங்கால் வர்ணாச்சிரமத்தில் பாரிய மாற்றம் நிகழும். கல்வியால் ஏற்படும் தொழில்மேம்பாடு இதனை விரைவாக நிகழ்த்தவல்லது என்பதை திரு.ஆர்.எம்.என். அவர்கள் தனது சிந்தையிற் கொண்டிருந்தார்.

- **பாடசாலைக்கல்வியை பெறவிடாமல் பிள்ளைகளை வேலைக்கமர்த்தும் சமூகக் கொடுமைகளை ஒழித்தல்**

மனித சமூகத்தின் பயிலுனராகக் குழந்தைகள் முதலில் எதிர்கொள்ளும் சமூக நிறுவனம் குடும்பமெனக் கண்டோம். அதன் பின் பாடசாலைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. கல்வி சம்பந்தமான குணவியல்புகளைக் கட்டியெழுப்புதல், சமூக இசைவாக்கம் பெறல்,நுண்மதித்திறன் பரிசோதனை உடல்,உள வளத்திறன் என்பன பாடசாலைகள் மூலம் ஏற்படுத்தப் படுகின்றன. பல குடும்பங்கள் தமது பொருளாதார நிலை கருதி பாடசாலைக் கல்வியைத் தொடர விடாது பிள்ளைகளை வேலைக்கமர்த்தும் கொடுமை யாழ்ப்பாணத்தில் பொருளாதார வளம் குறைந்த பல சமூகங்களில் நிலவியது. இதனால் பிள்ளைகள் சமூக மயமாக்கலில் முக்கிய பங்காற்றும் நிறுவனமாகிய பாடசாலைச் செல்வாக்கை இழந்து போவதை இவ்வமைப்பு கடுமையாக எதிர்த்தது. சில சந்தர்ப்பங்களில் சாதி,மதம்,குலம் போன்றவற்றால் ஏற்படுத்தப்பட்ட சமனற்ற அம்சங்கள் இத்தகைய மாணவர்களுக்குக் கல்வி மேல் உள்ள நாட்டத்தைக் குறைப்பனவாகவும் அமைந்தன. கல்விக்கும் சமூகத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பின்மை காணப்படும் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்ட சமூகத்தின் மாணவர்களின் கல்வித்திறன் வளர்ச்சி பாதிக்கப்படும்.

ஆண் பிள்ளைகள் பாடசாலை செல்லாது ஆரம்பக் கல்வியுடன் வேலைக்குச் செல்லும் பிரச்சினை ஓர் புறமும் பெண்பிள்ளைகள் பாடசாலைக்கே செல்லாது பாதிக்கப்படும் நிலைமறுபுறமும் என்ற பிரச்சினை பல சமூகங்களில் அன்று பரவலாகக் காணப்பட்டது.

இந்த நிலையை மாற்றுவதற்கு சமூக எழுச்சி இயக்கத்தினர் கணிசமான பங்களிப்பைச் செலுத்தினர். அத்துடன் நிறுவன ரீதியிலான முயற்சிகள் இதற்குப் பெரிதும் பயன் தரத்தக்கதென்ற உண்மையை நிரூபித்தனர். பெண் கல்வி, பெண்கள் தனித்துவம் காக்கப்படல் என்பவற்றிலும் இவ்வமைப்பு கணிசமான பங்களிப்பைச் செலுத்தி வந்தது. இதனாற்போலும் எழுச்சி இயக்கத்தின் நிகழ்வுகளின் போது கணிசமான பெண்கள் வருகை தந்து இவ்வமைப்பினது சேவைக்கு ஆதரவளிப்பதை எம்மால் நேரடியாக அவதானிக்க முடிந்தது.

- **உயர்ந்த ஒழுக்க விழுமிய. கலாசார, பண்பாட்டு விழுமியங்களை வளர்த்தல்**

யாழ்ப்பாணத்தில் நிலவிய சமூக அமைப்புக்கள் யாவும் பொதுவாக சிறந்த கலாசாரப் பெறுபேறுகளைக் கொண்டமைந்தன.வளர்ந்தோர் சந்ததியினரிடம் காணப்படும் அறநெறிகள் விழுமியங்கள்,பழக்க வழக்கங்கள் பாரம்பரியங்கள் போன்றவற்றை முற்று முழுதாக கடைப்பிடிப்பதில் பல்வேறு சமூகத்தாக்கம் தனது செல்வாக்கைச் செலுத்தி வந்துள்ளது. கல்வி முறையானது இப்பண்பாட்டை மேலும் மெருகூட்டி வழங்குவதில் செல்வாக்குச் செலுத்தியது. யாழ்ப்பாணப் பொருளாதாரத் துறையில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டபோதும் சமூகப் பழக்க வழக்கங்கள், பண்பாட்டியல் போன்றவற்றில் சமூகங்களுக்கிடையே பெரிய மாற்றங்கள் காணப்படவில்லை. பண்பாட்டியல்புகளைக் கட்டிக்காப்பதன் அவசியம் எல்லாச் சமூகக்குழுக்களிலும் செல்வாக்குச் செலுத்தியது.

1981 இல் உருவாக்கப்பட்ட எழுச்சி இயக்கத்தின் ஆறு அம்சக் கொள்கைகளில் கால ஓட்டத்திற்கமையப் பல்வேறு மாற்றங்கள் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும் இதன் ஆரம்பக் காலத்தில் நிலவிய சமூக தேவைகளுக்கேற்பவே இக்கொள்கைகள் வகுக்கப்பட்டது என்பதையும் இம் மூல நோக்கங்களுக்கு அமைவாகவே பின்னர் மாற்றங்கள் உள்வாங்கப்பட்டது என்பதையும் நினைவிற் கொள்வது பொருந்தும்.

முதலில் சமூக மாற்றம் அதே சமயத்தில் இன, மொழி ரீதியிலான போராட்டங்களில் பங்கெடுத்தல் எனும் கொள்கையில் **சமூக எழுச்சி அமைப்பு** மிகவும் பிடிப்புடன் செயற்பட்டது. இவ்வமைப்பினை நெறிப்படுத்துவதில் திரு.ஆர்.எம்.என். அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாக அமைந்தது. ஒரு சமூகம் மேம்பாடடைய முதலில் கல்வி வளர்ச்சி தொடர்ந்து பொருளாதார வளர்ச்சி அவசியமென்பது திரு.ஆர்.எம்.என். அவர்களின் சிந்தனையாகும். இதன் அடிப்படைத் தார்ப்பரியம் அவருக்கு இளமைக் காலத்திலேயே தெரிந்திருந்தது. இதையடியொற்றி பல்வேறு கல்விசார் நடவடிக்கைகளை ஆரம்பம் முதற்கொண்டே ஆரம்பித்து வழிப்படுத்தினார். முதியோருக்கான இலவசக்கல்வி, பாடசாலை மாணவர்களுக்கான இலவச வகுப்புக்கள், பரீட்சைகளுக்கான இலவச கருத்தரங்குகள் என்பன மாவை மறுமலர்ச்சி மன்றத்தால் முற்றும் இலவசமாக நடாத்தப்பட்ட செயற்பாடுகளாகும். இக்கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தியதோடு மட்டுமன்றி இவ்வகுப்புக்களில் பிரதான ஆசிரியராகவும், போதனை யாளராகவும், விரிவுரையாளராகவும் இலவசமாகக் கலந்துகொண்டு இந்நிகழ்வுகள் சிறக்கக் காரணமாக இருந்தார்.

புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

கல்வி, பொருளாதாரம் இவ்விரண்டையும் தனது சமூகத்திடையே மேலும் முன்னெடுக்க இன்னுமோர் பலமான அமைப்பு அவசியமென திரு.ஆர்.எம்.என். கருதினார். இச்சிந்தனையில் தோன்றியதே புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் தோற்றமாகும். இவ்வமைப்பின் கீழ் நிதியைத் திரட்டவும் இந்நிதியை குறித்த நோக்கத்துக்கு அமைவாக செயற்படுத்தவும் சட்டவாக்கங்களை ஆக்குவதில் திரு.ஆர்.எம்.என். அவர்கள் தனது பூரண பங்களிப்பைச் செலுத்தினார். இவ்வாறான சிந்தனைகளை மேம்படுத்தவும் சட்ட நடைமுறைகளை உருவாக்கவும் போதிய அனுபவங்களைக் கூட்டுறவுத் துறை இவருக்கு அளித்ததெனலாம். இவ்வமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட நிதியைக் கொண்டு கல்வி மேம்பாட்டுக்கும், குடும்ப பொருளாதார மேம்பாட்டுக்கும் என கல்விக் கொடைகள் உருவாக்கப்பட்டன. இவ்வமைப்பின் உறுப்பினர் பலரும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நல்லபெரும் நிலையில் உள்ளனர். அவர்களிற் பெரும்பாலானோர் இம்முயற்சிக்கு தமது பூரண ஆதரவைத் தந்தனர். நம்பிக்கையின் பலனாக இவ்வமைப்பை பாதுகாப்பான சட்ட பூர்வமான, தொடர்ந்தியங்கும் தன்மை கொண்ட ஒரு அமைப்பாக ஆக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. இவ்வமைப்பு அரச அங்கீகாரம் பெற்ற அமைப்பொன்றாக அமைவது சாலச் சிறந்தது என்பதும் உணரப்பட்டது. இதற்கான முன்முயற்சிகளை ஆரம்பித்த திரு.ஆர்.எம்.என். அவர்கள் பல்வேறு தடங்கல்களுக்கிடையே பல்வேறு படிமுறைகளைத் தாண்டி இலங்கைப் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட 1999ம் ஆண்டின் 52ஆம் இலக்கத்தைக் கொண்ட புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியச் சட்டத்தை உருவாக்க முன்னின்று வழிவகுத்ததுடன் அதில் வெற்றியும் ஈட்டினார்.

இச்சட்டம் இலங்கைப் பாராளுமன்ற சட்டவியல் வரலாற்றில் ஒரு மைல்கல்லென கணிக்கத்தக்கது. ஏனெனில் ஒரு சமூகம் தனது நலன்களைப் பேணும் வகையிலும் தமது பொருளாதார நலன்களை ஒரு அமைப்பினூடாக பேணிக்காக்கும் வகையிலும் பாராளுமன்றத் தினூடாக அங்கீகரிக்கப்பட்ட சட்டமொன்றை கொண்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. இச்சட்டத்தினூடாக இவ்வமைப்புக்கு அரச அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் இவ்வமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட நிதியை ஒழுங்கு முறையாக நிர்வகிப்பதற்கான ஏற்பாடும் செய்யப் பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இச்சமூக எழுச்சி அமைப்பில் தொடங்கி இவ்வமைப்பை தனது சுயதிறன் மதிப்பீட்டின் ஊடாக காலத்திற்குக் காலம் வேண்டிய மாற்றங்களை உள்வாங்கி வளர்ச்சியடையச்செய்யும் பாங்கானது தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளியபடி

> “ ***ஊழையும் உப்பக்கம் காண்பர்***
> ***உலைவின்றித் தாழா துஞற்றுபவர்”*** என்பதற்கொப்ப அமைவதைக் காணலாம்.

அனுபவம் நிறைந்த திரு.ஆர்.எம்.என்.அவர்களின் தலைமைத்துவ ஆற்றலே இது போன்ற பணிகளைத் தொடர்ச்சியாகக் கொள்ள வல்லன. இவ்வகையில் திரு.ஆர்.எம்.என். அவர்களின் தலைமைத்துவப் பின்னணிபற்றி ஆழ்ந்து அவதானிப்பது பொருத்தமானது.

திரு.ஆர்.எம்.என். அவர்களின் தலைமைத்துவ ஆளுமைப் பின்னணி

கல்வி அறிவு, அறிந்து கொள்ள வேண்டுமென்ற அவா, இயலுமை ஆற்றல், பொறுமை, தற்றுணிவு, பிரச்சனைகளைப் பகுத்தறியும் ஆற்றல், சமூக விழுமியங்களை அறிந்திருத்தலும் அதற்கு மதிப்பளித்தலும், தெளிவான சிந்தனை, தான் சரியெனக் காணும் சிறந்தனவற்றைத் தெரிதல் அவற்றுள் இயலக்கூடியனவற்றை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் எடுத்துரைத்தல், சிறந்த மனித விழுமியங்களைப் பின்பற்றுதல், அதனை மற்றவர்களையும் பின்பற்றச்செய்யும் ஆற்றல், பேச்சுவன்மை, எழுத்துவன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, எடுத்த காரியத்தில் பற்றுக்கோடு என தலைவர்களுக்கு இருக்கவேண்டிய பண்புகள் பலவற்றை திரு.ஆர்.எம்.என். அவர்கள் கொண்டுள்ளார். இத் தலைமைத்துவப் பின்னணி வெறுமனே இலகுவாகப் பெற்றுக்கொண்ட ஒன்றல்ல. மிகுந்த ஒழுக்கம், கல்விமேம்பாடு, பல்வேறு இடங்களில் தாம் பெற்றுக்கொண்ட அனுபவம் என்பனவே சிறந்த தலைமைத்துவத்தை வளர்க்கும். திரு.ஆர்.எம்.என். அவர்களின் பல்வேறு பணிஅனுபவங்கள் இத்தலைமைத்துவ வளர்ச்சிக்குக் காரணமாயின.

கூட்டுறவு அனுபவம் பல்வேறு பொருளியல் மனிதவிழுமிய அனுபவங்களைத் தரவல்லது. கணக்கியல், கணக்காய்வு, வியாபாரச்சட்ட திட்டங்கள், சிறு தொழில் முகாமை, சமூகவியல் எனப் பல்வேறு கல்வி மூலங்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைத் தரவல்லது மட்டுமன்றி அவற்றை உத்தியோக வாழ்வின் ஊடாக மேலும் மேலும் அனுபவமாக அறியத்தருவது. திரு.ஆர்.எம்.என். அவர்கள் சிறந்த கூட்டுறவு உத்தியோகத்தராக அக்காலத்தில் தலைசிறந்த உதவி ஆணையாளர்களாகப் பணிபுரிந்த திரு. மதிபாலசிங்கம், திரு. ஆசீர்வாதம் திரு. சின்னத்தம்பி போன்றோரால் போற்றப்பட்டவர். பின்னர் பொல்கொல்லையில் பணிபுரிந்த காலத்தில் கூட்டுறவு ஆணையாளராகப் பணியாற்றிய திரு ஆர்.பி. ராஜகுரு என அழைக்கப்பெற்ற மிகச்சிறந்த கூட்டுறவாளரால் சிறந்த தரத்தில் வைத்து மதிக்கப்பட்ட சிரேஷ்ட விரிவுரையாளராக விளங்கியவர்.வெறுமனே பாடங்களைக் கற்பிக்கும் விரிவுரைப் பணிகளுக்கப்பால் பாடவிதானங்களை மெருகூட்டுதல், பல்வேறு பணியாளர்களுக்குமான கருத்தரங்குகளை ஒழுங்குசெய்தல் அவற்றுக்குப் பொருத்தமான பாடவிதானங்களைக் களநிலைக்குப் பொருந்துவதாக ஆக்கும் திறன், பரீட்சை வினாக்கள், பரீட்சை மதிப்பீடு என பலதரப்பட்ட அனுபவங்களைப் பெற்றவராக திரு ஆர்.எம்.என் இருந்தார். 1971களில் கூட்டுறவுத் துறையில் மேற்கொள்ளப்பட்டு இன்று வரை நிலைத்திருக்கும் பாரிய மறுசீரமைப்புக்கமைய மறுசீரமைப்புக் கொள்கைகளை உள்வாங்கி அதற்கமைய பயிற்சிகளை வடிவமைக்கும் திறன் வாய்ந்த மிகச்சிலருள் முக்கிய பங்காளியாக இவர் காணப்பட்டார். இம்மறுசீரமைப்பு கூட்டுறவுத்துறையை முற்று முழுதாக மாற்றியமைத்த ஒரு மைல்கல் நிகழ்வாகும். ஜனாதிபதி ஆணைக்குழுவான லெயிட்லோ தலைமையிலான குழு பல நாடுகளின் கூட்டுறவு அனுபவங்களை ஒருங்கே பெற்று இம்மாற்றங்களைச் செய்தது. இம் மாற்றத்தை உடனடியாக நிறைவேற்றுவதில் அக்கால சுதந்திரக்கட்சி அரசு மிகுந்த அக்கறை காட்டியது. இதே காலத்தில் அரசினால் உருவாக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தில் கூட்டுறவுக்கு மிகுந்த பொறுப்புக்கள் அளிக்கப்பட்டன. இத் திட்டத்தை உள்வாங்கிச் செயல்படுத்துவதற்கு நல்ல தேர்ச்சி பெற்ற பயிற்றுவிப்போர் தேவைப்பட்டனர். இப் புதிய முறையை வடகிழக்கெங்கும் எடுத்துச்செல்ல கூட்டுறவுப் பரிசோதகர்கள், மாவட்ட செயலாளர்கள், தலைமைத்துவப் பொறுப்பில் உள்ளோர் பணியாளர் என பல தரப்பினருக்கு

பயிற்சியளிக்க வேண்டியிருந்தது. அந்நாளில் இப்பாரிய பொறுப்பைச் சளைக்காது முன்னின்று செயற்படுத்தி வெற்றிகண்டவர் திரு.ஆர்.எம்.என்.ஆவார்.

1980 தொடக்கம் தேசிய வீடமைப்பு அதிகார சபையில் கணக்காளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், திட்டமிடல் பகுதித் தலைவர் என பல்வேறு உயர்பதவி வகிப்பதற்கு அவருக்கு அடித்தளமாக அமைந்தது அவர் கூட்டுறவு அமைப்பில் பெற்றுக்கொண்ட அனுபவங்களாகும். தேசிய வீடமைப்பு அதிகார சபை கூட்டுறவு அலுவல்களில் இருந்து பெரிதும் வேறுபட்ட பணியைக் கொண்டது. உயர்நிலை உத்தியோகத்தர்கள் முதற்கொண்டு அமைச்சர்கள் வரை பல்வேறு கூட்டங்கள், கருத்தரங்குகள் எனப் பல்வேறு சூழ்நிலைகளுக்கு ஏற்ப கடமையாற்றத்தக்கது. அமைச்சரவைக்கான பல்வேறு நிதிசார் பத்திரங்கள், அறிக்கைகளை வழங்கும் பொறுப்புக்களுடன் சம்பந்தமுடைய பணிகள் இவருக்கு வழங்கப்பட்டிருந்தன. யான் ஒருமுறை அதிகார சபைக்கு இவரை மாணவர் என்ற ரீதியில் மரியாதை நிமித்தம் காணச் சென்ற போது பல்வேறு பொறுப்புக்களை ஏற்று நடாத்தும் இயல்புகள் கொண்டவராக பல சகோதர இனத்தவர்களைக் கட்டுப்படுத்தும் பொறுப்புக்கள் கொண்ட ஆற்றல்படைத்த உயர்நிலை உத்தியோகத்தராக இவர் சேவையாற்றியதைக் காண முடிந்தது. பல பொறுப்புக்களைக் கொண்ட உத்தியோகத்தராக இருந்த போதிலும் பலரும் இவரது ஆளுமைக்குட்பட்ட உத்தியோகத்தர்களாகவும் அதற்கு மேலால் இவர்மேல் மதிப்பும் மரியாதையும், அன்பும் கொண்ட பணியாளர் குழாம் ஒன்றாகவும் இருந்தமை கண்டு பெருமிதம் கொண்டேன். அத்துடன் மாவட்ட, மாகாண மட்டங்களுக்கப்பால் தேசிய ரீதியிலும் செல்வாக்குப் பெறும் ஆளுமை இவருக்குக் கிடைத்தது.

பல்வேறு சூழ்நிலைகளில் கடமையாற்றத்தக்க ஆற்றல் அல்லது தலைமைத்துவம் இன்று பல நிறுவனங்களில் எதிர்பார்க்கப்படும் ஒன்றாக விளங்கி வருகின்றது. ஒரே நிறுவனத்தில் பல ஆண்டுகள் பணிபுரிவது இலகு. அங்கு பல ஆண்டுகளுக்கு ஒரே விதமான பணியையே செய்ய நேரும். இதனால் புதிய அனுபவங்களை விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியாது. இன்று உயர் நிலைப் பணிகளுக்கான நேர்முகப் பரீட்சைகளின் போது முன்னர் எங்கெங்கு வெவ்வேறு சூழ்நிலைகளில் ஒருவர் பணியாற்றினார் என்று அளவிடும் முறை இருந்து வருகின்றது. இவ்வாறே பல்வேறு சூழ்நிலைகளில் பணியாற்றும் அனுபவம் திரு.ஆர்.எம்.என். அவர்களுக்கு இயல்பாகவே கிடைத்தது. இச் சந்தர்ப்பங்களே பின்னாளில் அவர் பல்வேறு சமூக,பொதுப் பணிகளைச் சிறப்பாக ஆற்றுதற்கு ஏற்ற தலைமைத்துவ இயல்புகளைத் தந்தது.

புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் நிதிவளமும் கல்விக்கான உதவிகளும்

எந்த அமைப்பும் தனது நோக்கத்தை அடைய வேண்டுமாயின் நிதிவளம் முக்கியமானதாகும். புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் நிதிவளம் பல்வேறு உபாய வழிமுறைகளினூடக கட்டியெழுப்பப்பட்டது. நன்கொடைப் பங்கு மூலதனம்,ஞாபகார்த்த புலமைப் பரிசில்கள்,திருமணநாள் நினைவுப்பரிசில் நிதி, பிறந்த நாள் நினைவுப் பரிசில்கள், தனிநபர் புலமைப்பரிசில் நிதி, பரிசளிப்பு நிதி, காணி கட்டிடநிதி என்பனவாகும். இந்த நிதியைக்கொண்டு இதுவரை இவ்வமைப்பு ரூபா 80 இலட்சம் வரையிலான சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வமைப்பினால் சிறப்பாக மேற்கொள்ளப்படும் சேவைகளில் ஒன்று கல்விக்கான புலமைப்பரிசில்களாகும். வறிய குடும்பங்களுக்கான உதவி, சுனாமியால் பாதிக்கப் பட்டோருக்கான உதவி, கல்வி நிறுவனங்களுக்கான உதவிகள் என்பன இவற்றுள் குறிப்பிடத் தக்கனவாகும்.

இங்கு சமூக நடவடிக்கைகள் பலவற்றுள் கல்விமேம்பாட்டுக்கே முக்கியமளிப்பதைக் காணலாம். தாழ்வுற்ற யாவரும் தமது கல்விமேம்பாட்டை அதிகரிப்பதன் மூலம் சமூகத்தின் சமஅந்தஸ்து நிலையை இலகுவாக அடையலாம் என்பது அனுபவக்கண்கூடு.

திரு.ஆர்.எம்.என்.அவர்களது அனைவரும் பின்பற்றக்கூடிய வாழ்வு முறை

திரு.ஆர்.எம்.என். அவர்களது நாளாந்த வாழ்வுமுறையும் மற்றவர்களால் பின்பற்றக் கூடியதொன்றாகும். யான் பொல்கொல்லையில் பயிற்சிபெற்ற காலந்தொட்டே திரு ஆர் எம் என் அவர்கள் யோகாசனப்பயிற்சி, இறைவழிபாடு என்பவற்றில் கவனம் செலுத்தி வருவதை அறிவேன். பொல்கொல்லை விரிவுரைக் காலத்தில் சரஸ்வதி பூசைகளை மாற்று இனத்தவரும் பங்குகொள்ளும் வகையில் தொடர்ச்சியாக நடாத்தி வந்தார். சைவபோசனம், இறைவழிபாடு, உறவினர் நலனோம்பல், விருந்தோம்பல் பிறர்க்கின்னா செய்யாமை என்பவற்றில் அன்றுதொடக்கம் ஈடுபாடுகொண்டவராக விளங்குகின்றார். அவருக்கேற்ப அவர் துணைவியாரும் "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்பதற்கொப்ப அவரின் செயற்பாடுகளில் உற்ற துணையாய் இருக்கின்றார். மனிதன் அமைதியாக இருந்து அறவழியில் சிந்திக்கும் போது தான் அயலவர், சமூகம் என்பனபற்றி சிந்திக்க முடியும். மரியாதை அடக்கம் மனவெழுச்சிகளோடு பிறரைப் பற்றி சிந்திக்க முடியுமானவர்களே உண்மையில் அறநெறி படைத்தோர் ஆவர். பிறருக்கு நன்மை செய்வதன் ஊடாக அவர்கள் இன்பமடைவர். இதனையே பொய்யா மொழிப்புலவர் அறத்தால் வருவதே இன்பம் என்றார் போலும்.

இவரது மூன்று புதல்வர்கள் வெளிநாடுகளில் பணிபுரிவதுடன் ஒருவர் வீரகேசரி விளம்பரப் பிரிவில் கடமையாற்றுகின்றார். அவரது புதல்வர்களும் உறவினர்களும் அவரது சமூகத் தொண்டிற்கு பக்கபலமாக நின்று உதவுவதைக் காணமுடிகின்றது.

ஜனநாயக மரபுகளுக்கமையவும் கூட்டுறவுத் தார்ப்பரியங்களுக்கமையவும் சமய நெறிமுறையுடனும் வாழும் திரு.ஆர்.எம்.என். அவர்கள் தான் அமைத்த சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினதும், புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் செயற்பாடுகளைத் தன் சமூகம் மட்டுமல்ல பாதிக்கப்பட்ட பலதரப்பட்ட தமிழ் மக்களும் பயன்படும் வகையில் வழிநடாத்திச் செல்வதை இவ்வமைப்பின் செயற்பாடுகளை, அறிக்கைகளை ஆழமாக ஆய்ந்த போது அவதானிக்க முடிந்தது. திரு திரு.ஆர்.எம்.என். அவர்களின் வாழ்வும் பணியும் மனிதகுலத்துக்கு அவரை ஓர் சுயநலமற்ற சிந்தனையாளராக, நல்வழிகாட்டும் ஆசானாகத் தனது சமூகத்தின் கல்விமேம்பாட்டில், அக்கறைகாட்டும் எழுச்சிக் கருத்துக்களைப் பரப்பும் தந்தையாகக் காண்பிக்கின்றது. கல்வி மேம்பாட்டுக்கும் சமூக மேம்பாட்டுக்கும் அவர் ஆற்றிவரும் பணிகள் என்றும் நெஞ்சை விட்டகலாதவை. தனது 75ஆம் அகவையிலும் சுறுசுறுப்பாகச் சமூகப்பணி செய்துவரும் அவர்கள் மேலும் பல்லாண்டு மக்கள் சமூகத்திற்குப் பயன்பட இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

MR.R.M.NAGALINGAM
THE CO-OPERATIVE EDUCATOR

Dr.K.Paramothayan

The year 1968 proved to be a watershed in my life and educational career, for in that year I took over the Principalship of the School of Co-operation, Jaffna at the invitation of the Northern Division Cooperative Federation.

What opened before me was an entirely new world, full of experiences quite unforeseen, at personal,local, national and even International levels. It meant that I could not have carried out my duties and immense responsibilities without the loyalty and able support of the staff both at the School and the Federation.

Outstanding among those who gave me their unstinted, support and cooperation were Mr. P. Govindasamy and Mr. R.M. Nagalingam, both of whom,I am glad to note, are still actively involved in Co-operative/ Community work. Whereas Mr. Govindsamy was helpful in areas of general administration and public relations, Mr. Nagalingam proved to be the linchpin of the School Curriculum with his special interest, - knowledge and expertise in the main areas of Accountancy, Auditing and Management.

Co-operative Education is in no way was different from General Education, which standing as it does on the bedrock of philosophical idealism, has inherited as its everlasting tenets certain perennial values irrespective of time, place and circumstances. Co-operative Education, like any other professional discipline, is but a specialized area within the whole ambit of Education. Co-operative Education in the broadest sense includes membership education and education and training relating to the entire operation of a co-operative enterprise. It imparts specific skills for specific purposes in an educational environment providing for the traditional or inherited values.

So what are these values of Education? Firstly, as a corollary of its very aim, Education must be based on Intellectual Values. Educational institutions are the most important agents of society to undertake the task of "socializing" the young, that is, for

inculcating the habitual thinking considered desirable by a particular society for the optimum benefit of all its citizens.

Secondly, there are Liberal Values. it simply means the capacity, to make value choices in a social setting. "Liberal Education" means education aimed at liberating the individual from the umpteen forces at work in society. These forces, for instance, may be the tyranny of the establishment, the links between power and privilege, social institutions like caste and class, or what is common place in most societies, bribery, corruption and nepotism.

Thirdly, there are Moral Values. All educational thinkers have had to grapple with the same basic conflict between human needs and the politico-economic and socio-cultural processes at work in society. There is often a real struggle between conservatism on the one hand, which yearns to cling on to the past at any cost, and opportunism on the other; which debilitates society by grabbing everything for itself, exploiting others and refusing to go beyond the present. Caught in this dilemma, people need the vision to look in the right direction, and Moral Education sheds that light for them to look beyond time and far into the future. As H.L. Elvin, former Director of the Institute of Education, University of London explained, the duty of the teacher is to transmit the moral norms to the young, so, that they master formal codes, if any and "interiorize" those values that become matters of conscience. "It would be a poor teacher", he observed, "who could not hold the attention of a normal class, due to leave school in one more year, in systematic discussion of a multitude of problems that they know concern them." (Vide Education and Contemporary Society, Watts, 1968)

In the fourth place, there are Community Values based on a shared sense of living in a common social setting. Community implications are just as important for individuals as well as society, now and in the future, as are intellectual, liberal and moral implications. I cannot put it more succinctly than my former and much respected teacher at the Institute of Education, University of London, Lionel Elvin (cited it the preceding paragraph), who observed in his matter-of-fact way: " The person who feels uncomfortable unless he can travel first-class on a train, even if it is almost empty, has lost a faculty. There are many things that as individuals we do not have in common with everybody we meet; but the man who, cannot share a sense of regret or delight in the things we do have in common, except within the confines of his own little group, is surely missing a real deal." (Ibid.)

Looking back more than a quarter of a century ago I have no doubt that Mr. Nagalingam met all the aforementioned criteria. He was indeed an exemplary teacher and trainer.I always felt that he had an inner directive that propelled him into action, with an almost selfless motive and a steely resolve that only the most dedicated person could have displayed; a constant drive to do his best under all circumstances, irrespective of obstacles, of which there were many, and consequences. Having gauged that he had great potential for advancement in many fields, especially with his high intelligence and devotion to duty, I did not hesitate to advise him of the vast opportunities that lay before him. I am so glad that he has excelled in his studies and advanced professional far beyond my expectations.

I will be failing in my duty if I fail to mention his part in the submissions and evidence we presented to the Royal Commission on the Co-operative Movement in Ceylon in 1968/69. He was in fact a tower of strength with deep knowledge of the Various aspects of the Co-operative Movement, in theory as in practice. He was an able and trust – worthy person on whom one could rely for sound advice and guidance; so much so that the Chairman of the Commission, Dr. Alexander Fraser Laidlaw, not only commended the memoranda and evidence, but also went on to make specific recommendations about the Jaffna School of Co-operation, within his overall review and recommendations relating to the future development of Co-operative Education. However, as it turned out, the Government that appointed the Commission as a result of sustained public demand, chose to ignore the Commission's Report for reasons of political expediency.

I very much hope that the community at large will remember the role played by Mr.Nagalingam to bring the Co-operative Movement closer to their lives. His talents and devotion to duty were such that they found the fullest scope for flowering in the Co-operative Movement, I wish to end this tribute to my erstwhile colleague with the final words of the Royal Commission, which as I found out later, were personally penned by Dr. Laidlaw himself. He wrote of the task: ahead as follows:-

"It will be a quiet revolution, but it must be radical in character and carried out as swiftly as possible. Its motto will be: Productivity, Efficiency and Social Justice. It will eliminate waste, stamp out corruption, and cut away the parasites that feed on legitimate trade and commerce. It will reward honest labour with a living wage and be fair to both producer and consumer. It will reduce the waste full use of manpower and put the stamp of honour and dignity on all whose toil, no matter how lowly, produces the goods and

services of the nation. It will have a low regard for any privilege or rank which does not spring from honest effort and personal worth."

He went on to warn, "Such a revolution will never be ushered in by those who are embedded in old ways, bureaucratic traditions and conformity to an establishment, but only by those who have caught the vision of an economic system whose foundation is human brotherhood and whose goal is the good and abundant life for all mankind."

(Report of the Royal Commission on the Co-operative Movement in Ceylon, Sessional Paper No. 11, 1970)

With the intellectual tradition very much alive and the rich and varied expertise of many expatriates anxious to return to their homeland when conditions become more favorable, an institution that would help the people appears to be one akin to the Scandinavian Folk High School: to nerve the people's arm and serve as a focal point for community education and development. I am speaking with some experience in this area, having worked at the Academy of Education in Slovakia recently-which is in many respects similar to the Scandinavian model.

With maturity, such an institution should be in a position to give the much needed impetus to initiate a fundamental revolution of ideas aimed at creating a truly egalitarian society through genuine community participation at all levels.

May I take this opportunity to wish Mr. Nagalingam many years of happy retirement and fruitful service to the community. May *God bless* him and his family and all his compatriots as they continue to work for the common good.

கூட்டுறவுத் துறையில்
ஆர். எம். என். அவர்களின் வகிபாகம்

திரு.சு.கணேசமூர்த்தி
ஓய்வுநிலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.

யாழ். மண்ணில் உள்ள பழம்பெருங்கிராமங்களிலே ஆன்மீகமும், கலைச்செழிப்பும், அரசியற் பெருமையும்,பொருளாதார வளமும் பெற்ற தலைசிறந்த கிராமம் மாவிட்டபுரம். கற்றோரும் சான்றோரும் செழுமையுடன் வாழ்ந்த மாவை எனவழைக்கப்படும் இக்கிராமம் வரலாற்றுப்பெருமை மிக்கது. இப்பெருமைசேர் கிராமத்தில் சாதாரண குடும்பமொன்றில் பிறந்த திரு. ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் தனது இனத்துக்கும் சமூகத்துக்கும், தான் தொழில் செய்த அமைப்புக்களுக்கும் பெருமை தேடித்தந்ததுடன் தற்போதும் சமூக மேன்மைக்காக உயிர்ப்புமிக்க சேவகனாக வாழ்ந்து வரும் பெரியாராகத் திகழ்கின்றார். அவரது 75ஆவது அகவைதனில் அவரது வாழ்வின் கல்விசார் அனுபவங்களையும் கூட்டுறவுக் கல்விக்கும் கூட்டுறவு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் அவர் ஆற்றிய தொண்டினையும் நினைவு கூர்வது கூட்டுறவு விழுமியங்களை நேசிக்கும் ஒவ்வொருவரது கடமையாகும்.

கல்விச் சான்றோன்

மனிதன் வாழ்வாங்கு வாழ நல்வழிகாட்டுவது கல்வி. இது கொடுக்கக்கொடுக்க குறைவற்ற செல்வமாகும். தன்னை வாழவைப்பது போல் பிறரையும் வாழ வைப்பது கல்வி. கல்விசார் மாட்சி மனிதர்களை சான்றோர் ஆக்குகின்றது. வகையறிந்து வாழவைப்பது கல்வி. கற்றவர்சொல்லுக்கு எங்கும் எப்போதும் பெருமையுண்டு. கற்றறிந்த சமூகம் அறிவு சார் உலகத்தைத் தோற்றுவிக்கின்றது. அறிவு இன்று தகவல் என பெருமை பெற்று இவ்வுலகமும் இன்று தகவல் உலகம் என்றே அழைக்கப்படுகின்றது. இவ் அருங்கருத்துக்களுக்கொப்ப திரு. ஆர்.எம்.என். அவர்களின் வாழ்வு அமைந்தது. வறுமையான குடும்பத்தில் பிறந்தாலும் கல்வியின் அவசியத்தை அவரின் பெற்றோர் நன்கறிந்திருந்தனர். தம் தனையன் நன்கு படித்துச் சிறப்புடன் வாழவேண்டும். தனக்கும் குடும்பத்துக்கும் தன் சமூகத்துக்கும் மட்டுமன்றித் தமிழ் இனத்துக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பது தாய் தந்தையரின் கனவாக இருந்திருக்க வேண்டும். அவர்களின் கனவை நனவாக்குவதுபோல் திரு. ஆர்.எம்.என். அவர்கள் இளமைக்காலந்தொட்டு கல்வியில் மிக அக்கறையுடன் ஈடுபட்ட ஒருவராவர்.

கூட்டுறவுக்கல்வி என்பது ஒரு விசேடமான வணிகம் சார் கல்வியாகும். சட்டம், பொருளியல். கணக்கியல், முகாமை, கணக்காய்வு, வணிகவியல், சமூகவியல், கூட்டுறவு ஆகிய பாடங்களில் வல்லமையுள்ளோரே கூட்டுறவுக் கல்வி விரிவுரைகளை ஆற்ற முடியும்.வெறுமனே புத்தகங்களுடன் மட்டும் அமையாது அன்றாட கடமைக்குகந்த அனுபவங்களைப் பயிற்சியாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பு கூட்டுறவுக்

கல்லூரி விரிவுரையாளருக்குரியதாகும். இதற்கு கூட்டுறவுத் தொழில் சார் அறிவு மிக முக்கியமாகும். இவ்வகையில் திரு. ஆர்.எம்.என்.அவர்கள் கூட்டுறவில் நீண்ட அனுபவங்களைப் பெற்றிருந்தார்.

இரு தசாப்த கூட்டுறவுத் திணைக்கள சேவை

1970இல் யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரியில் உயர்பிரிவு கூட்டுறவுப் பயிற்சி நெறியின் போதும் 1971இல் பட்டதாரி பயிற்சித் திட்ட கூட்டுறவுப்பயிற்சி நெறியின் போதும் 1973, 1976இல் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான 1ஆவது, 2ஆவது பயிற்சி நெறியின் போதும் எனக்கு கணக்கியல், கணக்காய்வு, முகாமையியல் ஆகிய பாடங்களுக்கு ஆசானாக இருந்து கற்பித்த வகையில் ஆர்.எம்.என். அவர்கள் கூட்டுறவுக் கல்விக்கும் கூட்டுறவு அமைப்புக்களுக்கும் ஆற்றிய சேவைகளைத் தற்போது மதிப்பீடு செய்து கொள்வது கூட்டுறவாளர்களுக்கும் கூட்டுறவு சார் மாணவர்களுக்கும் ஒரு உந்துசக்தியாக இருக்குமென நம்புகின்றேன்.

கூட்டுறவுத் திணைக்களத்தில் 1960இல் கூட்டுறவுப் பரிசோதகராக இணைந்து கொண்ட அவர் இத் திணைக்களத்தை விட்டு வேறு உயர் பதவி பெற்றுச் சென்ற 1980 வரையிலான இருபதாண்டு காலப்பகுதியில் அவர் கூட்டுறவுக்கு ஆற்றிய சேவையினை வரலாற்றுக் கட்டங்களாக விளங்கிக் கொள்வதற்கு ஏதுவாக அக்கால கூட்டுறவு இயக்கத்தின் பின்னணியை ஓரளவாவது தெரிந்து கொள்வது அவசியம்.

60களில் நாடு பூராவும் சிறிய பருமன் கொண்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வரையறுக்கப்பட்ட வளங்களோடு இயங்கி வந்தன. இந்நிலையில் 60களின் பிற்பகுதியில் இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தின் செயற்பாடுகளை ஆய்வு செய்து விதப்புரை செய்வதற்கு அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்ட லெயிட்லோ தலைமையிலான வேத்தியல் ஆணைக்குழுவின் 1968 அறிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ் விதப்புரைகளின்படி 1970இல் ஆட்சி அதிகாரத்துக்கு வந்திருந்த SLFP இடதுசாரிக் கூட்டணி அரசாங்கம் கூட்டுறவு அமைப்புக்களைப் புனரமைப்புச் செய்து இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதார அபிவிருத்தியில் கூட்டுறவை ஈடுபடுத்த முன்வந்தது. நாட்டின் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட ஏனைய கூட்டுறவுச் சங்கங்களையும் புனரமைத்துக் கொள்வதற்கு முன்னேற்பாடாக புதிய கூட்டுறவுச் சட்டத்தினை ஆக்கியது. இத்திட்டத்தின் கிழ் கூட்டுறவு இயக்கச் செயற்பாடுகளில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்காக பயிற்சித் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட பட்டதாரிகளில் ஒரு தொகையினரை கூட்டுறவுத் துறைக்குள் இணைத்து அவர்களுக்குப் பொருத்தமான கூட்டுறவுப் பயிற்சிகளை வழங்கிக் குறிப்பாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நிர்வாக மட்ட ஆளணியில் இணைத்துக் கொண்டது.

பலரும் பின்பற்றத் தக்க ஆரம்ப சேவை

இத்தகைய பின்னணிகள் நிலவிய காலப்பகுதியிற்தான் ஆர்.எம்.என் அவர்களுக்கு திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய்-தம்பலகாமம் பிரதேசத்தில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அப்பிரதேசங்களில் இயங்கி வந்த சிறிய பருமன் கொண்ட பல நோக்குக்

கூட்டுறவுச் சங்கங்களின் மேற்பார்வைக் கடமை இவருக்கு வழங்கப்பட்டது. அந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குத் தேவையான விவசாய உள்ளீடுகளை விநியோகம் செய்வதிலும் அங்கத்தவர்களுக்கு விவசாயக் கடன்களையும், முற்பணங்களையும் வழங்குவதிலும் பிரதான விளைபொருளான நெல்லை நெல் சந்தைப்படுத்தும் சபையின் முகவராக இருந்து அங்கத்தவர்களிடமிருந்து கொள்வனவு செய்வதிலும் நுகர்பொருட்களை விநியோகிப்பதிலும் ஈடுபட்டிருந்தன. அச்சங்கங்களை மேற்பார்வை செய்வதும் அச்சங்கங்களின் முறையான கணக்கு வைத்தல் முறைகளுக்கு ஆலோசனை வழங்குவதும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு சமூகமளித்து தேவையான முகாமைத்துவ சேவை வழங்குவதும் கூட்டுறவுப் பரிசோதகர் கடமையாக இருந்தது. ஆர்.எம்.என் அவர்கள் இச்சங்கங்களை வினைத்திறனுடன் வழிப்படுத்திய காரணத்தால் அப்போது மாவட்ட உதவி ஆணையாளராக இருந்த திரு.எம்.மதிபாலசிங்கம் அவர்களின் நம்பிக்கைக்குரிய உத்தியோகத்தரில் ஒருவராக மதிக்கப்பட்டார். பணியில் இணைந்து கொண்ட ஆரம்ப நாட்களிலேயே தனது மேலதிகாரியின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டதை தொடர்ந்து அவர்கள் மீது கூட்டுறவு அமைப்புக்களும் மேலதிகாரிகளும் நம்பிக்கை வைக்கவும் தனது பணியை விடாமுயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் தொடர அவருக்குத் தூண்டு கோலாகவும் அமைந்தது. எத்தகைய பணியாயிருப்பினும் தனது மேலதிகாரிகளின் நம்பிக்கைக்குரியவராக தனது கடமைகளை அர்ப்பணிப்புடன் செய்து வந்தால் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதற்கு ஆர்.எம்.என். அவர்களின் அணுகுமுறை ஒரு பாடமாக அமையும் என்பதை எல்லோரும் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

ஆரம்ப விரிவுரைப்பணி

திருகோணமலை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.எம்.மதிபாலசிங்கம் அவர்கள் ஆர்.எம்.என். அவர்களின் ஆற்றலில் நம்பிக்கை வைத்திருந்ததினாற்போலும் மூத்த கூட்டுறவுப் பரிசோதகர்கள் பலர் இருந்தும் திருகோணமலை மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரியால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர (சா/த) பயிற்சி நெறிக்கு இவரை கணக்குப் பதிவியல் பாடத்துக்கு விரிவுரையாளராக அமர்த்தினார்.

ஆர்.எம்.என் அவர்கள் தனக்குக் கொடுக்கப்பட்ட கடமைப் பொறுப்புக்களை திறம்பட செய்து முடிக்கும் ஆற்றலைக் கொண்டிருந்த காரணத்தினால் 1964இல் பிரியாவிடை வைபவத்தின் போது திருகோணமலை மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் "கூட்டுறவு இளவல்" என்ற பட்டத்தையும் அந்த நிகழ்வில் பங்கு கொண்டிருந்த கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. ஆசீர்வாதம் அவர்கள் "கர்மயோகி" என்ற பட்டத்தையும் வழங்கி அவரது சேவையைக் கௌரவித்து பாராட்டியிருந்தார்கள். அத்துடன் திருகோணமலை மாவட்டக் கூட்டுறவுச் சமாச நிர்வாகமானது கூட்டுறவுக் கல்லூரியின் 7ஆவது பயிற்சி முடிவுகள் வெளிவந்த போது இலங்கையின் தமிழ்ப்பகுதியில் முதலாவது இடத்தை திருகோணமலை கூட்டுறவுக் கல்லூரி ஈட்டிக் கொண்டதற்கு காரணகர்த்தாக்களில் ஒருவராக இருந்துள்ள ஆர்.எம்.என் அவர்களின் போதனை ஆற்றலை பாராட்டியிருந்தது.

சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கான விரிவுரைப்பணி

1965இல் ஆர்.எம்.என் அவர்கள் யாழ் மாவட்டத்திற்கு மாற்றப்பட்ட வேளை முதன்முதலாக அப்போது யாழ் கூட்டுறவுக் கல்லூரியால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர்பிரிவு பயிற்சி நெறிக்கு கணக்கியல், கணக்காய்வு, முகாமையியல் ஆகிய பாடங்களுக்கான விரிவுரையாளராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.எம்.மதிபாலசிங்கம் அவர்களது விருப்பத்தின் பேரில் நியமனம் செய்யப்பட்டார். வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றி வரும் உயர் முகாமை மட்ட பணியாளர்கள் பயிற்சி பெற வசதி செய்து கொடுக்கப்பட்ட ஒரே கூட்டுறவுக் கல்லூரியாக அப்போது இக்கல்லூரி விளங்கியது.

60களின் பிற்பகுதியில் யாழ் கூட்டுறவுக் கல்லூரியின் அதிபராகவும் பகுதிநேர விரிவுரையாளராகவும் இருந்துள்ளவர்களின் தகைமைகளையும் அனுபவங்களையும் அறிந்து கொண்டால் அந்த விரிவுரையாளர் குழாமில் ஆர்.எம்.என் அவர்களின் வகிபாகம் என்னவாக இருந்திருக்கும் என்பதை அறிந்து கொள்ள முடியும். அதிபராக சென்ஜோன்ஸ் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியராக இருந்தவரான திரு.க.பரமோதயன் அவர்களும் அரசியல் என்ற பாடத்தினை போதிப்பதற்கு வருகை தந்திருந்த கல்வியாளர் என மதிக்கப்பட்ட ஓய்வு பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரும், இடதுசாரி அரசியல் பிரமுகராக இருந்தவருமான அமரர் திரு. கன்டி பேரின்பநாயகம் அவர்களும், ஓய்வு பெற்ற ஆசிரியரும் பின்நாளில் யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவராக பதவி வகித்த திரு.சி.கந்தையா அவர்களும், ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இருந்த திரு. சின்னத்தம்பி அவர்களும், மூத்த கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இருந்து ஓய்வு பெற்ற திரு.R.C.S. குக் அவர்களும், யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையின் நிர்வாகச் செயலாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றிருந்த திரு. செல்வரத்தினம் அவர்களும், தலைமை அலுவலகக் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. கோவிந்தசாமி அவர்களும் இணைந்து கொண்ட விரிவுரையாளர் குழாத்துடன் இணைந்து செயலாற்றக்கூடிய ஆற்றல் உள்ள இளம் விரிவுரையாளராக இவர் விளங்கினார். நன்கு முதிர்ந்த ஆசிரியர் குழாமுடன் இவர் பணியாற்றக் கிடைத்தமைக்குக் காரணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் இவர்மேல்கொண்ட நம்பிக்கையும் 1962 பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரியில் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான முதலாவது பரீட்சையில் அதிகூடுதல் புள்ளிகளுடன் அதிதிறமைச் சித்தியினைப் பெற்றுக்கொண்டதுடன், திருகோணமலை கூட்டுறவுக் கல்லூரிப் போதனை ஆற்றல்கள் என்பன ஏதுவாக அமைந்தனவெனலாம்.

தன்நலன் கருதாச் கல்விச் சேவை

1970 ஜனவரியில் யாழ் கூட்டுறவுக் கல்லூரியில் நான் இணைந்து உயர்பிரிவு பயிற்சி நெறியினைப் பயின்ற வகையில் அக்காலத்து சூழ்நிலைகளைப் பற்றி நன்கு அறிவேன். கூட்டுறவுக் கல்லூரி குருநகரில் அமைந்திருந்தது. பயிற்சியாளர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து வருகை தந்திருந்தனர். கூட்டுறவுக் கல்லூரியானது அப்போது இருந்த சூழல், சுற்றாடல் கற்பதற்கு உகந்ததாக இருக்கவில்லை. போக்குவரத்து வசதிகள்

மிகக்குறைவு. யாழ் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து ஒழுங்கான பஸ் போக்குவரத்து வசதியின்மையினால், யாழ் புகையிரத நிலையத்திலிருந்து கிட்டத்தட்ட 2 கிலோமீற்றர் தொலைவில் இருந்த கூட்டுறவுக் கல்லூரிக்கு நடந்தே செல்லவேண்டிய நிலை இருந்தது. அப்படியான சூழ்நிலையில் ஆர்.எம்.என். அவர்கள் தனது இருப்பிடமான மாவிட்டபுரத்திலிருந்து தெல்லிப்பளையில் புகையிரதத்தில் ஏறி பிரயாணம் செய்து தனது தோளில் கோவைகள் அடங்கிய பை ஒன்றைக் கொழுவியபடி நடையிற்தான் வருவார். நானும் மல்லாகத்தில் புகையிரதத்தில் ஏறி ஆர்.எம்.என் அவர்களுடன் பிரயாணத்தை மேற்கொண்டு கால்நடையாக உரிய நேரத்துக்கு வகுப்புக்குச் சென்றடைவது வழமையாக இருந்தது. எங்களைப் போன்றே பல பயிற்சியாளர்கள் மூன்று விதமான பயிற்சிநெறிகளுக்கும் வந்து போவது வழமையாக இருந்தது. இப்போதைய சூழ்நிலையில் அன்றைய பிரயாண வசதியீனங்கள் எப்படி இருந்தன என்பதை அறிய இவ் உதாரணம் எடுத்துக்காட்டு. இங்கு ஏன் இதை நினைவூட்ட விரும்புகின்றேன் என்றால் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் தனிப்பட்டவர்களும் பொது நிறுவனங்களும் அக்காலகட்டத்தில் தங்களது கடின உழைப்பினாலும் விடாமுயற்சியினாலும் தன்னம்பிக்கையுடனும் தங்கள் இலக்கை அடைந்துள்ளதை அறிந்து கொள்வதற்கேயாகும். இதை இன்றைய சகல மாணவ ஆசிரிய சமூகத்தினர் அறிந்து கொள்வது அவசியம்.

கூட்டுறவு ஓர் தொழில் சார் கல்வி

முறைசார் பொதுக்கல்வியைப் போதிப்பதற்கும், கற்பதற்கும் இத்தகைய கூட்டுறவுக் கல்வியைப் போதிப்பதற்கும், கற்பதுக்குமிடையே பாரிய வேறுபாடுகள் உண்டு. பொதுக்கல்வியானது ஒரு சீரான வயதுள்ள மாணவர்களுக்கு கல்வி போதிப்பதை குறிக்கும். கூட்டுறவுக் கல்விப் போதனையானது பல்வேறு வயது வித்தியாசமும், பல்வேறு தகைமை வேறுபாடுகளும் கொண்ட பயிற்சியாளர்களுக்கு போதிப்பதாகும். இது இலகுவான விடயமல்ல. போதனாசிரியர்களிடம் தனிப்பட்ட திறமைகளும் ஆற்றல் அனுபவங்களும் இல்லாவிட்டால் பயிற்சியாளர்களை ஒழுங்குபடுத்தி பாடத்திட்டங்களை உரிய கால எல்லைக்குள் நிறைவுறுத்தி பரீட்சைக்கு அவர்களைத் தயார்படுத்த முடியாது. வகுப்பறைக் கல்வியின் போது அவதானிக்கப்பட்ட படி ஆர்.எம்.என். அவர்கள் வகுப்பறை போதனையின் போது தன்னால் எடுத்தாளப்படும் பாடப்பரப்பினை ஏற்கனவே தயார்படுத்தி விட்டுத்தான் வகுப்பறையில் போதனையை ஆரம்பிக்கும் பழக்கம் அவரிடம் இருந்து வந்துள்ளது. போதனைக்கான குறிப்புக்களை கள ஆய்வுகளை மேற்கொண்டும் நூலகத்தினைப் பயன்படுத்தியும் தயாரிப்பது அவரது வழக்கமாக இருந்தது. எந்தப்பாடமாக இருந்தாலும் வீட்டு வேலைக்காக வினாக்களை தந்து அடுத்தநாள் விடைகளைப் பயிற்சியாளர்களிடம் பெற்று சரிபிழை பார்க்கும் பழக்கம் அவரிடம் இருந்ததால் பயிற்சியாளர்கள் அவரால் கற்பிக்கப்பட்ட பாடங்களை பரீட்சைக்கு தயார்படுத்த இலகுவாக இருந்தது. அத்துடன் தன்னால் போதிக்கப்பட்ட பாடப்பரப்புக்களை பயிற்சியாளர் எந்தளவுக்கு விளங்கிக்கொண்டனர் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும் அவருக்கு இலகுவாக இருந்துள்ளது. பயிற்சியாளர்களாகிய எங்களுக்கு வீட்டு வேலை தந்துவிடும் நடைமுறை அப்பொழுது ஒரு கஷ்டமான வேலையாக காணப்பட்ட போதும் பின்நாட்களில் எங்கள் உத்தியோகக் கடமைகளின் போது கணக்கியல், கணக்காய்வு, முகாமை விடயங்களில் எங்களை ஆளுமை கொண்டவர்களாக வளர்த்துக்கொள்ள இலகுவாக இருந்துள்ளதிலிருந்து அவரது போதனை அணுகுமுறையை உணர முடிந்தது.

பட்டதாரிகள் பயிற்சித் திட்டப் பணிகள்

1971இல் பட்டதாரிப் பயிற்சித்திட்டத்தின் கீழ் கூட்டுறவுத் துறைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பயிற்சியாளர் அணி ஒவ்வொன்றும் கிட்டத்தட்ட 30 பேரைக் கொண்டதும் இரண்டரை மாத கால இடைவெளிகளைக் கொண்டதுமான நான்கு பயிற்சியாளர் அணிக்கு யாழ் கூட்டுறவுக் கல்லூரியில் பயிற்சியளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி நெறிக்கான பாடத்திட்டங்களை வரைவு செய்தது உட்பட கணக்கியல், கணக்காய்வு, முகாமையியல் ஆகிய பாடங்களுக்கான விரிவுரைப் பொறுப்பையும் ஆர்.எம்.என் அவர்களிடம் அதிபர் ஒப்படைத்திருந்தார். அந்தப் பயிற்சிநெறியைச் சரிவர நிறைவுறுத்தியது மட்டுமல்லாமல் ஒவ்வொரு அணிப்பயிற்சி முடிவிலும் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கை கல்வி சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளை பொறுப்பெடுத்து நடத்தியவரும் ஆர்.எம்.என் அவர்களே. இந்தக் கூட்டுறவுப் பயிற்சி நெறியானது பட்டதாரிகளைக் கூட்டுறவு அமைப்புகளில் ஈடுபாடு கொள்ள ஊக்குவித்தது.

காலத்துக்குக்காலம் கூட்டுறவுச் சங்கங்களில் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் களஆய்வுகளை மேற்கொண்டும் கூட்டுறவுக் கல்லூரியும் கூட்டுறவுத் திணைக்களமும் இணைந்து பல்வேறு பயிற்சிப் பட்டறைகளை கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு நடாத்துவதற்கும் ஆர்.எம்.என் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாக அமைந்தது.

தேசிய மட்டக் கூட்டுறவுக் கல்லூரியில் கல்விப்பணி

பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரிக்கு ஆர்.எம்.என். அவர்கள் 1972இல் மாற்றம் பெற்று விரிவுரையாளர் பதவி வழங்கப்பட்டது. முதுநிலை உத்தியோகத்தர்களுக்கு இளநிலை உத்தியோகத்தரான ஆர்.எம்.என் அவர்கள் போதனை மேற்கொள்வதைக் கூட்டுறவு உத்தியோகத்தருக்கான தொழிற்சங்கம் தனது அதிருப்தியைத் தெரிவித்திருந்த போதும் அப்போது பதில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகப் பதவி வகித்து கூட்டுறவுக் கல்விக்குப் பொறுப்பாயிருந்த திரு.R.B. இராஜகுரு அவர்கள் ஆர்.எம்.என் அவர்களின் போதனை ஆற்றலை நன்கறிந்தமையினாற் போலும் ஆட்சேபனை எதனையும் பொருட்படுத்தாது மாற்றத்துக்கு அனுமதி வழங்கியிருந்தார்.

பொல்கொல்லைக் கூட்டுறவுக் கல்லூரியில் கணக்கியல், முகாமையியல், கணக்காய்வு ஆகிய பாடங்களைப் போதிப்பதற்கும் பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்குபடுத்தி நடாத்துவதற்கும் இவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான 1ஆவது, 2ஆவது பயிற்சி நெறிகள் வதிவிட பயிற்சி நெறிகளாக இருந்த காரணத்தினால் வகுப்பறைப் போதனை தவிர்ந்த நேரங்களில் எங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் ஏற்படும்போதெல்லாம் ஆர்.எம்.என் அவர்களது வதிவிட அறைக்குச் சென்று அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளுவது வழமையாக இருந்தது.

விரிவுரைச் சிறப்பு

விரிவுரைப் பணிகள் சிறப்பாக அமைய வேண்டுமானால் தொடர்ந்து படிக்கவேண்டும். நூல்களில் காணப்பெறும் விடயங்கள் மற்றும் கோட்பாடுகளை வெறுமனே விரிவுரைகளில்

எடுத்தாளுவது பொருத்தமானதல்ல. அவை எந்த வகையிலாவது நாளாந்த உத்தியோகச் செயற்பாடுகளுக்குப் பொருந்தும் வகையிலும் அமைதல் வேண்டும். திரு.ஆர்.எம்.என். தனது பயிற்சிப் பணிகளின் போது கைக்கொண்ட பின்வரும் அம்சங்கள் மற்றும் உத்திகள் உயர்கல்விப் பணிகளில் ஈடுபட்டிருப்போர்க்கு மிகவும் பயன்தருவனவாகும்.

- நேரம் தவறாமை
- கற்பிக்கும் விடயங்களில் தெளிவான அறிவு
- தொடர்ந்து கற்கும் ஆற்றல்
- தெளிவாக விளக்கும் ஆற்றல்
- சிறந்த மொழிநடை
- பயில்வோரைக் கவரும் நடத்தைத் தன்மை
- பயில்வோர்களின் தனிப்பட்ட வசதிகளை கவனித்து பயில்வதற்கான சூழலை ஏற்படுத்தல்
- தமது கல்வித் தகைமையை வளர்த்துக் கொள்ளல்
- கற்றல் உபகரணங்களைப் பயன்படுத்தல்
- நூலக ஆர்வமும் பயற்சியாளருக்கு அவ்வனுபவத்தை வளர்த்தலும்
- பயிற்சியறையைக் கட்டுப்பாடாக வைத்திருத்தல்
- வளரும் புதிய நுட்பங்களை கற்றல்; கண்டறிதல்; அவற்றைப் பொருத்தமான முறையில் கற்பித்தல்; செய்யும் தொழிலுக்கு பொருத்தமாக்குதல்
- கண்ணியமான நிர்வாகத் தொடர்புகளைப் பேணுதல்

இவ்வனைத்து உத்திகளையும் திரு.ஆர்.எம்.என்.அவர்கள் தனது விரிவுரைகளின் போது சிறந்த முறையில் கைக்கொண்டார்.

வினைத்திறன் மிக்க போதனாசிரியர்களின் பண்புகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை போட்டர் (porter) மற்றும் புறோ.்.பி (Brophy) ஆகிய எழுத்தாளர்கள் பின்வருமாறு வரையறுத்துக் குறிப்பிட்டுள்ளனர்.

1. போதனா இலக்குகள் குறிக்கோள்களை விளங்கிக் கொள்வர்
2. இக் குறிக்கோள்களுக்கு ஏற்றதாக போதனையை வடிவமைப்பர்
3. குறிக்கோள்களை மாணவருக்கு விளக்குவர்.
4. ஆக்கபூர்வமான சிந்தனையாளர்களாகவும் அறிவை கற்றுக்கொள்வோராகவும் மாணவரை முன்னேற்றுவதற்காக கற்கும் சூழலையும் உருவாக்கி பல்வேறு வகையான போதனை அணுகுமுறைகளையும் பயன்படுத்துவர்
5. பொருத்தமான வகையில் வெளிப்படுத்துவர்
6. தம்மைத்தாமே மதிப்பீடு செய்வர்.

மேற்குறிப்பிட்ட போதனாசிரியர்களுக்கான பண்புகளில் பெரும்பங்கு ஆர்.எம்.என் அவர்களின் போதனைகளில் இருந்துள்ளது என்பதை இதுவரை ஆராய்ந்த தரவுகளிலிருந்து அறிய முடிகிறது.

பண்பாட்டுப் போதனையாளர்

போதனை விடயங்கள் மட்டுமல்லாமல் பயிற்சிக் காலத்தில் சரஸ்வதிபூசை, தைப்பொங்கல் போன்ற சமயப் பண்டிகைகளையும் சமய வழிபாட்டுக்கென ஒதுக்கீடு செய்து தரப்பட்டிருந்த மண்டபத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை பயிற்சியாளர்களுடன் இணைந்து முன்னின்று நடத்தியவர்கள் ஆர்.எம்.என் அவர்களுடன் வெள்ளிக்கிழமைகளில் தவறாது கூட்டுப்பிரார்த்தனை களையும் பஜனை வழிபாடுகளையும் இணைந்து நடாத்துவோம். ஆர்.எம்.என் அவர்கள் தனது வதிவிட அறையில் யோகாசனம், தியானம், தாவர உணவுப் பழக்கவழக்கங்கள் என்பவற்றை பின்பற்றியமையே அவரது உடல், உள வளத்துக்குக் காரணமாக இருந்துள்ளது என்பதை தற்போது எங்களால் உணர முடிகிறது.

களநிலை அபிவிருத்திப் பணிகள்

வகுப்பறைப் போதனை விடயங்களுக்கு அப்பால் ஆர்.எம்.என் அவர்களது கடமைகள் பின்வருமாறு அமைந்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

1. ஆர்.எம்.என் அவர்களின் கூட்டுறவுக் கல்விச் சேவை சிறப்பாக அமைவதற்கு அவர் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் சட்டப்படியான கணக்காய்வாளராகவும் கடமையாற்றிய அனுபவம் பெருந்துணையாக அமைந்தது. அத்துடன் திருகோணமலைக் கூட்டுறவு வங்கியிலும் யாழ்பாணக் கூட்டுறவு வங்கியிலும் திணைக்களத்தின் சார்பில் உள்ளகக் கணக்காய்வாளராகக் கடமையாற்றிப் பெற்றுக்கொண்ட அனுபவமும் அதற்கு மேலும் பங்களிப்புச் செய்தது.

2. 70களின் பிற்பகுதியில் பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை பாரிய வளர்ச்சி கண்டிருந்த அந்தக்காலகட்டத்தில் அச்சங்கங்களுக்கு நிதிமுகாமைத்துவம் தொடர்பான ஆலோசனை தேவைப்பட்ட போது அதனை வழங்கி அச்சங்கங்களை வழிப்படுத்திய பெருமையும் ஆர்.எம்.என் அவர்களுக்குண்டு.

3. இலங்கைக் கூட்டுறவு இயக்கத்தினை ஆய்வு செய்து விதப்புரையை சமர்ப்பிக்கவென அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட லெயிட்லோ தலைமையிலான வேத்தியல் ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் தனது விசாரணை அமர்வை 1968ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தவேளை யாழ் கூட்டுறவுக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் அப்போது அதன் தலைவராக பதவி வகித்த ஆர்.எம்.என் அவர்களது தலைமையில் அதன் செயலாளர் திரு.எம்.நடராஜா, அதிபர். திரு.K.பரமோதயன், வருகை விரிவுரையாளர் திரு.கன்டி பேரின்பநாயகம், விரிவுரையாளர். M.சின்னத்தம்பி ஆகியோர் சகிதம் சமூகமளித்து சாட்சியமளித்திருந்தமை யாழ் கூட்டுறவுக் கல்லூரி வரலாற்றில் முக்கிய விடயமொன்றாகும்.

4. அதிபர் திரு.K.பரமோதயன் அவர்களை தலைவராகவும், ஆர்.எம்.என் அவர்களை, செயலாளராகவும், மற்றும் திரு.கணபதிப்பிள்ளை அவர்களை உறுப்பினராகவும் கொண்டு யாழ் கூட்டுறவுக் கல்லூரியில் போதனாசிரியராக இருந்த காலகட்டத்தில் காலஞ்சென்ற

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு.அ.மதிபாலசிங்கம் அவர்களின் நினைவாக நூலகநிதியக் குழுவொன்று ஆரம்பிக்கப்பட்டது. அதன் பெறுபேறாக திரட்டப்பட்ட புத்தகங்களை இன்றும் யாழ் மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரியின் நூலகப்பிரிவில் காணலாம்.

5. 1980இல் தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு.V.S. சிவஞானம் அவர்கள் எழுதி வெளியிட்ட கூட்டுறவுக்கோர் அறிமுகம் என்ற நூல் ஆக்கத்துக்கு வேண்டிய ஆலோசனை உதவிகளை வழங்கியிருந்ததுடன் அந்தப் புத்தகத்தை 1998இல் முகாமைத்துவ ஆலோசகர் திரு.சி.கோணேஸ்வரன் அவர்கள் மீளாய்வு செய்து தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் வெளியிட்ட வேளை அதற்கான ஆலோசனை உதவிகளை வழங்கியுமிருந்தார்.

6. வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினால் வெளியிடப்பட்ட "ஐக்கிய தீபம்" சஞ்சிகையில் முகாமைக் கணக்கியல், நிதி முகாமைத்துவம் தொடர்பான கட்டுரைகளை வழங்கியிருந்தார்.

7. தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் நடாத்தப்பட்ட கூட்டுறவாளர்களை கௌரவிக்கும் விழாவில் கூட்டுறவுப் பெரியாளர்களாக தெரிவுசெய்யப்பட்ட ஐவர்களில் திரு ஆர்.எம்.என் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு பாராட்டுதலைப் பெற்றிருந்தார்.

பெற்ற உயர்நிலைப் பயிற்சிகளும் உத்தியோக உயர்வும்

திரு.ஆர்.எம்.என். 1973இல் பொல்கொல்லைக் கூட்டுறவுக்கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் இங்கிலாந்து லபர்ரோ தொழில் நுட்பப்பல்கலைக்கழகத்துடன் இணைந்த இங்கிலாந்து சர்வதேச கூட்டுறவுக்கல்லூரியில் பயிற்சி பெறுவதற்கான ஓராண்டு புலமைப்பரிசில் வாய்ப்புக்கிட்டியது. கொழும்புத் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி முகாமை டிப்ளோமா எனும் இப்பயிற்சி கூட்டுறவுத்துறையில் சிறந்த உத்தியோகத்தர்களுக்குக் குறிப்பாகக் கூட்டுறவுப் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு கிடைக்கும் அரிய சந்தர்ப்பமாகும். ஓராண்டு இடம்பெற்ற இப் பயிற்சியில் முதலாம் இடத்தில் இவர் சித்தி பெற்றார். பல்வேறு நாடுகளைச்சேர்ந்த பயிற்சியாளர்களுடன் இடம் பெற்ற தேர்வுகளின் போது முதலாம் இடத்தில் இவர் விளங்கியமை இலங்கை கூட்டுறவாளர்களுக்கும் இலங்கைக்கும் பெருமைசேர்க்கும் விடயமாக அந்நாளில் பேசப்பட்டது. இவர் இப்பயிற்சிக்காக சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரை **"பின்தங்கிய நாடுகளின் கூட்டுறவு முகாமைத்துறை வளர்ச்சி"** எனும் தலைப்பில் அமைந்தது. அதுமட்டுமல்லாமல் அந்தப் பயிற்சிக் காலத்தின் போது **"விவசாயக் கூட்டுறவு"** என்ற அஸ்பி பரிசிலுக்கான கட்டுரைப் போட்டியில் சிறந்ததும் உயர்ந்த பாராட்டுக்குரியதும் "VERY GOOD AND HIGHLY COMMENDED" என்ற பாராட்டுதலையும், **மக்களை குடியமர்த்தல்** என்ற கட்டுரைப் போட்டியில் பங்கு கொண்டு இரண்டாவது இடத்துக்கான பரிசிலையும் பெற்றுக் கொண்டார்.

இப்பயிற்சி பல்வேறு வணிகப் பாடங்களுடன் கூட்டுறவுத்துறையை உள்ளடக்கியது. இப்பயிற்சி பெறுவோர் ஆங்கில மொழிப் புலமையைப் பெறுவதோடு வணிகம், முகாமை, ஆகியவற்றோடு கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய அறிவை அபரிதமாகப் பெறுவர். இத்தகைய

பயிற்சிகள் பெற்றதன் பின்னர் பலர் தமது பொருளாதார நலன்களையிட்டு இங்கிலாந்திலேயே தங்கிவிடுவர். ஆயினும் திரு.ஆர்எம்.என். தனது நேர்மை, கீழ்ப்படிவுத்தன்மை என்பவற்றை உறுதிப்படுத்தவும் தொடர்ந்து மக்கட்பணிபுரியும் ஆவலுடனும், குறித்த காலத்திற்குள்ளேயே நாடு திரும்பினார். இவ்வாறு உள்நாட்டில் இடம்பெற்ற மாவட்ட, தேசிய பரீட்சைகளிலும் பிரித்தானிய புலமைப்பரிசில் பயிற்சி நெறியின் பரீட்சையிலும் பெற்றுக்கொண்ட அதிதிறமைச் சித்திகளை அவதானிக்கும் போது ஆர்.எம்.என் அவர்கள் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அறியமுடியும்.

தனது இங்கிலாந்துப் புலமைப் பயிற்சியின் பின்னர் திரு ஆர்.எம்.என் அவர்களுக்கு உயர்கல்வியின் மேல் மேலும் நாட்டமேற்பட்டது. தன் சுய முயற்சியால் CIMA இறுதிப்பிரிவு வரை பூர்த்தி செய்த திரு ஆர்.எம்.என் அவர்களுக்கு வீடமைப்புத்துறை அமைச்சின் கீழ் வீடமைப்பு அதிகார சபையில் கணக்காளர் வாய்ப்புக் கிட்டியது. கூட்டுறவுத் திணைக்களத்தில் 20 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தபின் 1980 மே மாதத்தில் வீடமைப்பு அதிகார சபையில் கணக்காளராக பயணம் ஆரம்பித்த திரு ஆர்.எம்.என் அவ் அதிகாரசபையில் பல்வேறு பதவி உயர்வுகளைப் பெற்றதோடு இறுதியில் திட்டமிடல் கட்டுப்பாட்டுப் பகுதி தலைவராகப் பதவி வகித்து ஓய்வு பெற்றார்.

தான் வீடமைப்புத்துறையில் முக்கிய நிர்வாகப் பொறுப்புக்களில் ஈடுபட்டபோதும் கூட்டுறவுத்துறையின் பால் ஈர்க்கப்பட்டவராகவும் அதன்கொள்கைகளில் பற்றுள்ளவராகவும் திகழ்ந்தார் என்பதை வீடமைப்பு அமைச்சில் பணிபுரிந்த காலத்திலும் அவர் ஆற்றிய கூட்டுறவு பங்களிப்புகள் எடுத்துக்காட்டும்.

கூட்டுறவுத்துறையில் போதனை, அபிருத்திப்பணிகள்,வங்கிப்பணிகள்,ஆலோசனை வழங்கல் ஆகிய விடயங்களில் இருபதாண்டுகள் அவர் பெற்ற அனுபவமும் ஆற்றலுமே பிற்காலத்தில் சமூகநலப்பணிகளில் அவர் அதிகஅளவு நாட்டம் செலுத்தக் காரணமாயிற்று. இவ்வாறு ஜனநாயக மரபுகளுக்கமையவும் கல்வி மற்றும் கூட்டுறவு விழுமியங்களுக்கமையவும் சமய நெறிமுறையுடனும் வாழும் திரு.ஆர்.எம்.என் அவர்களின் வாழ்வும் பணியும் மனிதகுலத்துக்கு அவரை ஓர் கூட்டுறவுக் கல்விச் சிந்தனையாளராக, நல்வழிகாட்டும் ஆசானாக தனது சமூகத்தின் கல்விமேம்பாட்டில், அக்கறைகாட்டும், தந்தையாகக் காண்பிக்கின்றது. இன்றும் தளராது சுறுசுறுப்பாக சமூகப்பணி செய்துவரும் எழுச்சித் தந்தையாகப் போற்றப்படும் திரு. ஆர்.எம்.என் அவர்களின் பணியினை ஏனையோரும் பின்பற்றி அவர் சிந்தனைகளுக்கு மேலும் வலுச் சேர்ப்பது காலத்தின் தேவையாகும்.

"முயற்சி திருவினையாக்கும்"

கூட்டுறவுப் பெரியார் திரு. ஆர்.எம். நாகலிங்கம் அவர்களின் கூட்டுறவுக் கல்வி மற்றும் கூட்டுறவு அபிவிருத்திப் பணிகள்

திரு. ச.பாலசுப்பிரமணியம்
ஓய்வு நிலை கூட்டுறவுப் பரிசோதகர்
உள்ளூராட்சித் திணைக்கள சிரேஸ்ட ஆய்வு உத்தியோகத்தர்
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்

பெரியார் ஆர்.எம். நாகலிங்கம் அவர்கள் கூட்டுறவுக் கல்லூரியில் பயிற்சியைப் பெற்று கூட்டுறவுத் திணைக்களத்தில் கூட்டுறவு பரிசோதகராகத் தனது உத்தியோக வாழ்வை 01.04.1960 இல் தொடங்கியவராவார்.

திருகோணமலையில் ஆர்.எம். என் 01.04.1960 – 31.12.1964 வரையான காலப்பகுதியில் ஆற்றிய பணிகள்.

ஆர்.எம்.என் அவர்கள் திருகோணமலையில் 1.4.1960இல் கூட்டுறவுப் பரிசோதகர் பணியை ஆரம்பித்தார். இளம் உத்தியோகத்தராக இருந்த போதிலும் பொல்கொல்லை கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலையில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றதால் அவர் புதிதாக 1961இல் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுக் கல்லூரியில் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அத்தோடு இம்மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு வங்கியின் உள்ளகப் பரிசோதகராகவும் நியமிக்கப்பட்டார்.

இவ்விரண்டு பதவிகளுக்கும் உண்மையில் சிரேஷ்ட உத்தியோகத்தர்களே நியமிக்கப்படுவது வழக்கம். எனினும் ஆர்.எம்.என் அவர்களின் திறமையையும் ஆற்றலையும் அறிந்திருந்த அப்போதய கூட்டுறவு உதவி ஆணையாளர்களான திரு.எம்.மதிபாலசிங்கம், திரு. எஸ்.ஆர். ஆசிர்வாதம் ஆகியோர் அவரை அப்பதவிகளிலே தொடர்ந்தும் வைத்திருந்தார் கள்.

இக்காலப்பகுதியில் ஆர்.எம்.என் கணக்குவைத்தல், முகாமைத்துவம் போன்ற முக்கிய பாடங்களுக்கு விரிவுரையாளராக இருந்தார். அத்தோடு சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும் அரும்பாடுபட்டார். இதன் காரணமாக 1964ஆம் ஆண்டு மார்கழி மாதம் திருகோணமலை மாவட்டக் கூட்டுறவுக் கலாசாலை ஆர்.எம்.என் அவர்களுக்கு ஓர் பிரியாவிடையை திருகோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்தது. இதில் அவர் 'கூட்டுறவு இளவல்' என நாமம் சூட்டப்பட்டார். இதில் கலந்து கொண்ட முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.ஆர். ஆசிர்வாதம் அவரை பகவத்கீதையை குறிப்பிட்டு ஓர் 'கர்மயோகி' எனப் புகழ்ந்தார்.

இதன் பலனாகக் கூட்டுறவுத் துறையில் பின்தங்கிய மாவட்டமான திருகோணமலையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல கூட்டுறவுப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்க முடிந்தது. அத்தோடு இச்சங்கங்கள் கூட்டுறவு வங்கியில் (நிர்வாகம் சரியாக நடந்த படியால்) பல நன்மைகளைப் பெற முடிந்தது. இதனை அறிந்த திருகோணமலை கூட்டுறவாளர் ஆர்.எம்.என் சேவைகளை வெகுவாகப் பாராட்டினார்.

களத்தில் ஆர்.எம்.என். அவர்களால் செய்யப்பட்ட சேவைகள்

திருகோணமலை மாவட்டத்தை ஒப்புநோக்கும் பொழுது கூட்டுறவுத் துறையில் ஓர் பின்தங்கிய மாவட்டமாகவே இருந்தது. குறிப்பாகக் கணக்கு வைத்தல் , முகாமைத்துவம் போன்றவற்றில் ஒரு சில சங்கங்களைத் தவிர ஏனையவைகள் திருப்தியற்ற நிலையிலேயே இருந்தது. குறிப்பாகத் தம்பலகாமம், கந்தளாய், கிண்ணியா போன்ற கிராமங்களில் உள்ள 9 சங்கங்கள் ஆர்.எம்.என்னிடம் ஒப்படைக்கப்பட்டன. அக்காலத்தில் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் இச்சங்கங்கள் நெற்கொள்வனவு செய்தன. இச்சங்கங்களின் கணக்குகளை நாளதுவரை சரி செய்யவும் அவைகளுக்குப் புத்துயிர் அளிப்பதிலும் ஆர்.எம்.என் இராப்பகலாக உழைத்து ஊழலை ஒழிப்பதிலும் அரும்பாடுபட்டு வெற்றியும் கண்டார். அத்தோடு தொழிலாளர்களுக்குக் களப் பயிற்சியும் வழங்கினார்.

எண்பார்வை அறிக்கைகளை பரிசீலனை செய்தல் (Review)

திருகோணமலை ACCD கந்தோரில் ஆர்.எம்.என் திறமையையும் ஆற்றலையும் அறிந்த ACCD அவர்கள் ஆர்.எம்.என் அவர்களை எண்பார்வை அறிக்கைகளை பரிசீலனை செய்வதற்கு நியமித்திருந்தார். உண்மையில் இக்கடமைக்கு முதலாம் தர கூட்டுறவுப் பரிசோதகர்களையே நியமிப்பது வழக்கம். இதனால் கந்தோரில் சிரேஸ்ட உத்தியோகத்தர்களின் ஆத்திரத்துக்கும் ஆர்.எம்.என் ஆளானார்.

உயர் கல்வியில் நாட்டம்

இக்காலகட்டத்தில் திருகோணமலையில் உள்ள கல்லூரிகளில் G.C.E. A/L வகுப்பு மாணவர்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர். அத்தோடு அரசாங்க சேவையில் உள்ளவர்களும் மேற்படிப்பு படிப்பதற்கு நாட்டம் காட்டினர்.

முற்போக்கு எண்ணம் கொண்ட ஆர்.எம்.என் இம்முயற்சிக்கு தன்னாலான எல்லா உதவிகளையும் செய்தார். இதனால் சேவையில் உள்ள சிலர் பட்டப் படிப்புப் படிக்க வாய்ப்புக் கிட்டியது.

ஆர்.எம்.என் 1965-1971 வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆற்றிய சேவைகள்

ஆர்.எம்.என் அவர்களின் திறமையையும் ஆற்றலையும் அறிந்திருந்த அப்போதைய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு.எம்.மதிபாலசிங்கம் அவர்களின் வேண்டுகோளின் படி ஆர்.எம்.என் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டார். அங்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உயர்நிலை கூட்டுறவுப் பயிற்சி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். இப்பயிற்சி வடக்கு கிழக்கில்

உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சிரேஸ்ட நிறைவேற்று அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சி விரிவுரையாளர்களில் புகழ் பெற்றவர்கள் அங்கம் வகித்தனர். திரு.ஆர்.எம்.என் கணக்கு வைத்தல் (Accountancy) முகாமைத்துவம் (Management) எண்பார்வை செய்தல் போன்ற முக்கிய பாடங்களில் விரிவுரையாளராக இருந்தார். இதில் அவர் தனது கடமைகளை திறம்பட செய்தபடியால் 1971ஆம் ஆண்டில் கூட்டுறவுத் திணைக்களத்தில் சேர்க்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களுக்குப் பயிற்றுவிப்பாளராக ஓர் புது நியமனம் வழங்கப்பட்டது. இது ஓர் வெற்றிகர திட்டமாக அமைந்தது. இந்நிகழ்ச்சித்திட்ட காலத்தில் ஏராளமான கள படிப்பு நிகழ்ச்சிகள், பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்பட்டன. இவைகள் கூட்டுறவுக் கலாசாலையாலும், ACCD கந்தோராலும் இணைந்து நடத்தப்பட்டது. இவைகளில் ஆர்.எம்.என் முழு மூச்சாக ஈடுபட்டு பயிற்சி தகவல்களை உண்டாக்குவதிலும் ஈடுபட்டார். இதன் காரணமாக வட மாகாண கூட்டுறவு இணைப்பு NDCF இவரின் சேவைகளை 1971ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் தக்க வைத்துக் கொண்டது. மேலும் 27.10.2968இல் கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட Dr.A.F.Laidlaw கமிசனிடம் வாக்கு மூலம் கொடுப்பதற்கு கூட்டுறவில் ஈடுபட்ட கல்விமான்களை ஒழுங்கு செய்வதிலும் ஈடுபட்டிருந்தார்.

1972 – 1980 காலப்பகுதி

ஆர்.எம்.என் விரிவுரை ஆற்றலை மனதிற் கொண்டு அன்றைய ACCD யால் பொல்கொல்லையில் உள்ள கூட்டுறவு தேசியகலாசாலைக்கு ஜனவரி 1972இல் கணக்கு வைத்தல், முகாமைத்துவம், எண்பார்வை செய்தல் போன்ற பாடநெறிகளுக்கு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். நிதி முகாமைத்துவம் சம்பந்தமாக புது நிகழ்ச்சித் திட்டங்களையும் தயாரித்து அளித்தார். கணக்கு வைத்தல், முகாமைத்துவம் சம்பந்தமாக புது நிகழ்ச்சித்திட்டங்களையும் தயாரித்து அளித்தார். கணக்கு வைத்தல், முகாமைத்துவம் சம்பந்தமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிபுணராகவும் இருந்துள்ளார். இக்காலப்பகுதியில் இக்கலாசாலையில் தமிழ் மூலம் விரிவுரைகளும் ஆரம்பிக்கப்பட்டன. அத்தோடு புதிதாக சேவைக்கு வரும் ஆங்கில அறிவு குன்றிய தமிழ் கூட்டுறவுப் பரிசோதகர்கள் தமது பயிற்சியை திறம்பட மேற்கொள்ள பெரிய வாய்ப்பும் கிடைத்தது. அச்சந்தர்ப்பத்தில் 1962இல் கூட்டுறவு பரிசோதகராக எடுபட்ட நான் 1966இல் ஆங்கிலத்தில் மட்டுமே இப்பயிற்சியைப் பெற முடிந்ததை கூறிவைக்க வேண்டும்.

இக்காலப்பகுதியில் ஆர்.எம்.என் 4 அதிபர்களின் கீழ் சேவையாற்றியுள்ளார். அவர்கள் அனைவரும் அவரின் சேவையைப் பாராட்டியுள்ளனர்.

ஆர்.எம்.என் கூட்டுறவுக் கல்வியில் விசேட பயிற்சிகள்.

1960 – 1980 காலப்பகுதி மேற்சொல்லிய பாராட்டலுக்கும், மதிப்பிற்கும் ஆர்.எம்.என் அவர்களின் சேவை மனப்பான்மையோடு அவர் பெற்ற பின்வரும் பயிற்சிகளே காரணமாகும்.

1. 1959இல் யாழ்ப்பாண கூட்டுறவுக் கலாசாலையில் பெற்ற 4 மாத முழு நேரப் பயிற்சி

2. 1962இல் பொல்கொல்லையில் 5 மாத முழு நேரப் பயிற்சியில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்று பயிற்சியாளர்களில் முதலாம் இடத்தைப் பெற்றது.

3. 1967இல் பொல்கொல்லையில் 5 மாத முழுநேரப் பயிற்சியில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்று பயிற்சியாளர்களில் முதலாம் இடத்தைப் பெற்றது.

4. 1973-74இல் கொழும்புத் திட்ட பாண்டித்திய அழைப்பின் கீழ் ஆர்.எம்.என் அவர்களுக்கு UK இல் உள்ள லவ்பரோ சர்வதேச கூட்டுறவுக் கல்லூரியும், லவ்பரோ தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் இணைந்து நடாத்திய கூட்டுறவு அபிவிருத்தி டிப்ளோமா பட்டப் பயிற்சி நெறி வாய்ப்புக் கிடைத்தது. இதில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்றவர்களின் பட்டியலில் முதல் இடத்தையும் பெற்றார்.

குறிப்பாக மேற்சொல்லிய பயிற்சிப் பரீட்சைகளில் எல்லாம் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றதோடு சித்தி பெற்றவர்களின் பட்டியல்களில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

மேற்படி பயிற்சியில் ஈடுபட்ட காரணத்தால் ஆர்.எம்.என் அவர்களுக்கு உயர்கல்வி மேல் நாட்டம் ஏற்பட்டது. தனது சுய முயற்சியால் CIMA இறுதிப்பிரிவு வரை பூர்த்தி செய்த ஆர்.எம்.என் அவர்களுக்கு வீடமைப்புத்துறை அமைச்சின்கீழ் வீடமைப்பு அதிகார சபையில் கணக்காளராகும் வாய்ப்புக் கிட்டியது. 1980இல் இச்சபையில் பல்வேறு பதவி உயர்வுகளைப் பெற்று ஓர் சிறந்த நிர்வாகியாக இனம் காணப்பட்டார். இக்காலத்தில் கொழும்பு பல்கலைக் கழகத்தால் நடத்தப்பட்ட நிர்வாகிகளுக்கான வியாபார முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சியையும், வீடமைப்பு நிதி முகாமையும் வினைத்திறனாக்கலும் என்ற பொருளில் வீடமைப்புத் தொழில்சார் பயிற்சிகளையும், பின்னர் இந்தியாவின் வீடமைப்பு அபிவிருத்தி நிதி அதிகாரசபையின் வீடமைப்பு கடன் மதிப்பீடு ஆகிய நிறுவனங்களில் பயிற்சி நெறிகளில் கலந்து கொண்டு தனது ஆளுமையை வளர்த்துக் கொண்டார்.

ஆர்.எம்.என் அவர்களின் கல்விப் பணிகளைத் தொடர்ந்து காத்திரமான சமூகப் பணிகளை வேறுபாடின்றி சாதிசமயமின்றி செய்யத் தூண்டியதற்கு அவரின் முற்போக்கான சிந்தனையும், முற்போக்குள்ள கல்விமான்களோடு தொடர்பு வைத்தமையும் முக்கிய காரணமாகும். நான் ஓர் இளைய கூட்டுறவுப் பரிசோதகராக அவரின் கீழ் 1962 தொடக்கம் பணிபுரிந்தமையால் இதை நன்கறிவேன். அத்தோடு திருகோணமலை கூட்டுறவாளர்கள் கூட்டுறவுச் சமூகம் ஆர்.எம்.என் அவர்களின் 5 வருட குறுகிய காலத்தில் (1960-1964) ஆற்றிய அளப்பரிய சேவைகளை மறக்க மாட்டார்கள். எனவே இப்படியான விரிந்த மனப்பாங்கைக் கொண்ட ஆர்.எம்.என் 76ஆம் வயதில் அடியெடுத்து வைக்கும் இத்தருணத்தில் அவரின் நீண்ட ஆயுளுக்கும் சேவைக்கும் இறைவனருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

நான் கண்ட நாகா

திரு. இ.அன்னலிங்கம்
முன்னாள் மேலதிக பொது முகாமையாளர்
வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை,
பங்காளர், S.R.பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம்.

'நாகா' என சுருக்கி என்னால் அழைக்கப்படும் நாகலிங்கம் எமது மத்தியில் பலரும் போற்றும் ஒரு சமூக முன்னோடியாகத் திகழ்கின்றார் என்பதையிட்டு மகிழ்ச்சி கொள்ளும் பலரில் நானும் ஒருவன் என்பதையிட்டு பெருமையடைகின்றேன். இறைவனின் அருள் பவள விழாவிற்குப் பின்னும் பல்லாண்டு கிடைக்கப் பெறவேண்டும் என்பதும் நான் எனது இஸ்ட தெய்வங்களிடம் வேண்டி நிற்கும் ஒரு பிரார்த்தனை 'நாகா' எனது வாழ்க்கைப் பாதையில் குறுக்கிட்ட நாள் தொடக்கம் என்னுடன் இருந்து பல பாகங்களை வகித்து என்னைக் கவர்ந்த ஒரு உற்ற நண்பனாக இளைப்பாறிய நிலையிலும் திகழ்கின்றார். சகபாடியாக உதவியாளராக ஆலோசகராக நெருக்கடி நிலையில் கைகொடுப்பவராக, உற்ற நண்பராக பாகம் வகித்து ஒவ்வொரு பாத்திர நிலையிலும் இறுதிவரை மெச்சக் கூடிய விதத்தில் செயற்பட்டு இன்று எனது உற்ற நண்பனாக வலம் வருகின்றார். நான் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் பதவி வகித்த போது முதன்முதலாக திரு.நாகலிங்கம் அவர்களை நேர்காணல் பரீட்சையொன்றில் எதிர் எதிராக சந்திக்க வேண்டி ஏற்பட்டது. அந்நாட்களில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையை கட்டியெழுப்பும் பொறுப்பு உட்பட ஒரு இலட்சம் வீடுகளை அமைக்கும் அதிவேக வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் அலுவலர்களின் அணியில் ஒருவனாக இருந்த நிலையில் என்மீது சுமத்தப்பட்ட பணியை ஈடேற்ற எனது செயற்குழுவை நிரப்பவேண்டிய பணியும் என் முன் பூதாகரமாக தோன்றியது. அந்த காலகட்டத்தில் எனது குழுவின் ஒரு உறுப்பினராக நேர்காணல் பரீட்சையில் தேர்ந்தெடுக்க நேர்ந்தது. கூட்டுறவுத் துறையில் விஷேடமாக கணக்கியல் சார்ந்த அனுபவத்தைக் கொண்டவரான நாகலிங்கம் எனது குழுவில் இடம் பிடித்தது இறைவனின் செயல் எனவும் கொள்ளலாம். அன்று தொடங்கிய உறவு பலவழிகளில் விருத்தியடைந்து மிகவும் நம்பிக்கைக்குரிய சகபாடியாக நாகலிங்கம் விளக்கினார். கணக்காளராக, முகாமையாளராக, பிரதம உள்ளகக் கணக்காய்வாளராக பல நெருக்கடி நிறைந்த பணிகளை மனம் கோணாமல் துணிவுடன் முகம் கொடுத்து நிறைவேற்றி மேலிடத்துப் பாராட்டுகளைப் பெற்றவர் திரு.நாகலிங்கம். எனது குழு உறுப்பினர் என்ற நிலையில் செயற்பட்டதால் என் பணிகளையும் எளிதாக்க எனக்கும் கௌரவம் தேடித்தந்தவர் 'நாகா'.

ஒரு அலுவலகத்தில் பணிகள் பல திசைகளில் பரவியிருக்கும். அதை ஒருங்கிணைத்து செயற்படுத்துவது பாரிய பொறுப்பாகும். 'நாகா' தான் உண்டு, தனக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட வேலையுண்டு என்று தற்காலத்தில் காணப்படும் நிலைமைக்கு புறம்பாக மற்றவர்களின் கடமைகள் ஈடேற்றத்திற்கும் கைகொடுக்கும் ஓர் அலுவலர். விஷேடமாக எனது கடமைகளை நேரம் காலத்தில் நிறைவேற்ற உதவியவர்களுள் 'நாகா'வும் ஒருவர். இந்த மனப்பண்பால் 'நாகா' அலுவலகத்தில் பலராலும் நேசிக்கப்பட்டவர். அவரின் கடமையுணர்வு திறமை, எவ்வித பணியையும் விருப்புடன் பொறுப்பேற்று நிறைவேற்றும் தகைமை அவர் நிறுவனத்தில் பிரபல்யம் பெற்றதுடன் விரைவாக பல பதவியுயர்வுகளையும் பெறும் வாய்ப்புகள் அவரைத் தேடிவந்தது.

எனது கடமைகளை நிறைவேற்ற பலருடனும் கலந்தாலோசனை அவசியமாகப்பட்டது. கூட்டத்தில் கலந்துரையாடலின்போது 'நாகா' விடம் ஆலோசனைகள் கோரப்படும். அவர் வழங்கும் ஆலோசனைகள் கவனத்திற் கொள்ளவேண்டியதாக இருக்கும். தனிப்பட்ட முறையிலும் அவர் எனது ஆலோசகராகச் செயற்படத் தவறவில்லை. வீடமைப்பு அதிகார சபையின் அதிரடி 100,000 வீடமைப்பு வேலைத் திட்டத்திற்கும் 'நாகா' உள்ளடங்கிய எமது குழு வழங்கிய பங்களிப்பு அரசியல் தலைமைகள், பொது மக்கள் நிறுவனங்கள், வீட்டுத் திட்டத்தின் பயனாளிகள், ஒப்பந்தக்காரர்கள் பிராந்திய அரசியல் வாதிகள், சமூக நிறுவனங்கள் போன்ற பல்துறையினராலும் போற்றப்பட்டது.

'நாகா' காலத்துக்குக் காலம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் பல பதவிகளை வகித்தவர். ஒவ்வொரு பதவியும் சவால் மிகுந்த பதவியாக இருந்த போதும் எழும் சவால்களைத் தனது திறமை மூலம் சமாளித்து வெற்றி கண்டவர் நாகலிங்கம். இதற்கு இவரிடம் கண்ட துணிவு, கணக்கியல் அறிவு, நீண்ட கால அனுபவம் ஆகியன துணை நின்றது. நிறுவனத்தின் மீதான பற்று உறுதி, துணை அலுவலர்களின் ஒத்துழைப்பு 'நாகா'வின் தொழிற்பாட்டிற்கு முக்கியமானதாய் விளங்கியது. இவர் தனது அணியினருக்கு தலைமை தாங்கி சிறந்த வழிகாட்டியாகவும், ஆசானாகவும், முன்னோடி தலைவனாகவும் விளங்கியது மெச்சத்தக்கது. இவரின் சேவைக் காலத்தில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து பலரிடமும் பரிந்துரைகளையும் பாராட்டுகளையும் தனதாக்கிக் கொண்ட ஒரு பெரியார் ஆவார்.

இறுதியாக 'நாகா'வை எனது நண்பனாகப் பார்க்கிறேன். மனித உறவுகளில் நட்புறவு என்பதைத் தேர்வு செய்வது மனிதனின் கைகளில் உள்ள ஒன்று. மற்றைய உறவுகளிற் பெரும்பாலானவை வாழ்க்கை நீரோட்டத்தில் நமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் ஏற்படுபவை. நாம் சகித்துத்தான் ஆகவேண்டும். ஆனால் தேர்ந்து எடுக்கக்கூடிய நட்புறவு நல்ல

அத்திவாரத்தில் ஆரம்பித்தால் நீடித்து நிற்கும் ஒரு உறவு. 'நாகா'வின் என்னுடனான உறவு அத்தகையது வீடமைப்பு அதிகார சபையில் சந்தித்தோம் எமது சேவைக்காலம் முடிவு பெற்று நாம் பிரிந்து வெளியேறினோம். ஆனால் அங்கு ஏற்பட்ட நட்பு தொடர்கின்றது. எமக்கிடையில் கலந்துரையாடல்கள் கருத்துப் பரிமாறல்கள் விவாதங்கள் என பல செயற்பாடுகள் இடம் பெற்றுக் கொண்டே செல்கின்றது. நலம் விசாரித்தல், வாழ்த்துக்கள், பரிமாறல் ஒழுங்காக இடம்பெறும் இவையாவும் ஓர் தூய நட்பிற்கு சிறந்த உதாரணங்களாகும். நானும் 'நாகா'வும் சமகால மனிதர்கள். இன்னும் சிறிது காலத்தில் பவளவிழாவைச் சந்திக்க இருப்பவன் நான். நம் இருவரின் சிந்தனைகளும் ஒரே அலைவரிசையில் செயற்படுகின்றன.

நாகலிங்கம் ஒரு சமூக சேவை முன்னோடி என்பது பலருக்கும் தெரியும். அவர் சிறு வயதிலிருந்தே சமூக சேவைகளில் ஈடுபட்டு செயற்பட்டதை பல பதிவுகளிலிருந்து அறியக்கூடியதாய் இருந்தது. இவ்வாறான ஒரு மனப்பாங்கு ஏற்படுவது அபூர்வம் நூல் நிலையம் ஆரம்பித்தல், கல்வி, புனர்வாழ்வு, பொது அபிவிருத்தி சார்ந்த நிதியங்களை ஆரம்பித்து, தலைமை தாங்கி வழிநடத்தல் ஆகிய சேவைகளை திறன்பட வழங்கியவர் நாகலிங்கம். இதற்கு தனது காலம், வளங்கள் ஆகியவற்றைத் தியாகம் செய்த ஒரு தியாகி என்ற கூற்றிற்கு தற்போது அவர் பிறந்த ஊரான மாவிட்டபுரத்தில் இயங்கும் அமைப்புக்களும் அதன் மூலம் பயன்பெற்ற பயனாளிகளும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக இருப்பது நாம் தெரிந்ததே. இறுதியில் இவ்வாறான செயற்பாடுகளுக்கும் தியாகங்களுக்குப் பக்கபலமாக திகழ்ந்த அவரின் பாரியாரையும் பிள்ளைகளையும் மெச்சி வாழ்த்தாமல் இருக்க முடியாது.

எனது சேவைக்கால முடிவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து விடைபெற்றுச் செல்லும் போது 'நாகா' விமான நிலையம் வரை வந்து எனக்கு பிரியாவிடையளித்த காட்சியை என் மனதில் முன்நிறுத்தி, எமது இருவருக்கும் இடையிலான எமது நட்புறவு தொடரவேண்டும் 'நாகா' நீடுழிவாழ வேண்டும் என வாழ்த்துக் கூறி தொடர்ந்தும் வாழ்த்தும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைக்க வேண்டும் என வேண்டி நிற்கின்றேன்.

MR. R.M. NAGALINGAM - HOUSING DEVELOPMENT

Mr. W.D. Ailapperuma
Former Secretary
Ministry of Housing, Construction and Urban Development

I was privileged and honoured to be associated with Mr. R.M Nagalingam, during an eventful decade in my public service career from 1984 – 1994, first when I was Chairman of the National Housing Development Authority and then from 1989, the Secretary to the Ministry of Housing, Construction and Urban Development.

Mr.Nagalingam, a trained Accountant with experience in the Cooperative Development Department had joined the newly formed NHDA in 1980. He played a key role in the implementation of the world acclaimed Million Houses Programme launched by the then Prime Minister, as the Manager responsible for supplies and stores. In this important role, Mr. Nagalingam was responsible for reaching the house builders with a timely supply of the essential items of building materials. His performance in this important role was exemplary and he played it with rarely seen dedication and commitment.

During my tenure as the Chairman of the NHDA, in recognition of his experience, knowledge and capability and specially in view of the honesty and integrity displayed throughout his career, he was appointed to the key post of Chief Internal Auditor in 1986. He served in this post until 1990, when he was elevated to newly created important post as the Head of Cooperate Planning and Monitoring.

In his role as the Chief Internal Auditor, Mr. Nagalingam proved to be an extremely valuable asset to the Management, through constant audit checks in what was then one of the largest expenditure programmes in the Government and carried out regular performance evaluation activities. In addition, Mr. Nagalingam initiated the establishment

of outstation audit offices. A pioneering activity he initiated was the introduction of an audit of land alienation and land survey activities of the NHDA.

In this capacity, as the Head of Corporate planning, I recollect that Mr. Nagalingam prepared the first ever corporate plan of the NHDA, an undoubtedly pioneering task at that time.

Mr. Nagalingam, during his 15 years long career in the NHDA, kept abreast of knowledge in his own field of expertise. He obtained a Diploma in Business Administration from the University of Colombo and participated in advance training programmes in Australia U.Kand India.

My own experience in working together and in being associated with Mr. Nagalingam, has been very pleasant and rewarding. He was always committed to his work and loyal to the management, that I always felt relieved to have Mr. Nagalingam around. His levels of integrity and honesty was at the highest and he could always be trusted to perform any duty entrusted to him, with commitment. His dedication and hard work was remarkable. Added to his performance in work, Mr. Nagalingam always reminded a kind and humble human being, prepared to assist and help people around him.

I wish him all the best in his life.

சமுதாய மலர்ச்சிக்கு எழுச்சித்தந்தை ஆர்.எம்.என் அவர்களின் வகிபாகத்தின் முக்கியத்துவம்

திரு. வீ. தனபாலசிங்கம்
பிரதம ஆசிரியர்
தினக்குரல்

சமூகங்களின் எழுச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் எத்தனையோ அமைப்புகள், இயக்கங்கள், நிறுவனங்கள் காலத்துக்குக் காலம் தோன்றுவதும் பின்னர் மறைவதுமே நாம் கண்ட பட்டறிவாக இருக்கையில் திரு. இ.மு.நாகலிங்கம் அவர்களால் தாபிக்கப்பட்ட சமூக எழுச்சி இயக்கத்தின் 65 ஆண்டுகால வளர்ச்சியும் சமூக சேவையும் என்பது நிச்சயமாகப் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய விடயமென்பதில் இருகருத்துக்கு இடமில்லை.

ஒரு குடும்பமோ, அமைப்போ இயக்கமோ அல்லது நாடோ சிறந்ததாக விளங்க வேண்டுமென்றால் அதற்குச் சிறந்த தலைமைத்துவம் வேண்டும். அந்த வகையில் 1947 ஆம் ஆண்டு முதல் இற்றைவரையான 65 ஆண்டு காலமாகப் பல்வேறு சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்தும் தாம் வரித்த பாதையில் தளராது பீடு நடை போட்டு வரும் இச்சமூக எழுச்சி இயகத்தின் வெற்றியின் தளகர்த்தாவாக அதன் தலைவர் ஆர்.எம்.என் என அழைக்கப்படும் இராமு.முருகேசு நாகலிங்கமே திகழ்கின்றார்.

சமூகப் பெரியார், கூட்டுறவுப் பெரியார், எழுச்சித் தந்தை, ஆர்.எம்.என் என பலராலும் உயர்வாக அழைக்கப்படுகின்ற நாகலிங்கம் அவர்கள் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த இராமு முருகேசு – தாமோதரம் கற்பகம் தம்பதிக்கு ஏக புதல்வனாக 14.10.1936 இல் மாவிட்டபுரத்தில் பிறந்தார். தனது 11ஆவது வயதிலேயே தான் பிறந்த கிராமத்தில் சமூக சேவைகளில் தன்னை அர்ப்பணித்தவர். 1960 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை அரச கூட்டுறவு அபிவிருத்தித் துறையிலும் 1980 ஆம் ஆண்டு முதல் 15 ஆண்டுகள் தேசிய வீடமைப்பு அதிகார சபையிலும் பல பொறுப்பான பதவிகளை வகித்தார். அத்துடன் 1947 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை மக்கள் மறுமலர்ச்சிக்கான பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

சுமார் 64 ஆண்டுகளுக்கு முன்னர் தன்னைச் சுற்றியிருந்த சமூகத்தைப் பற்றியும் அது மாற வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் பின் தங்கிய நிலையிலிருந்த தன் சமூகம் மறுமலர்ச்சி காண வேண்டியதன் அவசியம் பற்றியும் நாகலிங்கம் சிந்திக்க ஆரம்பித்ததன் விளைவாகவே சமூக எழுச்சி இயக்கம் என்ற பேரியக்கத்தின் தோற்றம் ஆரம்பமானது. தனது சமூகத் தொடர்பிலான முன்னேற்றம் குறித்து நாகலிங்கம் விதைத்த விதைகள், தெரிவித்த கருத்துக்கள் அவரை சமூகத் தலைவன் என்ற நிலைக்கு உயர்த்தியது. படிப்பறிவு குறைந்தவர்களும் பள்ளிக்கூட புத்தகங்களுடன் வாசிப்பை நிறுத்திக்

கொள்பவர்களும் விசாலமான அறிவைப்பெற வேண்டுமென்பதற்கான அவரின் எண்ணத்தின் வளர்ச்சியாகவே 12.09.1955 இல் மாவை பாரதி வாசிகசாலை தோற்றம் பெற்றது.

கால ஒட்டத்தில் வாசிகசாலையின் செயற்பாடுகள், சமய, சமூக, கல்வி, கலை, கலாசார பண்பாட்டுப் பணிகள் என விரிவடைய இவ்வாசிகசாலை 1971ஆம் ஆண்டில் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் எனப் பெயர் மாற்றம் பெற்றதுடன் 1972ஆம் ஆண்டில் மாவை சனசமூக நிலையம் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டு இவை ஒரே கூரையின் கீழ் இணைந்து சேவையாற்ற ஆரம்பித்தன.

இவற்றுக்கு முன்னோடியான நாகலிங்கத்தைத் தலைமைப் பொறுப்பை ஏற்க வைத்த சமூகத்தினர் நாகலிங்கத்தை ஆர்.எம்.என் என அழைக்க ஆரம்பித்தனர். பாரதி வாசிகசாலை படிப்படியாக வளர்ச்சியினைக் கண்டு 12.09.1980இல் பாரதி மறுமலர்ச்சி மன்ற வெள்ளி விழாவை கொண்டாடிய போது அப்போதைய அரசியல் தலைவர் அமிர்தலிங்கம் அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த வெள்ளி விழாவே சமூக எழுச்சி இயக்கத்தின் அடுத்த பாய்ச்சலுக்கான வளர்ச்சிப் படியின் முக்கிய புள்ளியாக அமைந்தது. இறுக்கமான பாரம்பரிய மரபுகளை உடைத்தெறிந்து வர்க்க, சாதி வேறுபாடுகளை அகற்றக் கல்வி அறிவூட்டித் தொழில் வாய்ப்புகளைத் தேடிக் கொள்வதன் மூலம் சமமாக வாழ வேண்டுமென்பதற்கான மறுமலர்ச்சியை ஏற்படுத்து வதற்காகவே சமூக எழுச்சி இயக்கம் உருவாக்கப்பட்டது.

வட, கிழக்கு மாகாணங்களைத் தாயகமாகக் கொண்ட நாவிதர் சமூகத்தை எழுச்சி, வளர்ச்சி, உயிர்ச்சி, சமத்துவம், அந்தஸ்துப் பெற்ற சமூகமாகப் பரிணமிக்கச் செய்வதை முதன்மைத் தொலைநோக்காகவும் சமூக, கல்வி ரீதியாக பின் தங்கிய ஏனைய தமிழ்ச் சமூகங்களின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பதை சிறப்புத் தொலை நோக்கமாகவும், தமிழ், இனத்தினதும் தமிழ் மொழியினதும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பதை பொது தொலைநோக்காகவும் கொண்டு திட்டங்கள் வரையப்பட்டுக் குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்காக இந்த இயக்கத்தை வழிநடத்துவதற்கான தலைமைப் பொறுப்பு, நேர்மையும் திறமையும் அர்ப்பணிப்பும் துணிவும் செயலாற்றுத் திறனும் கொண்ட ஆர்.எம்.என். அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அறிவும், ஆளுமையும் கூட்டுறவு, நாட்டுயர்வு என்பதில் நம்பிக்கையும் அனுபவமும் மிக்க ஆர்.எம்.என். தலைமையில் உருவான சமூக எழுச்சி இயக்கத்தை இம்மக்களை ஒன்று திரட்டி நிறுவனப்படுத்தும் பொருட்டு சமூகப் பற்றும் கரிசனையும் கொண்ட அமைப்புக் குழுவும் செயற்திறன் மிக்க 19 பேரைக் கொண்ட காரிய நிர்வாகக் குழுவும் அத்துடன் மாணவத் தலைவர்களைக் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டன.

சமூக எழுச்சி இயக்கத்தின் அமைப்புக் குழுவானது கொழும்பு மாவட்டத்தில் புறக்கோட்டை, கோட்டை, வெள்ளவத்தை மற்றும் மொறட்டுவை, நுகேகொடை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் 10க்கும் மேற்பட்ட கூட்டங்களை முதன்மைப் பயனாளி மக்கள் மத்தியில்

நடத்தி கருத்தாடல்களை செய்து எழுச்சி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான "ஆறு அம்சக் கொள்கைத் திட்டம்" ஒன்று உருவாக்கப்பட்டதுடன், இதனை ஆராய்ந்து பிரகடனப்படுத்தும் நோக்குடன் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் ஒரு தேசிய மகாநாடொன்று 25.12.1980 இல் ஆர்.எம்.என். தலைமையில் நடத்தப்பட்டு அத்திட்டம் விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டமானது காலத்தினதும் சமூகத்தினதும் தேவைக்கேற்ப திருத்தங்கள் செய்யப்பட்டு 1981 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆறு அம்சத் திட்டத்தின் தொடர் நிகழ்வுகளாக யாழ் மாவட்டக் கிராமங்கள் தோறும் எழுச்சி இயக்கத்தின் குறிக்கோள், தொலைநோக்கு, கொள்கைகள், மூல உபாயங்கள், தொழிற்பாடுகள், முகாமைக் கட்டமைப்பு போன்ற விடயங்கள் கருத்தரங்குகள் மூலம் விவாதிக்கப்பட்டு மக்களின் அங்கீகாரத்துடன் கிராம ரீதியாக சமூக மேம்பாட்டுக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இது நாளாவட்டத்தில் அதிகரித்துச் சென்றன. இந்த எழுச்சியின் அடுத்த கட்டமாக 15.04.1981இல் தொண்டமானாறு செல்வச் சந்நிதியில் மாபெரும் தேசிய மாநாடு நடத்தப்பட்டு கிராம மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட 24 கழகங்களையும் ஒன்றிணைத்து சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சமாசத்தின் பல்வகையான நிதியுதவித் திட்டங்களுக்கான நிதித் தேவை பல்மடங்காக அதிகரித்ததாலும் நம்பிக்கைப் பொறுப்பாளர் மூலம் கடன் வழங்கி வருமானத்தைத் திரட்டுவதில் பிரச்சினைகள் எழுந்ததாலும் புதிய நன்கொடைகள் திரட்டுவதில் ஏற்பட்ட தட்டுப்பாடுகளினாலும் நிதிச் சவாலை சமாசம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்ட போது இச்சவால்களுக்கு வழி காண்பதற்கான பொறுப்பு தொழில் நிமித்தம் கொழும்பிலிருந்த ஆர்.எம்.என்.அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எழுச்சி இயக்கத்தின் பிதாமகனாகவும் வாழ்நாள் வழிகாட்டித் தலைவராகவும் இருந்த காரணத்தால் இப்பொறுப்பை ஆர்.எம்.என்.ஏற்றுக் கொண்டார்.

கூட்டுறவுத் துறையின் நெடுங்கால நேரடி அனுபவம் இருந்ததால் ஆர்.எம்.என் அவர்கள் நிதிச் சவால்களைச் சமாளிக்கச் சமூக வங்கியொன்றை ஆரம்பிப்பதற்கான எண்ணக்கருவை முன்வைத்தார். இதன் பயனாக சமூக முன்னோடிகளில் ஒருவரான க.சுப்பிரமணியத்தின் காக்கை தீவு இல்லத்தில் 04.06.1993இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் "புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்" என்னும் பெயரால் சமூக வங்கி ஆரம்பிக்கப்பட்டது. அத்தினத்தில் ஆர்.எம்.என்.அவர்களைத் தலைவராகக் கொண்ட பணிப்பாளர் சபையும் தெரிவு செய்யப்பட்டது. புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் தோற்றமும் தேசிய சமூக எழுச்சி இயக்கத்தின் ஒரு முக்கிய கட்டமாகும்.

நிதியம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிதி மூலத்தை வளர்ப்பதற்கான முயற்சிகள் பன்முகப்படுத்தப்பட்டன. 1990 இல் சமாசத்தால் ஆரம்பிக்கப்பட்ட விஷேட ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் திட்டம், நன்கொடைப் பங்கு மூலதனத்தை வளர்ப்பதற்கான திட்டம், தனிநபர் புலமைப்பரிசில் நன்கொடைத் திட்டம், ஆகியவற்றுடன் 28.05.1999 இல் ஆரம்பிக்கப்பட்ட பிறந்த நாள் நினைவுப் பரிசில் திட்டம் ஆகியவற்றின் மூலம் நிதி மூலத்தைத் திரட்டுவதற்கான

முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன. இவ்வாறு வசூலிக்கப்பட்ட நன்கொடைகளை ஆட்பிணைக் கடன் திட்டத்தின் மூலம் முதலீடு செய்து வருமானத்தை அதிகரிக்கும் நடைமுறை நிதியத்தால் ஆரம்பத்திலிருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டது.

இவ்வாறு பெறப்பட்ட மூலதன வருமானத்திலிருந்து அபிவிருத்தித் திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. சுனாமி அனர்த்த அவசர நிவாரணத்திட்டம், தகவல் தொழில்நுட்பக் கல்விக்கான நூல்களை நன்கொடையாக வழங்கும் திட்டம், வன்னி மக்களுக்கான அவசர நிவாரணத்திட்டம், வன்னி மாணவர் கல்வி மேம்பாட்டுத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களுக்குத் தேவையான நிதிவளத்தைக் குறித்த திட்டங்களின் பெயரால் நிதி வசூல் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இச்சமூக எழுச்சி இயக்கமானது 1947 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை நிலைத்து நின்று வளர்ச்சிப் பாதையில் பயணித்து அரும் பெரும் பணிகள் மூலம் மக்கள் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கி வருகின்றமைக்கு பல காரணிகள் இருக்கின்ற போதும் அதன் தலைவரான ஆர்.எம்.என். அவர்களின் வகிபாகமே முதன்மைக் காரணியாகவுள்ளது. எழுச்சித் தந்தையான ஆர்.எம்.என். சமூக எழுச்சி இயக்கத்தின் வாழ்நாள் பெருந்தலைவராக இருந்து கொண்டு தான் காலத்துக்குக் காலம் வளர்த்துக் கொண்ட கல்விப் புலமை, தொழிற்புலமை ஆகியவற்றைத் தனது சமூகப் பணிகளுக்கு பிரயோகித்ததுடன், கண்ணும் கருத்துமாக இருந்து தன்னையே உருக்கி எழுச்சி இயக்கத்தை வளர்க்கும் வகையில் முழு மூச்சாக உழைத்து வருகின்றார்.

ஆர்.எம்.என். அவர்களின் இத்தகையதொரு அளப்பரிய பங்களிப்பு இல்லையெனில் இச்சமூக எழுச்சி இயக்கம் இத்துணை வளர்ச்சி பெற்றிருக்க முடியுமா என்பது சந்தேகமே. ஆர்.எம்.என். அவர்களது தலைமைத்துவத்திற்கு பெரியோர்களின் ஆசியும் முன்னணித் தலைவர்கள் வழங்கிய விசுவாசமும் அர்ப்பணிப்பும், கொடை வள்ளல்கள், மாணவர் தலைவர்களின் பங்களிப்பும் நிறுவன கட்டமைப்புமுறை, இலக்கை நோக்கிய பயணம், நடுநிலைக்கொள்கை ஆகியனவும் இச்சமூக எழுச்சி இயக்கத்தின் பெருவெற்றிக்குப் பங்காற்றியுள்ளன.

1980இல் தோன்றிய இச்சமூக எழுச்சி இயக்கத்தினதும் 1981இல் தோன்றிய சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினதும் 1993இல் தோன்றிய புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் ஸ்தாபகத் தந்தையாக இருந்து இவற்றைப் பல சவால்களுக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து வியக்கத்தக்க முறையில் வளர்த்து வருகின்ற வழிகாட்டித் தலைவராக ஆர்.எம்.என். அவர்கள் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருகின்றார். தனது சமூகத்துக்கும் தான் தொழில் செய்த அமைப்புகளுக்கும் தனது இனத்துக்கும் பெருமை தேடிக் கொடுத்ததுடன் தற்போதும் சமூக மேன்மைக்காக உயிர்ப்பு மிக்க சேவகனாகவே இருந்து வருகின்றார். எமது காலத்தில் இத்தகையதொரு அர்ப்பணிப்புச் சிந்தனையுடனான சமூக சேவகனுடன் ஊடாடுவதற்குக் கிடைத்த வாய்ப்பு பெறுமதியானது என்பேன்.

திரு. ஆர்.எம். நாகலிங்கம் அவர்களும் சமூக மேம்பாடும்

பேராசிரியர் சு.மோகனதாஸ்
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு உறுப்பினர்
முன்னாள் துணைவேந்தர் - யாழ் பல்கலைக் கழகம்.

தோன்றிற் புகழோடு தோன்றுக அ.்.திலால்
தோன்றலிற் தோன்றாமை நன்று – குறள் 236

என்ற வள்ளுவரின் குறளிற்கு ஏற்றாற் போல் இவ்வுலகில் மானிடநேய சிந்தனையினை வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் தனது ஆயுள்காலம் முழுவதும் சமூகத்திற்கே அர்ப்பணித்த ஓர் உத்தமனாக திரு.நாகலிங்கம் விளங்கி வருகின்றார். மனிதனது வாழ்க்கை வட்டத்தினுள் அறுபது வயதினைக் கடப்பது என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இது பூரணமான அல்லது முழு மனிதன் என்ற உணர்வினையே தோற்றுவிக்கின்றது. அறுபது ஆண்டுகளினை கடத்தல் என்பது சாதாரண ஒர் விடயம் அல்ல. இக்காலப்பகுதி அனுபவமே அவரினை இன்று அனைவரும் பாராட்டத்தக்க வகையில் வழிநடத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை. உலகியல் ஞானத்தெளிவும் மெய்யியல் சிந்தனையும் புலமைத்திறனும் சமூக நோக்கும் எப்பொழுதும் நாகலிங்கத்திடையே மேலோங்கியே காணப்படும்.

திரு. நாகலிங்கம் முக்காலம் பற்றிய சிந்தனை வயப்பட்டவராய் சமூகத்தில் இழையோடிக் காணப்படும் பிரச்சனைகளுக்கு எல்லாம் தீர்வுகாண முற்பட்டவராய் நல்லுபதேசியாய், நல் நடத்தையின் ஆசானாக, சமத்துவ சிந்தனையாளனாக மனித உரிமையின் பாதுகாவலனாக விளங்கிய நாகலிங்கத்தினை நான் ஓர் சமூக ஜோதியாக, செயல் வீரனாக, கூட்டுறவாளனாக, சமூக முன்னோடியாக, தேசப்பற்றாளனாக, மக்கள் நலன் விரும்பியாக மானிட நேயமுள்ளவனாக, எடுத்துக் காட்டாளனாக, தலைவர்களுக்குத் தலைவனாக, ஆளுமை மிக்கோனாக, நாட்டுப் பற்றாளனாக, நன்றியியலாளனாக பலகோணங்களில் அவரினை காணக்கூடியதாக உள்ளது.

திரு. நாகலிங்கம் அவர்கள் சிறந்த பண்பாளன், பழகுவதற்கு மிகவும் எளிமையானவர், சமூக நன்மையினையே இலக்காகக் கொண்டவர். இவ்வாறு அறிவும் எளிமையும் சமூகப்பற்றும் ஒருங்கிணைந்தவர்களினைக் காண்பது அரிதிலும் அரிது.

யாழ்ப்பாணத்தில் மானிடநேய சிந்தனையுடன் சமூகத்திற்காகத் தனது வாழ்நாளினை அர்ப்பணித்தவர்கள் மிகச் சிலரே. குறிப்பாக ஆறுமுகநாவலர், சேர் பொன்னம்பலம் இராமநாதன் ..... அவர்களின் வழிவந்து தொண்டாற்றுபவராக நான் திரு.நாகலிங்கம் அவர்களினை காணுகின்றேன். ஏன் எனில் தனது பல்வேறு பணிகளுக்கு அப்பால் சமூக உணர்வுடனும் மானிட நேயத்துடனும் இன்றுவரை நடைமுறைப்படுத்தியமையே ஆகும். மூன்று தசாப்த

காலங்களுக்கு மேலாக சமூக சேவைகளுக்காக அதிலும் ஒரு படி மேலாக சமூக பணிகளிலும் ஈடுபட்ட திரு. நாகலிங்கத்தின் மக்கள் தொடர்பான வாழக்கைச் சித்தாந்தம் அவரை அவர் ஊரில் மட்டுமல்ல நாடளாவிய ரீதியில் அவரது ஆளுமையினை பிரதிபலிக்கச் செய்திருந்தது.

சமூக சமத்துவ நோக்கில் வறுமையில் இருந்து தான் சார்ந்த சமூகத்தினை மீட்கும் நோக்கில் குடாநாடு தழுவிய பல்வேறு நலத் திட்டங்களினை முன்னெடுத்த ஜோதியாக நாகலிங்கம் அவர்கள் விளங்குகின்றார். குறிப்பாக கூட்டுறவுத் துறைக் கல்வியாளனாக, கூட்டுறவு சார்ந்த அபிவிருத்திப் பணிகளில் தனது வாழ்நாளினை அர்ப்பணித்து அதனூடாக வறுமையில் இருந்த மக்களினை மீட்கும் பணியை தனது கிராமத்தில் ஆரம்பித்து வைத்து இருந்தார்.

வறுமைக்கு உட்பட்ட மாணவர்களுக்குப் பல்வேறுபட்ட நலச்சேவைத் திட்டங்களினையும் நடைமுறைப்படுத்தி இருந்தார். இவ்வகையில் ஒரு கூட்டுறவாளனாக மக்களோடு மக்களாக இணைந்து யாவர்க்கும் இன்முகம் காட்டி எளிமையான பொது வாழ்க்கையில் ஈடுபட்டு இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக விளங்கியவராக திரு. நாகலிங்கம் அவர்கள் விளங்கி இருந்தார்.

சமூக வளர்ச்சிக்கு கூட்டுறவுத்துறையின் பங்களிப்பு என்பது முக்கியமானது என்பதனை உணர்ந்த திரு.நாகலிங்கம் அவர்கள் தன்னை ஓர் கூட்டுறவாளனாக உயர்த்துவதற்கு அரும்பாடுபட்டு அதனூடாக தான் சார்ந்த சமூகத்திற்கு அளப்பரிய சேவையைச் செய்தார் என்பதனை நான் நன்கு அறிவேன். கூட்டுறவு என்பது மக்கள் கூட்டாக உரிமை கொள்ளுவதும் ஜனநாயக முறைப்படி கட்டுப்படுத்துவதுமான ஓர் தொழில் முயற்சியாகும். இதன் மூலம் பொதுவான பொருளாதார, சமூக பண்பாட்டு தேவைகளினையும் எதிர்பார்ப்புகளினையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இதனால் இக்கூட்டுறவு அமைப்பிலே ஓர் பிரதான உறுப்பினராக இருந்து அதன் நிர்வாகத் திறமை மூலம் பொருளாதார அடிப்படையில் வலுப்படுத்திக் கொள்ளும் அமைப்பாக மாற்றி இருந்தார்.

சமத்துவம், நீதி, நியாயம், ஒன்றுமைப்பாங்கு என்பவற்றினை வடிவமாகக் கொண்ட கூட்டுறவு முறையினைப் பயன்படுத்தி தான் சார்ந்த சமூகத்தைப் பொருளாதார ரீதியில் வலுப்படுத்த நாகலிங்கம் அயராது பாடுபட்டார். புதிய எதிர்பார்ப்புகளினை மக்கள் புரிந்து கொள்வதும் அவர்களே திட்டமிட்டுச் செயற்படுத்துவதால் மக்களுக்கான சமாசத்தை அமைக்க வேண்டியதினை உணர்த்தியவர் திரு. நாகலிங்கம் ஆவார்.

கூட்டுறவுத் துறையில் நாகலிங்கம் காட்டிய முக்கியத்துவத்தினை விட இத்துறைகளினை தனது சமூகத்துக்கு ஏற்ற முறையில் மாற்றி அமைத்தது தான் எல்லாவற்றிலும் சிறந்ததாகக் காணப்படுகின்றது. சீரும் சிறப்பும் மிக்க நாகலிங்கம் வகுத்த திட்டங்கள் இன்று செயல்வடிவம் கண்டுள்ளது.

மக்களை மையப்படுத்திய அணுகுமுறையில் கூட்டுறவின் முக்கியத்துவத்தினை உணர்ந்த நாகலிங்கம் வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், சமூக ஒருமைப்பாடு ஆகியவை உட்பட சமூக வளர்ச்சி இலக்குகளினை அடைவதற்காக கூட்டுறவுத் துறையினை பயன்படுத்தி

இருந்ததுடன் இவரது பங்களிப்பு மிக முக்கியமானது. இவ்வாறு நாகலிங்கத்தினை போன்று பல்வேறுபட்ட சமூக நோக்கம் கொண்ட தொண்டர்கள் உலகளாவிய ரீதியில் கூட்டுறவுத் துறைக்கு ஆற்றிய பங்களிப்பினை அடிப்படையாகக் கொண்டு கூட்டுறவுத் துறையினை ஐக்கிய நாடுகள் சபை பெரிதும் மதிக்கின்றது. 1995ஆம் ஆண்டில் நடைபெற்ற சமூக வளங்களுக்கான உலக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வளர்ச்சிக்கான மக்களை மையப்படுத்திய அணுகுமுறையில் கூட்டுறவின் முக்கியத்துவத்தினை ஏற்றுக் கொண்டது. இதனால் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 2012ஆம் ஆண்டினை கூட்டுறவுக்கான அனைத்துலக ஆண்டு என பிரகடனப்படுத்தியது. சமூக பொருளாதார வளர்ச்சியில் கூட்டுறவுத் துறையின் பங்களிப்பினை எடுத்துக் காட்டிய குறிப்பாக வறுமையினைக் குறைத்து வேலைவாய்ப்பு உருவாக்கும் சமூக ஒருமைப்பாடு முதலியவற்றில் கூட்டுறவின் தாக்கத்தினை ஏற்றுக்கொண்டு இவ் அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது.

திரு. நாகலிங்கத்தினுடைய வாழ்க்கை வரலாறு பலருக்கு ஓர் ஆய்வுப் புலமாக அமைய சந்தர்ப்பம் உள்ளது. நாகலிங்கத்திலும் வாழ்க்கைச் சரித்திரத்திலும் ஓர் முன்னோடி வாழ்வை முழுமையாகப் புரிந்துகொள்ள உதவும் ஓர் கருவியாக இவருடைய செயற்பாடுகள் அமைகின்றது. மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ள மதம், கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள், சமூக ஒற்றுமை வேற்றுமை ஏற்றத் தாழ்வுகள், அதில் உள்ள முரண்பாடுகள், அதன் இயக்கங்களினைப் புரிந்துகொள்ள சமூகம் பற்றிய இவரது செயற்பாடுகள் கட்டியம் கூறுகிறது.

ஓர் சமூகத்தில் மனிதன் சந்திக்கின்ற வாழ்வியல் முரண்பாடுகள் ஏன், எப்படி, எப்போது தோன்றுகின்றது என்பதனை தனது வாழ்வியல் நடைமுறை அனுபவங்கள் மூலம் கண்டு அதனை தனது அறிதலுக்கு உட்படுத்தி அதற்கான தீர்வினைக் காண முனைந்தார். அந்தத் தீர்வு எந்த நடைமுறையில் எப்படி அமைய வேண்டும் என்பதனை சமத்துவமான முறையில் தெளிவுபடுத்த முனைந்து இருந்தார்.

இன்று யாழ்ப்பாணத்தில் இழையோடிக் காணப்படும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக நாகலிங்கம் முன் காணப்பட்டது சாதிப் பாகுபாடு. இச்சாதிப் பாகுபாட்டினை அடிப்படையாகக் கொண்டே யாழ்ப்பாண வாழ்வியல் கோலங்கள் இழையோடிக் காணப்படுகின்றன. இச்சாதிக் கட்டமைப்பு இன்றி சமூக இயக்கமோ அல்லது மாற்றமோ கிடையாது. ஏன் சிந்தனை கூடக் கிடையாது. இதனை மையமாகக் கொண்ட சிந்தனையானது இன்று எமது சமூகங்கள் பல பிரிவுகளாகப் பிளவுபட்டு சின்னாபின்னமாகச் சிதறுண்டு கிடப்பதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்து விடுகின்றது. இதனை நன்கு உணர்ந்த திரு.நாகலிங்கம் அவர்கள் சாதிப்பாகுபாட்டுக்கு எதிராகப் போராடினார். "மாவை சனசமூக நிலையம் ஊடாக அதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்தியிருந்தார். சாதிப் பாகுபாட்டுக்கு எதிராக போராட தன்னாலான அளவில் போராடினார். இதற்காகப் பல்வேறுபட்ட திட்டங்களினை நடைமுறைப்படுத்தி சமூக ஒற்றுமை, நோக்கிய பயணத்தில் ஈடுபட்டு வெற்றியும் கண்டிருந்தார்.

திரு.நாகலிங்கம் அவர்களை நான் சந்தித்தது இன்று நேற்றல்ல. 1982இல் முதலில் அவர் என்னை அவர்களுடைய கைப்பணிப் பொருட்கண்காட்சி வைபவத்திற்கு பிரதம விருந்தினராக அழைத்திருந்தார். அன்று தொடக்கம் 10.10.2012 இல் அனுஷ்டிக்கப்பட்ட அவரது பிறந்தநாள் நிகழ்வு வரைக்கும் நான் மிக இறுக்கமாகப் பங்கு பற்றி வருகின்றேன். வறிய மாணவர்களின் புலமைப்பரிசில் வழங்கும் வைபவமாக இருக்கலாம், பாராட்டுவிழா, நூல் வெளியீட்டுவிழா, வருடாந்த விழா, கௌரவிப்பு என சகல வைபவத்திற்கும் எனக்கு அழைப்பு விடாத வைபவமில்லை. நானும் அநேகமான வைபவங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், தெல்லிப்பழை என்ற இடங்களிலெல்லாம் பங்கு பற்றி வருகிறேன்.

இவருடைய திட்டம், பணி மீளாய்வு, நற்பணிகளைக் கண்டு வியப்புற்ற என்னை திரு. நாகலிங்கம் அவர்கள் ஒரு மதியுரை அறிஞராக உயர்த்தியுள்ளார். கிராமத்துக்கும், நாட்டுக்கும் முன்மாதிரியாக நடக்கும் திரு.நா. அவர்களுக்கு நாங்கள் அவர்களின் பணியை போற்றி நிற்க வேண்டுமென்று நானே அவருடைய சீடர்களுக்கு கூறிவந்திருக்கிறேன்.

திரு.நா அவர்களின் சமூக எழுச்சி சிந்தனைகள் கொள்கைகள் கோட்பாடுகள் மூல இலக்குகள் செயற்பாடுகள் ஆகியவை பற்றியும் பலாபலன்கள் பற்றியும் அவரது புலமைகள் ஆளுமைத்திறன் தலைமைத்துவ பண்புகள் போன்றவற்றையும் உள்ளடக்கி ஒரு நூல் வெளி வரவேண்டும் என்ற எனது உள்ளாந்த விருப்பத்தை வெளிப்படையாக கூறிவந்துள்ளேன். இதன் தற்பொழுது எழுச்சிபாதை எனும் பெயரில் இவ்விடயங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கி ஒரு நூல் வெளிவரவுள்ள செய்தியை அறிந்து பெரும்மகிழ்ச்சி அடைகின்றேன். எழுச்சி தந்தை இ.மு அவர்களின் எழுச்சிக்கான பாதைபற்றியும் பலாபலன்கள் பற்றியும் ஏனையோர்களும் அறிந்திருப்பதற்கு எழுச்சிபாதை நூல் ஒருசிறந்த கருவியாக அமையும் என நம்புகிறேன். ஒரு சிலரேனும் இவரது முன்மாதிரியை பின்பற்றவேண்டும். எழுச்சி தந்தை இ.மு அவர்களின் எழுச்சி இயக்கம் ஆராய்ச்சிக்கு உட்படுத்தவேண்டிய முக்கிய விடயமாகும். வெளிவரஇருக்கும் எழுச்சிபாதை நூல் அத்தகைய ஆராய்ச்சிக்கு பெரும் பின்புலமாக அமையும் என நம்புகிறேன். குறிப்பிட்ட நூலானது அறிஞர்கள் பலரால் எழுச்சி இயக்கத்தை பற்றி எழுதப்பட்ட கட்டுரைகளை தாங்கி வருவது ஆராய்ச்சியாளருக்கு பெரிதும் உதவும் என நம்புகிறோம். கூட்டுறவு தந்தை வீரசிங்கம் போன்று இ.மு நாகலிங்கம் அவர்களின் நாமம் நீடித்து நிலைத்து நிற்கும் அவரின் திட்டத்தினால் பயனடைந்தவர்கள் இதை நிறைவேற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை. சமூகத்தின் மத்தியில் கூட்டுறவின் மத்தியில் கல்வியியலின் மத்தியில் ஆங்காங்கே இவரது பணி நிறைவு ஆராயப்பட்டு போற்றப்பட வேண்டும். ''கூட்டுறவு இளவல்'' ''கூட்டுறவு பெரியார்'' ''எழுச்சித் தந்தை'' என மதித்து கௌரவிக்கப்படுகின்ற எழுச்சித் தந்தை அவர்களுக்கு பொருத்தமான உயர்வான ஒரு பட்டம் வழங்கி கௌரவிக்கப்படவேண்டும் என பெரிதும் விரும்புகிறேன். 'மாஜோதி' அல்லது அதிலும் சிறப்பான பட்டம் வழங்கப்படவேண்டும் என்பது எனது பெரு விருப்பமாகும்.

எழுச்சித் தந்தையின் ஆன்மீக பலம்

கலாபூஷணம் சைவப்புலவர்
சு.செல்லத்துரை
ஓய்வுநிலை கல்லூரி அதிபர்

'என்னில் ஆரும் எனக்கு இனியார் இல்லை
என்னிலும் இனியான் ஒருவன் உளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே.
என்பது அப்பர் சுவாமிகளின் தேவாரம்'

தனக்குத்தான் இனியவனாய் இருப்பவனே எல்லார்க்கும் இனியவனாயிருப்பான். அவனுக்கே இறைவனும் இனியவனாய் இருப்பான். அவனே எல்லார்க்கும் இனியவனாயும் இருப்பான். எல்லார்க்கும் இனியவனாய் இருப்பவனே எல்லார்க்கும் இனியதையே செய்வான். அவனுடைய வாழ்வே 'எல்லோரும் வாழ்க! இன்பமே சூழ்க!' என்னும் பண்புடைய இன்பவாழ்வாக இருக்கும். அவன் பிறர்க்குத் துன்பம் செய்ய மாட்டான். ஆதலால் அவனுக்கும் துன்பம் வராது. இதனையே வள்ளுவரும்

'தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தோன்றும்
துன்னற்க தீவினைப் பால' - என்றார்.

இந்த வகையில் வாழ்வை அமைத்துக் கொண்டவர்களே ஆன்மீக நெறியில் உயர்ந்து நிற்பர் அவர்களுக்கு அந்நெறி கருவில் அமைந்த திருவாக இயல்பாகவே இருக்கும்.

ஆன்மீகம் எனப்படுவது ஆன்மாவைப் பற்றியது. ஆன்மாவின் ஈடேற்றம் பற்றியது. ஆன்மா எனப்படுவது உயிர். எங்கள் உயிர் எங்கள் உடலில் இருக்கிறது. உயிர்தான் உடலை இயக்கிக் கொண்டிருக்கிறது. உயிர் இல்லாவிட்டால் இந்த உடல் இயங்காது; சவமாகிப் போய்விடும்.

உடலை இயக்குவது உயிர் என்றால் இந்த உயிரை இயக்குவது எது - அதுதான் உயிர்க்குயிர் எனப்படும் கடவுள். எனவே உடல் வாழ்வதற்கு உயிர் தேவை; உயிர் வாழ்வதற்குக் கடவுள் அருள் தேவை. ஆகவே கடவுள் அருள் துணைக் கொண்டு உயிர் வாழ்வு ஈடேற்றம் பெறுவதற்கான முயற்சிகளே ஆன்மீகம் ஆகும்.

உடலை ஓம்புவதுபோல உயிரையும் ஓம்பவேண்டும். உடலை நீர் கொண்டு தூய்மை செய்வது போல உயிரை உண்மையெனும் வாய்மை கொண்டு தூய்மை செய்யவேண்டும்.

உடலுக்குச் சத்துள்ள உணவு நுகர் பொருளாவது போல உயிருக்குப் புண்ணியச் செயல்களே நுகர் பொருளாக வேண்டும்.

உடலுக்கு ஓய்வுபோல உயிருக்குத் தியானம் செய்தல் வேண்டும்.

உடலுக்கு நோயற்ற சுகவாழ்வு போல உயிருக்குப் பொய் களவு, கள், காமம், குருநிந்தை முதலான பாவச் செயல்களற்ற அறவாழ்வு வேண்டும்.

உடலுக்கு உயிர் துணையாவது போல உயிருக்கு இறையருள் துணையாக வேண்டும்.

மொத்தத்தில் இந்த உடலே உயிரின் ஈடேற்றத்திற்குக் கருவியாகப் பயன்பட வேண்டும். அதற்காகவே இந்த உடல் ஓம்பப்பட வேண்டும்.

இவ்விதமான தன்னலமற்ற அறவாழ்வு வாழ்பவர்க்கே ஆன்மீக பலம் உண்டாகும். ஆன்மீகபலம் உடையவர்க்கு எடுத்த கருமம் யாவும் வெற்றியாகும்; இறையருளும் கைகூடும்.

இந்த நோக்கில் பார்க்கும் போது எழுச்சித் தந்தை உயர்திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் எம் கண்முன் நிற்கின்றார். அவர் 1936.10.14 இல் பிறந்த நாள் முதல் இன்று பவளவிழாக் காலத்தைக் கடந்த பின்னும் அவருடைய வாழ்வு ஆன்மீகத்தில் பின்னிப் பிணைந்து செல்வதைக் காண முடிகிறது. தனித்து அவரும் அவர் குடும்பமும் மட்டுமல்ல அவர் சார்ந்துள்ள சமூகமும் இந்நெறியில் நிற்பதைக் காண்கின்றோம்.

புண்ணிய பூமியாகிய மாவிட்டபுரத்தில் முருகேசு கற்பகம் தம்பதியினரின் ஏகபுத்திரனாகப் பிறந்தவர் இவர். பிறந்த முதலாம் வருடத்திலேயே உயிராபத்தான நோய் வந்து இனித்தப்ப மாட்டார் என்று வைத்தியர்கள் கைவிட்ட நிலையில் தெய்வமே துணையெனத் துணிந்தார் தாயார். குலதெய்வங்களான மாவை சித்திவிநாயகரையும், மாவை அம்பாளையும் வேண்டுதல் செய்து அம்பாள் சந்நிதானத்தில் வைத்திருந்து இராப்பகலாகப் பிரார்த்தனை செய்ததன் பேறாக உயிர்ப்பிச்சை கிடைத்தது. இவர் தெய்வத்தின் குழந்தையானார். அன்று இவருடைய உள்ளத்தில் ஊற்றெடுத்த தெய்வபக்தி படிப்படியாக ஆன்மீக வாழ்வாகப் பரிணமித்தது. இரு ஆலயங்களிலும் தீவிர பக்தனாக இருந்து வருகின்றார்.

1947இல் 11 வயது சிறுவனாக இருக்கும் போதே இரு ஆலயங்களையும் தளமாகக் கொண்டு இவரால் ஆரம்பிக்கப்பட்ட சமயப் பணிகளின் அத்திவாரத்தில் சமூகப்பணிகளாக வளர்ச்சி பெற்றுத் தற்காலத்தில் பிரபலமாகப் பேசப்படுகின்ற மாவை சமூக எழுச்சி இயக்கத்தின் தோற்றுவாயாக இடம் பெற்றுள்ளது.

ஆலய வளர்ச்சி, ஆலயக் கிரியைகள், வழிபாட்டு முறைகள் கூட்டுப்பிரார்த்தனை என்பவற்றை ஒழுங்கமைத்து வழிநடத்துகின்ற செயற்பாடு இவருக்கு இயல்பாகவே கைவந்தகலையாகியது. அதனால் இவரை எல்லாரும் 'சின்னச்சாமி' என்றே அன்பாக அழைக்கத் தொடங்கினர், முதியவர்களாயிருந்தால் என்ன, குழந்தைகளாயிருந்தால் என்ன எல்லோரும் குளித்துத் தோய்த்துலர்ந்த உடையுடன் வரவேண்டும். எல்லோரும் கூட்டு வழிபாட்டில் பங்குபற்ற வேண்டும் என்ற நடைமுறையைப் பழக்கப் படுத்தினார். இதன் மூலம் சைவப் பண்பாடு மலர்ந்தது.

சமயச் செயற்பாடுகளுக்குக் கலைகளும் துணையாக வேண்டும் எனும் செயற்பாட்டில் பண்ணிசை வகுப்புகள், காத்தவராயன் கூத்து, வசந்தன் ஆட்டம், கோலாட்டம், நவராத்திரிக்கால நடன, நாடக நிகழ்ச்சிகளில் சிறுவர்களையும், பெரியவர்களையும் ஈடுபடுத்திக் கலாசாரப் பண்பாட்டு மலர்ச்சிக்கும் வித்திட்டார்.

'உருவேறத் திரு ஏறும்' என்பதற்கமையப் படிப்படியாக ஆலயச் செயற்பாடுகள் அனைத்தும் வளர்ச்சி கண்டன. 1968, 1969 இல் மாவை சித்திவிநாயகர் ஆலயம் சிறிய அளவில் முழுமையான ஆலயமாக அமைக்கப்பட்டு மகாகும்பாபிஷேகமும் தொடர்ந்து மண்டல அபிஷேகமும் நடந்து சமூகத்தில் மேலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

இரு ஆலயங்களும் தனிநபர் ஆதிக்கத்தின் கீழ் இருந்த காரணத்தால் வழிபடுவோர்க்கும் உரிமையாளர்க்கும் இடையில் இருந்துவந்த கசப்புணர்வுகள் தடைக்கல்லாயிருப்பதை இல்லாதொழிக்கும் நோக்கோடு 1969 முதல் 15 ஆண்டு காலமாக எடுக்கப்பட்ட விடாமுயற்சியால் 1984இல் எண்ணம் வெற்றி பெற்றது.

இரு ஆலயங்களுக்கும் தனித்தனி தர்மகர்த்தா சபைகள் உருவாக்கப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் நிர்வாக உரிமையும் ஒப்படைக்கப்பட்டன. இவர் தொடர்ந்து செய்துவந்த பெருமுயற்சியே இவ்வெற்றிக்கு மட்டுமல்ல ஊர்மக்கள் ஒவ்வொருவரும் தமது கோயில் எனும் பற்றுடன் வழிபாட்டிலும், வளர்ச்சியிலும் ஈடுபடக் காரணமாயமைந்தது.

1990 இல் ஈழப்போர் காரணமாக வலிவடக்கு அதிஉயர் பாதுகாப்பு வலயம் ஆக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பிரதேச மக்கள் முற்றாக இடம் பெயர்ந்ததால் அப்பிரதேச அனைத்து ஆலயங்களிலும் பூசைவழிபாடு தடைப்பட்டமை யாவரும் அறிந்ததே. அக்காலப்பகுதியில் அப்பிரதேசக் கோயில்களின் கட்டிடங்கள் சேதம் அடைந்தும், விக்கிரகங்கள், சொத்துக்கள் களவாடப்பட்டும் அழிவுற்றன.

2011 இல் இப்பிரதேசத்தின் ஒரு பகுதி மீள்குடியேற்றத்திற்கு விடுவிக்கப்பட்ட போது அப்பகுதி ஆலயங்கள் சில புனரமைக்கப்பட்டன. பிரசித்தி பெற்ற பெரிய கோயில்களான நகுலேஸ்வரம், மாவை முருகன் ஆலயம் புனரமைக்கப்பட்டன. எனினும் இவ்விரு ஆலயங்களும் அப்பகுதிக்குரிய வழிபடுவோரின் குடும்பங்கள் மீளக் குடியேறுவதில் ஏற்பட்ட தாமதத்தினால் இன்னும் புனரமைப்பு வேலைகள் தொடங்கப்படவில்லை.

எனினும் இவர் சும்மா இருக்கவில்லை. மீள்குடியமர்வு முயற்சி ஆரம்பிக்கப்பட்டதோடு, புனர்நிர்மாண வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டு 2013 பிற்பகுதியில் கட்டிட நிர்மாணப் பணிகளைப் பூர்த்திசெய்து மகாகும்பாபிஷேகமும் செய்யப்பட இருக்கிறது. இம்முயற்சிகள் யாவற்றுக்கும் காத்திரமான தூண்டுதல் சக்தியாக இருந்துவருவது வழிபடுவோர் குடும்பங்கள் கொண்டுள்ள அசையாத நம்பிக்கை எனலாம்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் முன்னணியில் நின்று செயற்படுவதற்கு இறைவனால் பணிக்கப்பட்டவர் போல ஆர்.எம்.என். செயற்படுவது உணரப்படுகிறது. இடம்பெயர்ந்து இருந்தாலும் குல தெய்வ வழிபாட்டைச் செய்து கொண்டே இருக்கிறார். கல்வி, குடும்பம், தொழில், நல்வாழ்வு அமைவதற்குக் குலதெய்வ வழிபாடே காரணம் என்பதை இவரும் ஏனையோரும் உறுதியாக நம்புகின்றனர்.

1955இல் யோகாசனம் பயின்று இன்று வரை தவறாமல் செய்து கொண்டு வருவதும், மாவை பாரதி வாசிகசாலை, மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் ஆகியவற்றைத் தளமாகக்

கொண்டு யோகாசனப் பயிற்சி பழக்கி அதனைப் பலரும் கைக்கொள்ள வைத்ததும் ஆன்மீக வாழ்வுக்கு உறுதுணையாக அமைந்துள்ளது. சுவாமி ஸ்ரீ சச்சிதானந்தாஜி அவர்களை குருவாகப் பெற்று அவரின் சீடரான யோககலாஜோதி வைரவசண்முகம் அவர்களின் அனுசரணையுடன் யோகக் கலையைச் சிறப்பாகப் பயின்றுள்ளார். யோகக்கலா ஜோதியின் வாழ்நாள் நீடித்த அனுசரணையுடன் யோகக் கலைப் பயிற்சி வகுப்புகளை நடாத்தி பயிற்சி பெற்றவர்களுக்கான போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்கும் திட்டத்தையும் மேற்படி நிறுவனங்களினூடாக பல ஆண்டுகள் செயல்படுத்தி வந்துள்ளார். அவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் பலர் இன்றும் தொடர்ந்து பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

சின்னஞ்சிறு வயதில் கதிர்காமக்கந்தனுக்கு நேர்த்தி வைத்துச் சடை வளர்த்துச் சின்னச்சாமி எனும் பெயருடன் தாயார் மலைக்குத் தூக்கிச் சென்று நேர்த்திக்கடன் முடிக்கப்பட்டது. ஒருமுறையல்லப் பலமுறை கதிர்காம யாத்திரை செய்து வருகின்றார்.

தாய்வழியில் விரதம் அனுட்டிக்கும் முறை இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. மாவை முருகன் மகோற்சவம் இருபத்தைந்து நாட்களும் விரதம், வெள்ளி, செவ்வாய், பூரணை, அமாவாசை, நவராத்திரி, சிவராத்திரி, சதுர்த்தி, திருவெம்பாவை காலங்கள் வாழ்நாள் முழுவதும் விரதமே.

1988 முதல் மனைவியார் சகிதம் 24 ஆண்டுகளாக கந்தசஷ்டி விரதமிருந்து ஜிந்துப்பிட்டி முருகன் ஆலயத்தில் வழிபாடு செய்யும் வழக்கம் தொடர்கிறது.

2000 ஆம் ஆண்டு தொடக்கம் விநாயகர் விரதம் 21 நாட்களும் இருந்து கொட்டாஞ்சேனை விநாயகர் ஆலயத்தில் வழிபாடு செய்யும் வழமை தொடர்கிறது.

1969இல் குல தெய்வ கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மச்ச மாமிசம் புசித்தலைத் துணைவியாரும் தானும் கைவிட்டு தூய சைவ உணவுடன் வாழ்கின்றனர். வெளிநாடுகளில் வேலையின் நிமித்தம் இருந்த காலத்திலும் 1989இல் பஹரெய்னிலும் 1973,1974 இல் லண்டனிலும் வாழ்ந்த காலங்களிலும் சைவ உணவே உண்டு வாழ்ந்தார்.

1996 இலிருந்து பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் தென்னிந்திய திருத்தல யாத்திரைகளை மேற்கொண்டுள்ளார். முருகனின் ஆறுபடை வீடுகள் பாடல்பெற்ற சிவத்தலங்களான சிதம்பரம், திருவண்ணாமலை, சீர்காழி, திருவாரூர், திருவான்மியூர், வைத்தீஸ்வரன் கோயில், காளாஸ்தி, திருப்பதி, மதுரை மீனாட்சி, காஞ்சிபுரம், மேல்மருவத்தூர், ஸ்ரீரங்கம், கன்னியாகுமரி, தஞ்சைப்பெருங்கோயில், புட்டபர்த்தி முதலான தலங்களுக்கெல்லாம் பலதரம் யாத்திரை செய்துள்ளார். ஈழத்தின் பிரசித்தி பெற்ற தலங்களுக்கெல்லாம் யாத்திரை செய்துள்ளார்.

75 வயது பவள விழாவின் போது பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவரும் சேர்ந்து தென்னிந்திய தலயாத்திரை செய்ததுடன் பவளவிழாவை அவ்வேளையில் நடாத்தும் பேறு இவருக்குக் கிடைத்தது. அதுமட்டுமன்றிப் பவளவிழாவை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் கனடா ரொரன்ரோ வரசித்திவிநாயகர், இலண்டன் லூசியம் சிவன்கோயில், கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் ஆகிய தலங்களில் குடும்பத்தினரும்

நண்பர்களும் சேர்ந்து செய்தமை திருவருளின் செயலேயாகும்.

பாடசாலைப் பருவத்தில் மாவிட்டபுரம் அமெரிக்க மிஷன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்ற இவர் பாடசாலைப் பருவத்தில் சைவ சமய வழிபாடுகளில் முன்னின்றுழைத்தார். கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளராயிருந்த காலத்தில் 1972 தொடக்கம் 1980 வரை பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரியில் தனியான வழிபாட்டு மண்டபம் அமைத்து வெள்ளிக்கிழமை, பூரணை, நவராத்திரி, சிவராத்திரி, போன்ற புண்ணியகாலங்களில் வழிபாட்டுக்கு வழிவகை செய்தார். இதேபோலவே திருமலையில் (1960-1964) யாழ்ப்பாணத்தில் (1965-1971) இருந்த காலங்களிலும் ஆங்காங்கு வழிபாட்டுக்கு வகைசெய்தார்.

தன்னைச் சார்ந்தோரின் சமய அறிவு மட்டத்தை உயர்த்துவதற்கும் பல வழிகளைக் கையாண்டார். மங்கலமான திருமண, பூப்புனிதநீராட்டு, மற்றும் பாராட்டு வைபவங்கள், நினைவு விழாக்களின் போது சைவநூல் அறிஞர்கள் மூலம் சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்துச் சமய அறிவை விருத்தி செய்தார். இதற்குப் பல அறிஞர்களின் சேவையையும் பெற்றுக் கொண்டார்.

நினைவு நிகழ்வுகளின் போது வெறும் கல்வெட்டு வெளியிடுவதை விட்டு பயனுள்ள நினைவு நூல் வெளியிடல் மூலம், வரலாறுகளை ஆவணப் படுத்தல், வாழ்வியல் சடங்குகளுக்கு விளக்கம், திருமுறை நூல்கள் விரத விளக்கங்கள் முதலான துறைகளில் நூல்களை வெளியிடும் பணியைத் தொடர்ந்து செய்து வருகின்றார். இதற்குப் பண்டிதர் சி.அப்புத்துரை, சைவப்புலவர் சு.செல்லத்துரை, கீதா பதிப்பகம் வி.இராசேந்திரம் முதலான அறிஞர்களின் உதவியைப் பெற்றுள்ளார். இதுவரை 100 நினைவு நூல்கள் வரை வெளிவருவதற்கு ஆர்.எம்.என் அனுசரணை வழங்கியுள்ளார். அவற்றுள் சில நூல்கள்

1. விநாயகர் துதிப்பா – மாவை அமரர் தாமோதரம்பிள்ளை, வயிரவப்பிள்ளை நினைவு வெளியீடு 22.08.2004.
2. வற்றாப்பளை கண்ணகி அம்மன் வரலாறு – முல்லைத்தீவு கந்தையா நீலாம்பரம் நினைவு 12.11.2005.
3. செல்வச் சந்நிதி அச்செழு கந்தையா வெற்றிவேலு நினைவு 31.03.2005.
4. அருள்நிதி – மாவை விசுவர் சிதம்பரி சின்னத்தம்பி நினைவு 18.12.2005.
5. சைவ நற்சிந்தனை - அரியாலை பண்பாளர் சிதம்பரி செல்லத்துரை நினைவு 9.03.2008.
6. சைவ வாழ்வியல் சடங்குகள் - மாவை ப.சிதம்பரப்பிள்ளை நினைவு 20.03.2008.
7. ஆத்ம சிந்தனை மலர் - சமூகப் பற்றாளர் மாவை வல்லிபுரம் - நல்லையா நினைவு 19.02.2008.

8. திருமுறை அமுதம் - ஆனைக்கோட்டை பண்பாளர் க.கனகரத்தினம் நினைவு 10.04.2011.

9. வித்தியா ஜோதி - திரு.சி.புலேந்திரன் ஞாபகார்த்த வெளியீடு 2013.

10. சைவ வாழ்வியல் பேணுவோம் - திருமதி சுசிலாதேவி கணேசமூர்த்தி 2013.

ஆன்மீக வாழ்வில் வெற்றிபெற்றுள்ள எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் தன்னுள்ளத்தில் ஆழப்பதித்துத் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் வகுத்துள்ள சைவ வாழ்வியல் அனுபவச் சிந்தனைகள்.

- நல்ல சிந்தனையும், சொல்லும், செயலும் உள்ளவர்களிடம் நன்மை தானே தேடிவரும்.
- வழிபடல் நம்பணி, வழிநடத்தல் இறைவன் செயல்.
- சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவசமயத்தவர்கள் ஏனைய மதங்களையும் மதித்து நடப்பர்.
- எல்லா நன்மையும் எமக்கு இறைவனால் வருவனவே.
- இறை நம்பிக்கையுடன் செய்யப்படும் கருமங்கள் இடையில் தடைவரினும் வெற்றியையே தரும்.
- நாம் செய்யும் புண்ணியங்கள் வங்கி வைப்புப் போன்றவை. அவை தக்க வேளையில் பயன்தரும்.
- நம் செயல் எல்லாம் இறைவன் பணியே எனச் செய்தால் துன்பம் தொடராது.
- நாம் பிறந்ததும், வாழ்வதும் இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாகும்.
- ஆன்மீக வாழ்வே பேரின்பத்தைத்தரும்.

இந்த வாழ்வியற் சிந்தனையுடன் தானும் வாழ்ந்து தன்னைச் சேர்ந்தவர்களையும் வாழ வைக்கும் எழுச்சித் தந்தை உயர்திரு. ஆர்.எம். நாகலிங்கம் அவர்ளுடைய ஆன்மீகப் பலமே சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினதும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் வெற்றிக்கு வித்தாகும் என்பதில் ஐயமில்லை.

முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்
பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே - திருமந்திரம்

எழுச்சி தந்தையும் தலைமைத்துவமும்

திரு. வே.திருச்செல்வம்
கணக்காளர்
துறைமுக அதிகார சபை

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி அந்நாட்டு மக்களின் வாழ்க்கைதர முன்னேற்றம் என்பன அந்நாட்டு மக்களினை நிர்வகிக்கின்ற அரச தலைவனின் தலைமைத்துவ பாங்கினில் தங்கியுள்ளது.

அவ்வாறே ஒரு சமூகத்தின் எழுச்சி அச்சமூக மக்களின் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி, கல்வி அறிவிலான முன்னேற்றம், அச்சமூகத்தினை ஏனைய சமூகங்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்ற தன்மை என்பன அச்சமூகத்தினை ஒரு வளர்ச்சிப்பாதையினை நோக்கி நகர்த்திச் செல்கின்ற தலைவனின் தலைமைத்துவப் பாங்கினில் தங்கியுள்ளது.

ஒரு தலைவனானவன் தம்முடன் உள்ளவர்களை ஒரு குறித்த நோக்கம் அல்லது இலக்கினை அடையும் பொருட்டு அந்நோக்கினை அல்லது இலக்கினை நோக்கி ஏனையோர்களை நகர்த்திச் செல்பவன் ஆவான். ஒரு சிறந்த தலைவனானவன் கருத்துருவாக்கும் திறன், திட்டமிடல் நடைமுறைப்படுத்துவதிலான ஆற்றல், செயற்பாட்டுத் திறன், துணிச்சலான அணுகுமுறைகள், பேச்சுவன்மை, மொழித்திறன், தீர்க்க தரிசனமான தீர்மானம் எடுக்கும் ஆற்றல், ஏனையோரது கருத்துக்களைச் செவிமடுக்கும் தன்மை போன்ற தலைமைத்துவப் பாங்குகளை கொண்டவனாகக் காணப்படுகின்றான்.

அன்றும், இன்றும், என்றும் எமது சமூகத்தினை வளர்ச்சிப்பாதையினை நோக்கி நகர்த்திச் செல்கின்றவரும், எமது சமூகத்தின் மாணவச் செல்வங்களின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைப்பவரும் எமது சமூகத்தினை ஏனைய சமூகங்களை விட ஒரு வளர்ச்சியடைந்த சமூகமாகத் திகழ வேண்டும் என்பதற்காகத் தன்னையே அர்ப்பணித்தவரும், எமது சமூகத்தினை வழிகாட்டி செல்கின்ற தலைவன் ஆன உயர்திரு மேன்மைமிகு R.M.நாகலிங்கம் ஐயா அவர்களின் தலைமைத்துவப் பாங்குகள் பற்றியும், அவருடன் சிறுகாலம் இணைந்து செயலாற்றிய போது அவரிடம் கண்டு கொண்டவற்றினையும், அவரிடம் கற்றுக்கொண்டவற்றினையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

என்றும் உலகளாவிய ரீதியில் ஒரு விவாதத்திற்குரிய விடயமாகப் பேசிக்கொள்ளப் படுகின்ற விடயம் ஆனது 'தலைவர்களின் தலைமைத்துவப் பாங்கு' என்பது அவர்கள் பிறக்கின்ற போதே இயல்பாகவே காணப்படுகின்றதா? அல்லது தலைவர்களின் தலைமைத்துவப் பாங்கானது உருவாக்கப்படக்கூடியதா? என்பதாகும். உண்மையில் நான் கூறவிரும்புவது யாதெனில் எழுச்சித் தந்தை போன்ற தலைவர்கள் தலைமைத்துவப் பாங்குடனே பிறக்கின்றார்கள் என்பதாகும். தந்தையிடம் இயல்பாகவே காணப்பட்ட தலைமைத்துவப் பாங்குகளுடன் அவர் தொழில் புரிந்த கூட்டுறவுத் துறை தொடர்பான விரிவுரையாளராகச்

சேவையாற்றியதன் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவமும், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளராகக் கடைமையாற்றியதன் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவமும், அவரின் தலைமைத்துவப் பாங்கிற்கு மென்மேலும் வலுச்சேர்த்தது என்றே கூறிக்கொள்ள முடியும், அது மட்டுமன்றி எமது நாட்டிலுள்ள தலைசிறந்த கல்விமான்களுடனான நட்புறவின் மூலம் தனது தலைமைத்துவப் பாங்கினை மேலும் வளர்த்துக் கொண்டுள்ளார் என்றே கூறிக்கொள்ள முடியும்.

தந்தை சிறுவயதாக இருக்கின்ற காலத்தில் எமது சமூகமானது ஒரு அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட, கல்வியில் முன்னேற்றம் குன்றிய, கலாசார விழுமியங்கள் பற்றிய விழிப்புணர்வின்றிய கிராம ரீதியாகவும், கிராமங்களுக்குள்ளும் பல பிரிவுகளைக் கொண்ட ஒற்றுமை குன்றிய ஒரு பின்தங்கிய சமூகமாகவும் ஏனைய சமூகங்களினால் இழிவுபடுத்தப்படுகின்றவொரு சமூகமாகவும் காணப்பட்டது. எமது சமூகத்தின் தந்தையும் இதன் தாக்கத்தினை தனது சிறுவயதிலேயே உணர்ந்தார். அன்று முதல் எமது சமூகத்தினை ஒரு வளர்ச்சிப் பாதையினை நோக்கி நகர்த்த வேண்டும் என்ற எண்ணம், அந்த சிந்தனை அவரின் ஆழ்மனதில் எழுச்சி கொண்டது. தனது சிந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு நிறுவன ரீதியான அமைப்பு ஒன்று வேண்டும் எனவும் எண்ணி 1955ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தான் பிறந்து வளர்ந்த இடமாகிய மாவிட்டபுரத்தில் உள்ள எமது சமூகத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் தனது தலைமைத்துவத்தினால் கவர்ந்து 'மாவை பாரதி வாசிகசாலை' என்ற அமைப்பினை உருவாக்கினார். இவ்வமைப்புப் பின்னர் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. அவ்வமைப்பின் மூலம் சமூக வளர்ச்சிக்கான தனது சிந்தனைகளையும் எண்ணங்களையும் மாவையில் உள்ள மாணவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள், முதியவர்கள் என வேறுபாடின்றி வெளிப்படுத்தியதுடன் அவை தொடர்பான விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தினார். அவரது தலைமைத்துவத்தின் கீழ் அன்று மாவிட்டபுரத்தில் வெவ்வேறு பிரிவுகளாகவும் குழுக்களாகவும் இருந்த எமது சமூகத்தினை ஒன்றுபட்ட ஒரு சமூகமாக மாற்றியமைத்தார். அங்குள்ள மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான செயற்றிட்டங்களை வகுத்து அவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கு அயராது உழைத்தார். அதுமட்டுமின்றி சமய கலாசார வளர்ச்சிக்காக அங்கிருந்த இரு கோயில்களையும் புனரமைத்து வழிபாட்டுக் கருமங்களை அங்கீகரிக்கப்பட்ட முறைகளுக்கு அமைய ஏற்படுத்துவதன் மூலம் சமய சிந்தனைகள், சமய கருத்துகளை போதிப்பதிலும் கலாசார நிகழ்வுகளை ஏற்படுத்தி, ஒழுங்குபடுத்தி நடத்துவதிலும் அங்குள்ள மக்களிடையே விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி அதன் மூலம் ஒரு சிறந்த சமய கலாசார விழுமியங்களை பின்பற்றுகின்றவர்களாக மாற்றியமைத்தார். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மாவிட்டபுரம் என்ற கிராமத்திலுள்ள எமது சமூகம் ஏனைய சமூகங்களுக்கு ஈடான ஒரு வளர்ச்சியடைந்த சமூகமாக மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணத்தினை தனது தலைமைத்துவத்தின் கீழ் மாற்றியமைத்தார்.

எவ்வாறு மாவிட்டபுரம் எனும் ஒரு சிறு கிராமத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தினாரோ அதே போன்று யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய கிராமங்களில் உள்ள எமது சமூக உறவுகளிடமும் இவ்வாறானவொரு மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனை தந்தையின் மனதில் உதயமானது. அதன் அடிப்படையில் அச்சிந்தனையினை அடையும் நோக்கில் ஏனைய பிரதேசங்களில் உள்ள முன்னோடித் தலைவர்களை ஒன்றிணைத்து அவர்களின் கருத்துகளையும் உள்வாங்கி எமது சமூகத்தினை முன்னேற்றப் பாதையினை

நோக்கி நகர்த்தி செல்வதற்குத் தேசிய ரீதியான ஒரு நிறுவன அமைப்பு வேண்டும் என்ற எண்ணக்கரு முன்வைக்கப்பட்டது. இதன் விளைவாக 1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எமது சமூகத்திற்கென 'சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்' எனும் ஒரு தேசிய வளர்ச்சி நிறுவனம் எழுச்சித் தந்தையின் தலைமைத்துவத்தின் கீழ் தோற்றம் பெற்றது. இவ்வமைப்பின் மூலம் சமூக எழுச்சி, மாணவர்களின் கல்வி வளர்ச்சி, சமூக ஒற்றுமை, சமய கலாசார விழுமியங்கள் தொடர்பான விழிப்புணர்வு போன்றவற்றிற்கான செயற்றிட்டங்களை உருவாக்கினார். அச்செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகக் கிராமம் தோறும் சென்று அங்குள்ள மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகளுக்கு அச்செயற்றிட்டங்கள் தொடர்பான கருத்துக்கள், விளக்கங்களை வழங்கி அதன் மூலம் செயற்றிட்டங்களை மிகவும் நுட்பமான முறையில் அனைவரையும் உள்வாங்கி நடைமுறைப்படுத்தினார். எழுச்சித் தந்தையின் தலைமைத்துவப் பாங்கினால் கவரப்பட்ட மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் என வேறுபாடின்றி அனைவரும் தந்தையின் தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட்டனர்.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமானது சமூக முன்னேற்றத்திற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி தேவை என்பது பிரதானமானதும், இன்றியமையாததுமாகக் காணப்பட்டது. இவ் நிதித் தேவையை முன்னுணர்ந்த எழுச்சித் தந்தை நிதி திரட்டுவதற்காக பல நிதி மூலங்களை உருவாக்கினார். திருமண நன்கொடை, ஞாபகார்த்த நன்கொடை, பொது நன்கொடை என்பனவே அவையாகும். இவ்வாறான நிதி மூலங்களின் மூலம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் திரட்டப்படுகின்ற நிதியானது சமாசத்தினதும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு திரட்டப்படுகின்ற நிதியினைக் கையாள்வதற்கு ஒரு வங்கியமைப்பு அல்லது நிதி அமைப்பு அவசியம் என்ற எண்ணம் எம் தந்தையின் உள்ளத்தில் உதித்தது. இச்சிந்தனையின் வெளிப்பாடாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 1999ஆம் ஆண்டு 52ஆம் இலக்க சட்டத்தின் மூலம் எமது சமூகத்திற்கான நிதி நிறுவனமாக எழுச்சித் தந்தையின் தலைமையின் கீழ் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் தோற்றம் பெற்றது. இது சமூக முன்னேற்றத்திற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியினை வழங்குகின்றவொரு வங்கி அமைப்பாக காணப்படுகின்றது.

அன்று தந்தையினால் ஸ்தாபிக்கப்பட்ட சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசத்தினாலும், அவரின் சிந்தனையில் தோன்றிய செயற்றிட்டங்களின் மூலமும், இன்று எமது சமூகம் எத்தனையோ கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக வழிகாட்டிகள் என்பவர்களைக் கொண்டிருப்பதுடன் எமது சமூகம் கல்வி வளர்ச்சி, சமூக எழுச்சி, பொருளாதார முன்னேற்றம், சமூக ஒற்றுமை போன்றவற்றில் ஏனைய சமூகங்களுக்கு இணையாகவும், ஏனைய சமூகங்களுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்வதற்கு பிரதானமானதும், முதன்மையானதும் காரணம் எழுச்சித் தந்தையின் தீர்க்க தரிசனமிக்க தலைமைத்துவமும், வழிகாட்டலுமே ஆகும்.

அன்று மாவிட்டபுரம் என்றவொரு சிறு கிராமத்தில் ஒரு குழுவினரின் தலைவனாகத் திகழ்ந்த எழுச்சித் தந்தை அவரது தலைமைத்துவப் பாங்குகளால் இன்று உலகளாவிய ரீதியில் எமது சமூகத்தின் தந்தையாகவும், எமது சமூகத்தினை வழிகாட்டிச் செல்கின்றவொரு எழுச்சி வீரனாகவும் திகழ்கின்றார் என்பதனை மிகவும் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமூக உயிர்ச்சிக்கு வித்திட்ட செம்மல்

திரு. மாயாதிரவியம் கந்தையா
முன்னாள் பொதுச் செயலாளர்
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்
முன்னாள் முகாமைப் பணிப்பாளர்,
புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்

சமூக உயர்ச்சிக்கு வித்திட்ட செம்மல் திரு.நாகலிங்கம் அவர்களைப் பற்றி, சில வார்த்தைகள், எழுதுவதில், சொல்வதில் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமிதமடைகிறேன். 1975, 1980இலும், அதற்கு முன்பு, கிராமங்களில், சிறு சிறு குடும்பங்களாகவும், குழுக்களாகவும், அடிமைகளாகவும், பயந்தவர்களாகவும் ஒதுங்கி வாழ்ந்த, ஒரு இனத்திற்கு விடுதலையும், விடிவும் வேண்டி இன்றுவரை பாடுபட்டு வருபவர் தான் இவர்.

கிராமம் தோறும் எழுச்சிக் கூட்டங்களை நடாத்தி, முன்னோடிகளை அடையாளங்கண்டு, ஆதரவைப் பெருக்கி, 1981இல் ஏழாயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களுடன் செல்வச் சந்நிதியில் ஓர் மாபெரும் மகாநாட்டை நடாத்தி உயர்ச்சிக்கு வித்திட்டு சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தை உருவாக்கிய பெருமையும் இவருக்கே.

முன்னேற்றமும், வளர்ச்சியும் கருதி, ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்து, கடந்த முப்பத்திரண்டு வருடங்களாக, படிப்படியாக நடாத்திய தொடர்ச்சியான அர்ப்பணிப்புத்தான் இன்றைய வளர்ச்சி, பட்டினி கிடந்தாலும் பத்தாம் வகுப்புவரை படிக்கவேண்டும் என்பதை உணராதவரும் உணர்ந்தனர். குடிமைத் தொழில் ஒழித்தலை முழு மனதுடன் மேற்கொண்டனர். தொழிற்பெயர்சி தேவை என்பதை விஸ்வாசத்துடன் உணர்ந்து, பல்வேறு தொழில்களை மேற்கொண்டனர். மது அருந்தல், தமக்கும், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் ஆபத்து என்பதை மனசார உணர்ந்தனர். கிராமத்தால், சமயத்தால். பொருளாதாரத்தால் தமக்குள் இருந்த வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையைப் பேண இவரது தலைமையில் நடாத்திய போதனைகள், வழி வகுத்தன.

சமுகத்திற்கு ஒரு சமாசத்தை உருவாக்கியது மட்டுமல்லாமல், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் ஒன்றையும் ஸ்தாபித்து, நிதி சேகரித்து, மூதலீடு செய்து, வரும் வருமானத்தில், சமூக வளர்ச்சிக்கு உதவியளிப்பது மறக்கமுடியாத தொண்டாகும். பிள்ளைகள் படிப்பதற்கு ஊக்கம் கொடுத்து முடியுமான நிதி உதவி அளித்து, திறமைச் சித்தி

பெறுவோருக்கும், பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கும் பாராட்டுக்களை நடாத்தி, மற்றைய சமூகங்களின் நீரோட்டத்தில் கலக்க வைத்த பெருமையும் இவருக்கே.

பல ஆண்டுகாலமாக நடந்த உள்நாட்டுக் கலவரங்களினால் பாதிக்கப்பட்டவர்கள், பெற்றோரை இழந்தவர்கள், அங்கவீனமுற்றவர்கள். விதவைகள், இப்படியான பல இன்னல்களுக்கு ஆளாகியவர்களுக்கெல்லாம் உதவிக்கரம் நீட்டுவதற்கு ஊக்கமும் கொடுத்துள்ளார்.

சமாசத்தால் ஒன்று சேர்ந்த பலர், இன்று வெளிநாடுகளில் பல உயர்ந்த பதவிகளிலும், தொழில்களிலும் பெருமை பெற்று வாழ்கிறார்கள். ஒருவருக்கொருவர் புரிந்துணர்வு, ஒத்தாசை, ஒன்றுசேர்தல், நன்மை தீமைகளில் கலந்து கொள்ளல், அடையாளம் கண்டு, அறிமுகமாதல் போன்ற விடயங்கள் எமக்கு சந்தோசத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், தாய் நாட்டில் கஸ்டப்படுவோருக்குத் தங்களால் இயன்ற நிதி உதவி அளித்துவருவது சிறப்பான செயலாகும்.

மகாத்மா காந்தியடிகள் சொன்னதுபோல, ''எது சரியென எண்ணினால், அதைத் துணிவுடன் செய்யவேண்டும், இதற்கு ஆதரவு இருக்கோ இல்லையோ என்பது முக்கியமல்ல. அதன் பயன் இன்று இல்லாவிடினும் என்றோ, ஒருநாள் கிடைக்கும். ஆனால் ஒன்றுமே செய்யாமல் இருந்தால் எதுவுமே கிடைக்காது. அந்த வகையிலே ஒரு நாகலிங்கம் அவர்கள், துணிவுடன் மேற்கொண்ட சமூக ஒற்றுமையும், வளர்ச்சியும், இன்று ஆல்போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றியுள்ளது. இதை மேலும் செவ்வனே வளர்ப்பது எமது தலையாய கடனாகும்.

அவர், இன்னும் பல ஆண்டுகாலம், பூரண சுகத்துடனும், சிறப்புடனும் வாழ்ந்து, அவரது பணிகள், தொண்டுகள் தொடரவேண்டுமென, எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

சமூக அநீதிக்கெதிராக அறிவை ஆயுதமாக்கியோன்

அராலி. ச. ஆனந்தன்
முன்னாள் முகாமைப் பணிப்பாளர்,
புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்

பல நூற்றாண்டுகளாகவே, எமது சமூகம் அடிமை - குடிமைகளாக - தீண்டத் தகாதவர்களாக, எம் சகோதரத் தமிழர்களாலேயே ஒடுக்கப்பட்டிருந்தது. மொழி, மதம், இனம், கலை - கலாசாரம், பண்பாடு என அனைத்தாலும் ஒன்றுபட்ட நம்மவர் செய்தொழிலால் சாதிகள் பல பேசி தமிழினத்தையே பலவீனப்படுத்தினர்.

காலம் மாறியது. உலகம் விடுதலைக்காக - சுதந்திரத்திற்காக - தன்மானத்திற்காக உயிரையே விலைகொடுக்கும் செய்திகள் எம்மை எட்ட எம் இளைஞர் சமுதாயமும் விழித்துக் கொண்டது. சாதிவெறிக்கு சாவுமணியடிக்கவும் அடிமை - குடிமை முறைமையை அழித்தொழிக்கவும் எம் சமூகம் துடித்து நின்றது.

சமூக ஒடுக்குமுறையின் கோரப்பிடியின் மத்தியிலும், சாதனை புரிந்து கல்வியால் - பொருளாதாரத்தால் தம்மை உயர்த்திக் கொண்ட எம்மவர் பலரும், தாம் சார்ந்த சமூக அடையாளத்தினை மறைத்து தம்மை வேறோர் புதிய சமூகக் குழுமமாக்கிக் கொண்டதால், குமுறும் எம் இளைஞர் சமுதாயத்தை வழிநடாத்த திறமைமிக்க தலைமை இல்லாது எம் சமூகம் தத்தளித்துக் கொண்டிருந்தது.

இவ்வேளையில்தான் மாவை மண்ணின் மைந்தன், எம் சமூகத்தின் விடிவெள்ளி திரு.இ.மு.நாகலிங்கம் அவர்கள் ''எமது சமூகத்தின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்குமாய், எம் இளைஞர் சமுதாயமே என் பின் அணி திரளுங்கள்" என விடுத்த அறைகூவல் யாழ் குடாநாட்டின் மூலை முடுக்கெல்லாம் சிதறியிருந்த எம் சமூகத்து இளைஞர்களையும், யுவதிகளையும் ஏனைய முற்போக்கு சக்திகளையும் அவர் பின்னால் அணி வகுக்க வைத்தது. கத்தியின்றி, இரத்தமின்றி, கச்சிதமாய் சமூக ஒடுக்கு முறையை சாகடிக்க, எம் தலைவர், பத்தாம் வகுப்புவரை எம் பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வி என்றார். அடிமைக் குடிமைத் தொழிலை தடுத்து நிறுத்த அவசியமேற்படின் தீவிர தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவும் தயங்க மாட்டோம் என ஆவேசக் குரல் எழுப்பினார்.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் என்ற அமைப்பை உருவாக்கி, எம் சமூகத்தை அதன் கீழ் ஒன்றிணைய வைத்த எம் தலைவர் - எம் சமூகத்தின் கல்வி - சமூக நல நிதி உதவிகளுக்காக, புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் என்ற சமூக வங்கியை உருவாக்கி அதன் நிதிப்பலத்தையும் பெருகச் செய்தார்.

இ.மு.நாகலிங்கம் எனும் தீர்க்க தரிசனமிக்க தலைமையில்நாம் கண்டோம் பெரும் எழுச்சியும், வளர்ச்சியும், விழிப்புணர்வும், தலைநிமிர்வும். அவர் திருநாமம் வாழ்க. வாழிய எம் சமூகம்.

எழுச்சித்தந்தை ஆர்.எம்.நாகலிகங்கம் அவர்களின் மக்கள் மேம்பாட்டுப் பணிகளுக்கு உந்து சக்தியாக இருந்தவர்களின் வகிபாகம்

திரு. இ. சாந்தகுமார்
செயலாளர்
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

எமது சமூக மக்கள் சமூக உயர்நிலையினை எட்டிப் பிடிப்பதற்காக தூரநோக்கோடும் உயர் சிந்தனைப் போக்கோடும் போராடி பொன் எழுத்தால் பொறிக்கத்தக்க செயற்கரிய செயல்கள் செய்த பெரியார் உயர்திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் சொல்லும் செயலும், வேகமும் விவேகமும், அறிவும் ஆற்றலும் நம்பிக்கைக்கும் வெளிப்படைத் தன்மைக்கும் சீரிய ஒழுக்க நெறிக்கும் அமைவாக நின்று நிலைப்பதற்குப் பலர் உந்து சக்தியாக இருந்துள்ளார்கள். இதன் காரணத்தால் குன்றிலிட்ட தீபம் போல ஒளிபரப்பிக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. அவருடைய புலமைகள் மேம்படவும் செயற்கரிய செயல்களைச் செய்யவும் பக்கபலமாக உந்து சக்தியாக ஊக்கியாக செயற்பட்டவர்களை அடையாளப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெற்றோரின் வகிபாகம்

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்ற கூற்றுக்கமைவாகப் பெற்றோர்கள் கல்வியில், ஒழுக்கத்தில், பண்பாட்டில், கலாசாரத்தில் மேன்மையடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு சமூகச் சூழலையும் வறுமையினையும் பிறருடைய சொற்களையும் தாண்டி மகனை உயர் நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற வைராக்கியத்தோடு பெற்றோராகிய திரு.திருமதி முருகேசு கற்பகம் தம்பதிகள் செயற்பட்ட தன்மையினை மறந்துவிட முடியாது.

குடும்ப பொருளாதாரத்தை வளம்படுத்தும் நோக்கோடு மலேசியா சென்றிருந்த தந்தையார் இரண்டாம் உலக மகா யுத்தச் சூழலில் சிக்குண்டு பெரும் பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது. எனினும் யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து முன்னேறிய நிலையில் மீண்டும் 1948ஆம் ஆண்டில் இலங்கைக்குத் திரும்பியுள்ளார். உலக மகாயுத்த சூழலில் இலங்கையில் வாழ்ந்த தாயாரும் மகனும் சகோதரியும் வாழ்வாதாரத்துக்கு பெரும் கஷ்டப்பட்ட நிலையில் மகனை வளர்ப்பதில் தாயாரும் சகோதரியும் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டுள்ளார்கள். வீட்டுக்கு அருகாமையில் இருந்த அமெரிக்க மிஷன் தமிழ்ப் பாடசாலையில் ஆரம்பநிலைக் கல்வியைச் சிறப்பாகப் பூர்த்தியடையச் செய்வதற்கு தாயார் பெரும் உந்துசக்தியாக அமைந்திருந்தார். அதைத் தொடர்ந்து 1947ஆம் ஆண்டில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் படிப்பதற்கு மலேசியாவில் இருந்த தந்தையாரின்

ஊக்குவிப்போடு அனுமதிக்கப்பட்டு கல்வியை முன்னெடுத்துச் செல்வதற்கு அத்திவாரமிடப்பட்டது. அந்த முயற்சிக்கு தந்தையாரின் பொருளாதாரவளம், யுத்தத்தின் பின் மெதுமெதுவாக வளரத் தொடங்கியமை பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. 1941இல் இலங்கைக்கு வந்திருந்த தந்தையார் மீண்டும் மலேசியா சென்று பொருளாதாரத் துறையில் வளர்ச்சி பெற்றது மைந்தனின் கல்விக்கு பெரும் ஊக்க சக்தியாக அமைந்தது. மீண்டும் தந்தையார் மலேசியாவிலிருந்து இலங்கைக்கு வந்து 1953ஆம் ஆண்டு இறுதியில் மலேசியா திரும்ப இருந்த சந்தர்ப்பத்தில் அவர் இறக்க நேர்ந்தது அவர்களின் குடும்ப வளர்ச்சிக்கு எதிர்பாராத பெரும் சவாலாக அமைந்தது.

இத்தகைய சவால் நிறைந்த சூழலில் குடும்பப் பொறுப்பை ஏற்று மைந்தனின் கல்வி தடைப்படாமல் முன்னேறுவதற்குத் தாயார் முழுப் பாரத்தையும் தாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்பொறுப்பை நிறைவேற்றுவதில் அவருடைய மகள் தங்கம்மாவும் அவரது கணவர் க.வல்லிபுரமும் அனுசரணையாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இறுதிவரை மகனின் கல்வியை மேம்படுத்துவதற்குத் தங்களை அர்ப்பணித்து இவர்கள் வழங்கிய பங்களிப்பு மகத்தானதாகும். ஆர்.எம்.என் அவர்கள் 11 வயது மாணவனாக இருந்த வேளையிலே சமூக சமயப் பணிகளில் ஈடுபடவும் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தை ஆரம்பித்து வைப்பதற்கும் அதற்கு தலைமை தாங்கி பல சவால்கள் நிறைந்த பணிகளை முன்னெடுப்பதற்கும் அவற்றை வெற்றி பெறச் செய்வதற்கும் தாயாரின் **தடைவிதிக்காத கண்காணிப்பு** முறை பெரும் ஊக்க சக்தியாக அமைந்தது. தேவைப்படும் பொழுது அன்பு வழியில் பேசி திருத்தி நல்வழிப்படுத்துகின்ற உபாயம் நல்லபலனை அளித்துள்ளது.

தாயார் அழுது மட்டும் ஊட்டவில்லை. அழுதுடன் சேர்த்து அன்பு, இன்சொல், உண்மை, நேர்மை, நீதி, கடமை, கண்ணியத் தூய்மை, கருணை, நடுவுநிலைமை, சாந்தம், பொறுமை, பணிவு, ஈதல், கடவுள் வழிபாடு போன்றவற்றினையும் மெதுமெதுவாகத் திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் மனதில் பசுமரத்து ஆணி போல் பதிய வைத்தார். இன்று அதனுடைய செயல் வடிவங்கள் மேற்கூறப்பட்ட விடயத்துக்கு அமைவாக செயற்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது.

குடும்ப உறவுகளின் வகிபாகம்

தந்தையார் மலேசியாவில் இருந்த காலத்திலும் தந்தையாரின் இறப்புக்குப் பின்னரும் தந்தையாரின் மூத்த சகோதரனான இராமு தாமோதரி அவர்கள் சிறந்த வழிகாட்டியாகவும் வாழ்வாதாரத்துக்கு அனுசரணை வழங்குபவராகவும் செயற்பட்டுள்ளார். பெரிய தந்தையாரின் பிள்ளைகள் குடும்பத்தினரான மாணிக்கம் கந்தையா தம்பதியினர், மாரிமுத்து அன்னமுத்து தம்பதியினர், மயில்வாகனம் நாகம்மா தம்பதியினர் ஆகியோர்கள் ஆர்.எம்.என் அவர்களுடைய வளர்ச்சிக்கும் சிறப்பாக உயர்தரம் வரையிலான படிப்பிற்கும் அனுசரணை வழங்கி ஊக்குவித்துள்ளார்கள்.

வாழ்க்கை துணையின் வகிபாகம்

மணவாழ்க்கை மங்களகரமாக அமைவதற்கு நற்பண்புகள் நல்ல பழக்கவழக்கங்கள் ஒருவர் மேல் ஒருவர் மேற்கொள்ளும் நம்பிக்கை முதலானவை ஒருங்கே அமையப் பெற்ற

சின்னத்தம்பி தங்கம்மா 27.01.1965 இல் துணையாக அமைந்தார். மனைவியாருக்கு இருக்க வேண்டிய பண்புகள் ஒருங்கே கைவரப் பெற்றிருந்தார். கணவன் மனைவி மீது கொள்ளும் அக்கறையும் மனைவி கணவன் மீது காட்டும் பரிவும் பாசமும் இணைந்த தொன்றாகவே இவர்களின் இல்லற வாழ்க்கை அமைந்திருந்தது. இன்று இல்லங்களில் இருக்கின்ற கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைகள் மருமகள் வந்தால் போச்சு என்று சொல்லுகிற காலமாக மாறி வருகின்றது. ஆனால் அன்றைய நிலையில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் கூட்டுக் குடும்ப வாழ்க்கைக்கு பலமான அத்திவாரமிட்டாற் போல நல்ல விடயங்களை சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்றால் போல் தக்க தருணங்களில் எடுத்துச் சொல்லி நெறிப்படுத்தி கூட்டுக் குடும்ப வாழ்கைக்கே ஒரு முன்னுதாரணமாக திருமதி நாகலிங்கம் தங்கம்மா விளங்கினார். இல்லாளுடைய உயர்வான சிந்தனையும் உயர்நோக்கும் உயர் பண்பும் திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் சமூகப் பணியினை தொடர்வதற்கு ஊன்று கோலாக அமைந்தது. அவரது செயற்பாடு திருமணத்தின் முன்னிருந்த நிலையினைக் காட்டிலும் இன்னுமோர் படி உயர்நிலைக்குக் காரணமாக அமைந்திருந்தது.

சுயநலம், சுயலாபம் தனது, எனது என்ற குறுகிய சிந்தனைப் போக்கோடிராது பரந்து விரிந்த சிந்தனை செயற்பாடு சமூக செயற்பாட்டிலும் கல்வி நடவடிக்கையிலும் முன்னெடுப்பதற்கு உந்து சக்தியாக அமைந்திருந்தன. மாமியாரையும் மச்சாள்மாரையும் தனது தாயாக சகோதரியாக பாவனை செய்து வழிநடத்தியமையே அவரது தனித்துவமான திறமையாகும். கணவன் மேல் கொண்ட அன்பின் காரணத்தால் அவருடைய உயர்வுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பக்க பலமாகச் செயற்பட்டுக் கொண்டு வந்திருக்கின்றார்.

இல்லற வாழ்க்கையின் சிறப்பால் கிடைத்த பேறாக முருகதாசன், இராமதாசன், கணேஷதாசன், நடேசதாசன் ஆகிய நான்கு புத்திரர்களையும் பெற்றெடுத்தார். அவர்களை கல்வி, கலை, கலாசார, ஒழுக்க விழுமியங்களில் சிறந்து விளங்கச் செய்த பெருமையும் அம்மையாரையே சாரும். அம்மையார் இவ்வாறான பொறுப்புக்களைத் தான் சுமந்து கொண்டு கணவரின் சுமையினைக் குறைத்த காரணத்தினால் திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் சமூகப் பணிகள் எந்தவிதமான இடையூறுகளுமின்றித் திறம்பட ஆற்ற முடிந்தது எனலாம். அம்மையார் வீட்டிற்கு வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று உணவளித்து தெளிந்த சிந்தனையோடு செயற்பட்டு சமூக உயர்வுக்கும் சமூக மேம்பாட்டிற்கும் ஒரு வழிகாட்டியாக இருந்தார். அம்மையாரின் பூரணமான ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்தமையே திரு.இ.மு.நாகலிங்கம் அவர்கள் தனது செயற்பாட்டினை மேன்மேலும் திறம்படச் செய்ய ஒரு சக்தியாக அமைந்தன.

தனது குடும்பப் பொறுப்புகளை மட்டுமல்லாமல் கணவனுக்குரிய பொறுப்புகளையும் மாமி, மச்சாள் ஆகியோரின் நலன்களைப் பேணுவதற்கான பொறுப்புகளையும் நிறைவு செய்து குடும்பச் சூழலை அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் நிலைபெறச் செய்வதற்கு பெரும் பங்காற்றியுள்ளார். எழுச்சித் தந்தை தனது உத்தியோகக் கடமைகளையும் அவரது வாழ்நாள் நீடித்த கற்றல் செயற்பாடுகளையும் வெற்றிகரமாகச் செய்வதற்கு அமைதியான குடும்பச் சூழ்நிலை பெரும் வாய்ப்பைக் கொடுத்துள்ளது. இவற்றுக்கு மேலாக ஓய்வு நேரமெல்லாம் இரவு பகல் பாராது பொருட் செலவு பாராது உடல் நலம் பாராது சமூக சமயப் பணிகளில் முன்னுதாரண புருஷராகச் செயலாற்றி பெரும் சமூகத் தலைவராகப் பரிணமிப்பதற்கு மனைவியின் அரிய பங்களிப்பு மிகமிக முக்கிய காரணியாகும். கணவனுக்குப்

பக்கத் துணையாக நின்று தானும் சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். அவர் திருமணம் செய்த ஆண்டான 1965ஆம் ஆண்டு முதல் மாவிட்டபுரத்தை விட்டு இடம் பெயர்ந்த 1990ஆம் ஆண்டு வரை மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் ஆசிரியர் குழுவில் அங்கத்தவராக இருந்து வேதனம் பெறாமல் 25 ஆண்டுகாலம் ஆசிரியர் சேவையை வழங்கியுள்ளார். அத்துடன் தனது இல்லத்திலும் மாணவர்களுக்கு இலவசமாக வகுப்புகளை நடாத்தி சிறந்த ஆசிரியராகத் திகழ்ந்துள்ளார். இடம்பெயர்ந்து கொழும்பில் வசித்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து கொழும்புக்கு வந்த உறவினர்கள் பலருக்கு தனது குணசிங்கபுர இல்லத்தில் தங்க வைத்து உபசரித்து வந்த காருண்ய செயல் பெருமைக்குரியதாகும். பிள்ளைகள் நால்வருடன் தேடிவந்தோரையும் வைத்து ஒரு சிறிய இல்லத்தில் பராமரிப்பது சாதாரண விடயமல்ல. கொழும்பில் அடிக்கடி சுற்றிவளைப்பு, தேடுதல்கள், விசாரணைகள் போன்ற கெடுபிடியான சூழ்நிலையிலும் இத்தகைய காருண்யச் செயல் இடம்பெற்றமையை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு சந்தர்ப்பத்தில் வீட்டில் வசித்த இளையோர்கள் எல்லோரையும் ஒட்டுமொத்தமாகப் பாதுகாப்புத் தரப்பினர் விசாரணைக்கு இழுத்துச் சென்ற பயங்கரமான நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வுகளையும் துச்சமாகக் கருதி துணிச்சலுடன் தொடர்ந்தும் நம்பி வந்தோரை தங்கவைத்து ஆதரித்த பண்பை மறக்க முடியாது.

சமாசத்தினதும் நிதியத்தினதும் காரியாலயமாகவும் கூட்டங்கள் கூட்டுவதற்கான இடமாகவும் யுத்தக் காலத்தில் குறிப்பாக 1990ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டுவரை இவர்களது குணசிங்கபுர இல்லம் பயன்பட்டது. வருவோரை வரவேற்று உபசரிப்பது என்பது சாதாரண விடயமல்ல. உடல்நலம் பாராது சிரமம் பாராது இடநெருக்கடி பாராது பொருட்செலவு பாராது தளராத உறுதியோடு அம்மையார் வழங்கிய சேவை விலைமதிப்பற்றதாகும். சமாசமும் நிதியமும் யுத்தகாலத்தில் தலைநகரான கொழும்பில் நிலைத்து நின்று சேவையாற்றுவதற்கு இத்தகைய பங்களிப்பு மகத்தானதாகும். 'பின்தூங்கி முன்னெழுந்து' கடமையே கண்ணும் கருத்துமாக இருந்து வழங்கிய அம்மையாரின் சேவை இல்லாவிடில் எமது சமூக எழுச்சி இயக்கம் எப்போதோ முடிந்த கதையாகி விடும் என்ற உண்மையை நாம் ஒவ்வொருவரும் நன்றியுணர்வோடு நினைவில் வைத்திருக்க கடமைப்பட்டுள்ளோம்.

கணவனின் மட்டுப்படுத்தப்பட்ட மாதாந்த சம்பளத்துடன் எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட தன் குடும்பத்தையும் தங்குமிடம் தேடி வரும் உறவுகளையும் கூட்டங்களுக்குச் சமூகமளிக்கும் சமாச நிதிய உறுப்பினர்களையும் உபசரிப்பது சாதாரண விடயமல்ல. போதுமென்ற மனத்துடன் அம்மையார் சேவையாற்றி எல்லோரினதும் நன்மதிப்பைப் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. 'கணவன் எவ்வழி அவ்வழி தான் தன் வழி' என்ற உறுதிப்பாட்டோடு மனமுவந்து அவருடைய சேவைக்கெல்லாம் உந்துசக்தியாக இருந்து வந்துள்ளார். 1969ஆம் ஆண்டு முதல் கணவனார் புலால் உணவை முற்றாகத் துறந்ததைத் தொடர்ந்து தானும் அவ்வழி நின்று புலால் உணவை துறந்துள்ளமையையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்னொரு சம்பவத்தையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமென நம்புகிறேன். மாவை விநாயகர் ஆலயத்தின் சொத்துக்களையும் நிர்வாகத்தையும் பொதுவுடமையாக்கும் நோக்குடன் அம்மையாரின் கணவரின் தலைமையில் எடுக்கப்பட்ட முயற்சிக்கு அம்மையாரின் அன்புக்குப் பாத்திரமான சிறிய தாயாரின் கணவர் பெரும்

தடைக்கல்லாக இருந்தமையால் அவருக்கு எதிராக தந்திரோபாயமாக பகிஷ்கரிப்பு இயக்கம் 1969ஆம் ஆண்டு முதல் 1984ஆம் ஆண்டுவரை 15 ஆண்டுகள் நடாத்தப்பட்டு பொதுவுடமையாக்கும் முயற்சி வெற்றி பெற்றது. கணவன் வழியைப் பின்பற்றி இம்முயற்சிக்கு அம்மையாரின் ஒத்துழைப்பு பூரணமாகக் கிடைத்தமையை வாசகர்களின் சிந்தனைக்கு சமர்ப்பிக்கிறேன். மேலே குறிப்பிட்ட தொடர்ச்சியான நிகழ்வுகளில் இருந்து திருமதி. நா.தங்கம்மா அவர்கள் எந்தளவிற்கு தனது கணவரான எழுச்சித் தந்தை ஆர்.எம்.என். அவர்களின் மக்கள் மேம்பாட்டுப் பணிக்கு உந்து சக்தியாக இருந்துள்ளார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

பிள்ளைகள் மருமக்களின் வகிபாகம்

திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் பிள்ளைகளான முருகதாசன் இராமதாசன், கணேஷதாசன், நடேசதாசன் ஆகியோரும் மருமக்களான சிவராஜி, விஜயசிறி, சுபாசினி, சிறிவதனி ஆகியோரும் பேரப்பிள்ளைகளும் அவருடைய வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்து வருகிறார்கள் என்பதை மறக்க முடியாது. பிள்ளைகளின் உயரிய ஒழுக்கம், மனிதநேயம், குடும்ப வாழ்வியல், பண்பாட்டு விழுமியங்கள் பெற்றோரை முன்னறி தெய்வமாக வணங்கிப் போற்றுகின்ற வாழ்வியல் முறையும் பெற்றோரை மகிழ்ச்சியான சூழ்நிலையில் வாழவைத்து வருகின்ற தன்மையைக் கண்கூடாகக் காண்கிறோம். 'நல்ல பிள்ளைகள் நல்ல மருமக்கள்' எனும் பெயரை பெறுவதென்பது பெறுதற்கரிய பெரும் பேறாகும். அவர்களின் உயரிய மனிதநேயப் பண்புகள் தான் தந்தையாரின் மக்கள் மேம்பாட்டுப் பணிகளை மதிக்கின்ற உயரிய மனப்பக்குவத்தை உருவாக்கியதெனலாம்.

தந்தையார் 1995ஆம் ஆண்டில் தனது 59ஆவது வயதைப் பூர்த்தி செய்த நிலையில் அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்ற ஒருவராவார். அவர் தனது கல்விப்புலமை, தொழிற்கல்விப் புலமை தொழிற்புலமை 35 ஆண்டுகால தொழில் அனுபவங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி தனியார் அல்லது பிறநிறுவனமொன்றில் உயரிய சம்பளத்தில் தொழில் வாய்ப்பைப் பெற்றிருக்க முடியும். எனினும் அவ்வாறு பெறுவதற்குப் பிள்ளைகளோ மருமக்களோ மனைவியோ தூண்டுதலோ அல்லது நிர்ப்பந்தமோ செய்யவில்லை. 1996ஆம் ஆண்டுமுதல் தந்தையார் முழுநேர சமூக மேம்பாட்டாளராகச் சேவையாற்றுவதற்கு அவர்கள் வாய்ப்பளித்துள்ளமை கவனிக்கத் தக்கதாகும். பெற்றோரின் வாழ்வாதாரத்துக்கும் ஏனைய செலவுகளுக்கும் அவசியமான நிதிப்பங்களிப்பைச் செய்வதில் பிள்ளைகளும் மருமக்களும் ஒன்றுபட்டு கடந்த 18 ஆண்டுகளாக அனுசரணை வழங்கி வருகிறதென்பது சாதாரண விடயமல்ல. அவ்வாறு அவர்கள் உதவி வழங்கி ஆதரிக்காவிட்டால் தந்தையார் முழுநேரச் சமூக சேவையாளராகச் செயற்பட்டிருக்க முடியாது. முழு அர்ப்பணிப்போடு அவர் சேவையாற்றியதன் பயனாகத் தான் எமது சமாசமும் நிதியமும் இன்று பெரும் விருட்சமாக வளர்ச்சி பெற்றுள்ளது. அவர்கள் தொடர்ந்தும் நற்பணிகளுக்கு ஆதரவு நல்குவார்கள் என்ற நம்பிக்கை மேலும் மேலும் வலுப்பெற்று வருகிறது.

திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் 75ஆம் ஆண்டு நிறைவு விழா இந்தியாவில் தமிழ்நாட்டில் நான்கு பிள்ளைகளும் ஒன்றிணைந்து பல திருத்தலங்களில் குடும்ப சகிதம் வழிபாடு செய்து கூட்டுக் குடும்ப உறவு முறைக்கும் சகோதர ஒற்றுமைத் தன்மைக்கும் ஓர்

எடுத்துக் காட்டான குடும்பமாக அமைந்தது எனலாம். இவர்களுடைய இச்செயற்பாடு குடும்ப மேம்பாட்டின் உச்சக் கட்டத்தினைக் காட்டி நிற்கின்றன.

சொந்தக் கிராம உறவுகளின் வகிபாகம்.

திரு.ஆர்.எம்.என்.அவர்கள் தனது 11 வயது முதல் இற்றைவரை 65 ஆண்டுகளாக தனது சமூக மக்களின் மேம்பாட்டுக்குத் தலைமை தாங்கி அரும்பெரும் சேவையை வழங்குவதற்கு அந்த உறவுகளின் ஒத்துழைப்பும் ஆதரவும் பெரும் உந்து சக்தியாக இருந்துள்ளது. சிறுவர் முதல் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், மூத்தோர், முதியோர் எனப் பலதரப்பட்ட சமூக உறவுகளும் திரு.ஆர்.எம்.என். அவர்களைத் தலைவராகத் தெரிந்து அவரது தலைமையை மதித்து என்றும் விசுவாசமாக இருந்து அவரது வழிப்படுத்தலை சிரமேற்கொண்டு சேவையாற்றி வந்துள்ளார்கள். இவற்றின் பயனாகவே மாவைபாரதி வாசிகசாலை, மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம், மாவை பாரதி சனசமூக நிலையம், மாவை அம்பாள் ஆலய தர்மகர்ததா சபை, மாவை விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை, மாவைக் கந்தன் தண்ணீர்ப்பந்தல் சபை ஆகிய அமைப்புக்கள் மாவை மண்ணில் தோன்றுவதற்கும் 30 ஆண்டு கால யுத்த அழிவுகள் கொடுமைகள் இடம்பெயர்வுகள் மத்தியிலும் அவை நிலைத்து நிற்பதற்கு எழுச்சித் தந்தையின் தலைமையும் அவருக்குப் பின்புலமாக நின்ற முன்னணித் தலைவர்களுமே பிரதான காரிய கர்த்தாக்களாவர். மாவை மண்ணில் சமய சமூக கல்வி கலை கலாசார பண்பாட்டு துறைகள் வளர்ச்சி பெறுவதற்கு இவர்களின் தன்னலமற்ற சேவையே முக்கிய காரணமாகும்.

திரு.ஆர்.எம்.என்.தலைமையில் தெரிவு செய்யப்பட்ட முதலாவது நிர்வாக சபை பல ஆண்டுகளாக பதவியிலிருந்து அக்கிராமத்தின் வளர்ச்சிக்கு வழங்கிய மகத்தான அப்பங்களிப்பை நினைவு கூரும் வகையில் 12.09.1955 இல் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை அங்கத்தவர்களைக் கீழே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆர்.எம்.நாகலிங்கம் - தலைவர்
சிதம்பரி சின்னத்தம்பி - செயலாளர்
கந்தையா அப்புக்குட்டி - பொருளாளர்
சின்னத்தம்பி முருகேசு - போசகர்
நாகமுத்து தம்பையா - போசகர்

நிர்வாக உறுப்பினர்கள்

சின்னத்தம்பி செல்லத்துரை
தில்லையம்பலம் இராசதுரை
பொன்னர் வைரமுத்து
பொன்னர் கந்தையா
கந்தர் சின்னையா
முருகேசு முத்துலிங்கம்
முருகேசு கந்தையா
விநாயகர் தில்லையம்பலம்
வயிரவி கணபதி
வல்லிபுரம் கணபதிப்பிள்ளை
தாமோதரி வயிரவப்பிள்ளை

எழுச்சித் தந்தையின் தலைமையில் மாவை மண்ணில் தாபித்து வளர்க்கப்பட்ட அமைப்புகளின் பட்டறைகளில் வளர்த்தெடுக்கப்பட்ட பலர் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்து வருவதை இவ்விடத்தில் பதிவு செய்வது பொருத்தமெனக் கருதுகிறேன். அவர்களின் பெயர்கள் பின்வருமாறு

சின்னத்தம்பி செல்லத்துரை
பொன்னர் கந்தையா
கந்தையா சிவஞானம்
செல்லத்துரை ஜெகதாசன்
சிதம்பரப்பிள்ளை நாகேஸ்வரன்
கணபதி மயில்வாகனம்
சின்னத்தம்பி சிற்றம்பலம்
சின்னவி சரவணமுத்து
மயில்வாகனம் சிவபாலசிங்கம்
இராசதுரை சிவகுமார்
இராசரத்தினம் சாந்தகுமார்
வைரவப்பிள்ளை நகுலேஸ்வரன்

தேசம் பரந்து வாழும் உறவுகளின் வகிபாகம்

1947முதல் மாவையில் தோன்றி வளர்ந்த எழுச்சி இயக்கத்தை ஒரு தேசிய இயக்கமாக பிரகடனம் செய்வதற்கான எழுச்சித் தந்தையின் எண்ணக்கரு 1980இல் கைகூடியது. அதைத் தொடர்ந்து தேசிய ரீதியான ஒரு நிறுவனக் கட்டமைப்பை நிறுவி செயற்படுவதற்கான சமூக மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவதற்கான கருத்துக்கள் திரட்டப்பட்டன. அக்கருத்துக்களின் அடிப்படையில் ஆறு அம்சத்திட்டமொன்று பிரகடனப்படுத்தப்பட்டது. அத்திட்டமானது கிராமம் தோறும் சென்று விளக்கப்பட்டு கிராம மட்டத்தில் 24 கழகங்கள் அமைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து தேசம் பரந்து வாழும் சமூக உறவுகளை ஒன்று திரட்டி தேசிய மாகாநாடொன்று கூட்டப்பட்டு அம்மாகாநாட்டில் கிராமக் கழகங்களை இணைத்து சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் நிறுவப்பட்டது. அத்துடன் ஆறு அம்சக் கொள்கைத் திட்டமும் அம்மகாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டது. அத்தோடு சமாசத்தை நிர்வகிப்பதற்கான முகாமைக் கட்டமைப்பும் நிறுவப்பட்டது. இந்நிகழ்வுகள் அனைத்தும் 12.09.1980 முதல் 15.04.1981 வரை 7 மாதகாலத்துக்குள் எழுச்சித் தந்தையின் தலைமையின் கீழ் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டமைக்கு தேசம் பரந்து வாழும் உறவுகளின் காத்திரமான பங்களிப்பே காரணமாகும். மேலே கூறப்பட்ட அனைத்து நிகழ்வுகளையும் நிறைவு செய்யும் பொறுப்பு எழுச்சித் தந்தையின் தலைமையில் 93 அங்கத்தவர்களைக் கொண்ட அமைப்புக் குழு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டது.

30 ஆண்டுகால யுத்த சூழ்நிலை, எதிர்பாராத பல சவால்களுக்கு மத்தியிலும் சமாசத்தின் தொழிற்பாடுகள் தடைபடாமல் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. 1993இல் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் என்ற பெயரால் சமூக வங்கியொன்று அமைக்கப்பட்டு பலவகைப்பட்ட நன்கொடைகள் மூலம் நிதிமூலதனம் வளர்க்கப்பட்டு வருகிறது. 2004ஆம் ஆண்டு சமாசத்தின் சேவைகள் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. தேசம் பரந்து வாழும் உறவுகளின் பங்களிப்பும் மூலைமுடுக்கெல்லாம் இருந்து தெரிவு செய்யப்பட்ட முன்னணித் தலைவர்களின்

ஒத்துழைப்பும் எழுச்சித் தந்தைக்கு கிடைத்திருக்காவிடின் இத்தகைய சாதனையை அடைந்திருக்க முடியுமா? இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகளில் முன்னணி வகித்த உறவுகளின் பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எழுச்சித் தந்தையை உருவாக்கிய கல்வித் தாபனங்களினதும் ஆசிரியர்களினதும் வகிபாகம்

வாழ்நாள் நீடித்த கற்றல் முறையை பின்பற்றி தனது கல்வியை மேம்படுத்துவதில் எழுச்சித் தந்தை எப்பொழுதும் கரிசனையாக இருந்து வந்துள்ளார். இவர் படிப்படியாக தனது எழுத்தாற்றல் பேச்சாற்றல், சிந்தனையாற்றல் ஆகியவற்றை வளர்த்ததோடு தனது ஒழுக்க, கலை, கலாசார, பண்பாட்டு, விழுமியங்களை மேம்படுத்துவதிலும் கரிசனை காட்டி வந்துள்ளார். சமுதாய அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி வீடமைப்பு அபிவிருத்தி, சமய அபிவிருத்தி, கலை கலாசார அபிவிருத்தி ஆகிய துறைகளில் இவர் கணிசமான புலமையைப் பெற்றுள்ளார். கணக்கியல், முகாமையியல், முகாமைக் கணக்கியல், நிதியியல், எண்பார்வை ஆகிய துறைகளில் புலமை பெற்றுள்ளார். பன்முக ஆளுமை கொண்ட ஒரு தலைவராக பரிணமித்துள்ளார். இவற்றுக்கெல்லாம் இவரை வளர்த்த கல்வி நிலையங்களினதும் ஆசிரியர்களினதும் பங்களிப்பே காரணமாகும். ஆசிரியர்களின் பெயர்களை குறிப்பிடுவது அவசியமெனினும் இடமஞ்சி அதை தவிர்க்க நேர்ந்தமைக்கு வருந்துகிறேன். எனினும் அவர் கற்ற கல்வி தாபனங்களின் பெயர்களை குறிப்பிட விரும்புகிறேன். மாவிட்டபுரம் அ.மி.த.க.பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரி, பொல்கொல்ல தேசிய கூட்டுறவுக் கல்லூரி, இங்கிலாந்து சர்வதேச கூட்டுறவுக் கல்லூரி, ஐக்கிய இராச்சியத்திலுள்ள லப்பறோ தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், இந்தியாவிலுள்ள வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பயிற்சி மையம் என்பனவாகும்.

கற்பித்த பயிற்சி நிறுவனங்களினதும் மாணவர்களினதும் வகிபாகம்

எழுச்சித் தந்தை அவர்கள் திருகோணமலை கூட்டுறவுக் கல்லூரி, யாழ்ப்பாண கூட்டுறவுக் கல்லூரி ஆகியவற்றில் 20 ஆண்டுகள் வரை விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளார். அத்துடன் கூட்டுறவுச் சங்கங்களினூடாக பயிற்சியளிப்பதிலும் ஈடுபட்டுள்ளார். கூட்டுறவுச் சங்கங்களில் முகாமைத்துறை, கணக்கியல்துறை ஆகிய துறைகளில் ஆலோசகராகவும் இருந்துள்ளார். இவற்றின் மூலம் தனது புலமைகளை வளர்த்துக் கொண்டதோடு நல்ல மாணவர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள் கூட்டுறவுப் பெரியார்கள் ஆகியோர்களோடு நல்ல தொடர்புகளையும் வளர்த்துக் கொண்டார். அவ்வரிசையில் பலர் இன்றும் எழுச்சித் தந்தைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதைக் காணமுடிகிறது.

தொழில் ஸ்தாபனங்களின் தலைவர்கள் சகாக்கள் ஆகியோரின் வகிபாகம்

இவர் கூட்டுறவு அபிவிருத்தித் துறையில் 20 ஆண்டுகளும் வீடமைப்பு அபிவிருத்தித் துறையில் 15 ஆண்டுகளும் சேவையாற்றிய காலப்பகுதியில் பலதரப்பட்டவர்களின் நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எழுச்சித் தந்தையின்

எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த பல பெரியார்கள் பங்களித்துள்ளார்கள் எனினும் அவர்களுள் மிகமிக முக்கியம் வாய்ந்த இருவரை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆர்.எம்.என். கூட்டுறவு உத்தியோகத்தராக நியமனம் பெற்றபோது திரு.மதிபாலசிங்கம் அவர்கள் திருகோணமலை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராகக் கடமையாற்றியவராவார். ஆர்.எம்.என். அவர்களை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு பொறுப்பு வாய்ந்த பதவிகளுக்கு நியமித்து படிப்படியாக திருகோணமலை கூட்டுறவுக் கல்லூரிக்கு விரிவுரையாளராகவும் திருகோணமலை கூட்டுறவு வங்கி உள்ளகக் கணக்காளராகவும் கூட்டுறவுச் சங்கங்களின் எண்பார்வை செய்யப்பட்ட கணக்கறிக்கைகளை மீளாய்வு செய்யும் உத்தியோகத்தராகவும் நியமித்துள்ளார். இப்பொறுப்புக்கள் ஒவ்வொன்றும் மூத்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டியதாகும். எனவே மூத்த உத்தியோகத்தர்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இளம் உத்தியோகத்தராக இருந்த ஆர்.எம்.என் அவர்களை முதன்மைப்படுத்தி அப்பொறுப்புக்கள் வழங்கப்பட்டதன் மூலம் அவரின் வளர்ச்சி வேகம் துரிதப்படுத்தப்பட்டதெனலாம். அப்பொறுப்புக்களை திறம்பட நிறைவேற்றியதைத் தொடர்ந்து யாழ்மாவட்டத்திலுள்ள கூட்டுறவுக் கல்லூரியில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். யாழ் கூட்டுறவுக் கல்லூரி தமிழ்மொழி மூலம் கூட்டுறவுப் பயிற்சியை வழங்குவதற்கான உயர்நிறுவனமாக அமைந்திருந்தது. அங்கு 1965ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உயர்தரக் கூட்டுறவுப் பயிற்சி நெறிக்குப் பொறுப்பான விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். இவ்வாறு படிப்படியாக உயர்பதவிகளுக்கு ஆர்.எம்.என் நியமிக்கப்படுவதற்கு திரு மதிபாலசிங்கம் அவர்களே காரணகர்த்தாவாக இருந்துள்ளார். இவ்வாறு ஆர்.எம்.என் அவர்கள் உயர் பொறுப்புக்களுக்கு நியமனம் பெறுவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி துறைக்குப் பொறுப்பாக இருந்த பிரதி ஆணையாளர், திரு.ஆர்.பி.ராஜகுரு அவர்களின் அங்கீகாரம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. துர்அதிர்ஷ்டவசமாக திரு மதிபாலசிங்கம் அவர்கள் 1967ஆம் ஆண்டு மரணமடைந்துவிட்டார். எனினும் திரு. ஆர்.பி. ராஜகுரு அவர்கள் ஆர்.எம்.என் அவர்களை தொடர்ந்தும் வளர்த்துச் செல்வதில் கவனம் செலுத்தி வந்தமை குறிப்பிடத் தக்கது. அவர் 1972இல் பொல்கொல்ல தேசிய கூட்டுவுக் கல்லூரிக்கு திரு.ஆர்.எம்.என் அவர்களை விரிவுரையாளராக நியமித்தமைக்கு மூத்த உத்தியோகத்தர்கள், கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கான தொழிற்சங்கம் என்பவற்றின் மத்தியிலிருந்தும் எதிர்ப்புக்கள் எழுப்பப்பட்டது. அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் ஆர்.எம்.என் நியமிக்கப்பட்டார். ஆர்.எம்.என் அவர்களின் நியமனம் தொடர்பாக எழுந்த எதிர்ப்பு குறித்து திரு.ஆர்.பி.ராஜகுரு அவர்கள் கல்லூரி அதிபருக்கு பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். ''திறமையுள்ள ஒரு இளைய உத்தியோகத்தர் வேண்டுமா? அல்லது திறமையற்ற ஒரு மூத்த உத்தியோகத்தர் வேண்டுமா?" என்பதை தீர்மானிக்க வேண்டிய பொறுப்பை கல்லூரி அதிபருக்கு விட்டிருந்தார். ஈற்றில் ஆர்.எம்.என் நியமிக்கப்பட்டார். 1973,1974ஆம் ஆண்டுகளிலும் கொழும்புத் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில் ஒன்றுக்கு ஆர்.எம்.என். அவர்களைத் தெரிவு செய்வதில் அப்பொழுது கூட்டுறவு ஆணையாளராக இருந்த திரு. ஆர்.பி. ராஜகுரு அவர்கள் முன்னின்று செயற்பட்டார்.

இவருடைய தெரிவை அப்பொழுது கூட்டுறவு அமைச்சராக இருந்த உயர்திரு.லங்கரத்தின அவர்கள் அனுமதிக்க திரும்பத் திரும்ப மூன்று முறை மறுத்திருந்ததாகக் கூறப்படுகிறது. திரு.ஆர்.பி.ராஜகுரு விடாமுயற்சியின் பேறாக அப்புலமைப் பரிசிலுக்கு அவர் நியமனம் பெற்றிருந்தார். ஒரு ஆண்டுக்கான டிப்ளோமா பயிற்சிநெறியை ஐக்கிய இராச்சியத்திலுள்ள லவ்பறோ தொழிற்நுட்பப் பல்கலைக்கழகத்திலும், சர்வதேச கூட்டுறவுக் கல்லூரியிலும் பயிலும் வாய்ப்பை பெற்றிருந்த சமயத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆர்.பி.ராஜகுரு அவர்கள் ஆர்.எம்.என் அவர்களுக்கு வழங்கிய அறிவுரையை இங்கு நினைவு படுத்த விரும்புகிறேன். ''அப்பயிற்சியில் முதன்மை மாணவனாக வரவேண்டும், அவ்வாறு வராவிடின் உம்மை அனுப்புவதில் பிரயோசனம் இல்லை" எனக் குறிப்பிட்டிருந்தார். இதை ஒரு முக்கிய கட்டளையாகச் சிரமேற் கொண்டு பயிற்சியின் முடிவில் நடைபெற்ற பரீட்சையில் அதி சிறப்பு டிப்ளோமா பட்டத்தைப் பெற்றதுடன் சித்தி பெற்றவர்களின் வரிசையில் முதலாம் இடத்தையும் ஆர்.எம்.என் பெற்று ஆணையாளரின் விருப்பத்தையும் நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கதாகும். 1980ஆம் ஆண்டில் வீடமைப்பு அதிகார சபைக்கு கணக்காளராக ஆர்.எம்.என் தெரிவு செய்யப்பட்ட போது கூட்டுறவுத் துறைக்கு அமைச்சராக இருந்த உயர்திரு.ஹேரத் அவர்கள் இடமாற்றத்துக்கான அங்கீகாரத்தை வழங்க மறுத்திருந்தார். அப்பொழுது திரு. ஆர்.பி.ராஜகுரு அவர்கள் முன்னின்று அந்நியமனத்தை ஏற்றுக் கொள்ள வாய்ப்பளித்தார். இவ்வாறு திரு. ஆர்.பி. ராஜகுரு அவர்களின் பங்களிப்பை என்றென்றும் மறக்கமுடியாத விலைமதிக்க முடியாத பங்களிப்பாக திரு.ஆர்.எம்.என் கூறுகிறார். திரு.ஆர்.பி. ராஜகுரு அவர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு பெரியார் ஆவார். அவரின் நல்வாழ்விற்கு பிரார்த்திப்பது தனது கடமையாக ஆர்.எம்.என். கருதுகிறார்.

1980இல் இருந்து 1995 வரை 15 ஆண்டுகள் வீடமைப்பு அதிகார சபையில் கணக்காளராக, சிரேஷ்ட கணக்காளராக, முகாமையாளராக, பிரதம உள்ளக எண்பார்வையாளராக, திட்டமிடல் பிரிவுத் தலைவராக பொறுப்பு வாய்ந்த கடமைகளை திறம்பட நிறைவு செய்து சபையின் தலைவர்களினதும் மேல் உத்தியோகத்தர்களினதும் அமைச்சின் செயலாளரினதும் நன்மதிப்பைப் பெற்றவர் ஆர்.எம்.என் 15 ஆண்டுகாலப்பகுதிக்குள் 5 பதவி உயர்வுகளைப் பெற்றது மட்டுமல்லாமல் பொறுப்புவாய்ந்த முக்கிய பதவிகளையும் வகிக்கும் வாய்ப்பு இவருக்கு கிடைத்ததென்றால் அவரது நேர்மைக்கும் திறமைக்கும் வழங்கப்பட்ட பரிசாகும். பலமட்டங்களிலும் பலர் உந்து சக்தியாக விளங்கிய பொழுதிலும் அப்பொழுது மேலதிக பொதுமுகாமையாளராகக் கடமையாற்றிய திரு.இ.அன்னலிங்கம், சபையின் தலைவராக கடமையாற்றிய திரு.டபுள்யு.டி.அயிலப்பெருமா ஆகிய இருவரும் வழங்கிய ஊக்குவிப்பு மிக உன்னதமானதென ஆர்.எம்.என். குறிப்பிடுகிறார். வீடமைப்பு அதிகாரசபையில் கடமையாற்றிய 15 ஆண்டு காலப்பகுதியில் சக உத்தியோகத்தர்களும் கீழ் உத்தியோகத்தர்கள் மட்டுமல்லாமல் மேல் உத்தியோகத்தர்களும் இன மத வேறுபாடின்றி இவருக்கு ஒத்துழைப்பு வழங்கியமை குறித்து ஆர்.எம்.என் பெருமைப்பட்டுள்ளார்.

புத்திஜீவிகள் பெரியார்களின் வகிபாகம்

சமூக, கல்வி மேம்பாட்டுத் துறைகளில் கரிசனை கொண்ட சமூக சமய ஆன்மீகப் பெரியார்களினதும் புத்திஜீவிகள் அரச நிர்வாகத் தலைவர்கள் என பலதரப்பட்டவர்களின் நல்ல தொடர்பும் இவருக்கு கடந்தபல ஆண்டுகளாகக் கிடைக்கப்பெற்றமை இவரது சமூக மேம்பாட்டுப் பணிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்ததெனலாம். உடுவை எஸ். தில்லைநடராசா அவர்கள் இந்நூலுக்கு வழங்கிய கட்டுரையில், அத்தகைய கனவான்கள் பலரினதும் பெயரைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். எனவே அப்பெயர்களை மீண்டும் இங்கு குறிப்பிடுவதைத் தவிர்த்துள்ளேன். இவர்களெல்லாம் ஆர்.எம்.என். அவர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் பெரியதாக மதித்து அவரது சமூக மேம்பாட்டுப் பணிகளுக்கெல்லாம் தொடர்ச்சியாகப் பெரும் உந்து சக்தியாக இருந்து வந்துள்ளனர். ஆர்.எம்.என். அவர்களின் தலைமையிலான சமூக எழுச்சி இயக்கத்தின் மதியுரையறிஞர்கள் சபையில் பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சு.சந்திரசேகரம், அரச பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர் உடுவை எஸ்.தில்லைநடராசா, பேராசிரியர் சபா.ஜெயராசா, கலாபூசணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை, முன்னாள் யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோர் அங்கம் வகித்து பெரும் உந்து சக்தியாகத் திகழ்கிறார்கள். இவ்வாறு பல பெரியார்கள் ஆர்.எம்.என். தலைமையிலான எழுச்சி இயக்கத்தின் வைபவங்களில் பங்கு பற்றி அறிவுரை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. எழுச்சிப் பாதை எனும் நூலுக்கு அறிஞர் பெருமக்கள் பலர் அரிய கட்டுரைகளை வழங்கி தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

முடிவுரை

பெரியார்கள், அறிஞர்கள் தலைமை நிர்வாகிகள் போன்றோரின் நன்மதிப்பையும், அறிவுரைகளையும் பெற்றுத் தனது மக்கள் மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்ற வாய்ப்பினை திரு. ஆர்.எம்.என் அவர்கள் பெரும் வரப்பிரசாதமாக மதித்து செயற்படுகிறார். அவரின் செயற்பாடுகளின் வெற்றிக்கு கனவான்கள் தொடர்ந்தும் தங்கள் நல்லாசியையும், நல்லாதரவையும் வழங்க வேண்டுமெனப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஆர்.எம்.என் அவர்கள் இவ்வாறு பலரினதும் ஆசியையும், ஒத்துழைப்பையும் பெற்றமையால் தான் எம் மக்கள் சமூகம் உயர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்லக்கூடியதாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. பலரின் உந்து சக்தியால் வளர்ந்த ஆர்.எம்.என் அவர்கள் மக்கள் சமூகத்திற்குப் பெரும் உந்து சக்தியாக இருந்து வருகின்றார் என்ற உண்மையை நாம் அனைவரும் உணர்ந்து கொள்வோமாக.

MR. R. M. NAGALINGAM FATHER OF SOCIAL UPLIFTMENT

Prof.Saba. Jeyarasa
Former Dean,Faculty of Education,
University of Jaffna

Mr. R.M. Nagalingam played a vital role in the social mobility of the Tamils. He devised an action programme with a clear ideological effect. He showed the community members how to combine peaceful resistance with constructive community services.

He rejected both Feudalism and Capitalism. Both the systems assume that human conditions and social situations don't change. He has scientific approach to the problems of social growth and change.

Mr. R.M.Nagalingam measured progress in terms of social change. He wanted a social order which would secure the greatest good of all. He wanted a simple society in which every individual would have equal status, opportunity and freedom to develop.

The most distinctive of Mr.Nagalingam's contributions of the social struggle was that he made it a movement of the community members. He organized institutions at village level, District level, Provincial level and National level.

Another unique contribution is that Mr. Nagalingam by his own rigorous discipline and personal example of the highest code of integrity and purity in public live trained and built up a whole cadre of youngesters dedicated to the service of the community .

His philosophy of life and action in relevant for all time. He preached only what he practised and led the community to social independence. The uniqueness of his thought lies in the fact that it is in the first place addressed to the individual as discipline of the self and secondly as discipline on an extended scale for the whole society.

He believed that the progress of the individual is vitally linked with the progress of the community.

According to him the real social justice should have meaning not for a few but for all including those who live in the lowest levels. He realised that once people are awakened they would become revolutionary force.

He is a leader unsupported by any political force, whose success rested upon his personal equalities. He is one of the most original thinkers and his concept of social change is one of the most important contributions.

He presents programme formulated with great insight and foresight. He is practical visionary. It is his personality and his efforts that gave social change a practical form.

He followed the real Hindu Philosophy. According to him selfless action is not only lift a man from spiritual sickness and moral bewilderment, it is also a key to mental peace.

Education plays a vital role in the vertical social mobility and stressed the need for higher education. The higher education process will lead to an entire social transformation and it is an answer to the pressing community problems.

He emphasized the removal of social inequality. His idea of society is one where all have a right to equal status. He is the father of social up liftment.

The volume carries several dimensions of his unique personality and valuable articles on social change.

The editor have done a great service in bringing out this volume. The valuable collection of articles bears testimony to the social contributions of Mr.R.M.Nagalingam.

He has the capacity and emotional intelligence to deal with social problems and reach ideal solutions. With sound educational background and leadership he formulated and directed several social actions. The main purpose of his mission is the emancipation of society from feudal negative rule.

The ideas and actions which he placed before the society are being acknowledged as capable of finding solutions to our social problems. The process of change that Mr. R.M.Naglingam initiated are now bearing fruit.

APPENDIX - I

PROFESSIONAL QUALIFICATIONS AND ACHIEVEMENTS OF R.M.N.

A - Professional Qualifications

1. ***Diploma in Co-oprative Development Management***

   Awarded by the Loughborough University of Technology (U.K) Topped the list of successful candidates. Followed this programme of one year study at the International Co-operative College in U.K; affiliated to the Loughborough University of Technology , under the Colombo Plan Scholarship award.

2. ***Executive Diploma in Business Administration***

   Awarded by the University of Colombo. Followed this programme of one year study under a scholarship award granted by the N.H.D.A

3. ***Passed the Examinations of the Chartered Institute of Management Accountants (U.K), except the Final Part.***

B - Advanced Training Programmes Completed

1. Housing Finance and Managerial Effectiveness Programme;and
2. Credit Evaluation Effectiveness Programme. Followed these two programmes of study at the Centre for Housing Finance of the Housing Development Finance Co-operation Limited in India, under the USAID Scholarship award.
3. WESTPAC Training Programme on Advanced Capital Market, Investment Market and Share Market conducted by the Securities Council and the Securities Institute of Australia under a Scholarship award granted by the N.H.D.A

C - Co-operative Training Programmes Completed in Sri Lanka.

1. Co-operative Employees Training Programme Conducted by the School of Co-operation, Jaffna
2. Co-operative Inspectors' First Examination Training Programme Conducted by the School of Co-operation, Polgolla.
3. Co-operative Inspectors' Second Examination Training Programme Conducted by the School of Co-operation, Polgolla. Passed the above Examinations with Distinction and Topped the List of Successful Candidates.

D - Obtained Membership of the Following Professional Bodies

1. Membership of the Management Institute of Sri Lanka.
2. Corporate Membership of the Institute of supplies and Materials Management.

APPENDIX - II

ROLES PLAYED BY R.M.N UNDER THE GOVERNMENT SERVICE

A - Under the National Housing Development Authority (1980 – 1995)

a - Head of the Corporate Planning and Monitoring Division

b - Secretary to the Board of Directors of the National Equipment and Machinery Organization.

c - Chief Internal Auditor

d - Senior Manager (Supplies Stores and Accounts)

e - Accountant (Contract Payments and Liquidity Management)

B - Under the Govt. Co-operative Development Service. (1960-1980)

a - Co-operative Education Service

1. Lecturer in Management Accountancy and Auditing at the School of Co-operation, Polgolla.
2. Lecturer in Management, Accountancy and Auditing at the School of Co-operation, Jaffna.

Lecturer in-charge of

a - Advanced Level Co-operative Training Programme;

b - Graduates' Co-operative Training Programme

3. Lecturer at the Trincomalee District Co-operative Shool

b - Co-operative Banking Service

1. Departmental Internal Auditor at the Jaffna Co-operative Bank
2. Departmental Internal Auditor at the Trincomalee Co-operative Bank

c - Co-operative Societies

1. Stututory Auditor of Co-operative Societies.
2. Development officer of Co-operative Societies.

d - Honorary Consultancy Service (1972-2000)

Honorary Consultancy Service to Co-operatives in Management, Accountancy and Education.

மூன்றாம் பகுதி

எழுச்சி இயக்கம் பற்றிய சிந்தனைகள், கோட்பாடுகள், செயற்பாடுகள்

விடயம்

பக்கம்

01. மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் தோற்றமும் பரிணாம வளர்ச்சியும் (1947-2012) 141
- உடுவை.திரு. எஸ்.தில்லைநடராசா
- உறுப்பினர், அரச பொதுச்சேவை ஆணைக்குழு.

02. சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வுகல்வி, அபிவிருத்தி நிதியமும் கல்வி, சமூக அபிவிருத்திக்கு வழங்கிய நிதி நன்கொடைகள் (1994 - 2011) 156
- திரு. வே. திருச்செல்வம்
- நிதிப் பணிப்பாளர், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்.

03. மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் சிந்தனைகள் நோக்கங்கள் தொழிற்பாடுகள் பற்றிய ஒரு மதிப்பீடு 158
- திரு. க.சண்முகலிங்கம் B.A, LL.B
- முன்னாள் கல்விச் செயலாளர் வடக்குக் கிழக்கு மாகாணம்

04. மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் தோன்றுவதற்கு பின்புலமாக அமைந்த காரணிகள் 171
- திரு. செ. ஜெகதாசன்
- பணிப்பாளர் - புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்

05. மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் சேவைகள் 179
- திரு.சி.செல்லத்துரை
- தலைவர் - மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம்

06. மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் 50 ஆண்டு சாதனைகளின் தொகுப்பு (1955 - 2005) 189
- திரு.க.சிவஞானம்
- பணிப்பாளர் - புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்

07. சமூக இருப்பில் கல்வியின் பங்கு 195
- பேராசிரியர் கலாநிதி தி. வேல்நம்பி
- பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,யாழ். பல்கலைக்கழகம்

08. மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் கல்விச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் - ஒரு மதிப்பீடு 201
- பேராசிரியர் மா.கருணாநிதி
- கல்வியியல்பீடம்,கொழும்புப் பல்கலைக்கழகம்

09. மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கம் அரசியல் வரலாற்றில் ஒரு முன்னோக்கிய பாய்ச்சல் 209
- திரு.எஸ்.வன்னியகுலம்
- முன்னாள் பணிப்பாளர் -இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சி, தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு

10. சமூக மேம்பாடும், நிறுவனப் பாங்கான கட்டமைப்பின் முக்கியத்துவமும் 218
- பேராசிரியர், சோ.சந்திரசேகரம்
- முன்னாள் கல்வி பீடாதிபதி, கொழும்புப் பல்கலைக் கழகம்

11. மக்களே மேம்பாட்டின் இயக்கச் சக்தி: மாவையில் தோன்றிய தேசிய சமூக எழுச்சி இயக்கத்தினை மையமாகக் கொண்ட சமூக தரிசனம் 223
- பேராசிரியர், கலாநிதி என்.சண்முகலிங்கன்
- முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்

12. சமூக எழுச்சி இயக்கத்தின் தொழிற்பெயர்ச்சி பற்றிய சிந்தனைகளும் செயற்பாடுகளும் - ஒரு மதிப்பீடு 228
- சைவப்புலவர், கலாபூஷணம் சு.செல்லத்துரை
- ஓய்வு நிலை அதிபர் - இளவாலை

13. பாராளுமன்ற சட்ட அந்தஸ்துப் பெற்றுள்ள புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியச் சட்டம் பற்றிய ஒரு கண்ணோட்டம் 235
- திரு. க.சிவபாதம்
- சட்டத்தரணி

14. சமூக எழுச்சி இயக்கமும், பண்பாட்டு விழுமியங்களின் பேணலும் 240
- பேராசிரியர் கலாநிதி தி. வேல்நம்பி
- பீடாதிபதி - முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் , யாழ். பல்கலைக்கழகம்

15. சமூக எழுச்சி இயக்கத்தின் சமய, ஆன்மீக, ஒழுக்க, கலாசார, பண்பாட்டு, வாழ்வியல், சிந்தனைகளும் வழிகாட்டலும் 245
- பண்டிதர், கலாபூஷணம் சி.அப்புத்துரை
- ஓய்வு நிலை அதிபர் -இளவாலை

16. INEQUALITY MOBILITY AND NATIONAL PROGRESS 251
- Dr.Devanesan Nesiah
- Former Government Agent

17. ஏற்றத்தாழ்வும் தொடர்ச்சியான மாறுதலும் தேசிய முன்னேற்றமும் 255
- கலாநிதி கு.தேவநேசன் நேசையா
- ஆலோசகர் - மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரசபை

18. வியப்புக்குரிய முப்பெரும் விழா 259
- கலாநிதி. கார்த்திகேசு சிவத்தம்பி
- தகைசார் ஓய்வுநிலை பேராசிரியர், யாழ். பல்கலைக் கழகம்

19. எமது மக்கள் சமூகம் அன்றும் இன்றும் 262
- திருமதி நவமணி இராஜ்குமார்
- தலைவர் - கலை இலக்கிய குழு, சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

20. சமூக நிறுவனங்களின் சமுதாய மேம்பாட்டுப் பணிகளுக்கு மாதர் சமூகத்தின் வகிபாகம் 270
- திருமதி பத்மா சோமகாந்தன்
- மூத்த எழுத்தாளர் .

21. எமது சமூக எழுச்சி இயக்கமும் மாதர்களின் பங்களிப்பும் 274
- திருமதி ஜெகதீசன் செல்வராணி
- சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்

22. சமூக எழுச்சி இயக்கத்தின் வளர்ச்சியில் மாணவர் அமைப்புக்களின் பங்களிப்பு 280
- திரு. சண்முகம் பாஸ்கரன்
- பணிப்பாளர் - புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம்.

23. சமூக எழுச்சியில் நிதி நிறுவனங்களின் பங்கு 287
- திரு. வி. அருளானந்தம்
- பிராந்திய முகாமையாளர் (வடக்கு), தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்.

24. ஆறு அம்சத்திட்டத்தின் இலக்குகளை அடைவதில் கண்டுள்ள வெற்றிகள் 297
- திரு. பொ.சுரேஸ்குமார்
- தலைவர் - பொதுக் கல்விச்சபை, சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்.

25. எம்மக்கள் சமூகத்தின் மலர்ச்சிக்கு எமது எழுச்சி இயக்கத்தின் வகிபாகத்தின் முக்கியத்துவம் 306
- திரு. கிருஷ்ணபிள்ளை கணேஷ் MBA (Sri.J)
- பணிப்பாளர் - புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியம்,

26. சமாசத்தினதும் நிதியத்தினதும் மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டம் (2013 - 2016) 318
- திரு.வீ.குகநேசன்
- பொதுச் செயலாளர் - சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்.

புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்தின் இயக்குநர் சபை - 1995



பெயர் விபரங்கள் இணைப்பு 17இல் காட்டப்பட்டுள்ளது

புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்தின் இயக்குநர் சபை - 2013



பெயர் விபரங்கள் இணைப்பு 17இல் காட்டப்பட்டுள்ளது

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் பொது நிர்வாக சபை உறுப்பினர்கள் - 2013



பெயர் விபரங்கள் இணைப்பு 18இல் காட்டப்பட்டுள்ளது

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் பொதுக் கல்விச் சபை உறுப்பினர்கள் - 2013



பெயர் விபரங்கள் இணைப்பு 18இல் காட்டப்பட்டுள்ளது

நிகழ்வுகள்



29-02-2007இல் நடைபெற்ற சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் மானிப்பாய் பிராந்திய சபையின் வருடாந்த மாநாட்டில் மேடையேற்றப்பட்ட காத்தவராயன் கூத்தில் பங்குபற்றிய கலைஞர்கள்.



25-08-2007இல் யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற ச.மு.க. சமாசத்தின் 25ஆவது ஆண்டு பரிசளிப்பு விழாவில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவ மாணவிகள்.




25-08-2007இல் யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற 25வது ஆண்டு விழாவில் திரு.நா.தங்கவடிவேல் அவர்களுக்கு யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் திரு.K.K. அருள்வேல் அவர்களால் சமூகஜோதி விருது வழங்கப்பட்டது.



06-10-2007இல் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற ஆசிரியர் இ. சுகுமார் எழுதிய தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நூல் வெளியீட்டு விழாவில் திரு.ஆ.மா.சுப்பிரமணியம் தம்பதிகள் முதற்பிரதி பெறுதல்.



2010ஆம் ஆண்டில் தம்பாலையூர் திரு.ஐயம்பிள்ளை கணேசமூர்த்தி அவர்களுக்கு புரட்சிச் செம்மல் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அருகில் அமரத்துவம் பெற்ற அவரது மனைவி சுசிலாதேவி அமர்ந்திருப்பதைக் காணலாம்.



உயர்திரு. ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் பவள விழாவை முன்னிட்டு கனடா டொரொன்டோ நகரில் உள்ள வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வு

நிகழ்வுகள்



சமூகஜோதி க.சுப்பிரமணியம் அவர்களுக்கு 26-06-2012 திகதியன்று கொழும்பு 13 வீரமயிலன் திருமண மண்டபத்தில் ச.மு.க. சமாசத்தினால் நடாத்தப்பட்ட சேவை நலன் பாராட்டு விழா



2012இல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் எழுச்சித் தந்தை திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் முன்னாள் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் அவர்களால் கௌரவிக்கப்படும் காட்சி.



மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் ஆதரவில் திரு.சிற்றம்பலம் மாயவதாஸ் இளமாணிப் பட்டம் பெற்றமையை முன்னிட்டு சென்னையில் திரு.ஆர்.எம்.நாகலிங்கம் தலைமையில் நாடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்கள்



2012இல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இடம்பெற்ற நடன நிகழ்வில் செல்வி ந.தஜானா



இந்தியாவிலுள்ள வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கற்கை நிறுவனத்தில் பயிற்சி பெற்ற வேளையில் ஆர்.எம்.என். அவர்கள் தனது சக மாணவர்களுடன்



29-02-2004இல் யாழ் வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற சமாசத்தின் 22ஆவது ஆண்டு விழாவில் கல்விப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிக்கு ஊர்காவற்துறை மாவட்ட நீதிபதி திரு. அ.பிறேம்சங்கர் அவர்கள் பரிசில் வழங்குவதைக் காண்கிறோம்.

மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் தோற்றமும் பரிணாம வளர்ச்சியும் (1947–2012)

உடுவை.எஸ்.தில்லைநடராசா
உறுப்பினர், அரச பொதுச்சேவை ஆணைக்குழு.
ஓய்வுநிலை மேலதிகச் செயலாளர், கல்விஅமைச்சு.

பரிணாம வளர்ச்சி

சமூகத்தில் பல்வேறு மாற்றங்களையும், திருப்பங்களையும், வளர்ச்சிகளையும் ஏற்படுத்திய நிகழ்வுகள் திடீரென்று ஓரிரவிலோ அல்லது ஒரு சில மணித்துளிகளிலோ தோன்றி பரிபூரண வளர்ச்சியை அடைந்து விடுவதில்லை. சமூகத்தைக் கூர்ந்து அவதானித்து, எதிர்நோக்கும் சவால்களையும் பிரச்சினைகளையும் அடையாளம் கண்டு பொருத்தமான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு காலகட்டத்திலும் காலத்தின் தேவையையும், சமூகத்தின் தேவையையும் நிறைவேற்றத்தக்கதாக ஏற்படுபவை பரிணாம வளர்ச்சி எனலாம். இத்தகைய பரிணாம வளர்ச்சியினை அடைந்து வரும் எழுச்சி இயக்கம் பற்றிய நிகழ்வுகளையும் செயற்பாடுகளையும் ஆய்வுக்குட்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தோற்றத்திற்கான பின்புலக் காரணிகள்

ஏறக்குறைய கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதிவரை குறிப்பாக இலங்கையின் வடபகுதியில் பாரம்பரிய மரபுகள் என்று சொல்லி அத்தியாவசியமான தொழிலாள வர்க்கத்தைச் சேர்ந்தவர்களை ஒதுக்கி வைத்தது மாத்திரமல்லாமல் அவர்களின் எழுச்சியைத் தடுக்கும் நோக்கோடு கல்வி வாய்ப்புகளுக்கும், உயர்ச்சியைத் தடுக்கும் நோக்கோடு உத்தியோக வாய்ப்புக்களுக்கும் எல்லா வகைகளாலும் முட்டுக்கட்டைகள் போடப்பட்டிருந்தன. இன்னும் சிறிது விபரமாக நோக்கினால் 50-60 ஆண்டுகளுக்கு முன்னர் பரம்பரை காரணமாகப் பலமான பின்புலமும், நிலபுலங்களும் ஏனைய வளங்களும் உள்ளோர் எதுவித தடங்கலும் இன்றி கல்வி பெறக்கூடியதாகவும், கல்வியோடு கூடிய தொழில் வாய்ப்புகளில் முன்னுரிமை பெறக்கூடியதாகவும் இருந்த வேளை அத்தகைய பின்புலம் இல்லாதவர்கள், பொருளாதார வளம் குறைந்தவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் என்று அடையாளமிடப்பட்டு அவர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டதோடு தொழில் வாய்ப்புகளும் மறுக்கப்பட்டு பெற்றோர் செய்த மரபுத் தொழிலையே பிள்ளைகளும் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பல இடங்களிலும் சமத்துவம் மறுக்கப்பட்டதோடு சமூகத்தில் பெறக்கூடிய ஏனைய வாய்ப்புகளுக்கும் தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. எவ்வளவு தான் பொருள் தேடி வைத்திருந்தாலும் விரும்பிய இடத்தில் சொத்துகளைக் கொள்வனவு செய்ய முடியாது, தற்காலிகமாகத்தானும் வாழ முடியாது. ஆசைப்பட்ட வண்ணம் ஆடையணிய முடியாது. பொதுவான வழிபாட்டிடங்களில் தனியிடம் என தள்ளிவைக்கப்பட்டனர். இலாப நோக்குடன் நடாத்தப்பட்ட உணவகங்களில் வழமையான இடங்களில் அமர்ந்து சாப்பிடுவதைத் தவிர்ப்பதற்காக ஒதுக்கிடம். பொதுக்கிணறுகளில் கூட தாகத்துக்கு தண்ணீர் அள்ளுவதற்குக்கூட இன்னொருவர் வந்து தண்ணீர் அள்ளும்வரை காத்திருந்து தாமதத்துடன் பிறர் தயவை நாடும் நிலை...இப்படிப்பல.

காலம் காலமாகத் தொடர்ந்து வந்த இந்நிலை மாற வேண்டுமானால், மாற்ற வேண்டுமானால் சமூகம் பற்றிய தொலைநோக்கு சிந்தனையும் தலைமை தாங்குவதற்குரிய தகுதியும் அதற்கேற்ற ஆளுமையும் துணிச்சலும் கொண்ட ஒருவரின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் அவசியமாகும்.

"விளையும் பயிரை முளையிலே தெரியும்"- என்பது ஆன்றோர் வாக்கு. அத்தகைய விளையும் பயிரான ஆர்.எம்.நாகலிங்கம் பாடசாலைக்குச் செல்லும் காலத்தில் விளையாட்டுக்களிலோ அல்லது வீண்பொழுது போக்குகளிலோ அதிக நாட்டம் கொள்ளாது கல்வியில் கண்ணும் கருத்துமாக இருந்ததைப் போல ஆலய வழிபாட்டில் ஆரம்பித்து சமய, சமூகப்பணிகள் தொடர்பான செயற்பாடுகளில் அக்கறை காட்டினார்.

எழுச்சி இயக்கத்தின் ஆரம்பம் (1947-1955)

1936ம் ஆண்டில் பிறந்த நாகலிங்கம் பதினொரு வயதை அடைந்த போது வதிவிடத்துக்கு அண்மையில் அமைந்திருந்த மாவை விநாயகர், மாவை அம்பாள் ஆலயங்களுக்கு ஒழுங்காகச் சென்று வழிபாடு செய்ய ஆரம்பித்தார். அந்த ஆரம்பம் நல்லதோர் ஆரம்பமாக அமைந்து சமய சமூகப் பணிகளில் ஆர்வம் பிறந்தது. இந்த ஆர்வம் தான் கால ஓட்டத்தில் சமூக எழுச்சி இயக்கத்துக்கான ஆரம்பமானது. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று"- ஆலய வழிபாட்டிலும் தனித்துவமான ஒழுங்கைக் காட்டும் நடவடிக்கை நாகலிங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

'கோவிலின் உள்ளும் புறமும் சுத்தம், புனிதம், தூய்மை பேணப்பட, பூசை, தேவார பாராயணம், கூட்டுப்பிரார்த்தனை தவிர்ந்த நேரங்களில் ஆலயச் சுற்றாடலில் அமைதி நிலவ வேண்டும்' என எல்லா நடவடிக்கைகளிலும் நாகலிங்கம் காட்டிய சுறுசுறுப்பும் துரிதமும் வெளிப்படுத்திய அன்பும் பணிவும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது.

பக்தியோடு படிப்பும் சமாந்திரமாகக் கைகோர்த்துச் செல்ல வேண்டும் என்னும் பெரு விருப்பால் நாகலிங்கம் தான் பள்ளிக்கூடத்தில் கற்றவற்றை மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து தன் தலைமைத்துவ பண்புகளையும் வளர்க்கத் தொடங்கினார். அப்படியாக ஆரம்பித்த பாடம் சொல்லிக் கொடுத்தல் பிற்காலத்தில் விரிவுரையாளராகவும் அறிவுரைஞராகவும் அவரை உயர்வடைய வைத்தது.

அக்காலத்தில் நன்மை தீமை என்ற இரு வகை சமூக நிகழ்வுகளும் கிரமமான நேர ஒழுங்கின்றியும் மதுவுக்கும் ஆடம்பரச் செலவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நிகழ்வுகளாகவும் நடைபெற்று வந்தமை சிறு வயதிலேயே நாகலிங்கத்தின் மனதை வருத்த சிறிய சமூக நிகழ்வுகளென்றாலும் நேர ஒழுங்கின் பிரகாரம் நடைபெறுவதையும் அனாவசியச் செலவுகளைத் தவிர்த்துக் கொள்வதையும் வலியுறுத்தியதுடன் காரண காரியங்களை விளங்கப் படுத்தியதனால் நாகலிங்கத்தின் முன்மாதிரியான கருத்துகளுக்கு எல்லோரும் நல்ல மதிப்பளித்தனர்.

மாவை பாரதி வாசிக சாலையின் தோற்றம் (1955-09-12)

படிப்படியாக நாகலிங்கம் விதைத்த விதைகள், தெரிவித்த கருத்துக்கள் அவரைத் சமூகத்தலைவன் என்ற நிலைக்கு உயர்த்தியது. படிப்பறிவு குறைந்தவர்களும் பள்ளிக்கூடப் புத்தகங்களுடன் வாசிப்பை நிறுத்திக் கொண்டவர்களும் விசாலமான அறிவைப்

பெறவேண்டுமென்பதற்காக வாசிகசாலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. அந்த எண்ணம் அடுத்த கட்ட வளர்ச்சியாக மாவை பாரதி வாசிகசாலையாக தோற்றம் பெற்றது.

சமூக வளர்ச்சிக்கான வலுவான அடித்தளத்தை கல்வி மூலம் அமைக்க முடியுமென்ற அசையாத நம்பிக்கை இருந்த போதும் எல்லோருக்கும் கல்விக்கூடங்கள் செல்லும் வாய்ப்பிருக்குமா? எனச் சந்தேகம் எழுந்ததாலும் 'புதுமைக்கவி' எனவும் 'புரட்சிக்கவி' எனவும் புகழப்பட்ட பாரதியின் கவிதைகளும் கருத்துக்களும் நாகலிங்கத்தை நன்றாகக் கவர்ந்ததாலும். அதனால் ஊர்ப்பெரியார்களான சிதம்பரி சின்னத்தம்பி, சின்னத்தம்பி முருகேசு, நாகமுத்து தம்பையா, வயிரவி கணபதி, வல்லிபுரம் கணபதிப்பிள்ளை, வைரவி வேலுப்பிள்ளை, கந்தையா அப்புக்குட்டி போன்றோரின் ஆதரவுடனும், சக உறவுகளான முருகேசு முத்துலிங்கம், பொன்னர் கந்தையா, பொன்னர் சிதம்பரப்பிள்ளை, தாமோதரம் வயிரவப்பிள்ளை போன்றவர்களின் அனுசரணையுடனும், சின்னத்தம்பி செல்லத்துரை, அப்புக்குட்டி செல்வராசா, ஆறுமுகம் நடராசா போன்ற மாணவத் தலைவர்களின் ஒத்துழைப்புடனும் தற்காலிகக் கொட்டகை ஒன்றை அமைத்து 1955.09.12ம் திகதி "மாவை பாரதி வாசிகசாலை" என்ற பெயருடன் ஒரு வாசிகசாலையை ஆரம்பித்தார். பலதரப்பட்டவர்களும் ஒன்று சேர்ந்து நாகலிங்கத்தை வாசிகசாலைத் தலைவனாக்கி, இயங்கத்தக்க நிர்வாக சபையையும் தேர்ந்தெடுத்தனர்.

கால ஓட்டத்தில் வாசிகசாலையின் செயற்பாடுகள் சமய, சமூக, கல்வி, கலை, கலாசார, பண்பாட்டு பணிகள் என பலவாறு விரிவடைய இவ்வாசிகசாலை 1971ம் ஆண்டில் **மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம்** என பெயர் மாற்றம் பெற்றதுடன் 1972ம் ஆண்டில் மாவை சனசமூக நிலையம் ஒன்றும் அரச ஆதரவுடன் தாபிக்கப்பட்டு குறித்த மன்றமும் சனசமூக நிலையமும் ஒரே கூரையின் கீழ் இணைந்து சேவையாற்ற ஆரம்பித்தன.

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம், மாவை பாரதி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு முன்னோடியான நாகலிங்கத்தை தலைமைப் பொறுப்பை ஏற்க வைத்த சமூகம் நாகலிங்கத்தை "ஆர்.எம்.என்" என அழைக்க ஆரம்பித்தனர்.

12-09-1955 அன்று ஆரம்பிக்கப்பட்ட 'பாரதி வாசிக சாலை' படிப்படியாகப் பல வளர்சிகளைக் கண்டு 12-09-1980ல் ' மாவை பாரதி மறுமலர்ச்சி மன்ற வெள்ளி விழாவாக' 25வது ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடிய போது, அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

1980.09.12ல் தேசிய இயக்கமாகப் பரிணமித்தல்

1980.09.12 இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்ற வெள்ளிவிழா நிகழ்வு சமூக எழுச்சி இயக்கத்தின் அடுத்த பாய்ச்சலுக்கான வளர்ச்சிப் படியாக பெரிய மாற்றத்துக்கான உந்துசக்திகளை உருவாக்கிய பரிணாம வளர்ச்சியின் முக்கிய புள்ளியாக அமைந்தது. 1980ஆம் ஆண்டிலிருந்து மாவை எல்லைக்கப்பால் மாவட்டம் மாகாணம் என விரிவாக்கி நாட்டின் நாலாபக்கத்திலும் செயற்பாடுகளைப் பரவலாக்கியதோடு படிப்படியாக சிந்தனை செயற்பாடுகளையும் விரிவாக்கிக் கொண்டு வளர்ந்தது. 1980.09.12 இச்சமூக எழுச்சி இயக்கம் ஒரு தேசிய இயக்கமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இறுக்கமான பாரம்பரிய

மரபுகளை உடைத்தெறிந்து வர்க்க, சாதி வேறுபாடுகளை அகற்ற கல்வி அறிவூட்டி தொழில் வாய்ப்புகளைத் தேடிக்கொள்வதன் மூலம் சமமாக வாழவேண்டுமென்பதற்காக மறுமலர்ச்சியை ஏற்படுத்தவென உருவாக்கப்பட்டது தான் தேசிய சமூக எழுச்சி இயக்கம் ஆகும்.

தேசிய எழுச்சி இயக்கத்தின் தொலை நோக்கம்

மாவையில் 1980.09.12ல் பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய இயக்கத்தின் தொலை நோக்கங்கள் முதன்மை, சிறப்பு, பொது தொலை நோக்கங்களாக அடையாளப் படுத்தப்பட்டன. அவையாவன:

1. வட - கிழக்கு மாகாணத்தைத் தாயகமாகக் கொண்ட நாவிதர் சமூகத்தை எழுச்சி, வளர்ச்சி, உயர்ச்சி, சமத்துவம், அந்தஸ்துப் பெற்ற சமூகமாகப் பரிணமிக்கச் செய்வதை முதன்மைத் தொலை நோக்காகவும்;
2. சமூக – கல்வி ரீதியாக பின்தங்கிய ஏனைய தமிழ்ச் சமூகங்களின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் பங்களிப்பதையும் அத்துடன் தமிழ் இனத்தினதும் தமிழ் மொழியினதும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பதையும் சிறப்புத் தொலை நோக்கமாகவும் ;
3. தேசிய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பதை பொதுத் தொலை நோக்கமாகவும் அதன் தொலை நோக்கங்கள் வரையறுக்கப்பட்டன.

குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்காக இயக்கத்தை வழிநடத்துவதற்கான தலைமைப் பொறுப்பு நேர்மையும் திறமையும் உடைய அர்ப்பணிப்புடனும் துணிவுடனும் செயலாற்றத்தக்க ஆர்.எம்.என் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அறிவும், ஆளுமையும், ''கூட்டுறவு, நாட்டுயர்வு'' என்பதில் நம்பிக்கையும், மாவையில் அனுபவமும் மிக்க ஆர்.எம்.நாகலிங்கத்தின் தலைமையில் மாவையில் உதயமான தேசிய சமூக எழுச்சி இயக்கத்தை மக்களை ஒன்று திரட்டி நிறுவனப்படுத்தற் பொருட்டு சமூகப் பற்றும் கரிசனையும் கொண்டவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட அமைப்புக் குழுவும் (இணைப்பு 3) செயற்திறன் மிக்க பத்தொன்பது பேரைக் கொண்ட காரிய நிருவாகக் குழுவும் (இணைப்பு 4) அத்துடன் மாணவத் தலைவர்களை கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டன.

1980.12.25இல் ஆறு அம்சக் கொள்கைத் திட்டப் பிரகடனம்

சமூக எழுச்சி இயக்கத்தின் அமைப்புக் குழுவானது கொழும்பு மாவட்டத்திலுள்ள புறக்கோட்டை, கோட்டை, வெள்ளவத்தை, மொறட்டுவ, நுகேகொடை, இரத்தினபுரி ஆகிய இடங்களில் பத்துக்கும் மேற்பட்ட கூட்டங்களை முதன்மைப் பயனாளிகள் மத்தியில் நடாத்தி கலந்துரையாடல்களைச் செய்து ''எழுச்சி இயக்கத்தை'' முன்னெடுத்துச் செல்வதற்கான ''ஆறு அம்சக் கொள்கைத் திட்டம்'' ஒன்று உருவாக்கப்பட்டது.

அவ்வாறு உருவாக்கப்பட்ட ''ஆறு அம்சக் கொள்கைத் திட்டத்தை'' ஆராய்ந்து பிரகடனப்படுத்தும் நோக்குடன் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் ஒருதேசிய மகாநாடொன்று 25.12.1980இல் ஆர்.எம்.என் தலைமையில் நடைபெற்றது. அத்திட்டமானது அம்மகாநாட்டில் விவாதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

அத்திட்டமானது காலத்தினதும் சமூகத்தினதும் தேவைக்கேற்ப திருத்தங்கள் செய்யப்பட்டு 1981ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

திருத்தப்பட்ட ஆறு அம்சக் கொள்கைகளின் இன்றைய நிலை.

முதலாவது அம்சம்:

ஜனநாயக வழியில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் முகாமைக் கட்டமைப்பு முறையை காலத்தின் தேவைக்கேற்ப வலுப்படுத்தி, அதன் தலைமையின் கீழ் கசப்பு உணர்வுகளைக் களைந்து சமூக இன ஐக்கியத்தை பலப்படுத்தி, மக்கள் பங்களிப்புடன் திட்டமிட்ட முறையில் செயற்படுதல்.

இரண்டாவது அம்சம்:

மக்கள் மத்தியில் சிக்கன சேமிப்பு பழக்கத்தை வளர்ப்பதோடு சமாசத்தின் சமூக கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தேவையான நிதி வளத்தை வழங்கும் பொருட்டு போதிய நிதி மூலதனத்தை பெருக்கி, பாதுகாத்து, முதலீடு செய்து, வருமானத்தை உழைக்கும் வண்ணம், புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஒரு சமூக வங்கியாக பரிணமிக்கச் செய்தல்.

மூன்றாவது அம்சம்:

கற்றோராய் உயர்ச்சி பெற பட்டினி இருக்க நேரினும் படித்தல், படிக்க வைத்தல்

நான்காவது அம்சம்:

மரபுவழித் தொழில் விலங்கை இல்லாது ஒழித்தற் பொருட்டு தொழிற் பெயர்வு உரிமை உண்டென்பதை நிலைநாட்டி உயர்தொழிற் புலமை பெருக்கி வளமான தொழில் கொள்ளல்.

ஐந்தாவது அம்சம்:

வறுமை முதலான சமூகக் கொடுமைகளால் நலிவுற்றோருக்குக் கைகொடுத்து உதவுவதை ஒரு தெய்வீகப் பணியாக மதித்து அனைவரும் சமூக சமத்துவம், சமூக அந்தஸ்து, சமூக கௌரவம், சமூக நீதி பெற்றவர்களாக வாழ, வளமாக வாழ வழிசெய்தல்.

ஆறாவது அம்சம்:

மக்கள் மத்தியில் உயரிய ஒழுக்க, கலை, கலாசார, ஆன்மீக, பண்பாட்டு விழுமியங் களைப் பேணி வளர்ப்பதுடன் அவர்களைக் கருணை உணர்வுடனும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடனும் செயலாற்ற வழிகாட்டல்.

சமூக மேம்பாட்டுக் கழகங்களின் தோற்றம் – 1981 தை–பங்குனி

ஆறு அம்சத் திட்டத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாக தொடர் நிகழ்வுகளாக 1981ன் முதல் காலாண்டில் முதன்மைப் பயனாளிகள் செறிந்து வாழ்ந்த யாழ் மாவட்டக்கிராமங்கள் தோறும் எழுச்சி இயக்கத்தின் குறிக்கோள், தொலை நோக்கு. கொள்கைகள், மூல உபாயங்கள், தொழிற்பாடுகள்-முகாமைக்கட்டமைப்பு போன்ற விடயங்கள் கருத்தரங்குகள் மூலம் விவாதிக்கப்பட்டு மக்களின் அங்கீகாரத்துடன் கிராம ரீதியாக சமூக மேம்பாட்டுக்கழகங்கள்

ஆரம்பிக்கப்பட்டன. அவ்வாறு கிராம மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமூக மேம்பாட்டுக் கழகங்களின் எண்ணிக்கை நாளாவட்டத்தில் அதிகரித்துச் சென்றன.

தேசிய எழுச்சி இயக்கம் உதயமான 1980.09.12ஆம் திகதி அன்று மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம், கோண்டாவில் விவேகானந்தா வாசிகசாலை ஆகிய இரண்டும் செயலாற்றிக் கொண்டிருந்தன. எழுச்சி இயக்கம் ஆரம்பித்ததை தொடர்ந்து புதிதாக சமூக முன்னேற்றக் கழகங்கள் வெவ்வேறு பெயர்களுடன் ஆறு அம்சக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆறு அம்சத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கிராம மட்டத்தில் சமூக முன்னேற்றக் கழகங்கள் பல ஆரம்பமானதை வலுவூட்டக் கூடிய எழுச்சி எனக்குறிப்பிடுதல் பொருந்தும்.

மேற்படி கழகங்களின் விபரம் இணைப்பு 3இல் பட்டியலிடப்பட்டுள்ளது.

எழுச்சியின் அடுத்த கட்டமாக 15-04-1981 அன்று தொண்டமானாறு செல்வச்சந்நிதியில் மாபெரும் தேசிய மாநாடு நடைபெற்று கிராம மட்டத்தில் தாபிக்கப்பட்ட கழகங்களையும் ஒன்றிணைத்து சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அன்றைய தினம் முன்னொருபோதும் காணாத வரலாறாக ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் யாழ்.தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வளவில் திரண்டு தேசிய சமூக எழுச்சி இயக்கத்தின் மாபெரும் மகாநாட்டை வெற்றிபெற வைத்ததோடு' ஆறு அம்சக் கொள்கைத் திட்டம்' பிரகடனத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டதுடன், அனைத்துக் கிராம மட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த சமூக மேம்பாட்டு கழகங்களையும் ஒன்றிணைத்த உச்ச ஸ்தாபனமான சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் அமைக்கப்பட்டு, அதன் அதி காரங்களைக் குறித்துரைக்கும் யாப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் சமாசத்தின் முகாமைக் கட்டமைப்பின் உச்ச அதிகாரம் கொண்ட மகா சபையும் அன்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அங்கத்துவ கழகங்களின் பிரதிநிதிகளும் கழகங்கள் அமைக்கப்படாத பிரதேசங்களுக்கான பிரதிநிதிகளும் ஆயுட்கால அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களும் குறித்த மகாசபையின் அங்கத்தவர்களாவர்.

இந்த எழுச்சி மகாநாடு தான் பிற்காலத்தில் போராட்டங்கள் குழப்பங்கள் ஏற்பட்ட போதிலும் சமூக எழுச்சி இயக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லப் பெரும் உந்துசக்தியாக இருந்தது.

1982.04.17இல் அரசின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சி

1982.04.17அன்று தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பின்தங்கிய சமூகங்களின் சமூக, கல்வி ரீதியான சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராயும் பொருட்டு சமாசப் பிரதிநிதிகள் யாழ். மாவட்டப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஏழுபேர்களைக் கொண்ட குழுவுடன் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடாத்திப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதைத் தொடர்ந்து செப்டம்பர் 1982ல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சமாசத்தின் வருடாந்த மகாநாட்டில் அத்தீர்மானங்கள் அடங்கிய பிரகடனம் அங்கீகரிக்கப்பட்டது. யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் ஒரு நிலையான செயற்குழுவை அமைத்து காலத்திற்குக் காலம் எழும் பின்தங்கிய சமூகங்களின் சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

என்னும் பிரேரணையும் அம்மகாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது. அம்மகாநாட்டில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அப்போதைய அனைத்து பதின்நான்கு பாராளுமன்ற அங்கத்தவர்களும் பங்குபற்றித் தமது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1983 ஜூலை கலவரத்தைத் தொடர்ந்து அத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் தடைப்பட்டமை துரதிஷ்டவசமானதாகும். எனினும் இத்தகைய ஆலோசனைக் கூட்டங்கள், பிரகடனம் ஆகியன பாராளுமன்ற அங்கத்தவர்கள் மத்தியில் ஆழமான மனப்பதிவுகளை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். அதன் பலனாக காலத்திற்குக் காலம் எழுந்த சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு பாராளுமன்ற அங்கத்தவர்களான முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம், முன்னாள் பிரதிச் சபாநாயகர் மு.சிவசிதம்பரம், மாவை.சோ.சேனாதிராஜா, யோசப் பரராசசிங்கம் ஆகியோர் தன்முனைப்புடன் காத்திரமான பங்களிப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

எழுச்சி இயக்கமானது கூட்டுறவுக் கொள்கை வழியில் அரசியல் நடுநிலைமைக் கொள்கையை ஆரம்பத்தில் இருந்து கடைப்பிடித்து வருகிறது. அரசியல் கட்சிகளினதோ அல்லது இயக்கங்களினதோ தலையீடின்றி எழுச்சி இயக்கமானது வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு நடுநிலைமைக் கொள்கை இன்றியமையாத ஒரு காரணியாக அமைந்துள்ளது எனலாம்.

நிதிவளர்ச்சிக்கான சமாசத்தின் முயற்சிகள்

எழுச்சி இயக்கமானது 1980.09.12இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அது ஒரு சமாசமாக நிறுவனப்படுத்தப்படும்வரை நிதி மூலதனத்தை வளர்ப்பதற்கான முயற்சி ஒத்தி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். சமாசமானது ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூலதனத்தை வளர்ப்பதற்கான முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பக் கட்டத்தில் நிதியைப் பெருக்க பின்வரும் முறைகள் பின்பற்றப்பட்டன.

முதலாவது கட்டம்:

தொழில்நிலையங்களில் உண்டியல் வைத்து நிதி சேகரிக்கப்பட்டது.

இரண்டாவது கட்டம்:

நண்பர்களுக்கான அதிர்ஷ்ட லாபச்சீட்டு விற்பனை மூலம் நிதி சேகரிக்கப்பட்டது. இதற்கான அதிர்ஷ்ட லாபச்சீட்டு இழுப்பு நிகழ்வு 1984.04.01இல் தொண்டைமானாறு செல்வச்சன்னதி கோவில் முன்றலில் ஆலய பிரதம குரு திரு.க. உலகநாதன், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு.வை.வேலும்மயிலும், சட்டத்தரணி திரு.சி.புண்ணியமூர்த்தி ஆகியோரை அங்கத்தவர்களாகக் கொண்ட மத்தியஸ்தக்குழு முன்னிலையில் நடைபெற்றது.

மூன்றாவது கட்டம்:

மறைந்த அன்பு நெஞ்சங்களின் ஞாபகார்த்தமாக 1000/= ரூபாவீதம் நன்கொடை பெறப்பட்டது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட பணமானது மாணவர் கல்விக்கான புலமைப்பரிசில் நிதியோடு சேர்க்கப்பட்டது. இக்கல்வி நிதிக்கு வலுச் சேர்க்கும் நோக்கோடு எழுச்சி இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான S.V. தம்பையா அவர்கள் தனிப்பட்ட விஜயமாக 1983இல் மலேசியா சென்றிருந்த வேளையில் அவரது உறவினர் நண்பர்களிடம் இருந்து ரூபா 38,000/= திரட்டி வழங்கினார்.

இவ்வழிகளில் சேகரிக்கப்பட்ட பணத்தை மூலதனமாக்கி அதனை முதலீடு செய்யும் பொருட்டு நம்பிக்கைப் பொறுப்பாளர்களைத் தெரிந்து அவர்கள் மூலம் கடன் வழங்கி வருமானத்தை உழைக்கும் முயற்சி 1983ஆம் ஆண்டுப் பின்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வருமானத்தைப் பயன்படுத்தி மாணவர் கல்வி மேம்பாட்டுக்கான உதவித்திட்டம் வகுக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு பிற்பகுதியில் விசேட ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியும் சமாசத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இம்முறை இன்றுவரை தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமாசம் எதிர்நோக்கிய நிதி முகாமைச் சவால்கள்.

சமாசத்தின் பல்வகையான நிதியுதவித் திட்டங்களுக்கான நிதித்தேவை பல்மடங்காக அதிகரித்ததாலும் நம்பிக்கைப் பொறுப்பாளர் மூலம் கடன் வழங்கி வருமானத்தைத் திரட்டுவதில் இடர்பாடுகள் எழுந்ததாலும் புதிய நன்கொடைகளைத் திரட்டுவதில் ஏற்பட்ட மட்டுப்பாடுகளாலும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களாலும் தோன்றிய சவால்களை சமாசம் எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இச்சவால்களுக்கு வழி காண்பதற்கான பொறுப்பை அக்காலத்தில் தொழில் நிமித்தம் கொழும்பில் வசித்த சமூக எழுச்சி இயக்கத்தின் பிதாமகரும், வாழ்நாள் வழிகாட்டித் தலைவராகவுமிருந்த திரு.இ.மு.நாகலிங்கம் அவர்கள் மீளவும் ஏற்றுக்கொண்டார். அப்பொழுது கொழும்பில் வசித்து வந்த எழுச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்களாகிய க.மாயாதிரவியம், கி.கணேஷ், எஸ்.வி. தம்பையா, ச. ஆனந்தன், க. சுப்பிரமணியம், சீ.செல்லத்துரை, பொ. கந்தையா, சோ. முருகேசு ஆகியோரை ஒன்றுகூட்டி ஆர்.எம்.என் தனது தலைமையில் ஒரு நிதிக்குழுவை அமைத்து பொறுப்பேற்கப்பட்ட பணத்தையும் கடன் வருமதிகளையும் முகாமை செய்வதற்கான ஒழுங்கு செய்யப்பட்டது.

1993.06.04இல் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் தோற்றம்

கூட்டுறவுத் துறையில் நெடுங்கால நேரடி அனுபவமும் யாழ்ப்பாணம் திருகோணமலை ஆகிய இடங்களில் கூட்டுறவு வங்கிகளில் கடமை ஆற்றிய அனுபவமும் பெற்றிருந்தமையாலும் ஆர்.எம்.என் நிதிச் சவால்களைச் சமாளிக்க சமூக வங்கியொன்றை ஆரம்பிப்பதற்கான எண்ணக்கருவையும் முன்வைத்தார். ஏனைய பகுதிகளை விட வடபகுதியில் கூட்டுறவு இயக்கம் நன்கு வேருன்றி வளர்ந்த வரலாறு, அதன் வியத்தகு செயற்பாடு, வகைவகையான கூட்டுறவுச் சங்கங்களால் அங்கத்தவர்கள் அடைந்த உச்சப்பயன்பாடு, மக்கள் வங்கியின் ஆரம்பத்துக்கு முன்னர் காரியம் யாவினுக்கும் கைக்கொடுத்த கூட்டுறவு வங்கி ஆகிய தகவல்கள் சகலவற்றையும் நன்கு அறிந்திருந்ததோடு, கூட்டுறவு சமூக சமய நிறுவனங்களில் பெற்ற சேவை அனுபவங்களும் ஆர்.எம். நாகலிங்கத்தைத் தலைவராக வழிகாட்டியாகச் செயற்பட வைத்தது. அதன் விளைவாக சமூக முன்னோடிகளில் ஒருவரான க.சுப்ரமணியம் அவர்களின் காக்கைதீவு இல்லத்தில் 1993.06.04 இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் எனும் பெயரால் சமூக வங்கியானது ஆரம்பித்து வைக்கப்பட்டது. அத்தினத்தில் ஆர்.எம்.என்.அவர்களை தலைவராகக் கொண்ட பணிப்பாளர் சபையும் தெரிவு செய்யப்பட்டது. முகாமைப் பணியாளராக க. மாயாதிரவியமும் நிதிப்பணிப்பாளராக கி.கணேஷும், ஏனைய பணிப்பாளர்களாக ச.ஆனந்தன், எஸ்.வி.தம்பையா, க.சுப்ரமணியம், சீ.செல்லத்துரை, இ.குணரத்தினம், க.தம்பிராசா, க.பாலசிங்கம், பே.வின்சன், சோ.முருகேசு, மா.சம்புலிங்கம், கொ.டயஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். சமூக

முன்னேற்றக கழகங்களின் சமாசத்தின் அப்பொழுது தலைவரான நா.தங்கவடிவேல் பதவி வழி பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

நன்கொடைப் பங்குகளை 5000/= ரூபாவீதம் விற்று நிதிமூலதனத்தை வளர்ப்பதற்கு முயற்சி விரைவு படுத்தப்பட்டது. அதற்கான ஆரம்ப முயற்சிக்கு பணிப்பாளர்களுடன் சி.சரவணமுத்து, பொ.கந்தையா ஆகியோரும் சிறந்த ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்தின் தோற்றமும் தேசிய சமூக எழுச்சி இயக்கத்தின் ஒரு முக்கிய கட்டமாகும்.

நிதியம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நிதி மூலதனத்தை வளர்ப்பதற்கான முயற்சிகள் பன்முகப்படுத்தப்பட்டன. 1990இல் சமாசத்தால் ஆரம்பிக்கப்பட்ட விசேட ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் திட்டம், நன்கொடைப் பங்கு மூலதனத்தை வளர்ப்பதற்கான திட்டம், தனிநபர் புலமைப்பரிசில் நன்கொடைத் திட்டம் ஆகியவற்றுடன் பிறந்தநாள் நினைவுப் பரிசில் திட்டம், திருமணநாள் நினைவுப் புலமைப் பரிசில் திட்டம் ஆகியவற்றின் மூலம் நிதிமூலதனத்தை திரட்டுவதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

இவ்வாறு வசூலிக்கப்பட்ட நன்கொடைகளை ஆட்பிணைக் கடன் திட்டத்தின் மூலம் முதலீடு செய்து வருமானத்தை உழைக்கும் நடைமுறை நிதியத்தால் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்பின் பவுண் நகை அடைவுக் கடன் திட்டம் அமுல் படுத்தப்பட்டது. அம்முறைகள் வருமானத்தை அதிகளவில் வழங்கியதெனினும் பாதுகாப்பைக் கருதி நிதிக்கம்பனிகளிலும் அரச வங்கிகளிலும் வர்த்தக வங்கிகளிலும் முதலீடு செய்யும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. மூலதனத்தை கரையாமல் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு முதலீட்டு வருமானத்திலிருந்து அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்திய நிதி உபாயம் மூலதன வளர்ச்சிக்கு வலுவூட்டி வருகிறது.

சுனாமி அனர்த்த அவசர நிவாரணத் திட்டம், தகவல் தொழில்நுட்பக் கல்விக்கான நூல்களை நன்கொடையாக வழங்கும் திட்டம், வன்னிமக்களுக்கான அவசர நிவாரணத் திட்டம், வன்னி மாணவர் கல்வி மேம்பாட்டுத் திட்டம் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் நன்கொடைத் திட்டங்கள் போன்ற சிறப்புத் திட்டங்களுக்குத் தேவையான நிதிவளத்தைக் குறித்த திட்டங்களின் பெயரால் நிதி வசூல் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மதியுரைஞர் சபை அமைக்கப்பட்டது.

1995இல் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் ஆகியவற்றின் செயற்திறனை அதிகரிக்கும் முகமாக மதியுரைஞர் சபை உருவாக்கப்பட்டது. இச்சபையின் ஆரம்பகால உறுப்பினர்களாக பேராசிரியர் கா.சிவத்தம்பி, கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஆகியோர் செயற்பட்டனர். இச்சபையின் தற்போதைய மதியுரைஞர்களாக யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் கல்விப்பீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரன், அரச பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினரும் முன்னாள் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளருமான

உடுவை. எஸ்.தில்லைநடராசா, யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் கல்விப் பீடாதிபதி சபா. ஜெயராசா, யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைக் கற்கைகள், வணிகத்துறை பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தி. வேல்நம்பி ஆகியோர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபைச் சட்டம்

தேசிய சமூக எழுச்சி இயக்கத்தின் வளர்ச்சியானது உச்ச கட்டமான சட்ட அந்தஸ்து பெறும் அடுத்த கட்டத்தை நோக்கி நகரஆரம்பித்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.எஸ்.சேனாதிராசா, ஜோசப் பரராசசிங்கம், மு.சிவசிதம்பரம் ஆகியோர் முனைப்புடன் எடுத்த பெரு முயற்சிகள், சட்டமாஅதிபர் க.சி.கமலசபேசனின் காத்திரமான பங்களிப்பு எல்லாம் திருவினையாக்க, சமூக எழுச்சி இயக்கத்தின் அடுத்த பரிணாம வளர்ச்சியாக "1999ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபைச் சட்டம்" 1999இல் டிசம்பர் மாதம் 17ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

சமூக எழுச்சிக்கான திட்டங்கள் நல்லதானாலும் அவற்றைச் செயற்படுத்தப் பெருமளவு நிதிவளம் சேகரிக்கப்பட வேண்டும். சேகரிக்கப்பட்ட நிதியை மேலும் பெருக்கக்கூடிய வகையிலும் முதலீடு செய்ய வேண்டும். முதலீட்டையும் அதிலிருந்து பெறும் வருமானத்தையும் முழுமையாகவும் முறையாகவும் கையாள்வதால் அதிக பலனைப் பெறக் கூடியதாக இருக்கும். இத்தொழிற்பாடுகளுக்கு வலுவூட்டும் சக்தியாக இச்சட்ட ஏற்பாடுகள் அமைந்துள்ளன.

1998இல் சமாசத்தின் முகாமைக் கட்டமைப்பு மறுசீரமைப்பு

நாட்டில் அவ்வப்போது இடம் பெற்ற அசம்பாவிதங்கள், வன் செயல்கள், இடப்பெயர்வுகள் ஆகியவற்றை அடுத்து சமாசத்தின் அங்கத்துவ கழகங்கங்களின் செயற்பாடுகள் கேள்விக்குறியானபோது 1998ல் சமாசத்தின் முகாமைக் கட்டமைப்பு முறை மறுசீரமைக்கப்பட்டு வலுப்படுத்தப்பட்டது. மறுசீரமைப்பின் பிரதான அம்சமாக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேச செயலகப்பிரிவுப்பரப்பை தொழிற் பரப்பாகக் கொண்டு பிராந்திய பொதுச்சபைகளும், நிர்வாகச் செயற்பாட்டுக்காக பிராந்திய முகாமைச் சபைகளும் அமைக்கப்பட்டன. யாழ்-மாவட்டத்தைப் பிரதிநிதிப் படுத்தும் வகையில் ஐந்து பிராந்திய சபைகளும் கொழும்பு மாவட்டத்தில் ஒரு பிராந்திய சபையும் அவற்றிலிருந்து சமாசத்தின் மகாசபையும் உருவாக்கப்பட்டது.

2004ம் ஆண்டுமுதல் விஸ்தரிக்கப்பட்ட சேவைகளும் பிரதேசங்களும்

தேசிய சமூக எழுச்சி இயக்கமானது படிப்படியாகப் பரிணாம வளர்ச்சி கண்டு மக்கள் நிறுவனமான சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் சமூக வங்கியான புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் அமைக்கப்பட்டதுடன் அவை பலம்பொருந்திய நிறுவனங்களாக வளர்ச்சிபெற்று நிதிவளத்தையும் படிப்படியாக வளர்த்து ஆறு அம்சக் கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்திப் பணிகளை காத்திரமான முறையில் அமுல்படுத்தி வந்துள்ளது. 2004 ஆம் ஆண்டுமுதல் எழுச்சி இயக்கத்தின் தொழிற்பாட்டுக்குரிய பிரதேசங்களும் சேவைப்பரப்பும் பின்வருமாறு விஸ்தரிக்கப்பட்டன.

சுனாமி அனர்த்த நிவாரண நிதித் திட்டம்

இத்தகைய வளர்ச்சியின் பேறாக எழுச்சி இயக்கத்தின் சேவைப் பரப்பானது 2004.12.26 இல் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வண்ணம் விஸ்தரிக்கப் பட்டது. அவசர நிவாரண நிதியுதவியாகவும் மருந்துப் பொருட்களாகவும் ரூபா 1,337,062 பெறுமதியான உதவிகள் வழங்கப்பட்டன. இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளை மூலம் மருந்துப் பொருட்கள், பாதிக்கப்பட்ட பல்வேறு மாவட்ட மக்களுக்கு உதவி வழங்க வகை செய்யப்பட்டது.

தகவல் தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்கான பங்களிப்பு

2006-2007ம் ஆண்டுகளில் தமிழ் மாணவர்கள் மத்தியில் தகவல்தொழில்நுட்பக் கல்வியை வளர்க்கும் பொருட்டு க.பொ.த சா/த மாணவர்களுக்கான பாடநூலை முதன்முதலில் தமிழ்மொழி மூலம் வெளியிடுவதற்கு ஆசிரியர் ஆர்.சுகுமார் அவர்களை ஊக்குவித்தும் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் அக்கல்வியின் அவசியம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியும் பல மாவட்டங்களை சேர்ந்த 42 தமிழ்ப்பாடசாலைகளைச் சேர்ந்த 1,451 மாணவர்களுக்கு ரூபா 385,580/= பெறுமதியான நூற்பிரதிகளை நன்கொடையாக வழங்கியும் எழுச்சி இயக்கம் தனது சேவையை விஸ்தரித்துள்ளது.

வன்னி மக்களுக்கான அவசர நிவாரண நிதி

2009ம் ஆண்டு வன்னிப் போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து அவலப்பட்ட 878 குடும்பங்களைச் சேர்ந்த 2820 மக்களுக்கு ரூபா 1,891,800/= பணத்தை அவசர நிவாரண நிதியுதவியாகவும் அத்துடன் அவர்களுக்கு இலவசமாக ஒருநாள் மதிய போசனமும் வழங்கப்பட்டது.

வன்னி மாணவருக்கான கல்வி மேம்பாட்டுப் பணி

வன்னிப் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு வருடாந்தம் மூன்று லட்சம் ரூபா வீதம் தொடர்ச்சியாக பத்து ஆண்டுகளுக்கு வழங்குவதற்கான ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 2011ம் ஆண்டில் ரூபா 400,000/- மும் 2012ம் ஆண்டில் 300,000/- மும் பண உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதிவளத்தை மேலும் பெருக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. வைத்திய கலாஜோதி Dr. வைரமுத்து கமலநாதன் தலைமையிலான குழு இத்திட்டத்திற்கான நிதி அனுசரணை வழங்குவதற்கு பொறுப்பாக இருந்து வருகிறது.

நான் நேரில் தரிசித்த நிகழ்வுகள்

சமூக எழுச்சி இயக்கத்தின் மதியுரைஞர் சபையில் அங்கத்துவம் வகிப்பவர் என்ற முறையிலும் அதன் முக்கிய வேலைத் திட்டங்களை உருவாக்குவதில் பங்கு கொண்டவன் என்ற முறையிலும் அதன் சில முக்கிய நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றியவர் என்ற முறையிலும் எழுச்சி இயக்கத்தின் செயற்பாடுகளையும் அவற்றின் கனதியையும் பயன்பாட்டையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கப் பெற்றது..

க.பொ.த. சா.த. வகுப்பிற்காக ஆசிரியர் இ.சுகுமார் அவர்களால் தமிழ்மொழி மூலம் முதல் முதலாக வெளியிடப்பட்ட மூன்று பாகங்களைக் கொண்ட தகவல் தொடர்பாடல்

தொழில்நுட்ப நூலின் ஒவ்வொரு வெளியீடும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 2006ம், 2007ம் ஆண்டுகளில் இடம்பெற்றது. அவ்வெளியீட்டு விழாக்களில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றியதுடன் நூலின் பிரதிகளை மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் நன்கொடையாக வழங்குவதிலும் பங்கு கொண்டிருந்தேன். இதன் மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெற்றனர்.

17.07.2010 மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்திலும் 22.01.2011 அன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்திலும் வெகுசிறப்பாக நடைபெற்ற சமூக எழுச்சி இயக்கம், சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் கூட்டு ஆண்டு விழாக்களில் பிரதம விருந்தினர்களில் ஒருவராக பங்குகொண்டு அனைத்து நிகழ்ச்சிகளையும் கண்டு களித்துள்ளேன். அங்கு இடம்பெற்ற பின்வரும் நிகழ்வுகளை அவற்றின் சமூக, கல்வி முக்கியத்துவம் கருதி இங்கு குறிப்பிடுவது பொருத்தமெனக் கருதுகிறேன்.

அவ்விழாக்களில் சமூகஜோதி, சமூகப்பற்றாளர், சமூகமுன்னோடிகளுக்கான சமூக சீர்நெறியாளர், புரட்சிச் செம்மல், விழுமியச் செல்வர், கல்விக்கதிர் ஆகிய விருதுகளும் துறைசார் வித்தகர்களுக்கான வித்தியாஜோதி, கமநல வித்தகர், கவிமணி, ஆற்றுகை வித்தகர், இலக்கியக் கலாமாமணி, சித்த வைத்தியக் கலாநிதி வைத்தியக் கலாஜோதி எனப்பல்வேறு விருதுகளும் வழங்கப்பட்டது. அத்துடன் 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும், க.பொ.த (சா.த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கும், க.பொ.த (உ/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றுப் பல்கலைக்கழக இளமாணிப் பட்டப்படிப்பிற்குத் தகைமை பெற்றவர்களுக்கும் புலமைப்பரிசில் நன்கொடை வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். பல்கலைக்கழக இளமாணி முதுமாணி பட்டதாரிகளுக்கும் கல்வியியல் கல்லூரிகளில் கற்பித்தலில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கும் உயர்தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்க்கும் பாராட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். அத்தோடு கல்விப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக அரங்கேற்றப்பட்டன. இந்நிகழ்வுகளில் மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டம் வருகை தந்ததுடன், நிகழ்ச்சிகளும் சமூக நோக்குடைய நிறுவனங்களுக்கு முன்மாதிரியாவும் அமைந்திருந்தது சிறப்பானதாகும்.

எழுச்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கான முதன்மைக்காரணிகள்

திரு.இ.மு.நா. அவர்களின் சிந்தனையில் முகிழ்ந்த சமூக எழுச்சி இயக்கமானது 1947ம் ஆண்டு முதல் இற்றைவரை 65 ஆண்டுகாலமாக நிலைத்து நின்று வளர்ச்சிப் பாதையில் பயணித்து அரும்பெரும் பணிகள் மூலம் மக்கள் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் சமத்துவத்துக்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கியமைக்குப் பாத்திரமாக விளங்கிய காரணிகள் பலவாகும். அவற்றுள் முதன்மையான காரணிகளை அடையாளப்படுத்தி இக்கட்டுரையில் குறிப்பிடுவது பொருத்தமெனக் கருதி அவற்றை கீழே தொகுத்துக் கொடுத்துள்ளேன்.

1. இலக்கை நோக்கிய பயணம்

ஆரம்பகாலம் தொடக்கம் இற்றைவரை முன்னேற்பாடாக வரையப்பட்ட தொலைநோக்கங் களையும் கொள்கைத் திட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு மக்கள் மலர்ச்சிக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது. திசைமாறாமல் குறிக்கோளை நோக்கிப் பயணம் செய்வது எழுச்சி இயக்கத்தின் வெற்றிக்கு முக்கிய காரணி எனலாம்.

அவ்வப்போது சமூகத் தடைகளைத் தகர்த்தெறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், சில முயற்சிகள் பெரும் ஆரவாரத்துடன் ஆரம்பமான அடுத்த கணமே அடங்கி விட்டன., இன்னும் சில முயற்சிகள் அதிகாரம் கொண்டவர்களால் அடக்கப்பட்டன. இவற்றுக்கு மத்தியில் சுமார் அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் அமைதியாக ஆனால் நன்கு திட்டமிட்ட அடிப்படையில் விதைக்கப்பட்ட சமூக எழுச்சிக்கான வித்து உயர்கல்வியாகவும் தொழிற் கல்வியாகவும் வளர்ந்து தகைமைக்கும் திறமைக்கும் ஏற்ற தொழில் வாய்ப்பும் அதன் வழி பொருளாதார அபிவிருத்தியும் ஏனைய அபிவிருத்திகளும் கொண்ட பெரு மரமாகக் கிளைகள் பரப்ப வேண்டுமென்ற நோக்குடன் மாவை சமூக எழுச்சி இயக்கம் செயலாற்றியது.

2. நடுநிலைமைக் கொள்கை

இச்சமூக எழுச்சி இயக்கம் துரிதமாக பரவலாக வளர்ச்சி கண்டவேளையிலும் எந்த ஒரு நிலையிலும் எந்தப்பக்கமும் சாராது நடுநிலைமைக் கொள்கைகளுடன் சமூக எழுச்சிக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டு அவற்றைச் செயற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் கடினமாக உழைத்து உண்மையான வளர்ச்சியை சமூக எழுச்சி அடைந்து வருவதை பல பெறுபேறுகளிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. அரசியல் தொடர்பான விடயங்களிலும் அவதானமும் நிதானமும் கடைப்பிடித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

3. எழுச்சித் தந்தையின் தியாகமும் ஆளுமையும் சிறப்பான தலைமைத்துவமும்

எழுச்சித் தந்தை ஆர்.எம்.என் தனது 11 வயதில் ஆரம்பித்த சமூக எழுச்சி இயக்கத்தின் வாழ்நாள் பெருந்தலைவராக இருந்து தான் காலத்துக்குக் காலம் வளர்த்துக் கொண்ட கல்விப்புலமை, தொழிற்புலமை ஆகியவற்றை தனது சமூகப்பணிகளுக்கு பிரயோகித்ததுடன் கண்ணும் கருத்துமாக இருந்து தன்னையே உருக்கி எழுச்சி இயக்கத்தை வளர்க்கும் வண்ணம் முழுமூச்சாக உழைத்து வந்துள்ளார். அத்தகைய பங்களிப்பு இல்லாவிடின் எழுச்சி இயக்கம் இத்துணை வளர்ச்சி பெற்றிருக்க முடியுமா? இதற்கு பதிலளிக்கும் பொறுப்பை பயனாளிகளுக்கு விட்டுவிடுகிறேன்.

4. பெரியார்களின் ஆசியும் வழிகாட்டலும்

யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் சு.மோகனதாஸ், பேராசிரியர் நா.சண்முகலிங்கம் ஆகியோரினதும் பல்கலைக்கழகப் பீடாதிபதிகளான கொழும்புப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் கல்விப்பீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரம், யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் கல்விப்பீடாதிபதி பேராசிரியர் சபா.ஜெயராஜா, யாழ்.பல்கலைக்கழகத்தின் முகாமைக்

கற்கைகள் வணிகப் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி ஆகியோரினதும் பேராசிரியர் கா.சிவத்தம்பி, முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம், வடகிழக்கு மாகாண முன்னாள் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் க. சண்முகலிங்கம், முகாமைத்துவ மதியுரைஞர் சி.கோணேஸ்வரன், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, சைவப்புலவர் சு.செல்லத்துரை, பண்டிதர் எஸ்.அப்புத்துரை, ஆசிரிய ஆலோசகர் வி.இராஜேந்திரம், முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எ.சின்னத்தம்பி, தினக்குரல் பத்திரிகையின் பிரதம் ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், வீரகேசரியின் வாரவெளியீட்டுப் பிரதம ஆசிரியர் வி.தேவராசா, உதயன், சுடரொளி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் வித்தியாதரன் ஆகியோரதும், முன்னாள் யாழ்மாவட்ட அரச அதிபர்களான வேர்னன் அபயசேகர, கலாநிதி தேவநேசன் நேசையா, க.சண்முகநாதன் ஆகியோரினதும் சட்டவல்லுனர்களான முன்னாள் சட்டமா அதிபர் காசி.கமலசபேசன், சட்டத்தரணி எஸ்.புண்ணியமூர்த்தி ஆகியோரினதும் சமூகப் பெரியார்களான க.சிவமகாராஜா, சமூக ஜோதி ஆ.கந்தசாமி, கலாநிதி எம்.கதிர்காமநாதன் ஆகியோரினதும் ஆசி, வழிகாட்டல், ஊக்குவித்தல், ஆதரவு ஆகியன எழுச்சி இயக்கத்திற்கு பெரும் உந்துசக்தியாக இருந்துள்ளன.

5. முன்னணித் தலைவர்களின் விசுவாசமும் அர்ப்பணிப்பும்

1947ம் ஆண்டு முதல் இற்றைவரை 65 ஆண்டுகாலமாக காலத்துக்குக் காலம் சமூகப்பற்றும் செயற்றிறனும் சேவை அர்ப்பணிப்பும் கொண்ட தலைவர்களை அடையாளம் கண்டு முன்னணித் தலைவர்கள் வரிசை ஒன்று வளர்த்து வரப்பட்டது. இவர்கள் எழுச்சித் தந்தையின் தலைமைக்கு என்றும் விசுவாசமாக இருந்து தன்முனைப்போடு பலனை எதிர்பாராது சேவையாற்றி வந்துள்ளார்கள். இடம்பெயர் சூழலினால் அத்தகைய தலைவர்கள் பலர் வெளிநாடுகளுக்கு இடம்பெயர நேர்ந்துள்ளமை துரதிஷ்டமானதாகும். எனினும் உள்ளூரில் உள்ள முன்னணித் தலைவர்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் புலம்பெயர் தலைவர்கள் ஒத்துழைப்பு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

6. கொடைவள்ளல்களின் பங்களிப்பு

நன்கொடைப் பங்குமூலதனம், ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் நன்கொடை, திருமணநாள் நினைவுப் பரிசில் நன்கொடை, பிறந்தநாள் நினைவுப் புலமைப் பரிசில் நன்கொடை, தனிநபர் புலமைப்பரிசில் நன்கொடை, சுனாமி அவசர நிவாரண நிதிக்கான நன்கொடை, தகவல், தொடர்பாடல் நூல் அன்பளிப்புக்கான நன்கொடை, வன்னி அவசர நிவாரண நிதிக்கான நன்கொடை, வன்னி மாணவருக்கான கல்வி உதவிக்கான நன்கொடை, வருடாந்தம் புலமைப்பரிசில்களுக்கான நன்கொடை, பரிசளிப்புக்கான நன்கொடை எனப் பலவகைப்பட்ட நன்கொடைத் திட்டங்களும் வெற்றிபெறும் வண்ணம் தர்மசீலர்களின் பங்களிப்பு எழுச்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒரு காரணியாக இருந்துள்ளது.

7. மாணவத் தலைவர்களின் பங்களிப்பு

சமூக எழுச்சி இயக்கத்தை தோற்றுவிப்பதற்கும் மக்கள் நிறுவனங்களான மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தையும் கிராம மட்டத்திலான சமூக மேம்பாட்டுக் கழகங்களையும், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தையும் ஸ்தாபிப்பதற்கும் சமூக வங்கியான

புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கும் மாணவத் தலைவர்கள் பெரும்பங்காற்றியுள்ளார்கள். எழுச்சி இயக்கத்தின் ஆறு அம்சக் கொள்கைத் திட்டத்தை அமுல்படுத்தி சமூதாய எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் அவர்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது. மாணவர் தலைவர்களைக் கொண்ட கல்விச் சபையானது கல்வி மேம்பாட்டுத் திட்டங்களை அமுல்படுத்துவதற்குப் பொறுப்பாக இருந்து வருகிறது.

8. நிறுவனக் கட்டமைப்பு முறை

எழுச்சி இயக்கத்தின் நிறுவனக் கட்டமைப்பு முறையானது இருவகையான தனித்துவமான கட்டமைப்பு முறையைக் கொண்டுள்ளது.

ஒன்று - சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் முகாமைக் கட்டமைப்பு

இரண்டாவது - புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் முகாமைக் கட்டமைப்பு

சமாசமானது மக்கள் நிறுவனமாக இருந்து மக்களை ஒன்று கூட்டி மக்களின் பங்களிப்புடன் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. நிதியமானது ஒரு சமூக வங்கியாக செயற்படுகிறது. சமாசமும் நிதியமும் ஒன்றுக்கொன்று ஆதரவாகவும் உதவியாகவும் இருந்து வருகின்றன. இது ஒரு முன்னுதாரணமான ஏற்பாடாகும்.

9. உயர் சட்ட அந்தஸ்து

1999ம் ஆண்டின் 52ஆம் இலக்க புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபைச் சட்டத்தின் கீழ் நிதியமானது கூட்டாண்மை நிறுவனமாக அந்தஸ்துப் பெற்றுள்ளது. அச்சட்டத்தின் எட்டாம் பிரிவின் கீழ் சமாசமும் அங்கத்துவ கழகங்களும் கூட்டாண்மை அந்தஸ்த்தைப் பெற ஏற்பாடுண்டு.

10. நிதி முகாமைத் திறன்

மூலதன வளர்ச்சிக்கு நிதிமுகாமைத்திறன் இன்றியமையாததாகும். மூலதனத் தேவைக்காக திரட்டப்பட்ட அனைத்து நன்கொடைகளும் மூலதனமாக்கப்பட்டு மூலதன வளர்ச்சிக்கு வழிகோலப்பட்டது. மூலதனத்தைப் பாதுகாப்பாகவும் வருமானத்தைப் பெறக்கூடிய முறையிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு வருமானம் பயன்படுத்தப்படுகிறது. விசேட செயல்திட்டங்களுக்கு விசேட நன்கொடைகள் திரட்டப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. தொழிற்பாட்டுச் செலவுகள் உத்தம அளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நிதிக்கொடுக்கல் வாங்கல்களில் வெளிப்படைத் தன்மை பேணப்படுகிறது. நிதி முகாமைத் தொழிற்பாடுகளுக்கென தனித்துவமான நிறுவன அமைப்பான புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் இருப்பது சிறப்பான ஏற்பாடாகும்.

11. கருத்துப் புரட்சி இயக்கம்

வாழ்நாள் நீடித்த கருத்துப் புரட்சி இயக்கத்தின் மூலம் பயனாளிகள் மத்தியில் போதிய விழிப்புணர்ச்சியும் மனமாற்றமும் ஏற்படுவதற்கு வழிகாணப்பட்டது.

இத்தகைய பிரதான காரணிகளே இந்த அமைப்பு நாட்டின் முன்னணிச் சமூக சேவை அமைப்புகளில் ஒன்றாக மிளிர்வதற்கு வழிகோலியது எனலாம்.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு , கல்வி, அபிவிருத்தி நிதியமும் கல்வி, சமூக அபிவிருத்திக்கு வழங்கிய நிதி நன்கொடைகள் (1994 – 2011)

விபரங்கள்	மாணவர்களின் எண்ணிக்கை		மொத்தமாக வழங்கிய தொகை	
1.0 மாணவர்களுக்கு வழங்கிய சமாசப் புலமைப் பரிசில் நன்கொடைகள்				
1.1 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமைக்கு	134		596,500	
1.2 அமரர் S.V.தம்பையா ஞாபகார்த்தமாக 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த சித்தியடைந்தமைக்கு	14		81,000	
1.3 க.பொ.த(சாதாரணதரப்) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்றமைக்கு	44		250,000	
1.4 க.பொ.த.(உயர்தரப்) பரீட்சையில் பல் கலைக்கழகப் பட்டப் படிப்பிற்கு அனுமதி பெற்றமைக்கு	19		195,000	
1.5 திறமையான, தந்தையை இழந்த மாண வர்களுக்கு	10		50,000	
1.6 போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு	06		50,000	
புலமைப்பரிசில் நன்கொடைகள் மொத்தம்	227	227	1,222,500	1,222,500
2.0 மாணவர்களுக்கு வழங்கிய சமாசத் தின் வருடாந்த கல்வி நன்கொடைகள்				
2.1 ஆதரவற்ற மாணவர்களுக்கு (முன்பள்ளி - க.பொ.த. சாதாரண தரம் வரை)	178		329,425	
2.2 12ஆம், 13ஆம் ஆண்டு (க.பொ.த. உயர்தரம்) மாணவர்களுக்கு	345		609,000	
2.3 பல்கலைக்கழக இளமாணி மாணவர் களுக்கு	140		813,050	
2.4 தேசிய கல்வியற் கல்லூரி டிப்ளோமா மாணவர்களுக்கு	12		58,600	
2.5 உயர் தொழில்நுட்ப டிப்ளோமா மாணவர் களுக்கு	01		3,500	
2.6 தொழில்நுட்ப டிப்ளோமா மாணவர்களுக்கு	04		10,200	
வருடாந்த கல்வி நன்கொடைகள் மொத்தம்	680	680	1,823,775	1,823,775

விபரங்கள்	மாணவர்களின் எண்ணிக்கை		மொத்தமாக வழங்கிய தொகை	
3.0 சமாசம் வழங்கிய ஏனைய கல்வி நன்கொடைகள்				
3.1 2009ஆம் ஆண்டு வன்னிப் போரினால் பாதிக்கப் பட்ட மாணவர்களுக்கு	925		523,600	
3.2 க.பொ.த.(சாதாரணதர) மாணவர்களுக்கு வழங்கிய தகவல்தொழில்நுட்ப பாடப் புத்தகம்	1451		385,580	
3.3 ஆசிரியர் வீ.தனபாலசிங்கம் வெளியிட்ட ''ஊருக்கு நல்லது செய்வேன்'' புத்தகத்திற் கான நன்கொடை	75		50,000	
3.4 மாணவர்களுக்கான விசேட நன்கொடைகள்	04		22,900	
3.5 கல்விப் போட்டி பரிசில்களுக்கான நன்கொடைகள்	148		113,500	
ஏனைய கல்வி நன்கொடைகள் மொத்தம்	2603	2603	1,095,580	1,095,580
4.0 சமாசம் வழங்கிய நிவாரண நன்கொடைகள்				
4.1 உள்ளூர் போரினால் இடம்பெயர்ந்தோருக்கான நன்கொடை	350		292,700	
4.2 2004ஆம் ஆண்டு சுனாமியினால் பாதிக்கப் பட்டவர்களுக்கான நன்கொடைகள்	1705		1,129,143	
4.3 2009ஆம் ஆண்டு வன்னிப் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நன்கொடை	2820		1,871,800	
4.4 ஆதரவற்ற தாய், தந்தை, அங்கநலம் பாதிக்கப்பட்டோருக்கான நன்கொடை	754		1,414,300	
நிவாரண நன்கொடைகள் மொத்தம்	5629	5629	4,707,943	4,707,943
முழு மொத்தம்		9139		8,849,798

இ.மு. நாகலிங்கம்
தலைவர்

வே.திருச்செல்வம்
நிதிப் பணிப்பாளர்

புனர்வாழ்வு, கல்வி, அபிவிருத்தி நிதியம்

மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் சிந்தனைகள் நோக்கங்கள் தொழிற்பாடுகள் பற்றிய ஒரு மதிப்பீடு

திரு.க.சண்முகலிங்கம் B.A, LL.B
முன்னாள் கல்விச் செயலாளர்
வடக்குக் கிழக்கு மாகாணம்

மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் வரலாற்றைப் பற்றி நல்லதோர் அறிமுகத்தைச் செய்திருக்கும் உடுவை.எஸ்.தில்லைநடராஜா அதன் வரலாற்றின் மூன்று முக்கிய திருப்புமுனைகளைக் குறிப்பிடுகின்றார். அவையாவன.

1. **1947ல் ஆரம்பம்:** இக்கட்டத்தில் விநாயகர் ஆலயம், அம்பாள் ஆலயம் என்ற இரு ஆலயங்களை மையமாகக் கொண்டு மாவை என்னும் குறிச்சியில் வாழ்ந்தவர்கள் ஐக்கியப்பட்ட ஒரு குழுவாக ஆன்ம நேய ஒருமைப்பாட்டுடன் செயற்பட ஆரம்பித்தனர்.

2. **1955 இல் மாவை பாரதி வாசிகசாலையின் தோற்றம்:**

   மாவை பாரதி வாசிகசாலையின் தோற்றம் படிப்பறிவை விரிவாக்குதல், சமூக வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைக்கும் செயற்திட்டங்களை நிறைவேற்றுதல் என்பதாக இக்கட்டத்தில் விரிவு பெற்றது.

3. **1980ஆம் ஆண்டின் வெள்ளிவிழா:**

   மாவை என்ற குறிச்சியில் ஆரம்பித்த எழுச்சி இயக்கம் ஒரு தேசிய இயக்கமாக இக்கட்டத்தில் பரிணாமம் பெற்றது. மாவை என்ற எல்லைக்கு அப்பால் மாவட்டம், மாகாணம், தேசம் என்ற எல்லைகளுக்கும் இவ்வியக்கம் விரிவு பெற்றது.

1980க்குப் பிற்பட்ட 32 ஆண்டு காலத்தில் மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் சாதனைகள் பிரமிப்பூட்டுவனவாக அமைந்தன. இச்சாதனைகள் எவ்வாறு சாத்தியமாயின என்று சிந்திக்கும் பொழுது இருவிடயங்களை நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். சமூக மாற்றம் மனிதர்களின் ஆக்கபூர்வமான செயல்களினாலேயே இடம் பெறுகின்றது. மனிதர் சோம்பிக்கிடக்கும் போதும், யாவும் விதிப்படி நடக்கும் என்று வாளாவிருக்கும் போதும் மாற்றம் எதுவும் நிகழ்வதில்லை. ஆதலால் மனிதச் செயல் (Human Agency) என்ற காரணி மிக முக்கியமானது. இருப்பினும் மனிதர்களின் செயல்கள் குறிப்பிட்ட சமூகச் சூழமைவிலேயே இடம் பெறுகின்றன. இச்சூழமைவைக் கட்டமைப்பு (Structure) என்று கூறுவர். மனிதச் செயல்கள் மீதான கட்டுப்பாடுகளாகவும் தடைகளாகவும் சமூகக் கட்டமைவு அமைகின்றது. சமூக மாற்றத்தில் இவ்விரு காரணிகளும் முக்கியம் பெறுவதை மார்க்சியக் கோட்பாடு அழுத்திக் கூறுகிறது. மனிதனே தன் செயல்கள் மூலம் வரலாற்றைப் படைக்கின்றான். இருப்பினும் மனிதன் தன்சித்தத்தின் விருப்பங்களின் படி

வரலாற்றைப் படைப்பதில்லை. குறிப்பிட்ட வரலாற்றுச் சூழல் என்னும் புறநிலைமைகளின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே வரலாற்றை மனிதன் படைக்கின்றான் என்று மார்க்சியம் விளக்கம் தருகிறது.

சமுதாய மூலதனம் (Social Capital)

சமுதாயக் குழு ஒன்றின் மத்தியில் காணப்படும் ஐக்கியமும் கூட்டுறவும் அச்சமூகக் குழுவை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும். நீர்வளம், நிலவளம், நிதிவளம் என்ற யாவும் இருந்த போதும் சில சமுதாயக் குழுக்கள் அபிவிருத்தி வாய்ப்புக்களை இழப்பதும், இலக்குகளை அடைய முடியாமல் பின்தங்கி விடுவதும், குறித்த சமுதாய குழுக்களிடையே ஐக்கியமும் கூட்டுறவும் இல்லாமல் இருப்பதாலேயாகும் என்று அபிவிருத்திச் சிந்தனையாளர்கள் கூறுவர். அபிவிருத்திக்கு இன்றியமையாத இந்த அம்சத்தை சமுதாய மூலதனம் (Social Capital) என்றும் கூறுவர். சமுதாய உறுப்பினர்களான தனி நபர்களிடையே பரஸ்பர நம்பிக்கை, மதிப்பு, ஒத்துழைப்பு, ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகிய பண்புகள் குடும்ப உறவுப் பிணைப்புகள், சாதி அடையாளம், சமய அடையாளம் ஆகியன காரணமாக ஏற்படும். சமுதாய வலையமைப்புக்கள் (Social Networks) மிகச் செறிவுடையதாக இருக்கும். இவ்வலையமைப்புக்கள் நிறுவன மயப்பட்டதாகவும் வளர்ச்சி பெறும். மரபு வழிச் சமூகத்தில் கிராமம் என்ற எல்லைக்குள் ஒருங்கே வாழ்வதால் ஏற்படும் நெருக்கம் சமுதாய மூலதனத்தை உருவாக்க உதவுகிறது. எனினும் கிராமத்தை விட்டு தனிநபர்கள் வெளியேறிப் பிற இடங்களுக்கு இடம் பெயரும் போது சமுதாய மூலதனம் தேய்வடையலாம். இச்சமூக எழுச்சி இயக்கத்தின் வெற்றி சமுதாய மூலதனத்தின் திரட்சியிலும் உருவாக்கத்திலும் அது கண்ணும் கருத்துமாக இருந்ததன் பயனே என்று கூறினால் மிகையல்ல, 1980களிற்குப் பின்னர் மாவட்டம், மாகாணம், தேசம் என்ற பல நிலைகளில் வளர்க்கப்பட்ட சமுதாய வலையமைப்புக்கள், பெருமளவு சமுதாய மூலதனத்தைச் சமாசம் என்ற வடிவில் திரட்டி நாவித சமுதாயத்தினதும், ஒட்டுமொத்தமாகத் தமிழர் சமூகத்தினதும் நாட்டினதும் வளர்ச்சிக்கு உதவியிருப்பதைக் காணமுடிகிறது.

தொலைநோக்கு

இச்சமூக எழுச்சி இயக்கத்தின் தொலை நோக்கு 25.12.1981 இல் பிரகடனப் படுத்தப்பட்டது. இத்தொலை நோக்கு முதன்மை, சிறப்பு, பொது என மூன்றாக அடையாளப் படுத்தப்பட்டது.

1. வடக்கு, கிழக்கு மாகாணத்தினைத் தாயகமாக கொண்ட நாவிதர் சமூகத்தை எழுச்சி, வளர்ச்சி, உயர்ச்சி, சமத்துவம், அந்தஸ்து என்பனவற்றைப் பெற்ற சமூகமாகப் பரிணமிக்கச் செய்வதை, முதன்மை நோக்கமாக வரையறை செய்யப்பட்டது.
2. சமூக நிலையிலும் கல்வியிலும் பின்தங்கிய ஏனைய தமிழ்ச் சமூகங்களின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் உதவுதலும், தமிழ் இனத்தினதும் மொழியினதும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்வதும் சிறப்புத் தொலை நோக்கமாக கொள்ளப்பட்டது.
3. தேசிய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பது மாவை எழுச்சி இயக்கத்தின் பொதுத் தொலை நோக்கங்களாகவும் வரையறுக்கப்பட்டது.

சமுதாய மூலதனத்தின் இன்றியமையாமை பற்றி மேலே நாம் குறிப்பிட்டோம். இச்சமூக எழுச்சி இயக்கத்தின் தொலை நோக்கங்களுடன் தொடர்பு படுத்தி சமுதாய மூலதனம் பற்றிய ஒரு கருத்தை இங்கு கூறுதல் அவசியம். சமுதாய மூலதனம் வளர்ச்சிக்கு உதவுவதேயாயினும் அது சில எதிர்மறை அம்சங்களையும் கொண்டது என்பதை சில சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். சமூகவலைப் பின்னல்கள் தொடர்புகளை உருவாக்குதல் சமுதாய மூலதனத்தின் அவசியமான ஓர் அம்சம் இவற்றை உருவாக்கும்போது எல்லைகள் (Borders) நிர்ணயமாகின்றன. உள்ளே சேர்த்தல் (Inclusion) வெளித்தள்ளுதல் (Exclusion) என்ற இரு செயல்முறைகள் இங்கே சம்மந்தப்படுகின்றன. 1980 ஆம் ஆண்டில் இச்சமூக எழுச்சி இயக்கம் விரிவாக்கம் பெற்ற பொழுது சமூக மூலதனத்தின் தேட்டத்தின் பயனாக எழும் உள்ளே சேர்த்தல், வெளித்தள்ளுதல் என்ற செயல்முறைகளில் உள்ளார்ந்திருக்கும் ஆபத்துக்களை திரு.ஆர்.எம் நாகலிங்கம் போன்ற அனுபவசாலிகள் உணர்ந்து கொண்டனர். தமது முதன்மை நோக்கம் நாவிதர் சமூகத்தின் எழுச்சியே என்பதில் அவர்கள் உறுதியாக நின்றனர். இது சமுதாய உட்சேர்த்தல் (Social Inclusion) என்ற அம்சத்தை வலியுறுத்துவதாக இருந்தது. இம்முதன்மை நோக்கத்தைக் கைநெகிழ விட்டால் தமது இயக்கம் விரைவில் அழிந்துவிடும் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

தமிழ்ச் சமூகத்தின் ஏனைய பின்தங்கிய பிரிவினரின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உதவுவதையும், தமிழ் இனத்தினதும் மொழியினதும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பதையும் சிறப்புத் தொலைநோக்காக இச்சமூக எழுச்சி இயக்கம் வகுத்துக் கொண்டதன் மூலம் நாவிதர் சமூகம் என்ற எல்லைக்கு அப்பால் உள்ளவர்களையும் நட்புசக்தியாக ஆக்கிக் கொண்டனர். மூன்றாவதான பொதுத் தொலைநோக்கு இந்நாட்டில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களையும் ஐக்கியப்படுத்தும் ஒற்றுமையை வலியுறுத்துவதாக உள்ளதைக் காணலாம்.

இச்சமூக எழுச்சி இயக்கத்தினை வேறு சில சமூக நிறுவன அமைப்புக்களுடன் ஒப்பிடுதல் பொருத்தமானது என்று கருதுகிறேன். யாழ் மாவட்டத்தில் உள்ள கல்லூரிகள் சிலவற்றின் பழைய மாணவர்கள் சங்கங்கள் யாழ்மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வருகின்றன. உதாரணம் ஒன்றைக் குறிப்பிடலாம். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பு, லண்டன், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய பல இடங்களில் கிளைச் சங்கங்களை நிறுவி பழைய மாணவர் வலையமைப்பை விரிவாக்கியுள்ளது. மகாஜனா என்ற கல்வி நிறுவனம் மீண்டும் மலர்ச்சி பெறப் பழைய மாணவர்கள் வலையமைப்பு என்ற சமுதாய மூலதனத் தேட்டம் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது. இதுபோன்று ஏனைய பல கல்லூரிகளின் உதாரணங்களை நாம் இங்கு எடுத்துக் காட்டலாம். இருப்பினும் இச்சங்கங்கள் 'எமது கல்லூரி' என்ற எல்லைக்கு அப்பால் சிந்திப்பதற்கு முன்வரவில்லை. 'தமிழ்ச் சமூகத்தின் கல்வி முன்னேற்றம்' என்ற பொது நோக்கில் தனித்தோ பிற சங்கங்களுடன் கூட்டாக இணைந்தோ செயற்பட இவை முன்வரவில்லை. மாவையில் தோன்றிய எழுச்சி இயக்கம் இவ்விடயத்தில் தனித்துவம் மிக்க முன்னுதாரணமாக உள்ளதென்பது வெளிப்படை.

பயனாளிகள்

இச்சமூக எழுச்சி இயக்கம் தனது செயல்திட்டங்களின் பயனாளிகள் யார் என்பது பற்றித் தெளிவான வரையறையைச் செய்து கொண்டது. கீழே தரப்பட்டுள்ள விளக்கப்படம் பயனாளிகள் பற்றி விளக்கமாக அமைகிறது.




மூன்று வகைப் பயனாளிகளையும், செயல்திட்டங்களினால் அவர்களுக்குக் கிடைத்தனவும், கிடைக்க விருப்பனவுமான பயன்களையும் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

பயனாளிகளும் பயன்களும்

வகை	பயனாளிகள்	பயன்கள்
பொதுநிலை	தேசம், இலங்கையின் தேசிய இனங்கள்	ஐக்கியம் சமாதானம்
சிறப்பு நிலை	தமிழ்ச்சமூகங்களின் பின்தங்கிய பிரிவினர் தமிழ்ச்சமூகம், தமிழ்மொழி	அந்தஸ்து, கௌரவம், உயர்ச்சி, எழுச்சி, சமத்துவம், வளர்ச்சி
முதன்மை நிலை	வடக்குகிழக்கை தாயகமாக கொண்ட நாவிதர் சமூகம்	அந்தஸ்து, கௌரவம், உயர்ச்சி, எழுச்சி, சமத்துவம், வளர்ச்சி

இலக்குகள்

முதன்மைப் பயனாளிகளான நாவிதர் சமூகத்தின் சமூக எழுச்சியும் மலர்ச்சியும் வளர்ச்சியும், உயர்ச்சி, சமத்துவம், அந்தஸ்து கௌரவம், மதிப்பு என்பவற்றை இலக்குகளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சமூக இயக்கம் தமிழ்ச் சமூகத்தோடும் முழு இலங்கைச் சமூகத்தோடும் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு வளர்ச்சி பெறுவதை நோக்கமாகக் கொண்டது. இத்தொலை நோக்குகளை பின்வரும் விளக்கப்படம் தெளிவுப்படுத்துவதாய் உள்ளது.



இங்கே தரப்பட்டுள்ள நோக்கங்களையும் இலக்குகளையும் பற்றிச் சுருக்கமாகக் கூறுதல் பயனுடையது.

சமூக எழுச்சி

இச்சமூக எழுச்சி இயக்கம் ஒரு சமூக இயக்கம் (Social Movement) என்ற இயல்பைக் கொண்டது. சமூக அடுக்கின் கீழ்மட்டத்தில் உள்ளவர்களை ஐக்கியப்படுத்தி, அணிதிரட்டி, பொது நோக்கங்களை எய்துவதற்காக செயற்படும் தன்மையுடையதே சமூக இயக்கமாகும்.

மலர்ச்சி, வளர்ச்சி

தனிநபர்களும், குடும்பங்களும் உறவினர் குழாங்களும் பொருளாதார நிலையில் வளர்ச்சி பெறுவதையும், கல்வியில் முன்னேறி சமூக, பண்பாட்டு மலர்ச்சி பெறுவதையும் 'மலர்ச்சி' 'வளர்ச்சி' என்ற சொற்கள் குறித்து நிற்கின்றன.

உயர்ச்சி

உயர்ச்சி என்னும் சொல் சமூக ஏணிப் படியில் உயர்ந்து செல்வதைக் குறிப்பிடுகின்றது. சமூகவியலாளர்களின் வார்த்தையில் இதனைச் சமூக அசைவியக்கம் (Social Mobility) என்று குறிப்பிடலாம்.

சமத்துவம்

சமூக அசைவியக்கம் ஒரு சமூகத்திடையே பிளவுகளையும், வேறுபாடுகளையும் தோற்றுவிக்கும், இவ்வேறுபாடுகளை நீக்குவதற்காகச் சமத்துவம் என்ற கொள்கை கடைப் பிடிக்கப்படுதல் அவசியமாகும். சமத்துவம் எல்லோரையும் அரவணைத்து, வளர்க்கும் இலக்கினைக் குறிப்பிடுவது.

அந்தஸ்து, கௌரவம், மதிப்பு

பொருண்மிய வளர்ச்சியின் முழுமையான பயன்கள் தனிநபர்களுக்கும், குழுக்களுக்கும் கிடைப்பதற்கு சமூக அந்தஸ்து, கௌரவம், மதிப்பு ஆகியனவும் அவசியமான நிபந்தனைகளாகும். இச்சமூக எழுச்சி இயக்கம் நாவிதர் சமூகமும், ஏனைய பிற்பட்ட சமூகங்களும் அந்தஸ்து, கௌரவம், மதிப்பு ஆகியனவற்றைப் பெற்று வாழ்நிலையில் உயர வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு செயற்பட்டுள்ளது.

மூல உபாயங்கள் (Stategies)

இச்சமூக எழுச்சி இயக்கம் தனது நோக்கங்களை அடைவதற்காக சில மூல உபாயங்களை வகுத்துச் செயற்படலாயிற்று. இம்மூல உபாயங்கள் பின்வருவன.

1. நிறுவன ரீதியிலான தலைமையைத் தாபித்தலும் மக்களின் ஐக்கியத்தைப் பேணுதலும்

எழுச்சி இயக்கத்தின் வரலாற்றில் 1981 ஆம் ஆண்டு ஒரு திருப்பு முனையாகும். இவ்வாண்டில் கிராம மட்டத்தில் 24 சமூக முன்னேற்றக்கழகங்கள் வெவ்வேறு பெயர்களுடன் ஆரம்பிக்கப்பட்டன. இக்கழகங்கள் ஆறு அம்சத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்பட ஆரம்பித்தன. 24 சமூக முன்னேற்றக் கழகங்களையும் ஒன்றிணைத்து உச்ச ஸ்தாபனமான சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசம் 15.04.1981 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய தினம் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வளவில் ஐயாயிரத்திற்கும் அதிகமான மக்கள் பங்கேற்ற மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் சமாசத்தின் நிர்வாகத்தினைக் கொண்டு இயங்குவதற்கான மகா சபையும் தெரிவு செய்யப்பட்டது. பிற்காலத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குழப்பங்கள் ஏற்பட்டபோதும் சமூக எழுச்சி இயக்கத்தின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு இம்மாநாடு பெரும் உந்து சக்தியாக அமைந்தது.

2. கல்வி மேம்பாடு

கல்வி மேம்பாட்டின் மூலமே பொருளாதார நிலையிலும் சமூக நிலையிலும் உயர்ச்சி பெற முடியும் என்பதை இச்சமூக எழுச்சி இயக்கம் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொண்டது. 1960க்குப் பிந்திய 20 ஆண்டு காலத்தில் இரண்டாம் நிலைக் கல்வியிலும் உயர் நிலைக் கல்வியிலும் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக படித்த இளைஞர்கள் தொகை இக்காலத்தில் அதிகரித்தது. சமூக முன்னேற்றக் கழகங்களினை ஆரம்பிப்பதிலும் இயக்குவதிலும் இளைஞர்கள் கூடிய பங்களிப்பை நல்கினர். கல்வி மேம்பாடு மூலமே எதிர்கால வளர்ச்சியும் எய்தப் பெறலாம் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டனர். எழுச்சி இயக்கத்தின் பிரதான மூல உபாயங்களில் ஒன்றாகக் கல்விமேம்பாடு அமைந்தது.

3. தொழில் பெயர்ச்சியும் தொழில் வளம் பெருக்குதலும்

மரபு வழித்தொழில்கள் சாதிமுறைமையுடன் தொடர்பு பட்டனவாக இருந்தன. இத்தொழில்களில் பல வர்த்தக மயப்படுதல் காரணமாக வருமானம் தரும் தொழில்களாக மாறத் தொடங்கின என்பது உண்மையே எனினும் சில தொழில்களின் சமூகக்கறை (Social Stigma) தொடரலாயிற்று. இக்காரணத்தினால் நாவிதர் சமூகம் மரபு வழித்தொழில் முறையை முற்றாகக் கைவிட்டு வேறு தொழில்களைத் தேடிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடே 'தொழில்பெயர்ச்சி' என்னும் மூல உபாயமாகும். தொழில்பெயர்ச்சி என்ற உபாயத்துடன் இணைந்ததாக தொழில் வளம் பெருக்குதலும் அமைந்தது. மரபுவழித் தொழிலைக் கைவிட்டு வெறும் உடல் உழைப்பை விற்கும் கூலித்தொழிலாளர்களாக மாறுவது சமூகப் பின்னடைவுக்கே வழிவகுக்குமாதலால் உயர்கல்வியைப் பெற்று பயிற்சிபெற்ற உயர்தொழில் வகுப்பினராக மாறவேண்டும் என்ற இலக்கினைக் கொண்டதாக எழுச்சி இயக்கம் செயற்பட்டது.

4. சமூக வங்கி முறையை வளர்த்தல் (Community Banking)

இச்சமூக எழுச்சி இயக்கத்தின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது அது அறிமுகம் செய்த சமூகவங்கி முறையாகும். அபிவிருத்திக்குத் தேவையான நிதி மூலதனத்தை திரட்டுவதற்கான உபாயமாக இது அமைந்தது. எழுச்சி இயக்கம் அமுல்படுத்திய சமூக வங்கி முறையின் முக்கிய அம்சங்கள் பின்வருவன.

1. அபிவிருத்திக்குத் தேவையான நிதி மூலதனத்தை வளர்த்துப் பாதுகாப்பாகப் பேணி உச்சப் பயன்பெறும் முறையில் பயன்படுத்துதல்.

2. சிக்கன சேமிப்பு பழக்கத்தை மக்களிடம் வளர்த்தல்

3. மேற்கூறிய இரு நோக்கங்களையும் எய்துவதற்கு ஏற்றதான நிறுவன அமைப்பாக புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் உருவாக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதிய பணிப்பாளர் சபை (கூட்டிணைத்தல்) சட்டம் இந்நிறுவனத்திற்கு சட்ட அங்கீகாரத்தை வழங்கியது.

4. சமூக வங்கி முறையின் செயற்பாட்டுக்குத் துணையாக அமைந்த இன்னொரு விடயம் நாம் முன்னரே குறிப்பிட்ட சமூக முன்னேற்றச் சங்கங்களின் சமாசம் என்னும் நிறுவனக் கட்டமைப்பாகும்.

5. வறுமை முதலான சமூக கொடுமைகளை ஒழித்தல்:

வறுமை முதலிய சமூகக் கொடுமைகளை ஒழிப்பதற்கான செயல்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

6. உயரிய ஒழுக்க பண்பாட்டு விழுமியங்களைப் பேணிவளர்த்தல்

பொருண்மிய வளர்ச்சி மட்டும் ஒரு சமூகத்தை உயர்நிலைக்கு எடுத்துச் செல்லமாட்டாது, உயரிய ஒழுக்கங்களையும், கலாசார பண்பாட்டு விழுமியங்களையும் பேணுதலும் வளர்த்தலும் அவசியமாதலால் கலாசார பண்பாட்டு உயர்ச்சிக்கான திட்டங்களும் செயற்படுத்தப்பட்டன.

எழுச்சிச் சிந்தனைகள்

இச்சமூக எழுச்சி இயக்கத்தை வழிநடத்திய எழுச்சிச் சிந்தனைகள் சிலவற்றை குறிப்பிடலாம்.

1. உயர்ந்த ஒழுக்க நியமங்களைப் பேணுதல், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கொண்டவர்களான அங்கத்தவர்களை இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் இன, மத, சாதி, பிரதேச, சமூக, அரசியல், கசப்புணர்வுகளைக் கைவிட்டு மனிதநேயம், மதிப்புணர்வு, புரிந்துணர்வு, பரஸ்பர உதவி ஆகிய பண்புகளை இயக்க உறுப்பினர்களிடம் வளர்த்தல் ஆகியன எழுச்சி இயக்கத்தின் முன்னுதாரணமான விழுமியங்களாகத் திகழ்ந்தன. இயக்க வரலாற்றின் ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் தமது தலைமைத்துவத்தை வழங்கியதோடு, மேற்குறித்த விழுமியங்களைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டவர் எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களாவர்.

2. எழுச்சி இயக்கம் ஜனநாயக முறைக் கட்டமைப்பைக் கொண்டதாக விளங்கியது.

3. சமூக எழுச்சி இயக்கத்தின் முகாமைக் கட்டமைப்பு அகப்புற சூழலுக்கு ஏற்ப மாற்றப்பட்டது' காலத்துக்கு காலம் மறுசீரமைக்கப்பட்டது.

4. மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தொடர்ச்சியான கருத்துப் புரட்சி இயக்கம் ஒன்றை இவ் எழுச்சி இயக்கம் செயற்படுத்தியது.

5. இயக்கத்துடன் மூன்று தலைமுறையைச் சேர்ந்த உறுப்பினர்கள் இணைந்து தொழிற்பட்டனர். இளம் தலைமுறையை உள்வாங்கி ஊக்கத்தோடும் தளர்ச்சியின்றியும் இயக்கத்தை வழிநடத்தும் தலைவர்களை இவ்வியக்கம் கொண்டிருந்தது.

6. மதியுரைஞர் குழுவொன்றை அமைத்து அறிஞர்கள், சமூகப் பெரியார்கள், சமயப் பெரியார்கள் உயர் தொழிற்புலமையாளர்கள் ஆகியோரின் ஆலோசனைகளைப் பெற்று செயற்பட்டமை தடைகளையும், எதிர்ப்புக்களையும் தாண்டி முன்னேற உதவியது.

7. பிற சமூக நிறுவனங்கள் அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றுடனும் ஆளுமை மிக்க தனி நபர்களுடனும் தொடர்புகளைப் பேணியதால் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடிந்தது.

8. இவ் எழுச்சி இயக்கம் அரசியல் நடுநிலைமையைக் கடைப்பிடித்தது. அத்தோடு எல்லா முக்கிய தமிழ்த் தலைவர்களுடனும் தொடர்புகளைப் வளர்த்து அவர்களின் உதவியோடு இயக்கத்தின் தலைவர்கள் இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றனர்.

9. பட்டினி கிடந்தாயினும் படிப்போம் என்ற இலட்சியக் கூற்று இயக்கத்தினரின் மனதில் நன்கு பதிந்த ஒன்றாயிற்று. ''கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்ற ஆன்றோர் வாக்குக்கு இயக்கம் புதிய விளக்கத்தைக் கொடுத்து மக்களைக் கல்வியில் ஊக்கம் பெறவைத்தது.

10. சமூக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நிதிவளங்களை இயக்கம் சமூக வங்கி முறை மூலம் பெற்றுக் கொண்டது.

11. சமூக நிறுவனங்களையும் சமூக வங்கியையும் சட்ட அந்தஸ்துக் கொண்ட நிறுவனங்களாக உயர்த்தி அவற்றின் செயற்பாடுகளுக்கு உறுதியான அடித்தளம் இடப்பட்டது.

12. தூரநோக்கு, இலக்கு, கொள்கைகள், மூல உபாயங்கள் ஆகியவற்றைத் தொடர்ச்சியாக மறுபரிசீலனை செய்தல் முகாமைத்துவச் சிந்தனைகளை நடைமுறைப் படுத்தல் என்பன மூலம் இயக்கம் காலமாற்றத்திற்கு ஏற்ப செயற்படும் வலுவைப் பெற்றுக்கொண்டது.

சமூக எழுச்சி இயக்கத்தின் செயல்திட்டங்களின் தாக்கமும், விளைவுகளும், பற்றிய மதிப்பீடு

சமூக எழுச்சி இயக்கத்தின் செயல்திட்டங்களினால் ஏற்பட்ட தாக்கத்தினையும் விளைவுகளையும், பின்வரும் தலைப்புக்களின் கீழ் தொகுத்துக் கூறலாம்.

1. கல்வி விருத்தியும், சமூக அசைவியக்கமும்
2. சமூக ஐக்கியமும் ஒத்துழைப்பும் வளர்க்கப்படல்.
3. தொழில் பெயர்ச்சி என்னும் கொள்கையின் பரவலான ஏற்புடைமை
4. ஒழுக்க, கலாச்சார, பண்பாட்டு, விழுமியங்களை வளர்த்தல்

மேற்குறித்த விடயங்கள் யாவும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன என்பது கவனித்தற்குரியது. ஆயினும் தாக்கங்களையும் விளைவுகளையும் பகுப்பாய்வு செய்வதற்கும் மதிப்பிடுவதற்கும் இந்த விடயப் பகுப்பு பயன்தரும் என்று கருதினோம்.

கல்வி விருத்தியும், சமூக அசைவியக்கமும்

மரபுவழித் தொழில் முறையொன்று வர்த்தக மயமாக்கப்பட்டதன் விளைவாக நாவிதர் சமூகத்தின் பொருளாதார நிலையில் மாற்றம் ஏற்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். கொழும்பு

நகரிலும் தென்னிலங்கையின் பிற நகரப் பகுதிகளிலும் மலேசியாவிலும் அத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தொழில் நிமித்தம் இடம் பெயர்ந்து சென்று உழைக்கத் தொடங்கினர். இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தின் உயர்சாதியினர் மத்தியில் உத்தியோகங்களைத் தேடிக் கொழும்புக்கும், தென்னிலங்கையின் பிற இடங்களுக்கும் மலாயாவிற்கும் இடப்பெயர்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதனால் ஏற்பட்ட சமூக அசைவியக்கம் (Social Mobility) யாழ்ப்பாணக் கிராமங்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. தமிழர் சமூகத்தின் உயர்சாதியினரிடம் ஏற்பட்டுக் கொண்டிருந்த சமூக அசைவியக்கம், நாவிதர் சமூகம் போன்ற பிற்படுத்தப்பட்ட சாதியினரிடையே சிறிய அளவில் தோற்றம் பெற்ற சமூக அசைவியக்கத்தில் இருந்து தன்மையில் வேறுபட்டதாகும்.

இச்சமூக எழுச்சி இயக்கம் 1980 காலகட்டத்தில் தனது சமாச கிளைகளினூடாக 'பட்டினி கிடக்க நேரிடினும் படிக்க வைப்போம்' என்னும் செயல்திட்டத்தை நடைமுறைப் படுத்த ஆரம்பித்தது. இச்செயல்திட்டம் தனிநபர்களையும் குடும்பங்களையும் இலக்கு வைக்கும் முறையில் அமைந்ததெனும் சாராம்சத்தில் தமது மரபுவழி தொழிலின் வர்த்தக மயமாக்கலால் கிட்டிய வாய்ப்புக்கள் அச்சமூகத்தை உயர்நிலைக்கு இட்டுச் செல்லாது என்ற உண்மை இவ் எழுச்சி இயக்கத் தலைவர்களுக்கு தெட்டத் தெளிவாகத் தெரிந்ததன் பலனே ஆகும். 1980ல் நடைமுறைப்படுத்தப்பட்ட இச்செயல்திட்டத்தின் பயனாக 32 ஆண்டுகால எல்லைக்குள் அச்சமூகத்திற்குள் புரட்சிகரமான மனமாற்றமும் எழுச்சியும் ஏற்பட்டது. முன்னர் சிறுவர்களைப் படிக்கவிடாமல் மரபுவழி வேலைக்கு அமர்த்தும் நிலை இருந்தது. 5ஆம் வகுப்புவரை மட்டும் படித்தால் போதுமானது என்ற சிந்தனை மாறியது. இது பற்றி எழுச்சித்தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் கூற்றொன்றை கீழே மேற்கோளாகத் தந்துள்ளோம்.

"..... படிப்பை நல்ல பாடசாலையில் தொடர வேண்டும், தம் பிள்ளைகள் படிப்பில் முன்னணியில் திகழவேண்டும், பாடசாலைப் படிப்புக்கு மேலாக பிரத்தியேக கற்றலுக்கு வாய்ப்பளிக்க வேண்டும், எப்பாடு பட்டாலும் பிள்ளைகள் பல்கலைக்கழகம் போக வேண்டும் என்ற உத்வேக உணர்வு எம்மக்கள் மத்தியில் தீவிரமாக வளர்ச்சி பெற்றுள்ளது. ஒருகாலத்தில் தம் சிறார்களை தொழிலுக்குத் துரத்துவதில் தாய்மார்கள் முன்னணியில் நின்றனர். இன்று தாய்மார்களே தமது சிறார்களைப் படிக்க வைப்பதில் முன்னணியில் நிற்பதைக் காண்கின்றோம்." (பக்.31 சமூக ஜோதி கதிரேசு நவரத்தினம் நினைவு வெளியீடு 2007)

ஆரம்பக் கல்வியுடன் படிப்பை நிறுத்தி மரபுவழித்தொழில் நிலையங்களில் கிடைக்கக் கூடிய சம்பளத்திற்காக சிறுவர்களை அனுப்பும் நிலையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்ற உறுதியுடன் சமாசம் செயற்படலாயிற்று.

கல்வி விருத்திச் செயற்பாடுகளின் முக்கிய கட்டங்களும் அவற்றின் விளைவுகளும் பின்வருமாறு:

1. 1980/81 ஆம் ஆண்டில், க.பொ.த.(சா.த) வகுப்புவரை பிள்ளைகளைப் படிக்க வைக்கவேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு எழுச்சி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தொழிலுக்கு செல்லும் நோக்குடன் கல்வியை 5ஆம் ஆண்டுடன் முடித்துவிடும் தீமை ஒழிக்கப்படவேண்டும் என்று திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2. 1993ஆம் ஆண்டில் வறியோராயினும் பல்கலைக்கழகப் பட்டதாரியாக வேண்டும் என்ற இலக்கோடு கல்விச் செயல்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

3. 2000ஆம் ஆண்டில் மூன்றாம் கட்ட இலக்காக பல்கலைக்கழகப் பட்டத்தோடு தொழிற்புலமைசார் தகைமையும் பெற்றிருக்க வேண்டும் என்ற இலக்குடன் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இம்மூன்று கட்டச் செயற்பாடுகளால் ஏற்பட்ட மாற்றங்கள் சமூக மறுமலர்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாயின. 1990க்களில் மரபு வழித்தொழிலை வேறுவழியின்றி நாடியோரில் பலர், க.பொ.த.சாதாரண தரம் வரை படித்தவர்களாய் இருந்தனர். சமூகத்தின் கல்வித் தர மட்டம் உயர்ந்தது. க.பொ.த.சாதாரண தர வகுப்பு படிப்பை முடித்த பின்னர் க.பொ.த. உயர்தர வகுப்பில் சேர்ந்து படிப்போர் தொகையும் இக்காலத்தில் கணிசமாக அதிகரித்தது. சமாசக் கிளைகளூடாகக் கல்வித் திட்டத்தில் இணைந்து ஆர்வத்தோடு படித்த மாணவர்களில் பலர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகினர். பரவலாக எல்லாத் துறைகளையும் தழுவியதாக பல்கலைக்கழக கல்வி பரவியது. முந்திய காலத்தில் சமூகத்தவரில் பல்கலைக்கழகம் சென்று படித்தோர் அனைவரும் கலைப்பட்டதாரிகளாகவே இருந்தனர். இன்று முகாமைத்துவம், விஞ்ஞானம், பொறியியல், வைத்தியம், விவசாயம் போன்ற பலதரப்பட்ட துறைகளிலும் பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெறும் நிலைக்கு சமாசத்தைச் சேர்ந்த இளம் சந்ததியினர் முன்னேறினர். சமாச கிளைகளூடாக செயற்பட்ட கிராமங்களின் இளைஞர்களிடையே தொழிற்கல்வியும் பரவியது. பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களில் பலர் பின்பட்ட டிப்ளோமா, முதுமாணிப்பட்டம், கலாநிதிப் பட்டம் என்பனவற்றையும் பெற்றுக் கொள்ளலாயினர்.

மேற்குறித்த கல்வி மாற்றங்களின் பயனாக வைத்திய கலாநிதிகள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்கள், தனியார் துறை முகாமையாளர்கள் என உயர்தொழில்களில் பலர் புகுந்து சிறப்பெய்தினர். இவ்வுயர் தொழில்களோடு பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர், எழுதுவினைஞர், கிராமசேவகர் எனப் பல உத்தியோகங்களில் அமரும் வாய்ப்புக்கள் அதிகரித்தன.

சமூக ஐக்கியமும் ஒற்றுமையும் வளர்க்கப்படல்

இக்கட்டுரையின் முற்பகுதியில் சமூக மூலதனம் என்ற விடயம் குறித்து நாம் கூறியவற்றை மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்ளுதல் பொருத்தமானது. முதன்மைப் பயனாளிகள் சமூகம் பல்வேறு கிராமங்களில் சிதறி வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்கள் ஒன்றுபட்ட சமுதாயமாக ஐக்கியப்பட்டு ஒரு நிறுவன அமைப்பின் கீழ் ஒன்றுதிரண்டமை வரலாற்று முக்கியம் வாய்ந்த நிகழ்வாகும். யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் இயற்கை வள மூலதனமும் (பயிர்ச்செய்கை நிலம், காணி, தோட்டம் முதலியன) உட்கட்டமைப்பு மூலதனமும் (Infra -Structure Capital) யுத்தச் சூழ்நிலை காரணமாக அழிவடைந்து கொண்டிருந்தது. பல கிராமங்களைச் சேர்ந்தோர் இவ்வகை மூலதனங்களை முற்றாக இழந்தனர் அல்லது கைவிட்டுச் சென்றனர். இவ்வாறான பின்னணியில் தமது ஜீவிதத்தையும் (அபிவிருத்தியை அல்ல) இருப்பையும் உறுதி செய்வதற்கு ஏனைய மூன்று வகை மூலதனங்களை புத்திசாதுரியத்தோடு பயன்படுத்திக் கொண்டனர். அவையாவன:

1. சமூக மூலதனம் என்னும் சமூக நிறுவன வலையமைப்பும் தொடர்புகளும்,
2. மனித வள மூலதனம் - கல்வி, பயிற்சி மூலம் மனித வளத்தைப் பெருக்குதல்,
3. நிதி மூலதனம்

வடக்கு கிழக்கின் வெவ்வேறு சமூகப் பிரிவினர்களுள் சமூக மூலதனம் என்ற வளத்தை தமது ஐக்கியம்' ஒற்றுமை, உறுதியான தலைமைத்துவம் என்பவற்றின் மூலம் வளர்த்துக் கொள்வதில் இச்சமூக எழுச்சி இயக்கத்தினைச் சார்ந்த சமூகக் குழு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தது. சமூக மூலதனத்தை இவ்வியக்கத்தினர் வளர்த்துக் கொண்ட முறையின் வெற்றியே மனித வள மூலதனம், நிதி மூலதனம் என்பவற்றை வளர்த்துக் கொள்வதையும் சாத்தியமாக்கியது.

தொழில் பெயர்ச்சி என்னும் கொள்கையின் பரவலான ஏற்புடமை

இச்சமூக எழுச்சி இயக்கம் மரபுவழித் தொழில் முறையொன்று வர்த்தக மயப்பட்ட தொழில் முறையாக மாறியபோதும் அத்தொழில் சாதியத்தின் கீழ் திணிக்கப்பட்ட ஒரு தொழில் என்பதையும், அது தனிமனிதனின் தொழில் உரிமையை இல்லாது ஒழிக்கும் தொழில்முறை என்றும் கூறிவந்துள்ளது. இத்தொழிலைக் கைவிடுவதும் வேறு புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்துவதும் சமாச உறுப்பினர்களின் இலக்காக இருத்தல் வேண்டும் என்பதைக் கூறிவந்தது. எழுச்சித் தந்தை ஆர்.எம். நாகலிங்கம் அவர்களின் கூற்று ஒன்று இக்கருத்தை தெளிவாக எடுத்துக் கூறுவதாக உள்ளது. 'சமூக சமத்துவத்தை நோக்கிய பயணத்தின் வெற்றிக்கு பொருளாதார பலம் மட்டும் போதுமான தொன்றல்ல. சாதியத்தைப் பேணிக் காக்கின்ற மரபுவழித் தொழில் முறை உயிர்வாழும்வரை, சமூக சமத்துவத்திற்கான

பயணம் வெற்றி பெறும் என்பது வெறும் பகற்கனவு என்பதே வரலாறு தரும் படிப்பினையாகும். தான் சார்ந்த சமூகக் குழுமியமானது ஏனைய சமூகக் குழுமியங்கள் மத்தியில் சமூக சமத்துவம் பெற்று, கௌரவம் பெற்ற சமூகமாக மிளிர வேண்டும் என்ற கரிசனை உள்ள ஒவ்வொருவரும் புதிய புதிய வாய்ப்புக்களை நோக்கிப் பெயர்வதைப் பெருமையாகக் கொள்ள வேண்டும். (பக். 34 சமூகஜோதி கதிரேசு நவரத்தினம் வெளியீடு)

தொழில்பெயர்ச்சி என்னும் இக்கொள்கை இன்று பரவலாக ஏற்புடைமை பெற்றுள்ளமை சமாசத்தின் செயற்பாடுகளின் வெற்றிக்குச் சான்றாக உள்ளன.

ஒழுக்க கலாசார பண்பாட்டு விழுமியங்களின் வளர்ச்சி

ஆண்டு விழாக்கள், கலாசார நிகழ்ச்சிகள், பரிசளிப்பு விழாக்கள், அஞ்சலி நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகள் பல சமாசத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வந்துள்ளன. ஐக்கியம், சகோதர உணர்வு, மனித நேய உணர்வு, நலிவுற்றோருக்கு உதவுதல், பசித்தோருக்கு உணவளித்தல், அனர்த்தங்கள் ஆபத்துக்களின் போது முன்னின்று உதவுதல் ஆகிய விழுமியங்களைப் போற்றும் முறையில் இந்நிகழ்வுகள் அமைந்தன. திருமணச் சடங்கு, மரணச் சடங்கு, அஞ்சலி நிகழ்வுகள், பாராட்டு விழாக்கள் போன்ற சமூக வைபவங்களையும் மேற்குறித்த விழுமியங்கள் வெளிப்படுத்தப்படும் முறையில் நடத்தப்பட வேண்டும் என்ற உணர்வு சமாச உறுப்பினர்களிடையே வளர்க்கப்பட்டது. ஆதரவற்ற பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுதல், ஆதரவற்ற தாய் தந்தையர்களுக்கு உதவுதல், உடல் வலு குன்றியவர்களுக்கு உதவுதல், போர்ச்சூழலில் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல் போன்ற பலதரப்பட்ட உதவித் திட்டங்கள் சமாசத்தினால் முன்னெடுக்கப்பட்டன. இவை யாவும் எழுச்சி இயக்கத்தை உயரிய இலட்சியம் கொண்ட ஆன்மீக விடுதலை இயக்கமாகவும் பரிணமிக்கச் செய்துள்ளது எனலாம்.

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் தோன்றுவதற்குப் பின்புலமாக அமைந்த காரணிகள்

திரு.செ.ஜெகதாசன்
பணிப்பாளர்,
புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்

முன்னுரை

சமூக, சமய, கல்வி, கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை மேம்படச் செய்து சமூக சமத்துவம் கௌரவம், அந்தஸ்து பெற்றவர்களாக மக்களை உயர்ச்சி பெறச் செய்வதற்கு சமூக நிறுவனம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்ற எண்ணக்கருவை சிறுவயதிலிருந்தே மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு. இராமு முருகேசு நாகலிங்கம் அவர்கள் தன்மனதில் உருவாக்கி வளர்த்துக் கொண்டதன் விளைவாக மகாகவி பாரதியின் பெயரால் மாவை பாரதி வாசிகசாலை என்ற பெயரோடு 12.09.1995 இல் மாவிட்டபுரத்தை மையமாகக் 1955
கொண்டு திரு.இ.மு. நாகலிங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட சமூக நிறுவனமானது பின்னர் 19.10.1971 இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் எனப் பெயர்மாற்றம் பெற்று சேவையாற்றி வருகின்றது. தெல்லிப்பளை கிராம சபையின் கீழ் **CC/283** இலக்கத்தைக் கொண்டு 14.11.1955இல் பதிவு பெற்ற மாவை பாரதி சனசமூக நிலையமானது மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் இணை நிறுவனமாக இருந்து செயல்படுகின்றது. இரு நிறுவனங்களும் ஒரு பொதுவான நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் இயங்கி வருகின்றன. இந்நிறுவனங்களின் ஸ்தாபகத் தந்தையான திரு.இ.மு.நாகலிங்கம் அவர்களின் மனதில் ஒரு சமூக நிறுவனத்தை தாபிக்க வேண்டுமென்ற எண்ணக்கரு உருவாகி வளர்ச்சி பெற்று செயல்வடிவம் பெறுவதற்கு பின்புலமாக இருந்த முக்கிய காரணிகளை மன்றத்தின் வளர்ச்சி வரலாற்று அறிக்கையில் பதிவு பெறச் செய்வது அவசியமாகும். மன்றமானது தோன்றுவதற்கு திரு.இ.மு. நாகலிங்கத்தை தூண்டிய காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்ட மூல காரணியும் துணைக்காரணிகளும் பின்வருமாறு:-

1. **மூல காரணி** :- பின்தங்கிய சமூகநிலை

2. **துணைக்காரணிகள்**

   (அ) மாவை சித்தி விநாயகர் ஆலயத்தினதும் மாவை அம்பாள் ஆலயத்தினதும் செல்வாக்கு.
   (ஆ) அமெரிக்கன் மிஷன் பாடசாலைகளின் செல்வாக்கு
   (இ) இடதுசாரி இயக்கத்தின் செல்வாக்கு
   (ஈ) சமூகசமத்துவப் போராட்டத்தின் செல்வாக்கு
   (உ) பெற்றோரின் செல்வாக்கு
   (ஊ) இ.மு.நா வின் சமூக எழுச்சி சிந்தனைகளின் வளர்ச்சி
   (எ) இ.மு.நா வின் தனித்துவமான ஆளுமையின் செல்வாக்கு

மூலகாரணி

1. பின்தங்கிய சமூகநிலை

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் உயர்ந்த இலட்சியத்தைக் கொண்ட சைவத்தமிழர் பண்பாட்டை கறைபடியச் செய்த அநாகரிகமான சாதிமுறை தமிழ் மக்களை உயர்ந்தோர், தாழ்ந்தோர் என பிளவுபடுத்திய அசிங்கமான மன்னிக்கமுடியாத வரலாறு எமக்குண்டு. ஆதிக்கம் படைத்தோர் உயர்ந்தோர் என்றும் அவர்களால் அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தப்பட்டோர் தாழ்ந்தோர் என்றும் அடையாளப் படுத்தப்பட்டனர். தாழ்ந்தோரை எப்பொழுதும் தமக்கு அடிமைகளாக வைத்து ஆண்டு அனுபவிக்கும் நோக்கில் கல்வி உரிமை, தொழில் உரிமை, அரசியல் உரிமை, வழிபாட்டு உரிமை, நில உரிமை போன்ற மனித உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்பட்ட காலத்தை மறந்துவிட முடியாது. பின்தள்ளப்பட்ட சமூகப்பிரிவின் கீழ் தொழில் அடிப்படையில் பல சமூகக் குழுமியங்கள் உள்ளடக்கப்பட்டன. பின்தங்கிய சமூகக்குழுமியங்கள் பல தனித்தும் இணைந்தும் விழிப்புணர்ச்சி பெற்று சிந்தனை மாற்றம் பெற்று எழுச்சி கொண்டன. அமைதிப் புரட்சியின் மூலமும் சமூகப் போராட்டங்கள் மூலமும் சமூக சமத்துவத்தை நோக்கிய வளர்ச்சிப்பாதையில் அவர்கள் பயணிக்கத் தொடங்கினர். அமெரிக்க மிஷனரிமாரின் கல்வி இயக்கம், இலங்கையின் இலவசக் கல்வி இயக்கம் ,இடதுசாரி இயக்கம், அரசியல் செல்வாக்கு போன்ற காரணிகளால் அத்தகைய சமூக சமத்துவத்திற்கான போராட்டங்கள் தீவிரப்படுத்தப்பட்டு அவை காத்திரமான முறையில் சமூக சமத்துவத்தை நோக்கி முன்னேற வழிவகுத்தன. பிற்படுத்தப்பட்ட சமூகக் குழுமியங்கள் பல கிராம மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் சமூக நிறுவனங்களை உருவாக்கி சமூக சமத்துவத்துக்கான முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்தி வந்துள்ளன. அத்தகைய நிறுவனங்களின் வரிசையில் வடமராட்சி சன்மார்க்க சபை, சிறுபான்மைத் தமிழர் முன்னேற்றக்கழகம், திருவள்ளுவர் மகாசபை, அருந்ததியர் சங்கம், யாழ்ப்பாணம் சன்மார்க்க ஜக்கிய வாலிபர் சங்கம், பருத்தித்துறை நல்வழி ஜக்கிய சேவா சங்கம், திராவிடர் கலைமன்றம் போன்ற நிறுவனங்கள் அடங்கும். 1942 இல் இத்தகைய நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபை உருவாக்கப்பட்டு சமூக சமத்துவ போராட்டத்துக்கான இயக்கம் சக்திவாய்ந்த ஒரு அமைப்பாக வலுப்பெற்றது. சமூக சமத்துவப் போராட்டத்தை தீவிரப்படுத்தி பல வெற்றிகளை சாதித்த பெருமை இம் மகா சபைக்கு உண்டு. சமூக சமத்துவத்துக்கு கல்வி அபிவிருத்தியின் அவசியத்தை உள்வாங்கி பின்தங்கிய மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக இம் மகாசபை கடினமாக உழைத்துள்ளது.

பின்தங்கிய சமூகக் குழுமியங்களில் ஒன்றான நாவிதர் சமூகக் குழுமியமானது இக்காலகட்டத்தில் எழுச்சி கொள்ளாது வாழாது இருந்தது. ஆதிக்கம் செலுத்திய சமூகக் குழுமியங்களின் பிரித்தாளும் தந்திரத்திற்கு இச்சமூகம் பலியாகியிருந்த காரணத்தினால் தமது கல்வி உரிமை,தொழில் உரிமை, அரசியல் உரிமை போன்றவை பற்றி நீண்டகாலமாக உணர்ச்சி அற்றவர்களாக வாழ இவர்கள் பழக்கப் பட்டிருந்தார்கள். தடைகள், கட்டுப்பாடுகள்,

அடக்குமுறைகளைத் தாண்டி விழிப்புணர்ச்சி ஊட்டவும் சிந்தனை மாற்றங்களை ஏற்படுத்தவும் சமூக சமத்துவ போராட்டங்களை தூண்டி வழிநடத்தவும் இசைவான தலைவர்கள் ஏனைய பின்தங்கிய சமூகங்களுக்கு இருந்தது போல் நாவிதர் சமூகத்திற்கு அப்பொழுது இருக்கவில்லை. ஏனைய பின்தங்கிய சமூகக் குழுமியங்கள் வேகமாக கல்வித்துறையில் முன்னேற்றம் கண்டபொழுதும் பாடசாலைக்கல்வியை 5ம் வகுப்பிற்கு மட்டுப்படுத்தப்பட்ட சாபக்கேடான நிலையும் இச்சமூகத்தின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக அமைந்திருந்தது. மரபுவழித்தொழில் முறையில் பொதிந்துள்ள அடிமைத்தனத்தை உணராமல் அத்தொழில் முறையை போட்டிபோட்டுப் பேணி வந்துள்ளனர். தொழில் பெயர்ச்சிக்கான முயற்சி நீண்டகாலமாக பூச்சிய நிலையில் நிலைத்திருந்துள்ளது. இச்சமூகக் குழுமியத்தின் திரண்ட சனத்தொகை ஒப்பீட்டளவில் மிகமிகக் குறைவானதாகும். இவர்கள் சிதறுண்டு மூலைமுடுக்குகளெல்லாம் சிறுசிறு குழுக்களாக வாழ நேர்ந்துள்ளனர். இவர்களை ஒன்றுதிரட்டி ஒரு பலம் வாய்ந்த சக்தியாக்குவதற்கு வெற்றியளிக்கக் கூடிய முறையில் முயற்சிகள் எடுக்கப்படவில்லை. இவர்கள் மத்தியில் ஐக்கியம் நலிவுற்றிருந்தது. இவ்வாறு ஆள்பலம், அரசியல் பலம், பொருளாதாரபலம், கல்விமேம்பாடு, ஐக்கியம், தொழில் மேம்பாடு, பண்பாட்டு வளர்ச்சி குன்றியும் சமூக சமத்துவம், சமூக கௌரவம், சமூக அந்தஸ்து ஆகியனபற்றிய உணர்வு இல்லாமலும் தன் சமூக மக்கள் வாழ்ந்தநிலைகண்டு இ.மு.நா தூண்டப்பட்டார். தான்சார்ந்த சமூகம் ஏனைய சமூகங்கள் மத்தியில் சமத்துவம் பெற்ற சமூகமாக, அந்தஸ்து பெற்ற சமூகமாக, கௌரவம் பெற்ற சமூகமாக பரிணமிக்க வேண்டுமென்ற எண்ணக்கருவை தன்னுள் இவர் வளர்த்துக்கொண்டதன் விளைவாக கல்வி, தொழில், பொருளாதாரம், ஐக்கியம், பண்பாடு ஆகிய துறைகளில் வளர்ச்சி காண்பதற்கு நிறுவன ரீதியான ஒரு தலைமை அவசியமென்ற தீர்மானத்தின் அடிப்படையில் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தை ஸ்தாபிப்பதற்கு இ.மு.நா தூண்டப்பட்டார்.

துணைக்காரணிகள்

2. ஆலயங்களின் செல்வாக்கு

ஏனைய சைவ ஆலயங்கள் போன்று மாவை சித்தி விநாயகர் ஆலயமும் மாவை அம்பாள் ஆலயமும் சமய நிறுவனமாக மட்டுமல்லாமல் சமூக நிறுவனமாகவும் சேவையாற்றி வருகின்றன. மக்கள் மத்தியில் தொடர்பை, ஐக்கியத்தை , சமயப்பண்பாட்டை வளர்ப்பதற்கு இவ்வாலயங்களைப் பயன்படுத்த முடியுமென்ற நம்பிக்கையோடு சிறுவயதிலிருந்தே இவ்வாலயக் கருமங்களில் இ.மு.நா ஈடுபாட்டுடன் செயற்பட்டு வந்துள்ளார். 1947ஆம் ஆண்டு முதல் இவ்வாறு ஈடுபட்டு வந்துள்ளார் எனக் கூறலாம். நேரக் கிரமத்துடன் பூசைக்கிரியைகள் நடைபெற வேண்டும். வழிபடுவோர் தூய்மை பேண வேண்டும், ஆலயத்தில் வீண்வார்த்தை பேசாதிருத்தல் வேண்டும், ஆலயத்தையும் சூழலையும் புனிதமாக வைத்திருத்தல் வேண்டும், சகோதர உணர்வுடன் மக்கள் போட்டி, பொறாமை இன்றி ஆலயக் கருமங்களில் பங்குபற்ற

வேண்டும், கூட்டுப்பிரார்த்தனைகளில் அனைவரும் பங்குபற்ற வேண்டும் என்பன போன்ற சைவ வாழ்வியல் சிந்தனைகளைக் கடைப்பிடித்து ஒழுக வழிபடுவோர்களைத் தூண்டி போதிய வெற்றி கண்டவர் இ.மு.நா. இத்தகைய நற்பயன்களின் மூலம் தூண்டப்பட்ட இ.மு.நா முதியோர், மாணவர், சிறுவர்கள் ஆகியோரை அணிதிரட்டி தனித்துவமான சமூக நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதன் மூலம் சிறப்பான முறையில் சமூக, கல்வி, சமய, கலை, கலாசாரம் பண்பாடு ஆகியவற்றுக்கான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க முடியுமென்ற நம்பிக்கையையும் துணிவையும் வளர்த்துக் கொண்டார். ஆலயப் பணிகளின் மூலம் வழிபடுவோர் மத்தியில் நம்பிக்கையையும், மதிப்பையும் வளர்த்துக் கொண்டதுடன் தனது ஆளுமையையும் தலைமைப் பண்புகளையும் இ.மு.நா வளர்த்துக் கொண்டார். சமூக நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்கு இத்தகைய வளர்ச்சியும் மக்களின் அபிமானமும் பெரும் செல்வாக்கைச் செலுத்தியுள்ளது.

3. அமெரிக்க மிஷன் பாடசாலையின் செல்வாக்கு

மாவிட்டபுரம் கிராமத்தை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்ட மாவிட்டபுரம் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையானது மாவிட்டபுரக் கிராம மக்களது 5ம் வகுப்பு வரையிலான ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கு அச்சாணியாக விளங்கி வருகின்றது. சமூக, கல்வி, பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிள்ளைகள் இப்பாடசாலை மூலம் ஐந்தாம் வகுப்பு வரையான தங்களின் ஆரம்பக் கல்வியை நல்லமுறையில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை பெற்றுள்ளார்கள். சைவத் தமிழ் பாடசாலைகளில் சாதியின் பெயரால் மாணவர்கள் மத்தியில் தீவிரமானமுறையில் பாகுபாடு காட்டப்பட்டு கல்வி கற்பதற்கான சமத்துவ உரிமை ஒரு பகுதியினருக்கு மறுக்கப்பட்ட காலத்தில் அமெரிக்க மிஷன் பாடசாலைகள் உரிமை மறுக்கப்பட்ட பிள்ளைகள் அனைவரும் சமத்துவ உரிமையோடு கல்வி கற்று முன்னணிக்கு வரப்பெரும் பங்காற்றியுள்ளன. 1947ஆம் ஆண்டுவரை மன்றத்தைச் சேர்ந்த குடும்பங்களின் பிள்ளைகள் இப்பாடசாலை மூலம் தங்கள் ஆரம்பக் கல்வியை பூர்த்தியாக்கிக் கொண்டவர்களாவர். இவர்களில் பெரும்பாலானோர் இப்பாடசாலைக் கல்வியுடன் தமது படிப்பை முடித்துக் கொண்டவர்களாவர். ஆரம்பக் கல்வியானது சிறப்பாக வழங்கப்பட்ட காரணத்தினால் இப்பாடசாலையில் பயின்றவர்கள் கல்விக்கான நல்ல அத்திவாரத்தை அமைத்துக் கொள்ள முடிந்தது. இத்தகையோர் தங்களது வாசிப்பு, எழுத்து, பேச்சுத்திறனை மேலும் மேலும் வளர்த்துக் கொள்வதற்கு இத்தகைய அத்திவாரம் பெரிதும் உதவியது. இச்சிறப்புகளைக் கொண்ட இப்பாடசாலையில் இ.மு.நா தனது ஆரம்பக் கல்வியை சிறப்பாக பெற்றுக் கொண்டவராவார். இப்பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து பெற்றோரின் பெருவிருப்பத்திற்கமைய அமெரிக்கன் மிஷனைச்சேர்ந்த தெல்லிப்பளை யூனியன்கல்லூரியில் 1947ஆம் ஆண்டில் இ.மு. நா சேர்ந்து க.பொ.த உயர்தர வகுப்பு வரை கல்வி கற்றுள்ளார். இக்கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்றதன் பயனாக கல்வியில் சிறந்து விளங்கியதோடு நற்பண்புகளை கொண்ட மாணவனாகவும் தன்னை வளர்த்துக் கொண்டார். இக்காலப் பகுதியில் தன்னை தேடிவரும் வீட்டுச் சுற்றாடலிலுள்ள மாணவர்களுக்கு இலவசமாக கல்வி

கற்பிப்பதன் மூலமும் அம்மக்களின் நாளாந்த கருமங்களுக்கு தேவையான எழுத, வாசிக்க, விளக்க அவசியமான உதவிகளை நிறைவு செய்யவும் இ.மு நாவின் கல்வி அறிவு பயன்பட்டது. கல்லூரிக் காலத்தில் அரசியல், சமூகவியல், நடைமுறைவாழ்வியல் அறிவையும் விருத்தி செய்துகொண்டார். அரசியல் விவகாரங்கள், சமூக சமத்துவ போராட்டங்கள், உரிமை மீறலுக்கு எதிரான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் வளர்த்தல் போன்ற இயக்கங்களில் மிகக் கரிசணையுடனும் துணிச்சலுடனும் இவர் பங்குபற்றி வந்துள்ளார். மாணவனாக இருந்த காலத்திலேயே திருமணச்சடங்கு, மரணச்சடங்கு போன்ற சமூக வைபவங்களிலும் உறவினர்களின் வீட்டுக் கருமங்களிலும் முன்நின்று இ.மு.நா தொண்டாற்றி வந்துள்ளார். மிஷனரி பாடசாலைக் கல்வியின் மூலம் மக்களை நேசிக்கின்ற, மனித உரிமைகளை மதிக்கின்ற, நலிவுற்றோருக்கு உதவ வேண்டுமென்கின்ற உணர்வுகளை வளர்த்து ஒரு சமூக சேவையாளராக தன்னை வளர்த்துக் கொண்டுள்ளார். இத்தகைய வளர்ச்சியின் மூலம் துணிச்சலோடும், நம்பிக்கையோடும் சமூக நிறுவனமொன்றை ஸ்தாபிப்பதற்கான செயற்பாட்டில் இறங்குவதற்கு இ.மு.நா தூண்டப்பட்டார்.

4. இடதுசாரி இயக்கத்தின் செல்வாக்கு

இடதுசாரி இயக்கமானது இலங்கையில் 1932ம் ஆண்டளவில் உதயமானது. காங்கேசன்துறைத் தேர்தல் தொகுதியில் இடதுசாரி இயக்கத்தின் தொழில்பாடுகள் இலங்கை பாராளுமன்றத்துக்கான முதலாவது பொதுத்தேர்தலுடன் 1948ஆம் ஆண்டில் ஆரம்பமானது. வழக்கறிஞர் பொ. நாகலிங்கம் அவர்களின் தலமையில் காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் அறிமுகமான இலங்கை சமசமாஜக்கட்சியின் சமூகசமத்துவம், இனசமத்துவம், மொழிசமத்துவம், பொருளாதாரசமத்துவம் ஆகிய சமத்துவக் கோட்பாடுகளினால் ஈர்க்கப்பட்டவர்களுள் இ.மு. நாவும் ஒருவராவர். இலங்கை சமசமாஜக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையில் தனது சகாக்களுடன் அங்கத்தவராக சேர்ந்து அக்கட்சியின் கொள்கைகள், தத்துவங்கள், வேலைத்திட்டம் ஆகியவற்றை கட்சியின் பிரசார இயக்கத்தின் மூலம் விளக்கம் பெறுவதற்கான வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டார். சமூக சமத்துவம் மறுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான அடக்குமுறையைக் கண்டித்து குரல் கொடுத்ததுடன் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்கு சமசமாஜக் கட்சி பெரும் பங்காற்றி உள்ளது. இக்கட்சிக்கான ஒரு கிளை மாவிட்டபுரத்தில் ஆரம்பிப்பதற்கு அனுசரணையாக இருந்ததுடன் அதன் செயலாளராகவும் இ.மு. நா அவர்கள் சேவையாற்றியுள்ளார். இக்கட்சியின் செல்வாக்கின் மூலம் சமூக மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து செல்வதற்கு சமூக நிறுவனமொன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்ற கருத்து இ.மு.நா. விடம் மேலும் மேலும் வலுப்பெற்றது.

5. சமூக சமத்துவப் போராட்டத்தின் செல்வாக்கு

விரும்பிய பாடசாலைகளை தெரிவு செய்யும் உரிமை, சமத்துவத்துடன் பாடசாலைகளில் படிக்கும் உரிமை, ஆலயங்களுக்குள் சென்று வழிபடும் உரிமை, பொதுக்கிணறுகள் நீர்

நிலைகளை பாவிக்கும் உரிமை, விரும்பிய தொழிலை தெரிவு செய்யும் உரிமை, விரும்பிய இடங்களில் குடியிருப்புக்களை அமைக்கும் உரிமை ஆகிய இன்னோரன்ன உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகக் குழுமியங்கள் மத்தியில் இடதுசாரி இயக்கத்தின் செல்வாக்கு, அமெரிக்க பாதிரிமாரின் கல்விச் செல்வாக்கு, இலவசக் கல்விச்செல்வாக்கு, இலவச கல்வி முறையின் செல்வாக்கு, அரசியல் கட்சிமுறையின் செல்வாக்கு போன்ற காரணிகளின் மூலம் பெரும் விழிப்புணர்ச்சியும் சிந்தனை மாற்றமும் ஏற்பட்டு அம்மக்களை எழுச்சி கொள்ளச் செய்தன. இத்தகைய எழுச்சி கொண்ட கிராம மட்டத்திலான சமூகத்தலைவர்களின் வரிசையில் இ.மு.நாவும் ஒருவராவர் என்றால் மிகையாகாது.

சமத்துவப் போராட்டத்திற்கான புரட்சி இயக்கத்தை இ.மு.நா. மிக அமைதியான முறையிலும் தனிப்பட்ட முறையிலும் 1947ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்து வந்துள்ளார் எனலாம். தெல்லிப்பளை கிராம சபையைச் சேர்ந்த 17ஆம் வட்டாரத்திற்கான தேர்தலில் உரிமைகள் மறுக்கப்பட்ட சமூக குழுமியங்களின் பிரதிநிதிகள் சுழற்சி முறையில் வெற்றி பெற்று கிராம சபையில் பிரதிநிதித்துவம் செய்வதற்கான இயக்கமொன்றை தந்திரோபாயங்களை வகுத்து துணிச்சலுடன் செயற்பட்டு வெற்றி கண்ட முன்னணித் தலைவர்களின் வரிசையில் இ.மு. நா வின் பங்களிப்பு சிறப்பானது. இம்முயற்சியின் பயனாக திருவாளர்களான தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை, கதிரேசு வேதாரணியம், கணபதி சிதம்பரம், முருகேசு முத்துலிங்கம், எல்லுப்போலை வைரமுத்து, பொன்னையா, வைரவநாதன் நடேசு ஆகியோர் 17ஆம் வட்டாரத்திலிருந்து தெல்லிப்பளை கிராமசபைக்கு அங்கத்தவர்களாக தெரிவு பெற்றவர்களாவர்.

இது போன்ற சமத்துவ போராட்டத்திற்கான முயற்சிகளை மேலும் மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனரீதியான தலைமையை ஸ்தாபிக்க வேண்டு மென்று இ.மு. நா தூண்டப்பட்டார்.

6. பெற்றோரின் செல்வாக்கு

இ.மு.நா 1936ம் ஆண்டில் பிறந்தவர். இவ்வாண்டிலேயே இவரின் தந்தையார் மலேசியா சென்று இரண்டாம் உலகமகா யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டும் 1948ம் ஆண்டில் இலங்கைக்கு வந்துசேர்ந்தார். பின்னர் மலேசியா சென்று 1952ம் ஆண்டில் இலங்கைக்கு திரும்பி வந்துள்ளார். திரும்பவும் மலேசியாவிற்கு செல்வதற்கு ஏற்பாடுகள் ஆயத்தமாகிய வேளையில் 31.12.1953ல் அவர் மரணத்தை தழுவிக் கொண்டார். 1947ம் ஆண்டில் இ.மு.நா தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு தந்தையார் பெரும் உந்துசக்தியாக இருந்துள்ளார். அவரின் மலேசியா உழைப்பும் இம்முயற்சிக்கு துணையாக இருந்துள்ளது. மறுபுறத்தில் இ.மு.நாவை வளர்த்து ஆளாக்குவதில் அவரின் தாயார் முழுமையான பங்கை வகித்துள்ளார். மகனை வளர்ப்பதில் தாயார் தடையற்ற கண்காணிப்புடன் கூடிய கொள்கையை கடைப்பிடித்து வந்துள்ளார். சிறு வயதிலிருந்தே ஆலயப்பணிகள், சமூக வைபவங்களில் முன்னின்று சேவை செய்தல், கிராமமக்களுக்கு உதவுதல் போன்ற பல தரப்பட்ட பொது

நலப்பணிகளில் அர்ப்பணிப்போடு ஈடுபடுவதற்கு தாயாரின் கண்காணிப்புடன் கூடிய தடையற்ற கொள்கை வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. தாயாருக்கு அனுசரணையாக அவரது சகோதரி திருமதி தங்கம்மாவும் அவரது கணவர் திரு.க. வல்லிபுரம் அவர்களும் இருந்துள்ளார்கள்.

7. இ.மு.நாவின் தனித்துவமான ஆளுமையின் செல்வாக்கு

ஒருவரின் ஆளுமையானது இயற்கையாகப் பிறப்பால் அல்லது வளர்த்துக் கொள்வதன் மூலம் அல்லது இவை இரண்டு காரணிகளாலும் தீர்மானிக்கப்படலாம். இயற்கையாக பிறப்பிலே தனித்துவமான ஆளுமைத்திறன் திரு.இ.மு.நாவுக்கு சிறுவயது முதல் இருந்துள்ளது என்பதை அவர் செயற்பாடுகளிலிருந்து அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. சிறுவர்கள், மாணவர்களுக்கு உதவுதல், அயலவர்களுக்கு முன்நின்று உதவுதல், உறவினர்களின் சமூக வைபவங்களான திருமணம், மரணச் சடங்கு போன்ற கருமங்களில் முன்நின்று செயற்படுதல், மாவை சித்திவிநாயகர், மாவை அம்பாள் ஆலயத் திருப்பணி நிகழ்வுகளில் முன்னணியில் நின்று பணிசெய்தல், சமூக சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்துச் செயல்படுதல், சைவப்பண்பாட்டை வளர்த்தல், ஒழுக்கத்தை மதித்து நடத்தல், மனிதரை நேசித்தல், சமூகத்தை நேசித்தல், நலிவுற்றோருக்கு பணிபுரிதல் போன்ற அரிய பண்புகளைச் சிறு பராயத்திலிருந்து அவரிடம் காணக்கூடியதாக இருந்தது. சிறப்பான ஆரம்பக்கல்வி, கல்லூரிப்படிப்பு, இடதுசாரி இயக்கத்தின் செல்வாக்கு, சமூக சமத்துவ போராட்டத்திலுள்ள ஈடுபாடு, ஆலயத்தொண்டு, சமூக வைபவங்களிலுள்ள ஈடுபாடு போன்றவற்றின் மூலம் இயற்கையாக அமைந்த ஆளுமையை மேலும் மேலும் அவர் விருத்தி செய்யக் கூடியதாய் இருந்தது. மக்கள் விரும்பக் கூடியவராக இ.மு.நா சிறுவயது முதல் அடையாளம் காணப்பட்டார். தான் நேசித்த மக்களை, தன்னை நேசித்த மக்களை மேலும் மேலும் எழுச்சி பெற்ற ,உயர்ச்சி பெற்ற மக்களாக சமூகத்தில் மதிப்புறச் செய்ய வேண்டுமென்ற உணர்வின் பிரதிபலிப்பாக மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றமானது தோன்றியதென்பது வரலாற்று உண்மையாகும். சிறுவர், இளைஞர், முதியோர்களை அணிதிரட்டி மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தை இவர் ஸ்தாபித்துள்ளார். 1955ம் ஆண்டு முதல் இம்மன்றத்தின் இன்றியமையாத வழிகாட்டித் தலைவராக இருந்து தீர்க்க தரிசனத்துடன் சேவையாற்றி மன்றத்தை பல்துறைகளிலும் வளர்ச்சிபெறச் செய்தமை இவரின் நல்ல தலைமைத்துவத்திற்கு சிறந்த சான்றாகும்.

8. இ.மு.நாவின் சமூக எழுச்சி சிந்தனைகளின் வளர்ச்சி

பின்தள்ளப்பட்ட சமூகக் குழுமியங்களின் சமூக சமத்துவம் மறுக்கப்பட்ட தாழ்வுநிலை கண்டு இ.மு.நா தனது உள்ளத்தில் சமூக எழுச்சி சிந்தனைகளை வளர்த்து வந்துள்ளார். அவ்வாறு படிப்படியாக அவர் வளர்த்துக் கொண்ட எழுச்சி சிந்தனைகளிலிருந்து பெறப்பட்டவை பின்வருமாறு:-

1. தேசிய வளர்ச்சியும் எழுச்சியும் தனிமனிதனிலிருந்து குடும்பம், சமூகம், இனம், தேசம் என்ற சங்கிலித் தொடர்ச்சியான வளர்ச்சிப் படிமுறையை கொண்டதாகும்.

2. பின்தங்கிய சமூக குழுமியத்தைச் சேர்ந்த ஒருவர் தனது சுய முயற்சியின் மூலம் கல்வியால், தொழிலால்,பொருளாதாரத்தால் எவ்வளவுதான் உயர்ந்தாலும் அவற்றின் மதிப்பு அவன் சார்ந்த சமூகமானது ஏனைய சமூகங்கள் மத்தியில் வளர்த்துக் கொண்ட சமூக அந்தஸ்து நிலைக்கு கீழ் நோக்கப்படும்.

3. ஒருவரின் கௌரவமும் அந்தஸ்தும் அவர் சார்ந்த குடும்பமும், சமூகமும், இனமும் வளர்த்துக் கொண்ட அந்தஸ்தில் தங்கியுள்ளன.

4. தானும் தன் குடும்பமும் என்ற சுயநல எல்லையை கடந்து சமூகத்தினதும் இனத்தினதும் வளர்ச்சியில் கரிசனையுடைய மக்களைக் கொண்ட சமூகமும் இனமுமே உயர்வுபெற முடியும்.

5. இன, மத, பிரதேச, சாதி, சமூகப் பிரிவினைகளை ஒழித்துக்கட்ட மனிதநேயம், மதிப்புணர்வு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, பரஸ்பர உதவி ஆகியன இன்றியமையாத பண்புகளாகும்.

6. சுதந்திரமும் சமத்துவமும் கௌரவமும் ஐக்கியமும் கொண்ட உயர்வான மானிட சமூகத்தை உருவாக்க பிரிவினைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

7. பட்டினி கிடக்க நேரினும் உயர்கல்வியோடு பெருக்கி தகைமைசார் தொழில்வளம் கொள்வது வளர்ச்சிக்கு அடிப்படையாகும்.

8. நலிவுற்றோருக்கு கைகொடுத்து வாழ வழிசமைத்தல் எம்கடனே இது ஒரு தெய்வீகப்பணி.

9. உயர்ந்த ஒழுக்க கலாச்சார பண்பாட்டு மனிதநேய ஆன்மிக விழுமியங்களை பேணாத வளர்ச்சி நிலையானதல்ல.

10. ஒரு சமூக எழுச்சி இயக்கத்தின் பாதுகாவலர்கள் அதன் முன்னணித் தலைவர்களும் தொண்டர்களும் ஆவார்கள்.

இத்தகைய எழுச்சி சிந்தனைகள் மன்றத்தின் தோற்றத்திற்கும் தொழிற்பாட்டிற்கும் அத்திவாரமாக அமைந்துள்ளதென்றால் மிகையாகாது.

நன்றி - மாவை பாரதி மறுமலர்ச்சி மன்ற பொன்விழா மலர்

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் சேவைகள் (1955 – 2005)

திரு.சி.செல்லத்துரை
தலைவர்,
மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம்

1. முதியோர் கல்விச்சேவை

மன்றத்தைச் சேர்ந்த ஆரம்பகால முதிய அங்கத்தவர்கள் பெரும்பாலும் தமது படிப்பை ஆரம்பக் கல்வியோடு நிறுத்தியவர்கள் ஆவர். அவர்களுக்கு அரசியல், சமூக, பொருளியல், பண்பாட்டுத் துறைகளில் விழிப்புணர்ச்சியையும், அறிவையும் ஊட்டுவதற்கு வாராந்தக் கருத்தரங்குகள், வாராந்த விவாதப் போட்டிகள் நடாத்தப்பட்டன. கருத்தரங்குகளிலும் விவாதப் போட்டிகளிலும் கேட்போர்களாக மட்டும் இருக்காது ஈடுபாட்டுடன் பங்குபற்றவும் ஊக்குவிக்கப்பட்டார்கள். இவர்கள் தினமும் தமது வேலைகளை முடித்து இரவு நேரங்களில் பல புதினப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் படிக்க ஊக்குவிக்கப்பட்டனர். இத்தகைய சேவைமூலம் ஆரம்பகல்வியுடன் படிப்பை முடித்த முதியோர் மட்டுமன்றி ஆரம்பக்கல்வியுடன் படிப்பை முடித்த இளைஞர்களும் நல்ல பயனைப் பெற்றுள்ளனர். பல்துறைகளிலும் தமது அறிவை வளர்த்ததுடன் தமது பேச்சாண்மையையும் நிர்வாகத் திறனையும் ஆளுமையையும் வளர்க்க வாய்ப்பளிக்கப்பட்டது. இத்தகைய பயிற்சி மூலம் சமூகத்திற்கு பயனளிக்கக்கூடிய, சமூக உணர்வு கொண்ட, விழிப்புணர்வு பெற்ற, அர்ப்பணிப்புள்ள, ஆளுமைமிக்க சமூகத்தலைவர்கள் உருவாக்கப்பட்டனர். இவை இம்மன்றத்தின் ஒரு சாதனை என்றே சொல்ல வேண்டும். இம்மன்றம் கடந்த 50 ஆண்டுகளாக சவால்கள் நிறைந்த இக்கட்டான சூழ்நிலைகளையும் வெற்றிகரமாக முறியடித்து உயிர்த்துடிப்போடு வாழ்வதற்கும், தனது சேவையை விரிவாக்கிச் செல்வதற்கும் இத்தகைய வளர்ச்சி பயனளித்துள்ளது.

2. முன்பள்ளி மாணவர் கல்விச் சேவை

சிறார்களுக்கான முன்பள்ளிக் கல்விச்சேவையை வழங்கும் பொருட்டு இலவசமாக ஆசிரியர் சேவையைப் பெற்று மன்றம் உதவியுள்ளது. இத்தகைய இலவச கல்விச் சேவையின் மூலம் மன்றச் சுற்றாடலிலுள்ள பல சிறார்கள் பயன்பெற்றுள்ளார்கள். இக்கல்விச் சேவையை முன்னின்று வழங்கிய திருமதி நாகலிங்கம் தங்கம்மா, செல்வி செல்லத்துரை செல்வரதி, செல்வி முருகையா தனேஸ்வரி, செல்வி நடேசு ராஜேஸ்வரி ஆகியோர்களின் சேவை பாராட்டுக்குரியது.

3. மாணவர் கல்வி வட்டச் சேவை

ஆரம்பகாலத்திலிருந்து மாணவர்களிற்கும் முதியோரகளிற்கும் மன்றம் கல்விச் சேவை அளித்து வந்துள்ள போதும் நிதியின்மை, இடவசதியின்மை போன்ற காரணங்களால் சேவையைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டது. இக்குறையை நிவர்த்தி செய்தற்பொருட்டு 18.01.1979 இல் கல்விவட்டம் ஒன்று மன்றத்தால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இக்கல்வி வட்டத்தின் மூலம் கல்விச் சேவையை நடாத்த வசதியாக தற்காலிகக் கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டு கல்வி வட்டத்தை நடாத்துவதற்கான கல்வி நிதி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிதியை முதலீடு செய்து வரும் வருமானத்தைக் கொண்டு கல்விவட்டச் சேவை நடைமுறைப் படுத்தப்பட்டது. கல்வியில் பின்தங்கிய பிள்ளைகளிற்கு உதவ வேண்டும் என்ற நோக்கோடு மன்ற அங்கத்தவர்களும் பாராட்டத்தக்க வகையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். இக்கல்வி வட்டத்தின் மூலம் க.பொ.த சாதாரணதர வகுப்புவரை மன்ற அங்கத்தவர்களின் பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளும் படிக்க வாய்ப்பளிக்கப்பட்டது, திருவாளர்கள் சின்னத்தம்பி மார்க்கண்டு, சின்னத்தம்பி சிற்றம்பலம், பரமு வேலுப்பிள்ளை, இராமு முருகேசு நாகலிங்கம், கந்தையா சிவஞானம், அப்புக்குட்டி அருமைத்துரை, நடேசு நடராசமணி, திருமதி நாகலிங்கம் தங்கம்மா, செல்வி செல்லத்துரை செல்வரதி, செல்வன் கணபதிப்பிள்ளை பாலச்சந்திரன் ஆகியோர் கௌரவ ஆசிரியர்களாக இலவச சேவை வழங்கியுள்ளார்கள். திருவாளர் க.துரையப்பா, ந.சிவா, இ.பாலச்சந்திரன், செல்வி ந.சிவாஜினி, செல்வி மு.தனேஸ்வரி, செல்வி.ந.ராஜேஸ்வரி, திரு.செ.குணபாலசிங்கம் ஆகியோர்கள் சேவை நோக்குடன் குறைந்த கட்டணத்தோடு ஆசிரியர்களாக சேவையாற்றி உள்ளனர். திருவாளர்கள் தனபாலசிங்கம் கருணானந்தசிவம், சிவச்சந்திரன், ம.பாலசுப்பிரமணியம், அன்ரன் ஆகியோர் குறித்த சில பாடத்திட்டங்களை இலவசமாக கற்பித்துள்ளனர். பண்டிதர் ம.பார்வதிநாதசிவம் அவர்களும் அவரைத்தொடர்ந்து திரு.ம.பாலசுப்பிரமணியமும் படிப்பகத்திற்கு நிர்வாகப் பொறுப்பாளராக சேவையாற்றி யுள்ளார்கள். மன்றத்தின் கல்விச்சேவையை மிகுந்த செலவுச் சிக்கனத்தோடு பயனுள்ள முறையில் வழங்கியதற்கு இவ்வாசிரியர்கள் அனைவர்களிற்கும் மன்றம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

5ம் வகுப்புடன் பாடசாலைக் கல்வியை முடித்துக்கொள்கின்ற நிலை மாறி கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்புவரை மன்ற மாணவர்கள் படிக்கவும் பரீட்சையில் சிறந்த சித்திபெறவும் கல்விவட்டச் சேவை பெரும் உந்துசக்தியாக விளங்கியது. மன்றத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் க.பொ.த உயர் கல்வியை கற்பதற்கும் இச்சேவை பயனளித்துள்ளது. நாட்டின் யுத்தச் சூழ்நிலையால் பல்கலைக்கழக அனுமதிபெற தகுதியுடைய பல மாணவர்களும் அனுமதிபெற்ற மாணவர்களும் தமது கல்விவாய்ப்பை பாழடிக்க நேர்ந்த இருண்ட வரலாற்றை எண்ணி கவலையடைகிறோம்.

4. முத்தமிழ் கலைவளர்ச்சிக்கான சேவை

இயல், இசை, நாடக வளர்ச்சியின் பொருட்டு விவாதப்போட்டிகள், பேச்சுப்போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், பொது அறிவுப் போட்டிகள், நாடகப்போட்டிகள், நடனப்போட்டிகள்,

சங்கீதப்போட்டிகள் நடாத்திப் பரிசில்கள் வழங்கி மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். மன்றத்தின் வருடாந்த விழாக்களிலும் தைப்பொங்கல் விழா, நவராத்திரி விழா, சித்திரைப் புத்தாண்டு விழா ஆகிய நிகழ்வுகளிலும் நடன, சங்கீத, நாடக நிகழ்ச்சிகள் தயார் செய்யப்பட்டு அரங்கேற்றப்பட்டன. இந் நிகழ்வுகளில் சிறுவர்கள் மாணவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் ஆகிய அனைவரும் பங்குபற்றியுள்ளனர். 12-09-1980ல் நடைபெற்ற வெள்ளிவிழா நிகழ்விலும் 1982இல் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் இடம்பெற்ற பாரதி நூற்றாண்டு விழாவிலும் பல கலைநிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன. அத்துடன் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தால் நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளிலும் மன்ற அங்கத்தவரும் ஏனையோரும் பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளனர். மன்றத்தால் தயாரித்து அரங்கேற்றப்பட்ட நாடகங்களாவன காத்தவராயன்கூத்து, சிஷ்யன் நாடகம், சோக்கிரட்டீஸ் நாடகம், தெய்வமே துணை நாடகம், விதானையார் சொக்கநாதர் நாடகம், பணமா பாசமா நாடகம் என்பன ஆகும். நீண்டகாலமாக எமது ஆலய திருவிழாக்களை முன்னிட்டு வசந்தன் நடனம் அரங்கேற்றப்பட்டு வந்துள்ளது. பாரதியார் நூற்றாண்டு விழாவில் பாரதி வரலாறு வில்லிசை மூலம் அரங்கேற்றப்பட்டது. கவிஞர் வைரமுத்துவின் புகழ்பெற்ற மயானகாண்டம் என்ற நாடகம் மன்றத்தின் வெள்ளிவிழா மகாநாட்டில் முழுமையாக அரங்கேற்றப்பட்டது. இந் நாடகத்தின் முக்கிய கட்டங்களைக் கொண்ட நிகழ்வு மன்றத்தால் நடாத்தப்பட்ட பாரதி நூற்றாண்டு விழாவில் மேடையேற்றப்பட்டது. சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தால் 1982ஆம் ஆண்டு யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்பட்ட நாடகப்போட்டியில் மன்றத்தின் 'பணமா பாசமா' என்ற நாடகம் முதலாவது சிறந்த நாடகமாகத் தெரிவு செய்யப்பட்டது. இந்நாடகம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்தப்பட்ட சமாசத்தின் ஆண்டு விழாவில் அரங்கேற்றப்பட்டதாகும். மன்றத்தின் இயல் இசை நாடகவளர்ச்சிக்கு திரு அப்புக்குட்டி செல்வராஜா, சின்னவி சரவணமுத்து ஆகியோர்வழங்கிய பங்களிப்பு பாராட்டுக்குரியது.

5. வாசிகசாலைச் சேவை

மன்றத்தின் சேவைகளுள் வாசிகசாலைச்சேவை முக்கியமானதாகும். அங்கத்தவர் களுக்கும் பொதுமக்களிற்கும் காலை 7மணிமுதல் இரவு 9 மணிவரை இச்சேவை வழங்கப்பட்டது. இச்சேவைக்கு மன்ற அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் அன்பளிப்பாக புத்தகங்கள் சஞ்சிகைகளை வழங்கி வந்துள்ளார்கள். அத்துடன் தெல்லிப்பளை ப.நோ.கூட்டுறவுச்சங்கமும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களும் அன்பளிப்புகளை வழங்கிவந்துள்ளார்கள். அன்பளிப்பு வழங்கிய தனிநபர்கள் வரிசையில் திரு. க. சிவஞானம் அவர்கள் சிறப்பாகப் பங்களித்துள்ளார்.

மன்ற நூல்நிலையத்தில் 500ற்கும் மேற்பட்ட சிறந்த நூல்கள் சேகரிக்கப்பட்டு அங்கத்தவர் பாவனைக்கு வழங்கப்பட்டது. நூல்களை எடுத்துச் சென்று படிக்க நூல் இரவல் வழங்கும் சேவையும் நடாத்தப்பட்டது. 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை மூலம் இச் சொத்துக்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன.

6. சமயப்பணி

அ. பண்ணிசைப் பயிற்சி

ஆரம்பகாலத்தில் திரு.இராசரட்ணம் அவர்கள் ஆசிரியராக நியமிக்கப்பட்டு பண்ணிசை வகுப்பு நடாத்தப்பட்டது. இப்பண்ணிசை வகுப்பு மூலம் பயன் பெற்றவர்கள் பலர். எமது ஆலயங்களிலும் வீட்டு நிகழ்வுகளிலும் சமூக வைபவங்களிலும் தேவாரபாராயணம் செய்வதற்கு இப்பயிற்சி பெரும் பயனளித்துள்ளது. போட்டிகள் மூலம் பரிசில்கள் வழங்கி மாணவர்கள் பண்ணிசையில் தேர்ச்சிபெற ஊக்குவிக்கப் பட்டார்கள்.

ஆ. பஜனை

மன்றத்தின் அனுசரணையோடு மாவை சித்தி விநாயகர் ஆலயத்திலும் மாவை அம்பாள் ஆலயத்திலும் பஜனை நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்துள்ளது.

இ. விசேட பூஜை வழிபாடு

நவராத்திரி விழா, தைப்பொங்கல் விழா, சித்திரைப் புத்தாண்டு ஆகியவற்றை முன்னிட்டு மன்றத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளது.

ஈ. தேவாரத்திரட்டு வெளியீடு

மன்றத்தின் வெள்ளிவிழா ஞாபகார்த்தமாக 1980ல் வெளியிடப்பட்ட வெள்ளிவிழா மலரின் ஒரு பகுதியாக தோத்திரப் பாடல்களின் தொகுப்பும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மன்ற அங்கத்தவர் குடும்பங்களில் நிகழும் சிவபதம் குறித்த அஞ்சலி நிகழ்வுகளில் பக்தியை தூண்டக்கூடிய சைவ நூல்கள் நினைவு மலராக வெளியிடப்படுகின்ற மரபு பின்பற்றப்படுகின்றது.

உ. ஆலயத் திருப்பணிகளும் நிர்வாகமும்.

மாவை சித்திவிநாயகர் ஆலயம், மாவை அம்பாள் ஆலயம் ஆகிய இரண்டு ஆலயத்தினதும் வளர்ச்சிக்கு மன்றம் காத்திரமான பங்கை வழங்கியுள்ளது. அவை பற்றித் தனித்தனியே கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

7. யோகாசனக்கலை வளர்ச்சிக்கான சேவை

ஆரம்பகாலம் தொட்டு மன்றம் யோகாசனக் கலையை வளர்ப்பதற்கான பயிற்சி வகுப்பை நடாத்தி வந்துள்ளது. இதன்மூலம் சிறுபிள்ளைகள், இளைஞர்கள், முதியோர்கள் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சியானது உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி என்பவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. 1955 ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து வந்த ஸ்ரீ சுவாமி சச்சிதானந்த மஹாராஜ் அவர்களின் தலமையில் திரு.வ.சண்முகம் அவர்களின் அனுசரணையோடு வெள்ளவத்தை பொலிரெக்னிக் கல்லூரி மண்டபத்தில் சனி, ஞாயிறு கிழமைகளில் நடாத்தப்பட்ட யோகாசனக்கலைப் பயிற்சியில் பங்கு பற்றிக் கற்றுக்கொண்ட திரு.இ.மு.நாகலிங்கம் அவர்கள் மன்றத்தின் மூலம் யோகாசனக் கலையை வளர்ப்பதற்கான பயிற்சி வகுப்புக்களையும் போட்டிகளையும் நடாத்திப் பலர் தேர்ச்சிபெற

வாய்ப்பளிக்கப்பட்டது. யோகாசனக்கலை ஆசிரியரான திரு.வ.சண்முகம் அவர்கள் மன்றத்தின் யோகாசனக் கலை வளர்ச்சித் திட்டத்திற்கு ஆலோசகராகவும் சேவையாற்றியுள்ளார். மன்றத்தின் கொழும்பு கிளையின் ஆதரவில் மொரட்டுவ, கட்டுப்பெத்தை, வெள்ளவத்தை ஆகிய பகுதிகளில் யோகாசனக்கலைப் பயிற்சி வகுப்புகள் இ.மு.நா.அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்விடங்களில் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. பயிற்சி வகுப்புகளை மன்றவளவிலும் மொரட்டுவ, கட்டுபெத்தை ஆகிய இடங்களிலும் நடாத்துவதற்கு திருவாளர்கள் சின்னவி சரவணமுத்து, சின்னத்தம்பி நவரட்ணம், அப்புக்குட்டி அருமைத்துரை ஆகியோர்கள் அனுசரணை வழங்கியுள்ளனர். மன்றத்தின் யோகாசனக்கலை வளர்ச்சித்திட்டம் மூலம் பயிற்சி பெற்றுள்ளவர்களில் பலர் இன்னும் இப்பயிற்சி நெறியைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாக அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். மன்றத்தின் இப்பயிற்சித் திட்டத்திற்கு உதவியளித்த அனைத்து பயிற்சி ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

8. மாணவர் மன்றச் சேவை

1955ல் உருவாக்கப்பட்ட மன்றத்தின் மாணவர் மன்றச் சேவை ஆரம்பகாலந்தொட்டு மாணவர் மத்தியில் பேச்சுத்திறன், விவாதத்திறன், கூட்டங்களை ஒழுங்கமைத்தல், கூட்டங்களை நடாத்தல், கூட்டத்திற்கு தலைமை வகித்தல், விவாதங்களை வழிப்படுத்தல், செயல் திறமை மிக்க நிர்வாகிகளையும் தலைவர்களையும் உருவாக்குதல் போன்ற நல்ல நோக்கத்திற்கு நன்கு பயன்பட்டுள்ளது. மாணவர் மன்றச் சேவைகள் முற்பகுதியில் பொதுவான நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்துள்ளது. 18.01.1979இல் மாணவர் மன்ற நிர்வாக முறை புனரமைக்கப்பட்டு மாணவர் மன்றத்தின் பொதுச் சபையால் வருடாந்தம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளைக் கொண்ட நிர்வாகசபையின் மூலம் மாணவர் மன்றச் சேவைகள் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. வருடாந்தம் மாணவர் மன்றத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற முக்கிய பதவிகளில் மாற்றம் பெற வாய்ப்பளிக்கப்பட்டது. மாணவர்களிற்கு நிர்வாகத்துறையில் பயிற்சி பெற இம்முறை வாய்ப்பளித்தது. மாணவர் மன்றத்தை வழிநடத்தும் பொறுப்பு அதன் காப்பாளருக்கும் கல்விவிட்டப் பொறுப்பாசிரியருக்கும் இருந்து வந்துள்ளது. திரு.சி.சிற்றம்பலம் காப்பாளராக இருந்து மாணவர் மன்ற வளர்ச்சிக்கு வழங்கிய காத்திரமான பங்களிப்பு பாராட்டுக்குரியதாகும். மாணவர் மன்றக் கூட்டங்கள் ஒவ்வொரு புதன்கிழமையும் தவறாது இரவு 6.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு நேரக் கட்டுப்பாட்டுடன் தொடர்ந்து பல ஆண்டுகளாக நடைபெற்று வந்துள்ளது. 1955ல் மாணவர்கள் பாரதி இல்லம், அண்ணா இல்லம் எனப் பிரிக்கப்பட்டு சிறந்த முறையில் பலதரப்பட்ட போட்டிகளும் நடாத்தப்பட்டன. 1979ல் ஏற்படுத்தப்பட்ட மறுசீரமைப்பின் மூலம் ஆரம்பத்தில் இருந்த அண்ணா இல்லமானது, காந்தி இல்லம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. மாணவர்களின் வாராந்தக் கூட்டங்களில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக வகுப்புரீதியாக இல்ல மாணவர்கள் பிரிக்கப்பட்டு, வகுப்புப் பாடங்களை வார அடிப்படையில் ஆயத்தம் செய்ய ஒரு வாரம் முன்னறிவித்தல் கொடுத்து இல்லங்களுக்கிடையே போட்டி நடாத்தப் பெற்று புள்ளி மதிப்பு கொடுக்கப்பட்டது. வாராந்தப் புள்ளிகள் தொடர்ச்சியாக திரட்டப்பட்டு திரண்ட அடிப்படையில்

இல்லங்களுக்கான வெற்றி, தோல்வி கணிக்கப்பட்டது. மாணவர் மன்றத்தால் நடாத்தப்பட்ட பாடப்புத்தகங்களை மையமாகக் கொண்ட கல்விப் போட்டிகளும் கல்வி வட்டத்தின் ஆசிரியர்களின் சேவையும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் உந்து சக்தியாக விளங்கின. 1983 யூலை மாதத்தின் பின்னர் இவ்வளர்ச்சியின் வேகத்தை யுத்தச் சூழ்நிலை பெரிதும் பாதித்தது. மன்றச் சேவைகளை நடாத்துவதற்கு பாதுகாப்பான வசதியான இடமாக திரு .மயில்வாகனம் சிவபாலசிங்கம் அவர்களின் இல்லம் இச்சூழ்நிலையில் பயன்படுததப்பட்டது.

மாணவர் மன்றத்தின் வளர்ச்சிக்கு பங்களித்த மாணவர் வரிசையில் இடம்பெறுவோர்:

1. திரு. சின்னத்தம்பி ஸ்ரீபாஸ்கரன்
2. திரு. நாகலிங்கம் முருகதாசன்
3. திரு.இராசதுரை மனோகரன்
4. திரு.கணபதிப்பிள்ளை பாலச்சந்திரன்
5. திரு.நாகேந்திரம் யாழ்வேந்தன்
6. திரு.நாகலிங்கம் ராமதாசன்
7. செல்வி.செல்லத்துரை செல்வரதி
8. திரு.நாகலிங்கம் கணேசதாசன்
9. திரு.செல்லத்துரை செல்வரஞ்சன்
10. திரு.சுப்பிரமணியம் மகேந்திரம்
11. திரு.செல்லத்துரை ஜெகதாசன்
12. திரு.இராசதுரை சுகுமார்
13. செல்வி சரவணமுத்து சாந்தா
14. செல்வி வயிரவப்பிள்ளை சசிகலா
15. செல்வி சுப்பிரமணியம் சறோஜினி
16. திரு.கந்தையா சிவகுமார்
17. திரு.சரவணமுத்து சிவனேசன்
18. திரு.வயிரவப்பிள்ளை நகுலேஸ்வரன்
19. திரு.தம்பிராஜா ரவீந்திரன்
20. செல்வி செல்லத்துரை செல்வமலர்
21. செல்வி கிருஸ்ணபிள்ளை இந்துமதி
22. திரு. நாகலிங்கம் நடேசதாசன்
23. செல்வி சிவபாலசிங்கம் நந்தினி
24. திரு.இராசதுரை இராசேந்திரம்
25. செல்வி செல்லத்துரை சறோசினிதேவி
26. செல்வி கிருஸ்ணபிள்ளை கலாவதி
27. திரு.வல்லிபுரம் கணேஸ்வரன்
28. செல்வி செல்லத்துரை செல்வகலா
29. திரு.இராசதுரை சுகதாஸ்
30. செல்வி சரவணமுத்து ரூபிதா
31. செல்வி சிவபாலசிங்கம் சுதாஜினி
32. திரு.சுப்பிரமணியம் நந்தகுமார்
33. செல்வி சுப்பிரமணியம் அன்னலக்சுமி
34. திரு ஆனந்தராஜா உதயசங்கர்
35. செல்வி சரவணமுத்து லலிதா
36. திரு.செல்லையா விஜயதாஸ்
37. செல்வி செல்லையா தயாநிதி
38. திரு.சுப்பிரமணியம் உதயகுமார்
39. செல்வி சரவணமுத்து கவிதா
40. செல்வி கந்தையா யசோதா
41. செல்வி கிருஸ்ணபிள்ளை ரேவதி
42. செல்வி கந்தையா வசந்தமாலா
43. செல்வி சுப்பிரமணியம் திகலவதி

இம்மாணவர் மன்றத்தின் மூலம் பல சிறந்த நிர்வாகிகளும், தலைவர்களும், சமூகப் பற்றாளர்களும் உருவாக்கப்பட்டு சமூக மேம்பாட்டிற்கு சிறந்த பங்காளிகளாக சேவையாற்றி வருகிறார்கள். மன்றத்தின் எதிர்கால வளர்ச்சி இம்மாணவ சமூகத்தின் பங்களிப்பிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

9. மாவை சித்திவிநாயகர் ஆலய நிர்வாகமும் திருப்பணியும்

மாவை சித்திவிநாயகர் ஆலயத்தின் நிர்வாகம் மன்றத்திடம் 17.09.1960-ல் பூரணமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆலயத்தின் திருப்பணி வேலைகள் மெச்சக் கூடிய முறையில் முன்னேற்றப்பட்டது. மடப்பள்ளி இல்லாத குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு விசேட நிதியொன்றைத் திரட்டி 1966ம் ஆண்டு மடப்பள்ளி அமைக்கப்பட்டது. சமய சாஸ்திர விதிகளுக்கமைந்த ஆலயத்திற்கான புதிய கட்டிடம் 1969ம் ஆண்டு தமிழ்த் தைத்திங்கள் 9ம் திகதி அத்திவாரமிடப்பட்டு ஐப்பசி 1969ல் பூர்த்தியாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கும்பாபிஷேகமும் 48நாள் அபிடேகமும் சிறப்பாக நிறைவு செய்யப்பட்டது. புதிய கட்டிடத்தை அமைப்பதற்கு கந்தர் கார்த்தி அவர்களின் நிதியுதவி முக்கிய பங்கை வகித்துள்ளது. இக்காரணத்தால் ஆதிமூலக் கட்டிடத்தில் அவரின் பெயர் ஞாபகச் சின்னமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. ஆலயத்திலுள்ள மணிக்கோபுரமும் அதில் உள்ள அசையாமணியும் பண்டாரம் நடேசு அவர்களின் உபயமாகும். ஆலயத்திற்கொரு கிணறு அமைத்தற்பொருட்டு 10.09.1980ல் மன்றத்தின் வெள்ளிவிழா ஞாபகார்த்தமாக அத்திவாரமிடப்பட்டது. இக்கிணற்றை அமைத்தற் பொருட்டு மன்ற அங்கத்தவர்களிடமிருந்து மாதாந்தம் 10ரூபா வீதம் 25மாதங்கள் நிதி வசூலிக்கப்பட்டது. அத்துடன் மலேசியா அன்பர்களும் இன்நிதிக்கு உதவியுள்ளார்கள். இவ் வரிசையில் பண்டாரம் மாரிமுத்து அவர்களின் அன்பளிப்பு சிறப்பானதாகும். இக்கிணற்றை அமைப்பதற்கு மன்றக் காணியில் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆலயத்தின் சொத்துக்களையும் நிர்வாகத்தையும் ஆலயத்தின் வழிபடுவோர்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைக்க வேண்டுமென்ற மன்றத்தின் வேண்டுகோளை ஆலயத்தின் நிலச்சொந்தக்காரர்களான பண்டாரம் சிதம்பரப்பிள்ளை, பண்டாரம் கந்தையா ஆகியோர் நிராகரித்ததைத் தொடர்ந்து ஒரு பகிஷ்கரிப்பு இயக்கம் தொடரப்பட்டது. இப் பகிஷ்கரிப்பு இயக்கமானது 1969ம் ஆண்டுமுதல் 1984ம் ஆண்டு வரையுள்ள 15 ஆண்டுகாலமாக தொடரவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது. ஈற்றில் 11.08.1984ல் இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்கப் பெற்றது. இதன் விளைவாக 11.08.1984ல் தர்மகர்த்தா சபையொன்று நியமிக்கப்பட்டு அச்சபையிடம் ஆலயத்தின் காணி உட்பட அனைத்து சொத்துக்களும் அச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதற்கான தர்மசாதன உறுதியும் தர்மகர்த்தா நியமனமும் 11.08.1984ல், 2306ம் இலக்கமிடப்பட்ட உறுதி மூலம் நிறைவேற்றப்பட்டது. அத்திகதியில் நியமனம் பெற்ற தர்மகர்த்தா சபை உறுப்பினர்கள் பின்வருமாறு:- பண்டாரம் சிதம்பரம்பிள்ளை, பண்டாரம் கந்தையா, சின்னத்தம்பி செல்லத்துரை, சின்னவி சரவணமுத்து, பொன்னர் கந்தையா, தாமோதரி வைரவப்பிள்ளை, அப்புக்குட்டி ஆனந்தராசா, மயில்வாகனம் சிவபாலசிங்கம், பொன்னர் சுப்பிரமணியம், தில்லையம்பலம் இராசதுரை, வேலுப்பிள்ளை செல்லையா, இவர்களில் பொன்னர் கந்தையாவும் தாமோதரி வைரவப்பிள்ளையும் காலமாகி விட்டார்கள். இவ்வெற்றிடங்களுக்கு புதியவர்கள் விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். இவ் ஆலயத்தின் திருப்பணிகளுக்கு சின்னத்தம்பி செல்லத்துரை, சின்னவி சரவணமுத்து, மயில்வாகனம் சிவபாலசிங்கம் ஆகியோர் வழங்கிய காத்திரமான சேவை அனைவரினதும் பாராட்டைப் பெற்றுள்ளது. ஆரம்பத்திலிருந்து தர்மகர்த்தா சபையின் தலைவராக பண்டாரம் சிதம்பரப்பிள்ளையும், செயலாளராக சின்னவி

சரவணமுத்துவும், பொருளாளராக வேலுப்பிள்ளை செல்லையாவும் கடமையாற்றி வருகிறார்கள். மாவை விநாயகர் ஆலயம் பின்னர் மாவை சித்தி விநாயகர் ஆலயமென பெயர்மாற்றம் பெற்றுள்ளது. இ.மு.நா அவர்கள் தொடர்ச்சியாக இவ் ஆலய நிர்வாகத்தின் வழிகாட்டித் தலைவராகவும் முன்னணித் தொண்டராகவும் செயல்பட்டு வருகிறார். 1990ம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் ஆலயப்பகுதியும் படையினரின் பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டுவிட்டது.

10. மாவை அம்பாள் ஆலய நிர்வாகம்

இவ் ஆலயத்தின் நிர்வாகம் 24.09.1966ல் நிறைவேற்றப்பட்ட கனவான் உடன்படிக்கை ஒன்றின் மூலம் எமது மன்றத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இக்கனவான் உடன்படிக்கையானது ஒருதலைப்பட்சமாக 1970ம் ஆண்டு சித்திரைமாதம் முறிக்கப்பட்டது. இவ் உடன்படிக்கையை முறிப்பதற்கு காரணகர்த்தாக்களாக இருந்த சின்னத்தம்பி முருகேசு, முருகேசு முத்துலிங்கம் ஆகியோர்களுக்கு எதிராக ஒரு பகிஷ்கரிப்பு இயக்கத்தை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் மன்றத்திற்கு ஏற்பட்டது. இப்பிணக்கானது 1970 முதல் 1984 வரை 14 ஆண்டுகாலமாக நீடித்துள்ளது. இவ்வாலயத்தின் நிர்வாகம் 11.08.1984ல் ஒரு தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் ஆலயத்திற்குரிய காணியும் ஏனைய சொத்துக்களும் அச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டு 11.08.1984ல் 2307ம் இலக்கத்தைக் கொண்ட உறுதியும் நிறைவேற்றப்பட்டது. இத் தர்மசாதன உறுதியின் மூலம் நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாசபை அங்கத்தவர்கள் பின்வருமாறு:- முருகேசு முத்துலிங்கம், முருகேசு கணேசு, சின்னத்தம்பி செல்லத்துரை, பொன்னர் கந்தையா, தாமோதரி வைரவப்பிள்ளை, மயில்வாகனம் சிவபாலசிங்கம், தில்லையம்பலம் இராசதுரை, பொன்னர் சுப்பிரமணியம், சின்னத்தம்பி இராசரத்தினம், சிதம்பரப்பிள்ளை நாகேஸ்வரான், பண்டாரம் கந்தையா. இவர்களுள் பொன்னர் கந்தையா, தாமோதரி வைரவப்பிள்ளை, சின்னத்தம்பி இராசரத்தினம் ஆகிய மூவரும் மரணமடைந்துள்ளார்கள். இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டியுள்ளன. ஆரம்பத்திலிருந்து தர்மகர்தாசபையின் தலைவராக முருகேசு முத்திலிங்கம், செயலாளராக சின்னத்தம்பி செல்லத்துரை, பொருளாளராக சின்னத்தம்பி இராசரத்தினம் ஆகியோர் கடமையாற்றி வருகிறார்கள். தர்மகர்த்தா சபை நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆலயத்தின் நிர்வாகம் 1990ம் ஆண்டுவரை மிகச்சிறப்பாக திருப்பணிகளைச் செய்துவந்துள்ளது. 1990ம் ஆண்டில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினால் இவ் ஆலயப் பிரதேசமும் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டுவிட்டது.

11. மாவைக் கந்தன் தண்ணீர் பந்தல் சேவை

1962ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் வரலாற்று அருள் சிறப்புப் பெற்ற மாவிட்டபுரம் கந்தன் ஆலய வருடாந்த உற்சவ காலத்தில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து பக்தர்களுக்கு தாகசாந்தி வழங்கி வந்துள்ளோம். 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து இப்பணி தடைப்பட்டுள்ளது. இச்சேவைக்காக 28 ஆண்டுகளாக

மன்ற அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் தாராளமாக நிதிக்கொடை வழங்கி சிறப்பாக இப்பணியை நிறைவேற்ற உதவியுள்ளார்கள். தண்ணீர்ப் பந்தல் சேவைக்கென சிறப்பான நிர்வாகக் குழு வருடாந்தம் நியமிக்கப்பட்டது. திருவாளர்கள் பொ.கந்தையா, சி.தம்பிராசா, தா.வயிரவப்பிள்ளை, வ.நல்லையா, சி.செல்லத்துரை, செ.சரவணமுத்து, அ.ஆனந்தராசா, ம.சிவபாலசிங்கம், சி.சின்னத்தம்பி, ஆகியோர்கள் தொடர்ச்சியாக முன்னணியில் நின்று குறிப்பிட்ட 28 ஆண்டு காலமாக தண்ணீர்ப் பந்தற்சேவை சிறப்புற பணியாற்றி வந்துள்ளனர். 1962ம் ஆண்டு முதல் 1969ம் ஆண்டு வரை திருவாளர்கள் மு.முத்துலிங்கம், மு.கணேசு, பொ.சுப்பிரமணியம், மு.கந்தசாமி ஆகியோர் இச்சேவையில் தம்மை நன்கு ஈடுபடுத்தியிருந்தார்கள்.

திருவாளர்கள் நாவற்குழியூர் க.தம்பிராசா, சங்கத்தானையூர் தம்பு சிவவடிவேல், கோண்டாவிலூர் சீ.விஸ்வலிங்கம், மீசாலையூர் சின்னத்தம்பி பரமு, குரும்பசிட்டியூர் மாணிக்கம் சிவபாதசுந்தரம் இச்சேவைக்கு நேரில் சமூகம் கொடுத்து அனுசரணை வழங்கியுள்ளார்கள். ஆரம்பத்தில் சமூக சமத்துவத்தை விரும்பாத சக்திகளின் அச்சுறுத்தல்களுக்கு தண்ணீர்ப்பந்தல்சபை முகங்கொடுக்க நேர்ந்தது. இச்சபையின் துணிச்சலான விடாமுயற்சியின் மூலம் அவை முறியடிக்கப்பட்டு அதன் சேவை வெற்றிகரமாக வளர்ச்சி கண்டது.

இச்சேவைக்கு மலேசியா அன்பர்கள் பலர் தாராளமாக நிதியுதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

12. கிராம அபிவிருத்திக்கான சிரமதானப் பணிகள்

மன்றம் பலதரப்பட்ட சிரமதானப் பணிகளில் பங்கு கொண்டு சேவையாற்றி வந்துள்ளது. அவற்றுள் தெல்லிப்பளை கொத்தியால் மயானத்தை துப்புரவு செய்தல், கீரிமலைக் கேணியிலுள்ள கற்களை அகற்றுதல், மாவிட்டபுரம் அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு செல்லும் வீதியை திருத்துதல் ஆகிய பொது சிரமதானப் பணிகள் முக்கியமானவையாகும். இப்பணிகளுக்கு மன்றத்தின் சார்பில் முன்னின்று உழைத்த முக்கியஸ்தர்கள் திருவாளர்கள் மு.முத்துலிங்கம், சி.செல்லத்துரை ஆகியவர்களாவர்.

13. சமூக சமத்துவ போராட்டங்களுக்கு அனுசரணை

அ. உள்ளூராட்சி சபைத்தேர்தல்

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றமானது நிறுவப்பட்ட காலத்திற்கு முன்பிருந்து தெல்லிப்பளை கிராமசபைக்கு நடைபெற்றுவந்த தேர்தல்களில் மன்ற முன்னோடிகளும் அங்கத்தவர்களும் முக்கிய பங்கு வகித்துள்ளார்கள். குறித்த ஒவ்வொரு தேர்தலிலும் தெல்லிப்பளை கிராமசபையின் 17ம் வட்டாரத்திறகு சமூக சமத்துவம் மறுக்கப்பட்ட சமூகக் குழுமியங்களின் பிரதிநிதிகளை தெரிவுசெய்வதில் மன்றம் முக்கிய பாகத்தை

வகித்துள்ளது. இம்முயற்சியின் மூலம் 17ம் வட்டாரத்திற்கான தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் வரிசையில் திருவாளர் தம்பிப்பிள்ளை வேலுப்பிள்ளை, கதிரேசு வேதாரணியம், கணபதி சிதம்பரம், முருகேசு முத்துலிங்கம், எல்லுப்போலை வைரமுத்து, பொன்னையா, வைரவநாதன் நடேசு ஆகியோர் இடம்பெற்றுள்ளார்கள். மன்ற அங்கத்தவர் பலர் பலவிதமான கஷ்டங்கள், நஷ்டங்கள், இழப்புக்கள், பயமுறுத்தல்கள் மத்தியிலும் நிலைகுலையாது ஆற்றிய பணி சமூக சமத்துவ போராட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கவையாகும். திருவாளர்கள் சிதம்பரி சின்னத்தம்பி, சின்னத்தம்பி செல்லத்துரை ஆகியோரின் தொழில் நிலையங்கள் எரியூட்டப்பட்டதுடன் உடல்ரீதியான தாக்குதல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் ஆளாக்கப்பட்டனர். இவர்கள் அஞ்சாநெஞ்சத்துடன் தமக்கு ஏற்பட்ட தொழில் இழப்பு, சொத்து இழப்பு, உடல் பாதிப்பு, உயிராபத்தான அச்சுறுத்தல் அனைத்தையும் எதிர்கொண்டு உறுதியோடு ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொண்டதன் விளைவாக இத்தேர்தல்களில் மக்கள் கட்டுக்கோப்புடன் வாக்களித்து தமது பிரதிநிதிகளை வெற்றிபெறச் செய்துள்ளார்கள். இப்போராட்ட இயக்கத்திற்கு தந்திரோபாயங்களை வகுத்து தலைமை தாங்கி மன்றத்தை வழிநடத்திய பெருமை இ.மு.நா.இற்கு உரித்தாகும்.

ஆ. தாகசாந்தி சேவை

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தினால் 1962ம் ஆண்டில் ஆரம்பித்த மாவைக்கந்தன் தண்ணீர்பந்தல் சேவையானது சமூக சமத்துவத்தை விரும்பாத சமூக குழுமியங்களின் எதிர்ப்புகளுக்கு ஆரம்பத்தில் முகம்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்துள்ளது. மன்ற நிர்வாகிகளான திருவாளர்கள் சிதம்பரி சின்னத்தம்பி, சின்னத்தம்பி முருகேசு, சின்னத்தம்பி செல்லத்துரை, முருகேசு முத்துலிங்கம், அப்புக்குட்டி செல்வராசா போன்றோரின் துணிச்சலான நடவடிக்கைகளின் மூலம் இச்சேவை காலக்கிரமத்தில் அனைவராலும் மதிக்கப் பெற்ற ஒன்றாக உயர்வுபெற்றது.

14. நலிவுற்றோருக்கு உதவுதல்

மன்றத்தின் மாணவர் கல்விவட்டச் சேவையின் மூலம் ஆசிரியர்களை இலவசமாகவும் குறைந்த சம்பளத்திலும் சேவைக்கமர்த்தி நலிவுற்ற பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு மன்றம் உதவி வந்துள்ளது.

நன்றி - மாவை பாரதி மறுமலர்ச்சி மன்ற பொன்விழா மலர்

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் 50 ஆண்டு சாதனைகளின் தொகுப்பு (1955 – 2005)

திரு.க.சிவஞானம்
பணிப்பாளர்,
புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்

1. மன்றம் வழங்கிய நிறுவனரீதியான தலைமை

ஜனநாயக வாழ்வியல் நடைமுறையைப் பின்பற்றி மக்கள் பங்களிப்போடு மக்கள் அபிவிருத்திக்கான செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயல்ப்படுத்துவதன் பொருட்டு நிறுவனரீதியான ஒரு தலைமை அவசியமாகும். மாவைபாரதி மறுமலர்ச்சி மன்றமானது இத்தகைய நோக்கத்தோடு ஸ்தாபிக்கப்பட்டதொன்றாகும். அதன் பொதுச்சபையின் அங்கத்தவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அதன் நிர்வாகக்கட்டமைப்பு இயங்கிவருகின்றது. இம் மன்றம் 50 ஆண்டுகாலமாக நிலைத்துநின்று தலைமைதாங்கி பலதுறைகளிலும் சேவையாற்றி வருகின்றது.

2.இ.மு.நாவின் சேவைவளத்தை மக்கள் பயன்கொள்ள வழங்கிய வாய்ப்பு

1955ம் ஆண்டு முதல் இற்றைக்கு 50 ஆண்டு காலமாக இ.மு.நா அவர்களின் சேவையை மக்கள் பெறுவதற்கு இம்மன்றம் களமாக அமைந்துள்ளது. இங்கிலாந்து லவ்பறோ தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கூட்டுறவு அபிவிருத்தி முகாமை, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக நிர்வாகம், இந்திய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தின் வீடமைப்பு அபிவிருத்தி நிர்வாகம், செலவு கணிப்பு முகாமைகணக்கியல் நிறுவனத்தின் செலவு கணிப்பு முகாமைக்கணக்கியல் ஆகிய துறைகளில் தகமை பெற்றவர் இ.மு.நா. 1960ம் ஆண்டு முதல் கூட்டுறவு அபிவிருத்தி துறையிலும், வீடமைப்பு அபிவிருத்தி துறையிலும் இவர் 35 ஆண்டுகளாக சேவையாற்றிப் பெயர்பதித்துள்ளார். 1947ம் ஆண்டு முதல் இற்றைவரை சமூக, இனப்பற்றோடும் மனிதநேய உணர்வோடும் மக்கள் மேம்பாட்டுப்பணிகளில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார்.

இத்தகைய அறிவாற்றலும் அனுபவமும் பண்புகளும் நிறைந்த இ.மு.நா அவர்களின் சேவை வளத்தை மக்களுக்கு பயன்படச் செய்வதற்கு இம்மன்றம் சிறந்த தளமாக அமைந்துள்ளது. 1947ம் ஆண்டு முதல் சித்திவிநாயகர் ஆலயத்தினதும், மாவை அம்பாள் ஆலயத்தினதும் முன்னோடித் தொண்டர் தலைவராக இருந்து இவர் சேவையாற்றியுள்ளார். 1984ல் இந்த இரண்டு ஆலயங்களுக்கும் தனித்தனி தர்மகர்த்தா சபை அமைக்கப்பட்டு ஆலயங்களின் சொத்துக்களும் நிர்வாகங்களும் தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைப்பதற்கு 15வருட காலமாக விடாமுயற்சி செய்து ஈற்றில் வெற்றிபெறுவதற்கு இவர்

முன்னணித்தலைவராக செயற்ப்பட்டுள்ளார். 1955ல் மன்றத்தை ஸ்தாபித்ததைத்தொடர்ந்து கடந்த 50 ஆண்டு காலமாக மன்றம் மேலும் மேலும் வளர்ச்சி பெறுவதற்கு வழிகாட்டித் தலைவராக இருந்து இவர் சேவையாற்றியுள்ளார். 1980ல் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தினதும் 1981ல் தோன்றிய சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசத்தினதும் 1993ல் தோன்றியபுனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் ஸ்தாபத்தந்தையராக இருந்து எழுச்சி இயக்கத்தையும் சமாசத்தையும் கடந்த 25 ஆண்டுகாலமாகவும் நிதியத்தை கடந்த 12 ஆண்டுகாலமாகவும் பலசவால்களுக்கு முகம்கொடுத்து வியக்கத்தக்க முறையில் அவற்றை வளர்த்துவருகின்ற வழிகாட்டித் தலைவராக இவர் தொடர்ச்சியாக செயற்ப்பட்டு வருகின்றார். இத்தகைய அனைத்துச் சேவைகளுக்கும் மூலகர்த்தாவான இ.மு.நா அவர்களுக்கு மூலத்தளமாக மாவைபாரதி மறுமலர்ச்சி மன்றம் அமைந்துள்ளமையை பெரும் சாதனையாக நினைத்துப் பெருமையடைகிறோம்.

3. சிறந்த சமூகத்தலைவர்களை உருவாக்கிய பெருமை

இம்மன்றம் 1955ஆம் ஆண்டில் ஆரம்பமானது முதல் தாபகர் இ.மு நா வின் தலைமையின் கீழ் சிறந்த தலைமைப் பண்புகளைக் கொண்ட இளைஞர்கள் அடையாளம் காணப்பட்டு மன்றத்தின் பயிற்சிப் பட்டறையில் தலைவர்களுக்கான பயிற்சியையும் அனுபவத்தையும் அவர்கள் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. இத்தகைய அணுகுமுறையின் மூலம் சமூகத்திற்கு பயனளிக்கக்கூடிய பல சமூகத்தலைவர்கள் உருவாக்கப்பட்டனர். இவ்வரிசையில் சின்னத்தம்பி செல்லத்துரை, பொன்னர் கந்தையா, சின்னத்தம்பி சிற்றம்பலம், கந்தையா சிவஞானம், சிதம்பரப்பிள்ளை நாகேஸ்வரன், கணபதி மயில்வாகனம், செல்லத்துரை ஜெகதாஸன் ஆகியோர் முன்னணியில் உள்ளார்கள் இவ்வரிசையில் மேலும் பல இளைஞர்கள் விரைவாக சேர்வதற்கான வாய்ப்புண்டு. இவ்வாறு வளர்க்கப்பட்ட தலைவர்கள் மன்றத்திற்கும் தலைவர் இ.மு.நா அவர்களுக்கும் விசுவாசமாக இருந்து மன்றத்தின் வளர்ச்சிக்கு முன்னணித்தலைவர்களாக செயலாற்றி வருகிறார்கள். 1980ல் தாபிக்கப்பட்ட சமூக எழுச்சி இயக்கத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும், 1981ல் தாபிக்கப்பட்ட சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும், 1993ல் தாபிக்கப்பட்ட புனர்வாழ்வுக்கல்வி அபிவிருத்தி நிதியத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மன்றத்தால் வளர்க்கப்பட்ட இச் சமூகத்தலைவர்கள் இ.மு.நா வின் தலைமையில் வழங்கி வரும் அனுசரணை மகத்தானது. இத்தகைய ஆளுமைத்திறனும் சிறந்த தலைமைப்பண்புகளும் கொண்ட தலைவர்களின் வளர்ச்சியானது மன்றத்தின் தேடிய பெரும் சொத்தாக கருதப்படுகிறது.

4. மக்கள் மத்தியில் வளர்க்கப்பட்ட சிந்தனை மாற்றம்

எந்த ஒரு அபிவிருத்தித் திட்டத்தின் வெற்றிக்கும் மக்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். மக்களின் சாதகமான சிந்தனை மாற்றம் அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு அவசியமான ஒரு முன் தேவையாகும். தனிமனித உரிமை, சமூக சமத்துவம், சமூக கௌரவம், சமூக அந்தஸ்து, இனசமத்துவம், இன உரிமை போன்ற விடயங்களில் கரிசனையற்ற ஒரு சமூகத்தை விழிப்புனர்ச்சி கொள்ளவும் சிந்தனை மாற்றமடையவும் தூண்டுவதென்பது மிகக்கடின முயற்சியாகும். மன்றம் 50 ஆண்டுகளுக்கு முன்

ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் உரிமையைப்பற்றி வளர்ச்சியைப் பற்றி, கரிசனையற்ற தாழ்ந்த கல்வி நிலையில் உள்ள மன்ற மக்கள் மத்தியில் விழிப்புனர்ச்சியையும் சிந்தனை மாற்றத்தையும் ஏற்படுத்துவது அவ்வளவு சுலபமான காரியமில்லை. பலமுனை உபாயங்களைக் கொண்ட தொடர்ச்சி முறையிலான கருத்துப்புரட்சி இயக்கத்தின் மூலம் மக்களை விழிப்புணர்ச்சி அடையச் செய்வதிலும் மனமாற்றம் பெறச்செய்வதிலும் மன்றம் பெற்ற வெற்றியைச் சாதனையாகக் கருதுகிறோம். பட்டினிகிடக்க நேரினும் பத்தாம் வகுப்புவரை படிக்கவேண்டும்., மரபுவழித்தொழில் முறையில் உள்ள அடிமைமுறை ஒழிக்கப்படவேண்டும், விரும்பிய தொழிலைச் செய்யும் உரிமையை அனுபவிக்க வேண்டும், பிரித்தாளும் தந்திரத்திற்கு அடிபணியாது சகோதர உணர்வோடு ஐக்கியம் காக்க வேண்டும், சமூக சமத்துவம் - கௌரவம் - அந்தஸ்து உடையவராக வாழவேண்டும்., சமூகக் கலாச்சார சீரழிவுகளுக்கு இரையாகாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்னும் சிந்தனைகளை வளர்த்து அவற்றின் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி வெற்றிப்பாதையில் செல்வதற்கு மக்களின் பங்களிப்பை மன்றம் காத்திரமான முறையில் திரட்ட முடிந்தமை ஒரு சாதனையாகும்.

5. கல்வித்துறையில் அடைந்த முன்னேற்றம்

மன்றம் தாபிக்கப்பட்ட 1955ம் ஆண்டு காலகட்டத்தில் பாடசாலைக்கல்வியை 5ம் வகுப்புடன் நிறுத்திக் கொண்ட சாபக்கேடான நிலையே மன்ற மக்கள் மத்தியில் இருந்துள்ளது. கருத்துப்புரட்சி இயக்கத்தின் மூலம் பிள்ளைகளும் பெற்றோரும் கல்வியில் கரிசனைகொள்ளத் தூண்டப்பட்டார்கள். பட்டினி கிடக்க நேர்ந்தாலும் பத்தாம் வகுப்புவரை கட்டாயம் படிக்கவேண்டுமென்ற இலக்கு அவர்களுக்கு சிறந்த பலனை அளித்துள்ளது. பல மாணவர்கள் க.பொ.த உயர்தரக் கல்வியைப் பெறுவதற்கு மன்றம் ஊக்கம் அளித்துள்ளது. 1983ம் ஆண்டு முதல் நடைபெற்ற உள்ளூர் யுத்த அனர்த்தத்தினால் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை மேற்கொள்ளக் கூடிய திறமையுள்ள மன்றத்தைச் சேர்ந்த மாணவர்கள் துரதிஸ்டவசமாக பட்டப்படிப்பை தொடரமுடியவில்லை. மாணவர்மன்றத்தின் மூலம் வாராந்தம் நடாத்தப்பட்ட கல்விப்போட்டி, கருத்தரங்கம், விவாதப்போட்டி போன்ற செயல்பாடுகளும் மன்றத்தின் கல்விவட்டம் மூலம் வழங்கப்பட்ட இலவச கல்விச் சேவைவாய்ப்பும் மாணவர்களின் கற்றலுக்கு பெரும் உந்து சக்தியாக இருந்துள்ளது. வாசிகசாலை சேவை மூலம் வாசிகசாலைக்கு வந்து பயன்படுத்துவது மட்டுமல்லாமல் வீட்டில் இருந்தும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் என்பவற்றைப் படிக்க வாய்ப்பளிக்கப்பட்டது. முதியோர்கள், பாடசாலைக் கல்வியை தொடர முடியாதவர்கள் தமது அறிவை வளர்க்க வாய்ப்பு வழங்கப்பட்டது. இத்தகையோர் மாணவர் மன்றக் கூட்டங்களில் பங்குபற்றவும் வாசிகசாலைச்சேவையைப் பயன்படுத்தவும் வாய்ப்பளிக்கப்பட்டது. இத்தகைய கல்வி மேம்பாட்டுக்கான செயல்ப்பாடுகள் மூலம் 'எங்கிருந்தாலும் கல்வியால் முன்னேற வேண்டும் என்ற' உணர்வு மன்ற மக்கள் மத்தியில் மேலோங்கி உள்ளது.

6. சமயத்துறையில் அடைந்த வளர்ச்சி

பண்ணிசை வகுப்புக்கள், தேவாரப்போட்டிகள், சமயச் சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலம் சமய மேம்பாட்டிற்கு மன்றம் பங்களித்துள்ளது. மன்ற அங்கத்தவர்களின் குலதெய்வமான

மாவை சித்திவிநாயகர் ஆலயத்தின் நிர்வாகத்தை 1962ம் ஆண்டு முதல் மன்றம் பொறுப்பேற்று புதிய கட்டடம் அமைத்தல், கிணறு அமைத்தல் உட்பட பல திருப்பணி வேலைகளை சிறப்பான முறையில் நிறைவேற்றி பூசை வழிபாட்டு முறைகளை ஒழுங்காக நடைபெறச் செய்து நிர்வாக தொழிற்பாடுகள் நன்றாக நடைபெற்றன. 1984ல் இந்த ஆலயத்தின் சொத்துகளும் நிர்வாகமும் ஒரு தர்மகர்த்தாசபை அமைக்கப்பட்டு அதனிடம் ஒப்படைப்பதற்கு மன்றம் 15 ஆண்டுகள் விடாமுயற்சி செய்து வெற்றிகண்டுள்ளது. இன்னொரு குலதெய்வமான மாவை அம்பாள் ஆலயத்தின் திருப்பணிகளில் மன்றம் ஈடுபட்டு வந்துள்ளது. 15 ஆண்டுகால விடாமுயற்சியின் பயனாக இந்த ஆலயத்தின் சொத்துகளும் நிர்வாகமும் இன்னொரு தர்மகர்த்தா சபையிடம் 1984ல் ஒப்படைக்க மன்றம் வகைசெய்துள்ளது. 1962ம் ஆண்டுமுதல் மாவைக்கந்தன் ஆலய வருடாந்த தேர் உற்சவ காலத்தில் மன்றம் சிறப்பான முறையில் தண்ணீர்ப்பந்தல் சேவை ஒன்றை நடாத்தி வந்துள்ளது. மன்ற அங்கத்தவர்கள் மத்தியில் சிவபதம் குறித்த நினைவஞ்சலி நிகழ்வுகளில் சமயம் சார்ந்த நூல்கள் பழைய மரபுமுறையை தழுவாது பக்தியை வளர்க்கக்கூடிய நினைவு மலர்களாக வெளிவருவதற்கு மக்கள் தூண்டப்பட்னர். இத்தகைய முறையில் 15ற்கும் மேற்பட்ட நூல்கள் அண்மைக்காலத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

7. மன்ற அங்கத்தவர்கள் மத்தியில் ஐக்கிய வளர்ச்சி

பல்வேறு காரணங்களால் பிளவுபட்டு வாழ்ந்த மன்ற மக்களை சகோதர உணர்வோடும் ஐக்கிய உணர்வோடும் ஒன்றுபட்டு வாழ்வதற்கு மன்றம் மகத்தான பங்களிப்பை வழங்கியது. இத்தகைய ஐக்கிய வளர்ச்சிக்கான முயற்சி மாவிட்டபுரக் கிராமத்தை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் யாழ் மாவட்டத்தையும் தொடர்ந்து ஏனைய வடக்கு கிழக்கிலுள்ள மாவட்டங்களையும் இலக்காகக் கொண்டு பேதமின்றி மன்றம் சார்ந்த மக்கள் ஐக்கியமாக வாழ்வதற்கான முயற்சிகள் முன்னேற்றகரமாக தொடரப்பட்டது. இத்தகைய ஐக்கியத்தின் மூலம் மன்றத்தைச் சார்ந்த மக்கள் சமூகம் பெரும் சக்தியாக பரிணமித்து எழுச்சி கொண்ட மக்களாக வளர்ச்சிப் பாதையில் முன்னேறி வருவது பெருமைப்படக்கூடிய ஒரு சாதனையாகும்.

8. சமூக சமத்துவப்போராட்டங்களின்வெற்றிக்கு வழங்கிய பங்களிப்பு

ஒவ்வொரு சமூகக் குழுமியமும் சமூக சமத்துவம் பெற்ற சமூகமாக பரிணமிக்க வேண்டுமென்ற இலட்சியத்துடன் மன்றம் தொழிற்பட்டு வந்துள்ளது. இதற்கான உணர்வையும் சிந்தனை மாற்றத்தையும் மக்கள் மனதில் வளர்ப்பதில் மன்றம் கணிசமான வெற்றியை பெற்றுள்ளது. சமூக சமத்துவம் மறுக்கப்பட்ட மக்களது சமத்துவத்திற்கான போராட்டங்களின் வெற்றிக்கு மன்றம் பல வகையிலும் பங்களித்துள்ளது. மன்றத்தின் கருத்துப்புரட்சி இயக்கம், மாணவர் கல்வி வட்டம், மாணவர் மன்றம் ஆகியவற்றின் மூலம் மன்ற மக்களுக்கு சமூக சமத்துவத்தின் அவசியம் உணர்த்தப்பட்டது. இதன் மூலம் புரட்சிகரமான முறையில் சமத்துவம் பற்றிய விழிப்புணர்ச்சி ஊட்டப்பட்டது. அம்முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கவும் அம்மக்கள் தூண்டப்பட்டனர். மன்றம் முன்னின்று நடாத்திய சமத்துவத்திற்கான போராட்டம் பற்றி கீழே கவனிப்போம். தெல்லிப்பளை கிராமசபையின் 17ம் வட்டாரத் தேர்தல்களில் சமூக சமத்துவம் மறுக்கப்பட்ட சமூகக்குழுமியங்களின் பிரதிநிதிகள் சுழற்சி முறையில்

வெற்றிபெற்று அக்கிராம சபையில் அங்கம் வகிப்பதற்கு ஆரம்பகாலத்திலிருந்தே மன்ற மக்கள் முன்னனியில் நின்று தகுந்த தந்திரோபாயங்களை வகுத்து சவால்களை முறியடித்து வெற்றிகண்டுள்ளனர். எதிரணியினரின் அச்சுறுத்தல்கள், வன்முறைகள், சொத்தழிப்புகள் போன்ற அடாவடித்தனங்களுக்கு அஞ்சாமல் மன்ற மக்கள் செயற்பட்டு வெற்றியீட்டிக் கொடுத்துள்ளனர்.

1970/71 ஆண்டுகளில் சமூக சமத்துவப் போராட்டம் உக்கிரமடைந்துள்ள காலகட்டத்தில் நூற்றிற்க்கு மேற்பட்ட சிகையலங்கரிப்பு நிலையங்கள் அச்சம் காரணமாக பூட்டிவைக்க நிர்ப்பந்திக்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் மன்ற நிர்வாகம் இ.மு.நா இன் தலைமையில் செயல்ப்பட்டு இந்நிலையங்களை திறப்பதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டன. சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் முன்னனித் தலைவர்களான முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவர் ஆ.ஊ. சுப்பிரமணியம், முன்னாள் மேற்சபை அங்கத்தவர் ளு. நல்லையா ஆகியோரினதும் சமசமாஜக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான முன்னாள் மேற்சபை அங்கத்தவர் பொ. நாகலிங்கம், கம்யூனிசக் கட்சியின் பிரமுகரான டாக்டர் சீனிவாசகம் ஆகியோரினதும் ஒத்துழைப்புடன் யாழ். மாவட்ட அரச அதிபர் வேணன் அபயசேகராவின் தலைமையில் அவரின் செயலகத்தில் மகாநாடு ஒன்று நடைபெற்றது. குறிப்பிட்ட நிலையங்கள் பூட்டப்பட்டதற்கான காரணங்கள் ஆராயப்பட்டு அவற்றை உடனடியாக திறப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தொழில் நிலையங்கள் ஒவ்வொன்றையும் சூழவுள்ள ஆலயங்கள், உணவுச்சாலைகள் போன்ற பொதுநிலையங்கள் பாரபட்சமின்றி சமூக சமத்துவத்திற்கு மதிப்பளித்து சேவையாற்றும் பட்சத்தில் அவ்வப் பிரதேசங்களிலுள்ள சிகையலங்கரிப்பு நிலையங்களும் சமூக சமத்துவத்தை மதித்து சேவையாற்றுவது பாதுகாப்பாக அமையுமென மகாநாட்டில் கருதப்பட்டது. இக்கருத்தை அனுசரித்து சுமூகமான முறையில் சமத்துவம் பாராட்டி சேவையாற்றுவதற்கான வாய்ப்பு இந்நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்றது.

1962ல் மன்றத்தால் ஆரம்பிக்கப்பட்ட மாவைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் சேவையானது சமூக சமத்துவத்திற்கு எதிரான சமூகக் குழுமியங்களின் எதிர்ப்புக்குள்ளானது. எனினும் மன்றத்தின் துணிச்சலான நடவடிக்கைகள் மூலம் அச்சேவை பலராலும் போற்றக்கூடியதாகச் சிறப்புற்றது.

1963ம் ஆண்டில் நாவற்குழி கைதடி கிராமசபையின் 9ம் வட்டாரத் தேர்தலில் சமூக சமத்துவத்தை விரும்பிய சமூகக் குழுமியமொன்றின் பிரதிநிதியாக திரு கதிர்காமு தம்பிராசா அவர்கள் வெற்றிபெறுவதற்கு மன்றத்தின் முன்னணித் தலைவர்கள் களத்தில் நின்று துணிச்சலுடன் பங்களித்துள்ளார்கள்.

9. கலை, கலாச்சார பண்பாட்டு வளர்ச்சிக்கு மன்றம் வழங்கிய பங்களிப்பு

1. ***முத்தமிழ் வளர்ச்சி***யின் பொருட்டு சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி பல தரப்பட்ட நிகழ்வுகளை காலத்திற்கு காலம் தயாரித்து அரங்கேற்றப்பட்டுள்ளது. போட்டிகள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், நடிகர்கள், இசையாளர், நடனக்காரர் காலத்திற்கு காலம் பரிசில் வழங்கி பாராட்டி ஊக்குவிக்கப்பட்டுள்ளார்கள்.

2. ***யோகக்கலை வளர்ச்சி***க்கு திட்டமிட்ட முறையில் பயிற்சிகள் வழங்கப்பட்டது. போட்டிகள் நடாத்தி பரிசில்கள் வழங்கி ஊக்கமளிக்கப்பட்டது. இத்தகைய சேவைகளின் மூலம் மன்றத்தைச் சேர்ந்த பலர் தொடர்ந்தும் யோகக்கலை பயிற்சியில் ஈடுபட்டுவருவதை காணமுடிகின்றது.

3. ***கலாச்சாரப் பண்பாட்டு வளர்ச்சி***க்கு மன்றம் காத்திரமான பங்களிப்பை வழங்கிவருகின்றதென்றால் மிகையாகாது. கருத்துப்புரட்சி இயக்கத்தின் மூலம் உயர்ந்த ஒழுக்க, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை பேணுவதற்கான அவசியத்தை உணர்ந்து செயற்பட புரட்சிகரமான முறையில் தொடர்ச்சியாக விழிப்புணர்ச்சி ஏற்ப்படுத்தப் பட்டுவருகிறது. இதன் விளைவாக மன்ற மக்கள் மத்தியில் பாராட்டக்கூடிய முறையில் உயர்ந்த ஒழுக்கம் பேணப்படுவதையும் சமூக நிகழ்வுகளை கூட்டுறவு உணர்வோடும் அறிவுபூர்வமாகவும் மக்களுக்கு பயனளிக்கக்கூடிய முறையிலும் முன்மாதிரியாக செயற்ப்படுத்தி வருவதை காணமுடியும்.

4. மன்ற மக்கள் ***சிரமதானப் பணிகளில்*** ஈடுபட்டு கிராமத்தின் பொது அபிவிருத்திக்கு பங்களித்துவந்துள்ளார்கள்.

10. நலிவுற்றோருக்கு உதவி வழங்குதல்

'நலிவுற்றோருக்கு உதவுதல் எம் கடன்' என்ற உணர்வோடு மன்ற மக்கள் செயல்ப்பட்டு வருகிறார்கள். ஆதரவற்ற பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட கல்விச்சேவை, புலம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட அவசர நிவாரண உதவிகள், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் அனைத்தும் இச்சேவையில் பாற்ப்படும்.

11. சமூக இன வளர்ச்சிக்கான பங்களிப்பு

மன்றம் மாவிட்டபுரக் கிராமத்தை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு சமூக நிறுவனமாகும். சமூக, சமய, கல்வி, கலாச்சார, பண்பாட்டு துறைகளின் அபிவிருத்திக்கு 25 ஆண்டுகாலமாக வெற்றிகரமாக சேவையாற்றி வந்துள்ளது. அதன்பயனை வடகிழக்கு மாகாணத்திற்கு விஸ்தரித்து மன்றத்தைச் சார்ந்த மக்களினதும் தமிழினத்தினதும் வளர்ச்சிக்கு பங்களிக்க 1980ம் ஆண்டு முதல் முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்துள்ளன. 1980ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்ற சமூக எழுச்சி இயக்கமும் 1981ல் தாபிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்ற சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசமும் 1993ல் தாபிக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்ற புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் வடகிழக்கு மாகாணத்தை மையமாகக்கொண்டு செயல்ப்படுகின்றன.

நன்றி - மாவை பாரதி மறுமலர்ச்சி மன்ற பொன்விழா மலர்

சமூக இருப்பில் கல்வியின் பங்கு

பேராசிரியர் கலாநிதி தி. வேல்நம்பி
பீடாதிபதி,
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்

அறிமுகம்

எந்த ஒரு நபரும் தனது பிறப்பிலிருந்து அங்கத்துவம் பெறக்கூடிய முதலாவது சமூக அலகு குடும்பம் ஆகும். உடலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் ஆரோக்கியமான பிள்ளைகளுக்கான அடிப்படையாக விளங்கும் பல குடும்பங்கள் சேர்ந்து ஒரு சமூகத்தை உருவாக்குகின்றன. அதாவது தனிப்பட்ட குடும்ப அலகுகள் சமூகத்தின் இருப்புக்குப் பங்களிப்புச் செய்கின்றன. இன்னொரு வகையில் கூறின் நிலையான குடும்ப அலகுகளைக் கட்டியெழுப்புவதன்மூலம் நிலையான சமூகத்தை உருவாக்க முடியும். அதாவது ஒவ்வொரு குடும்பத்தினதும் நன்நிலையானது(The well being of each family) சமூக நன்நிலையை (Well being of each society) கட்டியெழுப்புகின்றது. இவ்வகையில் சமூக அமைப்பினை நாம் காணமுடிகிறது.

ஒரு சமூகம் தனக்குரிய கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டு ஒரு கட்டமைப்புக்குள் நீடித்து நிலைத்து நின்று செயற்படுவது சமூக இருப்பு(Social Stability) என அழைக்கப்படுகிறது.நவீன தொழில் நுட்ப நாகரீக மாற்றங்களுக்கு ஏற்ப தேவையான நெகிழ்வுத்தன்மையினைப் பின்பற்றுகின்ற போதிலும் சமூக கட்டமைப்பின் ஆணிவேர் ஆட்டம் காணாத வகையில் முன்னோக்கிய முறையில் எமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதே நிலையான சமூக இருப்புக்கு அடிப்படையானதும் அவசியமானதுமாகும். இவ் அடிப்படையில் மனிதன் சமூகமயமாக்கலுக்கு உள்ளாகின்றான். சமூக மயமாக்கல் என்பது ஒருவன் தான் சார்ந்துள்ள சமூகத்தின் நடத்தைகள் பெறுமானங்கள் மற்றும் சிந்தனைகளைக் கற்கும் செயன்முறையாகும்.(கருணாநிதி.மா 2008) இதன் மூலம் ஒருவர் தனிப்பட்ட அடையாளத்தைப் பெற்றுக் கொள்வதுடன் தன்னைச் சூழவுள்ள கலாசாரத்தின் நம்பிக்கையினையும் சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனையும் கற்றுக் கொள்ளமுடியும்.(Musgrave, 1977)

இவ்விதமாக ஒரு சமூகத்தின் நிலைத்திருப்பில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்ற போதிலும் அதில் கல்வியே பிரதான பங்கு வகிக்கின்றது.கல்வி என்பதற்குப் பலவிதமான வரையறைகள் கொடுக்கப்படுகின்றன. குழந்தைகளின் உள்ளேயிருக்கும் அறிவாற்றலை மலரச்செய்தல் கல்வியாகும்.(செல்வராசா. மா.2009).ஆன்மாவுக்குள் இருக்கும்

ஆற்றலை வெளிக்கொணர உதவுவதே கல்வி என்று அரவிந்தரும், பிள்ளையினுள்ளே அடங்கியுள்ள அனைத்து ஆற்றலையும் வெளிக்கொணர்வதே கல்வி என்று மகாத்மா காந்தியும் குறிப்பிட்டுள்ளனர். தன்னை உணர்தல் கல்வி என்று சங்கரரும் மனிதனுள் ஏற்கனவே அமைந்துள்ள தெய்வீக பூரணத்துவத்தை வெளிக்கொணர்வதே கல்வி என்று விவேகானந்தரும் குறிப்பிட்டுள்ளனர். முதியோர் இளையோர் மீது செலுத்தும் செல்வாக்குக் கல்வி என றெட்டின் குறிப்பிடுகிறார். இச்செல்வாக்கானது போதனை ஒழுக்கம் அமைதியான அபிவிருத்தி என்பவற்றோடு தொடர்புடையதாகவும் உடல் அறிவு, அழகியல், சமூகம், ஆத்மீகம் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். எனவே இத்தகைய வரையறைகளில் இருந்து கல்வி என்பது தனிமனித விருத்தியினூடாக சமூகத்தை நோக்கியதாகவும் சமூகத்தின் நிலைத்திருப்புக்குப் பங்களிப்புச் செய்வதாகவும் இருப்பதை உணர முடிகிறது.

கல்வியின் வகைகள் (Types of Education)

நாம் பல்வேறு விதமான கல்வியைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்ற போதும் இதனைப் பொதுவாகப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ள முடியும்.

1. முறை சார்ந்த கல்வி (Formal Education)
2. முறைசாராக் கல்வி (Informal Education)

இங்கு முறையில் கல்வி என்ற ஒரு வகுதியினையும் சேர்த்துக் கல்வியை மூன்றாக வகைப்படுத்துவதுண்டு. ஆயினும் தேவை கருதி மேற்குறிப்பிட்ட இருவகையினையுமே இக்கட்டுரை ஆராய்கின்றது.

முறை சார்ந்த கல்வி (Formal Education)

ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்வி முறை சார்ந்த கல்வி எனப்படுகிறது. இதனைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ள முடியும்.

1. பொதுக்கல்வி அல்லது பாடசாலைக்கல்வி - General Education
2. உயர் கல்வி - Higher Education
3. தொழில் மற்றும் தொழிநுட்பக் கல்வி - Professional and Technical Education

பாடசாலைக் கல்வி (General Education)

ஒருவனுடைய வாழ்நாளில் கல்வி கற்கும் காலத்தில் மிக முக்கியமான மறக்கமுடியாத காலப்பகுதி பாடசாலையில் கல்விபயிலும் காலமாகும். ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பதற்கிணங்க இளமைப் பருவத்தில் பாடசாலையில் பெற்றுக்கொள்ளும் கல்வியறிவே ஒருவரது எதிர்கால ஏற்றத்திற்கும் உயர்கல்விக்கும் அடிப்படையாக அமைகிறது. பாடசாலைகளில் பிள்ளைகள் முதலாம் தரத்திலிருந்து பதின்மூன்றாண்டுகள் கல்விக்காகத்

தமது காலத்தைச் செலவு செய்கின்றனர். பாடசாலைகளில் கல்வி மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளை மாணவர்கள் பயில்கின்றனர்.

கல்வி என்பது ஒருவரது அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக கருதப்படுகிறது. இதனாலேயே அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படையில் இலங்கையரசாங்கம் இலவசக்கல்வியை அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் நாட்டின் கல்வியறிவு வீதம் மிகவும் உயர்வாக இருப்பதை காணமுடிகிறது. பாடசாலைகளுக்கென வரையறுக்கப்படும் விதிமுறைகள் கட்டுப்பாடுகள் பாடவிதானங்கள் நேரமுகாமைத்துவம் போன்ற நல்லம்சங்களை எமது இளம் சமூகத்தினர் பெற்றுகொள்ள முடிகிறது. அத்துடன் வாரநாட்களில் தினமும் காலை குறித்த நேரத்துக்குச் சென்று பிற்பகல் வரை நீண்ட நேரம் பாடசாலையில் கற்கும் மாணவர்கள் தமது வாழ்நாளைத் தினமும் ஒரு முறைமையான கட்டுக்கோப்புக்குள் வைத்திருக்கப் பழகி விடுகின்றனர். இதனால் மாணவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் மற்றும் குடும்ப அங்கத்தவர்களும் தமது தினவாழ்வை முறைமைப் படுத்துகின்றனர்.இது நல்ல குடும்ப வாழ்வுக்கும் சிறந்த சமூக உருவாக்கத்துக்கும் வழிவகுக்கின்றது.

ஓரினத்தன்மை(Unity) ஒத்த எண்ணங்கள் உணர்வுகள் வேறுபாடுகளற்ற பழக்கம், புரிந்துணர்வு, நட்பு, அன்பு போன்றவற்றையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது. குறிப்பாகப் பாடசாலைகளில் நடைமுறையிலிருக்கும் சீருடை(Uniform) ஓரினத்தன்மைக்கும் ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடுகளின்றி பழகுவதற்கும் வழிவகுக்கின்றது.அத்துடன் பாடசாலை, பாடவிதானச் செயற்பாடுகள் அறிவாற்றலையும் இணை பாடவிதானச் செயற்பாடுகள்(Co-curricular Activities) மென்திறன்களையும்(Soft Skills) வளர்ப்பதற்கு உறுதுணை புரிகின்றன.இத்தகைய செயற்பாடுகள் மூலம் மாணவர்கள் விரும்பியோ விருப்பமின்றியோ நம்பிக்கைகள்(Beliefs), பெறுமானங்கள்(Values), மனப்பாங்குகள்(Attitudes), மற்றும் நடத்தையியல் அம்சங்களைக் கற்றுக்கொள்ள முடியும். இத்தகைய செயற்பாடுகளினூடாக விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு வெற்றி தோல்விகளை எதிர் கொள்ளும் பக்குவம் சகிப்புத்தன்மை என்பவற்றையும் வளர்த்துக் கொள்ளமுடியும். இவையே ஒரு நல்ல சமூகச் சிருஸ்டிப்புக்கு உதவுவதாக அமையும்.

மாணவர்களின் குழு வேலைச் செயற்பாட்டிற்கும்(Team Work) தலைமைத்துவத்திற்கும் பாடசாலைச் சூழல் வழி வகுக்கின்றது. குழுக்கற்றல் போட்டி நிகழ்வுகளின் போது ஆண் பெண் வயது வேறுபாடின்றி அங்கத்தவராக இருக்கும் குழுவில் ஒருவர் தலைவராக இருப்பார். வழிகாட்டி கருமங்களை முன்னெடுத்து செல்வதிலும் குழுவின் ஒருமைப்பாட்டைப் பேணுவதிலும் தலைவர் முக்கிய பங்காற்றுவார்.இத்தகைய கற்றல் அனுபவங்களே பின்னர் அவர்களது குடும்பச் செயற்பாட்டுக்கும் ஆக்கபூர்வமான சமூகச் செயற்பாட்டிற்கும் காரணமாக அமைகின்றது.அத்துடன் குழுவிலுள்ளவர்களின் ஆளுமை விருத்தி (Personality Development) சமூக அபிவிருத்திக்கு உறுதுணையாக அமையும்.

பாடசாலைக் கல்வியினூடாக பெறக்கூடிய மற்றுமொரு சிறப்பம்சம் மரபுகளையும் வழமைகளையும் பின்பற்றுதலாகும்.அதாவது நல்ல பாடசாலை சூழலிலே கலாசாரம், மரபுகள், நியமங்கள், சம்பிரதாயங்கள் முதலானவை ஒழுங்கு முறையாகப் பேணப்படுகின்றன. உதாரணமாக தினமும் காலையும் பாடசாலை முடிவடைந்த பின்னும் இறைவழிபாடு பாடசாலைக்கீதம் ஓதுதல் முறையாகப் பின்பற்றப்படுகின்றன. இவை சமூகத்தில் ஒரு ஒழுங்கு முறையான வரையறைக்குள் வாழ வழிப்படுத்துகின்றன. மேலும் பாடசாலையில் மாணவர் மாணவர் தொடர்புகள் மட்டுமன்றி ஆசிரிய மாணவ உறவு நிலைகளும் தொடர்புகளும் வலுப்படுத்தப்படுகின்றன. இதனால் அவர்கள் சமூகத்தில் எவ்வித தவறுகளும் செய்யாது உரிய முறையில் வாழும் நிலையினைப் பெறுகிறார்கள்.

எமது சமூகத்திலுள்ள இளம் தலைமுறையினரைத் தொழிற்சந்தைக்கு ஆயத்தம் செய்யும் பாரிய பொறுப்பான பணியினைப் பாடசாலைகளே நிறைவு செய்கின்றன.பல சமூக நிறுவனங்களுக்கும் இவையே அறிமுகஞ் செய்கின்றன.இதனூடாகச் சமூகமயமாக்கல் சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்தல் போன்றவற்றினூடாகச் சமூக நிலைத்திருப்புக்குப் பங்காற்ற முடியும்.

உயர் கல்வி (Higher Education)

உயர்கல்வி என்று பார்க்கும்போது பல்கலைக்கழகங்கள் உயர் கல்வி நிறுவனங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. உயர் கல்வியானது ஒரு நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் உயர் தொழில் நிபுணர்களையும் கல்விமான்களையும் உருவாக்குகின்றது. பல்கலைக்கழகங்கள் புதிய சிந்தனைகளையும் கண்டுபிடிப்புகளையும் உருவாக்கி பராமரித்து பரவலாக்கி வருகின்றன.இதன் பொருட்டு ஆராய்ச்சித் துறையில் அதிக கவனம் செலுத்தி முதலீடு செய்து வருகின்றன. உயர் கல்வி வளர்ச்சியானது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது.

இந்த அடிப்படையிலேயே அரசு அரச பல்கலைக்கழகங்கள் மட்டுமன்றித் தனியார் பல்கலைக்கழகங்களின் வருகையையும் அனுமதித்து ஊக்குவித்து வருகின்றது.இவ்வாறே தொழில்நுட்ப கல்லூரிகளும் பல்வேறு கற்கை நெறிகளை வழங்குகின்றன.ஒவ்வொருவரும் தமது தகைமைக்கேற்ப பொருத்தமான கற்கைநெறியினைத் தேர்வு செய்து தொடர்ந்து கற்கக்கூடிய வாய்ப்பு இத்தகைய நிறுவனங்களில் உண்டு.

தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி (Professional and Technical Education)

தொழில்சார் கற்கைகள் என்ற வகையில் கணக்கீட்டு நுட்பங்கள் சங்கம் (Association of Accounting Technique– AAT) முகாமைக் கணக்கீட்டு சான்றிதழ் (The Certified Management Accountant– CMA) பட்டயக்கணக்காளர் நிறுவனம் (Charted Institution of Management

Accountant) சான்றளிக்கப்பட்ட பட்டயக்கணக்காளர் சங்கம்(Association of Chartered Certified Accountants – ACCA) சந்தைப்படுத்தல் பட்டய நிறுவனம் (Chartered Institute of Marketing – CIM)ஆளணி முகாமைத்துவ நிறுவனம் (Institute of Personal Management) போன்ற கற்கை நெறிகளைக் குறிப்பிடலாம். பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி கிடைக்கப்பெறாதவர்கள் இத்தகைய கற்கை நெறிகளினூடாகத் தம்மை வளம்படுத்திக் கொள்ள முடியும். இன்றைய காலங்களில் பல்கலைக்கழகங்களிலோ அன்றேல் உயர் கல்வி நிறுவனங்களிலோ கல்வி பயிலும் மாணவர்கள் சமாந்தரமாகவே இத்தகைய தொழில்சார் கற்கை நெறிகளையும் கற்று வருவதை அவதானிக்க முடிகிறது. இன்னும் சொல்லப் போனால் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற சிலர் அவ்வாய்ப்பினை இடைநிறுத்தி விட்டு இத்தகைய தொழில்சார் கற்கை நெறிகளில் நாட்டம் காண்பது விசேடமாக குறிப்பிட வேண்டியது. ஏனெனில் தொழிற் சந்தையில் (Job Market) வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளமுடிவதுடன் பெருமளவு வருமானத்தினையும் பெறமுடிகின்றது. இக்கற்கை நெறிகள் கணக்கியல் முகாமைத்துவம் சார்ந்ததாக இருக்கின்ற போதிலும் பல்துறைசார் மாணவர்களாலும் விரும்பிக் கற்கப் படுகின்றன.இதுவே இத்தகைய கற்கை நெறிகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறே தொழில்நுட்பரீதியான கற்கைநெறிகளும் சமூகத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. தொழில் நுட்ப கல்லூரிகளில் இத்தகைய கற்கைநெறிகள் பலவற்றினை கற்றுக்கொள்ளலாம். அதேநேரம் இன்று மூன்றாம் நிலைக்கல்வி (Tertiary) என்ற அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் பலவும் கணணி மற்றும் தொழில்நுட்பவியல் சார் கற்கைகளை போதித்து வருகின்றன. இந்நிறுவனங்களில் கற்பவர்களில் பலர் அந்நிறுவனங்களிலேயே பணிபுரிகின்ற வாய்ப்பினையும் பெற்று வருகின்றனர். முறைமையான முறையில் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறமுடியாதவர்கள் தமது தகுதிக்கு ஏற்ப இத்தகைய நிறுவனங்களில் பொருத்தமான கற்கைநெறிகளைத் தெரிவு செய்து கொள்ளமுடியும். குறிப்பாக திறந்த பல்கலைக்கழகத்தில் (Open University) பல கற்கை நெறிகள் காணப்படுகின்றன. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் முழுமையான தேர்ச்சி பெறாதவர்கள் கூட டிப்ளோமா கற்கை நெறிகளைத் தெரிவு செய்து அதனூடாகப் பட்டப்படிப்பையும் பட்டப்பின்படிப்பினையும் பெற்றுக் கொள்ளமுடியும். இந்த விழிப்புணர்வு எமது சமூகத்தில் போதுமானதாக இல்லை.எனவே கல்வியாளர்கள் இத்தகைய வாய்ப்புகளைப் பற்றி மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் எடுத்துரைப்பது அவசியமானதாகும். இவ்வாறு சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுமாயின் வீதிகள் தோறும் வீணாக நின்று வம்பளக்கும் இளைஞர்களைப் பயனுள்ள வகையில் வலுவூட்டமுடியும். இதுதொடர்பில் கற்றவர்களும் பெற்றோர்களும் ஒன்றுசேர்ந்து செயற்படவேண்டியது அவசியமாகும்.

முறைசாராக்கல்வி (Informal Education)

முறைசார்ந்த கல்வி முறைக்குள் அனைவரும் உள்வர முடியாது. குறிப்பாக பாடசாலைக் கல்வியை பொறுத்தவரை சிலர் க.பொ.த சாதாரணதரம் வரையே கற்க முடிகிறது. இன்னும் சிலர் உயர்தரம் வரை கற்கின்றனர். ஆயினும் எமது நாட்டைப் பொறுத்தவரை ஒரு குறித்த வீதத்தினரே பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வாயப்பினைப் பெறுகின்றனர். சில வெளிவாரியாகவும் இன்னும் சிலர் தொழில் நுட்பக்கல்லூரி மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தினூடாக உயர்கல்வி பெறும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். எனவே மொத்த மாணவப் படையின் பெரும் பகுதியினர் கல்வி பயிலும் வாய்ப்பினை இழந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். உண்மையில் இவர்கள் முறைசாரா கல்வி முறைமைக்குள் தம்மை உள்நுழைத்து கொள்ளமுடியும். முறைசாராக் கல்வி என்பதற்குள் தொழிற்கல்வி (Vocational Education) சமுதாயக்கல்வி(Social Education) முதியோர் கல்வி(Adult Education) போன்ற கல்வி முறைமைகளை குறிப்பிடலாம்.தொழிற்கல்வி என்பதற்குள் மரவேலை, உலோகவேலை, ஒட்டுத்தொழில், மின்னியல் வேலை, நீர்க்குழாய் வேலை, இயந்திரம் திருத்துதல் போன்ற பல்வேறு வேலைப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதுடன் அதன் மூலம் வருமானத்தையும் உழைத்துக் கொள்ள முடியும்.பாடசாலைகளில் கூட இத்தகைய முறைசாராக்கல்வி மையங்கள் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

முடிவுரை (Conclusion)

சமூக மயமாக்கல், சமூக நகர்வு, சமூகமாற்றம், போன்றவற்றின் வளர்ச்சிக்கு கல்வி அவசியமாக இருக்கின்றது.மேற்குறித்த மாற்றங்களினூடாகவே மாறுபடும் அம்சங்க;க்கூடாக நிலைத்திருக்கும் சமூகத்தை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும். எமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேவைத்துறையின் பங்களிப்பே அதிகமாக இருக்கின்றது. இதன்மூலம் நாட்டின் அபிவிருத்தியில் கல்வி குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. தொழில் சார் கற்கை நெறிகளினூடாகப் பல நாடுகள் தம்மை வளம்படுத்தியுள்ளன. குறிப்பாக ஐக்கிய ராச்சியம் கனடா போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். தொழில் நுட்ப வளர்ச்சியினூடாக சீனா யப்பான் போன்ற நாடுகள் பெருமளவு வளர்ச்சியைக் கண்டுள்ளன. கல்வி மருத்துவம் என்பனவற்றின் மூலம் இந்தியா மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளன. எனவே இத்தகைய பல்பரிமாணத் தன்மையின் மூலம் இலங்கை தன்னை வளம்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் தொடர்ந்து கல்வித்துறையின் வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் கல்விச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் – ஒரு மதிப்பீடு

பேராசிரியர் மா.கருணாநிதி
கல்வியியல்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்

சமூக மாற்றம் என்பது சமகாலச் சமுதாயங்களில் தவிர்க்க முடியாததொரு விடயமாயினும், அம்மாற்றத்தினை உரிய காலப்பகுதியில் உரிய முறையில் அடைந்து கொள்வது அந்தந்தச் சமூகத்தின் தொலை நோக்குடன் கூடிய செயற்பாடுகளால் மட்டுமன்றி வெளிப்புறக் காரணிகளும் அதில் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளமை கவனத்திற்குரிய விடயமாகும். இருபதாம் நூற்றாண்டில் அரசியல், பொருளாதாரம், கல்வி, தொழில்நுட்பவியல் போன்ற விடயங்களில் துரித மாற்றங்கள் ஏற்பட்டிருந்த போதிலும், இவ்வாறான மாற்றங்களைப் பல சமூகக் குழுக்கள் உண்மையாக அனுபவிப்பதற்கு சமூகச் சக்திகள் பல்வேறு வழிமுறைகளில் இடையூறுகளை ஏற்படுத்தி வந்துள்ளன. யாழ்ப்பாணச் சமூகத்திலுள்ள பின்தங்கிய சமூகக் குழுக்கள் ஒடுக்குமுறை, வேறுபாடு காட்டப்படுதல், பின்தள்ளப்படுதல் முதலிய உரிமை மறுப்புகளால் இயல்பாகவே நிகழவேண்டிய மாற்றங்களைக்கூட காலந்தாழ்ந்துதான் அனுபவிக்கத் தொடங்கின. இவ்வாறான மாற்றங்கள் உயர் சமூகக் குழுக்களின் அனுசரணையுடன் நிகழ்ந்தேற வேண்டும் என்னும் எதிர்பார்ப்புக்குப் பதிலாக, பின்தங்கிய சமூகக் குழுக்கள் மத்தியிலிருந்து உருவாகிய சமூக உணர்வு, விடுதலை வேட்கை, சமூக முன்னோடிகளின் இயக்கரீதியான தொலைநோக்குடைய செயற்பாடுகள் பல முற்போக்கான விடயங்களை துணிவுடன், எழுச்சி பூர்வமாகச் செயற்படுத்தி வந்துள்ளனர். மாற்றங்களை விரும்பாதோர் மத்தியில் வரட்டுத்தனமானதும் சாத்வீகத்தன்மையற்றதுமான முடிவுகளுக்கு இட்டுச் சென்ற வேளைகளில் கூட மிகவும் நிதானமாக மேற்கொண்ட முயற்சிகள் சாதகமான முடிவுகளைத் தரத்தொடங்கின. அவ்வாறான அமைப்புகளுள் ஒன்றுதான் மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கம்.

1947இல் மாவிட்டபுரக் கிராமத்தைத் தளமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கமானது 1955இல் சமுதாய மேம்பாட்டுக்கான மாவை பாரதி வாசிகசாலையாகவும் 1972 இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் எனப் பெயர் மாற்றம் பெற்றதுடன் 1980இல் தேசிய சமூக எழுச்சி இயக்கமாகவும் 1981இல் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமாகவும் பரிணமித்தது. 1993 தொடக்கம் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் உருவாக்கப்பட்டு சமூக, பொருளாதார, கலாசார மற்றும் கல்வி மேம்பாட்டுக்கு தேசிய மட்டத்தில் உழைத்துவரும் நிறுவனமாக மிளிர்கிறது. எந்தச் சமூகத்தின் மேம்பாட்டுக்கு உழைக்க வேண்டுமென இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதோ அவற்றைத் தனித்து நின்று சாதித்துள்ளது. சமூக

முன்னேற்றத்தில் ஆர்வமுள்ள ஒரு நிறுவனம் தனித்து நின்றே பல சாதனைகளைச் செய்யலாம் என்பதற்கு முன்னுதாரணமாகவும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் செயலாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனங்கள் முன்னெடுத்துச் செல்லும் கல்விச் செயற்பாடுகளையும் அவற்றின் விளைவுகளையும் மதிப்பிடுவது இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

கல்விச் செயற்பாடுகளின் குறிக்கோள்

- பட்டினி கிடக்க நேரினும் சமூகத்தைப் படிக்க வைத்தல்
- மரபுவழித் தொழில்முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான விழிப்புணர்வைக் கல்வியின் மூலம் ஏற்படுத்துதல்
- நலிவுற்றோருக்குக் கைகொடுக்கும் கருவியாகக் கல்வியைப் பயன்படுத்துதல்
- உயரிய ஒழுக்கம், கலாசாரம் மற்றும் விழுமியங்களைப் பேணிவளர்த்தலும் பாதுகாத்தலும்
- கல்வியின் மூலம் சமூகப் பெயர்ச்சிக்கு உதவுதல்
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தைத் தாயகமாகக் கொண்ட இச்சமூகக் குழுவினரை வளச்சிபெற்ற, கௌரவமான மற்றும் சமத்துவமான சமூகமாக உருவாக்குதல்
- ஏனைய பின்தங்கிய சமூகங்களுக்கு முன்மாதிரியாகச் செயற்படுதல்.

மேற்கூறியவாறான தொலைநோக்குடைய குறிக்கோள்களை உருவாக்குவதில் எழுச்சித் தந்தையெனப் பலராலும் போற்றப்படும் திரு ஆர்.எம். நாகலிங்கம் அவர்களின் பங்களிப்பு முக்கியமானது. பின்தங்கிய சமூகங்களின் விடுதலைக்காக உழைத்த ஐரோப்பிய மற்றும் ஆசிய நாட்டுச் சிந்தனையாளர்களின் செல்வாக்கு திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களிடத்திலும் வேரூன்றியிருந்தன. **பிரேசிலில் போலோ பிரேய்றி, இந்தியாவில் மகாத்மாகாந்தி முதலியவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான கருவியாகக் கல்வியைப் பயன்படுத்தியதுபோல நாகலிங்கம் அவர்களுடைய குறிக்கோள்களும் அமைந்தமை இங்கு குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியது.**

புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் இத்தகைய குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றுவதற்கு, மக்களின் சமூக அந்தஸ்து மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்டமை முக்கிய காரணமாகும். இச்சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்துவரும் கிராமியச் சூழலில் உயர்குடியினரின் செல்வாக்கும் ஆதிக்கமும் மிகுந்திருந்தமையால் தொடர்ந்தும் அவர்களை அடிமைகளாகப் பேணிவரும் நிலைமை இருந்தது. ஆலயங்களில் இம்மக்களின் பிரசன்னத்தை வெறுத்தொதுக்கினர். அன்றாட வாழ்வின் சந்தர்ப்பங்கள் பலவற்றில் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. அடக்குமுறையினால் பாதிக்கப்பட்ட மக்கள் விடுதலைபெற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கத் தொடங்கியது. சமஉரிமைக்காகப் போராடுவதற்குச் சங்கங்கள் அணிதிரண்டன.

அக்கால யாழ்ப்பாணச் சமூகத்தில் உயர்சைவ வேளாளர்களால் உருவாக்கப்பட்ட பாடசாலைகள் பின்தங்கிய சமூகக் குழுக்களின் கல்விக்கு உரிய வாய்ப்புகளைக் கொடுக்கவில்லை. மதம் பரப்பும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட மிஷனரிப் பாடசாலைகளில் பின்தங்கிய சமூகக் குழுக்களைச் சேர்ந்த பிள்ளைகள் கல்வி பயில்வதற்கான வாய்ப்புகள் இருந்தனவாயினும் மிஷனரிப் பாடசாலைகளும் உயர்குழாத்தினரின் கட்டுப்பாடுகளை மீறமுடியாத நிலைமைகள் இருந்துள்ளனவென ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன. இத்தகைய சூழமைவில் இம்மக்களின் கல்விமீதான ஆர்வம் திட்டமிட்டு மழுங்கடிக்கப்பட்டிருந்தது.

தேநீர்க் கடைகள், பொதுக்கிணறுகள், ஆலயங்கள் போன்றவற்றில் சமத்துவம் இருக்கவில்லை. சொந்தவீட்டில் கூட வைபவங்களைச் சுதந்திரமாக சிறப்பாகக் கொண்டாட இடமளிக்கப்படவில்லை. இதற்கான தலைமைத்துவத்தை வழங்க முற்பட்டோரும் ஆதிக்கச் சிந்தனையாளர்களால் தடுக்கப்பட்டனர். இதனிலும் மேலாக சமூகக் குழுக்கள் மத்தியில் வேறுபாடுகள் தூண்டிவிடப்பட்டன. இவ்வாறான சமூக ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடுவதற்குச் சமூகஞ் சார்ந்த விழிப்புணர்வு ஆர்.எம். நாகலிங்கம் போன்றவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் உருவாக்கப்பட வேண்டியதாயிற்று.

திரு.நாகலிங்கம் அவர்களின் கல்வித் தலைமைத்துவத்துக்கு வழிகோலிய பின்புலம் எத்தகையதென அறிதலும் இவ்விடத்தில் முக்கியமானது. இவர் வறிய குடும்பத்தில் பிறந்தவராயினும் இவருடைய தாய் தந்தையர் கல்வியின் அவசியத்தை உணர்ந்து போதிய ஊக்கங் கொடுத்தனர். தமது ஆரம்பக்கல்வியை மாவிட்டபுரம் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பித்து இடைநிலைக்கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் பூர்த்தி செய்தார். அதன் பின்னர் கூட்டுறவுப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளல், கூட்டுறவுப் பரிசோதகராக உத்தியோகம் பார்த்தல், கூட்டுறவு வங்கியின் உள்ளகக் கணக்காய்வாளராதல், திருகோணமலை மாவட்டக் கூட்டுறவுக் கல்லூரியில் விரிவுரையாளராதல், தேசிய மட்டத்தில் பயிற்சிகளை வழங்கிவரும் பொல்கொல்லைக் கூட்டுறவுக் கல்லூரியின் விரிவுரையாளராதல், உயர்கல்விக்கென லவ்பறோ தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயின்ற காலத்தில் சிறந்த மாணவராக இனங்காணப்பட்டமை, வீடமைப்பு அதிகார சபையில் உயர்பதவிகளை வகித்துச் சிறந்த நிருவாகியாக அங்கீகரிக்கப்படுதல் யாவும் திரு.நாகலிங்கம் அவர்களின் தலைமைத்துவத்திற்கு உறுதியான அடிப்படைகளை வழங்கின. சமூகநலப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும்பொழுது, உண்டான சவால்களையும் தடைகளையும் முறியடித்துக்கொண்டு முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு மேலே கூறப்பட்ட தகைமைகளும் பதவிநிலைகளும் அவற்றின்மூலம் அனுபவங்களும் அவரிடம் காணப்பட்டன. அதனிலும் மேலாக உரிய நேரத்தில் பொருத்தமான தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றலும் அவரிடமிருந்தன.

புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் மற்றும் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் முன்னெடுத்துச் சென்ற நிகழ்ச்சித்திட்டங்களுள் கல்விக்கு வழங்கப்பட்ட இடம் மிகவும் முக்கியமானது. ஏறக்குறைய சமூகத்திலுள்ள எல்லோருமே ஐந்தாந் தரத்துக்குமேல் கல்வியைப் பெறும் வாய்ப்பு இருக்கவில்லை. மிஷனரிப் பாடசாலைகளின் சேவைகளும் இவர்களுக்குக் கிட்டவில்லை. யாழ்ப்பாண அரசியலில் இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கு

மேலோங்கியிருந்த காலத்தில்கூட, அக்கட்சிகளின் கவனம் இம்மக்களின்மீது திரும்பவில்லை. இனம், மதம், மொழி, சாதி மற்றும் பொருளாதார அந்தஸ்து ஆகிய அடிப்படைகளில் வேறுபாடு காட்டாமல் கற்கும் ஆற்றலுள்ள பிள்ளைகள் எல்லோருக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்ற நியாயத்தன்மைக் கொள்கை சீ.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா அவர்களால் விதந்துரைக்கப்பட்ட பின்னர், இலங்கையில் கிராமங்கள் தோறும் பாடசாலைகள் உருவாக அடித்தளமிடப்பட்டன. இலவசக் கல்வித் திட்டம் மற்றும் தாய்மொழிக் கல்வி ஆகியவற்றின் அறிமுகத்தின் பின்னர் கல்வியில் பங்குபற்றுவோர் தொகையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டது. உயர் வர்க்கத்தினரின் ஏகபோக உரிமையாக இருந்த கல்வியை மக்கள் எல்லோரும் அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் திறந்துவிடப்பட்டன. ஆயினும் இத்தகைய வாய்ப்புகளைக்கூட இச்சமூகத்தைச் சேர்ந்த மக்கள் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள முடியாமைக்குச் சமூகக் காரணிகள் பல தடையாக இருந்தன. அதனிலும் மேலாகக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கான குறுக்கீடுகளும் இருந்தனவென்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியறிவு இல்லாத நிலையிலும் எவ்வித இடையூறுகளுமின்றி தொழில்நிலையங்களில் சேர்ந்து கொள்ளலாம் என்ற கருத்து ஆழமாகப் பதிந்திருந்தமையும் கல்வியின் முக்கியத்துவத்தை உணரச் செய்வதைத் தடுத்தது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மலேசியா முதலிய நாடுகளுக்குத் தொழில் நிமித்தம் புலம்பெயரும் வாய்ப்புகள் இருந்தமையால் தொழிலில் மாற்றங்களைச் செய்யவேண்டிய தேவையும் உருவாகவில்லை. அவ்வாறு மாற்றங்களைச் செய்யவேண்டுமென நினைக்கத் தொடங்கிய வேளைகளிலும், நிகழவேண்டிய திருப்பங்களை உயர் சமூகங்கள் விரும்பவில்லை.

1960களிலிருந்து இன்றுவரை இலங்கையில் நிலவிவருகின்ற முக்கியமான பிரச்சினை படித்தோர் வேலையின்மையாகும். கல்வியும் வேலையின்மையும் என்னும் விடயம் தொடர்பாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், உயர்கல்வித் தகைமையுடையோர் மத்தியிலேயே வேலையின்மை உயர் மட்டத்தில் உள்ளனவென்பதை எடுத்துக் காட்டியுள்ளன. எட்டாம் வகுப்பிற்குக்கீழ் கற்றவர் எவரும் வேலையில்லை என்ற பிரச்சினையை முன்வைக்கவில்லை. இந்தச் சமூகத்தினரைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட தொழிலைச் செய்வதற்குப் படிப்பறிவு அவசியமில்லை என்ற மனப்பாங்கு அதிகமானோர் மத்தியில் அன்றிருந்தது. படிப்பறிவற்றோரிடத்தில் இது ஆழமாகப் பதிந்திருந்தது. வறுமையை எதிர் கொள்வதற்கு உடனடியான தொழில் இருந்தமை இதனின்றும் விடுபட்டுச் செல்வதற்குப் பெருந்தடையாகவும் இருந்துள்ளது. இவ்வாறான மாறுபட்ட சிந்தனைப் போக்குகள் மற்றும் விழிப்புணர்வின்மை என்னும் நிலைமையிலிருந்து விடுதலை பெறுதல் எங்ஙனம் என்ற வினாக்கள் திரு.நாகலிங்கம் போன்ற தலைமைத்துவங்களிடையே எழுந்தமையே புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் மற்றும் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் செயற்பாடுகளுக்கும் நெறிப்படுத்தல்களுக்கும் மூலவிசையாகவும் உந்துசக்தியாகவும் விளங்கின

கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள்

புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் நடைமுறைப்படுத்தி வந்த கல்விசார்ந்த செயற்திட்டங்கள் பின்வருமாறு:

- ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிந்தியடைந்தோருக்குப் பரிசில்
- க.பொ.த.சாதாரணதரம் மற்றும் உயர்தரங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவருக்கான பரிசில்
- பல்கலைக்கழகக் கல்விக்கு அனுமதி பெற்றோருக்கு ஊக்குவிப்பு நிதி.
- நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் கல்வி ஊக்குவிப்புக்கான நிதி
- பட்டதாரிகள், உயர் தேசிய டிப்ளோமா மற்றும் தேசிய கல்வியல் கல்லூரிச் சான்றிதழ் பெற்றோருக்குப் பாராட்டும் கௌரவங்களும்.
- கல்விசார் போட்டிகளை நடாத்திப் பரிசில்களை வழங்குதல்
- கலை நிகழ்ச்சிகளை ஊக்குவித்தல்
- கிராமங்கள் தோறும் அறிவூட்டல் மற்றும் வழிகாட்டல் கருத்தரங்குகளை நடத்துதல்

மேலே கூறப்பட்ட செயற்திட்டங்களுடன் பின்வரும் புதிய வேலைத் திட்டங்களையும் செயற்படுத்துவதற்கு இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

- பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவருக்கு முன்னோடிப் பரீட்சைகளை தொடர்ந்து நடத்துதல்
- ஆங்கிலக் கல்வியை ஊக்குவித்தல்
- கல்விசார் போட்டிகளை தொடர்ச்சியாக நடத்துதல்
- பிள்ளைகளின் ஆக்கத்திறன்களை ஊக்குவிக்கும் வகையிலான கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்
- சுயநிதியுதவித் திட்டத்தின்கீழ் சஞ்சிகை வெளியிடல்
- நிதி ஊக்குவிப்புத் திட்டங்களை மேம்படுத்துதல்
- கல்விமேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் கிழக்கு, மானிப்பாய், நல்லூர், கொழும்பு ஆகிய பிராந்தியங்கள் ஒவ்வொன்றிலும் இயங்கிவரும் பிராந்திய கல்விச் சபைகள் மூலம் அமுல்படுத்தல்.
- வன்னிப் போரினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கான கல்வி உதவித்திட்டத்தை மேம்படுத்துதல்.

கல்வி அபிவிருத்திக்கான நிதிவளத்தைத் திரட்டுவதிலும் நிதியம் வெற்றிகரமானதாகவே உள்ளது. நிதிவளம் பெருக்கலுக்கு முதற்படியாக நிறுவனச் செயற்பாடுகளில் பற்றுறுதியை ஏற்படுத்துவதில் கண்டுள்ள வெற்றியைக் குறிப்பிடமுடியும். நிதிசேகரிப்பதற்கான புதுப் புது வழிமுறைகள் தொடர்பாகச் சிந்திப்பது தலைவரின் செயற்பாடுகளில் ஒன்றாக மாறியுள்ளது. நிதியத்தின் உறுப்பினர்கள் தொலைநோக்குடன் கூடியவாறு நிதிசேகரிப்புக்கு உதவினராயினும் அண்மைக்காலங்களில் பல புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

புலமைப் பரிசில் நிதியத்தின் கீழ் ஞாபகார்த்தப் புலமைப் பரிசில் நிதி, திருமண நாள் நினைவு நிதியம், பிறந்தநாள் நினைவு நிதியம் முதலியவற்றோடு நிதியப் பங்குதாரரிடமிருந்து நன்கொடைப் பங்கு மூலதனமாக ரூபா 5000- வீதம் சேகரித்தல் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை. சமாசத்தின் யாப்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ளவாறு திரட்டப்படும் நிதியில் பெரும்பங்கு கல்வி மேம்பாட்டுக்குச் செலவு செய்யப்படுதல் இவர்களால் கல்விக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களின் விளைவுகள்:

திட்டவட்டமான குறிக்கோள்களின் அடிப்படையில் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் கல்வி தொடர்பான விடயங்களில் பல சாதகமான முன்னேற்றங்களைத் தந்துள்ளன. நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மக்கள் மத்தியில் தீவிரமான உணர்வை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடயத்தில் தந்தையரிலும் பார்க்க தாய்மார் முன்னணியில் உள்ளனர் என திரு.நாகலிங்கம் குறிப் பிட்டுள்ளார். தாய்மாரின் சிந்தனைக் கோலங்கள் பிள்ளைகளைக் கல்வியின்பால் ஈர்த்துள்ள துடன் ஒருவகையான போட்டித் தன்மையையும் தாய்மார் மத்தியில் உருவாக்கியுள்ளது.

இதனுடைய பிரதிபலன் என்னவெனில் பிள்ளைகளின் கல்விசார் அடைவில் இருதலைமுறைகளுக்கிடையே கணிசமான அசைவு அல்லது பெயர்ச்சி ஏற்பட்டுள்ளது. அநேகமான பிள்ளைகள் ஆரம்பநிலையிலிருந்து இரண்டாம் நிலைக் கல்வியில் ஈடுபாடு காட்டி வருகின்றனர். தமது பிள்ளைகளைச் சிறந்த பாடசாலைகளில் கல்விபயிலச் செய்யவேண்டும் என்ற மனப்பாங்கு உருவாகியுள்ளது. பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதிலும் ஒருவகையான போட்டிநிலை தோன்றிவருகிறது. மேலும் புலம்பெயர்ந்து சென்று ஐரோப்பிய நாடுகளில் வாழ்வோர் தமது பிள்ளைகளின் கல்விசார்ந்த முன்னேற்றங்களை உறவினருடன் கலந்துரையாடுகின்றனர். இதன் காரணமாகவும் பெற்றோர் பலர் தூண்டுதல் பெற்றுள்ளனர். இத்தகைய உணர்வு பூர்வமான மாற்றங்களின் விளைவான பலாபலன்கள் படிப்படியாகக் கிடைத்து விடுகின்றன.

புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிகள் போர்க்காலச் சூழலில் சற்றுப் பின்னடைந்து காணப்பட்டாலும் இப்பொழுது மீண்டும் புத்துயிர்ப்படைந்துள்ளன. சான்றாக 2010 ஆம், 2011ஆம் ஆண்டுகளுக்கான இந்நிறுவனங்களின் வருடாந்த விழாக்களில் சமூக கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு முறையே 10 இலட்சம், 12 இலட்சம் ரூபா வரை செலவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிள்ளைகளுக்கான கல்வி உதவித்திட்டம் 2011 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலுள்ளது. 2011இல் மட்டும் 4.5 இலட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. அம்மாணவர்களுக்கு 2012ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் 3 இலட்சம் ரூபா வீதம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைவோர், க.பொ.த சாதாரண தரத்தில் விசேட சித்தியடைவோர் மற்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவோர் ஆகியோருக்கு புலமைப் பரிசில் நன்கொடை, சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்கள்.

கல்விசார் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கி வருடாந்தம் கௌரவிக்கப்படுகின்றார்கள். பல்கலைக்கழக இளமாணி, முதுமாணி பட்டம், கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம், தேசிய உயர் டிப்ளோமா பட்டம் ஆகியவற்றை பெற்றவர்களும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்கள்.

மாணவர் பாடசாலையை இடையில் விட்டு விலகுவதும், உரிய வயதில் பாடசாலைக் கல்வியை பெறாமல் இருப்பதும் இன்றைய கல்விப் பிரச்சினைகளுள் முக்கியமானவை. பத்தாம் தரத்திற்கு முன்னர் பாடசாலையை விட்டு இடையில் விலகும் மாணவரை சமாசமானது கண்காணிப்பதற்கான முயற்சிக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாகப் பொருளாதாரக் காரணங்களையிட்டு மாணவர்கள் பாதிக்கப்படுவார்களாக இருந்தால், அவர்களுக்கு வேண்டிய நிதியுதவியைச் செய்வதும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் செயற்பாடுகளில் ஒன்றாகும்.

சமாசத்தின் கல்விக் குறிக்கோள்களுள் ஒன்றான பட்டினி கிடந்தேனும் படிப்பை ஊக்குவிக்கும் பெற்றோரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். 2010இல் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளைப் பட்டதாரிகளாக உருவாக்கிய பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர். 2011இல் இதுபோன்று இரண்டு குடும்பங்கள் கௌரவம் பெற்றன. இவ்வாறு சாதனைபுரியும் குடும்பங்களைத் தொடர்ந்தும் கௌரவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெறுவது முக்கியமான விடயமாகும்.

நலிவுற்றுள்ள குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும், பெற்றோருக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும், கற்பித்தல் தேசிய டிப்ளோமா மாணவருக்கும் உயர் தேசிய டிப்ளோமா மாணவர்களுக்கும் நிதி வளத்திற்கேற்ப வருடாந்த நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இவை கல்வி மேம்பாட்டிற்கு பெரும் உந்து சக்தியாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

கல்வி நன்கொடையாளர்களையும் கௌரவித்துப் பாராட்டும் நிதியத்தின் செயற்பாடுகள் நல்ல பலனை அளித்து வருவதை அறிய முடிகிறது. 2010ம், 2011ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட நன்கொடைகளை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

ஆரம்பகாலத்தில் நிறுவிய மாவை பாரதி வாசிகசாலையும் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றமும் கல்வி மேம்பாட்டில் ஈடுபாடுகாட்டி வந்துள்ளது. அந்நிறுவனங்கள் முதியோர் கல்வித்திட்டம், இளைஞர் கல்வித்திட்டம் மற்றும் பாடசாலையிலிருந்து இடைவிலகியோருக்கான கல்வித் திட்டம் என்பவற்றை இணைந்த முறையில் நடைமுறைப்படுத்தி வந்துள்ளது. மேலும் வாசிப்பை ஊக்குவித்தல், விவாதப் போட்டிகள், கலந்துரையாடல் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் பொதுஅறிவுப் போட்டி ஆகியவற்றையும் நடத்தி வந்தது. இத்தகைய நிகழ்ச்சிகள் வாயிலாக சமூக மேம்பாடு குறித்து முன்னணியில் நின்று சேவையாற்றக்கூடிய பல தலைவர்கள் உருவாக்கப்பட்டனர் என்றும், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அவர்கள் சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி வருவதையும் அறியக்கூடியதாக உள்ளது. சமாசத்தின் செயற்பாடுகள் வலுவிழந்துவிடாமல் இருப்பதற்கும் பல்வேறு தலைவர்கள் தோன்றியுள்ளமை முக்கிய காரணமாக இருந்துள்ளது. இவ்வாறான அபிவிருத்திகளினூடாகவே மக்கள் சமூக சமத்துவக் கோட்பாடுகளை உணர்வு பூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும்

விளங்கிக்கொண்டு சமூக மாற்றம் ஒன்றிற்குத் தம்மை அர்ப்பணித்து வருகின்றனர் என திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் மனவெழுச்சியுடன் கூடியவாறு தெரிவிக்கின்றார்.

நிறுவனத்தின் நீண்டகாலச் செயற்பாடுகளை மொத்தமாகப் பார்க்கும்போது, சமூகஉரிமையையும் அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளையும் நிலைநாட்டுவதற்கு கல்வியில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பெரிதும் உதவியுள்ளன. ஒரு காலகட்டத்திலே படிப்பறிவின்மை, தலைமை தாங்கி வழிநடத்தும் ஆற்றலின்மை, செயற்படும் திறனின்மை முதலியவற்றைக் காரணமாகக் காட்டி இச்சமூகத்தினர் மீது மேலாதிக்கம் செலுத்த முற்பட்டன உயர் சமூகங்கள். இதனால் உள்ளூராட்சி மன்றங்களில்கூட தமது உரிமைகளைப் பாதுகாக்க முடியாத நிலையிலிருந்தது. ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது. கற்றதனால் உண்டான விழிப்புணர்வு சமூகத்தின் நிலைமைகளை நன்கு விளங்கிக் கொண்டு உரிமைக்காகப் போராடும் உணர்வினை உருவாக்கியதுடன், சாதகமான முறையில் சிந்தித்து தமக்கும் பிறர்க்கும் உதவும் வகையில் அரசியலைப் பயன்படுத்தும் இராசதந்திரத்தையும் வளர்த்துள்ளது.

இச்சமூகத்தின் அசைவியக்கத்தில் 1980 களின் பின்னர் பாரிய மாற்றங்கள் இடம்பெற்று வந்துள்ளன. மக்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வு மற்றவர்மீது தங்கியிருக்கும் நிலைமையைக் குறைத்துள்ளது. இவ்விடயத்தில் தொழிலமைப்பு முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவை. தொழில்நிலையங்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டமை, நவீன வசதிகளுடன் கூடிய தொழில்நிலையங்கள் திறக்கப்பட்டமை, மாற்றுத்தொழில்கள் பற்றிச் சிந்தித்தமை' வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்ததால் உண்டான பொருளாதாரப் பலம், அண்மைக்காலச் செல்நெறிகளுக்கு உகந்த தொடர்பாடல் தொழில்நுட்பம், ஆங்கிலமொழித் தேர்ச்சி ஆகியவற்றுக்கான தூண்டுதல் வழங்கப்படுதல் என்பவற்றின் விளைவாக புதிய தொழிற்துறைகளை நாடிச் செல்வதற்கான வழிகளும் திறக்கப்பட்டுள்ளன. இவையாவும் ஒன்று சேர்த்து சமூகத்திற்குப் புதிய இரத்தத்தைப் பாய்ச்சி வருகிறது.

திட்டமிட்ட கல்வி மேம்பாட்டுச் செயற்பாடுகளான வாழ்நாள் நீடித்த கருத்துப் புரட்சி முறை, கல்வி சாதனைகளுக்கான புலமைப் பரிசில் நன்கொடை வழங்கி கௌரவிக்கும் முறை, நலிவுற்ற குடும்பங்களின் பிள்ளைகளுக்கான வாழ்வாதார நிதியுதவி திட்டம், உயர் கல்விக்கான வருடாந்த கல்வி நன்கொடைத் திட்டம்,பட்டினியிலிருந்தும் தம் பிள்ளைகளைப் பட்டதாரிகளாக்குவதில் முன்னோடியாகச் செயற்பட்ட பெற்றோருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் திட்டம் போன்ற திட்டங்கள் நல்ல பலனை அளித்துள்ளது. ஐந்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்திக் கொண்ட வரலாறு பாரிய மாற்றத்திற்குள்ளாகியமை பாராட்டுக்குரியதாகும். இன்று பலதுறைகளிலும் உயர் கல்வித் தகைமை பெறுவோரின் எண்ணிக்கை வளர்ச்சி கண்டு வருவதையும் அதன் பேறாக உயர்பதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு அதிகரித்து வருவதையும் காணமுடிகிறது. இவை அனைத்தும் மாவை சமூக எழுச்சி இயக்கத்தின் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கம் அரசியல் வரலாற்றில் ஒரு முன்னோக்கிய பாய்ச்சல்

எஸ்.வன்னியகுலம்
முன்னைநாள் பணிப்பாளர்
இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சி,
தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு
முன்னாள் தகவல், கல்வி, தொடர்பாடல் நிபுணத்துவ ஆலோசகர்
வடக்கு கிழக்கு வீடமைப்பு, மீள்நிர்மாணத் திட்டம்.

ஒரு நாட்டின் நல்லாட்சி, அங்கு வாழும் மக்களின் நலன்கள், சிறுபான்மை இனங்கள் மற்றும் சமூகங்களின் தனித்தன்மை, கல்வி பொருளாதார உத்தரவாதம் போன்ற அனைத்து அம்சங்களிலும் அந்நாட்டின் அரசியல் சாசனம் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. ஒவ்வொரு தனிமனிதனதும் பேச்சு,எழுத்து,கருத்தாடல் போன்ற அடிப்படைச் சுதந்திரங்கள் கூட அந்நாட்டின் அரசியல் சாசனத்தால் பாதுகாக்கப்படுகின்றது.எனவேதான் ஒரு நாட்டின் நல்லாட்சியைத் தீர்மானிப்பது அந்நாட்டின் அரசியல் சாசனமே எனக் குறிப்பிடுவர் அரச அறிவியலாளர்.

பன்னூற்றுக் கணக்கான இனங்களும் சமூகங்களும் வாழுகின்ற மிகப் பெரிய நாடுகளிலே அமைதியான ஆட்சியும் வேகமான பொருளாதார சமூக முன்பாய்ச்சலும் நிகழ்ந்துவருவதனை அவதானிக்க முடியும். அதேவேளை மிகச் சில இனங்களும் சமூகங்களும் வாழும் மிகச் சிறு நாடுகளிலே இடையறாத பிணக்குகளும் போராட்டங்களும் புரட்சிகளும் இடம்பெற்று வருவதனை அவதானிக்கலாம். மிகப் பெரிய நாடுகளில் சிறுபான்மை இனங்கள் மற்றும் சமூகங்களின் நலன்களை அரசியல் சாசன ரீதியாகப் பேணிப் பாதுகாக்க முயல்கின்றன.சிறிய நாடுகளிலே ஜனநாயகம் என்ற போர்வையில் காலத்துக்குக் காலம் சிறுபான்மை இனங்கள் மற்றும் சமூகங்களின் நலன்களும் உரிமைகளும் சூறையாடப்பட்டு வருகின்றமை அந்நாடுகளில் இரத்தக் களரி ஏற்படுவதற்கான காரணமாகும். சிங்கப்பூர் போன்ற சிறிய நாடுகளில் அமைதியான துரிதமான அரசியல் மற்றும் சமூக பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு வருவதற்கு, சிறுபான்மை இனங்களின் உரிமைகள் அரசியல் சாசன ரீதியாகப் பாதுகாக்கப்பட்டுள்ளமையே காரணமெனலாம்.

ஜனநாயகம் என்ற போர்வையிலே பலநாடுகள் சிறுபான்மை இனம் மற்றும் சமூகங்களின் உரிமைகளைச் சூறையாடி வருவதனாலேயே அந்நாடுகளில் அமைதியின்மை உருவாகின்றது. 'பெரும்பான்மை ஆட்சி' என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த ஆட்சி அமைப்புக்களின் உயிர்வாழ்தலுக்கு சிறுபான்மை இனங்களதும் சமூகங்களதும் உரிமைகள் பலியாக்கப்படுகின்றமை தவிர்க்கமுடியாத ஓர் அரசியல் நிர்ப்பந்தமாக மாறிவிடுகின்றது. தலைகளின் எண்ணிக்கையைக் கொண்டு சிறுபான்மையினரின் உரிமைகளை அடகுவைக்கும் இந்த ஜனநாயக ஆட்சி முறையைக் கருத்திற்கொண்டே 'ஜனநாயகம்

என்பது பெரும்பான்மை முட்டாள்களின் ஆட்சி' என பெரியார் ஹன்டி பேரின்பநாயகம் குறிப்பிட்டுள்ளமை நினைவிற்கு வருகின்றது. பெரும்பான்மை இனங்களின் மத்தியில் ஆளும்வர்க்கம் தனது அரசியல் இருப்பை ஸ்திரப்படுத்துவதற்காகச் சிறுபான்மையினரின் நலன்களைச் சூறையாடும் ஜனநாயக முறைமையே இன்று பல நாடுகளில் அமைதியின்மை ஏற்படுவதற்குக் காரணமாகும்.

பல்வேறு நாடுகள் ஏகாதிபத்திய ஆட்சிப்பிடியிலிருந்து சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் அரசியல் சாசன ரீதியாக அங்கு வாழும் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளைச் செய்துள்ளன. குறிப்பாக இந்திய சுதந்திரப் போராட்டம் நிகழ்ந்த அதேகாலப்பகுதியில் அங்கு வாழுகின்ற ஆயிரக்கணக்கான சமூகங்களின் நலன்களை அரசியல் சாசனரீதியாக வரையறுப்பதற்கான போராட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தொலைநோக்குடன் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய போராட்டங்களின் விளைவாக அரசியல் சாசன ரீதியாக சிறுபான்மையினரின் நலன்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. சிறுபான்மையினரின் நலன்கள் கேள்விக்குள்ளாகும் போது இந்த அரசியல் யாப்புகளும் சட்டங்களும் அவர்களின் பாதுகாப்பு அரண்களாகத் திகழ்கின்றன. சிறுபான்மை இனங்கள் மற்றும் சமூகங்களின் பாதுகாப்பை அரசியல் சாசன ரீதியாக உறுதிப்படுத்தியுள்ளமையினாலேயே இந்தியா இன்று ஒரு பிராந்திய பொருளாதார, இராணுவ வல்லரசாக பரிணமிக்கின்றது. இல்லாவிடின் இன்று அது ஓர் அடிமை வியாபார நாடாகவே திகழ்ந்திருக்கும்.

டாக்டர் அம்பேத்கரும் தாழ்த்தப்பட்டோர் உரிமைப் போராட்டமும்

இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் பல்வேறு தலைவர்கள் பல்வேறு தத்துவங்களினடிப்படையில் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.மகாகவி பாரதி தனது பாட்டு மற்றும் எழுத்துத் திறத்தாலே உறங்கிக் கிடந்த இந்திய சமூகத்தை விழிப்படையச் செய்தார். மகாத்மா காந்தி அகிம்சைப் போராட்டத்தின் மூலம் இந்திய சமூகங்களை வெள்ளையருக்கெதிராக அணிதிரட்டினார். சுபாஸ் சந்திரபோஸ் இராணுவ ரீதியாக ஆங்கிலேய ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவர முயற்சித்தார். டாக்டர் அம்பேத்கர் ஏககாலத்திலே அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், இந்துமத வர்ணாசிரமதர்மக் கோட்பாட்டினடிப் படையிலே வேர்பாய்ச்சி நிற்கும் தீண்டாமை மற்றும் சாதி ஒடுக்கு முறைகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டினார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது டாக்டர் அம்பேத்கர் மிகத் தீவிரமான வைராக்கியத்துடன் செயற்பட்டார். தீண்டத் தகாத (பறையர்) குலத்தில் பிறந்த அவர் தீண்டாமையின் அனைத்துக் கொடுமைகளுக்கும் ஆளானவர். அடிமை விலங்குகளாக நடத்தப்பட்ட தீண்டப்படாத ஒரு சமூகத்திலிருந்து உருவான அம்பேத்கர் இந்திய அரசியல் யாப்பின் சிற்பியாக விளங்கினாரென்பது மிகப்பெரும் வரலாற்றுப் புதுமையாகும். இன்றுவரை வெற்றி கொள்ளப்பட முடியாத பிராமணிய அடக்கு முறைகளின் மத்தியில் தீண்டத்தகாத சமூகத்திலிருந்து ஒரு தேசியத் தலைவன் தோன்றினான், அவன் இந்திய சமூகங்கள் அனைத்திற்குமே ஒரு விடிவெள்ளியாகத் திகழ்ந்தான் என்பது மிகுந்த வியப்பைத் தரும் விடயமாகும்.

அம்பேத்கர் ஆற்றிய மிகப்பெரும் பணி,இந்திய அரசியல் யாப்பை உருவாக்கியமை மட்டுமன்று, சுதந்திரப் போராட்டக் காலத்தின் போதும் அதன் முன்னரும் அடிமைகளாக நடத்தப்பட்ட பத்துக்கோடி தாழ்த்தப்பட்ட மற்றும் தீண்டப்படாத வகுப்பினரின் உரிமைகளை அரசியல் யாப்பு ரீதியாக வரையறுத்தமையேயாகும்.

'இந்துமதப் பற்று உள்ளவரை உங்கள் அடிமைச் சங்கிலிகளை உடைப்பதோ, வறுமையைப் போக்குவதோ இயலாது... உண்ணா நோன்பு, தொழுதல், யாத்திரை முதலியவற்றை விட்டொழியுங்கள். உங்கள் கவனத்தைச் சட்டம் இயற்றும் உரிமைகளைப் பெறுவதில் செலுத்துங்கள். ஏனெனில் சட்டம்தான் எல்லா உலக இன்பத்திற்கும் இருப்பிடமாகும்' எனத் தாழ்த்தப்பட்ட மக்களை நோக்கி அறைகூவல் விடுத்தார்.

''அம்பேத்கர் (தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி முன்னேற்றத்திற்காக) சித்தார்த்தா கல்லூரியைத் தாபித்தார். கல்வி மட்டும் இருந்தால் போதாது அரசியல் உரிமைகளுடன் அவர்கள் திகழ்ந்தால்தான், சமுதாயம் முன்னேற வாய்ப்பு உண்டு என்பதைத் தெளிவாகப் பார்த்து, அரசியல் அமைப்பு சட்டத்திலேயே இந்த உரிமையை இடம்பெறச் செய்தார்" என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான A.S.K குறிப்பிடுகின்றார்.

மகாத்மா காந்தியும் டாக்டர் அம்பேத்கரும்

இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் தேசபிதா மகாத்மா காந்திக்கும் டாக்டர் அம்பேத்கருக்கும் இடையே மிகப் பகிரங்கமான கருத்து மோதல்கள் இடம்பெற்றுவந்தன. இந்தியா அந்நியராட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது இந்துமதமும் அதன் புனிதத்துவமும் பேணப்பட வேண்டுமென்றார் மகாத்மா காந்தி. டாக்டர் அம்பேத்கரோ இந்தியா சுதந்திரம் பெறும் அதே வேளை தீண்டப்படாத அல்லது தாழ்த்தப்பட்ட சமூகங்களின் உரிமைகள் அரசியல் யாப்பிலே உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார். இந்து மேலாதிக்கம் உள்ளவரை தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் உரிமைகளும் கானல் நீரே எனக் கருதினார் அம்பேத்கர். சாத்வீகமான இந்திய போராட்டத்தில் இந்தியா இரண்டு பெரும் அணிகளாகப் பிளவுண்டு கிடந்தது.

1932ஆம் ஆண்டளவில் பிரிட்டிஷ் பிரதமர் வகுப்புத் தீர்ப்பு (Communal Award) என்றொரு முன்மொழிவைச் சமர்ப்பித்தார். இது எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போலானது. இந்த வகுப்புத் தீர்ப்பு முஸ்லிம்கள், சீக்கியர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஐரோப்பியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகியோருக்குத் தனித் தொகுதிகளை (Separate Electroates) உருவாக்கிற்று. இதற்கு எதிராக இந்திய உபகண்டமே கொதித்து எழுந்தது என்பர் A.S.K.

பிரிட்டிஷ் பிரதமரின் பிரகடனத்தையொட்டி எழுந்த அமைதியின்மையை அடக்குவதற்காக மகாத்மா காந்தி கைதுசெய்யப்பட்டு ஏரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். அங்கிருந்தபடியே தமது முடிவை மகாத்மா காந்தி பிரித்தானிய அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தினார். ஜாதி இந்துக்களிலிருந்து தீண்டப்படாத இந்துக்களைப் பிரித்தால் தன்னுயிரையும் அர்ப்பணம் செய்வதாக எச்சரித்தார். தீண்டத் தகாதவர்களுக்கு தனித் தொகுதிகள் என்று பிரித்தானிய

அரசாங்கம் வெளியிட்டதும் அதை இரத்துச் செய்யாவிடின் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தார்.

1932ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் திகதி மகாத்மா காந்தி ஏரவாடா சிறையில் சாகும்வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். இந்திய உபகண்டமே மகாத்மா காந்தியின் பின்னால் அணிதிரண்டது. முழு இந்தியாவுமே மகாத்மா காந்தியின் உயிரைக் காப்பாற்றுமாறு அம்பேத்கரை யாசித்து நின்றது. அம்பேத்கர் தமது கொள்கையை விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. தமது பக்க நியாயங்களை அவர் பகிரங்கப்படுத்தினார்.

''தனித் தொகுதிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் அளிக்கப்படவில்லை. இந்திய கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், ஐரோப்பியர்கள், முகம்மதியர்கள், சீக்கியர்கள் ஆகியோருக்கும் தனித் தொகுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அவ்வாறிருக்க, இன்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தவிர, மற்றுமுள்ளவர்கள் அனைவருக்கும் தனித்தொகுதிகள் வழங்குவதை எதிர்க்கவில்லை.... தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித்தொகுதிகள் கொடுப்பதால் இந்துமதம் துண்டிக்கப்பட்டுவிடும் என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது'' என வாதிட்டார்.

''மகாத்மாவே உங்களுக்கு இந்துமதம் வேண்டுமா, அரசியல் அதிகாரம் வேண்டுமா என்று தாழ்த்தப்பட்ட வகுப்பினரைக் கேட்டால் அரசியல் அதிகாரம் தான் வேண்டும் என்று சொல்லுவார்கள் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை.... அவர் உண்ணா நோன்பின் மூலம் ஜாதி இந்துக்களின் வெறியைத் தூண்டி அவர்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் இடையே பெரியதோர் மடுவை, அகழியை ஏற்படுத்துவாரென நான் அச்சப்படுகிறேன். இதை அவர் சாந்தமாகப் பார்க்க வேண்டும். வட்டமேசை மகாநாட்டில் நான் மகாத்மா காந்தியை எதிர்த்தபோது இந்த நாட்டுத் தேசியப் பத்திரிகைகள் அனைத்தும் எனக்குத் தேசத் துரோகி என்ற பட்டத்தைச் சூட்டின.நான் விட்ட அறிக்கை எதுவும் பிரசுரிக்கப்படவில்லை. நடைபெறாத கூட்டங்களைப் பற்றிச் சொல்லி, நான் பேசாத சொற்பொழிவுகளையும், சொல்லாத கருத்துக்களையும் இஷ்டம்போல் பிரசுரித்தன. தாழ்த்தப்பட்டோரிடையே பிளவு ஏற்படுத்த பணம் ஏராளமாகச் செலவு செய்யப்பட்டது. இங்கும் அங்கும் மோதல்களும் கொண்டுவரப்பட்டன. இவை அனைத்தும் பெரிய அளவில் நடைபெறாமலிருக்க வேண்டும் என்றால் அவர் உண்ணாவிரதம் என்ற முடிவை பரிசீலித்துப் பார்க்க வேண்டும். அவர் உண்ணாவிரதத்தை கைவிடவில்லை என்றால் நான் மேற்கூறியவை அனைத்தும் அசுர முறையில் நடைபெறும் என்பதில் சந்தேகம் இல்லை'' என மகாத்மா காந்திக்கு விளக்கம் தந்தார்.

வெகுஜன ஊடகங்கள் மகாத்மா காந்தியை நியாயப்படுத்தின. அம்பேத்கரை இருட்டடிப்புச் செய்தன. வெகுஜன அபிப்பிராயம் தீவிரமான முறையில் அம்பேத்கருக்கு எதிராக உருவாக்கப்பட்டது.

மகாத்மா காந்தியின் உயிர் காப்பாற்றப்பட வேண்டியதன் அவசியத்தை அம்பேத்கர் உணர்ந்தார். மகாத்மா காந்தியை அவர் சந்தித்தார். இறுதியில் பூனா ஒப்பந்தத்தின் மூலம் இந்தப் பிணக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. 1935ஆம் ஆண்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட இந்திய அரசுச் சட்டம் 1935 (Government of India Act 1935) மூலம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் தனித்தொகுதிகள் உறுதிப்படுத்தப்பட்டன.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் உரிமைகளைச் சட்டரீதியாக உறுதிப்படுத்த வேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்காக அம்பேத்கர் செய்த தியாகங்கள் மிகப்பல.அவரது போராட்ட வழிமுறைகள் மிக நுணுக்கமானவை.

1. தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஓரணியின் கீழ் ஒன்றுதிரட்டினார். அவர்களை அணி திரட்டுவதற்காகப் பல மகாநாடுகள்,கூட்டங்கள், அகிம்சைப் போராட்டங்களை முன்னின்று நடத்தனார்.

2. தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளை நியாயப்படுத்துவதற்காக தாழ்த்தப்படாத உயர்ஜாதி இந்துக்களின் நல்லெண்ணத்தை திரட்டினார்.

3. இந்திய சமூக அமைப்பிற்குப் பரிச்சயமில்லாத பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தினருக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதன் நியாயப்பாட்டை தெளிவுபடுத்தினார்.

4. பிரச்சனையின் மூலாதாரமான இந்துமதத்தின் பலவீனங்களைத் தெளிவுப்படுத்தினார். இந்துப் பண்பாட்டுக்குச் சவாலாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எதிர்காலத்தில் தேர்ந்தெடுக்க வேண்டிய திசைவழியையும் அவர் தெளிவுபடுத்தினார்.

டாக்டர் அம்பேத்கர் முன்னெடுத்த போராட்ட வழிமுறைகள் பற்றி இங்கு சுட்டிக்காட்டியமைக்கு பல காரணங்கள் உள்ளன. இலங்கை சுதந்திரமடைந்த போதும் அதன் பின்னரும் சிறுபான்மை இனம் மற்றும் சமூகம் போன்றவற்றின் உரிமைகளுக்காகப் போராடும் ஓர் அரசியல் தலைமைத்துவத்தை இலங்கையில் கொண்டிருக்கவில்லை. சிறுபான்மை இனங்களையும் சமூகங்களையும் பாதுகாப்பதற்காக பிரித்தானியரால் முன்வைக்கப்பட்ட சட்டங்கள் இலங்கைப் பாராளுமன்றத்தால் அகற்றப்பட்ட போது தமிழ் தலைவர்கள் தங்கள் பாராளுமன்றக் கதிரைகளைப் பாதுகாத்துக் கொண்டனரே தவிர சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளுக்காக எந்தவொரு தியாகத்தையும் அவர்கள் செய்யத் தயாராக இருக்கவில்லை. மாறாக அவர்கள் ஆளும் அதிகார வர்க்கத்தின் உறுதியான ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்தவே உரமாகிப் போயினர். சிறுபான்மையினரின் உரிமைகள் சட்டபூர்வமாக வரையறுக்கப்படும்வரை இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடுவது தவிர்க்கமுடியாததாகும். இந்த உண்மையை தூங்குவதுபோல் பாசாங்கு செய்யும் அரசியல் வாதிகளை விட தூங்கமுடியாது தவிக்கும் சிறுபான்மையினர் புரிந்துகொள்ள வேண்டும்.

வழி பிறந்தது

சிறுபான்மையினரின் உரிமைகள் அரசியல் சாசனத்தில் சட்டபூர்வமாக உறுதிப்படுத்த முடியாது போனவிடத்து எடுக்கவேண்டிய மாற்று நடவடிக்கைகள் பற்றி நோக்குவது பயனுடையதாகும்.

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குச் சட்டரீதியான ஏற்பாடுகள் ஏதும் இல்லாத விடத்து சமூக ரீதியாக அதனைப் பாதுகாப்பது சமூகத்தலைவர்களின் பொறுப்பாகும். எம்மால் எதுவும் முடியாதென வாழவிருப்பது சிறுபான்மையினரின் அழிவிற்கே வழிவகுக்கும்.

இலங்கையில் தாழ்த்தப்பட்ட மக்களின் தொழில் மற்றும் பொருளாதார நன்மை கருதி பனை அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டது. இது அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சரின் கீழ் செயற்படும் ஓர் அமைப்பாகும். சபையின் உறுப்பினர்கள் பிற்பட்ட வகுப்பினரெயெனினும் அதிகாரம் அமைச்சரிடமே குவிந்திருந்தது. அமைச்சர் உயர் சாதி இந்துவாக இருப்பரென்பது எழுதா விதியாகும்.

இந்தச் சபையின் கீழ் திக்கம் சாராய வடிசாலை செயற்பட்டு வந்தது. கள்ளிறக்கும் தொழிலாளர்கள் அர்ப்பணிப்புடன் உழைத்தார்கள். பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாக வும் அவர்களின் அந்தஸ்த்து உயர்வடைந்து வந்தது. வடிசாலையின் சேமிப்பு (இலாபம்) நாள்தோறும் அதிகரித்து வந்தது. தமது சொந்த நலன்களை வளர்த்துக் கொள்வதற்காக அதிகாரிகள் சிலர் இந்த விடயத்தை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

அமைச்சரின் ஆணைப்படி வடிசாலையின் சேமிப்புகள் மீளப்பெறப்பட்டு அந்நிதியிலிருந்து முச்சக்கரவண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டு பிரசித்தமான இந்து ஆலயங்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன. மரமேறி, கள்ளிறக்கி வியர்வை சிந்தி உழைத்துச் சேமித்த பணம் ஆடம்பரமான கோவில்களுக்கு முச்சக்கரவண்டிகள் வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. இலங்கை அரசாங்க திணைக்களங்களும் அதன் கீழுள்ள அமைப்புகளும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இந்த லட்சணத்திலேயே சேவையாற்றி வருகின்றன என்பதற்கு இதைவிட வேறு சான்றேதும் தேவையில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக மூன்று சந்தர்ப்பங்களில் அவர்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களும் பாராளுமன்றக் கதிரைகளைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டதுடன் தமது மக்களை மறந்தனர். தங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப நலன்களையே பாதுகாத்தனர். பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினூடாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தம்மால் எதுவும் செய்ய முடியவில்லை செய்ய இடந்தரப்படவில்லை என நீலிக் கண்ணீர் வடித்தனர்.

எனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எஞ்சியிருந்த ஒரே ஒரு வழி தம்மை ஒருங்கிணைப்பதும் தங்கள் நலன்களைத் தாங்களே தீர்மானித்து செயற்படுவதுமாக இருந்தது. இந்த வழிமுறையினைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அறிமுகப்படுத்திய பெருந்தகையாக திரு. ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களைக் குறிப்பிடலாம்.

ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் ஆற்றல் மிகு தலைமைத்துவம்

சமூகத்தில் ஏனையோருடன் சேர்ந்து உழைக்கும் மனோநிலை கொண்டவர்களே சிறந்த தலைமைத்துவ ஆற்றலைப் பெறுகின்றனர். அவர்களே சிறந்த தலைவர்களாகவும் நிர்வாகிகளாகவும் விளங்குகின்றனர். திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களும் சேர்ந்து செயற்படுவதில் ஆர்வம் மிக்கவர். மக்களை ஒருங்கிணைப்பதிலும் அறிவூட்டுவதிலும் ஆற்றுப்படுத்துவதிலும் ஆர்வம் கொண்டவர்.

இவரது 19ஆவது வயதிலே இவரது கிராமத்தில் பாரதி வாசிகசாலை உருவாக்கப்படுகின்றது. தமது 19 ஆவது வயதிலேயே சமூக நிறுவனம் ஒன்றினைத் தாபித்துத் தலைமை தாங்கி நடத்தும் வல்லமையும் துடிப்பும் மிக்கவராக அவர் விளங்கினார். இவரது முயற்சியினாலே 1971 ஆம் ஆண்டில் பாரதி வாசிகசாலை, பாரதி மறுமலர்ச்சி மன்றமாக பெயர் மாற்றம் பெறுகிறது. 1972ஆம் ஆண்டிலே மாவை சனசமூக நிலையம் தாபிக்கப்படுகின்றது. 1980ஆம் ஆண்டிலே மாவையிலே சமூக எழுச்சி இயக்கம் உருவாக்கப்படுகிறது. இவை யாவற்றையும் தாபிப்பதற்கும் தலைமைதாங்கி வழிநடத்துவதற்கும் ஆர்.எம்.என். அரும்பாடுபட்டார்.

தமது கிராம நிறுவனங்களில் தலைமைப் பதவி வகித்த ஆர்.எம்.என். கண்டியில் அமைந்துள்ள பொல்கொல்ல கூட்டுறவுக் கல்லூரியில் கல்விகற்கும் வாய்ப்புப் பெறுகிறார். இங்கு கல்விகற்ற காலத்திலே தமிழ், சிங்கள,முஸ்லிம் மாணவர்களுடன் இணைந்து தேசிய மட்டத்தில் செயற்பட ஆரம்பிக்கின்றார். 1960 ஆம் ஆண்டிலே கூட்டுறவுப் பரிசோதகராக அரச சேவையில் இணைந்த இவர் தமது மிகப் பரந்த சிந்தனை மற்றும் செயற்பாடுகள் காரணமாக கல்லூரி விரிவுரையாளராக உயர்வுபெறுகின்றார்.

நான் அறிந்தவரையிலே ஒருகாலத்தில் திரு.ஆர்.எம்.என் கூட்டுறவுத் திணைக்களத்தின் உயிர்நாடியாகத் திகழ்ந்தார். இத்தகைய பரந்து விரிந்த அனுபவங்கள் எல்லோருக்கும் சித்திக்கும் ஒன்றன்று.

திரு.ஆர்.எம்.என். ஒப்புரவு ஒழுகும் பண்புமிக்கவர். எவருடனும் இணக்கமாகப் பழகும் மனத்துணிவு மிக்கவர். ஒடுக்கப்படும் தமது மக்களின் உயர்விற்காக அயராது உழைத்தார். அவர்களை அடக்குமுறை மற்றும் சுரண்டலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக பல திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்.

தான் உருவாக்கிய சமூக எழுச்சி இயக்கம் செயற்றிறனுடனும், நிலைபேறுடனும் செயற்பட வேண்டுமாயின் அது சட்டபூர்வமான அந்தஸ்தைப் பெறவேண்டுமென மனதில் உறுதி கொண்டார். அதற்காக தமிழ் அரசியல் தலைவர்களின் ஆக்கபூர்வமான ஒத்தாசையைப் பெற்றுக்கொண்டார். குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் நன்மைக்காக பாராளுமன்றத்திலே ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதென்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆனால் ஆர்.எம்.என் அதனைச் சாதித்தார். 1999 ஆம் ஆண்டிலே "Board of Directors of the Rehabillitation and Education Development fund (Incorporration) Act No. 52of 1999 என்ற சட்டம் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

1935 ஆம் ஆண்டிலே மிகக் கடுமையான எதிர்ப்புகளின் மத்தியிலே டாக்டர் அம்பேத்கர் பிற்பட்ட வகுப்பினரின் நலன் காக்கும் சட்டத்தினை இந்திய அரசியல் யாப்பிலே கொண்டு வந்தார். 1999 ஆம் ஆண்டிலே எந்தவித எதிர்ப்புமின்றி உயர்சாதி அரசியல் தலைவர்களின் ஒத்துழைப்புடன் இலங்கைப் பாராளுமன்றத்திலே தமது சமூக மக்களின் நலன்காப்பதற்கான சட்டத்தை ஆர்.எம்.என் கொண்டுவந்தார்.

டாக்டர் அம்பேத்கரின் முயற்சியுடன் திரு.ஆர்.எம்.என் அவர்களின் முயற்சியை ஒப்பிட முடியாததெனினும் தமது சமூகம் சார் உரிமைகளைச் சட்டபூர்வமாக்கவேண்டும் எனச் சிந்தித்தமை மிகப் பெரும் விடயமே ஆகும்.

1999 ஆம் ஆண்டிலே இயற்றப்பட்ட சட்டமானது இவர்களது சமூக எழுச்சி இயக்கத்திற்கும் அதன் நிதியத்திற்கும் ஒரு பாதுகாப்பு அரணாக விளங்குகின்றது. இந்த இயக்கம் மிகப் பலம்பொருந்திய ஓர் இயக்கமாக இன்று விளங்குகின்றது. அதன் செயற்பாடுகள் பரந்து விரிந்துள்ளன.

அ. பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிற்கான மாதாந்த நிதிஉதவி

ஆ. கல்வியியல் கல்லூரி டிப்ளோமா பட்டப் படிப்பிற்கான மாதாந்த நிதியுதவி.

இ. தொழில் நுட்பக் கல்லூரிப் படிப்பிற்கான நிதி உதவி.

ஈ. க.பொ.த. (உ.த) கல்விக்கான மாதாந்த நிதி உதவி.

உ. க.பொ.த (சா.த) கல்விக்கான மாதாந்த நிதி உதவி.

ஊ. க.பொ.த. (உ.த) சிறந்த பெறுபேற்றுக்கான புலமைப்பரிசில் நன்கொடை.

எ. க.பொ.த (சா.த) சிறந்த பெறுபேற்றுக்கான புலமைப்பரிசில் நன்கொடை.

ஏ. 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றமைக்கான நன்கொடை.

ஐ. ஞாபகார்த்த புலமைப்பரிசில் நன்கொடைகள்.

ஒ. ஆதரவற்ற தாய், தந்தை,ஊனமுற்றோருக்கான மாதாந்த நிதி உதவி.

ஓ. இடம் பெயர்ந்தோருக்கான நிதி உதவி.

ஔ. சுனாமி மற்றும் வன்னியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர உதவி என இவர்களின் சேவை மிகப் பரந்துபட்டுச் செல்கின்றது.மாவையில் தோன்றிய மிகச் சிறிய நிறுவனம் இன்று ரூபா 5441,692/= ஐ தனது சொத்தாகக் கொண்டுள்ளமை மிகப் பெரிய சாதனையாகும்.

எனது கணிப்பீடு

2000 ஆம் ஆண்டிலே, புனர்வாழ்வு, கல்வி, அபிவிருத்தி நிதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமையை கொண்டாடும் வகையில், இவர்களது சமூக எழுச்சி இயக்கம் வெள்ளவத்தை, இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஒரு விழாவினை ஏற்பாடு செய்திருந்தது. அக்காலப்பகுதியில் நான் இலங்கை ரூபவாகினி தொலைக்காட்சி தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு மற்றும் செய்திப் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றினேன்.அந்த விழாவிலே நானும் உரையாற்ற வேண்டுமென அழைக்கப்பட்டிருந்தேன்.

ஏதோ ஒரு சிறிய விழாவாக இருக்கும் என நினைத்துச் சென்ற எனக்கு பேரதிர்ச்சியாக இருந்தது. விழா மண்டபம் நிறைந்து வழிந்தது. மண்டபத்திலிருந்தவர்களை விட பெருமளவு மக்கள் மண்டபத்தின் வெளியே காணப்பட்டனர். மண்டபத்தின் உள்ளே நுழைந்ததும் அந்த விழா எத்துணை பெரியது, பெறுமதியானது என்பதைப் புரிந்துகொண்டேன். அப்பொழுது தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருபத்திரண்டு பேரைக் கொண்ட பலமான அரசியல் கட்சியாக விளங்கியது. அந்த இருபத்திரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் மேடையில் வீற்றிருந்தனர்.

ஆர்.எம்.என் எத்தனை பலம்பொருந்தியவர், அவர் உருவாக்கிய சமூக எழுச்சி இயக்கம் எத்துணை ஆற்றல் மிக்கது என்பதனை உணர்ந்து பிரமிப்புற்றேன். அரசியல்வாதிகளின் பின்னால் மக்கள் அலைந்து திரியும் கலாசாரத்தை, அரசியல் தலைவர்கள் மக்களைத் தேடிவரும் கலாசாரமாக ஆர்.எம்.என் மாற்றியமைத்தமை கண்டு புளகாங்கிதமடைந்தேன்.

இந்த விழாவிலே நான் உரையாற்றும்போது தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவது பற்றி மிக வெளிப்படையாகப் பேசினேன். திரு.T.இராசலிங்கம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பின்னர் (1983ன் பின்னர்) கடந்த பதினைந்து வருடங்களாக தாழ்த்தப்பட்ட வகுப்பில் இருந்து எவரும் பாராளுமன்றப் பிரதிநிதியாக வருவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. சிங்கள ஆட்சியாளரிடம் இருந்து தமிழினம் சுதந்திரம் பெறுவதன் முன்னதாக தமிழ் உயர்சாதி மக்களிடமிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் சுதந்திரம் பெறவேண்டும் எனக் காட்டமாகவே கருத்துத் தெரிவித்தேன்.

எனக்குப் பின்னர் பேசிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.வீ.ஆனந்தசங்கரி உரையாற்றுகையில் நக்கலாகச் சிரித்துக்கொண்டே 'அடுத்த தேர்தலில் தம்பி வன்னியகுலம் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக நிச்சயமாக தெரிவு செய்யப்படுவார்' என்று.

இறுதியாக ஒரு விடயத்தை, இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கம், சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் மற்றும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் செயற்பாட்டு எல்லை மிகப் பரந்துபட்டதாகும். அதன் செயற்பாட்டு எல்லையைக் குறித்த ஒரு சமூகத்தின் எழுச்சிக்காக மட்டுப்படுத்தாது தாழ்த்தப்பட்ட அல்லது சமூக பொருளாதார நிலையில் மிகப் பின்தங்கிய அனைத்துச் சமூகங்களுக்காகவும் விரிவுபடுத்த வேண்டும். இது முற்றிலும் சாத்தியப்படக் கூடிய ஒன்றே. ஏனெனில் ஆர்.எம்.என் இடம் அதனை வழிநடத்துவதற்கான உறுதிமிக்க தலைமைத்துவம் உள்ளது. அதனைவிட செயற்றிறன் மிக்க துடிப்புடன் கூடிய ஆளணி அவர்வசம் உள்ளது. ஆர்.எம்.என் தலையசைத்தால் இலட்சக்கணக்கில் நிதி உதவி செய்வதற்கு மக்கள் தயாராக உள்ளனர். அந்த முயற்சியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எல்லாம் வல்ல இறைவன் ஆர்.எம்.என் அவர்களுக்கு துணையாக நிற்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

சமூக மேம்பாடும், நிறுவனப் பாங்கான கட்டமைப்பின் முக்கியத்துவமும்

பேராசிரியர், சோ.சந்திரசேகரம்
முன்னாள் கல்வி பீடாதிபதி
கொழும்புப் பல்கலைக் கழகம்

உலகளாவிய ரீதியில் வரலாற்றினோட்டத்தில் ஏற்பட்டு வந்த சமூக மேம்பாடு, முன்னேற்றம் என்பனவற்றுக்கு நிறுவனப் பாங்கான கட்டமைப்பு வளர்ச்சிகளே காரணமாக இருந்தன. இலாபநோக்குடன் செயற்படும் தனியார்களும், குழுக்களும் மட்டுமன்றி, மக்கள் சேவைக்காகவும், மேம்பாட்டுக்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும் தனியாட்களும், குழுக்களும் நிறுவனப் பாங்கான கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். உயர்தரமான அர்ப்பணிப்பு உணர்வும், தியாக மனப்பான்மையும், அறிவும், விவேகமும், ஆற்றலும் மிக்க தனியாட்களும், சமூக மேம்பாடு நோக்கிய பங்களிப்பை நிறுவனங்களினூடாகவே செய்து வந்துள்ளனர். பல தனியாட்களினதும், குழுக்களினதும் ஆற்றலை ஒன்றிணைத்து வகுத்துக் கொண்ட நோக்கங்களை அடையவே நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன.

நவீனயுகத்தில் தோன்றிய நவீன நிறுவனங்கள் மாற்றத்திற்கான முகவர்களாக விளங்கி வந்துள்ளன. பாடசாலைகள் கல்வித்துறை மாற்றங்களை ஏற்படுத்திய நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் உயர்கல்வியில் மாற்றம் கண்ட நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், அரசியல்கட்சிகள் போன்றனவும் தொழிலாளர் மற்றும் மக்கள் வாழ்க்கை மேம்பாட்டுக்காக தனிமனிதர்களாலும் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் காலங்காலமாக இருந்துவரும் குடும்பங்களும், சமுதாயங்களும் கூட இவ்வாறான நிறுவனம் என்னும் வகைப்பாட்டிற்குள் அடங்குவன. திருமணமும் கூட ஒரு வகையில் ஒரு சமூக நிறுவனமாகவே வரையறை செய்யப்பட்டது. ஆனால் பாரம்பரிய நிறுவனங்கள் இதுவரைகாலமும் மனிதனால் அடைந்து கொள்ளப்பட்ட பண்பாடு, மொழி மற்றும் விழுமியங்களை பேணிப்பாதுகாக்கும் பணியை ஆற்றுவதற்கான அமைப்புகள். உறுதிப்பாட்டையும், ஸ்திரத்தன்மையையும் பேணுவதே அவற்றின் தொழிற்பாடு. எல்லாச் சமூகங்களுமே புதிய தலைமுறையினருக்கு வழி வழிவந்த பண்பாட்டு விழுமியங்களையும், நம்பிக்கைகளையும், வாழ்க்கை முறைகளையும் கையளித்து சமூகத்தினுடைய ஸ்திரத்தன்மைக்கு வழிகோலின. இதனை பிரஞ்சு தத்துவ ஞானியான "டேர்க் ஹைம்" என்பவர் சமூக மயமாக்கச் செயற்பாடு எனத் தெரிவித்தார். அத்துடன் இப்பணியை முறையாகச் செய்வதற்கு சமூகம் போதிய ஆற்றலைக் கொண்டிராத ஒரு சந்தர்ப்பத்தில்தான் இச்சமூக மயமாக்கப் பணியை செவ்வனே ஆற்றுவதற்கெனப் பாடசாலைகள்

தோற்றுவிக்கப்பட்டன என்பது அவருடைய கருத்தாக அமைந்தது. இவ்வாறு சமூகத்தின் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்துவதில் கல்வி நிறுவனங்கள் ஆற்றிய அல்லது ஆற்றிவரும் பங்கானது இன்று சமூகவியல் ஆய்வில் ஒரு பிரதான விடயமாக இனங்காணப்பட்டுள்ளது.

ஆனால் நவீன நிறுவனங்களின் இயல்புகளும், இலக்குகளும், பணிகளும் அவற்றின் அமைப்பும் வேறுபட்டவை. அவை புத்தாக்கங்களையும், மக்கள் மேம்பாட்டையும் முன்னெடுத்துச் செல்வதை நோக்கமாகக் கொண்டவை, எல்லாவற்றிலும் மாற்றங்காண விளைபவை, இந்நிறுவனங்கள் அமைப்புக்கள் அல்லது Organizations என அழைக்கப்படுபவை. இவை சில திட்ட வட்டமான முறையான ஏற்பாடுகளைக் கொண்டவை. இத்தகைய அமைப்புக்கள் எத்தகைய முறையான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தால் கூடிய வினைத்திறனுடன் இயங்க முடியும் என்பது பற்றி 19ம் நூற்றாண்டு தொடக்கம் ஜெர்மன் நாட்டு சமூகவியலாளரான "மாக்ஸ் வெபர்" தொடக்கம் பல சமூக விஞ்ஞானிகள் விரிவான ஆராய்ச்சிகளைச் செய்துள்ளனர். இவ்வாறு சமூக மேம்பாட்டுக்கான நிறுவனங்கள் தொடர்பாக வளர்ச்சியுற்ற கோட்பாடுகளும் சிந்தனைகளும் மனித மேம்பாட்டிற்கு நிறுவனங்களின் அவசியத்தைப் பெரிதும் வலியுறுத்தின.

நவீன நிறுவனங்கள் அல்லது அமைப்புக்கள் அறிவையே பிரதான வளமாகக் கொண்டு இயங்க வேண்டும் என்றும் பொருள் உற்பத்திக்குக் காலங்காலமாக பங்களிப்பைச் செய்து வந்த உழைப்பு, முயற்சி, மூலதனம் போன்ற காரணிகள் இரண்டாம் நிலைக்குச் சென்றுவிடும் என்றும் எதிர்காலவியல் சிந்தனையாளரான "பீட்டர் டிரக்கர்" எடுத்துக் கூறினார். விவசாய சமூகம், கைத்தொழில் சமூகம் என்பவற்றைத் தொடர்ந்து உருவாகும் முதலாளித்துவ சமூகம் ஒரு அறிவுச் சமூகமாகவும், பொருளாதார முறையானது அறிவுப் பொருளாதாரமாகவும் மாறும் என இவ் அறிஞரே 1990களில் எதிர்வு கூறினார்.

பாரம்பரிய நிறுவனங்களான குடும்பம், சமூகம் என்பன சிறப்பாக இயங்கும் போது அவற்றின் பெறுபேறுகள் உள்ளகம் சார்ந்ததாகவே அமைகின்றன. அதாவது குடும்பம் சிறப்பாக இயங்கும் போது அதன் பெறுபேறாக குடும்பங்களே முன்னேறிக் கொள்கின்றன. ஆனால் நவீன நிறுவனங்களான பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மற்றும் சமூக மேம்பாட்டுக்கான அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஏற்படக்கூடிய பெறுபேறுகள் அவற்றிற்கு அப்பாலுள்ள வெளி உலகிலேயே பெறப்படுகின்றன. உதாரணமாக: பாடசாலைகளின் பெறுபேறு அங்கு கற்றவர்களினால் சமூகத்திற்குக் கிட்டுகின்ற நன்மைகளாகவே அமைகின்றது. இவ்வாறு சமூகத்தில் இயங்குகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் பெறுபேறுகள் சமூகம் சார்ந்ததாகவே அமைகின்றன.

நிறுவனங்களின் மற்றொரு பண்பு அவற்றின் நெகிழ்ச்சித்தன்மையாகும். தாம் காலங் காலமாக கடைப்பிடித்துவந்த நிர்வாக ஒழுங்குகளை சூழ் நிலைகளின் மாற்றங்களுக்கேற்ப

மாற்றிக் கொள்ள ஆயத்தமாக இருத்தல் வேண்டும். இன்று ஜனநாயகப் பாங்கும் மனித உரிமைகளும் முக்கியத்துவம் பெற்றிருக்கும் நிலையில் 19ம் நூற்றாண்டுப் பாணியிலான அதிகார வர்க்கமாக நிர்வாகத்துறையினர் செயற்பட முடியாது. ஜனநாயகப் பாங்கான கலந்துரையாடல் ஊழியர்கள், உறுப்பினர்களுடனான தொடர்ச்சியான கலந்துரையாடல் சிறந்த தனிமனித தொடர்புகளைப் பேணுதல், முறையான அமைப்புக்குள் இயங்குகின்ற முறையில்[Informal] அமைப்புக்களை இனங்காணுதல். நிர்வாகத்திற்கு இவ் அமைப்புக்களையும் பயன்படுத்திக் கொள்ளுதல் போன்ற பண்புகளை நவீன நிறுவனங்களில் காணமுடிகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக,"மேலிருந்து கீழான"[Top – down] அணுகுமுறைக்குப் பதிலாக "கீழிருந்து மேலான"[Bottom - up] அணுகுமுறைக்கு அதிக இடம் அளிக்கப்படுகின்றது. இத்தகைய பண்புகளைக் கொண்ட ஜப்பான் நாட்டு நிறுவன நிர்வாக முறைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அதாவது நிறுவனங்கள் வழங்குகின்ற பொருட்கள், சேவைகள் என்பவற்றில் தொடர்ச்சியான முன்னேற்றங்களைக் காணுதல், அதற்கு சகல ஊழியர்கள், உறுப்பினர்கள், ஆகியோருடன் கலந்தாய்வு செய்தல் என்பன ஜப்பானிய நிர்வாக முறை உலகிற்கு வழங்கிய நிர்வாகவியல் தத்துவங்களாகும்.

நிறுவனங்கள் பற்றிய வேறு சில புத்தாக்கச் சிந்தனைகளும் உண்டு. நிறுவனங்களாவன நடைமுறையில் உள்ள கலாசாரத்தையும் குறிப்பாக சமூகக் கலாசாரத்தை அப்படியே பிரதிபலிப்பதாயும் அதன் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் அமையாது அவற்றை மேலும் செம்மைப்படுத்துவதாகவும் அதில் மேம்பாடு காணுவதாகவும் இருத்தல் வேண்டும். சமூக கலாசாரமானது காலங்காலமாக தேங்கி நிற்கும் தன்மையது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நவீன நிறுவனங்களால் சமூக கலாசாரம் செம்மைப்படுத்தப் படுகின்றது. உதாரணமாக: பாடசாலைகள் சமூக கலாசாரத்தை அப்படியே பிரதிபலிக்காது அதில் மேம்பாடு காணுவதையும் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். உதாரணமாக: விஞ்ஞான ரீதியாகவும் பகுத்தறிவுச் சிந்தனையுடனும் சிந்திப்பதில் குறைபாடுடைய சமூகங்களில் விஞ்ஞானப் பார்வையை ஏற்படுத்துவதில் பாடசாலை போன்ற நிறுவனத்திற்கு ஒரு பெரும் பங்குண்டு. விஞ்ஞான அறிவை மட்டுமன்றி அணுகுமுறையையும் சமூகத்திற்கு வழங்குவதில் பாடசாலைகளின் பங்கே முதன்மையானது என்பதில் ஐயமில்லை. சமூகங்கள் எவ்வாறு பாடசாலை என்ற நிறுவனத்தின் பாதிப்புக்கும் செல்வாக்குக்கும் உள்ளாகின என்பதற்குப் பல உதாரணங்களை எடுத்துக் கூற முடியும். இன்று பாடசாலையில் வழங்கப்படும் கல்வி அறிவும் உளப்பாங்குகளும் மாணவர்களுக்கூடாக பெற்றோரையும் அல்லது குடும்பத்தையும் சென்றடைய வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று வருவதோடு இவ்விடயம் தொடர்பான ஆய்வுகளும் இன்று நிகழ்த்தப்பட்டு வருகின்றன. பாடசாலை என்ற நிறுவனத்தினூடாக சமூக மாற்றம் என்ற சிந்தனையே இன்று முன்வைக்கப்படுகின்றது. எனவே நிறுவனங்கள் பெருமளவிற்கு சமூக மாற்றத்தையும் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டவை என்பதில் ஐயமில்லை.

சகல நிறுவனங்களும், இலாப நோக்கைக் கொண்ட தனியார் நிறுவனங்கள் உட்பட சமூகப்பொறுப்பு வாய்ந்தனவாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கை சென்ற நூற்றாண்டிலேயே எழுச்சி பெற்று விட்டது. இது ஒரு புறமிருக்க சமூக முன்னேற்றம்,கல்வி மேம்பாடு, புனர்வாழ்வு என்பவற்றை இலக்காகக் கொண்ட நிறுவனங்கள் எந்தவித இலாப நோக்கும் இன்றி இயங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய இலாப நோக்கற்ற சமூக அமைப்புக்களுக்கு எடுத்துக்காட்டாக திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் முயற்சியில் உதயமான சமூக எழுச்சி இயக்கம் போன்றவை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் இயங்கும் போது கூடிய சமூக அதிகாரத்தைப் பெறுகின்றன. இவ்வாறான நிறுவன அமைப்பின் சமூக முக்கியத்துவத்தையும் தேவையையும் கருதியே நாகலிங்கம் அவர்கள் நிறுவன வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்கினார். 1950களின் முற்பகுதியில் தோன்றிய மாவை.பாரதி வாசிகசாலை, அதனைத் தொடர்ந்து பெயர் மாற்றத்துடன் உருவாகிய மாவை.பாரதி மறுமலர்ச்சி மன்றம், 1972ம் ஆண்டில் மாவை சனசமூக நிலையம் என்பன திரு.நாகலிங்கத்தால் நிறுவப்பட்ட ஆரம்பகால நிறுவனங்களாகும். இவற்றைத் தொடர்ந்து பாரம்பரிய மரபுகளை உடைத்தெறிந்து சாதி மற்றும் வர்க்க வேறுபாடுகளைக் களைத்தெறிந்து சமத்துவ வாழ்விற்காக மறுமலர்ச்சி ஏற்படுத்த என அவரால் உருவாக்கப்பட்டதுதான் தேசிய சமூக எழுச்சி இயக்கமாகும். 1980களின் முற்பகுதியில் மக்களின் ஒப்புதலுடன் கிராம ரீதியான சமூக மேம்பாட்டுக் கழகங்கள் உருவாக திரு.நாகலிங்கம் அவர்கள் காரண கர்த்தா ஆனார்.

1981ல் கிராமமட்டத்தில் நிறுவப்பட்ட 24 மேம்பாட்டுக் கழகங்களையும் ஒன்றிணைத்து சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ்வாறான நிறுவன வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருந்த நாகலிங்கம் அவர்கள் அதனை பிரதான சமூக நீரோட்டத்திலிருந்து ஒதுக்கிவைக்க விரும்பவில்லை. தனது சமூகத்தின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட திரு.நாகலிங்கம் அதே வேளையில் பிரதான சமூக நீரோட்டத்துடன் இணைந்து செல்லும் தீர்மானத்துடனேயே செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாகவே 1982ல் சமாச பிரதிநிதிகள் யாழ்மாவட்டப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஏழு பேர்களைக் கொண்ட குழுவுடன் ஆலோசனைக் கூட்டமொன்றை நடாத்தினர். அங்கு பின்தங்கிய சமூகங்களின் சமூக மற்றும் கல்வி ரீதியான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராயும் முயற்சியில் திரு.நாகலிங்கம் ஈடுபட்டார். அவருடைய ஆலோசனையின் பெயரில் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் ஒரு நிலையான செயற்குழு அமைக்கப்பட்டு அவ்வப்போது எழுகின்ற சமூகப்பிரச்சனைகள் தொடர்பாக உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்ட மாநாட்டில் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த 14 பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்குகொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தி இருந்தனர். அனைவரையும்

அழைத்துச் சென்று மேம்பாடு காணவேண்டும் என்ற தீர்க்கதரிசன சிந்தனை நாகலிங்கம் அவர்களிடம் இருந்தமையே இத்தகைய செயற்பாடுகளுக்குக் காரணமாயிற்று.

இவற்றைத் தொடர்ந்து இத்தகைய சமூகப்பணிகள் எதிர்நோக்கிய நிதி சார்ந்த சவால்களை எதிர்நோக்க சமூக வங்கியொன்றை நிறுவுகின்ற ஆலோசனையையும் நாகலிங்கம் அவர்கள் முன்வைத்தார். கூட்டுறவுத்துறையிலும் குறிப்பாக கூட்டுறவு வங்கித்துறையிலும் செயலாற்றி நீண்டகால அனுபவத்தைப் பெற்ற அவர் இத்தகைய ஆலோசனைகளை முன்வைத்தது வியப்பல்ல. இத்தகைய முயற்சிகளின் காரணமாக 1993ல் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் ஒரு சமூக வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக மாவையில் தோன்றிய தேசிய சமூக எழுச்சி இயக்கத்தின் உச்சக்கட்டமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரின் பங்களிப்போடு 1999ம் ஆண்டில் 52ம் இலக்க புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட நாகலிங்கம் அவர்கள் காரணகர்த்தாவாக இருந்தார்.

மொத்தத்தில் நிறுவன ரீதியான வளர்ச்சியினூடாகவே சமூக மேம்பாட்டு இலக்குகளை அடையமுடியும் என்ற உயரிய சிந்தனையுடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றிவந்த திரு.ஆர்.எம்.நாகலிங்கம், சமூகத்தின் ஒரு கலங்கரை விளக்காகத் திகழ்ந்து வந்துள்ளார். அவர் அமைத்து வைத்த பாதை அதன் அடிப்படைத் தத்துவங்கள், சிந்தனைகள் என்பன நாட்டிலுள்ள ஏனைய பின்தங்கிய சமூகங்களுக்கும் அவற்றின் தலைவர்களுக்கும் சிறந்த வழிகாட்டல் தத்துவங்களை வழங்குகின்றன. ஏறத்தாழ ஐந்து தசாப்த காலத்திற்கும் மேலான அவருடைய அர்ப்பணிப்புப்பணி மேலும் நுணுக்கமாக ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்று. நிச்சயமாக அவருடைய சமூகப்பணியும் வாழ்க்கை ஓட்டமும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஏராளமான படிப்பினைகளையும் தர வல்லன. அவர் நீடுழி காலம் வாழ்ந்து தமது சமூகம் மேலும் பல ஏற்றங்களைக்காண ஆவன செய்வார் என்பதே எனது நம்பிக்கை.

மக்களே மேம்பாட்டின் இயக்கச் சக்தி: மாவையில் தோன்றிய தேசிய சமூக எழுச்சி இயக்கத்தினை மையமாகக் கொண்ட சமூக தரிசனம்

பேராசிரியர், கலாநிதி என்.சண்முகலிங்கன்
முன்னாள் துணைவேந்தர்,
சமூகவியல் பேராசிரியர், சமூகவியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சமூக சமத்துவமே சமூக மேம்பாட்டின் பேரெல்லையாகும். அநீதியான மேலாண்மைகளைக் கேள்விக்குள்ளாக்கும், அனைத்து மக்களினதும் வாழ்வினை உறுதி செய்யும் இலக்குடன் இயங்கும் சமூகங்களே மேம்படுகின்றன. மேம்பாட்டுக்கான இந்தப்பயணத்தில் தெளிந்தஇலக்கும், அயராத உழைப்பும், உறுதியும் கொண்ட ஆளுமைகளும் அவர்தம் ஒன்றிணைவான சமூக இயக்கங்களும் உயிர் விசைகளாகும். இந்தவகையில் எங்கள் பண்பாட்டுப்புலத்து தோற்றம் பெற்ற தேசிய சமூக இயக்கத்தின் காலப்பணிகள் குறிப்பிடத்தக்கன.

யாருக்குள்ளே சமத்தன்மை - தொடர்
பற்றும் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமை செய்யாது - புவி
எங்கும் விடுதலை செய்யும்.

எனச் சமூக விழிப்புப் பற்றிய சிந்தனையை அழகாய் ஆழவேர்விடச் செய்த எங்கள் மகாகவி பாரதியின் கவிதாவீச்சில் மலர்ந்த இளைஞர்கள் சிலரின் கூட்டுறவில் ஐம்பதுகளின் மத்தியில் ஆரம்பித்த பாரதி வாசிகசாலை படிமலர்ச்சியடைந்து மாவை மறுமலர்ச்சி மன்றமாகி, பின் தன் எல்லைகளை விரித்து தேசிய சமூக எழுச்சி இயக்கமானது வரலாறு.

சமூக இயக்கங்கள், நிலவும் சமூக சூழமைவினால் தோற்றம் பெறுகின்றன. சூழ்நிலை மாற்றங்களுடன் உரிய மாற்றங்களைக் காணும் அமைப்புக்களே நிலைபெறுகின்றன. இந்த வகையில் சமூகத்தில் நிலவிய சாதிய கட்டமைப்புக்குள் தம் சமூக அசைவினைத் தொலைத்த மக்களுக்கான உதவியை முதன்மையான நோக்காகக் கொண்டு மலர்ந்த இந்த அமைப்பானது, காலவெளியில் முழுதளாவிய நிலையில் தன் பார்வையை விரிவாக்கிக் கொண்டது. இதன் வழி 'ஆறு அம்சக் கொள்கைத் திட்டம்' ஒன்றினை வகுத்து அதற்கான சமூக, அரச, சட்ட அங்கீகாரத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளமை எங்கள் சமூக இயக்கங்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் மைல்கல்லாகும்.

சமூக இயக்கங்களை மக்கள் பங்கேற்புடனான உயிரான, உயிர்ப்பான அமைப்புக்களாகக் கட்டியெழுப்புதல் தொடக்கம், மக்களின் வாழ்வாதாரத் தேவைகள் முதல் பண்பாட்டு,

ஆன்மீக முழுமை வரை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைக் காணும் செயற்திட்டமாக இந்தத் திட்டவரைபு சிறப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வெறுமனே ஒரு திட்டவரைபு என்பதற்கு அப்பால் செயற்பாட்டில் வெற்றிகண்ட திட்டமாகவும் இன்னமும் செயற்படும் பேராற்றல் கொண்ட இயக்கத்தின் இலக்காகவும் இவை அமைந்துள்ளமை இங்கு கவனத்திற்குரியது.

இந்தக் கொள்கைத் திட்டத்தில் ஐந்தாவதாக இடம் பெறும்,

''வறுமை முதலான சமூகக் கொடுமைகளால்
நலிவுற்றோருக்குக் கைகொடுத்து உதவுவதை
ஒரு தெய்வீகப் பணியாக மதித்து அனைவரும்
சமூக சமத்துவம், சமூக அந்தஸ்து, சமூக
கௌரவம், சமூக நீதி பெற்றவர்களாக வாழ,
வளமாக வாழ வழி செய்தல்.

எனும் அம்சமே இந்தக் கட்டுரையின் குவிமையமாகும்.

இன்று எங்கள் சமூகம் அவாவி நிற்கும் சமூக விடுதலைக்கான மிகச்சிறந்த எடுத்துரைப்பாக இந்தக் கொள்கைத்திட்டம் அமைந்து, எங்கள் சிந்தனை விழிப்புக்கும் செயற்பாட்டிற்குமான அழைப்பாக விளங்குவதைக் காணலாம்.

வறுமைக்கானதும், சமூக நீதிக்கானதுமான பணிக்களங்களின் எல்லைகளும் சவால்களும் முன்னெப்போதும் இல்லாதளவிற்கு விஸ்வரூபம் கண்டுள்ள இந்த வேளையில்,எங்கள் சமூகக் கடமைகளை உணர்ந்து கொள்வதும், அவற்றினை முன்னுரிமை அடிப்படையில் வகுத்துச் செயற்படுவதும் இன்றியமையாதது.

வறுமையென்பது வெறுமனே ஒரு பொருளாதார விடயம் மட்டுமல்ல அதனோடு இணைந்துள்ள சமூகக் காரணிகள் யாவும் எம்மால் புரிந்து கொள்ளப்பட வேண்டியவை. வறுமையை இல்லாதொழிப்பதென்பது ஒரு தரும காரியமல்ல, தர்மத்தையும், நீதியையும், தனியன்களின் கௌரவத்தையும் காக்கும் சமூகக் கடமையாகும்.

அடிப்படை மனிதத் தேவைகளான உணவு, நீர், சுகாதாரம், உடை, இருப்பிடம், சுகநலம், கல்வி ஆகியன மறுக்கப்பட்ட அல்லது தொலைந்து போன அடிப்படை வறுமை நிலையிலிருந்து, சார்பளவிலான வறுமை நிலைவரை எண்ணற்ற வரைவிலக்கணங்களை, வாழ்வனுபவங்களை, இன்று எதிர் கொள்கின்றோம்.

எங்கள் சூழமைவில் போரின் கொடுமுகத்தில் மக்கள் எதிர்கொண்ட அகதிவாழ்வும், மீள்குடியேற்றப் புலங்களில் எதிர்கொள்கின்ற அவலங்களும், இன்னமும் குடியேற முடியாத இன்னல்களும் என இன்றைய எங்கள் சமூகப்புலங்கள் எழுதுகின்ற உயிர் வலிகள் கொஞ்சமல்ல.

- இழந்துபோன வாழ்வாதாரம்
- இழக்கப்பட்ட அவயவங்கள்
- இழந்துபோன உறவுகள்
- உடைந்து போன குடும்பங்கள்

என வகைவகையாய் வறுமையினதும் சமூகக் கொடுமைகளினதும் களங்கள் பல்கிப் பெருகியுள்ளன.

தனிமனித வாழ்வுரிமையிலிருந்து சமூக உரிமைகள் வரை கேள்விக்குள்ளான நிலைமைகளில் நீதியான சமூக நிலைமைகளைக் கட்டமைக்கும் சமூகக்கடமை நம் அனைவருக்குமானது. இழப்புக்களில் இருந்து மனித வாழ்வினை மீட்பதும், காப்பதும் மிகுந்த மனித நேயத்துடனும், அவர்கள் வலிகளை உணரும் மனப்பக்குவத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டும். கூடவே அறிவார்ந்த முறையிலும் நம் செயற்பாடுகள் அமைதலும் இன்றியமையாதது.

வறுமையிலிருந்து மீட்டெடுத்தலாக இருந்தாலென்ன, அகதிவாழ்விலிருந்து மீளுதலாக இருந்தாலென்ன, மனித வாழ்வுக்கான விழுமியங்களை, அடிப்படை நியமங்களைக் கருத்தில் கொண்டே அமைய வேண்டும். வறிய மனிதனின் வல்லமைகளை வளர்க்காமல், அவன் வல்லமைகள் வளருதற்கான சுதந்திரமின்மையை அகற்றாமல் மேம்பாடு என்பது சாத்தியமில்லையெனும் அமெதியா சென் (Amartya sen) கூற்றின் அடிப்படையை இங்கு மனதிற் கொள்ளலாம். வறுமையானவரை, வெறும் தங்கி நிற்கும் அடிமைகளாகக் காணும் எந்த ஒரு திட்டமும் வெற்றியளித்ததில்லை. சமூக வாய்ப்புக்கள், பொருளாதார வசதிகள், அரசியல் சுதந்திரம், உரிய பாதுகாப்பு எனும் சனநாயக நியமங்களை உறுதி செய்கின்ற போதே வறுமையிலிருந்தான விடுதலையென்பது பலிதமாகும். இன்றைய எங்கள் சூழலில் அகதி வாழ்வும் மீள்குடியேற்றம், மீள் இணக்கம் என நிகழும் செயற்பாடுகளில் மேற்கண்ட அம்சங்கள் எந்தளவிற்கு உள்ளன என்பதனைக் கருத்தில் கொள்வது இன்றியமையாதது.

மனித சமூகங்களின் மீள் குடியேற்றம் என்பது பயிரினங்களைப் பிடுங்கி நடுதல் போன்றதல்ல; அங்கும் கூட உரிய சூழல் நிலைமைகள், மண்வளம் என்பன முக்கிய கவனம் பெறுகின்றன. மனிதர்களை அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்களில் அவர்கள் விரும்புகின்ற வாழ்விடங்களில் குடியமர்தலை வலியுறுத்தும் மனித, சமூக உரிமைக்கான காப்பினை உறுதி செய்து கொள்வதிலிருந்து, அவர்கள் வாழ்வுக்கான வழிகாட்டுதலைத் தருவதும் சமூகப் பொறுப்பாகும். வாழ்வாதாரத்துக்கான தொழில் வாய்ப்புக்களிலிருந்து வருங்காலத்துக்கான பிள்ளைகளின் கல்வி வரை திட்டமிட வேண்டியுள்ளது. எங்கள் புலங்களில் இன்று அதிகரித்துள்ள பாடசாலை இடைவிலகல், சிறுவர் ஊழியம் முதலிய பிரச்சினைகளை நுண்நோக்கி அணுகும் திட்டங்கள் வேண்டும். இவ்வாறே அதிகரித்துள்ள தாய்த் தலைமை குடும்பங்களின் மீள் வாழ்வுக்கான வல்லமைகளைத் தருதல் என்பது மற்றொரு முக்கிய விடயமாகும். இந்த வகையில் இளம் வயதில் கணவனை இழந்த விதவைகள் குடும்பங்கள் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிய கவனிப்பு முக்கியமானதாகும். இந்தக் குடும்பங்கள் வெளிப்படுத்தும் துயரங்கள் பல்வகைத்தன. பிள்ளைகளுக்காகவே வாழுதல் என்ற உயர் விழுமியத்துடன் உள்ள பெரும்பாலான குடும்பங்களுக்கான வாழ்வாதாரக் காப்பினைத் தருவதிலிருந்து ஏனைய சமூகக் காப்புகள் வரை உறுதி செய்யப்படுதல் இன்றியமையாதது.

போரின் பாதிப்புக்களை மனவடுக்களாகக் கொண்டுள்ள மக்களின் நிலைமையும் சிறப்பான கவனத்தை வேண்டியுள்ளது. காணாமல் போன பிள்ளைகளின் நினைவுகளிலிருந்து சடுதியில் மரணித்த உறவுகள் வரையான தாக்கங்கள் மலிந்துள்ளன. இந்த மக்களை

'கேட்டல்' என்பது கூட பெரியதொரு சமூகப் பணியாகும். அவ்வாறின்றி இவர்களைத் தாழநோக்கும், வாழ்வதற்கான நம்பிக்கையினைத் தரமறுக்கும் சூழல் நிலைமைகள் மிகவும் கொடியன. இவ்வாறு அனைத்துச் சமூக நலிவுகளும், ஆழ்ந்த கவனிப்பை வேண்டியுள்ளன.

இவ்வாறான சூழமைவில்தான் அரச, அரச சார்பற்ற அமைப்புக்களுக்கு அப்பாலான சிவில் சமூக எழுச்சி இயக்கங்களின் தேவை இன்று அதிகமாகவே உணரப்படுகின்றது. மக்கள் தங்களுக்குள் உரையாடவும், தங்கள் நிலைமைகள் தொடர்பான எடுத்துரைப்புக்களை வெளிப்படுத்துவதற்குமான களங்கள் அவசியமானது. தங்களுக்கான ரட்சகர்களைக் காத்திருக்கும் நிலை மாறி தாங்களே தங்கள் வல்லமைகளை வளர்த்தற்கான அமைப்புக்களைக் காண்பது இன்றியமையாதது. இந்த வகையில் நுண்நிலை பிரச்சினைகளில் தொடங்கி பெருநிலை பிரச்சினைகள் வரை கையாண்டு வெற்றியும் கண்ட மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் அனுபவ ஞானம் பெரிதும் துணையாக முடியும்.

மாணவப் பருவமுதலே தெளிந்த சிந்தையுடன் சமூகத் தலைமைப் பொறுப்பினை ஏற்று இன்று இந்த சமூக எழுச்சி இயக்கத்தின் தந்தையாய் நிமிர்ந்துள்ள திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களிடம் இந்த வல்லமை நிறையவே உண்டு. 1999ம் ஆண்டின் 52ஆம் இலக்க புனர்வாழ்வு – கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபைச் சட்டமாகப் பாராளுமன்ற அங்கீகாரம் பெற்ற அபிவிருத்தி நிதியத்தின் மூலம் இன்றைய சமூக இயக்கங்களின் பணியாற்றும் வல்லமையை விரிவாக்கிய அவரது தீர்க்க தரிசனம் உயர்வானது. சுனாமி அனர்த்த வேளையிலும், போரின் அவலத்து இடப்பெயர்விலும் கைகொடுத்தது போல், பல்வேறு நுண்நிலையான திட்டங்களை, உரிய சமூக ஆய்வின் வழி இனங்கண்டு செயற்படுத்துதல் இன்றைய காலத்து கடமையாய் உள்ளது.

இப்பணியில் கிராம மட்டத்து இருந்த சங்கங்களைச் சமாசமாக்கி விரிவுகண்ட எழுச்சி இயக்கத்தின் வரலாற்றுப் பாடங்களின் துணையுடன், எங்கள் கிராமங்களில் அர்ப்பணிப்புடன் செயற்படும் அமைப்புக்களை ஒருங்கிணைத்தலும் அல்லது இல்லாதவிடத்து புதிதாய் அமைப்பதும் இன்றியமையாதது.

சமூகமேம்பாடு என்னும் பெரு இலட்சியத்தின் பகுதிகளாய் அமையும் நுண்மேம்பாடு திட்டங்களின் வெற்றிகளை, அவை எதிர்கொள்ளும் சவால்களை அவ்வப்போது கருத்தாடல்கள், மதிப்பீடுகள் வழி மீளாய்வு செய்யும் ஏற்பாடுகளுடன் இயக்கச் செயற்பாடுகள் அமைதலும் முக்கியமானது.

சமூக மாற்றம், சமூக மேம்பாடு என்பது ஒரு தொடர்ப் பயணமாகும். வெறுமனே கிடைத்த நிதியை முடிக்கும் திட்டங்கள் அல்ல. நிதி உபயகாரர்களின் பெயர் பதியும் பட்டயமும் அல்ல. உதவியின் வழியாக யாரோ மேலாண்மை செலுத்துவதற்கான முதலீடும் அல்ல. மக்களே அனைத்தினதும் எல்லை, மக்களே அனைத்தினதும் இயக்க சக்தி.

இந்த வல்லமையை உணரும் செயற்பாடுகளால் விடுதலையின் அனைத்து எல்லைகளையும் தொடமுடியும்.

1. இவர்களது சமூக எழுச்சி இயக்கத்தின் வறுமை ஒழிப்பு முதலான சமூகக் கொடுமைகளை இல்லாது ஒழிப்பதற்கான பங்களிப்பினை இவ்விடத்தில் குறிப்பிடுவது

பொருத்தமானதாகும் அத்தகைய குடும்பங்களுக்கு வாழ்வாதரத்துக்கான நிதியுதவியும் அத்துடன் சேர்த்து அக்குடும்பங்களின் பிள்ளைகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகின்றது. பாடசாலைக்குச் செல்லும் வயதுவராத பிள்ளைகளுக்கும் ஏனைய கல்வி கற்கும் பிள்ளைகளுக்கும் நிதியுதவி வழங்கப்படுகின்றது. நீண்டகாலப் போக்கில் பிள்ளைகளுக்கான நிதியுதவித் திட்டம் அக்குடும்பகளின் வறுமை ஒழிப்புக்கு உதவ முடியும் என்ற எதிர்பார்ப்புண்டு. இத்தகைய குடும்பங்களுக்கு சுயதொழில் முயற்சிக்கான உதவித்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டும் என்ற ஆலோசனைத் திட்டம் நிதிவளப்பற்றாக்குறையால் அமுல்பத்தப்படவில்லை. எனினும் அவசியம் கருதி ஒரு சில குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. பாடசாலை இடைவிலகலை இல்லாது ஒழித்தற் பொருட்டு குறிப்பிட்ட தொழிற் சங்கங்களோடும் தொழில்நிலைய உரிமையாளர்களோடும் பெற்றோருடனும் தொடர்ச்சியான கருத்துப் பரிமாறலுக்கான சந்திப்பு முறையை பின்பற்றும் பொருட்டு கண்காணிப்புக் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டமை ஆரோக்கியமான ஒரு வழிமுறை ஆகும். மரபு வழித் தொழில் முறையின் ஒரு அங்கமான குடிமைத் தொழில் முறையும் சாபக்கேடான ஒரு சமூகக் கொடுமையாகும். அத்தகைய அடிமைத்தனமான தொழில் விலங்கு முறையை முதன்மைப் பயனாளிகள் மத்தியில் இருந்தும் இல்லாது ஒழிப்பதில் எழுச்சி இயக்கம் தீவிர முயற்சியின் மூலம் பெரும் வெற்றியைக் கண்டுள்ளது. இது சமூக எழுச்சி இயக்கத்தின் வரலாற்றுச் சிறப்பு பெற்ற சாதனையாகக் குறிப்பிட முடியும். ஒழுக்க பண்பாட்டு சீரழிவுகளிலிருந்தும் மக்களை பாதுகாக்கும் பொருட்டு எழுச்சி இயக்கத்தின் வாழ்நாள் நீடித்த கருத்துப் புரட்சி இயக்கமானது துர்பழக்கங்கள், துர்நடத்தைகள் போன்ற சமூகக் கொடுமைகளிலிருந்தும் விடுபட்டு ஒழுக்கசீலராகவும், நற்பண்பாளராகவும் மக்கள் வாழ்வதற்கு பெரிதும் உதவ முடியும் அல்லவா? சாதியின் பெயரால் இழைக்கப்பட்ட சமூகக் கொடுமைகள் பல. அதன் விளைவாக பறிக்கப்பட்ட அடிப்படை மனித உரிமைகள் பற்றிய அறியாமை இருளை அகற்றி இழந்த உரிமைகளை மீளப் பெறவேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி தம் மக்களை எழுச்சிக் கொள்ள செய்து வெற்றி பெறவைப்பதில் இவ் எழுச்சி இயக்கமானது 1947ம் ஆண்டுமுதல் வழங்கிய பங்களிப்பு மகத்தானது.

2. சமூக கொடுமைகளை இல்லாது ஒழிப்பதற்கான முயற்சியில் நீண்டகாலமாக ஈடுபட்டு வரும் இச்சமூக எழுச்சி இயக்கமானது 2009ம் ஆண்டு வன்னி போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு அவசர நிவாரணத் திட்டமொன்றை அமுல்படுத்தியது. பாதிக்கப்பட்ட ஆயிரம் வரையிலான குடும்பங்களை பல இடங்களில் சந்திப்பை ஏற்படுத்தி அவர்களின் அனர்த்தங்களையும் கவலைகளையும் தேவைகளையும் கேட்டு ஆறுதல் கூறியதோடு அக்குடும்பங்களுக்கு நிதியுதவியாக 18 லட்சம் ரூபா வரையில் வழங்கியதோடு சந்திப்பு இடங்களில் உணவு சமைத்து வழங்கப்பட்டது. அக்குடும்பங்களின் பிள்ளைகளினது கல்வி தடைப்படாவண்ணம் 2011ஆம், 2012ஆம் ஆண்டுகளில் நிதியுதவி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் வருடாந்தம் 10 ஆண்டுகளுக்கு வருடாந்தம் 3 லட்சம் வீதம் வழங்கவும் ஏற்பாடு உண்டு.

சமூக எழுச்சி இயக்கத்தின் தொழிற்பெயர்ச்சி பற்றிய சிந்தனைகளும் செயற்பாடுகளும் – ஒரு மதிப்பீடு

சைவப்புலவர், கலாபூஷணம்
சு.செல்லத்துரை
ஓய்வு நிலை அதிபர்
இளவாலை

தொழிற்பெயர்ச்சி என்பது:

பொருளியல் வல்லுநர்களின் நோக்கில் தொழிற்பெயர்ச்சி என்பதன் முதன்மை நோக்கம் பொருளாதார மேம்பாடாகும். ஆனால் மாவையில் தோன்றிய சமூக எழுச்சி இயக்கத்தின் நோக்கில் தொழிற் பெயர்ச்சி என்பதன் முதன்மை நோக்கம் சமூக மேம்பாடாகும். மக்கள் சமுதாயத்தின் முழுமையான மேம்பாட்டுக்குப் பொருளாதார மேம்பாடும் சமூக மேம்பாடும் இன்றியமை யாதனவாகும்.

தமிழ்ச் சமூகத்தில் புகுத்தப்பட்ட மரபுவழித் தொழில்முறை, சாதிக்கட்டமைப்பு முறைதோன்றி வளர்வதற்கு மூலகாரணியாகும். மரபுவழித் தொழில் முறையானது தொழிலை அடிப்படையாகக் கொண்டு சமூகங்களை இருகூறாக – உயர்சமூகம், தாழ்ந்த சமூகம் எனப் பிரிக்கப்பட்ட சாபக்கேடான வரலாறு எமக்குண்டு.

உயர்சமூகத்தினர் தம்மை அதிகாரம் படைத்த ஆளும் சமூகத்தினராகவும், தாழ்ந்த சமூகத்தினரை ஆளப்படுகின்ற சமூகத்தினராகவும் ஆக்கிக் கொண்டனர். தாழ்ந்த சமூகங்களை அடக்கி ஒடுக்கி வன்முறைக்குட்படுத்தி அவர்களது உரிமைகளைப் பற்றிச் சிந்தித்துப்பயன்படுத்த முடியாதமுறையில் ஆக்கப்பட்டனர். கல்வி அற்றவர்களாக, தொழில் வாய்ப்புகள் பெறமுடியாதவர்களாக நசுக்கப்பட்டதன் காரணமாக என்றும் வளர்ச்சி குன்றியவர்களாகவே அவர்கள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அமெரிக்க மிஷனரிகளின் வருகை, இடது சாரி இயக்கங்களின் தோற்றங்கள், வளர்ச்சிகள், 1944இல் C.W.W கன்னங்கரா அவர்களால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட இலவசக் கல்விமுறை, சமூக சமத்துவப் போராட்டங்களின் வளர்ச்சி போன்ற சமூகமேம்பாட்டு நிகழ்வுகளால் பின்தங்கிய சமூக மக்கள் மத்தியில் மெல்ல மெல்ல எழுச்சி தோன்றி வளர்ந்தது எனலாம்.

இவ்வழியில் இச்சமூக எழுச்சி இயக்கமானது 1947ஆம் ஆண்டு, அப்பொழுது 11 வயதுடைய சிறு மாணவனாயிருந்த ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களால் மாவிட்டபுரக் கிராமத்தைத் தளமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு 1980 ஆம் ஆண்டுவரை சமூக, கல்வி, கலை, கலாசார, சமய பண்பாட்டுத் துறைகளின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய நிலையில் அவற்றின் ஒட்டுமொத்தமான அனுபவ அறிவையும், அக்காலத்தில் ஆர்.எம்.என் வளர்த்துக்

கொண்ட தலைமைத்துவப் பண்புகள், பன்முக ஆளுமைப்புலமை, கல்விப்புலமை, தொழிற்புலமை ஆகியவற்றின் பேறாக மாவை சமூக எழுச்சி இயக்கத்தை ஒரு தேசிய இயக்கமாக 1980.09.12 இல் பரிணமிக்கச் செய்த வரலாறு குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட சமூக எழுச்சி இயக்கத்தின் தொலை நோக்கங்களும் அந்நோக்கங்களை அடைவதற்கான மூலக் கொள்கைகளும் மூல உபாயங்களும் ஆறு அம்சக் கொள்கைத் திட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. சமுதாய எழுச்சியையும் வளர்ச்சியையும், உயர்ச்சியையும், சமத்துவத்தையும், சமூக அந்தஸ்தையும் தொலை நோக்கமாக வரையப்பட்டு அவற்றை அடைவதற்கான ஆறு அம்சக் கொள்கைத் திட்டத்தில் ஒரு அங்கமாகத் தொழிற்பெயர்ச்சிக் கொள்கை பிரகடனப்படுத்தப்பட்டது.

தொழிற் பெயர்ச்சிக் கொள்கைத் திட்டம்:

ஆறு அம்சத் திட்டத்தில் ஒன்றாக வரையப்பட்ட தொழிற்பெயர்ச்சித் திட்டம் பின்வருமாறு, **''மரபுவழித் தொழில் விலங்கை இல்லாது ஒழித்தற் பொருட்டுத் தொழிற் பெயர்வு உரிமை உண்டென்பதை நிலைநாட்டி உயர்தொழிற் புலமையைப் பெருக்கி வளமான தொழில் கொள்ளல்''.**

மேற்படி தொழிற் பெயர்ச்சித் திட்டத்தில், அடையாளப் படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு அங்கமும் முக்கியத்துவமானவை.

அவற்றுள் **ஒன்று – மரபுவழித் தொழில் முறை ஒரு விலங்கு** என்பதாகும். பரம்பரை பரம்பரையாக ஒரு சமூகம் அதாவது கொள்ளுப்பாட்டன், பூட்டன், பாட்டன், தந்தை, மகன் எனும் தொடர்ச்சியாய் வந்தவர்கள் குறித்த சமூகத்துக்கென நிர்ப்பந்திக்கப்பட்ட தொழில் முறையையே ஒரு அடிமை விலங்கென அடையாளப் படுத்தியுள்ளார்கள்.

இரண்டாவது ''தொழிற் பெயர்ச்சி உபாயம்'' மரபுவழித் தொழில் முறையிலிருந்தும் மக்கள் விடுதலை பெறுவதற்கு உரிமை உண்டென்பதை அடிமைப்படுத்தப்பட்ட மக்களை உணரச் செய்து தொழில் உரிமை அனைவர்க்கும் உண்டென்ற உண்மை மக்கள் மத்தியில் நிலைநாட்டப் படவேண்டும். அப்பொழுதுதான் தொழில் பெயர்ச்சிச் செயற்பாடுகள் வெற்றிபெற முடியும்.

மூன்றாவது ''தொழிற்புலமை பெருக்குதல்'' சட்டியில் இருந்து பாய்ந்து நெருப்புக்குள் வீழ்ந்த கதையாக இருக்கக் கூடாது. தொழிற்பெயர்ச்சிக்கு முயற்சிப்பதற்கு முன்னர் அவ்வாறு முடியாவிட்டால் அதன் பின்னராவது தொழிற்புலமையை வளர்த்துக் கொள்வது மிகமிக அவசியமாகும். அப்பொழுதுதான் உயர்தொழில் வாய்ப்புகளுக்குத் தகுதியுடையவர்களாகப் பின்தள்ளப்பட்ட மக்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள முடியும்.

நான்காவது ''வளமான தொழில் கொள்ளல்'' தொழிற் பெயர்ச்சி என்பது கண்மூடித்தனமாக இருக்கக்கூடாது. ஒவ்வொருவரும் தமது அறிவு, தொழில், அனுபவ திறமைகளை அடிப்படையாகக் கொண்டு தொழில் தெரிவு அமைவது அவசியம். குறிப்பாக மாணவர் சமுதாயம் வளமான தொழில் பெறுவதையும் கவனத்தில் கொண்டு ஆரம்பம்

முதல் தமது கல்வித் தகமையை வளர்க்க வேண்டும். வெறுமனே சான்றிதழ்களைப் பெறுவதுதான் கல்வியின் இலக்காக அமையக்கூடாது. வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் தோன்றாதிருப்பதையும் கவனத்திற் கொண்டு மாணவர்கள் திட்டமிட்ட முறையில் தமது கல்வி வளர்ச்சியை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தொழிற்பெயர்ச்சிச் செயற்பாடுகள் அமையும்போதுதான் எதிர்பார்க்கின்ற சமூக மேம்பாடு மட்டுமல்லாமல் பொருளாதார மேம்பாடும் ஏற்படமுடியும்.

குடிமைத் தொழில்முறை:

மரபுவழித் தொழில்முறை பின்வரும் இரு பிரதான அங்கங்களைக் கொண்டிருந்தது. ஒன்று குடிமைத் தொழில்முறை, இரண்டாவது சாதாரண தொழில்முறை ஆகும். பின்தங்கிய சமூகங்கள் குடிமைத் தொழில்முறையையும் செய்வதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். மரணச்சடங்கு முதலான அபரக்கிரியை நிகழ்வுகளிலும் திருமணச் சடங்கு முதலான மங்கலச் சடங்குநிகழ்வுகளிலும் பின்தள்ளப்பட்ட சமூகக் குழுமங்கள் அடையாளப்படுத்தப்பட்ட கடமைகளை அடிமைத்தனமாகவே செய்ய வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

மேல்மட்டத்தில் உள்ளோர் தமக்கு அடிமை குடிமைகள் இருக்கிறதென்பதைக் காட்டித் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதாக இருந்துவந்தது. இது சாதிக் கொடுமையின் மூலவேராக உணரப்பட்டது. பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் தொழிற்பெயர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்குமுன்னர் குடிமைத்தொழில்முறையை ஒழிப்பதற்கு மும்முரமாகச் செயற்பட்டார்கள். இதைவிட்டுக் கொடுக்க மேல்மட்டத்தில் இருந்து அடக்கியாண்டவர்கள் குடிமை ஒழிப்புக்கு எதிராகப் பலதரப்பட்ட கொடுமையான வன்முறைகளில் ஈடுபட்ட வரலாறு உண்டு. தீவைத்தல், நிலபுலங்களை அபகரித்தல், குடியெழுப்புதல், பிரதேசத்தைவிட்டு வெளியேற்றுதல் போன்ற கொடூரமான வன்செயல்கள் இடம்பெற்றமை வரலாற்று உண்மையாகும்.

இச்சமூக எழுச்சி இயக்கத்தின் ஆரம்பகாலத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட ஆறு அம்சத் திட்டத்தில் குடிமைத் தொழில் முறையின் சமூகக் கொடுமையின் தாக்கத்தை நன்குணர்ந்து சமுதாய மேம்பாட்டுக்குத் தொழிற் பெயர்ச்சிக் கொள்கையை வேறாகவும், குடிமைத் தொழில் ஒழிப்புக் கொள்கைளை வேறாகவும் அடையாளப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய சமூக எழுச்சி இயக்கத்தின் ஆரம்பகாலத்தில் குடிமைத் தொழில்முறையை ஒழிப்பதற்கு – குடிமைத் தொழில் செய்வோர் மத்தியில் போதிய மனமாற்றத்தை ஏற்படுத்தும் வண்ணம் தீவிரமாகக் கருத்துப் புரட்சி இயக்கம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குடிமைத் தொழிலில் ஈடுபட்டோர்களைச் சாத்வீகமுறையில் மனமாற்றம் செய்து செயற்படத் தூண்டப்பட்டதோடு அத்தொழில் முறையில் ஈடுபடாத எவரும் குடிமைத் தொழில்முறைக்கு ஆளாகாமல் பாதுகாக்கும் பொருட்டுக் கருத்துப் புரட்சி இயக்கத்தின் மூலம் தடுப்பூசிக் கொள்கை வற்புறுத்தப்பட்டது.

திட்டமிட்ட முறையில் பலாத்காரத்தைப் பிரயோகித்துக் குடிமைத் தொழிலில் ஈடுபட்டவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற குரல்கள் ஓங்கி ஒலித்தவேளையிலும் பலாத்காரத்தின் மூலம் ஏற்படக்கூடிய எதிர்ப்புச் சக்திகள் எழுச்சி இயக்கத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்துவிடலாமோ என்ற அச்சத்தால் சாத்வீக முறையே கைக்கொள்ளப்பட்டது.

இவ்வாறு எழுச்சி இயக்கமானது குடிமைத் தொழில் முறையை ஒழிப்பதற்குத் தீவிரமாக முயற்சி எடுத்து வந்த வேளையில் தொழில் நிலையங்களின் வளர்ச்சி தீவிரமடைந்தது. அதன் பேறாகத் தொழில் நிலையங்கள் பிரதேச ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் தொழிற்சங்கங்களை அமைத்துக் குடிமைத் தொழில்முறையை இல்லாதொழிப்பதற்காக நிர்வாகக் கட்டமைப்பு முறைகளையும் அதற்கான பிரமாணங்களையும் வகுத்துத் தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம் குடிமைத் தொழில் முறை பெரும்பாலும் ஒழிக்கப்படுவதற்கு மூலகாரணமாக அமைந்துள்ளது. இவ்வெற்றிக்கு விடுதலை இயக்கத்தின் அனுசரணை முக்கிய பங்கை வகித்துள்ளதெனக் கூறப்படுகிறது.

மரபுவழித் தொழில்முறை தொழில் நிலையங்களாக மாற்றப்பட்டமை

தொழில் நிலையங்கள் மூலம் சிறந்த நிர்வாகக் கட்டமைப்புகளோடு தொழில் நோக்கங்கள், சேவைக் கட்டணமுறை, கட்டாய விடுமுறை நாட்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கிய விதிமுறைகள், சீருடை தரித்தல் ஆகியவற்றின் மூலம் ஒரு புதிய பரிமாணம் ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய தொழில் நிலையங்களினூடாகத் தொழிலாளர்கள் மத்தியில் பொருளாதார மேம்பாடு மட்டுமல்லாமல் சமூக மேம்பாடும் ஏற்பட்டுள்ளது. மரபு வழித் தொழில்முறை சாதிக்கட்டமைப்பு முறையின் கீழ் அனைத்துச் சமூகங்களைச் சேர்ந்த மக்களுக்கும் தொழில் செய்கின்ற நோக்கு மறுக்கப்பட்ட வரலாறும் உண்டு.

நிறுவனப் படுத்தப்பட்டு நிறுவனங்கள் வளர்ச்சியடைந்த நிலையிலும், சமூக சமத்துவப் போராட்டங்களின் விளைவாகவும் தொழில் நிலையங்களில் சமத்துவம் பேணுவதற்கான வழிமுறை இலகுவாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. குறித்த மரபுவழித் தொழில் முறையின் இன்னொரு பரிமாணத்தையும் இன்று நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

குறித்த தொழில் நிலையங்களை அழகுக் கலை நிலையங்களாகக் குளிரூட்டப்பட்ட வசதிகளோடும், நவீன தொழில் கருவிகளோடும், இவ்வளர்ச்சியானது ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தி இருக்கிறது எனலாம். இதன்மூலம் ஒருபுறம் சமூக மேம்பாடும், மறுபுறம் பொருளாதார மேம்பாடும் ஏற்பட்டுள்ளது எனலாம். இத்தகைய பரிணாம வளர்ச்சியை ஆதாரமாகக் காட்டி இதனையும் ஒருதொழிற் பெயர்ச்சிச் செயற்பாடென ஏன் கூறமுடியாதென்ற விவாதம் முன்வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்படி விவாதத்திற்குத் தொழிற்பெயர்ச்சிச் சிந்தனை முன்னோடிகளின் கருத்தை

இங்கு வெளிப்படுத்துவது பொருத்தமெனக் கருதுகின்றேன். அவர்களின் கருத்துக்கள் தொழில் நிலையங்கள் மூலம் ஏற்பட்டிருக்கும் புதிய பரிணாம வளர்ச்சியானது முன்னைய நிலைகளில் இருந்தும் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முன்னேற்றகரமானது. ஆனால் மரபுத் தொழில் முறையில் பொதிந்துள்ள விலங்கு முறை என்னும் சமூகக் கொடுமையானது நீங்கியதா? அதாவது குறித்த ஒரு தொழிலைப் பரம்பரை பரம்பரையாகச் செய்யவேண்டும் என்ற விலங்குமுறை ஒழிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் கருத்தாகும்.

எந்தவொரு தொழிலையும் எவரும் இழிவானதாகக் கருதக்கூடாது என்பது அவர்களின் உறுதியான கொள்கை. சமூகக் கொடுமைகள் தவிர்ந்த ஒவ்வொரு தொழிலும் மதிக்கப்பட வேண்டியதாகும். ஆனால் ஒரு சமூகம் ஒரு குறித்த தொழிலைத்தான் செய்ய வேண்டுமென்ற நிலையை ஒழிக்க வேண்டுமென்பது அத்தொழிலை இழிவான தொழில் என்ற கருத்தில் அல்ல என்பதை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த நியதியை ஒழிக்க வேண்டும் என்றால் பரம்பரை பரம்பரையாகக் குறித்த தொழிலைச் செய்துவந்தவர்கள் அத்தொழிலில் இருந்து முற்றாக விடுபட வேண்டும் என்பது தொழில் பெயர்ச்சிச் சிந்தனையாளர்களின் கருத்தாகும்.

இதுவரை தொழிற்பெயர்ச்சிச் சிந்தனையாளர்களின் கருத்தைக் கூறக்கேட்டுள்ளோம். அக்கருத்துக்களின் அடிப்படையில் மரபுவழி பின்பற்றப்படுகின்ற தொழில்முறை முற்றாக ஒழிக்கப்படுவதன் அவசியம் குறித்து நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் பற்றிச் சிந்திப்போம்.

மரபுவழித் தொழில் செய்தவர்களில் புலம்பெயர்ந்து சென்றவர்கள் அங்கு மாற்றுத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி மரபுவழித் தொழிலை முற்றாக ஒழிப்பதற்கு உதவ முடியும். ஐக்கிய இராச்சியத்துக்குப் புலம்பெயர்ந்து சென்ற சமூக எழுச்சி இயக்கத்தின் முதன்மைப் பயனாளிகள் குறிப்பாக அவர்களுள் மரபுவழித் தொழில் முறையில் ஈடுபட்டவர்கள் முற்றாக விடுபட்டுத் தத்தம் ஆற்றலுக்கேற்ற மாற்றுத் தொழில் வாய்ப்புகளைப் பயன்படுத்தி வருவதை உதாரணமாகக் கொள்ள முடியும்.

ஆரம்பகாலங்களில் பின்தங்கிய சமூகங்களின் மத்தியில் ஆரம்பக் கல்வித் தகைமையே பெரும்பாலும் இருந்தது.

அத்தகைய கல்விச் சூழலில் மரபுவழித் தொழிலைத் தொடர்வதைத் தவிர மாற்றுத் தொழிலைப் பற்றிச் சிந்திக்க முடியாத நிலை அன்று இருந்தது. தேசிய சமூக எழுச்சி இயக்கம் 1980 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் முதன்மைப் பயனாளிகள் மத்தியில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை அவர்களின் புள்ளிவிபரங்கள் உணர்த்துகின்றன. இவ்வாறு கல்வித்துறையில் அடைந்த மேம்பாட்டை மேலும் மேலும் வலுப்படுத்தித் தொழில்சார் கல்வியையும் வளர்த்துப் புதிய புதிய தொழில் முயற்சிகளுக்கு

மாணவர்கள், இளைஞர் சமூகம் முயற்சிக்க வேண்டும். அவ்வாறு செயற்படும்போது மரபுவழித் தொழில்முறை என்ற ஒன்று வெகுவிரைவில் இல்லாது ஒழிந்து போவதற்கு வாய்ப்புண்டு.

மரபுவழித் தொழிலில் ஈடுபட்டவர்கள் வாழ்நாள் நீடித்த கல்வி முறையைப் பயன்படுத்தித் தங்கள் வயதுக்கும் அனுபவத்திற்கும், கல்வித் தகைமைக்கும் ஏற்ற தொழிற் பயிற்சிகளைப் பயன்படுத்துவதன் மூலம் தொழிற் பெயர்ச்சித் திட்டம் வெற்றிபெற உதவ முடியும். பொருளாதார வளமுள்ளவர்கள் தனித்து அல்லது கூட்டுறவு முறையில் அல்லது கூட்டுமுயற்சி மூலம் வர்த்தக முயற்சியில் ஈடுபடலாம். இவ்வழியில் பலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டு முன்னேற்றம் கண்டுள்ளதை அறிவோம். இவ்வாறு உற்பத்தித் தொழில்களிலும் ஈடுபடலாம்.

புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் சபைச் சட்டத்தில் தொழில் பெயர்ச்சியை நோக்கமாகக் கொண்ட கல்வி முயற்சிகளுக்கும் தொழில் முயற்சிகளுக்கும் ஏற்பாடு உள்ளது என்பதைக் கவனத்தில் கொண்டு அவ்வேற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்குக் குறித்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பின்வரும் ஏற்பாடுகளை இங்கே குறிப்பிடுவது பயனுள்ளதாக அமையுமெனக் கருதுகின்றேன்.

இச்சட்டத்தின் 3 (ஒ) கல்வி, முகாமை, வர்த்தக, கைத்தொழில், கமத்தொழில் அத்துடன் ஏனைய சேமநல நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான ஆலோசனைச் சேவைகள், பயிற்சிச் சேவைகள் போன்றவைகளுக்கு ஏற்பாடு செய்தல்.

பிரிவு 3(க) கடன்களை வழங்குவதன் மூலமோ அல்லது கடனின்றியோ வர்த்தகம், கமத்தொழில் அல்லது கைத்தொழில் போன்றவை தொடர்பான திட்டங்களில் ஈடுபடும் ஆட்களுக்கு ஊக்கமளித்தலும் அத்துடன் ஒழுங்கமைத்தலும்,

பிரிவு 3(ச) அரச அல்லது அரசசார்பற்ற முகவர் நிலையங்கள் மேற்கொள்ளும் நிவாரண வேலைகள், புனரமைப்பு, மீள் நிர்மாணம், வீடமைப்பு மற்றும் சேமநல நடவடிக்கைகளுக்கு உதவுதல்.

இவை கவனத்தில் கொள்ளப்படத்தக்கன.

மரபுவழித் தொழில் முறையிலிருந்து பெயர்வதற்கான திட்டத்தின் விளைவுகள்

சாதியத்தின் கீழ் திணிக்கப்பட்ட மரபுவழித் தொழில் முறையானது தனி மனிதனின் தொழில் உரிமையை இல்லாது ஒழிக்கும் ஒரு கொடுமையாகும். ஒருவர் ஒரு குறித்த தொழிலைத் தான் மரபு வழியாகச் செய்யப் பிறந்தவன் என்ற நிலையை ஒழிப்பதன் மூலமே அவன் விரும்பிய தொழிலைத் தெரிவு செய்வதற்கான தொழில் உரிமையை

அனுபவிக்க முடியும். சிலர் தொழிற்பெயர்ச்சி என்பது கூடிய வருமானத்தை நோக்கிய பெயர்ச்சி என்னும் பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பார்க்கிறார்கள். சமூக சமத்துவத்தை நோக்கிய பயணத்தின் வெற்றிக்கு பொருளாதார பலம் மட்டும் போதுமானதொன்றல்ல. சாதியத்தைப் பேணிக் காக்கின்ற மரபுவழித் தொழில்முறை உயிர்வாழும்வரை, சமூக சமத்துவத்துக்கான பயணம் வெற்றிபெறுமென்பது வெறும் பகற்கனவு என்பதே வரலாறு தரும் படிப்பினையாகும். தான் சார்ந்த சமூகக் குழுமியமானது ஏனைய சமூகக் குழுக்கள் மத்தியில் சமூக சமத்துவம்பெற்ற, கௌரவம் பெற்ற சமூகமாக மிளிர வேண்டும் என்ற கரிசனை உள்ள ஒவ்வொருவரும் புதிய புதிய வாய்ப்புகளை நோக்கிப் பெயர்வதைப் பெருமையாகக் கொள்ளவேண்டும்.

இவர்களது கருத்துப் புரட்சி இயக்கத்தின் செயற்பாடுகளும், கல்வித் துறையில் அடைந்த வளர்ச்சியும், உள்ளூர் இடம்பெயர்வுகளும், வெளிநாடுகளுக்கான புலப்பெயர்வுகளும், இனவிடுதலைப் போராட்டமும், மரபுவழித்தொழில் முறையிலிருந்தும் கணிசமான அளவில் விடுபட வழிவகுத்துள்ளது எனலாம். புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்க அல்லது பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் இருந்தும், மரபுவழித் தொழிலையே தொடர்ந்தும் கெட்டியாகப் பற்றிக்கொண்டிருப்பவர்களை இன்னும் உள்நாட்டிலும் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் மத்தியிலும் காண்கிறோம்.

தொழிற்பெயர்ச்சிக் கோட்பாட்டின் உண்மையான யதார்த்த நிலையை விளங்கிக் கொண்டு இத்தகையவர்கள் சமூகப் பற்றோடு ஒத்துழைப்பு நல்க முன்வரவேண்டுமென்ற எமது விண்ணப்பத்தை மீண்டும் மீண்டும் முன்வைக்கின்றோம். மரபுவழித் தொழில் முறையிலிருந்தும் விடுபட்ட பலர் சுயதொழில் வியாபார முயற்சிகளிலும் மற்றும் தொழில் முயற்சிகளிலும் ஈடுபட்டு தமது பொருளாதார விருத்தியை பன்மடங்காக அதிகரித்துள்ள யதார்த்த நிலையை நாம் படிப்பினையாகக் கொள்ள முடியாதா? கடந்த 27 ஆண்டுகாலப் பகுதியில், தொழிற் பெயர்ச்சியை நோக்கிய வளர்ச்சியின் மூலம் அரசாங்கத் துறைகளிலும், தனியார் துறைகளிலும், சுயதொழில் முயற்சிகளிலும், தொழில் செய்து வருபவர்களின் எண்ணிக்கை வேகமாக வளர்ந்து வருகின்றது. வைத்தியக் கலாநிதிகள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், முகாமையாளர்கள், ஆசிரியர்கள் முதலான பலதரப்பட்ட பதவிகளைச் சமாசத்தின் முதன்மைப் பயனாளிகள் வகிப்பதை இன்று காணமுடிகிறது. இவ்வளர்ச்சிப் போக்கு இன்னும் அதிகரிக்குமென்ற நம்பிக்கை மேலும் மேலும் வலுவடைகிறது.

பாராளுமன்ற சட்ட அந்தஸ்துப் பெற்றுள்ள புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதிய சட்டம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

திரு.க.சிவபாதம்
சட்டத்தரணி
ஓய்வு நிலை பிராந்திய முகாமையாளர். மக்கள் வங்கி
முன்னை நாள் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்

பல்வேறு நாடுகளிலும் பல சமூகவியற் பெரியோர்கள் தோன்றி தாம் வாழும் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கென பல்வேறு நிறுவனங்களைத் தோற்றுவித்துள்ளனர்.கூடி உழைத்தல், கூட்டுப் பொறுப்பு, குழுவாக இயங்குதல் என்ற சமூக சிந்தனைகளுக்கமைய இந்நிறுவன அமைப்புக்கள் அவ்வச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கெனப் பல்வேறு நலன்களைப் புரிந்து வந்துள்ளன.இவ்வாறே இலங்கையின் வடபகுதியிலும் நலிவுற்ற மக்களின் துயர் துடைக்க 1981ல் உருவாக்கப்பட்ட மக்கள் சார்ந்த இயக்கமே சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமாகும். இச்சமாசம் தனது முயற்சிகளைச் சிறப்பாக ஆற்றுவதற்கு நிதிசார்ந்த கட்டமைப்பொன்று அவசியமெனக் கருதி புனர்வாழ்வு, கல்வி, அபிவிருத்தி நிதியமொன்றையும் ஆரம்பித்தது.

இன்று இந்நிறுவனம் தனது 32 வருட கால வரலாற்றில் பல இலட்சம் ரூபாய்களை மூலதனமாகக் கொண்டு பல்வேறு நலிவுற்ற மக்களுக்கும் தனது செயற்பாட்டினை விஸ்தரித்துள்ளது. தனது நோக்கங்களைத் தொடர்ந்து நிறைவேற்றக்கூடியதான கட்டமைப்பொன்றினை உறுதி செய்யவென இலங்கை ஜனநாயகக் குடியரசின் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்ற ஒரு சட்டத்தை உருவாக்க முனைந்தது. 1993ம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சி பல்வேறு இடர்ப்பாடுகளைத் தாண்டி **1999ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபைச் சட்டம்** என்ற பெயரில் உருப்பெற்றிருப்பது மகிழ்ச்சிக்கும் வியப்புக்கும் உரிய ஒரு கைங்கரியமாகக் கருத முடியும்.

நமது நாட்டில் சட்டபூர்வமான தாபனங்களை நிறுவ பாராளுமன்றச் சட்டங்கள் அவசியமாகும்.இதற்கு முக்கிய காரணம் குறித்த நிறுவனம் அல்லது சபை அல்லது சங்கம் எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்படுகிறதோ அந்த நோக்கத்தை அடைவதற்காகச் சிறந்த முறையில் செயற்படவேண்டும் என்பதற்காகவாகும்.

பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்குப் பல்வேறு சமூக அமைப்புக்கள் இன்று இயங்கி வருகின்ற பொழுதிலும் இவ்வெல்லா அமைப்புக்களும் தனித்துவமான அந்தஸ்தை உடையனவல்ல. பல சமூக நிறுவனங்கள் பொதுப்பொருளாதாரச் சமூக நல முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டங்களின் கீழ் இயங்குகின்றன.பல அமைப்புக்கள் பல்வேறு சட்டங்களின் கீழ் பொதுநல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் இச்சட்டம்

குறித்த மக்கள் சார்ந்த சமூகத்திற்கு உதவி நல்கக் கூடிய வகையில் தனித்துவமான சிறப்பம்சங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருப்பது இச்சமூக நோக்கங்களை ஈடேற்ற முயற்சித்த ஏற்பாட்டாளர்களுக்குக் கிடைத்த ஒரு வெற்றியென்றே கருத வேண்டும்.

இதில் குறிப்பிடக்கூடிய அம்சம் என்னவெனில் ஏற்கனவே புனர்வாழ்வு இயக்கம் உருவாக்கப்பட்டு வளர்ச்சியடைந்ததன் பலனாக அதன் படிமுற்ற வளரச்சியின் ஊடாகவே இச்சட்டம் உருவாக்கப்பட்டது என்பதாகும். இதன் இன்னுமோர் சிறப்பம்சம் யாதெனில் ஒரு சமூக அமைப்பானது அதன் நிதி நடவடிக்கைகளை அதன் முகாமைக் கட்டமைப்புக்குள் செயற்படுத்துவதே வழக்கம். ஆனால் இந்நடைமுறைக்கு அப்பால் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் சமூகப் பணிகளை ஆற்றக்கூடியதாகவும் அதற்கான நிதிப்பங்களிப்பை வழங்குவதை முதன்மைப்படுத்தி புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்துக்கான சட்டம் உருவாக்கப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. இது ஓர் சமூக வங்கி அமைப்பாகும். நிதி வளம் முறையாகக் கையாளப்பட வேண்டும் என்ற உயர் சிந்தனை இங்கு உள்வாங்கப்பட்டுள்ளது. யான் எனது சட்டப் பின் புலத்தின்படி அவதானித்த போது எங்கும் காண முடியாத ஓர் புதிய உத்தி இவ் ஏற்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளமை வியப்புக்குரிய சிறந்த அம்சமாகும்.

இச்சட்டமானது இலங்கைக் குடியரசின் பாராளுமன்றச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதிக்கான பணிப்பாளர் சபையென்ற பெயருடன் அங்கீகாரம் பெற்றுள்ளது. இச்சட்டத்தினை அவதானிக்கும் பொழுது பின்வரும் அம்சங்கள் எனது மனக்கண் முன்னே தோன்றுகின்றன.

1. இது ஒரு கூட்டிணைக்கப்பட்ட சட்டமாக அமைதல்

கம்பனிகள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் நியதிச்சபைகள் எப்படி இயங்குகின்றனவோ அவ்வாறான அமைப்பொன்றாக இந்நிறுவனம் செயற்பட முடியும் .இதன்படி குறித்த இப்பெயருடன் தனது கொள்கைகளை நிறைவேற்றும் வகையில் நிர்வாக நிதி நடவடிக்கைகளில் ஈடுபடவும் சட்ட நபர் என்ற அந்தஸ்துடன் திகழவும் இங்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சமூக நிறுவனங்கள் சட்ட வலுவுடன் திகழும் போது தமது நோக்கங்களை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளவும் அந்நிறுவனத்தின் நிதி சார்ந்த விடயங்களில் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவும் சட்ட ரீதியான காப்பொன்று அவசியமாகின்றது. இக்காப்பு ஏற்பாடு இச்சட்டத்தின் ஊடே நிறைவு செய்யப்பட்டிருப்பதை இங்கு காணலாம்.

2. இவ்வமைப்பு விசேட அதிகாரங்களைக் கொண்டிருத்தல்

இவ்வமைப்பானது தனது சேவைகளை சட்ட வலுவுடன் செய்யக்கூடிய வழிவகைகள் இச்சட்டத்தின் 3ஆம், 4ஆம் விதிகளில் தரப்பட்டுள்ளன.

இதன்படி இந்நிறுவனம்,

அ. மக்களின் கல்வி, சமய, கலாசார, சமூக, பொருளாதார நலன்களை மேம்படுத்தல்.

ஆ. சமூகத்தில் காணப்படும் சமூக சமமின்மையை அகற்ற உழைத்தல்.

இ. சமுதாயத்தில் நலிவுற்றிருக்கும் வகுப்பினர்களுக்குக் குறிப்பாக தாழ்ந்த சமுதாயத் தினருக்குக் கை கொடுத்துதவுதல்.

ஈ. மக்களிடையே ஒற்றுமை, நட்புத்தன்மை என்பவற்றை வளர்த்தல்.

உ. தமிழ்மொழி, கலாசாரம், இலக்கியம் என்பவற்றை விருத்தி செய்தல்.

ஊ. கல்வி விருத்திக்கான புலமைப்பரிசில்களை ஏற்பாடு செய்தல், அவற்றை வழங்கல்.

ஏ. புலமைப்பரிசில்களுக்கான நிதியைக் கையாளுதல்.

ஏ. போட்டிகள், விவாதங்கள், கலந்துரையாடல்கள், கண்காட்சிகள், செய்தி வெளியீடுகள் என்பவற்றில் ஈடுபடுதல்.

ஐ. அமைதியின்மையால் உருவாக்கப்பட்ட விதவைகள், அநாதைகள், அங்கவீனர்களுக்கான உதவி, ஒத்தாசைகளை ஏற்படுத்தல்.

ஒ. அநாதை இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களை ஆரம்பித்தல், நிர்வகித்தல்.

ஓ. கைத்தொழில், விவசாயம், வியாபார நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல், அவற்றை மேற்கொள்ள உதவியளித்தல்.

ஔ. மரண சகாய நிதி,வீட்டுக்கடன் என்பவற்றை உருவாக்கலும் நிர்வகித்தலும், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு, புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான உதவிகளை நல்குதல்.

மேற்கூறிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு அவசியமான செயற் திட்டங்களை உருவாக்கி செயல்படுத்த இதன் சட்ட ஆக்கங்கள் உதவியாக அமையும்.

இந்த ஏற்பாடுகளிலிருந்து இந்நிறுவனம் பின்வரும் சமூகநல விடயங்களில் தனது சேவைகளை விஸ்தரிக்க முடியும்.

- கல்வி சார் நடவடிக்கைகள்.
- சமூக நல நடவடிக்கைகள்.
- சமய கலாசார நடவடிக்கைகள்.
- பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்.

இச்சட்டத்தை உற்று நோக்குகையில் பின்வரும் மூன்று வகையான வியாபார அமைப்புக்களின் நடவடிக்கைகளில் காணப்படும் அம்சங்கள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

I. கம்பனி கூட்டமைப்புக்குரிய அம்சங்கள்

- பங்குகளைக் கொள்வனவு செய்தல்.
- நிர்வாகத்தைத் தெரிதல்.
- முகாமை முறை ஒழுங்கு.

இங்கு பொதுச்சபையின் ஏற்பாட்டில் பங்குத் தொகையை நிர்வகிக்க முடிவதோடு சிறந்த முகாமையைத் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.இவ்வமைப்பின் நடைமுறைகளுக்கிணங்க ஒரு பங்கின் பெறுமதி 5000 ரூபாயாகவும் மீளளிக்க முடியாத பங்குகளாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. நிரந்தரமான சமூக நல சேவைகளை உறுதிப்படுத்த மீளளிக்கப்படாத பங்குகள் அவசியமாகும்.இதனாலேயே இவ்வொழுங்கு செய்யப்பட்டிருப்பது அவதானிக்கத் தக்கது.

2. கூட்டுறவு இயக்கத்தின் தன்மை

கூட்டுறவு அமைப்பின் தன்மைகள் இச்சட்டத்தில் கூடிய செல்வாக்கைச் செலுத்துவதைக் காணலாம். இச்சங்கத்தின் ஆரம்ப அங்கத்தவரும்இவ்வமைப்பைத் தோற்றுவித்தவருமாகிய மதிப்பிற்குரிய திரு. ஆர்.எம். நாகலிங்கம் அவர்கள் கூட்டுறவு அமைப்புக்களில் கொண்டிருந்த செல்வாக்கு இச்சட்டங்களில் ஆங்காங்கே பிரதிபலிக்கின்றன. ஒருவருக்கு ஒரு வாக்கு, ஜனநாயக முறையில் அமைந்த பொதுச்சபை, இயக்குனர் சபை என்பவற்றை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

எனினும் கூட்டுறவுச் சங்கச் சட்டங்களிலே பங்குக்கு மட்டான வட்டி இலாபப் பங்கீடு போன்ற பிரதி இலாப முறைகள் காணப்பட இவ்வமைப்பிலே வட்டி உழைக்காத பங்கு,மீளளிக்க முடியாத பங்கு, பிரதி இலாபம் கருதாத பங்கு என்பன போன்ற அம்சங்கள் காணப்படுவதால் ஒரு பொருளாதாரத் தேவையிலிருந்து விடுபட்டு மனிதத்தேவை அல்லது சமூகத் தேவைக்கு மதிப்பளிக்கின்ற தன்மைகளைக் கூடுதலாகக் காணக்கூடியதாக இருக்கிறது. இவ்வேறுபாடுகள் இவ்வமைப்பின் தலைவர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பாகத் தான் கொண்டிருந்த கருத்துக்கள், அனுபவங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஏற்பாடுகளாக இருக்குமோ என எண்ணத் தோன்றுகிறது.

3. இச்சட்டத்தின் உருவாக்கம்

பொதுவாக பொதுப்பொருளாதார சமூக நலன்களுக்கென அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படும் சட்டங்களே இயல்பாகவும் விரைவாகவும் அங்கீகாரம் பெறுவனவாக உள்ளன.மாறாக தனித்துவமான அமைப்பொன்று பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் தனது நோக்கங்களுக்கு உருக்கொடுத்துப் பாராளுமன்றச் சட்டமாக்குவதென்பது மிகவும் கடினமான பணியாகும். இச்சட்டங்கள் தொடர்பாக எமது கருத்துக்களைப் பொதுமக்களுடன் கலந்துரையாடும்படி அழைத்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான ஒரு சட்டம் இயற்றப்பட்டிருப்பது கண்டு வியப்படைய நேர்ந்தது.

இச்சட்டம் முதன்முதல் 1993ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்களால் முன்கொண்டுவரப்பட்டது.சட்டம் நிறைவேறு முன்பே பாராளுமன்றக்காலம் நிறைவு பெற்றதால் மீண்டும் அடுத்த பாராளுமன்றத்துக்கு 1999ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் இச்சட்டத்தை முன்மொழிந்தார்.இக்காலப்பகுதியில் ஏற்பட்ட பல்வேறு வாதப்பிரதிவாதங்களோடு பல்வேறு தரப்பினரதும் அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டதாகவும் இச்சட்ட ஏற்பாடுகள் சட்ட அறிஞரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு மு.சிவசிதம்பரம் அவர்களின்

ஆலோசனைகளுடனும் ஒத்தாசைகளுடனும் மீண்டும் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டு சட்டமாக ஏற்றுக்கொள்ள இறுதியில் பல தரப்பினரும் ஒத்துழைத்ததாகவும் இச்சட்ட வரலாறு பற்றிக் குறிப்பிட்ட போது இந்நிறுவனத்தின் தலைவர் விதந்துரைத்தார். இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களினதும் இவ்வமைப்பின் அங்கத்தவர்களதும் அயராத பங்களிப்பின்றி இச்சட்டத்தை நிறைவேற்றியிருக்க முடியாதென்பது யாவரும் அனுமானிக்கக் கூடியதொன்றாகும்.இச்சட்டத்தின் மூலம் பெரும்பாலும் நன்மை அடையக்கூடியவர்கள் தமிழ் பேசும் சமூகத்தினரே என்பதும் தமிழ் பேசும் சமூகத்தின் இன்றைய நிலையை மனதில் கொண்டும் அவர்களுக்கு உதவியளிப்பதை நோக்கமாகக் கொண்டும் இச்சட்டம் ஆக்கப்பெற்றிருப்பதை இச்சட்டத்தின் உள்ளடக்கத்தை அவதானிக்கும் போது புரிந்து கொள்ள முடியும்.

இச்சட்டத்தில் கல்வி சார்ந்த விடயங்களுக்கு முக்கிய இடமளிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்க ஒரு முக்கிய அம்சமாகும். ஒரு நலிவடைந்த சமுதாயம் முன்னேற வேண்டுமானால் கல்வி சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்த வேண்டுமென்பது பல கல்வியியலாளர்களின் ஏகோபித்த கருத்தாகும். இவ்வாறே ஏனைய சமூக அமைப்பு நிறுவனங்களிலும் கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதைக் காணலாம்.

இந்நிறுவனம் தனது நடவடிக்கைகளை முன்னின்று நடத்த நிதிகளைக் கையாள வேண்டியது அவசியமாகவுள்ளது.நிதிகளைக் கையாளுகின்ற நிறுவனங்கள் அரச சட்ட அந்தஸ்தைப் பெற்றிருப்பது பொதுமக்கள் கண்ணோட்டத்தில் அவசியம் எனக் கருதியே பாராளுமன்றச் சட்டத்தின் அங்கீகாரத்திற்கு இவ்வமைப்பினர் முயற்சித்துள்ளார்கள் என்பது வெள்ளிடைமலை. இவ்வாறே இதன் நிதிகளையும் இவ்வமைப்பின் பணிகளையும் கணக்காய்வு செய்யக்கூடிய பொறுப்பு பட்டயம் பெற்ற அல்லது உரிய அங்கீகாரம் பெற்ற கணக்காய்வாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த வகையிலே இச்சட்டத்தின் கீழ் இயங்கும் இந்நிறுவனத்தினது நடவடிக்கைகளை அவதானிக்கும் பொழுது உண்மையான சமூக நல அக்கறை கொண்டோரின் பங்களிப்பை நிதர்சனமாகப் புரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.வெறுமனே ஒருசில புற்றீசல்களாக உருவெடுக்கும் சமூக அமைப்புக்கள் போலன்றி ஒரு நிரந்தரமானதும் தொடர்ந்து நீடிக்கக் கூடியதுமான ஒரு அமைப்பொன்றை உருவாக்குவதில் உழைத்து வரும் பெருமதிப்புக்குரிய இந்நிறுவனத்தின் தலைவரும் பிதாமகருமாகிய திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களுக்கும் இவ்வமைப்பின் பணிப்பாளர் சபைக்கும் தமிழ் பேசும் நல்லுலகம் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது.

உயர் திரு.ஆர்.எம்.என். அவர்கள் முகாமைத்துவக் கல்வியிற் பெற்றுக்கொண்ட அறிவும், கல்விப் புலமை, உயர்தொழிற் புலமை என்பவற்றுக்கு மேலாக அவர் இனத்தின் மீதும் சமூகத்தின் மீதும் கொண்ட ஆழமான பற்றே இவ்வாறான சிறந்த ஏற்பாடுகளுக்கு வழிகோலியுள்ளது. இவர் எனது வாழ்வின் உயர்வுக்கு வித்திட்ட எனது அன்புக்கும் பெருமைக்கும் உரிய ஆசான் என்பதை இத் தருணத்தில் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன். தனது ஓய்வின் பின்னரும் சமூகப் பணிகளுடன் சமய நெறிமுறையுடன் வாழும் இப்பெருந்தகை நீடூழி வாழ்ந்து மக்கட்பணி புரியவேண்டுமென எம்பெருமானை இறைஞ்சுகின்றேன்.

சமூக எழுச்சி இயக்கத்தின் மறுமலர்ச்சி சிந்தனைகளும் செயற்பாடுகளும்

பேராசிரியர் கலாநிதி தி. வேல்நம்பி
பீடாதிபதி
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

கால சூழ்நிலைக்கேற்ப நடப்பியல், நாகரீக மாற்றங்கள் ஏற்படுவது வழக்கமாயினும் எமது கல்வி, கலாசாரம், பண்பாடு போன்றவற்றின் ஆணிவேர் ஆட்டம் காணாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டியது எமது தலையாய கடமையாகும். அறிவியல் பார்வையொன்றில் பின்னோக்கியிருக்கும் ஒரு சமூகத்தை, சமூகத்தின் மேன்நிலை நோக்கி நகர்த்துவதற்குக் கல்வி மிகவும் அடிப்படையானது. கல்வியினூடாக கற்கும் விடயங்களுடன் எம்மையும், பிறரையும், சமூகத்தையும் நன்கு புரிந்துகொள்ள முடிவதுடன் சமூக மனிதனாக மாற்றம் பெறவும், சமூகத்தில் நல்ல இடையீட்டுத் தொடர்புகளைப் பேணவும் முடிகிறது. இவ்வகையில் தனிநபர் கலாச்சாரம் குழுக்களுடாகச் சமூகத்தை நோக்கி விரிசலடைகிறது. இவ்வகையில் கல்வி மனித செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்தி அவனைச் சமூகத்தோடு ஒன்றித்து விடுகின்றது. இந்நிலையில் பண்பாடு முக்கிய இடம்பெறுகின்றது. "கலாசாரம்" என்ற சமஸ்கிருதச் சொல்லின் தமிழ் பதமே "பண்பாடு" எனக் குறிப்பிடப்படுகின்ற போதும் இது நாகரீகம், நடத்தை போன்ற பல விடயங்களையும் உள்ளடக்கிய ஒன்று என்றே பலரும் கருதுகின்றனர். இவை உறுதியான கட்டமைப்போடு இருக்கும் போதே சமூகம் ஆரோக்கியமானதாக இருக்கமுடியும். இத்தகைய ஒரு சமூகத்தை சிருஷ்டிக்கவே மாவை பாரதி மறுமலர்ச்சி இயக்கம் தோற்றம் பெற்றது. அதற்குக் காரணகர்த்தாவாக இருந்த திரு. நாகலிங்கம் அவர்கள் என்றும் நினைவுகூரப்பட வேண்டியவர், பாராட்டப்பட வேண்டியவர்.

இருபது ஆண்டுகள் காலம் கூட்டுறவு அபிவிருத்தித் துறையிலும், பதினைந்து ஆண்டுகள் காலம் தேசிய வீடமைப்பு அதிகார சபையிலும் பொறுப்பான பதவிகளை வகித்துப் பணியாற்றிய திரு நாகலிங்கம் அவர்கள் ஏறத்தாழ அறுபத்தைந்து ஆண்டுகள் காலமாக சமூக மறுமலர்ச்சிக்காக பணிகளை ஆற்றிவருகின்றார். அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னதாகத் தான் சார்ந்த சமூகத்தின் பின்தங்கிய நிலையினை உணர்ந்து அதன் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் எனப் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். இதன் ஆரம்பக் கட்டமாகத் தான் கற்ற அறிவையும் பெற்ற அனுபவங்களையும் பிறருடன் பரிமாறவும் கலந்துரையாடவும் தொடங்கினார். சமூகத்தில் நடக்கும் ஒவ்வாத செயற்பாடுகளை மக்களுக்கு எடுத்துரைத்து அவற்றை நிறுத்துவதனூடாகச் சமூகத்தை நெறிப்படுத்தத் தொடங்கினார். செலவுக் கட்டுப்பாட்டினூடாகச் சேமிப்புப் பழக்கத்தையும் அதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். ஒருங்கிணைந்த சமூகத்தின் அவசியத்தையும் அதன்கண் விளையும்

அனுகூலங்களையும் எடுத்துரைத்தார். இத்தகைய செயற்பாடுகளால் அவரை ஒரு சமூகத் தலைவனாக மக்கள் ஏற்றுக் கொண்டனர்.

இவரது முயற்சியின் பயனாக 1955.09.12 இல் மாவை பாரதி வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டது. கல்வி, கலை, கலாசாரம், சமயம், பண்பாடு என்ற கூறுகளோடு செயற்படத் தொடங்கியது. பின்னர் மாலை சமூக எழுச்சி இயக்கமாக ஆரம்பிக்கப்பட்டது. இந்த எழுச்சி இயக்கத்தின் "ஆறு அம்சத்திட்டம்" இதன் செயற்பாட்டையும் நல்லெண்ணச் சிந்தனைகளையும் பலரையும் உணர வைத்தது.

சமூக வங்கி, புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம், பிராந்திய சபைகள், பிராந்திய முகாமைச் சபைகள், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபைச்சட்டம் என்பனவற்றை அமைத்ததுடன் இதன் செயற்பாடுகள் சமூகத்தை வலுப்படுத்தத் தொடங்கின. இவற்றின்மூலம் முன்வைக்கப்பட்ட பல்வேறு புலமைப்பரிசில் நிதியங்கள் இதன் அங்கத்தவர்களையும், சமூகத்தையும் வலுவூட்டத் தொடங்கியதுடன் மக்களை சமூகம் நோக்கிய பார்வை கொண்டவர்களாக மாற்றியது. கடந்த வருடம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மும் பெரும் தமிழ் பண்பாட்டு விழா அனைவரையும் வியக்க வைத்தது. அதன் போது இடம்பெற்ற நினைவுப் பேருரையும் நம்பண்பாட்டை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகளும் பண்பாட்டைப் பேணும் இவ்வியக்கச் செயற்பாட்டை எடுத்துக் காட்டியது. கல்வியிலும் கலையிலும் பிறமுயற்சிகளிலும் சாதித்தவர்களைக் கௌரவித்தமையும், அவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டமையும் இதன் உயர்வான எண்ணங்களை எடுத்துரைத்தன. போரினால் பாதிக்கப்பட்ட, வாழ்க்கைத்துணையை இழந்தவர்களுக்கு வாழ்வாதாரத் தூண்டல் உதவிகள் வழங்கப்பட்டமை எம் நெஞ்சில் என்றும் மறக்கமுடியாத ஒன்றாக உறைந்திருக்கின்றது.

நம் சமூகத்தின் கலாசாரம் பண்பாடு சீரழியத் தொடங்கிவிட்டது எனப் பலரும் ஆதங்கப்படும் நேரம் அவற்றைக் கட்டிக்காக்கும் வகையில் மாவை பாரதி மறுமலர்ச்சி இயக்கமும் செயற்பட்டு வருவது உண்மையில் வரவேற்கத்தக்க விடயமாகும். இவ்வடிப்படையில் நமது கலாசாரம், பண்பாடு, ஒழுக்கம் பற்றிய ஒரு சிறப்புப் பார்வையாக இக் கட்டுரை எழுதப்படுகின்றது.

கலாசாரம் என்பதனை ஆங்கிலத்தில் "Culture" என அழைப்பர். "Culture" என்ற ஆங்கிலப்பதம் "Kult" என்ற ஜேர்மன் மொழிச் சொல்லிலிருந்து வந்ததென்பர். ஜேர்மன் மொழியில் பயன்படுத்தப்பட்ட சொல்லிலேயுள்ள "K" என்பது ஆங்கிலத்தில் "C" என வழங்கப்பட்டு Culture எனப் பயன்படுத்தலாயிற்று. இது மண்ணைப் பண்படுத்துதல் (Cill the Soil) என்ற பொருளில் அழைக்கப்பட்டிருந்தது. "கலர்சாரம்" என்பது வடமொழிச் சொல்லாகும். இதற்கு இணையாகத் தமிழில் "சால்பு" எனற சொல்லே பயன்படுத்தப்பட்டிருந்தது. சங்க இலக்கியங்களில் கையாளப்பட்ட "சால்பு" எனும் சொல் பின்னர் திருக்குறளிலும் பயன்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும். எவ்வாறாயினும் கலாசாரம் என்ற வடமொழிச் சொல் தமிழில் பண்பாடு என்பதனையே குறிக்கும் என டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். எனவே பண்பாடு என்ற தமிழ்ச் சொல்லுக்குள் கலாசாரம் அடக்கம் பெறுகின்றது என்ற அடிப்படையில் கலாசாரம் எனபதை வரையறுக்க முடியும்.

பெருமளவு மக்கள் குழுவின் அல்லது மக்கட் தொகுதியின் நடத்தைகளைப் பாதிக்கும் நம்பிக்கைகள் (Beliefs), பெறுமதிகள் (Values) மற்றும் நியமங்கள் (Norms) பற்றிய கற்றுக் கொள்ளப்பட்ட புலணுணர்வுத் தொகுதியே கலாசாரம் எனப்படுகிறது. இதிலிருந்து கலாசாரம் என்பது சமூகமயப்படுத்தப்பட்ட ஒன்று என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

மனிதர்கள் குறித்த ஒரு கலாசாரத்துடன் பிறப்பதில்லை. மாறாக பெற்றோர், குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள், அறிமுகமில்லாத புதிய நபர்கள் முதலானவர்களின் ஆளிடைத் தொடர்புகளினூடாக மக்கள் தமது கலாசாரத்தைக் கற்றுக்கொள்கின்றனர். இதனாலேயே கலாசாரம் கற்றுக்கொள்ளப்படுகின்றது (Culture is learned) என அழைக்கப்படுகின்றது. ஒருவர் சமூகவயப்படும் வகையில் செயற்படும்போது அத்தகைய நபர்களிடமிருந்து கலாசாரம் கற்றுக் கொள்ளப்படுகின்றது. குறிப்பாக முதியவர்கள் அல்லது பெரியவர்கள் எவ்வாறு செயற்படுகின்றார்கள், அவர்கள் எவ்வாறு சிறியவர்களுடன் அல்லது புதிய குழந்தைகளுடன் பேசுகின்றார்கள் என்பதை அவதானித்தல் மக்களிடையே உண்மையான கலாசாரப் பரிமாற்றத்துக்கான அடையாளத்தைப் பார்ப்பதற்கான மிகச்சிறந்த இடமாக அமையும். எனவே பெரியவர்களின் செயற்பாடுகள், பண்பாடு என்பவற்றைப் பின்பற்றிச் சிறியவர்கள் தமது செயற்பாடுகளையும் வாழ்வியல் முறைகளையும் அமைத்துக்கொள்கின்றார்கள். ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் பிறந்த இரண்டு குழந்தைகள் வேறுபட்ட கலாசாரச் செயற்பாடுகளுடன் இருப்பதற்கு இதுவே காரணமாக அமைகின்றது.

அத்துடன் ஒரு தொகுதிப் பகிர்வுப் புலணுணர்வுகளே கலாசாரம் எனக் கருதப்படுகின்றது (Culture is a set of shared perception). கலாசாரம் என்பது மக்களின் மனதில் உதிக்கின்ற ஒன்றாகவே காணப்படுகின்றது. இது புறவயரீதியாகவோ, உருவமுள்ள பொருட்களிலிருந்தோ(Tangible objects), நடத்தைகளிலிருந்தோ உருப்பெறுவதில்லை. ஆனால் மனதளவிலே தோன்றுகின்ற கலாசார உணர்வுகள் மக்களின் நடத்தைகளின் மீது செல்வாக்குச் செலுத்துவதாக அமையலாம். இவ்விதம் கலாசாரமென்பது உளம் சம்பந்தப்பட்டதாக இருப்பதனாலேயே அது ஒருவகையில் "பண்பாடு" என அழைக்கப்படுகிறது.

"சுடச்சுட ஒளிரும் பொன்போல துன்பத்தின் மேல் துன்பம் வரும்போதே உள்ளம் பண்பட்டுத்தூய்மையடையும்"

என்பார்கள். இவ்விதம் உள்ளத்தைப் பண்படுத்துதல் பண்பாடு எனப்படுகின்றது. இவ்வாறு உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்கள் தொடர்பாடல் செய்முறைக்குட்படுத்தப்படுகின்றன. அதாவது ஒருவரது மனதிலிருக்கும் சிந்தனைகள் ஒத்த நிலையிலிருக்கும் பலருக்குப் பரிமாற்றப்படுகிறது. இதனாலேயே கலாசாரம் ஒரு பெருந்தொகுதி மக்களின் ஒரு பகிர்வுப் புலணுணர்வு என அழைக்கப்படுகின்றது. எனவே நல்லதொரு கலாசாரத்தை, நல்ல கலாசாரமுடைய சமூகத்தைக் கட்டியெழுப்பவேண்டுமாயின் எமது சிந்தனைகள் அல்லது எண்ணங்கள் (Thoughts) மிகச்சிறந்தவையாக இருக்கவேண்டும்.

கலாசாரம் நம்பிக்கைகள் (Beliefs), பெறுமதிகள் (Values), மற்றும் நியமங்கள் (Norms) என்பவற்றுடன் தொடர்புபடுகின்றது. பகிர்வுப் புலணுணர்வுகளுடாகக் கட்டமைக்கப்படும் கலாசாரமானது நம்பிக்கைகள், பெறுமதிகள், நியமங்கள் பற்றிய இலக்குகளாக / சிந்தனைகளாக (Ideas) அமைகின்றன. இவற்றை விளங்கிக் கொள்வதிலுள்ள முக்கியத்துவம்

காரணமாகவே கலாசாரம் ஆளுக்காள் வேறுபடத் தொடங்குகின்றது. இங்கு நம்பிக்கைகள் (Beliefs) என்பது உலகம் அல்லது சமூகம் எதை விரும்புகின்றது அல்லது எது சரி, எது பிழை என்பது பற்றிய ஒரு மக்கட்குழுவின் (Group of People) அடிப்படைப் புரிந்துணர்வைக் குறிக்கின்றது. ஆகவே இது கூட மனம் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. மாறாக எது நல்லது, எது கெட்டது அல்லது எது முக்கியமானது என ஒரு மக்கட்குழு வரையறை செய்துகொள்ளுமாயின் அவை பெறுமதிகள் (Values) என அழைக்கப்படுகின்றது. நாம் நல்லது என நினைத்துச் செய்யும் செயல் ஒன்று தவறானதாகவோ, சமூகத்துக்கு ஒவ்வாததாகவோ இருக்கலாம். இதற்குக் காரணம் எமது எண்ணம் அல்லது சிந்தனை அடிப்படையில் பிழையாக இருப்பதே. நியமங்கள் (Norms) என்பது ஒருவர் மற்ற ஒருவரிடம் அல்லது மற்றவர்களிடம் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புக்களை (expectations) வழங்கும் பொருத்தமான நடத்தைகளுக்கான (Appropriate behaviour) விதி முறைகளைக் குறிக்கும். இவ் வகையில் கலாசாரம் என்பது நம்பிக்கைகள், பெறுமதிகள், நியமங்களுடன் தொடர்புபட்ட ஒன்றாகக் காணப்படுகிறது.

மேற்படி கலாசாரம் நடத்தை மீது தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் காணப்படுகிறது. கலாசாரம் மக்களின் மனதில் கட்டமைக்கப்படுகின்றதெனின் ஒருவருடைய மனதில் இருப்பதை மற்றவர்கள் கண்டுகொள்வது கடினமானது. எவ்வாறாயினும் நம்பிக்கைகள், பெறுமதிகள், நியமங்கள் பற்றிய பகிர்வின் விளைவானது பெரிய மக்கட்குழுவின் (Large group of people) நடத்தை மீது தாக்கத்தை ஏற்படுத்திவிடுகிறது. இன்னொரு வகையில் கூறின் கலாசார ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட பகிரப்பட்ட புலனுணர்வுகள் ஒரு விடயம் எதனைக் கருதுகின்றது, எது முக்கியமானது, எதைச் செய்யவேண்டும் எதைச் செய்யக்கூடாது என்பது பற்றிய ஒரு நெறிப்படுத்தலை மக்களுக்கு வழங்குகின்றது. இவ் வகையில் கலாசாரத்தின் மீதான வேறுபாடுகளைப் பல வழிகளில் கண்டுகொள்ள முடியும். குறிப்பாக மக்களின் நாளாந்த வேலை முறைகள், நடத்தையியல் முறைகளில் தமது கலாசாரத்தைச் செயற்படுத்தும் முறை போன்றவற்றினூடாக ஒவ்வொருவரதும் கலாசார ரீதியான அம்சங்களைக் கண்டறிய முடியும். இத்தகைய கலாசாரமானது தனியே ஒரு சிறிய தொகுதி மக்களிடையே மட்டுமன்றிப் பெரிய மக்கள் குழுவைச் சென்றடைவதாகவே காணப்படுகிறது. இதனால் ஆட்களுக்கிடையிலான தொடர்புகள் (Interpersonal relationships) வலுப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பெரிய மக்கள் குழுவுடன் தொடர்புடைய கலாசாரம் விரிவடைந்து பல்லினங் களுக்கிடையே பரவலாக்கம் பெறத் தொடங்குகின்றது. இவ்வகையில் கலாசாரப்பல்வகைமை (Cultural Diversity) என்பது முக்கியம் பெறுகின்றது.

இவ் வகையில் நம் சமூகத்தில் நல்ல கலாசார பண்பாட்டு அம்சங்களை பேணிக் கொள்வதற்கும் சமூக நிலைத்திருப்புக்கும் ஏற்ற வகையில் பின்வரும் சிபார்சுகள் முன்வைக்கப்படுகின்றன.

1. மனம் சார்ந்ததாக இருக்கும் கலாசார, பண்பாட்டு அம்சங்கள் ஒரு சிறு குழுவினரிடையே பகிரப்பட்டு பின்னர் அது பெரிய மக்கட் குழுவினரிடையே பரவலாக்கப்பெற்றுச் சமூகம் முழுவதையும் சென்றடைகிறது. இந்நிலையில் எமது சிந்தனைகள் சிறந்தவையாகவும் உள்ளத்தைப் பண்படுத்துவனவாகவும் அமையவேண்டும். எனவே பெரியவர்கள்

இனிமையாகவும், அன்பாகவும், பண்பாகவும் பேசுவதுடன் அவ்வாறே தம்பிள்ளைகளையும் தம்மைச் சார்ந்தவர்களையும் வழிப்படுத்திவிடவும் சமூகத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதன் மூலம் சமூகத்தை ஆற்றுப்படுத்த வேண்டும். அப்போது தான் சமூகம் எம்மை ஏற்றுக்கொள்ளும், அங்கீகரிக்கும்.

2. சமூகத்தின் முதல் மட்ட அலகு குடும்பம் என்பதனால் குடும்பத்தில் தலைவன், தலைவி ஆகியோரிடையே அன்னியோன்னியமான உறவும், புரிந்துணர்வும் இருத்தல் வேண்டும். எந்தச் சூழலிலும் முரண்படாத, வன்சொல் பாவனை அற்ற இனிய வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். இவ்வாறே பிள்ளைகள் மீதும் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் மீதும் அன்பும் ஆதரவும் உள்ளவர்களாக இருத்தல் அவசியம். குடும்பத் தலைவர்கள் என்ற ரீதியில் தம்மைப் பின்பற்றியே மற்றையவர்கள் செயற்படுவார்கள் என்பதால் இவர்கள் முன்மாதிரியானவர்களாகச் செயற்படுதல் வேண்டும்.

3. நமது மொழிக்கும், கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களுக்கும் முன்னுரிமை கொடுத்தல் வேண்டும்.

4. பெற்றோரும் பிள்ளைகளும் மற்றும் குடும்ப அங்கத்தவர்களும் ஒன்றுசேர்ந்து கலந்துரையாடுவதற்கான நேரத்தை வீட்டில் ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். குறைந்தபட்சம் ஒரு வேளையாவது எல்லோரும் ஒன்றுசேர்ந்து உணவு உண்ணும் பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ளுதல் சிறந்தது. இதனூடாக அன்பு, உறவைப் பலப்படுத்திக் கொள்ளவும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும் ஒருவரது உள்ளக் கிடக்கையினை மற்றையவர்கள் அறிந்துகொள்ளவும் முடியும். இதனால் ஒரு கட்டுக்கோப்பான குடும்பத்தை உருவாக்க முடிவதுடன் சமூகப் பிறழ்வில்லாத நற்பண்புள்ள மனிதர்களை உருவாக்க முடியும்.

5. பிள்ளைகளின் தேவையினை அறிந்து அதனை உரிய முறையில் நிறைவு செய்பவர்களாகப் பெற்றோர்கள் இருத்தல் வேண்டும். தேவையை சரியான முறையில் நிறைவு செய்யாத பொழுது பிள்ளை பெற்றோரிலிருந்து விலகிச் செல்ல முற்படலாம். மாறாக தேவையைப் பூர்த்தி செய்யும் நிலைமை குடும்பத்தில் இல்லாத பொழுது தனது குடும்ப நிலையை உணர்ந்து கொள்ளக்கூடிய பக்குவ நிலையில் பிள்ளைகள் இருத்தல் வேண்டும். இப் பக்குவ நிலை இளம் பராயத்திலிருந்தே பிள்ளைகளிடத்தில் ஊட்டப்பட்டிருத்தல் வேண்டும். பிள்ளைகளின் தேவைக்கு மேலதிகமாகப் பெற்றோர்கள் வசதி வாய்ப்புக்களை வழங்குவதும் நல்லதல்ல.

6. பிள்ளைகள் தம்மால் வழங்கப்பட்டமைக்கு மேலதிகமாக ஏதேனும் வசதி வாய்ப்புக்களைக் கொண்டிருக்கும் பொழுது அவை எப்படி வந்து சேர்ந்தன? என்ற ஆராய்ச்சி பெற்றோர்களிடையே இருத்தல் வேண்டும். அன்றேல் பிள்ளைகள் சமூகத்துக்கு ஒவ்வாதவர்களாக மாற்றம் பெறலாம்.

7. அண்மைக் காலங்களில் கைத்தொலைபேசிப் பாவனை இளம் சமூகத்தினரிடையே சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. பெற்றோர்கள் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்கின்ற சந்தர்ப்பத்தில் இதற்கான அனுமதியினை வழங்குதல் கூடாது. அவசிய தேவைகளுக்காக இதன் பாவனை வேண்டப்படுமாயினும் பிள்ளைகள் இதனை எதற்குப் பயன்படுத்துகின்றார்கள்? எப்படிப் பயன்படுத்துகின்றார்கள்? என்ற அவதானிப்பு பெற்றோர்களிடையே கட்டாயமாக இருத்தல் வேண்டும்.

8. மனிதர்களிடையே குறிப்பாக இளம் சமூகத்தினரிடையே ஆன்மீக, ஆத்மீக உணர்வுகளை வளர்த்துக் கொள்வதற்கு உறுதுணையாக இருத்தல் சிறந்தது. இவ்வுணர்வு இருக்கும் பொழுது அவர்கள் பொதுவாக தவறு செய்ய முன்வரமாட்டார்கள்.

9. சமூகத்தில் முதியவர்களுக்கும் இளைஞர்களுக்குமிடையிலான இடைவெளி நிரப்பப்படுதல் வேண்டும். முதியவர்கள் நவீன போக்குகளையும் நடைமுறைகளையும் விளங்கிக் கொள்ளாது இளைஞர்கள் மீது தமது கருத்துக்களைத் திணிக்க முற்படுகின்ற பொழுது இத்தகைய இடைவெளி ஏற்பட வாய்ப்புண்டு. எனவே முதியவர்கள் இவற்றைப் புரிந்துகொண்டு தமது கருத்துக்களை உரிய முறையில் வெளிப்படுத்துவார்களாயின் நல்லுறவு நிலையினை கட்டியெழுப்பமுடியும்.

10. தொழில் நிறுவனங்களில் அதிகாரிகள் தமது அதிகாரத்தைப் பிரயோகிக்காது விதிகளையும் நடைமுறைகளையும் அனுசரித்துக்கொண்டு உதவியாளருடனான உறவினைப் பேணிக்கொள்ளல் வேண்டும். ஆண் பெண் உறவு நிலைகளும் கௌரவ நிலைகளும் உரியவாறு பேணிக்கொள்ளப்படல் வேண்டும்.

11. இன மத வேறுபாடற்ற ஜனநாயக ரீதியான ஒத்துழைப்பும் ஒற்றுமையும் சமூகத்தில் நிலைத்திருக்குமாயின் சமூகம் உயிர்த்துடிப்பான சமூகமாக இருக்கும். இதற்கு எல்லோரும் கல்வியால் உயர்ந்தவர்களாக, கலைகளில் நாட்டம் மிக்கவர்களாகவும் ஈடுபாடுள்ளவர்களாகவும் இறை சிந்தனையும், ஆன்மீகப்பற்றும் உள்ளவர்களாக இருப்பது விரும்பத்தக்கது.

சமூக எழுச்சி இயக்கத்தின் சமய, ஆன்மீக, ஒழுக்க, கலாசார, பண்பாட்டு, வாழ்வியல், சிந்தனைகளும் வழிகாட்டலும்

பண்டிதர், கலாபூஷணம்
சி.அப்புத்துரை
(ஓய்வு நிலை அதிபர்)
இளவாலை

எழுச்சித்தந்தை ஆர்.எம்.என். என மதிக்கப்படும் மாவை திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களால் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தலைமைதாங்கி வளர்க்கப்பட்டு வருகின்ற சமூக எழுச்சி இயக்கத்தின் ஆறு அம்சக் கோட்பாடுகளில் ஒன்றாக இருப்பதுதான் சமயம், ஆன்மிகம், ஒழுக்கம், கலாசாரம், பண்பாடு, வாழ்வியல் சிந்தனைகளும் வழிகாட்டலும்.

திரு.ஆர்.எம்.என். அவர்கள் தனது சொந்த வாழ்வியலில் கடைப்பிடித்துவரும் அனுபவத்தின் மூலம் பிறந்ததுதான் இக்கோட்பாடு என்றால் மிகையாகாது.

சமூக நிறுவனமொன்றின் மூலம் அதன் பயனாளி மக்கள் சமூக அந்தஸ்தால், கல்வி மேம்பாட்டால், தொழில் வளர்ச்சியால், பொருளாதார மேம்பாட்டால் எவ்வளவுதான் வளர்ச்சி பெற்றாலும் தமது வாழ்வியல் கொள்கைகளான உயரிய ஒழுக்கத்தைப் பேணுதல், தமது கலாசார பாண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்த்தல் போன்ற துறைகளில் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்ளாவிடின் ஏனைய வளர்ச்சிகள் நிலைக்காமல் பயனற்றனவாகிவிடும் என்ற உண்மையை உணர்ந்தததன் பேறாக மேற்படி கோட்பாட்டை அனுசரிப்பதை வழிப்படுத்தி வருகின்றார்.

இவரது சமய வளர்ச்சிக்கான பங்களிப்பு, ஆன்மீக வளர்ச்சிக்கான பங்களிப்பு, கலைகலாசாரத்திற்கான பங்களிப்பு, பண்பாட்டு விழுமியங்களுக்கான பங்களிப்பு, மொழியின் வளர்ச்சிக்கான பங்களிப்பு, சமத்துவம் பேணுதலுக்கான பங்களிப்பு எனும் இவை எல்லாம் அவரது தாயாரின் வளர்ப்பின் மூலம் வளர்த்துக் கொண்ட சிந்தனைத் திறனின் விளைவு என்றே சொல்லலாம்.

தெல்லிப்பழை, மாவிட்டபுரத்தில் முருகேசு கற்பகம் தம்பதிகளின் ஏக புத்திரனாக 14.10.1936இல் பிறந்த திரு.ஆர்.எம்.என் அவர்கள் மாவிட்டபுரம் அமெரிக்க மிசன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் உயர் கல்வியையும் பெற்றவர்.

கூட்டுறவுத்துறையில் மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் நடைபெற்ற பயிற்சி நெறிகளில் பங்குபற்றி அப்பரீட்சை ஒவ்வொன்றிலும் முதன்மை பெற்றவர். அதன் பேறாகத் திருகோணமலைக் கூட்டுறவுக் கல்லூரி, யாழ்.கூட்டுறவுக்

கல்லூரி, தேசிய பொல்கொல்லைக் கூட்டுறவுக் கல்லூரி என்பவற்றில் கணக்கியல், முகாமைத்துவத் துறைகளில் விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கூட்டுறவுத்துறைக்கு 1960-1980 வரை இருபது ஆண்டுகள் பணிபுரிந்தவர். கணக்கியல் துறையில் பெற்ற கல்வியின் பேறாகக் கணக்காளராகவும், முகாமையாளராகவும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் பிரதம உள்துறைக் கணக்காய்வாளராகவும் பணிபுரிந்து தேசிய வீடமைப்புக்குப் பெரும் பணி செய்துள்ளார்.

உத்தியோகத்தின் மூலம் தான் பெற்றுக் கொண்ட திறன்களையும் அனுபவத்தையும் சமூக எழுச்சிக்கு வித்திட்டுப் பெருவெற்றியும் கண்டுள்ளார்.

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என்ற கூற்றுக்கு முற்றுமுழுவதுமாகத் தன் அன்னை தன்னை உருவாக்கியதை அவரே நினைவு கூர்கின்றார்.

இவரது தாயார் 1989இல் இறையடி சேர்ந்தபோது வெளியிடப்பெற்ற நினைவு மலரில் இவர் குறிப்பிட்டிருக்கும் செய்தி இங்கு கவனிக்கத் தக்கது. இதைப் படிப்போர்க்கும் பயன் தரத்தக்கது.

'விரதம் பூண்டு என்னை ஈன்றதாய், இறுதிவரையில் என் வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாக இருந்து 53 ஆண்டுகளாக என்னை வளர்த்து ஆளாக்கியுள்ளார். என்னை ஆளாக்குவதில் அன்னை கையாண்ட கொள்கைகளும், செயற்பாடுகளும்தான் என்னை இந்நிலைக்கு உயர்த்தின. ''எல்லாம்வல்ல இறைவனே எங்கும் என்றும் எமக்குத் துணை'' என்ற நம்பிக்கையூட்டி, சமயப்பணிகளில் ஈடுபடுத்தி, பக்தி மார்க்கத்திற்கு வழிகாண்பித்து, என்னை நல்வழிப்படுத்தி, மாவை விநாயகர் ஆலயத்தினதும், மாவை அம்பாள் ஆலயத்தினதும் வளர்ச்சிக்கும், முதன்மைப் பங்களிப்புக்கும் வகை செய்தார். 'கண்காணிப்புடன் கூடிய தடைவிதியாக் கொள்கை' மூலம் என்னைச் சமூகப்பணிகளில் ஆழமாக ஈடுபடச் செய்து தவறுகளைக் கண்காணித்து சமூகத்துக்கு எனது பங்களிப்பைச் செய்யத் தூண்டியதன் பயனாக மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றக் கழகங்களின் தோற்றத்திற்கும் என்னை முதன்மையான பணி செய்ய வழிகாட்டியவர் என் தாயார். பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகங்கள் ஐந்தாம் வகுப்புடன் கல்வியை நிறுத்திய காலகட்டத்தில் 'பட்டினிவரினும் படிக்க வைப்பேன்' எனச் சபதம் பூண்டு உறுதியோடு என் கல்வி வளர்ச்சிக்குப் பங்களித்ததன் மூலமாகவே நானும் கல்வித்துறையில் கணிசமான முன்னேற்றங்களைக் காணமுடிந்தது' என்கின்றார்.

இவர் இளைஞராயிருந்த காலத்தில் தான் வாழும் சமூகத்தில் நிலவிய சமூக உறவுகளின் பிற்போக்குகள், பிரிவினைவாதம், நேரக்கட்டுப்பாடின்மை, புனிதம் பேணாமை, கல்வியில் நாட்டமின்மை முதலான குறைபாடுகளை மனதிற் கொண்டு 1947இல் ஆலயங்களைத் தளமாகக் கொண்டு சமய சமூகப் பணிகளை ஆரம்பித்தார்.

மாவைச் சித்தி விநாயகர் ஆலயம், மாவை அம்பாள் ஆலயம் என்பவற்றில் கோயில் வழிபாடு ஒழுங்கு, பண்ணிசை வகுப்பு பஜனை செய்தல், யோகாசனப் பயிற்சி, தியானப் பயிற்சி, சிரமதானப் பணிகள் என்பவற்றினூடாகச் சிறுவர்களையும் வயதானவர்களையும், ஒன்றிணைத்து ஒரு சமூக விழிப்புணர்ச்சியாகப் பணிகளைத் தொடங்கினார். இவரது தன்னலங்கருதாத தூய்மையான சிந்தனையுடன் கூடிய இப்பணியில் பலரும் இணைந்து கொண்டனர்.

இதன்பேறாக 12.09.1955 இல் மாவை அம்பாள் ஆலயத்தில் மாவை பாரதி வாசிகசாலை என்ற நாமத்துடன் திரு.ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் தலைமையில் இந்நிறுவனம் தோன்றியது. வேலைத்திட்டம் வகுத்து பணிகள் பன்முகவளர்ச்சி கண்டன. வாசிகசாலை என்ற பெயர் அதனுடைய நோக்கத்திற்கும், பன்முகப்படுத்தப்பட்ட சேவைகளுக்கும், பொருத்தமானதெனக் கருதப்படாத காரணத்தால் 19.10.1971 இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

1955இல் ஆரம்பிக்கப்பட்ட இம்மன்றத்தின் வளர்ச்சியை ஆவணப்படுத்தி 1980-09-12இல் வெள்ளிவிழாவும் மலர்வெளியீடும் நடைபெற்றன. இவருடைய தலைமையிலேயே படிமுறையான வளர்ச்சிகள் ஏற்பட்டன. தலைவரின் ஆளுமைத்திறமும் ''நல்லதையே சிந்திப்போம், நல்லதையே சொல்வோம், நல்லதையே செய்வோம், நன்மை நம்மை நாடி வரும்,'' என்ற இலட்சியம் செயற்பாடு, நிறுவனப் பணிகளை மேலோங்கச் செய்தன.

இதன் பயனாக 1980இல் மாவையில் தேசிய சமூக எழுச்சி இயக்கம் தோற்றம் பெற்றது. ஆறு அம்சத் திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. தொடர்ந்து மூன்றாவது கட்டமாக கிராம மட்டத்தில் தாபிக்கப்பட்ட நிறுவன ரீதியான தலைமையால் 24 சமூக முன்னேற்றக் கழகங்கள் நிறுவப்பட்டு எழுச்சிக்கு வழிவகுக்கப்பட்டது. 1981இல் மாவை எழுச்சி இயக்கத்தின் தொண்டமானாறு தேசிய மாநாட்டில் ஆறு அம்சத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு 'சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்' தாபிக்கப்பட்டது.

1998ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட முகாமைக் கட்டமைப்பு முறையால் பணிகள் விஸ்தரிக்கப்பட்டு கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கொழும்பு மாவட்டங்களிலும் மாவட்ட ரீதியாகப் பிராந்திய முகாமைச்சபைகளும் அமைக்கப்பட்டன.

1993முதல் எடுத்துக் கொண்ட விடாமுயற்சியின் பயனாக 1999.12.14இல் 1999ம் ஆண்டு 52ஆம் இலக்கத்தைக் கொண்ட ''புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபைச் சட்டமானது''பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்மூலம் அகில இலங்கை தழுவிய மட்டத்தில் சேவை விஸ்தரிக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.

இந்நிதியத்தின் நிதிவளங்கள்

1. நன்கொடைப் பங்கு மூலதனம்,
2. ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் நிதி,

3. திருமணநாள் நினைவுப் புலமைப் பரிசில் நிதி
4. பிறந்த தினநாள் நினைவுப் புலமைப்பரிசில் நிதி
5. தனிநபரின் பெயரால் புலமைப்பரிசில் நிதி,
6. பரிசளிப்பு நிதி,
7. காணிகட்டிட நிதி

முதலான பன்முகப்பட்ட நிதி வளங்கள் மூலம் கல்விப் புலமைப்பரிசில்கள் வழங்கிக் கல்வி பெற வசதி வாய்ப்பு இல்லாத மாணவர்களை கற்றவர்களாக உருவாக்கியது மட்டுமன்றி இப்பொழுதும் அப்பணிகள் தொடர்வதைக் காணமுடிகிறது.

2008இல் வெளியிடப்பட்ட புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர் சபை அறிக்கையும் நிதிக் கூற்றுக்களின் திரட்டும் (ஆண்டு 1993 முதல் 2008 வரை) எனும் வெளியீட்டின் மூலம் இச்சபையின் அளப்பெரும் பணியின் பரப்பையும், திட்டவட்டமான கணக்குகளின் விபரத்தையும் அறியமுடிகின்றது.

இத்தனை வளர்ச்சிக்கும், தொடர் பணிகளுக்கும் நிர்வாகக் கட்டமைப்பிற்கும் காரணம் எழுச்சித் தந்தை ஆர்.எம்.என். அவர்களின் தலைமைத்துவ ஆளுமைப்பண்புதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவருடைய அறிவுத்திறனும், அனுபவ முதிர்ச்சியும் அபிவிருத்தி நோக்கிய சிந்தனையும், எதிலும் தர்ம சிந்தனையுடன் கூடிய செயற்பாட்டு வழிகாட்டலும், காலத்துக்கேற்றவண்ணமான ஐக்கிய வளர்ச்சிக் கொள்கைகளும் இந்நிதியத்தை அதிசயிக்கத்தக்க வகையில் பயன்தரச் செய்து வருவதைக் காணமுடிகிறது.

அண்மைக்காலத்தில், சுனாமி அனர்த்தம், போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர் களுக்கு குறிப்பிட்ட இடங்களுக்குத் தேடிச்சென்று இந்நிதியத்தின் மூலம் செய்த உதவிகள் எண்ணில. இதன் மூலம் இந்நிதியத்தின் உறுப்பினர்களின் தர்மசிந்தனையை வளர்த்தல், தானம் வழங்கப் பயிற்றல் ஆகிய விழுமியப் பண்புகளும் விருத்தி செய்யப்படுகின்றன.

நீத்தார் பெருமை பேணுதல், அஞ்சலிகள், நினைவுநூல் வெளியிடுதல் மூலமாகப் புதியதோர் பயன்பாட்டு முறையை அறிமுகம் செய்துவைத்துள்ளமையும் பலரும் பின்பற்ற வேண்டியதொரு செயலாகும். நீத்தார் நினைவாக நினைவுநூல் நீத்தார் பெருமை பற்றியதாகவே அனேகமாக இருக்கும். ஆனால் இவர்களோ சமூகப் பயன்பாடுடைய, ஆக்கப்பாட்டுக்குரிய ஆக்கங்களைத் தாங்கியனவாகவே இதுவரை சுமார் 100 நூல்களை வெளியிட்டுள்ளமை முன்மாதிரியான செயலாகும்.

தமது செயற்பாடுகளுக்குத் தக்க நல்லறிஞர்களை மதியுரைஞர்களாகக் கொண்டிருப்ப தும், தக்கவேளைகளில் அவர்களையும், இந்நிதியத்தைச் சேர்ந்தவர்களையும் பாராட்டிக் கௌரவிக்கும் மரபும் தொடக்கி வழிப்படுத்தப்பட்டு வருவதும் நல்லதோர் பணியாகும்.

எழுச்சித் தந்தை ஆர்.எம்.என் அவர்களின் தனித்துவ ஆளுமைப் பண்பு எந்தவேளையிலும் எப்பதவிக்கும் தான் போட்டியிடாமல் ஏகோபித்த நன்நம்பிக்கையைப்

பெற்றிருப்பதும், அதேபோல் தான் எந்தப் பாராட்டையும் பெறாமல், மற்றவர்களைப் பாராட்டுவதிலே நிறைவு காணுவதும் ஆகும்.

எழுச்சித் தந்தை ஆர். எம். என் எழுபத்தைந்து வயதைக் காணும் ''இந்நன்னாளில் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாய்'' வாழும் அவரை வாழ்த்துவதில் பெருமை பெருகின்றோம்.

பல சமூகசேவை நிறுவனங்கள் தோன்றுவதும் சில ஆண்டுகளில் அவை நலிவடைந்து மறைந்து போவதும் நான் நேரில் கண்டு கொண்டிருக்கும் காட்சிகளாயுள்ளன.

அப்படி இருக்க, இந்த எழுச்சி இயக்கம், கடந்த அறுபத்தைந்து ஆண்டு காலமாகப் பணி செய்து தொடர்ந்தும் ஏறுநிலையில் மேல்நோக்கி உறுதியான கட்டமைப்புடன் வளர்ந்து வருவதும் பலருக்கும் வியப்பைத் தரும் செய்தியாகும்.

இதன் காரணம் பயனாளிகளின் குடும்பங்களின் மத்தியில் அன்று தொட்டு இன்றுவரை வளர்த்து வரப்படுகின்ற ஒழுக்க கலாசார, பண்பாட்டு விழுமியங்களின் விளைவு என்றே கூறலாம்.

நாம், தமிழர் பண்பாட்டு விழுமியங்களை இவ்வழிமுறை மூலம் பேணிவளர்க்கவும் இம்முறை எல்லோருக்கும் வழிகாட்டியாக இருக்கிறது. இடம்பெயர்வுகளால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற சூழ்நிலையால் தமிழர் கலை, கலாசார வாழ்வியல், பண்பாட்டு விழுமியங்கள் நலிவடைந்து வருகிறது என எண்ணத் தோன்றுகின்றது.

புலம்பெயர்ந்து வாழ்வோர் தாம் வாழும் சூழல்களுக்கேற்ப தம்இனத்தின் சுயமான விழுமியங்களை இழந்து அன்னியமயமாகி வருவதும் வருத்தத்திற்குரிய செய்தியாகும்.

நாம் எங்கு வாழ்ந்தாலும் தமிழர்கள்தான். எங்களுக்கென்று தனித்துவமான வாழ்வியல் பண்பாடுகள் உண்டு. அவைதாம் எங்களைத் தமிழர் என்று அடையாளப்படுத்தக் கூடிய இலட்சணங்கள் ஆகும். அவற்றை இழப்போமேயானால் நாம் தமிழர் என்ற அடையாளமே இன்றி அன்னிய இனமாக மாறிவிடுவோம்.

இப்படியான ஒரு காலகட்டத்தில் மேற்குறிப்பிட்ட எழுச்சி இயக்கமானது மிகஉறுதியுடன் செய்துவரும் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிவளர்க்கும் செயல் யாவரும் பின்பற்றவேண்டிய வழிகாட்டலாய் அமைந்திருப்பது மனங்கொள்ளத்தக்கது.

INEQUALITY MOBILITY AND NATIONAL PROGRESS

Dr.Devanesan Nesiah
Former Consultant
Resettlement and Rehabilitation Authority

No nation is homogenous. There could be classifications in terms of language, religion, gender, region, racial characteristics, social grouping, economic class or even political ideologies. Some distinctions could be divisive, others need not be. It could be particularly harmful if there is a strong correlation between some of the more divisive classifications resulting in a hierarchically segmented society. Such a society is not easily integrated, and within it , the mobility of those of the lower groups may be hindered. In consequence, national development as a whole is adversely affected.

Our society and our social divisions reflect in a modified form, Indian society and Indian social divisions. Jawaharlal Nehru conceded, in traditional Indian society, an individual's place is determinded primarily by the group to which that person belongs; in particular, the hierarchy depended on the village, the caste and the family.

Writing of the Indian caste system, the well known French Anthroprologist, Lousis Dumount has pointed out in his book " Homo Hierarchicus" that ,as the title suggests, India provides the most extreme or typical example of a hierarchical ordered society. Clearly, this handicaps India in both national integration and national development.

Happily societies in South Asia including India and SriLanka, are changing towards greater openness to individual and group mobility. We have not however, fully overcome our problems of hierarchy, social discrimination and divisive group identity. Within Sri Lanka, Sri Lankan Tamil society has, in some respects, been the most progressive, but in respect of caste discrimination, it has been the least progressive.

Increasingly, in modern society, all constituent groups are closely interlinked. Thus if some of these groups are highly advanced, and others badly handicapped, the society as a whole would tend to be handicapped. It is said that a chain is as weak as its weakest link. If a significant component of the society is under privileged it is in the interest of the entire society, and not just that of the under- privileged component, to ensure that those weaknesses are overcome.

The Indian Constitution contains what may appear to be contradictory sections. Article 14 reads that "the state shall not deny to any person equality before the law or the equal protection of the laws" Likewise, Articles 15 (1),16(1),and 16(2)explicitly affirm equal opportunity and prohibit the state from discriminating on the basis of religion, race, caste, gender etc. On the other hand, article 15(4)permits special provision for the advancement any "Socially and educationally backward classes of citizens." Article 38 obligates the state to strive promote the welfare of people by securing and protecting as effectively as it may a social order in which justice social, economic and political, shall inform all the institutions of national life and in particular strive to minimise the inequalities in income , and endeavour to eliminate inequalities in status, facilities and opportunities" Article 46 directs the state to "promote with special care the educational and economic interests of the weaker sections of the people and, in particular of the Scheduled Castes and the Scheduled Tribes, and protect them from social injustice and all forms of exploitation" There are no provisions in our own Constitution comparable to these.

The provisions in the Indian Constitution that proclaim equal opportunity and non discrimination on any account, and those that direct the state towards reverse discrimination in favour of the under privileged may, superficially, appear to contradict each other. In fact this issue came up before the Supreme Court of India in Balaji v State of Mysore in 1963 . The judgment in that case interpreted the clauses directing the state to adopt reverse discrimination in favour of Scheduled Castes Scheduled Tribes and other socially and educationally backward classes not as contradicting the non - discriminatory clauses to provide special privileges to those categories but, rather, as extending the fundamental rights of the whole society by promoting the welfare of its weakest elements.

Perhaps caste discrimination in SriLanka, unlike in India, is not so severe as to warrant the inclusion of such clauses in the SriLanka Constitution. Whether for this reason or whether on account of lack of adequate pressure from socially and educationally backward classes in SriLanka, none of the sequence of Constitutions that we have had have included such provisions. In India, in contrast DR.B.Ambedkar an "untouchable" who chaired the drafting committee of the Indian Constitution and who was also India's first Minister of Law in the Nehru cabinet made sure that there were detailed provisions to promote and safeguard the welfare of "untouchables", tribals and other backward classes.

I am not suggesting that we need such provisions in our Constitution. There could be advantages on account of reduction of group disparities but also serious disadvantages in having laws that highlight group membership. However national integration is difficult when there are glaring social and economic inequalities. I think you will all agree that the principles underlying the relevant articles in the Indian constitution and which were also articulated by the Indian Supreme Court in Balaji v state of Mysore are fully applicable to SriLanka. When one section of our society is disadvantaged, whether on religious linguistic gender, caste, region, economic class or any other account, it undermines the integrity and vitality of the whole nation. In turn when a disadvantaged section of the population is helped to advance, the nation as a whole benefits, so long as the advance is effected in such a way as not to preserve group identities but to reduce inter group disparities and, eventually, erase those group identities which are divisive.

Your Articles of Association spell out your objectives clearly and in detail. The general objectives are again elaborated in the Bill to incorporate the Rehabilitation and Educational Development Fund. I have read these documents with interest and appreciation. I am happy that your objectives emphasise integration and not separation but with the understanding that to permit full integration, socially and economically disadvantaged groups need to advance.

It gives me great pleasure to take part in this function organised by this progressive organisation with its noble objectives. Speedy progress towards the achievement of

these objectives is in the interest of not only the community immediately concerned but of all of us in this country.

I am happy to have this opportunity to share these thoughts with you and to join in your celebration. The ideas that I have expressed here are elaborated in greater detail in my book "Discrimination with Reason?" which has just been published by the Oxford University Press. It gives me much satisfaction to present these ideas at this function.

I also take satisfaction in being a member of the Board of Studies of the Post Graduate Institute of Management of the University of Sri Jayawardenepura which recently awarded the MBA Degree to Mr.K.Kanesh in whose honour this function has been organized.

I congratulate him, wish your organization all success, and thank you for your kind invitation.

Note:

A Speech delivered by Dr.Devaneshan Nesiah Former Government Agent - Jaffna, Former Consultant, Resettlement and Rehabilitation Authority, at the Ceremony held in 09.02.1997 at the Colombo Ramakrishna Mission Hall to felicitate Mr.Krishnapillai Kanesh for his devoted social work and on his being awarded the Degree in Master of Business Administration (MBA) by the University of Sri Jayawardenepura.

ஏற்றத்தாழ்வும் தொடர்ச்சியான மாறுதலும் தேசிய முன்னேற்றமும்

கலாநிதி கு.தேவநேசன் நேசையா
முன்னாள் யாழ். அரசாங்க அதிபர்
ஆலோசகர்,
மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரசபை

எந்த ஒரு தேசமும் ஒரே விதமான மக்கள் கூட்டத்தினரைக் கொண்டு அமைவதில்லை. ஒரு நாட்டின் மக்களிடையே மொழி, மதம், பால், பிரதேசம். இனரீதியான குணவியல்புகள், சமூகக் கூட்டமைப்புகள், பொருளாதார அடிப்படையிலான வகுப்பு முறைகள், பல்வேறுபட்ட அரசியற் சிந்தனைகள் என்பவற்றின் அடிப்படையிலான பிரிவுகள் இருக்க முடியும். சில வகையான தரம் பிரித்தல்கள் பிரிவினையை தோற்றுவிப்பதாயும், ஏனையவை அவ்வாறன்றியும் இருக்க முடியும். ஆகக்குறைந்த நிலையிலிருந்து ஆகக்கூடிய நிலை வரையிலான பல்வேறு மட்டங்களைக் கொண்டதாக வகைப்படுத்தப்பட்ட ஒரு சமுதாயத்தின் சில பிரிவுகளிடையே பரஸ்பர உறவுமுறை மிகவும் கடுமையானதாக இருப்பின், அது மிகவும் தீங்கை விளைவிக்க முடியும். அவ்வாறான சமுதாயம் மிக இலகுவில் ஒன்றிணைக்கப்படாததாகவும், அதனிடையேயுள்ள நலிவுற்ற சமூகங்களின் தொடர்ச்சியான மாறுதல்களுக்கும் இடையூறு ஏற்படலாம். இறுதியில் முற்று முழுதான தேசிய அபிவிருத்தியும் இதனால் மோசமாகப் பாதிக்கப்படுகின்றது.

சில திருத்தங்களுடன் பார்க்கும் போது, எங்களுடைய சமுதாயமும் எங்களின் சமூகப்பிரிவுகளும், இந்தியாவின் சமுதாய அமைப்பையும், இந்தியாவிலுள்ள சமூகப்பிரிவுகளையும் பிரதிபலிப்பனவாக இருக்கின்றன. ஜவகர்லால் நேரு அவர்கள், பாரம்பரிய இந்திய சமூக அமைப்பில் ஒரு தனிமனிதனின் அந்தஸ்தானது, அடிப்படையில் அவன் சார்ந்த கூட்டத்தையும், குறிப்பாக அவனின் கிராமம், சாதி, குடும்பம் என்பவற்றைச் சார்ந்துள்ள பல்வேறு மட்டங்களைக் கொண்ட சமூக அமைப்பு முறையிலும் தங்கியிருப்பதாக ஒத்துக் கொள்கின்றார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த யாவருமறிந்த சமூகவியல் ஆராய்ச்சியாளரான லூயிஸ் டியூமொண்ட் தன்னுடைய "Homo Hierarchicus" (மக்கள் சமூக படிமுறை அமைப்பு) எனும் நூலில், அந்நூலின் தலைப்புச் சொல்லுவது போலவே, இந்தியாவின் சமூக அமைப்புமுறை ஆகக் குறைந்த நிலையிலிருந்து ஆகக்கூடிய நிலை வரையான பல்வேறு மட்டங்களைக் கொண்டதாய் ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு சமுதாய அமைப்பினை விபரிக்கும் மிகச் சிறந்த உதாரணமாக விளங்குகிறது என்று குறிப்பிடுகிறார். சந்தேகமின்றி, இந்நிலையானது இந்தியாவை தேசிய ஒருமைப்பாட்டிலும் தேசிய அபிவிருத்தியிலும் மிக ஊனமுள்ள ஒரு நாடாக்கியுள்ளது.

இந்தியா, இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளின் சமுதாயங்கள் தனிமனித மற்றும் குழுக்களின் இயல்பான மாறுதல்களை திறந்தமனதுடன் ஏற்றுக் கொள்வதற்கான விதத்தில்

மகிழ்ச்சியுடன் மாறிக்கொண்டிருக்கின்றன. இருந்த போதிலும், எங்களால் இன்னமும் எங்களது பல்வேறு மட்டங்களிலான பிரிவுகளை உள்ளடக்கிய சமூகக்கட்டமைப்பு, சமூகத்தினுள்ளேயே பேதம் காணல், பிரிவினையைக் காட்டும் குழு அடையாளங்கள் என்பவை சார்ந்த பிரச்சனைகளை முழுமையாக தோற்கடிக்க முடியவில்லை. இலங்கையிலும் இலங்கைத் தமிழ்ச் சமூகம் சில விதங்களில் மிகவும் முற்போக்கானதானவும், சாதிபேதம் பேணல் என்ற வகையில் மிகவும் பிற்போக்கானதாகவும் காணப்படுகின்றது.

இன்றைய நவீன சமுதாயத்தின் அங்கமான சகல பிரிவினரும் மிக நெருக்கமாகப் பரஸ்பரம் ஒருவருடனொருவர் தொடர்புபடுத்தப்படுதல் மிகவும் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக இவற்றில் சில பிரிவினர் மிகவும் முன்னேற்றகரமாகவும் ஏனையோர் மிக மோசமாக நலிவுற்றோராயுமிருக்கும்போது ஒட்டுமொத்தமாக முழுச்சமுதாயமுமே நலிவுற்றதாக மாற ஏதுவாகிறது. அதாவது இது பல வளையங்களால் தொடுக்கப்பட்ட ஒரு சங்கிலியில் ஒரு வளையம் மட்டும் பலவீனமானதாகவிருக்கும் போது முழுச்சங்கிலியுமே பலமிழந்து விடுகிறது என்று சொல்வதற்கு ஒத்ததாகும்.

ஒரு சமுதாயத்தின் குறிப்பிடத்தகுந்த ஒரு அங்கத்தினர் நலிவுற்றவர்களாக இருக்கும் போது அந்த நலிவுற்ற சமூகத்தின் அக்கறை கருதி மட்டுமன்றி, முழுச்சமுதாயத்தினதும் அக்கறை கருதியும் அவ்வாறான பலவீனங்களை வெற்றி கொள்வது உறுதிப்படுத்தப்படவேண்டும்.

இந்திய அரசியலமைப்பு, முன்னுக்குப் பின் முரணான சில பகுதிகளைக் கொண்டிருப்பதாகக் கூறலாம். 14வது சரத்தில், ''அரசாங்கம் ஒரு பிரஜையினது சமத்துவத்தினை சட்டத்தின் முன்பாக மறுக்கமுடியாது'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போல 15(1), 16(1) மற்றும் 16(2) ஆவது சரத்துக்கள் மிகத்தெளிவாகவும், வெளிப்படையாகவும், சமசந்தர்ப்பம் வழங்கப்படுதலையும், அரசாங்கமானது மதம், சாதி, இனம், பால் என்பவற்றின் அடிப்படையில் பேதம் காட்டுவதைத் தடுப்பதையும் உறுதிப்படுத்துகின்றன. மறுபுறத்தில் 15(4) வது சரத்து, ''சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பிற்பட்ட வகுப்பைச்சேர்ந்த பிரஜைகளின்'' முன்னேற்றத்திற்கான சிறப்பு சட்ட ஏற்பாட்டை அனுமதிக்கிறது.

நீதி, சமூக, பொருளாதார, அரசியல் ஆகியவற்றை அடக்கிய சமூக ஒழுங்கு முறையை உருவாக்கிப் பாதுகாப்பதன் மூலம் மக்களின் நலனை வளர்ப்பதற்கு, சிறப்பாக, வருமான ஏற்றத்தாழ்வை இயன்றவரை குறைப்பதற்கும், சமூக அந்தஸ்து, வசதிகள், வாய்ப்புகளுக்கான சமமற்ற நிலையை முற்றாக நீக்கும் பொருட்டு முயற்சிக்கவும், தேசிய வாழ்க்கையுடன் தொடர்பான சகல நிறுவனங்களுக்கும், அறிவிக்க அரசியல் யாப்பின் 38ஆம் பிரிவின் கீழ் அரசு கடமைப் பாடுடையதாகும். 46ஆவது சரத்து, ''சமுதாயத்தில் நலிவுற்ற அங்கத்தினரின் குறிப்பாக பிற்பட்ட வகுப்பினர், பழங்குடிகள் ஆகியோரின் கல்வி, பொருளாதார நலன்களில் விசேட கவனமெடுத்து மேம்படுத்துவதுடன் சமூக அநீதிகளிலிருந்தும் மற்றும் சகல விதங்களிலுமான சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கவும் வேண்டும்'' என அரசாங்கத்தை நெறிப்படுத்துகிறது. இலங்கையின் அரசியலமைப்பில் நான் மேற்கூறியவற்றுடன் ஒப்பிடக்கூடியதான சட்ட ஏற்பாடுகள் எதுவும் காணப்படவில்லை.

இந்திய அரசியலமைப்பில் காணப்படுகின்ற சம சந்தர்ப்பம் வழங்கப்படுவதையும், எவ்விதத்திலும் பேதம் காட்டப்படக் கூடாது என்பதையும் வெளிப்படுத்தும் சட்ட ஏற்பாடுகளும்,

நலிவுற்ற சமூகங்களுக்குச் சார்பாக அரசை மறுதலையாக விசேட வசதிகள் செய்யுமாறு நெறிப்படுத்தும் சட்ட ஏற்பாடுகளும் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும் பொழுது ஒன்றுக்கொன்று முரண்படுவனவாகத் தோற்றமளிக்கின்றன. உண்மையில், 1963ஆம் ஆண்டு இந்திய உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட ''பாலாஜி எதிர் மைசூர் இராச்சியம்'' என்ற வழக்கில் தான் இந்த முரண்பாடு முதல்முறையாக கவனத்திற்கு எடுக்கப்பட்டது. அந்த வழக்கில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, நலிவுற்ற சமூகங்கள் மற்றும் கல்வி, சமூக ரீதியாக பிற்பட்ட பிரிவினருக்கு வழங்கப்பட்ட மேலதிக சலுகைகள் தொடர்பாக அரசாங்கம் அவர்களின் சார்பாக நடந்து கொள்ள வேண்டுமென்ற சட்ட ஏற்பாடு எந்த விதத்திலும் அரசின் நடுநிலை மாறாமல் அனைத்துப் பிரஜைகளுக்கும் சம வசதிகளும் வழங்கப்படவேண்டுமென்ற சட்ட ஏற்பாட்டுடன் எதுவிதத்திலும் முரணானதல்ல என்றும் ஆனால் அதற்கும் மேலாக ஒரு சமுதாயத்தின் பலவீனமான அங்கத்தினரின் சேமநலன்களை மேம்படுத்துவதால் முழுச்சமுதாயத்தினது அடிப்படை உரிமைகளை மேலும் விரிவுபடுத்திக் கொள்வதாகக் கருதப்படும் என்று தெரிவித்தது.

இந்தியாவில் போலன்றி இலங்கையில் சாதி ஒடுக்குமுறை மிகவும் மோசமாகக் காணப்படாததாலோ என்னவோ ஒருவேளை அவ்வாறான விசேட சரத்துக்கள் இலங்கையின் அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டிய தேவை எழவில்லை. இதன் காரணமாகவோ அல்லது இலங்கையிலுள்ள சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் நலிவுற்ற மக்கள் சமுதாயங்களிடமிருந்து போதுமான அளவு அழுத்தங்கள் கொடுக்கப்படாததனாலோ இது வரை நாம் கண்ட இலங்கையின் பல்வேறு அரசியலமைப்புகளும் இவ்வாறான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியவனவாக இருக்கவில்லை. இதற்கு மாறாக, இந்தியாவில் தீண்டத்தகாத சமூகம் என்று சொல்லப்பட்ட சமுதாயப்பிரிவிலிருந்து தோன்றிய வரும், ஜவஹர்லால் நேருவின் தலைமையிலான சுதந்திர இந்தியாவின் முதலாவது மந்திரிசபையில் சட்ட அமைச்சராக இருந்தவருமான கலாநிதி. B. அம்பேத்கார் தலைமை தாங்கிய இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய சட்ட வரைவுக்குழு தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்டவர்களினதும் பழங்குடிகள் மற்றும் பிற்பட்ட வகுப்பினரதும் சேமநலங்களை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்குமான விசேட சட்ட ஏற்பாடுகளை இந்திய அரசியலமைப்புச் சட்டம் கொண்டிருப்பதை உறுதி செய்தது.

இலங்கையில் எங்களுடைய அரசியலமைப்பிலும் இத்தகைய விசேட சட்ட ஏற்பாடுகள் அவசியம் என நான் கூறவரவில்லை. ஒரு பிரிவினரின் அங்கத்துவத்தை அடையாளப்படுத்தி வெளிச்சம் போட்டுக்காட்டும் சட்டங்களை வைத்திருப்பதன் மூலம் அவ்வாறான பிரிவுகளுக்கிடையிலான வேறுபாடுகளை குறைக்கும் நோக்கில் பல அனுகூலங்கள் இருக்கின்ற போதிலும் மிக மோசமான பிரதிகூலங்களும் இல்லாமலில்லை. எவ்வாறெனினும் மிகத்தெட்டத் தெளிவான சமூக பொருளாதார சமத்துவம் பேணப்படாத போது தேசிய ஒருமைப்பாட்டைப் பேணுவது மிகச் சிரமமானதாகும். இந்திய அரசியலமைப்பிலுள்ள பொருத்தமான சரத்துக்களை அடிப்படையாகக் கொண்ட தத்துவங்களும் அவற்றுடன் இணைவாக நடந்த ''பாலாஜி எதிர் மைசூர் இராச்சியம்'' என்ற இந்திய உயர் நீதிமன்ற வழக்கின் தீர்ப்பும் இலங்கையிலுள்ள சமூக அமைப்பு முறைக்கும் சாலப் பொருந்தும் என நான் நினைக்கின்றேன். ஒரு சமுதாயத்தின் ஒரு பிரிவினர் நலிவுற்றோராய் உள்ளபோது அது சமயம், மொழி, சாதி, பிரதேசம், பொருளாதர வகுப்பு அல்லது வேறெந்தக் காரணத்தினாலாக இருந்த

போதும், அது முழுத்தேசத்தினதும் ஒருமைப்பாட்டையும் பலத்தையும் மலினப்படுத்துவதாக அமைந்து விடுகிறது. மாறாக ஒரு நாட்டின் பிரஜைகளில் நலிவுற்ற பிரிவினர் முன்னேற்றம் காண்பதற்கு உதவும் போது, அத்தகைய முன்னேற்றமானது அக்குழுக்களின் தனித்துவங்களை பேணிப்பாதுகாக்கும் நோக்கத்திற்காகவன்றி பல்வேறு பிரிவினர்களுக்கு மிடையிலான பேதங்களைத் தணித்து அல்லது குறைத்து அவ்வாறான பிரிவுகளிடையே பேதங்களை ஏற்படுத்தும் பிரிவினையைத் தூண்டும் அடையாளப்படுத்தல்களை முழுமையாக இல்லாதொழிக்கும்படி நடைபெறுகின்றவரையில் முழுத்தேசமும் நன்மைபெற ஏதுவாகின்றது.

உங்களுடைய அமைப்பின் யாப்பு உங்களுடைய குறிக்கோள்களை மிக விரிவாகவும் தெளிவாகவும் விபரிக்கின்றது. புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினைக் கூட்டிணைப்பதற்கான சட்ட மூலத்திற்கான மசோதாவில் உங்களுடைய பொதுவான குறிக்கோள்கள் மேலும் விரிவுபடுத்தித் தெரிவிக்கப்பட்டுள்ளன. உங்களின் இந்த ஆவணங்களை நான் மிகவும் அக்கறையுடனும், மதிப்புயர்வுடனும் வாசித்திருக்கின்றேன். உங்களுடைய குறிக்கோள்கள் பிரிவினையையில்லாமல் ஒருமைப்பாட்டையே, ஆனால் முழுமையான ஒருமைப்பாட்டுடன் சமூக பொருளாதார ரீதியாக பின் தங்கிய பிரிவினர் முன்னேறவேண்டிய தேவையை விளங்கிக் கொள்வதை அனுமதித்து வலியுறுத்துவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறான ஒரு முற்போக்கான சிறப்பான கொள்கைகளைக் கொண்ட ஒரு நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வைபவத்தில் பங்கேற்பது எனக்கு மிக மகிழ்ச்சியைத் தருகின்றது. உங்களது குறிக்கோள்களை அடைவதற்கான உங்களது துரிதமான முன்னேற்றம். உங்களது சமூகத்தின் அக்கறை கருதி மட்டுமன்றி முழுத்தேசத்தினதும் அக்கறை கருதியதாகும்.

இந்தச்சந்தர்ப்பத்தில் எனது சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ளக் கிடைத்ததுடன் உங்களின் இந்தக் கொண்டாட்டத்தில் நானும் இணைந்து கொள்கின்றேன். என்னுடைய இந்த உரையில் நான் தெரிவித்த கருத்துக்கள் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக வெளியீட்டு நிறுவனத்தால் மிக அண்மையில் வெளியிடப்பட்ட என்னுடைய 'காரணத்துடனான பேதங்கள்?' என்னும் நூலிலே மிகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இந்தச் சிந்தனைகளை இவ்வகையான ஒரு வைபவத்திலே தெரிவிக்கக் கிடைத்தமை எனக்கு மிகவும் திருப்தியைத் தருகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் கற்கை நெறிகளுக்கான சபையின் அங்கத்தவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் அண்மையில் அந்நிறுவனத்தின் வியாபார முகாமைத்துவ முதுமாணிப்பட்டம் பெற்ற திரு. கி. கணேஸ் அவர்களை கௌரவிக்கும் இந்த வைபவத்தில் பங்கேற்பதில் நான் மேலும் திருப்திப்படுகின்றேன்.

அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் உங்களுடைய நிறுவனம் சகல வெற்றிகளையும் பெற வாழ்த்துகின்றேன். அத்துடன் உங்களின் அன்பான அழைப்பிற்கு எனது நன்றிகளையும் தெரிவித்து எனது உரையை முடித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

குறிப்பு: திரு.கிருஷ்ணபிள்ளை கணேஸ் அவர்களின் சமூகப்பணியையும் MBA - முதுமாணிப் பட்டம் பெற்றமையையும் பாராட்டுமுகமாக 09.02.1997 அன்று கொழும்பு இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் கலாநிதி கு.தேவநேசன் நேசையா அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

வியப்புக்குரிய முப்பெரும் விழா

(29வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வழங்கப்பட்ட செய்தி)

கலாநிதி. கார்த்திகேசு சிவத்தம்பி
M.A. (Sri Lanka), Ph.D.(Birm),
D.Litt (Nonaris Causa),Jaffna
Professor Emeritus, University of Jaffna
தகைசார் ஓய்வுநிலை பேராசிரியர்
யாழ். பல்கலைக் கழகம்

நமது தமிழ்ச் சமூகம் கடந்த சில காலமாக எதிர்நோக்க வேண்டி வந்த, தமிழர்களாக உள்ள எல்லோரையும் பாதித்த, பாதிக்கின்ற அரசியல் நிலமைகள் காரணமாக இன்று ஓர் ஒருமைப்பாட்டை எய்தி உள்ளதெனினும், அது தன்னுள்ளே வரும் சமூக நடவடிக்கை களைப் பொறுத்த வரையில் சமூக வேறுபாட்டு முறைமை எனும் சமூகப்பாகுபாட்டை பேணிக் கொண்டே வருகிறது என்பது உண்மையாகும்.

மாறி வரும் தொழில்நுட்ப உலகின் தேவைகளுக்கு ஏற்பச் சமநிலை கொண்ட சாதிக் குழுமங்கள் ஒரு பெரும் சாதிச் சமூக வட்டமாக மாறுவதையும் அவதானிக்கலாம் (Mega caste). இன்னொருமுறையில் சொன்னால் சாதிமுறையின் உள்ளே காணப்பெற்ற ''பகுதிகள்'' எனும் கூறு முன்னர் பெற்றிருந்த இடத்தினை இழந்து இன்று பெரும் குழுமங்களாக இயங்கி வருவதைக் காணலாம். இதனாலேயே விஸ்வகர்மர்குழாம், குருகுலகுழாம் எனப் பெரும் குழுமங்கள் அடையாளப்படுத்தத்தக்க அளவுக்கு வளர்ந்துள்ளவெனினும் அடிநிலைச் சமூகத்தின் சாதி அமைப்பின் வேராகிய குழுமத் தொழில் நிலை காரணமாக சில சாதிக் குழுமங்கள் தங்கள் அடையாளங்களை உதறிவிட முடியாமல் உள்ளன.

தங்கள் பாரம்பரிய தொழில் நடவடிக்கைகளை நவீன சமூக முறைமைக்கமைய மாற்றிக் கொள்கின்ற போது சமூகத்தில் மிக முக்கியமான கண்ணோட்ட வேறுபாடுகள் அத்தியாவசியமாகிறது. ஆனால் தொழில் நுட்பம் காரணமாகவும், பொருளாதார பலம் காரணமாகவும் அக்குழுமத்தினரின் சமூக மேல் நிலைப்பாட்டைத் தடுத்துவிடவும் முடியாது. இதற்குக் காரணம் அச்சமூகங்களினுள்ளே ஒரு ஒற்றுமையும், ஒருமையுணர்வும் வளர்ந்துள்ளமையே ஆகும். ஆனால் இந்த ஒற்றுமை உணர்வை கட்டிக்காத்து வளர்த்தெடுத்து அச்சமூகத்தின் பொது நன்மைப் போக்காக மாற்றிக் கொள்ளும் திறன் அண்மைக்காலத்தில் நாவிதர் சமூகத்தினரால் வெற்றிகரமாக மேலோங்கச் செய்ய முடிந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் ஜனரஞ்சக முறையாக அமைந்த கூட்டுறவு இயக்க முறைமையைப் பயன்படுத்திப் சமூக

முன்னேற்றக் கழகங்களின் சமாசம் உருவாக்கப்பட்டது. இந்த விடயத்தில் யாழ்ப்பாணச் சமூக வரலாற்றிலேயே திரு.ஆர்.எம். நாகலிங்கத்திற்கு முதலிடம் உண்டு.

நமது சமூகத்தின் அடிநிலையைப் பொறுத்த வரையில் சாதிமுறைமைக்கு தொழில் அடிப்படை ஒன்று தளமாக அமைவதைக் காணலாம். இதனாலேயே அடிநிலை சாதிக்குழுமங்கள் தனிக் குழுமங்களாக இயங்க வேண்டிய சூழல் பாரம்பரிய சமூகத்தில் நிலவியது போன்று இப்போதும் நிலவுகிறது என்பதை மறுத்துரைக்க முடியாது. அது தமிழ் இலக்கியத்திலேயே எடுத்து கூறப்படும் 'கண்டதுண்டு கேட்டதில்லை பார்' என்ற மகா வாக்கியத்துக்கு அமைய தொழிற்படுவதை காணலாம். இத்தகைய சூழலில் அதே ஜனநாயக நடைமுறைகளைத் தளமாகக் கொண்டு சாதிக் குழுமங்களை உயர்த்துவதன் மூலம் பிறரை, பிறசமூக குழுமங்களை நம்பி இருக்கும் நிலை தவிர்க்கப்படக் கூடியதாயிற்று. உண்மையில் இதனை யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே முதன் முதலில் ஆணித்தரமான முறையில் எடுத்துக் காட்டியது இந்த சமூக முன்னேற்ற கழகங்களின் சமாசமும், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் அவற்றின் நிறுவனர் திரு. ஆர்.எம்.என் அவர்களின் முயற்சியும் ஆகும்.

ஒவ்வொரு சமூகக் குழுமங்களும் தன் தன் நிலையின் குறைவின்மை, முக்கியத்துவம் ஆகியன பற்றிய மௌனப் போக்கிலேயே ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் இந்த திரு. ஆர்.எம்.என் இன் தலைமையிலான சமூக குழுமத்தினரும் அதன் நிறுவனங்களும் ஒழுங்கமைதியையும், ஒருமைப்பாட்டையும் வற்புறுத்தி அவற்றை தளமாகக் கொண்டு அச்சமூகக் குழுமத்தின் இளைஞர்கள், சிறுவர்களது கல்வியை மேம்படுத்தி அக்கல்வி வழியாக உயர் நிலையை அடையும் பேற்றினையும் வழங்கிற்று.

மற்றைய சாதிக்குழுமங்களோடுள்ள உறவுநிலையில் ஏற்படக் கூடிய பிரச்சினைகள் பற்றிச் சிரத்தை கொள்ளாது அது, அதன் சாதிக்குழுமத்தின் உள்ளே ஏற்படுத்திய நிறுவனம் மூலம் அதன் அக வலிமையை பெரிதும் உயர்த்திற்று.

மாவிட்டபுரத்தில் தொடங்கிப் படிப்படியாகக் கிராமம் கிராமமாக பரப்பப் பெற்ற இவ் இயக்கம் அதே கூட்டுறவு முறைமையின் இயல்பைப் பயன்படுத்தி ஒருங்கிணைந்த சமாசம் என உயர்ந்துள்ளது. இதனை இலங்கை மட்டத்தில் பார்க்கும் போது இதுவே முதல் நிலைப்பட்டதும் முதன்மையானதும் என்று கூறலாம். ஏனெனில் பௌத்த சிங்கள மக்களிடையே சாதிக்குழும வரையறைகள் வழிபாட்டிடங்களில் நடைமுறையில் இருப்பதில்லை. தமிழ் சமூகத்திலே நிலவிய தீண்டாமை என்ற கோட்பாடு காரணமாக அது வழிபாட்டு முறைகளையே பாதித்தது.

இந்த நிலையில் திரு. ஆர்.எம்.என் அவர்களின் தனித்துவமான தலைமையின் கீழே சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் அதற்கு வேண்டிய நிதிப்பலத்தை வழங்குவதுமான புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமுமாக வளர்த்து எடுக்கப்பட்டன. இவற்றின் 29

ஆவது ஆண்டு விழா முப்பெரும் ஆண்டுவிழாவாக இப்போது நடைபெறுகிறது. தன்னம்பிக்கையும் பொருளாதார சுயாதீனமும், கல்வித்துறையிலே சாதனைகளுமுடைய பலமான ஒரு குழுவாக இன்று மேற்கிளம்பியுள்ளனர். இதுவே சமாசங்களின் உறுப்புக்களான கழகங்கள் (சங்கங்கள்) ஆற்றிய பெரும் பணியாகும், இத்தகைய கழகங்களின் (சங்கங்கள்) ஒன்றிணைவைச் சுட்டி நிற்கும் சமாசமானது 29வது வருடத்தை நிறைவு செய்கிறது என்பது மிகப் பெரிய சாதனையாகும்.

ஆங்கிலப் பாரம்பரியத்தில் 25 வருடங்களை அதாவது ஒரு 1/4 நூற்றாண்டு காலத்தை ஒரு தலைமுறை (Generation) என்று கூறுவது மரபாகும். இந்த சமாசமும், நிதியமும் ஒரு தலைமுறை காலத்தைத் தாண்டி இரண்டாவது தலைமுறையிலும் முதற் கால் பங்கை நிறைவு செய்துள்ளது. இது ஒரு மகத்தான சாதனையாகும். தொடக்ககாலத்து உத்வேகத்துடன், ஒரு தலைமுறை காலத்தின் பின்னரும் இந்நிறுவனம் அதே இலட்சிய தாகத்துடனும் செயல் வேகத்துடனும், நிதி ஒழுங்கமைப்பு முறைகளின் பண்புகளையும் பேணி வளர்வதைக் கண்டு இச் சமாசத்தினருக்கு எனது வியப்பினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையில் இந்த வரலாறு பதியப்பட வேண்டிய ஒன்று. இதனை வரலாற்று நியமங்களிற்கு ஏற்ப பதிவு செய்யும் பணியையும் இச் சமாசத்தினர் மேற்கொள்ளுதல் வேண்டும். இப்படியான வளர்ச்சி நெறிகளை எழுதுவதற்கான சில நடைமுறைகள் உள்ளன. வினாக் கொத்துக்கள் மூலமாகவும், நேர்காணல்கள் மூலமாகவும், இவ்வளர்ச்சி எவ்வாறு ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம். 30 ஆண்டுகால சாதனைக்காக இவர்களை வாழ்த்தும் அதேவேளையில் யாழ்ப்பாண வரலாற்றில் இவ்வியக்கத்தின் சமூக முக்கியத்துவத்தை உணரும் இதன் வரலாறு பதிவு செய்யப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

யாவற்றிற்கும் மேலாக ஆரவாரிப்பு இன்றிப் பாய்ந்து ஓடும் நீரோடைகள் போல எல்லாச் சூழ்நிலைகளிலும் தங்கள் நிறுவன மயப்பாட்டை வளர்த்தெடுத்துள்ள இந்நிறுவனத்தினரை மனம் நிறைய வாழ்த்துகிறேன். சாதி முறையின் படிநிலை வேறுபாடுகளைப் பொருளாதார, கல்வி ரீதியில் தகர்த்துள்ள இந்தச் சமாசம் சமூக சமத்துவப் போராட்டத்துக்கான முதலாவது முக்கிய கட்டம் என்பதனை மீண்டும் வலியுறுத்திச் சமாசத்தினரை வாழ்த்துகிறேன்.

எமது மக்கள் சமூகம் அன்றும் இன்றும்

திருமதி நவமணி இராஜ்குமார்
தலைவர், கலை இலக்கிய குழு
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

இக்கட்டுரையானது எமது சமூகம் கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களுக்கு முந்திய காலத்திலிருந்து இன்றுவரை எவ்வாறான வளர்ச்சிப்படிகளைக் கொண்டு மாற்றம் பெற்று வந்துள்ளது என்பது பற்றியதொரு நோக்கில் எட்டுவிதமான உபபிரிவுகளைக் கொண்டு நோக்கப்படுவதாக அமைகிறது.

1. ஆரம்பநிலை
2. பின்புலக்காரணிகள்
3. சமூகநோக்கு
4. அடிப்படைத்திட்டங்கள்
5. தலைவரின் வழிகாட்டலும் உத்திகளும்
6. பிறசமூகத்தினரின் பார்வையில் எமது சமூகம்
7. இன்று எமது சமுதாயம்
8. ஏதிர்கால இலக்குகள் / நோக்குகள்

1. ஆரம்பநிலை

இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் எமது சமூகம் பெரும்பான்மையாக கீழ்நிலைப்பட்ட, ஏனைய சமூகத்தினரால் ஒதுக்கி வைக்கப்பட்ட, தீண்டத்தகாத சமூகமாக இருந்துள்ளது. ஆலயப் பிரவேசம், கல்வி, தொழில்வாய்ப்பு, தண்ணீர், சமூக சமரசமற்ற தன்மை முதலான பல நெருக்கீடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது.

இவ்வாறான சூழ்நிலையிலும் கூட எமது சமூகத்தில் கற்றோர்கள், கல்விமான்கள், ஆர்வலர்கள், சமூகப்பற்றுடையோர் பலர் உருவாகாமல் இருக்கவில்லை. இவ்வாறு கல்வியில் மேம்பட்டோரும் பிறசமூகத்தினரது, அச்சுறுத்தலுக்கும், அடிமைத்தனமான நோக்குக்கும், எதிராக போர்க்கொடி ஏற்றுவதற்கு துணிந்து முன்வரப் பின்நின்ற காலமது. இக்காலகட்டத்தில், பெண்கள் கல்வி தரம் 5ற்கு மேற்படாத தன்மையும், ஆண்களும் குறிப்பிட்ட வயதுவரை கல்வி கற்காமையும், கற்கும் பாடசாலைகளில் சமூகத்தின் பெயரால் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலைமைகளுமே இருந்து வந்தது.

எம்மினத்தோர் சமூகத்தில் மேல்நிலையிலிருந்தோர்க்கு சேவகம் செய்து அவர்களின் ஆதரவில் வாழ்ந்த குடிமை முறை இழிநிலை வாழ்வையே வாழ்ந்து வந்தனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான் இளமையும் துடிப்பும் நிறைந்த எமது சமுதாயத்தின் மூத்த ஊற்றான திருவாளர் இ.மு.நாகலிங்கம் அவர்கள், உள்ளத்துடிப்போடும். சமூக உணர்வோடும் எமது சமூகத்தை மாற்றியமைக்கக் கால்கோள் இட்டார்.

இதற்கான ஆயத்தமாக 1947ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் அமைந்திருந்த விநாயகர், அம்மன் ஆலயங்களைத் தளமாக வைத்து மக்கள் மத்தியில் ஐக்கியம், ஒழுக்கம், சமூகசமத்துவம், கௌரவம் என்பவற்றை உருவாக்கும் நோக்குடன் தனது முயற்சியில் இறங்கினார். **"சமூக, சமய, கல்வி, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் நோக்குடன் மகாகவி பாரதியின் பெயரால் "மாவை பாரதி வாசிகசாலை" என்ற பெயரோடு 12.09.1955 இல் ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தார். பின்னர் 19.10.1971 இல் அது "மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம்" எனப் பெயர் மாற்றம் பெற்று சேவையாற்றத்தொடங்கியது."** கூட்டுறவே நாட்டுயர்வு, ஐக்கியமே சமூகத்தை ஒன்றிணைக்கவல்ல ஆயுதம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு சமூக நிறுவனத்தை ஸ்தாபிக்க வேண்டும் என்ற எண்ணக்கருவை மனதில் கொண்டு அவற்றை செயல்வடிவில் எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும் என்றெல்லாம் சிந்தித்தார். அவரது சிந்தனை வீண்போகாதவாறு ஒவ்வொரு செயற்பாடுகளிலும் துணிச்சல்மிக்க சிலரைத் தன்னோடிணைத்துப் படிப்படியாகக் கால்பதிக்கத் தொடங்கினார்.

2. பின்புலக்காரணிகள்

முதலில் எமது சமூகத்தின் பிரச்சினைகள் எவை?, அவற்றை எவ்வாறு தீர்ப்பது?, செயற்பாடுகளை எவ்வாறு முன்வைப்பது?, அவற்றை முன்னெடுப்பதற்குப் பொருத்தமானவர்கள் யாவர்?, எத்தகைய அணுகுமுறைகளைப் பின்பற்றலாம்?, இவற்றைச் செயற்படுத்த முனையும் போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்கள் எவை?, இவற்றை எப்படி உடனுக்குடன் தீர்ப்பது? முதலான பல திட்டங்களைத் தன்னுள்ளே தீட்டி, நுணுகி ஆராய்ந்து சிந்தித்த திருவாளர் இ.மு.நாகலிங்கம் அவர்களின் சமூக எழுச்சிச் சிந்தனைக்கு பின்புலமாக பின்வரும் காரணிகள் அமைந்தன.

மூலகாரணி : **பின்தங்கிய சமூகநிலை**

துணைக்காரணிகள் :

1. **மாவை சித்திவிநாயகர், மாவைஅம்பாள் ஆலயச் செல்வாக்கு**
2. **அமெரிக்க மிசன் பாடசாலைக் கல்வியின் தாக்கம்**
3. **இடதுசாரி இயக்கங்களுடனான ஈடுபாடு**
4. **சமூக சமத்துவப் போராட்டத்தின் செல்வாக்கு**
5. **தாயாரின் செல்வாக்கு"**

3. சமூக நோக்கு

வடக்கு, கிழக்கு முழுவதிலும் உள்ள நாவிதர் சமூகத்தினரை ஒரே அணிக்குள் கொண்டுவந்து, ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள எம்சமூகத்தினர் மத்தியில் சென்று, அவர்களிடையே முற்போக்குச் சிந்தனையுடையோரை இனங்கண்டு ஒன்றிணைத்து, அவ்வக்கிராமங்களில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள், அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகள் என்பவற்றைக் கலந்தாலோசித்து, மக்கள் மத்தியில் நம்பிக்கையையும், மனஉறுதியினையும்

ஏற்படுத்தி மனமாற்றத்திற்கானதொரு அடித்தளத்தை இட்டமையே இந்த நிறுவனத்தின் முதற்கட்ட வேலையாகும்.

இவ்வாறான முன்னெடுப்புக்களால் மக்கள் மத்தியில் பிரச்சாரங்கள் அதிகரிக்க அதிகரிக்க, முடங்கிக்கிடந்த சமூகம் விழிப்படையத் தொடங்கியது. செயற்பாடுகளில் கொடியாய் கைகோர்த்து இயங்கியது. மக்கள் அனைவரதும் அங்கீகாரத்தைப் பெற்று 24 கழகங்கள் கிராமங்கள் தோறும் உருவாக்கப்பட்டது. இக்கிராமங்களின் கழக அமைப்புக்களும் தனித்துவமான தலைவர், செயலாளர் என்ற நிர்வாகக்கட்டமைப்பைக் கொண்டதாக அமைக்கப்பட்டதுடன் அனைத்துக் கிராமங்களுடனுமான தொடர்பையும், கருத்துப் பரிமாற்றத்தையும் கொண்டமைந்ததுடன் செயற்பாடுகள் யாவும் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டிருந்தமையும் நிறுவன ரீதியானதொரு கட்டுக்கோப்புக்குள் மக்களை உள்வாங்கிச் செயற்பட வைத்துள்ளது.

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் இடம்பெற்ற மகாநாட்டில்(1980. 12. 25) ஆறு அம்சத் திட்டங்கள் விவாதிக்கப்பட்டு எமது சமூகத்தின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதனையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு முரண்பாடான விடயங்களைத் தவிர்த்து, எம்மவர் அனைவரினதும் பரிபூரண ஆதரவைப் பெறுதலை நோக்காகக் கொண்டு அமைந்தன.

4. அடிப்படைத்திட்டங்கள்

மக்களால் முன்வைக்கப்பட்ட சில கருத்துக்கள், திருத்தங்களையும் உள்வாங்கி திருத்தியமைக்கப்பட்ட ஆறு அம்சத்திட்டங்களையும் 1981. 04. 15 அன்று செல்வச்சந்நிதி மகாநாட்டில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் அமைப்புக்குழு சமர்ப்பித்தது.

1. **சமாசத்தின் நிறுவன அமைப்புமுறை நோக்கங்கள் பற்றிய திட்டம்**
2. **கல்வி அபிவிருத்திக்கான திட்டம்**
3. **தொழிற்பெயர்ச்சி மற்றும் சகபொருளாதார அபிவிருத்தி**
4. **குடிமைத்தொழில் ஒழிப்புப்பற்றிய திட்டம்**
5. **சமூக ஒருமைப்பாட்டை வளர்த்தல் பற்றிய திட்டம்**
6. **ஒழுக்கக் கட்டுப்பாட்டை வளர்த்தல் பற்றிய திட்டம்**

முடங்கிக் கிடந்த கல்விமான்கள், இளங்கல்விச் சமூகத்தினர் விருப்புடன் இந்நிறுவனத்துடன் இணைந்து கொண்டார்கள். இவற்றுக்கெல்லாம் தலைவர் இ.மு.நாகலிங்கத்தின் மதிநுட்பமான திட்டமிடல், அனைவரையும் ஒன்றிணைக்கும் மனோநிலை, மனிதநேயப்பண்பு எனும் இயல்புகள் உரியவாறு உரியஇடங்களில் பயன்பட்டன. இவை சமூகத்தில் இருந்த வரட்டுக்கௌரவம் மிக்க பலரது மனங்களைக்கூட மாற்றியமைத்துள்ளன. நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றிய தெளிவான விளக்கமில்லாத தன்னிச்சையான சுபாவம் கொண்டவர்களையும் திருந்தி நடக்கத் தூண்டியுள்ளன.

சமூகமொன்று மாற்றியமைக்கப்பட வேண்டுமானால், மேம்பட்ட சமூகக் கட்டுமானத்திற்கு அத்திவாரமாக அமைவது கல்விச் சமூகமே. அவ்வகையில், கல்விக்கான நிதியம் ஒன்று **"புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்"** என்ற பெயரோடு உருவாக்கப்பட்டது. இழந்த கல்வியை மீட்டல், எம் சமூகத்தின் கல்வியறிவு பெறா நிலையை மாற்றியமைத்தல், பொருளாதார வசதிகளின்றி கல்வியை இடைநிறுத்தி தொழில்நாடிச் செல்லும் ஒரு பகுதியினரின் மனங்களை மாற்றி கல்வி கற்றலுக்கான உதவிப்பணங்களை வழங்கி ஊக்குவித்தல் போன்ற பல எண்ணக்கருக்களை மனங்கொண்டு குறைந்தது 10ம் தரம் வரையாவது யாவரும் கல்வி கற்கும் வகையில் ஆவன செய்தல் வேண்டும் என்ற நோக்கோடு பல முயற்சிகள் எடுக்கப்பட்டன.

மேலும் போராட்டச்சூழல், இயற்கை அனர்த்தங்கள், இடப்பெயர்வுகள், அகதிவாழ்வு, மனித உயிரின் உறுதியற்ற தன்மைகள், மலிந்துவிட்ட மரணங்கள், சுமைகளும் சோகங்களும் நிறைந்த நடைப்பிணவாழ்வு இவ்வாறான நிலைமைகளில் எமது நிறுவனத்தின் பாதுகாப்பு, சேர்க்கப்பட்ட நிதியின் நிரந்தரமற்ற தன்மை ஆகியற்றைக் கருத்திற் கொண்டு இச்சமூக வங்கி அமைப்பு 1993.06.04 அன்று ஆரம்பிக்கப்பட்டது.

" அபிவிருத்திப் பணிகளுக்கு சமாசமும், நிதிபேணுதல் செயற்பாடுகளுக்கு நிதியமும் என்றநோக்கில் இவை செவ்வனே செயற்படுத்தப்பட்டுள்ளன." இத்தகைய செயற்பாடுகளின் பிரதிபலிப்புக்களாகவே கல்வித்துறையில் இன்று எமது சமூகத்தில் பட்டதாரிகள் தொடக்கம் பொறியியலாளர்கள், வைத்தியகலாநிதிகள் வரை படிமுறையான வளர்ச்சியைக் கண்டுள்ளனர்.

5. சிறந்த தலைவரின் வழிகாட்டல்

இத்தகைய செயற்பாடுகள், முன்னெடுப்புக்கள் யாவற்றிற்கும் முக்கிய கால்கோளிட்டவரான தலைவர் இ.மு.நாகலிங்கம் அவர்களின் பல்வேறுபட்ட திறமைகளும், முகாமைத்துவ தந்திரோபாயங்களும் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியவை. இவ்வாறானதொரு தலைவரால்தான் இப்படியானதொரு புரட்சிகரமான செயற்பாடுகளை பல்வேறுபட்ட கோணங்களில் பல உத்திகளைக் கையாண்டு செயற்படுத்த முடியும். இவ்வகையில் இவர் கையாண்ட உத்திகளை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

1. பல்வேறு நிர்வாக அலகுகளையும், கட்டமைப்புகளையும் உருவாக்கியமை
2. கருத்துப்புரட்சி இயக்கம் ஒன்றை உருவாக்கி பிரச்சாரம் செய்தமை
3. கிராமந்தோறும் சென்று அங்கே வாழ்ந்த கல்விகற்றோர் சமூகத்தை ஒன்றிணைத்தமை
4. அவர்கள் மத்தியில் சமாசத்தின் நோக்கு, எமது சமூகத்தின் போக்கை, மாற்றியமைப்பதற்கு முன்னெடுக்கக்கூடிய திட்டங்கள் பற்றியெல்லாம் எடுத்துக்கூறி மனமாற்றத்தை ஏற்படுத்தி மறுமலர்ச்சிக்குத் தூண்டியமை
5. நிறுவன ரீதியான வேலைத்திட்டங்களினை முன்னெடுக்க கிராம மட்டத்தில் கழகங்கள் அமைக்கச் செய்தமை

6. செல்வச்சந்நிதி மகாநாட்டின் மூலம் ஒட்டுமொத்த நாவிதர் சமூகத்தையும் ஒன்றிணைத்தமை

7. கல்வித்துறை மேம்பாட்டிற்கு பின்வரும் பல உத்திகளைக் கையாண்டமை:

அ. 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோரை கௌரவித்தல், ஊக்குவிப்புநிதி வழங்குதல்

ஆ. O/L, A/L சிறந்தபெறுபேறு மற்றும் பல்கலைக்கழகத் தகுதி பெறுவோருக்கான கௌரவிப்பு

இ. பெற்றோரை இழந்த, கல்விகற்கும் பிள்ளைகளை இனங்கண்டு அவர்களின் கற்றலுக்கான உதவிகளை வழங்குதல்

ஈ. பட்டினி கிடக்கநேரிடினும் பத்தாம் வகுப்புவரையேனும் கல்வி கற்போம், கற்பிப்போம் என்னும் கொள்கையுடனான செயற்பாடுகள்

உ. பல்கலைக்கழகக் கல்வியை முடித்து உயர் பட்டப் படிப்புக்களை மேற்கொள்பவர் களையும் கௌரவித்தல்

ஊ. மாணவர் மட்டத்தில் நடாத்தப்படும் பல்வகைப் போட்டிகள்

எ. கல்வியில் சாதனை படைத்த எம்சமூகம் சார்ந்தோரை மட்டுமன்றி பிறசமூகம் சார்ந்தவர்களையும் கௌரவித்தல் முதலான பல செயற்பாடுகள் கல்விப்புலத்தில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

8. சமூகநல உதவிகளில் கையாண்ட உத்திகள்:

அ. விதவைகளுக்கும், வலுவிழந்தோருக்கும், ஆதரவற்றோருக்கும் உதவி வழங்குதல்.

ஆ. போரினால் பாதிக்கப்பட்டோர்க்கு உதவுதல்.

இ. இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோர்க்கு உதவுதல். (சுனாமி, வெள்ளப்பெருக்கு....)

ஈ. நாட்டுப்பற்றாளர், சமூகப்பற்றாளர்கள், புரட்சிகரமான சிந்தனையாளர்கள், தொழிற்புரட்சி மாற்றங்கள் செய்வோர் முதலான பலரையும் கௌரவித்தல்.

உ. சமய, சமூகச் சடங்குகளை ஒழுங்குபடுத்தல், பங்கேற்றல், வாழ்த்துதல்.

ஊ. மரணச்சடங்குகளில் பங்கேற்று இரங்கற்கூட்டம், பிரார்த்தனை என்பவற்றை செய்தல்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மக்கள் மத்தியில் ஆக்கபூர்வமான கருத்துப் பகிர்வினையும், சுமுகமான மனமாற்றத்தையும், எமது சமூகம் சார்ந்ததோர் பற்றுணர்வையும் நம்பிக்கையையும் ஊட்டியுள்ளார். இவ்வாறு இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் சிறப்புடன் வாழும் எம்சமூகம் சார்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி நிதியுதவி, ஆளுமைப்பகிர்வு, கருத்துப்புரட்சி, மனமாற்றம், தொழிற்பெயர்ச்சி என்று பல மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தி, உதவும் மனங்கொண்ட மனிதநேயம் மிக்கதோர் சமுதாயமாக எமது சமுதாயம் எதிர்காலத்தில் இருக்க வேண்டுமென்ற

தூரநோக்குடன் செயற்பட்டு வந்துள்ளார். இவ்வகையில் எமது சமூகம் இன்று எவ்வளவோ மாற்றங்களைத் தன்னகத்தே கொண்டு நிமிர்ந்து நிற்கிறது.

6. பிறசமூகத்தினரின் பார்வையில் எமது சமூகம்

அன்று அடிமைகளாய் கைகட்டி வாய்பொத்தி குனிந்ததலை நிமிராமல் குடிமைத்தொழில் புரிந்து அடிமைவாழ்வு வாழ்ந்த எமது சமூகத்தவர் சகலவழிகளிலும் சமத்துவம், சமரசம் பேணும் வகையில், பிறசமூகத்தின் மத்தியில் சரிநிகர் சமானமாய் எங்கும் எதையும் சமாளித்து வரவல்ல வலிமையும் உரிமையுமுடையவர்களாய் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள்.

ஐந்தாம் வகுப்புடன் கல்வியை நிறுத்தி பெண்கள் வீட்டினுள் முடங்கியும், ஆண்கள் சுயதொழிலில் இறங்கியும் செயற்பட்ட நிலைமைகள்மாறி, தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கற்கும் ஆர்வமும் இருந்தால் அழியாத கல்விக்கு வறுமை தடையாகாத வகையில் கற்று முன்னணியில் இருந்த பல பெரியார்களின் வழிகளைப் பின்பற்றி, புதியதோர் சிந்தனையுடன் மிளிரலாம் என்று, மனவைராக்கியம் கொண்டு உயர்ந்து நிற்கும் பலரை இன்று எம் சமூகம் கொண்டு விளங்குகிறது.

எந்தஒரு தனிமனிதனும் சமூகத்திலிருந்து ஒதுங்கிவாழ்வது பயனற்றது. சமூகத்திற்குள் அவர்களை உள்வாங்கவும், மாற்றியமைக்கவும், ஒருதலைமைத்துவத்தின்கீழ் கொண்டுவரவும், சகலஉரிமைகளையும் பெற்று எதிர்காலம் பற்றிய நற்சிந்தனையுள்ள சமூகமாகப் பரிமளிக்கச் செய்யவும் இந்த சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து முன்னெடுக்கும் செயற்பாடுகள் பலவும் பிறசமூகத்தினர் பலரையும் கவர்ந்ததுடன், அவர்களின் செயற்பாடுகளிலும் புதிய மாற்றங்களை ஏற்படுத்தவும் வழிகோலியுள்ளமை பெருமைப்படத்தக்க விடயமாகும். எடுத்துக்காட்டாக:

1. ஊடகங்கள் மூலம் நிகழ்வுகள் பகிரங்கப்படுத்தப்படும் நிகழ்வுகளாக அமைந்துள்ளமை.
2. ஏனைய சமூகத்தினைச் சேர்ந்த அறிஞர் பெருமக்களை எமது சமூக நிகழ்வுகளில் பங்குபெற வைப்பதன் மூலம், எம் சமூகத்தின் எழுச்சி பற்றி பிற சமூகத்தினர் அறிந்துகொள்ள வழிவகை செய்தமை.

எமது பல நிகழ்வுகளில் கலந்துகொண்டு சிறப்பித்த யாழ் பல்கலைக்கழக கல்விச் சமூகத்தினர் பலரும் அவ்வப்போது கூறிய கருத்துக்கள் அவர்களின் நோக்கினை எமக்குத் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

ஒருதடவை பேராசிரியர் க.மோகனதாஸ் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்:

" உங்கள் நிகழ்வுகள் விழாக்கள், கௌரவிப்புக்களினூடாக நாங்கள் படிக்கக் கூடிய விடயங்கள் நிறையவே உள்ளன. மேலும் உங்களது விழாக்களின் ஒழுங்கமைப்பு, கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு, கல்வியைத் தொடர்வதற்கான நிதியுதவித் திட்டங்கள், சமூக முன்னோடிகளைப் பாராட்டுதல், கௌரவித்தல் முதலான செயற்பாடுகள் பாராட்டத்தக்கவை. இவ்வாறான செயற்பாடுகள் எல்லாச் சமூகத்தினரா லும் பின்பற்றப்பட வேண்டியவை."

3. பின்வரும் சமூக வைபவங்கள் யாவற்றிலும் பண்பாட்டம்சங்களையும் ஒழுக்கக் கட்டுப்பாட்டையும் பேணுதல்.

அ. திருமணவைபவங்கள்.

ஆ. சடங்குகளில் கடைப்பிடிக்கப்படும் விழுமியங்கள்.

இ. நினைவஞ்சலிக்கூட்டங்கள், ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள்.

ஈ. நினைவுப் புலமைப்பரிசில் நிதி அங்குரார்ப்பண வைபவங்கள்.

உ. ஞாபகார்த்த வெளியீட்டு வைபவங்கள்.

4. ஆரம்பகாலம் முதல் இன்றுவரை பல ஏனைய சமூகங்களை சேர்ந்த புத்திஜீவிகளின் தொடர்பும், ஆலோசனை வழிகாட்டலும் எமது சமூக நிறுவனங்களுக்கு இருந்து வருகின்றமை.

" யாழ்மாவட்டத்தில் சமூக நிறுவனங்கள் எதுவுமே பாராளுமன்ற சட்டத்தால் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்களாக வந்த வரலாறு இதுவரை இருந்ததில்லை. ஆனால், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் என்கின்ற இந்த எழுச்சி இயக்கம் அந்த அந்தஸ்த்தைப் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கது."

என்று எமது இயக்கத்தின் செயற்பாடுகளைக் கண்ணுற்ற முன்னாள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு.சண்முகநாதன் குறிப்பிட்ட கருத்து எமது சமூகம் பற்றிய ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தினதும் கவனத்திற்கு வித்திட்டுள்ளது.

7. இன்று எமது சமுதாயம்

ஐம்பது வருடங்களுக்கு முன் எமது சமுதாயம் இருந்த நிலைக்கும், இன்று எமது சமுதாயம் இருக்கும் நிலைக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உண்டு. இவற்றுக்கு எல்லாவகையிலும் முன்நின்று உழைத்த எமது சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்த ஒரு தலைமைத்துவத்தின் கீழான பல்வகை சமூக மறுமலர்ச்சி முன்னெடுப்புக்களும், செயற்பாடுகளுமே அத்திவாரமாக அமைந்தன. இவற்றுடன், பல்விதமான தொழில்நுட்ப மாற்றங்களுடன்கூடிய சமூக மாற்றமும் சேர்ந்து கால, தேச, வர்த்தமானங்களுக்கேற்ப பழையன கழிதல் என்றவகையில் புதியதோர் உலகில் இன்றைய இளைய சமுதாயம் பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் சாதி,சமய பூசல்கள் ஒழிந்து சமத்துவம், சகோதரத்துவம், சாந்தி, சமாதானம் என்றநோக்கில் தமிழ்சமூகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இன்று சாதிப் பிரச்சினைகளுக்கும் அப்பால் வெவ்வேறு பிரச்சினைகளுக்கு சமுதாயம் முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளது. இந்நிலையில் எல்லோரும் தமிழர் என்ற ஒன்றுபட்ட தன்மை ஒன்று உருவாகும் காலமாற்றத்திற்குள்ளேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வகையில் சில எதிர்கால நோக்குகளை முன்வைத்து இந்நிறுவனம் இயங்கி வருகிறது.

8. எதிர்கால நோக்குகள்

1. முதன்மை நோக்கு: வடக்கு, கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டமைந்துள்ள எமது சமூக மக்களை எழுச்சி பெற்ற, வளர்ச்சி பெற்ற, உயர்ச்சி பெற்ற சமத்துவம் பெற்ற, கௌரவம் மிக்கதொரு சமூகமாகப் பரிமளிக்கச் செய்தல்.

2. சிறப்புநோக்கு: தமிழினத்தைச் சேர்ந்த ஏனைய பின்தங்கிய சமூகங்களையும் வளர்ச்சிபெற்ற சமூகங்களாகப் பரிணமிக்கச் செய்ய எம்மாலான பங்களிப்பை செய்தல். ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் உதவுதல்.

3. பொது நோக்கு: தேசிய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உதவுதல்."

இவ்வாறான முக்கிய இலக்குகளை முன்வைத்து, எதிர்கால செயற்பாடுகள் பலவற்றை இளைய கல்விச் சமூகத்தினரிடையே இனங்காணப்பட்ட முன்மாதிரியானோரின் கைகளில் பகிர்ந்தளித்து, அவற்றுக்கான வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்கி, தலைவர் இ.மு.நாகலிங்கம் அவர்கள் நெறிப்படுத்தி வருகின்றார். கடுமையான முயற்சியும், தளராத நம்பிக்கையும், ஓயாதபணியும், பக்கபலமான கல்விப்புலமும் எமது சமூகத்தைச் சார்ந்த கல்வியியலாளர்களின் திறமைகளும் செயற்பாடுகளும் எமது சமுதாயத்தின் சிந்தனையிலும், செயலிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இனிவரும் சமுதாயம் ஏற்றம்மிக்க வளமான சமுதாயமாக, வாழும் காலத்தில் ஒட்டுமொத்த சமூகத்தின் ஒற்றுமையையும், நம்பிக்கையையும் கொண்ட சமுதாயமாக ஓர்இனம், ஓர்குலம், ஓரிலக்கு என்ற நோக்கோடு புதியதோர் மாற்றத்தினை ஏற்படுத்தும் இனிய சமுதாயமாக மிளிரும் என்பதே யாவரதும் எதிர்பார்ப்பாகும்.

உசாத்துணை நூல்கள்

1. நிர்சன் - இறக்குவானை - யாழ்ப்பாணத்து சாதியமைப்பு - கட்டுரை -தமிழ்விக்கிப்பீடியா
2. சிவத்தம்பி - கா. பேராசிரியர் - யாழ்ப்பாணம் - சமூகம் - பண்பாடு - கருத்துநிலை கொழும்பு – 2000
3. கருத்தரங்கத்தொகுப்பு "சமூக எழுச்சி இயக்கம் வளர்ந்த வரலாறு சமுதாய எழுச்சிக்கும் வளர்ச்சிக்குமான அதன் வகிபாகமும்" - கோவை
4. பொன்விழா மலர் - மாவைபாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் 50 ஆண்டு சாதனைகளின் தொகுப்பு – 2006
5. சமூகஜோதி கதிரேசு நவரத்தினம் நினைவு வெளியீடு – 10 – 07 – 2007
6. புனர்வாழ்வு, கல்வி. அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர்சபை அறிக்கையும் நிதிக்கூற்றுக்களின் திரட்டும் - 1993 – 2008
7. எழுச்சித்தந்தை இ.மு.நாகலிங்கத்தின் பவளவிழா நிகழ்வுகள் - 14 -10 – 2011

சமூக நிறுவனங்களின் சமுதாய மேம்பாட்டுப் பணிகளுக்கு மாதர் சமூகத்தின் வகிபாகம்

திருமதி.பத்மா சோமகாந்தன்
மூத்த எழுத்தாளர்

'சமூகம்' எனக்குறிப்பிடும் போது அது ஆண், பெண் என்ற இரு இனங்களையும் குறிக்கும். அத்தகைய சமூகத்தின் மேம்பாட்டிற்கு உயர்ச்சிக்கு, வளர்ச்சிக்கு மாதர் சமூகத்தின் வகிபாகம் என்ன? அது எத்தகைய பங்கினை ஆற்றியுள்ளது என்பதைப் பற்றிச் சிறிது நிதானித்து மீட்டுப் பார்க்கும் போது, மாதர் ஆண்டாண்டு காலமாக ஆண்களைச் சார்ந்தே வாழ்ந்தாலும், பொதுப்பணிகளில் மறைந்தும் மறைமுகமாகவுமிருந்து கணிசமான அளவு பங்காற்றியுள்ளனர் என்பது துல்லியமாகத் தெரியவருகிறது. இன்று போல் அன்றும் பெண்கள் வெளியேவந்து பல்லோர் மத்தியில் திட்டமிடல், தீர்மானித்தல், கருத்துக்கள் தெரிவித்தல், பொதுச்செயற்பாடுகளில் ஈடுபடுதல், ஓடியாடித்திரிந்து மேற்பார்வையிடல் போன்ற விடயங்களில் வெளிப்படையாக இயங்காவிட்டாலும் ஆண்கள் முன்னெடுக்கும் பணிகளுக்கெல்லாம் உறுதுணையாகவும், அவர்கள் சோர்ந்து துவண்டு போகும் வேளைகளிலெல்லாம் உணவூட்டி, உணர்வூட்டி, உற்சாகப்படுத்தியும் அநாயாசத்தைப் போக்கியும் ஊக்கமளித்துள்ளனர்.

மோட்டார்காரின் யந்திரம் மறைந்திருந்தாலும் அதன் ஓட்டத்திற்கும் வேகத்திற்கும் அது எப்படி மையமாக இருந்து இயங்குகின்றதோ அதேபோல அக்காலத்துப் பெண்மணிகள் மனையறத்தின் வேராக இருந்து' மண்ணுள் மறைந்திருக்கும் வேரே முழுமரத்திற்கும் வாழ்வாதாரமாக இருப்பதைப் போல வாழ்வுக்கு உரமூட்டி வாழ்ந்தனர். இதனைச் சுட்டியே சங்க இலக்கியப் பெண்பாற்புலவர் 'ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே' எனப் பெண்ணின் தலையாய கடமை சமூகத்தின் எதிர்காலத்தூண்களாகிய சிறந்த புத்திரர், புத்திரிகளைப் பெற்றெடுத்துக் கொடுத்தல் என அழகாகக் குறிப்பிடுகிறார். இச்சமூகத்திற்கு மாதரின் இத்தகைய பணிக்கு ஈடிணையுண்டோ?

அன்றைய சமுதாயக் கட்டமைப்பு பெண்களை அகத்துக்குரியவர்களாகவும் ஆண்களைப் புறத்துக்குரியவர்களாகவும் ஆக்கியிருந்தமையாலும், ஆண் வலிமைமிக்கவன், அறிவுக்குரியவன், தலைமையேற்பவன், அதிகாரம் செய்பவன் எனவும் பெண்ணென்றால் மென்மை, அழகு, பணிவு, தியாகம், உணர்வுபூர்வமானவள், ஒழுக்கம் பேண வேண்டியவள் என்றெல்லாம் கற்பிதம் செய்திருந்தது. ஆண் கல்விகற்பது, தொழில் பார்ப்பது அவசியம். ஆணுடைய பாதுகாப்பில் பெண் வாழலாம். ஆணைச்சார்ந்து வாழும் பெண்ணுக்குக் கல்வியறிவு தேவையில்லை. பெண், கணவன், குழந்தைகள், முதியோர் யாவரையும் பேணி வீட்டிலேயே அடங்கியிருந்து வாழவேண்டும் என்ற நிலையில் பெண்கள் ஆற்றிய பணிகள் வெறும் உதவிகளாக, உபபணிகளாக இரண்டாம் பட்ச நிலைகளாக வைத்துக் கணிக்கப்பட்டதேயன்றி அவை பெரிதாகக் கருத்தில் ஏற்கப்படவில்லை. பெண்களும் சமூகத்தில் சுதந்திரமாக உலவித்திரியும் சூழல் இருக்கவில்லை.

அடிமைப்பட்டுக் கிடந்த நாடுகள் காலமாற்றத்தினால் தேசவிடுதலை வேண்டிப் போராடத் துணிந்த போது, வீட்டுக்குள்ளே பெண்ணை அடிமைப்படுத்தி முடக்கிவைத்துக் கொண்டு நாட்டுக்கு விடுதலை வேண்டுமென முழக்கமிடுவது எங்ஙனம் பொருந்தும்? எனச் சில சிந்தனாவாதிகள் சீர்திருத்தச் செம்மல்கள் உரத்துச் சிந்தித்ததன் விளைவே பெண் விடுதலையும் பெண்கல்வியும் சாத்தியமானது.

'பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதரறிவைக் கெடுத்தார்'

என்பன போன்ற பாரதியாரின் கவிதைகள் கருத்துக்கள் எங்கும் பரவத் தொடங்கவும், பெண்ணைப் பொத்தி வைத்துப் பாதுகாக்கப் பயந்த பெற்றோர் பாலியவயதிலேயே அவளை மணமுடித்து வைக்கும் நிலையில் மாற்றமேற்பட்டது. பெண்களும் கல்விவாசனை பெற்றனர், அறிவு விருத்தியடைந்தனர். பல சாதனைகளைப் புரிந்து தமது திறமையை நிலைநாட்டினர்.

பெண்ணறிவு பெருகச் சமூகத்தின் சரிபாதியிடமிருந்த மூடக்கொள்கைகள், பேதமை, அறியாமை என்பன விலகின. ஆண் கல்விகற்பதனால் அவன் உயர்வடைகிறான், ஆனால் பெண் பெறும் கல்வியால் அச்சமூகமே அறிவும் பொலிவுமடைகிறது என்பர் ஆன்றோர்.

கல்வியறிவைப் பெற்ற பெண் நிறுவனங்களில் பணிபுரிபவளாகவும் பல நிறுவனங்கள், அமைப்புக்கள், மன்றங்கள் என்பவற்றை நிறுவி அவற்றைக் கொண்டு நடத்தும் ஆளுமைமிக்கவர்களாகவும் தமது அறிவைப் பயன்படுத்துகின்றனர். வீடு, சமையலறை, குடும்பம் என்ற வட்டத்துள் மாத்திரம் சுற்றிவந்தவர்கள் இன்று வீட்டைத் தாண்டி வெளியே வந்து சமூகப்பணி, பொதுப்பணி என்பவற்றிலும் காலூன்றி உழைக்கின்றனர். பெண்ணின் உலகம் வீடு, உறவு, சமையல், அழகு, அலங்காரம் என்ற நிலையிலிருந்து முற்றுமுழுதாக மாறி தொழில், சமூகம், அரசியல், பொருளாதாரம், தொழில்நுட்பம், விஞ்ஞானம் எனப் பல துறைகளிலும் சிறகு விரிக்கத் தொடங்கிவிட்டது.

பரம்பரை பரம்பரையாக வெளியுலகப் பரிச்சயமின்றி வீட்டினுள்ளே ஒதுக்கப்பட்டிருந்தாலும் அங்கிருந்த குடும்ப யந்திரத்தை லாவகமாக இயக்கிய அனுபவம், பொறுப்புணர்ச்சி, அனுசரித்துப் போதல், விட்டுக் கொடுத்தல், பொறுமை காத்தல் என்ற இனிய சுபாவங்கள் கைகொடுக்கவே சமூக நிறுவனங்கள் முன்னெடுக்கும் சமுதாயப் பணிகளிலும் பெண்கள் தம் முத்திரையைப் பதித்தே வருகின்றனர்.

ஆணினமே வலிமைமிக்கது உயர்ந்தது இல்லைப் பெண்ணினமே தலைசிறந்தது பெருமைமிக்கது எனச் சிறுபிள்ளைத்தனமாகப் போட்டி, பொறாமை கொண்டு இவற்றை அணுகாமல் இரு இனத்திற்கும் தனித்துவமான பல விசேட சிறப்புக்கள், ஆற்றல்கள் உண்டென்பதைச் சரியாக விளங்கிக் கொண்டால் பல பிரச்சனைகளுக்கு இன்னல்களுக்கு நாம் இலகுவில் தீர்வுகாண முடியும்.

இந்த ரீதியிலே தான் நாம் பல விஷயங்களை உற்று நோக்கவேண்டும். பெண் கல்வியறிவும் போதிய உலக அனுபவமும் பெற்றிருப்பாளாயின் பொதுப்பணிகளில் ஆண்களுக்குச் சமமாக, இல்லை இன்னும் சற்று அதிகமாக வினையாற்ற முடியும் என்பதை நான் உரத்துச் சொல்லலாமென எண்ணுகின்றேன், காரணம் பெண்கள் கையில் எடுத்துக்

கொண்ட காரியத்தை அது முடியும் வரை நிறைவேறும் வரை அதே கனவாக நினைவாகத் தொடர்ந்து சிந்தித்தபடியேயிருக்கும் தன்மைமிக்கவர்கள். அதனோடு சிறு சிறு விஷயங்களையெல்லாம் திருப்திகரமாக நிறைவேற்றுவதில் கண்ணுங்கருத்துமாகவும் கசிவு உள்ளம் மிக்கவர்களாகவும் இருக்கும் இயல்புமிக்கவர்கள் பொதுவாகவே உயிரினங்களில் கூடுதல் அக்கறை கொள்வர். இப்பண்புகளெல்லாம் பொதுப்பணிகளில் அவர்கள் காலடியை அழுத்தமாகப் பதிப்பதற்கு இசைவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இலங்கையிலே பல்லாண்டுகளுக்கு முன்னர் பொதுப்பணிகளில் ஈடுபட்டுக் கணிசமானளவு பங்களிப்பை நல்கிய பத்திரிகை ஆசிரியையான மங்களம்மாள் மாசிலாமணி, மீனாட்சியம்மாள் நடேசையர், கப்பல் கட்டிய வல்வெட்டித்துறை அன்னமலர் அக்கா, சில ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்த தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோரை நாம் நினைத்துப் பார்க்கும் போது, நெடுந்தீவிலே 1941ஆம் ஆண்டில் கிராம சபையின் தலைவியாகப் பணியாற்றிய செல்லம்மா நாகேந்திராவை மறந்து விடுவதற்கில்லை. பெண்கள் அரசியலுக்கும் தலைமைப்பதவிக்கும் அருகதையற்றவர்களே என்ற கருத்து இறுக்கமாக நிலவியிருந்த வேளையிலே, பெண்களாலும் ஆண்களைப் போல இப்பதவிகளைப் பொறுப்புக்களைச் சுமக்க முடியாதே என எழுதாச் சட்டமாகக் கருதியிருந்த காலகட்டத்திலே தான் அம்மையார் நெடுந்தீவு கிராம சபைத்தலைமைப் பொறுப்பை ஏற்று சமய வழிபாட்டிற்கான ஆலயத் திருப்பணிகள், குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் வழங்கும் திட்டம், பாடசாலை விரிவாக்கம், பொதுமக்களின் குடி நீர்த்தேவை, பெண்களுக்கென மாதர் சங்கம் அமைத்துப் பொழுது போக்குக்காகவும், வருவாய்க்காகவும் பனை ஓலையில் பெட்டி, கடகம், சுளகு, உமல் பாய் என்பன இழைத்தல், காய்கறித்தோட்டமமைத்தல், சேமிப்பு இயக்கம் எனப் பலதரப்பட்ட பணிகளை அறிமுகப்படுத்தியதோடு அவற்றை வெற்றிகரமாகவும், திருப்தியாகவும் நிறைவேற்றி வைத்தார்.

நீண்டகாலயுத்தம் நமது நாட்டு இயல்பு வாழ்க்கையைச் சீரழித்துவிட்டமையால் குடும்பங்கள் உடைந்து சிதறிக் குழந்தைகள் பெற்றோரை இழந்து அநாதைகளாக, அங்கவீனமுற்றோர், எதிலிகள், விதவைகள், போக்கற்றோர் என ஏராளமானோர் வாழும்வகை தெரியாது தவிக்கின்றனர். இவர்களைப் பராமரிக்கவெனப் பல நிறுவனங்கள் பொது சேவைக்கெனத் தம்மை அர்ப்பணித்து உதவமுன் வந்துள்ளன. ஈழப் போராட்டம் உச்ச நிலையை அடைந்திருந்த போது குண்டு வீச்சுக்கள், துவக்குச் சூடுகளே வாழ்வின் விடியலாக வலுவுற்றிருக்க மருந்து, உணவு என்பனவற்றின் தட்டுப்பாடுகள் மனதை உலுக்கவும் மக்கள் உறவுகளை உடைமைகளை இழந்து உயிரை மட்டும் காவியபடி பாதுகாப்பு தேடி ஊரூராக ஓடி அலைந்தனர். அந்நிலையிலும் துர்க்கை அம்மனின் கருணையை மட்டுமே மனதில் இருத்தி அநாதைக்குழந்தைகள், வயதுக்குவந்த பெண்கள், மூதாட்டிகள் என எதிலிகளான ஒரு பெரும்பட்டாளத்திற்கே துணையாக, வழிகாட்டியாக இல்லிடம் தேடி, ஓடி உதவிய தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தா தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டியின் சேவையை என்னென்பது? இவற்றிலெல்லாம் பெருந்தொகையான பெண்கள் இணைந்து பணியாற்றுகின்றனர். பாதிக்கப்பட்டோர் கூட, பொதுநலனில் அக்கறை கொண்டு இத்தகையோருடன் சேர்ந்து தம்மாலியன்றவரை குழந்தைகளைப் பராமரித்தல், கல்வி, சுத்தம், சுகாதாரம், சிக்கனம், நோயாளிகளுக்கு மருந்துமாத்திரை கொடுத்து உதவுதல்,

சமையல் செய்தல், உணவு பரிமாறுதல் எனப் பல சேவைகளில் ஈடுபட்டுத் தமது துயரங்களைக் கரைக்கின்றனர்.

எனவே, சமுதாயப்பணிகளிலே இன்று சகல படிநிலைகளிலுமுள்ள பெண்கள் முன்னணி வகிக்கின்றனர் என நாம் உறுதியாகக் கூறமுடியும். இதற்கு அத்தாட்சியாகப் பல பெண் அமைப்புக்களை நாம் ஆராய்ந்து பார்ப்பின் 'பெண்கள் கல்வி ஆய்வு வட்டம்' W.E.R.C. (Women Education & Research Centre) என்ற அமைப்பு சுமார் கடந்த கால்நூற்றாண்டு காலமாக பெண்களுக்கென கல்வி,பொதுப்பணி, ஆய்வு செய்தல் பல பயிற்சிகளைப் பயிற்றுவித்தல் என்பவற்றை மையமாக வைத்து இயங்கிவருகிறது. பெண்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதிலும், சமுதாயப்பணிகளுக்குப் பெண்களைத் தயார்ப்படுத்துவதிலும் முன்னணி வகுக்கின்றது.

இதே போல 'மனித மேம்பாட்டு மையம்' (Development of Human Resoucers) 'விழுது' என்ற பெயரில் மக்கள் பொதுநலப்பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் ஊக்கமுடன் உழைத்து வருகின்றது. இவற்றின் தவிசாளராகப் பெண்களே பதவி வகித்தாலும் ஏனைய பணிகளிலும் 99% பெண்களே கடமை புரிகின்றனர்.

'வின்'(Women in Need) என்ற நிறுவனம் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நிலையமாக அமைந்தாலும், இங்கும் அனேகமாக பெண்களே இணைந்து பொதுப்பணிகளில் தம்மை ஈடுபடுத்துகின்றனர். இப்படிப் பல அமைப்புக்கள் நாட்டின் நாலாபக்கங்களிலுமிருந்து சேவையாற்றுகின்றன.

இதைத் தவிர ஊடகப்பயிற்சிநெறிகள், தையல், நடனம், இசை, பாடசாலைக்கல்வி, நூல்நிலையம், முன்பள்ளிப்பயிற்சி, ஓவியம், வாசகர் வட்டம், கதை வட்டம், உரையாற்றல், பின்னல் எனப் பல தரப்பட்ட விடயங்களில் அறிவை வளர்க்கவும், அனுபவங்களையும், பயிற்சிகளையும் கொடுப்பதற்கான வகுப்புக்கள், பயிற்சிப்பட்டறைகள் என்பவற்றை இலவசமாகவும் பணம் பெற்றுக் கொண்டும் பெண்களே பொறுப்பேற்று நடாத்துகின்றனர். சில பெண்கள் ஒன்று கூடி மாதர் சங்கங்கள் அமைத்து அவை மூலம் பண்டிகை, கொண்டாட்டங்கள், குருபூசைகள், ஆண்டு விழாக்கள், ஜயந்திகள் போன்றவற்றைச் சொற்பொழிவுகள், இசைக்கச்சேரிகள், கலைநிகழ்ச்சிகள் என்பனவற்றையும் ஏற்பாடு செய்து பெரியோரைப் பொது சேவையாளரைக் கௌரவிக்கின்றனர். மகளிர்தினம் போன்றவற்றை வெகுவிமரிசையாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

இத்தகைய பொதுச்சேவைகளில் பல நூற்றுக்கணக்கான பெண்கள் மிகுந்த அர்ப்பணிப்போடு சேவை புரிந்து வருவது என்றென்றும் பாராட்டிற்குரியதே. சில பெண்கள் அமைப்புக்கள் வறுமையால் வாடும் அநாதைகள் ஏதிலிகளுக்கு அவரவர் உடல்உள வலுவுக்கேற்ப கோழி, ஆடு, மாடு வளர்த்தல். மாவிடித்துக் கொடுத்தல், பலகாரம் செய்து விற்றல், கூடைபின்னல், காய்கறித் தோட்டங்கள் அமைத்தல் எனச் சிறு சிறு வருவாய்க்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. இன்றைய நிலையில் இத்தகைய பணிகளில் ஏராளமான பெண்களே ஈடுபட்டு மக்கள் பணியே மகேசன் பணியாக மனிதத்தை வாழ வைக்கின்றனர்.

எமது சமூக எழுச்சி இயக்கமும் மாதர்களின் பங்களிப்பும்

திருமதி ஜெகதீசன் செல்வராணி
சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்
பிராந்திய உள்ளூராட்சி
உதவி ஆணையாளர் அலுவலகம்
யாழ்ப்பாணம்

எமது சமூக நிறுவனங்களில் மக்கள் மேம்பாட்டுப் பணிகளுக்கு மாதர் சமூகத்தின் வகிபாகத்தின் முக்கியம் பற்றி திருமதி. பத்மா சோமகாந்தன் அவர்களின் ஆய்வு நோக்கிய கட்டுரையின் தொடர்ச்சியாக எமது சமூக எழுச்சி இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு எம் மாதர் சமூகத்தின் பங்களிப்பு என்னும் இக் கட்டுரையை வழங்கியுள்ளேன்.

எமது சமூக எழுச்சி இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு முதியோர்கள், மூத்தோர்கள், மாணவிகள், யுவதிகள் எனப் பலரும் பங்களிப்புச் செய்துள்ளனர். அத்தகையோரை அடையாளப்படுத்தி அவர்களின் பங்களிப்பை பதிவுசெய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

1.0 மூத்த முன்னணி சமூக சேவகிகள்

1.1 திருமதி தங்கம்மா நாகலிங்கம்

எமது சமூக எழுச்சி இயக்கத்தின் வளர்ச்சிக்கு எழுச்சித் தந்தை இ.மு.நாகலிங்கம் அவர்களின் துணைவியார் 1965 முதல் இற்றைவரை வழங்கி வரும் காத்திரமான பங்களிப்பை மதித்து எமது சமூக எழுச்சி இயக்கத்தின் ஒரு மூத்த முன்னணி சமூக சேவகியாக தலைவியாக மதிப்புப் பெற்றுள்ளார். இவருடைய வகிபாகம் பற்றிய விளக்க உரை திரு.இ.சாந்தகுமார் அவர்களால் இந் நூலுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 'எழுச்சித் தந்தை இ.மு.நாகலிங்கம் அவர்களின் மக்கள் மேம்பாட்டுப் பணிகளுக்கு உந்துசக்தியாக இருந்தவர்களின் வகிபாகம்' என்ற கட்டுரையில் இடம் பெற்றுள்ளது. எழுச்சி இயக்கம் தோற்றம் பெற்ற காலத்தில் மாதரணித் தலைவியாக கடமையாற்றி இளைய தலைமுறையினரை வழிப்படுத்திய பெருமை இவருக்குண்டு.

1.2 திருமதி யோகராசா நாகரத்தினம்

திருமதி யோகராசா நாகரத்தினம் அவர்கள் எமது சமூக எழுச்சி இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆற்றிய சேவை நினைவு கூர வேண்டியதாகும். எம் மாதர்களின் வரிசையில் மூத்த முன்னணி சமூக சேவகியாக இருந்து எமது சமூக எழுச்சி இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு இவரின் வகிபாகம் இந் நூலில் 4ஆம் பகுதியில் எழுச்சி முன்னணித் தலைவர்கள் பற்றிய கட்டுரையில் இடம் பெற்றுள்ளது. எழுச்சி இயக்கம் தோற்றம் பெற்ற காலத்தில் மாதரணித் தலைவியாக கடமையாற்றி இளைய தலைமுறையினரை வழிப்படுத்திய பெருமை இவருக்குண்டு.

1.3 திருமதி நாகம்மா தம்பையா

இவர் எமது சமூக எழுச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான S.V தம்பையா அவர்களின் துணைவியாவார். எமது சமூக எழுச்சி இயக்கமானது ஒரு தேசிய இயக்கமாக 12.09.1980 இல் பிரகடனம் செய்வதற்கும், எழுச்சி இயக்கத்துக்கான ஆறு அம்சத்திட்டத்தைத் தயாரிப்பதற்கும், அத் திட்டத்தை 25.12.1980 இல் பிரகடனம் செய்வதற்கும் சந்நதி மகாநாட்டை நடாத்துவதற்கும் திரு S.V தம்பையா அவர்கள் வழங்கிய காத்திரமான பங்களிப்புக்கு அவரது துணைவியார் பக்க பலமாக இருந்துள்ளார்.

15.04.1981 இல் நடைபெற்ற தேசிய மகாநாட்டுக்கு உணவு சமைத்து வழங்குவதற்கு முன்னணியில் நின்று திருமதி தம்பையா அவர்கள் சேவையாற்றியுள்ளார். 09.01.2002 இல் S.V தம்பையா அவர்கள் மறையும் வரை அவரது சமூகப் பணிகளுக்கு திருமதி தம்பையா அவர்கள் பெரும் உந்துசக்தியாக இருந்துள்ளார். சமாசக் கூட்டங்கள் நிதியக் கூட்டங்கள், சமூக வைபவங்கள் அனைத்திலும் கணவர் சகிதம் பங்குபற்றி அந் நிகழ்வுகளைச் சிறப்பித்த பெருமைக்குரியவர்.

1983ஆம் ஆண்டில் திரு. திருமதி தம்பையா தம்பதிகள் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு மலேசியா சென்ற போது 114 நபர்களைச் சந்தித்து 38,000 ரூபாவை வசூலித்து நிதி மூலதனத்தை வளர்ப்பதற்கு சமாசத்தின் ஆரம்ப காலத்தில் பெரும் பங்களிப்பாற்றியுள்ளார். 1994 இல் தனிப்பட்ட விஜயமொன்றை ஜேர்மனிக்கு மேற்கொண்ட திரு.திருமதி தம்பையா அவர்கள் 25 உறவுகளிடமிருந்து 3 இலட்சம் ரூபாவைத் திரட்டி அப்பொழுது சமாசத்தின் நிதிமூலதனத்தைப் பெருக்கப் பெரிதும் உதவியிருந்தார். 1996இல் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு கனடா சென்றிருந்த வேளையில் 14 உறவுகளிடமிருந்து 64 000 ரூபாவை சேகரித்து நிதியத்தின் நிதிமூலதனத்திற்கு உதவியுள்ளார்.

கணவன் 09.02.2002 இல் காலமானதைத் தொடர்ந்து அவரது வருடாந்த சிரார்த்த தினநிகழ்வில் ஆத்ம சாந்தி அஞ்சலி நிகழ்வுகளுக்கும் சமாச முக்கியஸ்தர்களையும் அழைத்து சமாச செயற்பாடுகள் குறித்த கருத்துரைகள் வழங்குகின்ற மரபையும் அனுசரித்து வருகின்றார் S.V தம்பையா அவர்களின் ஞாபகார்த்தமாக சமாசமும் நிதியமும் இணைந்து எம் மாணவர்களுக்கு வருடாந்தம் புலமைப்பரிசில் வழங்கப்பட்டு வருகிறது இத்திட்டத்தின் கீழ் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில்ப் பரீட்சையில் வருடாந்தம் சமாசத்தைச் சேர்ந்த மாணவர்களுள் முதன்மையாகச் சித்தி பெறும் மாணவர்களுக்கு அப் பரிசில் வழங்கப்படுகின்றது. திருமதி தம்பையா அவர்களும் பிள்ளைகளும் இணைந்து அன்னாரின் பெயரால் இன்னொரு புலமைப் பரிசில் நன்கொடையையும் வருடாந்தம் வழங்கி வருதல் குறிப்பிடத் தக்கது.

1.4 திருமதி கனகம்மா கந்தையா

1955ஆம் ஆண்டு மாவைபாரதி வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1990ம் ஆண்டு வரை வெள்ளவத்தை காலிவீதியில் அமைந்த 55ஆம் இலக்கக் கட்டடத்தில் திருமதி கனகம்மா கந்தையா தம்பதியினர் வசித்து வந்தனர். அக் கட்டடம் அவர்களின் தொழில் நிலையமாகவும் இருந்து வந்துள்ளது.

1955ஆம் ஆண்டு மாவைபாரதி மறுமலர்ச்சி மண்றத்தின் கொழும்புக் கிளை கூட்டங்கள் இவர்களின் இல்லத்திலேயே நடைபெற்று வந்தது. 1980ஆம் ஆண்டு எமது எழுச்சி இயக்கம் ஒரு தேசிய இயக்கமாகப் பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சமாசத்திற்கான ஆறு அம்சத்திட்டம், சமாசத்தின் யாப்பைத் தயாரித்தல், விவேகானந்த சபையில் நடாத்தப் பட்ட மகாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்தல், சந்நிதி மகாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்தல் போன்ற செயற்பாட்டிற்கு இவர்களுடைய இல்லமே கூட்டநிகழ்விடமாகப் பயன்பட்டது. 1955ஆம் ஆண்டு முதல் 1985ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 30 ஆண்டுகளாக மன்றத்தினதும் சமாசத்தினதும் சந்திப்புகளுக்கும் கூட்டங்களுக்கும் வருவோரை மனமுவந்து வரவேற்று உபசரித்து வழங்கிய ஒத்துழைப்பும் மிகச் சிறப்பானது.

தொடர்ச்சியாக எமது சமூக எழுச்சி இயக்கத்தின் செயற்பாட்டிற்கும், அதன் வெற்றிக்கும் தம்மாலான பங்களிப்பை வழங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.அவருடய கணவரான திரு.கந்தையா அவர்கள் சிறந்த சமூகத் தொண்டனாகப் பரிணமிப்பதற்கும், அவருடைய மகனான திரு.க.சிவஞானம் அவர்கள் சிறந்த முன்னணித் தலைவராகப் பரிணமிப்பதற்கும் அம்மையாரின் ஊக்குவிப்பு முக்கியமானது. சமூக உறவுகளிடயே ஐக்கியத்தை வளர்ப்பதற்கும் இவர் முன்னின்று உந்துசக்தியாக விளங்கிய பெருமைக்கு உரியவராவார்.

1.5 திருமதி பவளம் செல்லத்துரை

இவர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த திரு.சி.செல்லத்துரையின் மனைவியாவார். இவர் நீண்ட காலமாக மாவைபாரதி மறுமலர்ச்சி மன்றம், மாவை அம்பாள் ஆலயம், மாவை விநாயகர் ஆலயம், மாவைக் கந்தன் தண்ணீர்ப்பந்தல், ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்கு தனது கணவனுக்கு பெரும் உந்துசக்தியாக இருந்துள்ளார். அத்துடன் சமாசத்தின் செயற்பாடுகளுக்கும் கணவனுக்கு பெரும் பக்க பலமாக இருந்துள்ளார்.

1990இல் இடம் பெற்ற இடப்பெயர்வுகளைத் தொடர்ந்து இவர்கள் மானிப்பாயில் சொந்த இல்லமொன்றை அமைத்தார்கள். அதில் 2004ஆம் ஆண்டு முதல் மன்றத்தினதும், சமாசத்தினதும் காரியாலயமாகவும் சந்திப்பு கூட்டங்களை நடாத்துவதற்கான இடமாகவும் இவர்களது இல்லம் விளங்குகின்றது. இதன் பொருட்டு அங்கு அடிக்கடி வரும் அங்கத்தவர்களை வரவேற்று உபசரிப்பதும். இதன் பொருட்டு ஏற்படும் உபசாரச் செலவு, தொலைபேசிச் செலவு, மின்சாரச் செலவு போன்ற செலவுகளில் பெரும்பாலானவற்றை இவர்களே மனமுவந்து பொறுப்பேற்றுக் கொண்டனர்.

சிற்றுண்டி உபசரணை, மதியபோசன உபசரணை, சில சமயம் இராப்போசன உபசரணை, கொடுத்து இன்முகம் காட்டி வரவேற்று உபசரிக்கும் பண்பு கொண்டவர். இவர் வந்தோரை ஆதரித்து மனமகிழ்ச்சியுடன் சிரமம், செலவு பாராது தனது கணவனின் சமூகச் சேவைகளுக்கு ஆதரவாக இருந்துள்ளார். செல்லத்துரை பவளம் ஆகியோரின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவைக்கு இவர்களது மகள் செல்வியின் பங்களிப்பும் பாராட்டிற்குரியதாகும்.

2.0 முன்னணி மாதர் தலைவிகள்

2.1 திருமதி புஸ்பராசமணி ஆனந்தராசா

திருமதி புஸ்பராசமணி ஆனந்தராசா அவர்கள் 1980.09.12இல் நடைபெற்ற மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் வெள்ளிவிழா மகாநாட்டில் மாவை சமூகஎழுச்சி இயக்கம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்று வரை சமூகஎழுச்சி இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு ஆற்றி வரும் மகத்தான பணிகள் பற்றிய விபரம் இந் நூலில் 4ஆம் பகுதியில் எழுச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் பற்றிய கட்டுரையில் இடம் பெற்றுள்ளது எனவே அவற்றை இங்கு மீண்டும் பதிவு செய்வதை தவிர்த்துள்ளேன்.

2.2 திருமதி நளாயினி கிருஸ்னமூர்த்தி

எமது சமூக முன்னேற்றக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் வடமராட்சி பிராந்தியத்தின் நவயுகசிற்பிகள் கழகத்தின் செயலாளராக இருந்தார். இவர் தனது மாணவப்பருவத்தில் சமூக முன்னேற்றக் கழகங்களினால் முன்னெடுக்கப்பட்ட கல்விப்போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றவர். மற்றும் தனது பிராந்தியத்தைச் சேர்ந்த மாணவர்களையும் ஈடுபடுத்தி கழகங்களின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளார்.

இவர் தற்போது உயர் கல்வி கற்று யாழ் பல்கலைக் கழகத்தில் வியாபார நிர்வாகமாணி என்ற இளமாணிப் பட்டத்தைப் பெற்று தற்போது ஆசிரியர் சேவையில்பணியாற்றி வருகின்றார்.இவர் தான் கற்ற கல்வி தன் பிரதேச மாணவர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் மாணவர்களுக்கு வகுப்புகள் நடாத்தி வருகின்றார்.

இவர் 1988இல் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் நிர்வாகசபை உறுப்பினராக பதவி வகித்தார். அத்தோடு வடமராட்சி பிராந்தியச் சபையின் நிர்வாக உறுப்பினராவார். சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசமும், கல்விச் சபையும் இணைந்து நடத்தும் கல்விப் போட்டிகளில் மாணவர்களைத் தயார்ப்படுத்தி வெற்றி பெறச் செய்தார். 2012இல் சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் வடமராட்சி பிராந்தியச் சபையின் கல்விச் சபை உறுப்பினரும் ஆவார். எனவே இவரது சேவை தொடர்ந்தும் சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்திற்கு பலவழிகளிலும் பலம் சேர்க்கும் என்பது உறுதியாகும்.

2.3 திருமதி நவமணி இராஜ்குமார்

திருமதி நவமணி இராஜ்குமார் அவர்கள் சமாசத்தின் மாதர்கள் வரிசையில் குறிப்பிடத்தக்க ஒருவராவார்.இவர் தனது மாணவப்பருவத்தில் சமூகஎழுச்சி இயக்கம் வைத்த கல்விப்போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றவர். அது மட்டுமல்ல இவர் ஒரு தமிழ் ஆசிரியராவார். தனது கல்வியில் முன்னேறி பட்டப் படிப்பின் கல்வி டிப்புளோமா, கல்வி முதுதத்துவமாணி போன்ற தகமைகளைப் பெற்று தனது கிராமத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு கல்வியறிவூட்டி வருகின்றார்.

இவருக்கு இயல்பாகவே இசை நாடகம் என்பவற்றில் ஈடுபாடு உள்ளதால் சமூக முன்னேற்றக் கழகத்தால் நடாத்தப் படும் போட்டிகள் கலையரங்க நிகழ்வுகளுக்கு நாடகம்

இசைப்பாடல்கள் இயற்றி இசையமைத்து பயிற்சி கொடுத்து மேடையேற்றி நிகழ்வுகளைச் சிறப்பித்து வருகின்றார்.இவர் தற்போது சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் மலர் வெளியீட்டின் பணிப்பாளராகவும் இருந்து காலாண்டுச் சஞ்சிகை வெளியிடும் பணியை முன்னேடுத்து வருவது குறிப்பிடத் தக்கது.

2.4 செல்வி அ.சுகந்தி

இவர் ஓர் பட்டதாரி ஆசிரியராவார். காலத்திற்குக் காலம் முன்னெடுக்கும் எமது அமைப்பின் செயற்பாட்டு நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு நல்கிப் பணி புரிந்து வருகின்றார். 1998 இல் சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் நிர்வாக சபை உறுப்பினராக இருந்து தனது பங்களிப்பை முப்பெரும் ஆண்டு விழா நிகழ்வுகளில் செய்து வந்தவர். தற்போது மானிப்பாய் பிராந்திய கல்விச் சபை உறுப்பினராக இருந்து மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு தனது சேவைகளைச் செய்து எமது அமைப்புக்கு பங்களிப்புச் செய்தவராவார்.

2.5 திருமதி ஹரோல்டினா ரஞ்சித்றீகன்

இவர் சமூக முன்னேற்றக் கழகத்தின் சமாசத்தின் மானிப்பாய்ப் பிராந்திய சபை உறுப்பினராவார். இவர் தனது மாணவப்பருவத்திலிருந்து தந்தையாரான பிரான்சிஸ் சேவியருடன் சேர்ந்து சமாசத்தின் நிதி தொடர்பான செயற்பாடுகளில் பங்கு பற்றி, வரவு செலவுக் கணக்கு அறிக்கை தயாரிக்க பேருதவியாக இருந்தவர் அத்தோடு 2010ஆம் 2012ஆம் ஆண்டு சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து நடாத்திய முப்பெரும் ஆண்டு விழா நிகழ்வுகளை ஒழுங்கு படுத்தி முழுமையான பங்களிப்பை வழங்கி வந்தார். இவர் ஒரு ஆங்கில ஆசிரியராதலால் எமது மாணவர்களின் ஆங்கிலக் கல்வி அறிவு வளர்ச்சிக்கு பெரிதும் பணி புரிந்து வருகின்றார். கல்விப் போட்டிகளில் ஆங்கிலமொழி மூலப் போட்டிகளை முன்னின்று நடாத்தி எமது அமைப்பின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றார்.

3.0 மாணவத் தலைவிகள்

எமது சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினதும் புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் வளர்ச்சிப் பாதையில் மாதர் பங்களிப்பு ரீதியாக மாணவத்தலைவிகளின் செயற்பாடுகளும் பெரிதும் துணை நிற்கின்றன. மூத்த முன்னணித் தலைவிகள், முன்னணி மாதர் தலைவிகள் இவர்களின் சேவையின் வழித்தோன்றல்களாக மாணவத் தலைவிகளை நோக்கினால் சமாசத்தின் ஆறம்சத் திட்டங்களில் ஒன்றான கல்வியை நோக்கிய பாதையிலே மாணவர்கள் தெளிவு பெற்று நாம் கற்றால் தான் சமுதாயத்தின் எழுச்சிதங்கியுள்ளது என்ற எழுச்சித் தந்தையின் வழியில் நின்று தாமும் கற்று சிறார்களுக்கும் ஊக்கம் கொடுத்து கல்வி கற்க வழி சமைத்தார்கள். எமது சமாசம் ஆரம்பிப்பதற்கு முன் உள்ள கழகங்களின் செயற்பாடுகளில் 24 சமூகமுன்னேற்றக் கழகங்களிலும் மாணவர் மன்றங்கள் உருவாகி இயங்கி எழுச்சித் தந்தையின் தூரநோக்குச் சிந்தனைக்கேற்ப அவரின் கருத்துப் புரட்சிக் கொள்கைக்கு மாணவர்களும் உள்வாங்கப்பட்டனர்.

இந்த வகையில் மாணவத் தலைவிகளும் உருவாகினர். 'வீட்டுக்குள்ளேயே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலைகுனிந்தனர்' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க பெண்கள் ஆண்களை விட அதிகமான தொகையில் கல்வி கற்க ஆரம்பித்தனர். இதன் விளைவாக எமது அமைப்பில் மாணவத் தலைவிகளின் செயற்பாடுகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆரம்ப காலத்திலிருந்து மாணவத் தலைவிகளை எடுத்து நோக்கினால் தென்மராட்சியில் புஸ்பராசமணி ஆனந்தராசா, செல்வி கந்தையா சுகிர்தராணி, பரமு தவஜோகரத்தினம், நாவற்குளியில் பரமு ருக்மணி, முத்தையா புஸ்பராணி, நுனாவில் செல்வி சின்னத்தம்பி மாலா, உரும்பிராய் நவரத்தினம் ரூபிகா, வடமராட்சி நளாயினி கிருஸ்ணபிள்ளை, மானிப்பாய் செல்வி அ.சுகந்தி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இன்றைய காலகட்டத்தில் எமது சமூகத்தில் கல்வி கற்றுப் பட்டம் பெற்ற மாணவர்கள் வரிசை நீண்டிருப்பது எமது எழுச்சித் தந்தையின் கனவு வெற்றியடைந்த இலக்கையே காட்டுகின்றது. இளம் மாணவ தலைவிகள் வரிசையும் நீண்டு கொண்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.வடமராட்சிப் பிராந்தியத்தில் செல்வி விக்னேஸ்வரன் அர்ச்சனா கல்விச் சபையின் வடமராட்சிப் பிராந்திய தலைவராக இருந்து கல்வி வளர்ச்சி தொடர்பான போட்டிகள், கற்றலுக்கு ஊக்கமளித்து வருதல் குறிப்பிடத்தக்கது. மானிப்பாய்ப் பிராந்தியத்தில் திருமதி கருணைச் செல்வி கேதீஸ்வரன் கல்விச் சபைச் செயலாளராவார். செல்வி சிந்துயா நவரட்ணம், திருமதி சுதாகினி திலகரத்தினம் (கொழும்பு பிராந்திய கல்விச்சபைத் தலைவி) என இப்படியாக காலத்துக்குக் காலம் மாணவதலைவிகள் உருவாகி மூத்த உறுப்பினர்களின் வழிகாட்டலில் தமது பங்களிப்பைச் செய்து வருவது எதிர்காலத்தில் எமது சமாசமும் புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியமும் இளம் தலைமுறையினரை நோக்கி விஸ்தரிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

4.0 தாய்மார்களின் பங்களிப்பு

எமது சமூகஎழுச்சி இயக்கத்தின் செயற்ப்பாடுகளுக்கு தாய்மார்களின் பங்களிப்பு ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை காத்திரமான செயற்பாடாக இருக்கின்றது.எழுச்சித் தந்தையின் இலக்கு கருத்துப் புரட்சியினால் உருவாக்கப்பட்ட ஆறம்சத்திட்டத்தின் ஓர் அம்சமான கல்வியை நோக்கிய இலக்கில் 'பட்டினி கிடந்தாலும் எமது பிள்ளைகளை பத்தாம் வகுப்பு வரையாவது படிக்கவைப்போம்' என்ற கோட்பாடு வெற்றி பெறுவதற்கு தாய்மார்களின் பங்களிப்பே காரணமாகும் என்றால் மிகையாகாது. அன்று தனது பிள்ளை படிக்காமல் உழைத்தால் போதும் என்று இருந்த தாய்மார் இன்று எனது பிள்ளை படித்து பட்டம் பெற்று டாக்டராகவோ, தொழில்நுட்பவியலாளராகவோ உயர் பதவிகள், பட்டங்கள் பெற்று சமூகம் போற்றும் உத்தமர்களாக வாழவேண்டும் என்ற அவாவுடன் தமது குழந்தைகளை கல்வியில் ஊக்கப்படுத்துவதை கண்கூடாகக் காணலாம். எனவே எழுச்சித்தந்தையின் கனவு இன்று பல வகையிலும் வெற்றி பெறுவதற்கு பலகோணங்களிலும் மாதர்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதை மிகவும் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமூக எழுச்சி இயக்கத்தின் வளர்ச்சியில் மாணவ அமைப்புக்களின் பங்களிப்பு

திரு.சண்முகம் பாஸ்கரன்
பணிப்பாளர்
புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம்.

சமூக எழுச்சி என்பது ஆட்சியாளர்களால் அல்லது பெரும்பான்மை மக்களால் மேற்கொள்ளப்படுகின்ற தடைகளுடாக ஒரு சமூகம் கிளர்ந்தெழுகின்ற செயற்பாடேயாகும். இவ்வாறு எழுச்சி பெறுகின்ற சமூகமானது ஒரு தலைவனையோ அல்லது ஒரு தலைமைத்துவத்தையோ அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு தமது இலக்கினை நோக்கி நகர்ந்து செல்லும். இவ்வாறு தமது இலக்கினை அடைவதற்கு பொருளாதார வளர்ச்சியில் கூடிய சமூகமாக மட்டுமல்லாது, தமது சமூக மக்களிடையே கல்வி, கலை, பண்பாட்டுடன் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்தி மக்களின் சிந்தனைகளில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் திட்டங்களை வகுத்தல் வேண்டும்.

ஆரம்பகாலங்களில் தமிழ்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட தனிச்சிங்களச்சட்டம், கலவரங்கள் மற்றும் கல்வியுடமைகளின் எரிப்புக்கள் போன்றவற்றிலிருந்து தமிழ்மக்கள் கற்றுக்கொண்ட பாடங்களின் விளைவே தமிழ்க்கட்சிகளிடையே ஒற்றுமையினை ஏற்படுத்தத் தூண்டியதுடன் எத்தகைய தடைகளையும் எதிர்கொள்ளும் வல்லமையைப் பெற்றுக்கொள்ள உந்துசக்தியாக அமைந்தது.

இதேபோலவே, ஆரம்பகாலங்களில் தமிழ்மக்களிடையே மேலாதிக்கமுள்ளோரால் தாழ்த்தப்பட்ட அல்லது பின்தள்ளப்பட்ட மக்கள் பல்வேறு வழிகளில் நசுக்கப்பட்டதுடன் அவர்களது தனித்துவச் செயற்பாடுகளும் தடுக்கப்பட்டதுடன், உரிமைகளும் மறுக்கப்பட்டன. இவற்றையெல்லாம் தகர்த்து எமது சமூக மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்கவும், எமது சமூக மக்களும் மற்றைய சமூகங்கள் மத்தியில் சமத்துவம் பெற்றவர்களாக மிளிரச் செய்யவேண்டும் என்ற உயரிய நோக்கோடு எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட எழுச்சி இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கானது இன்று பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் வடகிழக்கு மாகாணங்களில் மட்டுமல்லாது மேல்மாகணத்திலும் தனது செயற்பாடுகளை விஸ்தரித்து பரிணாம வளர்ச்சி கண்டுள்ளதை கண்கூடாகப் பார்க்க முடிவதுடன், இப்பாரிய வளர்ச்சிக்கு மக்களின் சிந்தனைப் போக்கில் ஏற்பட்ட மாற்றமே காரணமாயிற்று. அத்துடன் தலைமைத்துவத்தால் முன்வைக்கப்பட்ட கொள்கைகளின் பிரகாரம் எமது சமூகமானது ஓர் எழுச்சிமிக்க சமுதாயமாக மிளிர்வதுடன் ஏனைய சமூகங்களும் எமது ஒழுக்கக் கோட்பாடுகளைப் பின்பற்றவும் உந்துசக்தியாக வளர்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எந்தவொரு சமூக வளர்ச்சிக்கும் அல்லது எழுச்சிக்கும் மாணவர்களின் பங்களிப்பே இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. ஆரம்பகால தமிழர்களின் வரலாற்றை உற்றுநோக்கின் இவை புலப்படும். இதேபோன்று எமது சமூக வளர்ச்சியின் நீரோட்டத்தில் மாணவச் சமுதாயத்தின் பின்னிப்பிணைந்த செயற்பாடுகளும் இவ்வாறான எழுச்சிக்கு வித்திட்டதென்றால் மிகையாகாது.

ஆரம்ப காலத்தில் எமது சமூக எழுச்சி இயக்கத்தின் தோற்றத்தில், திரு. ஆர்.எம்.நாகலிங்கம் அவர்கள் ஒரு மாணவனாக இருந்த காலகட்டத்திலே பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டதன் விளைவாக அவர் தான் சார்ந்த கிராம மட்டத்திலான ஏனைய இளைஞர்களையும் உள்வாங்கி 1947 ஆம் ஆண்டு 'பாரதி மறுமலர்ச்சி இயக்கம்' ஒன்றினை ஆரம்பித்து மாணவர்கள் மத்தியில் மட்டுமல்லாது ஏனைய ஆர்வமுடைய இளைஞர்களையும் உள்வாங்கி கலை, கலாச்சார மற்றும் பண்பாட்டுடன் தொடர்புடைய நாடகங்கள், விழிப்புணர்வுக் கருந்தரங்குகள் என்பவற்றினூடாக எமது மக்களின் சிந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியதுடன், ஏனைய கிராம மட்டத்திலான மாணவ மற்றும் இளைஞர்கள் மத்தியில் போட்டிகளை நடாத்தி கிராம மக்களிடையேயான பிணைப்பினை ஏற்படுத்தவும் இவ்வாறான போட்டிகள் உந்துசக்தியாக விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான மாணவர்களின் ஒன்றிணைந்த செயற்பாடுகளினூடாக ஓர் எழுச்சி பெற்ற தேசிய இயக்கமாக 1981 ஆம் ஆண்டில் ஓர் எழுச்சி மாற்றத்தினை ஏற்படுத்த அக்கால மாணவ அமைப்புக்கள் பெரும்பங்காற்றியுள்ளமை இங்கே நினைவுகூரத்தக்கது. ஏனெனில் அத்தகைய மாணவ மன்றங்களினூடாக இளந்தலைவர்களை இனங்கண்ட எழுச்சித் தந்தை திரு. ஆர்.எம்.என் அவர்கள், கிராமங்கள் தோறும் சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தியதுடன் 'சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்' என்ற ஓர் எழுச்சிமிக்க அமைப்பும் செல்வச் சந்நிதி ஆலயத்தில் வைத்து அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இவ்வாறான தேசிய மட்டத்திலான எழுச்சிக்கு கிராம மட்டங்களிலே காணப்பட்ட மாணவர் மன்றங்கள் மற்றும் கிராமிய மட்ட கழகங்கள் (சுமாராக 24) போன்றவற்றின் முக்கிய பங்களிப்பானது மிகவும் பயனுள்ளதாக காணப்பட்டமை இங்கே குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும்.

பல்வேறு பிரிவுகளாக இயங்கிய மாணவ மன்றங்கள் மற்றும் கழகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் நோக்கோடு தேசிய எழுச்சிக்காக கிராம மட்டத்திலிருந்து எழுச்சியுடன் செயற்பட்ட மாணவர் மன்றங்களினதும் மாணவத் தலைவர்களினதும் ஒன்றுபட்ட சேர்க்கையாக 'யாழ் மாவட்ட ரீதியான மாணவர் ஒன்றியம்' 1981.04.15 ஆம் திகதியன்று திரு. ஆர்.எம்.என். அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதன் ஆரம்ப நிர்வாக சபையானது நெல்லியடியைச் சேர்ந்த திரு. கிருஸ்ணபிள்ளை கணேஷ் அவர்கள் தலைமையின் கீழ் திரு. ப. ரவீந்திரன் (செயலாளர்-மட்டுவில்), திரு. இ. ரமேஸ் (பொருளாளர்-சாவகச்சேரி), திரு. சி. சுகுமார் (பத்திராதிபர்-கிளிநொச்சி), செல்வி. ந. ரூபிகா (உப-தலைவர்-உரும்பிராய்) மற்றும் செல்வி. சி. புஸ்பராசமணி (உப-செயலாளர்-மீசாலை)

ஆகியோர் பதவிகளை வகித்ததுடன் மேலதிகமாக செயற்குழு உறுப்பினர்களாக திரு.ர.ஜேசுடெனிஸ்ரன் (ஊர்காவற்துறை), திரு.சு.கணேசமூர்த்தி (நாச்சிமார் கோவிலடி), திரு.சி.சிவகுமார் (துன்னாலை), செல்வி.ப.ருக்மணி (நாவற்குழி) மற்றும் தி.தமிழ்ச்செல்வன் (பண்டத்தரிப்பு) ஆகியோரும் பங்காற்றியுள்ளதுடன் பலவேறு செயற்திட்டங்களை மாணவர்களின் வளர்ச்சிக்காக உருவாக்கி மாணவர்களின் செயற்திறனை மேம்படுத்த அரும்பங்காற்றினர். அத்துடன் 1980 களில் நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் மற்றும் இடம்பெயர்வுகளின் பொழுது பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு க.பொ.த (சா/த) பரீட்சைகளுக்கான மாதிரி வினாத்தாள்கள் மற்றும் புத்தகங்களை பெற்றுக் கொடுத்தும் ஏனைய மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்களை வழங்கியும் பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகளை கிராம ரீதியாக நடாத்தியும், அவர்களின் கல்வி வளர்ச்சியில் பங்களித்ததுடன் இடம்பெயர்ந்த, பாதிக்கப்பட்ட மக்களின் தகவல்களை திரட்டிக் கொள்ளவும் இம் மாணவர் ஒன்றியம் பக்கபலமாகச் செயற்பட்டது.

1990களின் ஆரம்பத்தில் யாழ்மாவட்டத்திலிருந்த தீவிரமான யுத்த சூழ்நிலை காரணமாக, ச.மு.க.சமாசத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கவேண்டியிருந்தது. சமூக முன்னோடிகள் பலரின் இடப்பெயர்வுகளாலும், புலம்பெயர்வுகளாலும், கிராம மட்டத்திலான கழகங்கள், மாணவர் மன்றங்கள் பலவும் செயலிழந்து போயிருந்தன. இதன் காரணமாக தலைவர் திரு.இ.மு.நா.அவர்களின் சிந்தனை வழிவந்த செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் சிரமங்கள் எழுந்தன.

ஆயினும் அக்காலப்பகுதியில் திரு. இ.மு.நா.அவர்களின் வழிகாட்டலில் ச.மு.க.சமாத்தின் தலைமைத்துவத்தை நடாத்திச் சென்ற திரு.நா.தங்கவடிவேல் - தலைவர், திரு.ச.சின்னையா - செயலாளர், திரு.க.நவரத்தினம் - பொருளாளர் ஆகியோரின் அர்ப்பணிப்பு மிக்க சேவை என்றென்றும் நன்றியுடன் நினைவு கூரத்தக்கது. பலத்த போக்குவரத்து சிரமங்களின் மத்தியில் கிராமம் கிராமமாகச் சென்று கல்வி நிதி மற்றும் சமூக நல நிதி உதவிகள் உரியவர்களுக்கு சென்று சேர்வதை, தியாக சிந்தையுடனும், ஆபத்தான பிரயாணங்களை மேற்கொண்டும் உறுதி செய்தனர்.

இத்தகைய போர்க்காலச் சூழ்நிலையில், உணவுத் தட்டுப்பாடு, மின்சாரம் இன்மை, கற்றல் உபகரணங்களின் பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி, கற்றலுக்கான சுமூகமான சூழ்நிலை இல்லாமை என பல நெருக்குவாரங்கள் மாணவ சமுதாயத்தினரிடையே விரக்தி நிலையைத் தோற்றுவித்தது. மீண்டும், கல்விச் செயற்பாடுகளில் நாட்டம் குறைவதற்கான புறச்சூழலை, இந்நிலைமை மாணவர்கள் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் உருவாக்கியது. ஆதலினால், மீண்டும் பிள்ளைகளை கல்வியை கைவிட்டு, மரபுத்தொழிலுக்கு அனுப்பும் ஒரு துர்ப்பாக்கிய சூழ்நிலை தோன்ற ஆரம்பித்தது. இதனை உடனடியாக தடுக்கும் வகையில் துரிதமாகச் செயற்படுவதற்கு மாணவர் ஒன்றியத்தின் புனரமைப்பு இன்றியமையாததாக உணரப்பட்டது.

முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவர் திரு.கி. கணேஷ் அவர்களின் நெறிப்படுத்தலில் திரு.செ.ஜெகதாசன் அவர்களின் முன் முயற்சியில் 1992ஆம் ஆண்டு மே மாதம் மாணவர்

ஒன்றியம் மறுசீரமைக்கப்பட்டது. நாச்சிமார் கோவிலடியிலுள்ள திரு.க.மாயாதிரவியம் அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட புதிய நிர்வாக சபையில் திரு.செ.ஜெகதாசன் (தலைவர்), திரு.க.ஜீவசுதன் (செயலாளர்), திரு.வ.நகுலேஸ்வரன் (பொருளாளர்), திரு.மா.ஜெயராசா (உபதலைவர்) ஆகியோர் பதவி வகித்ததுடன், ஏனைய நிர்வாக சபை உறுப்பினர்களாக Dr.M.முருகமூர்த்தி, மு.ஜோதிக்குமார், உமா ஜெகதாசன், சுபாசினி கணேசதாசன் ஆகியோரும், கிராமமட்ட பிரதிநிதிகளாக, ஆ.பாபு (அராலி) S.பிரேம்குமார் (மானிப்பாய்), க.தம்பிநாதன் (அல்லாரை), ஆ.புஸ்பராசமணி (சாவகச்சேரி), இ.சாந்தினி (நல்லூர்), கு.சசி(நாச்சிமார் கோவிலடி), மற்றும் பொ.சிவகுமார் (வடமராட்சி) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டதுடன், இவர்களின் நேரடியான நெறிப்படுத்தலின் கீழ் பிரதேச ரீதியாக துடிப்புமிக்க இளைஞர், யுவதிகளை இனங்கண்டு அவர்களையும் மாணவர் ஒன்றியத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களை உள்ளடக்கிய மாணவர் ஒன்றியத்தின் உயர் ஆலோசனைக் குழுவும் Dr.M.முருகமூர்த்தி தலைமையில் ''தகவல் மையமும்'' உருவாக்கப்பட்டது. காலத்தின் தேவையை உடனடியாக புரிந்துகொண்டு, கிராமம் கிராமமாக ஒன்றியத்தின் உறுப்பினர்கள் திரு.R.M.N. அவர்களின் கோட்பாடுகளை உறுதியுடன் நடைமுறைப்படுத்த, தமது சொந்தக் கல்வி, நேரம், பொருள் என்பவற்றை அர்ப்பணித்து உடனடியாக செயலில் இறங்கினர். இதன் பலனாக, மாணவர்கள் உற்சாகத்துடன் கல்வியைத் தொடரவும், பெற்றோரிடையே மனமாற்றங்களை ஏற்படுத்தவும், கல்வி மற்றும் சமூகநல உதவிகள் உரிய காலத்தில் சென்று சேரவும், மாணவர் ஒன்றியத்தின் பிரச்சார நடவடிக்கைகளும், தனித்தும், குழுவாகவும் வழங்கிய ஆலோசனை உதவிகளும் பெரிதும் துணைபுரிந்து, நாம் சந்திக்கவிருந்த மிகப்பெரிய ஒரு பின்னடைவிலிருந்து, தப்பிக்க உதவியது.

இவ்வாறு மீளளிக்கப்பட்டு செயற்பட்டு வந்த மாணவர் மன்றங்களினூடாக மு.ஜோதீஸ்வரன் மற்றும் வீ.குகநேசன் போன்றோர்களின் நெறிப்படுத்தலின் கீழ் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் மற்றும் கடந்த கால வினாப்பத்திரங்கள், மாதிரி வினாப்பத்திரங்கள் என்பவற்றினூடாக முன்னோடிப் பரீட்சைகள் நடாத்தப்பட்டு மாணவர்களது செயற்திறன்கள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் பரீட்சைகள் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. சில மாணவர் மன்றங்களினூடாக ஆங்கிலம் மற்றும் கணித பாட வகுப்புக்கள் மாணவர்களுக்காக விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டு சிறந்த ஆசிரியர்கள் குழாத்தினூடாக புகட்டப்பட்டு வந்தன. இத்தகைய முன்னெடுப்புக்களின் தொடர்ச்சியாக பிரதேச ரீதியாக காணப்பட்ட மாணவர் மன்றங்களினூடாக மீண்டும் மாணவர்களுக்கான போட்டிகள் நடாத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் பொருட்டும் கலைவிழாக்களும் பிரதேச ரீதியாக நடாத்தப்பட்டன. இந்நிகழ்வுகளுக்கு பிரதேச மக்களின்

பங்களிப்புடன் கூடிய ஆதரவு கிடைக்கப்பெற்றதுடன் சகல மன்றங்களையும் இணைத்து பிரமாண்டமான கலைவிழா ஒன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 1993 இல் நடைபெற்றதுடன் பிரதேச ரீதியான கருத்தரங்குகளும் கலைநிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

பல்வேறு சாதனைகளினுடனும் சவால்களுக்கு மத்தியிலும் மாணவர் மன்றங்கள் இயங்கி வந்த போதிலும் குடாநாட்டில் 1990களின் பிற்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக மீண்டும் மக்கள் அகதிகளாக்கப்பட்டு இடம்பெயர்வுகள் ஆரம்பமாகின. பலர் தமது வாழ்விடங்களை இழந்து முகாம்களிலும் பிற பிரதேசங்களிலும் சென்று குடியேற வேண்டி ஏற்பட்டதால் மீண்டும் மாணவர்களின் செயற்பாடுகள் குன்றிப்போயின. ஆயினும் சமாசத்தினுடைய செயற்பாடுகள் ஓரளவிற்கு எழுச்சித் தந்தை ஆர்.எம்.என் அவர்களின் வழிகாட்டலாலும் தூண்டுதலாலும் நடைபெற்றுக் கொண்டிருந்ததுடன் இடம்பெயர்ந்த சமூக மக்களிற்கான உதவிகளும் தேவையறிந்து வழங்கப்பட்டு வந்தன.

இவ்வாறாக இடம்பெயர்வுகளுக்கு மத்தியிலும் சமூக எழுச்சியில் தன்னை ஈடுபடுத்திய ஆர்.எம்.என். அவர்களும் அவரோடு முன்னின்று செயற்பட்ட முன்னோடித் தலைவர்களினதும் அயராத உழைப்பின் பெறுபேறாக 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கூட்டிணைப்பின் பிரகாரம் மாணவர் மன்றங்கள் மற்றும் கழகங்கள் யாவும் கூட்டிணைக்கப்பட்டு ஐந்து பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக பிராந்திய நிர்வாக சபைகள் தெரிவு செய்யப்பட்டதுடன் அவற்றை எல்லாம் கூட்டிணைத்து சமாசத்தினது பொது முகாமைச் சபையும் தெரிவு செய்யப்பட்டது. அவ்வாறு பிரிக்கப்பட்ட பிராந்தியங்களாக 1) யாழ்-நல்லூர் பிராந்தியம், 2) வலி-தென்மேற்கு (மானிப்பாய்) பிராந்தியம், 3) வலி-கிழக்குப் பிராந்தியம், 4) வடமராட்சிப் பிராந்தியம் மற்றும் 5) தென்மராட்சிப் பிராந்தியம் ஆகியன உள்ளடக்கப்பட்டன. சமாசத்தினது பொது முகாமைச் சபையின் செயற்பாடுகளுக்கு அனுசரணையாக மாணவர்களின் செயற்பாடுகளையும் ஒன்றிணைக்கும் நோக்கோடும் பிராந்திய மட்டங்களிலிருந்து இளையோரின் பங்களிப்பினை உள்வாங்கும் பொருட்டும் இளைஞர்-யுவதிகள், படித்த மாணவ-மாணவியர்கள், படிக்கின்ற மாணவ-மாணவியர்கள் மற்றும் சமூகப்பற்றுள்ள துடிப்பு மிக்க செயற்பாட்டாளர்கள் மத்தியிலிருந்து பிராந்திய கல்விச் சபைகள் உருவாக்கப்பட்டு அவற்றிலிருந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதனூடாக பொதுக் கல்விச் சபையும் அமைக்கப்பட்டு, செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதும் பெருமைப்பட வேண்டியதும் ஒன்றாகும்.

2003 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட பொதுக்கல்விச் சபையின் நிர்வாக அலகில் திரு. கே.ஆர். சுகுமார் (தலைவர்), திரு. இ.சாந்தகுமார் (செயலாளர்), திரு. வீ.குகநேசன் (பொருளாளர்) ஆகியோரும் பிராந்திய சபைகளின் தலைவர்களாக திரு. க.நடேசன் (யாழ்-நல்லூர்), திருமதி ஆ.புஸ்பராசமணி (வலி-தென்மேற்கு), திரு. ப.பிரதீபன் (வலி-கிழக்கு),

திரு. ச.பாஸ்கரன் (வடமராட்சி) மற்றும் திருமதி செல்வராணி (தென்மராட்சி) ஆகியோர் ஏனைய பிரதிநிதிகளாகச் செயற்பட்டதுடன் பிராந்திய ரீதியாக மாணவர்களுக்கான கல்விப் போட்டிகள் நடாத்தப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டு பிராந்திய விழாக்களில் வைத்து பரிசில்களும் வழங்கப்பட்டன. இப்பிராந்திய விழாக்களின் செயற்பாடுகளினூடாக சமூக மக்களின் ஒற்றுமையுடன் கூடிய எழுச்சியானது எதிர்காலத்தில் அதன் இலக்கானது இலகுவில் அடையக்கூடிய வகையில் அமையப்பெறும் என்பதில் ஐயமில்லை என்பதனைப் புலப்படுத்தியதுடன் ஏனைய சமூகத்தவரையும் எம்பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த நிகழ்வுமாகும். இவ்வாறாக ஒன்றிணைக்கப்பட்ட பிராந்தியங்களின் ஆதரவுடன் சமாசத்தினது மாபெரும் ஆண்டு விழா 2004 இல் யாழ் - வீரசிங்கம் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றதுடன் மாணவர்களது எழுச்சி ரீதியான பங்களிப்பும் அயராத உழைப்பும் சமூக எழுச்சிக்கு ஊன்றுகோலாக் காணப்பட்டதை விழாவிற்கு வந்திருந்த பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்களின் உரைகளிலிருந்து அறியக் கூடியதாக இருந்தது.

2007 ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்ட பொதுக்கல்விச் சபையின் நிர்வாக அலகின் தலைவராக திரு. இ.சாந்தகுமார், செயலாளராக திரு. இ.கஜேந்திரன் மற்றும் பொருளாளராக செல்வி சே.ஹரோல்டினா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் பிராந்திய சபைகளின் தலைவர்களாக திரு. கு.காண்டீபன் (யாழ்-நல்லூர்), திருமதி ஆ.புஸ்பராசமணி (வலி-தென்மேற்கு), திரு. இ.சஞ்சீவ் (வடமராட்சி) மற்றும் திருமதி செல்வராணி (தென்மராட்சி) ஆகியோரும் ஏனைய பிரதிநிதிகளாக திரு. சி.செல்லத்துரை மற்றும் திருமதி இ.நவமணி போன்றோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மாணவர்களின் அறிவு, ஆற்றல், ஆளுமை போன்றவற்றை வெளிப்படுத்தும் தன்மை மற்றும் தலைமைத்துவ பண்பினை வளர்க்கும் முகமாகவுழ் கல்வி மற்றும் கலைப் போட்டிகள் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டு வருவதுடன் இவற்றிற்காகவே ஒவ்வொரு ஆண்டின் முப்பெரும் விழாவில் மாலை நிகழ்வுகள் கலைநிகழ்வுகளாகவே அமைக்கப்படுவது வழக்கமாயிற்று. இந்நிகழ்வில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்கள், க.பொ.த (சா.த) பரீட்சை மற்றும் க.பொ.த (உ.த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் புலமைப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் இத்தகைய செயற்பாடுகளினூடாக அடுத்து வருகின்ற மாணவர்களின் மத்தியிலும் ஓர் உந்துசக்தியை ஏற்படுத்தி அவர்களையும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளத் தூண்டும் யுக்திகளும் பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நடப்பாண்டிலே பொதுக்கல்விச் சபையானது திரு. பொ.சுரேஸ்குமார் தலைமையில் பிராந்திய கல்விச் சபையின் தலைவர்களை இணைத்து செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்காதகும்.

சமூக எழுச்சி இயக்கத்தினுடைய வளர்ச்சியில் மாணவர் அமைப்புக்களின் பங்களிப்பானது காலத்திற்கு காலம் பலவேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வழிகளில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் எந்தவொரு சமூகமும் எழுச்சிபெற வேண்டுமாயின் அதனது கல்வி, கலை, கலாச்சார மற்றும் பண்பாட்டு விழுமியங்களில் சிறந்து விளங்க வேண்டும். இன்று இளந்தளிர்களாக காணப்படுகின்ற மாணவர்கள் சமுதாயமே எதிர்கால எழுச்சிமிக்க தலைவர்களாக வளர்க்கப்படுகின்றார்கள் அல்லது வளர்கின்றார்கள். அந்த வகையில் முன்பு மாணவனாக எழுச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்ட திரு. ஆர்.எம்.என் அவர்கள் இன்று எழுச்சித் தந்தையாக, சிறந்த வழிகாட்டியாக வளர்ந்துள்ளதுடன் அவருடைய சிந்தனையின் முதிர்ச்சியாலும் தலைமைத்துவப் பண்பாலும் அன்றைய இளந்தளிர்களாக இருந்து இன்று எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுக்கக் கூடிய தலைவர்களாக பலர் வளர்த்தெடுக்கப் பட்டுள்ளார்கள். அந்த வரிசையில் திரு. கி.கணேஸ், திரு. சி.சிவஞானம், திரு. செ.ஜெகதாசன், திரு. மு.ஜோதீஸ்வரன், திரு. வீ.குகநேசன், திரு. இ.சுகுமார், திருமதி ஆ.புஸ்பராசமணி, திருமதி கி.நளாயினி, திரு. இ.சாந்தகுமார், திருமதி இ.நவமணி, திரு. ச.பாஸ்கரன் மற்றும் திரு. பொ.சுரேஸ்குமார் போன்றவர்களின் தொடர்ச்சியான செயற்பாடுகள் எமது சமூக மாணவர்களின் வளர்ச்சிப் பாதையில் அளப்பரிய சேவையினை வழங்கியுள்ளதுடன் இவர்களது செயற்பாடுகளும் சமுதாய மேம்பாட்டிற்கு உந்துசக்தியாக விளங்கிய மூத்தோர்களை கௌரவிப்பதனைப் போன்று கௌரவப்படுத்தப்பட வேண்டிய தார்மீகப் பொறுப்பினையும் நாம் அனைவரும் ஏற்றாக வேண்டும்.

எனவே எந்தவொரு சமூக எழுச்சியிலும் மாணவர்களின் பங்களிப்பானது இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுவதுடன் எமது சமூக எழுச்சி இயக்கத்தின் வளர்ச்சியிலும் பாரிய பங்களிப்பினை மாணவர் சமுதாயம் வழங்கி வந்துள்ளமையும் வழங்கி வருகின்றமையும் கண் கூடாகப் பார்க்க முடிவதுடன் எதிர்காலத்திலும் வழங்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு மாணவச் சமுதாயத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது என்றால் மிகையாகாது அத்துடன் சமூகத்தினுடைய இலக்கினையும் கோட்பாடுகளையும் எதிர்கால சமூகத்திற்கு எடுத்துரைக்க வேண்டிய தலையாய கடமையும் இம் மாணவ சமுதாயத்தினையே சாரும்.

சமூக எழுச்சியில் நிதி நிறுவனங்களின் பங்கு

திரு. வி. அருளானந்தம்
பிராந்திய முகாமையாளர் (வடக்கு)
பிராந்திய அலுவலகம்
தேசிய சேமிப்பு வங்கி
யாழ்ப்பாணம்.

முன்னுரை

1947 ஆம் ஆண்டில் மாவையில் தோன்றிய நாவித சமூக எழுச்சி இயக்கம் காலத்தேவைக்கு ஏற்ப பரிணாம வளர்ச்சியின் மூலம் முப்பெரும் இயக்கங்கள் என செயற்பட்டு வருகின்றன. சமூக எழுச்சி இயக்கம் - 1980 சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் - 1981, புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியம் - 1993 இவற்றின் ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு 25.12.1980 இல் முன்வைக்கப்பட்ட ஆறு அம்சக் கொள்கைத் திட்டப் பிரகடனம் முக்கியம் பெறுகின்றது. இத்திட்டமானது காலத்தினதும் சமூகத்தினதும் தேவைக்கேற்ப திருத்தங்கள் செய்யப்பட்ட நிலையில் 1981ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இவ் ஆறு அம்சங்களில் இரண்டாவது அம்சக் கொள்கை பின்வருமாறு இயம்புகின்றது.

'மக்கள் மத்தியில் சிக்கன சேமிப்பு பழக்கத்தை வளர்ப்பதோடு சமாசத்தின் சமூக கல்வி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தேவையான நிதி வளத்தை வழங்கும் பொருட்டு போதிய நிதி மூலதனத்தை பெருக்கி, பாதுகாத்து, முதலீடு செய்து, வருமானத்தை உழைக்கும் வண்ணம் புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஒரு சமூக வங்கியாக பரிணாமிக்கச் செய்தல்'.

இக்கொள்கையானது ஒன்றிற்கு மேற்பட்ட பருநிலை விளக்கங்களைக் கொண்டுள்ளது. இன்று அபிவிருத்தியடைந்த நாடுகளில் சமூக வங்கிகளின் தோற்றம், அதன் செயற்பாடுகள் பொருளாதார அபிவிருத்தியில் பிரிந்துவிட முடியாது உள்வாங்கப்பட்டுள்ள அம்சமாகத் தொனித்துக் கொண்டிருக்கும் நிலையில், சமூக எழுச்சி இயக்கத்தின் தொலைநோக்கு அம்சங்களில் ஒன்றாக இருப்பது போற்றத்தக்கதொரு விடயம். இத்தகைய தொலைநோக்கினை எய்தும் வகையில் மக்கள் மத்தியில் சேமிப்புப் பழக்கத்தை வளர்த்தெடுக்க வேண்டிய கட்டாய கடமைப்பாடு பல்துறை சார்ந்த வள ஆய்வாளர்களின் கருத்தாகும். இதற்கமைவாக சேமிப்பு பழக்கத்தை தொனிப் பொருளாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது.

அறிவுசார் உலகம் என அழைக்கப்படும் நடைமுறையில், தொழில்நுட்பம் அதி உன்னதநிலையில் உள்ளது. எத்தகைய துறையாக இருப்பினும் தொழில்நுட்பத்தின் செல்வாக்கு ஊடுருவத்தவறவில்லை. ஆத்மீகத் தொண்டாற்றும் ஆத்மீகவாதிகளின் அன்றாட வாழ்க்கையிலும் அவர்களது ஆத்மீகச் சேவையின் பல்வேறு நடவடிக்கைகளில் கூட தொழில்நுட்பம் தன் பங்கை பலம்பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது என்றால் எவ்வளவு தூரத்திற்கு அறிவுசார் உலகத்தில் தொழில்நுட்பத்தின் இணைவுத்தன்மையை அறிய முடியும்.

அறிவுசார் உலகின் பல்வேறு நடவடிக்கைகள் தகவல் தொழில்நுட்பம், கணனிகளின் பரவலான செயற்பாடு, இவைகளின் தொழிற்பாட்டிற்கு இன்றியமையாததாக அமையும். மின்சாரம் இதை உற்பத்தி செய்வதற்கான அனல் நிலையங்கள், நீர்த்தேக்கங்கள், மின்சாரத்தை உருவாக்கும் இயந்திரங்கள் என்று பலவகைகளில் ஒன்றுடன் ஒன்று சார்ந்து செயற்படும் தன்மை, தனித்துவாழ முடியாது; உலக மயமாக்கலின் வெளிப்பாடுதான் உண்மையென்பதை யதார்த்தம் உணர்த்திக் கொண்டிருக்கின்றது. அதற்கு ஏற்றாற்போல் சேமிப்பு என்பதும் காலப்போக்கில் ஒவ்வொரு தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் தொடர்புடையதாக இருப்பதையும் சேமிப்பின் ஆரம்பம், பௌதீக ரீதியாக பணத்தை வைத்திருப்பதில் தொடங்கி இலத்திரனியல் பணத்திற்குச் சென்று இலத்திரனியல் வங்கியின் செயல்பாடுகளுடன் இணைந்ததொன்றாக பரிணமித்து வந்துள்ளதையும் பணத்திற்குப்பதில் இலத்திரனியல் அட்டைகளுடன் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் அறிவுசார் உலகமாக செயற்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் அணுயுகத்தில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படும் என்றும் எதிர்கால அபிவிருத்தி ஈர்ப்பாளர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும்போது எவ்வாறு பண்டத்திற்குப் பண்டம் மாற்றப்படும் பண்டமாற்று பொருளாதாரமும் கற்பனையாக மாறிவருவதைப் போன்று பணப் பொருளாதாரம் இலத்திரனியற் பணமாக உருமாற்றமடைந்து இதுகூட கற்பனையாக நிச்சயம் மாறிவிடும் அளவிற்கு அறிவுசார் உலகு வியக்கத்தக்க விந்தைகளை உருவாக்கும்.

கல்தோன்றி மண்தோன்றா காலத்திற்கு முன்தோன்றிய மூத்த தமிழ் என்று போற்றப்படும் எமது தமிழ் மொழியில் கருத்துகளைப் பரிமாறும் எம்மிடத்து பலவிடயங்களுக்கு ஆரம்பகர்த்தாவாக இருந்ததைக் காணலாம். ஒருவகையில் சேமிப்புக்கூட பண்டங்களைச் சேமிப்பதிலிருந்து தோற்றம் பெற்றது எனலாம். நாளாந்தம் அன்னத்தினை ஆகாரமாக மாற்றும் சந்தர்ப்பங்களில் ஒரு பிடி அரிசியை வேறொரு பாத்திரத்தில் சேமித்து தெய்வீக வழிபாட்டின் போது அன்ன ஆகாரம் வழங்கும் சந்தர்ப்பத்திலும் அச்சேமிப்பு பயன்படுத்தப்படும் வழக்காறு எம்மக்கள் மத்தியிலிருந்து வந்ததற்கான பூர்வீகம் எமக்குண்டு. பண்டமாற்றப் பொருளாதாரம் அருகி வந்தநிலையிலும் இத்தகைய பண்ட சேமிப்பு இருந்து வந்தது. இத்தகைய செயற்பாட்டின்போது ஒரு பிடி அரிசியின் உடனடி நுகர்வு பின் தள்ளிப்போகின்றது. சிறிதுகாலத்தின் பின்னர் பன்முகப்படுத்தப்பட்ட வகையில் நுகர்வு செய்யப்படுவதைக் காணலாம்.

மேற்கத்தைய அணுகுமுறையில் சேமிப்பு என்றால் என்ன? என்பதற்கான பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதற்கு முன்னதாகவே சேமிப்பிற்கு உதாரணமாக தமிழர்களின் பண்டைய கலாச்சாரம் அமைந்திருந்தது. எனவே சேமிப்பு என்றால் என்ன என்பதற்கான விளக்கத்திற்கு கூட்டுமொத்தமான இலகுவான விளக்கம் ''நடைமுறை நுகர்வை பின்தள்ளிப் போடுதல்'' என்னும் முடிவிற்கு வர முடியும். இத்தகைய விளக்கத்தின்போது ஒருவருடைய வருமானம் (y), அவனுடைய நுகர்வு (c) இவையிரண்டுக்குமிடையிலான வேறுபாடாக சேமிப்பு (s) அமைகின்றது. உதாரணமாக மாதம் 10,000/- வருமானமாகப் பெறும் ஒருவன் 7,000/- நுகர்வு செய்து மிகுதி 3,000/- சேமிப்பாக மாற்றமடைகின்றது. அதே மாதத்தில் குறித்த நுகர்வோன் தனது நுகர்வை 3,000/- வினால் அதிகரிக்க முடியும். இந்த நுகர்வை அவன் பின் தள்ளிப் போடுகின்றான். அதாவது சேமிப்பாக மேற்கொள்வதனால் நடைமுறையில் அதற்கான நுகர்வை தியாகம் செய்கின்றான். ஒருவனுடைய வருமானம், நுகர்வு, சேமிப்பு என்னும் மூன்று மாறிகளுக்கிடையில்

தொடர்பு விளக்கப்படுவதுடன் வருமானத்துடன் நுகர்விற்கும் சேமிப்புக்குமிடையில் நேர்கணியத் தொடர்பு புலப்படுகின்றது. பொதுவாகவே வருமானம் உயர்வடையும் சந்தர்ப்பத்தில் நுகர்வும் சேமிப்பும் உயர்வடையும். எனினும் இவற்றிற்கிடையிலான அதிகரிப்பு வேகம் தான் வேறுபட்டதாக அமையும்.

சேமிப்பு என்னும் மாறியில் நிறுவன ரீதியான செயற்பாடும், நிறுவன ரீதியற்ற செயற்பாடும் என இருவேறுபட்ட பிரிவுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தமுடியும். நிறுவனரீதியான சேமிப்புக்கு உதவும் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டு அதில் பதிவு செய்யப்பட்டதாக அமைந்திருக்கும். நிதிநிறுவனங்களாக நாணயவியற் சட்டத்தின் கீழ் குறிக்கப்பட்ட நிபந்தனைகளை உள்ளடக்கிய வகையில் பதிவு செய்யப்பட்டிருக்கும். சேமிப்புக்களை ஏற்றுக் கொள்ளும் நிதி நிறுவனங்கள் என்னும் பிரிவினுள் உரிமம் பெற்ற வணிக வங்கிகள் முக்கியம் பெறுகின்றன. இவற்றுள் உள் நாட்டிற்குச் சொந்தமானவையும் வெளிநாட்டுக்குச் சொந்தமானவை எனும் பிரிவினுள் வங்கிகள் உள்ளடக்கப்படுகின்றன. இவ்வங்கிகள் நடைமுறைக் கணக்கினை செயற்படுத்தி வருபவையாக அமைகின்றன. இவைகளை ஆங்கிலத்தில் Licensed Commercial Banks (LCBs) என அழைக்கப்படுகின்றன. இவற்றிற்குப் புறம்பாக உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (Licensed Specialized Banks) (LSBs) செயற்பட்டுவருகின்றன. இவ்விரு வங்கிகளுக்குமிடையிலான முதன்மை வேறுபாடு உரிமம் பெற்ற வணிக வங்கிகள் கேள்வி வைப்புக்கள் என அழைக்கப்படும் நடைமுறை வைப்புக்களையும் அதனுடன் இணைவுபட்ட காசோலைக் கொடுப்பனவுகள், நடைமுறைக்கணக்கிற்கு எதிராக மேலதிகப் பற்று போன்றவற்றை மேற்கொள்வதையும், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் இவற்றை நடைமுறைப்படுத்துவது கிடையாது. சிறப்பாக சிறிய சேமிப்புக்களை ஊக்கப்படுத்துபவையாக அமைகின்றன. இவ்விரு பிரதான வங்கிகளுக்குப் புறம்பாக வைப்புக்களைப் பெறுவதற்கென ஏனைய நிதிநிறுவனங்கள் என்னும் பிரிவினுள் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள், கூட்டுறவுக் கிராமிய வங்கிகள், கூட்டுறவு அமைப்புக்கள் என்பனவும் ஏனைய சிறப்பியல்பு வாய்ந்த நிதி நிறுவனங்கள் என்னும் பிரிவினுள் சிறப்பியல்பு வாய்ந்த நிதிக் கம்பனிகள், நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் முதன்மைத் தரகர்கள், வியாபார வங்கிகள், துணிகர முதலீட்டுக் கம்பனிகள் பங்குச் சந்தைக் கம்பனிகள் என்பன உள்ளடக்குகின்றன. மேலே கூறிய இத்தகைய நிறுவனங்களில் சேமிப்பை மேற்கொள்ளும்போது திட்டவட்டமான சட்டதிட்ட வரையறைகட்கு உட்பட்டதாக அமைகின்றன.

நிறுவன ரீதியான செயற்பாடுகளில் அல்லது முறைமை சார்ந்த சேமிப்புக்கு, மறுபுறத்தில் முதலில் தோன்றிய சேமிப்பு முறையாக அமைவது நிறுவன ரீதியற்றதும் முறைமைசாரா சேமிப்புமாகும். சமூகத்தில் பண்ட உற்பத்திகளை பழுதடையாமல் பாதுகாத்தல் கூட ஒருவகையான சேமிப்பாகும். பருவகால மாற்றத்தினை உணர்ந்து பண்டங்களை பாதுகாப்பதும் சேமிப்பதும் சமகால நிகழ்வாக அமைவுற்றது. பணப் பொருளாதாரத்தின் தோற்றம் பணத்திற்கான தேவையை பன்முகப்படுத்தியதினால் பொருட்களுக்கு அருமை ஏற்பட்டதைப் போன்ற ''தேவையுடன் ஒப்பிடுமிடத்து பற்றாக்குறைவு'' அருமை என்னும் விளக்கத்திற்கு அமைவாக பரிமாற்று ஊடகமாக செயற்பட்ட பணமானது அருமையாக தோற்றம் பெற்றதும் சேமிக்க வேண்டிய அவசியத்திற்கு நுகர்வோர் தள்ளப்பட்டனர். எனவே வங்கியமைப்புக்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னர் நிறுவனரீதியற்ற சேமிப்புக்கள் இடம்பெற்றது. தகவல்

தொழில்நுட்பத்தின் அதிதீவீர முன்னேற்றத்தின் மத்தியில் கூட நிறுவனரீதியற்ற சேமிப்பு முறைகள் இன்னமும் பொது மக்கள் மத்தியில் குறிப்பாக பொருளாதார அபிவிருத்திக் குறிகாட்டிகளின் விருத்தி பற்றாக்குறைவாக உள்ள கிராமப் புறங்களில் இத்தகைய சேமிப்பு முதன்மை பெறுவதைக் காணலாம்.

முறைமைசாரா சேமிப்பு ஆரம்பத்தில் சுய சேமிப்பாக அமைவுற்றதைக் காணலாம். படுக்கை விரிப்பின் கீழ் மற்றும் சிறிய கைப்பை, சிறிய பெட்டகம், புத்தகங்களில் பக்கங்களுக்கிடையில், மேசை விரிப்பின் கீழ் என பல்வேறு மார்க்கங்களில் இத்தகைய சேமிப்பினை மேற்கொள்கின்றனர். காலப்போக்கில் தமக்கு நம்பிக்கைக்குரியவர்களிடம் அயலவர், உறவினர், நண்பர்கள், கனவான்கள் போன்றோரிடம் பணத்தினை ஒப்படைப்பதும் குறித்த காலத்தின் பின்னர் நமது தேவையினடிப்படையில் மீளப்பெற்றுக் கொள்வதைக் காணலாம். இத்தகைய நம்பிக்கையின் வடிவிலேயே வங்கித்துறை வளர்ச்சியடைந்ததையும் குறிப்பிட முடியும். கிரேக்க தேசத்தில் பாங்கோ என்னும் இருக்கையில் பொதுமக்களின் பணத்தினை கனவான்கள் சிலர் பெற்றுக் கொள்வதையும் தேவையேற்படும்போது உரிமையாளருக்கு மீள வழங்குவதையும் இது காலப்போக்கில் Bank என உருமாற்றமடைந்தது எனவும் சிலர் கருத்துரைக்கின்றனர். எனவேதான் முறைமைசாராத சேமிப்பு முறைமைசார்ந்த சேமிப்பிற்கு வழிவகுத்தது வெளிப்படை. இத்தகைய நிறுவனரீதியற்ற சேமிப்பு முறை குறிப்பாக இடையில் ஒருவர் நிற்கும்போது சட்டப்பாதுகாப்பு எத்தகையது, பிணக்குகள் ஏற்படும்போது சட்ட பரிகாரங்கள் எவ்வளவு தூரத்திற்கு பாதுகாப்பினை வழங்குகின்றது என்று பல ஐயப்பாடுகளை ஏற்படுத்துகின்றது. இவற்றின் இறுதியில் சேமித்த பணத்தினை பூரணமாக இழக்கவேண்டிய துர்பாக்கியம் கூட ஏற்படுகின்றது. எனவே பெரும் மாற்றிடர் (Risk) என்னும் நிச்சயமற்ற தன்மையின் பலாபலன்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நிறுவன ரீதியற்ற சேமிப்பினை முகவராக இருந்து செயற்படும் நிலையில் வட்டி வீத வருமானம் என்னும்மாறி தோற்றம் பெறத் தொடங்குகின்றது. சுயசேமிப்பில் இத்தகைய வட்டி வீதம் இடம்பெறவில்லை. சேமிப்பில் வட்டி வீதம் என்னும் செயற்பாடு நடைமுறையில் பிரிக்க முடியாததாக அமைகின்றது. சேமிப்பிற்குதவும் முகவர் பணத்தினை பாதுகாப்பதுடன் வட்டி வீத வருமானத்தையும் உழைத்துக் கொடுப்பவர்களாகின்றனர். எனவே பொருளாதாரச் சுற்றோட்டத்தில் வட்டி வீதத்தின் தொழிற்பாடும் முக்கியம் பெறத் தொடங்கியது. முன்னரே குறிப்பிட்டது போன்று நுகர்வைப் பின் தள்ளிப் போடும் செயற்பாடாக சேமிப்பு அமைவதையும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் சேமிப்பு மீளப்பெறப்பட்டு நுகர்விற்குப் பயன்படுத்தப்படும். எனவே நுகர்வானது உடனடி தியாகம் செய்யப்பட்டு எதிர்காலத்திற்கும் பின் தள்ளப்படுவதற்கு வழங்கப்படும் வெகுமதி வட்டிவீதம் எனப்படும். இதனால் சேமிப்பை மேற்கொள்பவர்களுக்கு வட்டி வீதம் வருமானமாகவும் சேமிப்பினைக் கொள்வனவு செய்பவனுக்கு செலவாகவும் அமைகின்றது.

வட்டி வீத வருமானத்தைப் பெறும் பொருட்டு சேமிப்பு மேற்கொள்ளப்படுவதனால் தனிப்பட்ட நுகர்வோர் தொடர்பாக சேமிப்பானது முதலீடாகவும் அமைகின்றது. இதனால் தான் முதலீட்டின் பெறுமதி அல்லது விலை, வட்டி வீதம் ஆகும். நிறுவன ரீதியற்ற சேமிப்பானது நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. குறித்த


பிரதேசத்திலுள்ள செல்வந்தர்களிடம் தனிப்பட்ட சேமிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மாதாந்தம் அல்லது குறித்த காலப்பகுதியின் பின்னர் வட்டி வீதம் வழங்கப்படும். ஈற்றில் சேமிப்பின் மொத்தப் பெறுமதி மீளளிக்கப்படும். சேமிப்பின் பிறிதொரு வடிவமாக சீட்டுப் போடுதல் அல்லது சீட்டுக் கட்டுதல் என்னும் நாமத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. குறித்த நபர் ஒருவரை முதன்மையாகக் கொண்டு நண்பர்கள், அயலவர்கள், உறவினர்கள், சக ஊழியர்கள் என்போரைக் கொண்டு (இது வரையறுக்கப்பட்டதாகும்) குறித்த பெறுமதி பணத்தினை நாளாந்தம் அல்லது வாராந்தம் அல்லது மாதாந்தம் முதன்மையானவரிடம் ஒப்படைக்கப்படும். சீட்டின் தன்மைக்கு ஏற்ப அவர் தம் கழிவுத் தொகையை எடுத்த பின்னர் எஞ்சியது பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் சீட்டின் தன்மையென்னும் போது இருவகையான சீட்டுக்கள் பொதுவாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அங்கத்தவர்களுக்கிடையில் அதிஸ்டத்தினடிப்படையில் ''குலுக்கல் சீட்டு'' என்னும் அடிப்படையில் இடம்பெறும். பொதுவாக முதலாவது குலுக்கல் முதன்மையாளருக்கும் சொந்தமானதாகும். ''கூறல் சீட்டு'' என்பது மற்றைய இனமாகும். வழமைபோல் இதில் முதலாவது முதன்மையாளருக்குச் செல்லும் பின்னர் குறித்த காலத்தில் அங்கத்தவர்கள் கூடி கழிவுக்கான ஏலம் அல்லது கூறல் முன்வைக்கப்பட்டு உயர்ந்த கழிவு நிலையைக் கூறியவர் சீட்டுத் தொகையினைப் பெற்றுக் கொள்வார்.

சீட்டின் அடிப்படையிலான சேமிப்பு சட்டரீதியான வலுவுடையதா? என்னும் ஐயம் எழுகின்றது. அத்துடன் அங்கத்தவர்களுக்கிடையிலான புரிந்துணர்வும் ஒத்துழைக்கும் தன்மையும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை எய்துமா? என்னும் இரு வினாக்களும் பெரும் நிச்சயமற்ற தன்மையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி விடுகின்றது. நடைமுறையில் இத்தகைய சேமிப்பு எதிர்பார்க்கப்பட்ட இலக்கை எய்தாமல் சீட்டுக்கள் முறிவடையும்போது எதிர்புறமான சேமிப்பை அதாவது இழப்பை ஏற்படுத்தியும் விடுகின்றது. இது எவ்வாறு இருப்பினும் நிதிநிறுவனம் சார்பில் வழங்கப்படும் வட்டிவீதம் குறைவானதாக அமையும்போது இத்தகைய சேமிப்புக்கள் பிரபல்யமடைகின்றது. அதுமட்டுமன்றி வங்கிப் பழக்கவழக்கங்கள் குறையாகவுள்ள கிராமப்புறங்களில் இது சேமிப்பில் கூடியதாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இவற்றிற்கு மேலாக வளச்சியடைந்த நகர்ப்புறங்களில் நாளாந்த வருமானத்தைப் பெறுகின்ற வர்த்தகங்கள் மத்தியில் பல இலட்சம் பெறுமதியான சேமிப்புப் புரள்வு இதன் வழி ஏற்படுகின்றது. இத்தகைய சேமிப்பின் அடிப்படை நம்பிக்கையும் தொடர்ச்சியான பணப்புழக்கமும் ஆகும்.

சேமிப்பு தனிநபர்மட்டுமன்றி நிறுவனம், உற்பத்தித்துறை, பொருளாதாரம் என்னும் பல்வேறு துறைகளுக்கு அவசியமானதாகும். தனிநபர் என்னும் அடிப்படையில் நடைமுறை சேமிப்பு எதிர்கால நுகர்விற்கு வழிவகுக்கின்றது. அது மட்டுமன்றி சேமிப்பிற்காக இழந்த நுகர்வை விட மேலதிகமான நுகர்வை வட்டிவீத வருமானத்தின் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும். வாழ்வை எதிர்கால வளமான சிந்தனையுடன் இணைவுபடுத்தக் கூடிய வகையில் ஆக்கபூர்வமானதாக சேமிப்பினை மேற்கொள்ள முடியும். எனவே தனிநபர் வாழ்வின் பாதுகாப்பாகவும் ஆதாரமாகவும் செல்வத்தை அளவிடும் மார்க்கமாகவும் சேமிப்பு அமைகின்றது.

நிறுவனம் என்னும் அமைப்பினுள் சேமிப்பு என்னும் மாறியின் செயற்பாடு எதிர்கால முதலீடாக உருமாறுகின்றது. இது பொருளாதாரத்திற்கும் பொருத்தமானதாக அமைகின்றது. சேமிப்பின் மறுவடிவம் முதலீடாகும். பொருளாதாரச் சுற்றோட்டத்தில் இவ்விருமாறிகளினதும் (சேமிப்பு, முதலீடு) செயற்பாடு தாக்கம் நிறைந்ததாகவே அமைகின்றது. சேமிப்பிற்கும் முதலீட்டிற்குமிடையில் நேர்கணியத் தொடர்பு இருப்பதனால் பொருளாதாரத்தில் முதலீட்டினை உச்சப்படுத்த வேண்டுமாயின் நிச்சயமாக சேமிப்பும் உச்சப்படுத்தப்படல் வேண்டும். இதனால் தான் சேமிப்பில் பொதுமக்கள், நிதிநிறுவனங்கள், இலங்கை மத்திய வங்கி என்னும் மூன்று பெரும் பிரிவினர் உள்ளடங்குகின்றனர். ஆனால் இம்மூவரின் வரிசையின் எண்ணிக்கையினைப் பார்க்கையில் அதிகமாக பொதுமக்கள் காணப்படுவர். இப்பொதுமக்கள் என்னும் அமைப்பினுள் குடிமக்கள், நிறுவனங்கள், கம்பனிகள், பங்குடமைகள், கூட்டுத்தாபனங்கள், அறக்கொடை நிறுவனங்கள் என பல்வேறு அமைப்புகளில் அங்கத்துவம் பெறுபவர்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. பிரமிட்டின் நடுப்பகுதியில் எண்ணிக்கையில் குறைவான நிதிநிறுவனங்கள் அமைகின்றன. இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட அதாவது பதிவு செய்யப்பட்ட பண ரீதியான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கான அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்களை இப்பிரிவு காட்டுகின்றது. பொது மக்கள் மத்தியில் சேமிப்பை மேற்கொள்வதற்கான அங்கீகரிக்கப்பட்ட நிதிநிறுவனங்களை சரியான முறைப்படி இனம் காண வேண்டியது அவர்களின் விழிப்புணர்வை உள்ளடக்கிய கடமையாகும். சேமிப்பினை மேற்கொள்ளும் நிறுவனங்களை அடையாளம் காண்பது மட்டுமன்றி அதில் சேவையாற்றும் ஊழியர்கள் யார் என்பதையும் அறிந்து கொள்ளவேண்டியவர்களாகின்றனர். ஏனெனில் நிதிநிறுவனங்களுக்கிடையிலான போட்டியின் காரணமாக மரபுரீதியாக வாடிக்கையாளர் நிதிநிறுவனங்களை நாடிவருவதை விட புரட்சிகரமான முறையில் கவர்ச்சிகரமான பல்வழி மூலம் நிதிநிறுவனங்கள் வாடிக்கையாளர்களை நாடிவரும் நிலை காணப்படுகின்றது. எனவே வாடிக்கையாளர்கள் நிதிநிறுவன ஊழியர்களை அடையாளம் காணக்கூடியவர்களாக சீருடை, தம்மை தாமே அடையாளப்படுத்தல் என்பனவற்றை மேற்கொள்ளல் சிறப்பானதாகும்.

பிரமிட்டின் உச்சப் பகுதியில் இலங்கை மத்திய வங்கி காணப்படுகின்றது.



இந்நிறுவனமானது நிதிநிறுவனங்களை சட்டரீதியாக நிர்வகிப்பதற்கான பூரண அதிகாரம் கொண்ட அமைப்பாகும். இலங்கை மத்திய வங்கி நாணயவியற்கருவிகளான பணநிரம்பல், பண அடித்தளம், பணப் பெருக்கி என்பனவற்றைக் கொண்டு நிதிநிறுவனங்களின் செயற்பாடுகளில் கட்டுப்பாடுகளினை மேற்கொண்டு வருகின்றது. சில கட்டுப்பாடுகள்


உதாரணமாக பகிரங்கச் சந்தை நடவடிக்கையில் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு விற்பனை செய்தல் மற்றும் நிதிநிறுவனங்கள் நிதி நெருக்கடியினை எதிர்நோக்கும்போது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் நிதிக் கொடுப்பனவுகளுக்கெதிரான வட்டி வீதம் இதனை வங்கி வீதம் என அழைக்கப்படும். மற்றும் சட்டப்படியான ஒதுக்கங்கள் மாறும் ஒதுக்கங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய மொத்தக் கட்டுப்பாடாகவும் சில நிதி நிறுவனங்களைத் தெரிவு செய்து கடனின் உச்ச அளவு, வட்டிவீதத்தின் எல்லை போன்ற விசேட தெரிவுக் கட்டுப்பாடுகளையும் இலங்கை மத்திய வங்கி நிதிநிறுவனங்களுக்கெதிராக மேற்கொண்டு வருகின்றது. எனவேதான் சேமிப்பு என்பது பொது மக்கள், நிதிநிறுவனங்கள், இலங்கை மத்திய வங்கி எனும் மூன்று பிரிவினரை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் அம்சம் என வர்ணிக்கப்படுகின்றது. எனினும் பொருளாதாரம் என எடுத்து நோக்கும்போது தேசியத்தின் மொத்தச் சேமிப்புக்கு இலங்கை மத்திய வங்கி பொறுப்பாக அமைகின்றது.

பொருளாதாரம் தொடர்பாக பொது மக்களின் சேமிப்பு "உள்நாட்டு சேமிப்பு" என அழைக்கப்படுகின்றது. ஒரு நாட்டிலுள்ள உற்பத்திக் காரணிகள் பொருள், சேவை உற்பத்தியில் ஈடுபட்டு பெறப்பட்ட பணப்பெறுமதி அந்நாட்டின் மொத்தத் தேசிய வருமானம் எனப்படும். அத்தேசிய வருமானத்தில் உள்நாட்டுச் சேமிப்பின் பங்கு உயர்வாக இருத்தல் விரும்பத்தக்கதும் அதை இலக்காகக் கொண்டு நிதிநிறுவனங்களின் பங்கும் அமைவதற்கான பொருளாதாரக் கொள்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. இலங்கையினை எடுப்போமாயின் மொத்தத் தேசிய வருமானத்தில் உள்நாட்டுச் சேமிப்பின் பங்கு 19% மட்டுமே அமைந்துள்ளது. எனவே மிகுதி 81% வெளிநாட்டுச் சேமிப்பு என்னும் வகையில் சர்வதேச மூலவளங்களின் பயன்பாடே முதன்மை பெறுகின்றது. உள்நாட்டுச் சேமிப்பினை உச்சப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு முதலீட்டினை உயர்த்தக்கூடியதாக அமையும். எனவேதான் சேமிப்பை உயர்த்துவது தொடர்பாக நிச்சயமான தன்மையையும், பாதுகாப்பையும் வருமானம் உழைக்கும் முதலீடாகவும் அமையும் வகையில் நிதிநிறுவனங்களின் செயற்பாடு அமைந்திருத்தல் வேண்டும். அண்மைக் காலங்களில் உள்நாட்டுச் சேமிப்பை உயர்த்தும் வகையில் சில குத்தகை நிறுவனங்களுக்கும் சேமிப்பைத் திரட்டுவதற்கான அனுமதி இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ளது.

சேமிப்பை ஊக்கப்படுத்துவதற்கு நிதிநிறுவனங்கள் செயற்படுகின்றன, எனும்போது வெறுமனே வைப்புக்களைத் திரட்டல் மட்டும் நிதிநிறுவனங்களின் செயற்பாடாக அமையாது. ஏனெனில் வைப்புத்திரட்டலை ஊக்குவிக்க வேண்டுமாயின் வட்டிவீதம் வழங்கப்படல் வேண்டும். இது நிதிநிறுவனங்களுக்கான செலவு சார்ந்ததாக அமைந்துவிடுகின்றது. இலாபத்தைப் பெறவேண்டுமாயின் நிதி நிறுவனம் முதலீட்டு நடவடிக்கையிலும் ஈடுபடல் வேண்டும். எனவே நிதி நிறுவனங்களும் உற்பத்தி நிறுவனங்கள் போன்று உள்ளீடுகளின் செய்முறை, வெளியீட்டுச் செய்முறை என்பனவற்றை மேற்கொள்கின்றன. உள்ளீட்டுச் செய்முறையில் பொதுமக்களிடமிருந்து வைப்புக்கள் பெறுவதைக் குறிக்கின்றது. பொதுவாக வைப்புக்கள் எனும்போது சேமிப்புப் புத்தகங்களை மையமாகக் கொண்டிருக்கும் ஒப்பீட்டளவில் வட்டி வீதம் குறைவானதாக உள்ளது. இத்தகைய சாதாரண சேமிப்புக்குப் புறம்பாக வைப்பின் பின்னர் குறித்த காலப்பகுதியின் பின்னர்தான் பணத்தைப் பெற விரும்புவர் என்னும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கால வைப்புக்கள் அல்லது தவணை வைப்புக்கள் அல்லது நிலையான வைப்புக்கள் என்பனவாக அமையும்.

நிதிநிறுவனங்கள் உள்ளீட்டுச் செய்முறையில் பெறப்பட்ட பணத்தினை இலாபம் பெறப்படும் மார்க்கமாக வெளியீட்டுச் செய்முறையான வாடிக்கையாளர்களுக்கான முதலீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கடன், முற்பணக் கொடுப்பனவுகளில் ஈடுபடுகின்றன. இத்தகைய கடன் முதலீட்டிற்கு நிதிநிறுவனங்கள் வட்டி வீதம் அறவிடப்படுவதன் மூலம் வருமானத்தை உழைத்துக் கொள்கின்றன. ஒப்பீட்டளவில் நிச்சயமாக வைப்புக்களுக்கு வழங்கப்படும் வட்டிவீதம் கடன் கொடுப்பனவுக்குப் பெறப்படும் வட்டிவீதத்தை விட குறைவானதாக அமையும். எனவே வைப்புக்களுக்கு வழங்கப்படும் வட்டிவீதச் செலவிற்கும் கடனுக்குப் பெறப்படும் வட்டிவீத வருவாய்க்குமிடையிலான அளவு நிதிநிறுவனத்தின் இலாபமாக அமைகின்றது. எனினும் இவ்வட்டிவீத வேறுபாடுகள் முழுவதும் இலாபமாக அமையாது. ஏனெனில் நிதி நிறுவனத்திற்கு ஏற்படும் நிலையான செலவுகள் மாற்றமடையும் செலவுகள் என்பனவற்றை நீக்கியதன் பின்னர் பெறப்படும் அளவே நிதி நிறுவனத்தின் இலாபமாக கருதப்படும்.

நிதிநிறுவனங்களில் சேமிப்பதன் மூலம் பணத்தின் பெறுமதி கூட உயர்வடைகின்றது. நிதி நிறுவனங்கள் தொழிற்பாட்டை பின்வருமாறு காட்ட முடியும்.



மேலே காட்டிய தொழில்பாட்டில் வருமானத்தை அதாவது பணத்தினை மேலதிகமாக அதாவது நுகர்விற்குப் போக எஞ்சியதை சேமிப்பாக மேற்கொள்ளுகின்றனர். பொருளாதார கருத்தின் பிரகாரம் தனி மனிதன் தொடர்பாக பண வருமானம் அதிகரித்துச் செல்லும்போது பண அலகினது எல்லைப் பயன்பாடு குறைவடைந்து செல்லும். ''மேலதிகமாகப் பெறப்பட்ட ஒரு பண அலகிலிருந்து பெறப்படும் பயன்பாடு" பணத்தின் எல்லைப் பயன்பாடு என விளக்கமளிக்கப்படுகின்றது. ஒரு தனி மனிதன் தொடர்பாக ஆரம்பத்தில் குறைந்த வருமானத்தைப் பெறுகின்றபோது அப்பணத்திற்கு உயர்வான பயன்பாடு காணப்படும்.

எப்பண்டங்களை அல்லது சேவையினை முன்னுரிமை அடிப்படையில் கொள்வனவு செய்வது என்னும் பலத்த போட்டியும் மனச்சஞ்சலமும் காணப்படும். அதாவது ஆரம்பத்தில் பெறப்படும் பண அலகினது பயன்பாடு உயர்வானதாக அமையும்.

அதே நபர் தொடர்பாக வருங்காலங்களில் அவனின் பண வருமானம் உயர்வடையும்போது நுகர்வுத் தேவையானது பன்முகப்படுத்தலும் உயர்வும் எய்தும். எனினும் பணவருமானத்தின் அதிகரிப்பிற்கு ஏற்ப நுகர்வுத் தேவைகள் உயர்வடையும் என குறிப்பிடமுடியாது என்பது உளவியலாளர்களின் ஆய்வு. எனவே அவர்களின் அதிகரிக்கப்படும் பண அலகினது பயன்பாடு குறைவடையத் தொடங்குகின்றது. எனவேதான் உயர்ந்த பண வருமானம் உள்ளவர்களின் பணத்தின் எல்லைப் பயன்பாடு குறைவாகவும் குறைந்த பணவருமானம் உள்ளவர்களின் பண அலகின் எல்லைப் பயன்பாடு உயர்வானதாக அமையும்.

பண அலகின் எல்லைப் பயன்பாட்டின் குறைவடைந்து செல்லும் இயல்பினை நிதி நிறுவனங்களின் தொழிற்பாடுகளுடன் ஒப்பிடப்படுமிடத்து மேலதிக பணவருமானத்தை கொண்டவர்கள் அதாவது பயன்பாடு குறைவாக உள்ள பணத்தினை நிதிநிறுவனங்களில் சேமிப்பாக வைப்பிலிடப்படுகின்றன. வைப்பாகப் பெறப்பட்ட பணத்தினை இலாபம் பெறும் பொருட்டு நிறுவனத்திலான மதிநுட்பத் தொழிற்பாட்டினடிப்படையில் வெளியீட்டுத் தொழிற்பாட்டின் அதாவது வாடிக்கையாளர்களுக்கு கடன் அல்லது முற்பணமாகக் கொடுப்பர். தனிநபர் தொடர்பாகவும் நிறுவனங்கள் தொடர்பாகவும் பணத்தேவையுள்ளவர்களுக்கு இக்கடனினைப் பெறுகின்றனர். பணத்தேவையுள்ளவர்களுக்கு கடன் வழங்கும்போது பணத்தின் பயன்பாடு உயர்த்தப்படுகின்றது. ஒன்றில் புதிய உற்பத்தி அலலது உற்பத்தி வெளியீட்டின் பெறுமதி உயர்த்தப்படுகின்றது. அல்லது கடன் பெறுபவனின் நுகர்வுமட்டம் உயர்வடைகின்றது. இதனால் அவன் தொடர்பாக பொருளாதார, சமூக நலக்குறிகாட்டி உயர்வடையச் செய்வதனால் பொருளாதார அபிவிருத்தி உயர்வடைகின்றது.

எனவே பணத்தினை சேமிப்பு, நிதிநிறுவனங்களின் கடன் என்னும் செயற்பாட்டின்போது ஒருவனிடமுள்ள குறைந்த பயன்பாடுள்ள பணத்தை உயர்ந்த பயன்பாட்டுச் செய்முறைக்கு மாற்றப்படுவதைக் காணலாம். அதன்வழி உற்பத்தி, நுகர்வு என்பன உயர்வடைவதனால் இறுதியில் பொருளாதார, அபிவிருத்தியேற்படுகின்றது. இங்கு நிதிநிறுவனங்கள் உள்ளீட்டு, வெளியீட்டு என்னும் இரு செய்முறையிலும் பணம் பரிமாற்றப்படுவதையும் இதனால்தான் இவர்களை ''நிதி இடையீட்டாளர்கள்" எனவும் அழைக்கப்படுகின்றனர். பணத்தை சேமிப்பவர்களும் பணத்தேவையுள்ள கடன் பெறுபவர்களையும் நேரடியாகத் தொடர்பு கொள்ளாமல் ஒருவனது நிதியை வேறு ஒருவருக்கு வழங்கும் ஊடகமாக நிதி நிறுவனங்கள் செயற்படுவதனால் நிதி இடையீட்டாளர்கள் என வர்ணிக்கப்படுவது ஏற்புடையதே ஆகும்.

மனித முன்னேற்றமே பொருளாதார அபிவிருத்தியென மிகச் சுருக்கமாக, ஆனால் முழுமையான கருத்தாக அமைகின்றது. எனவே மனித முன்னேற்றம் என்பது பல்வேறு சமூக, பொருளாதாரக் குறிகாட்டிகளின் முன்னேற்றத்தின் மூலம் விளக்கப்படுகின்றது. இக்குறிகாட்டிகளின் செயற்பாடு பெரிதும் வருமானத்திலும் நுகர்வு மட்டத்திலும்

உள்ளடங்கியவை ஆகும். இவ்வருமானம் நுகர்வு ஆகிய இரண்டும் நிதிநிறுவனங்கள் உள்ளீட்டு, வெளியீட்டுத் தொழில்பாடுகளில் இணைப்புத் தன்மை கொண்டுள்ளது. நிதிநிறுவனங்களில் மக்கள் தொடர்புபடுவதன் மூலம் இவற்றின் வேகத்தை உயர்த்த முடியும். சேமிப்பு என்பது தனி மனித முன்னேற்றத்திற்கு அவசியம் என்னும் நிலையில் ஒரு புறத்தில் தனி மனித வருமானத்தை உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். மறுபுறத்தில் தனிமனித வீணான நுகர்வு அல்லது பொருளாதார முன்னேற்றத்திற்கு சார்பற்ற நுகர்வு குறைக்கப்படல் அல்லது விலக்கப்படுதல் அவசியமானதாகும். சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்தும் போது நீண்ட கால சேமிப்புக்களில் மக்கள் இணைக்கப்படுதலும் கட்டாய சேமிப்பு என்னும் எண்ணக்கருவும் வலுவடைதல் வேண்டும். ஒருவனுடைய மாதவேதனத்திலிருந்து சிறிய தொகையை கட்டாய சேமிப்பிலிடுவதன் மூலம் எதிர்கால நுகர்வு பிரமாண்டமானதாக அமைய வாய்ப்புண்டு. இல்லங்களில் அங்கத்தவர்களிடையில் சேமிப்பு பழக்கத்தை விழிப்படையச் செய்தலும் சிறுவயதில் உண்டியல் ஒன்றில் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குதல், மகளிர் மத்தியில் இதை வலுவடையச் செய்தலும் விரும்பத்தக்கது. சமூக அமைப்புக்கள், பாடசாலைகள், நிறுவனங்கள் என அமைப்பிலும் சேமிப்பின் அவசியம் விளக்கப்படுவதுடன் சேமிப்பதற்கான தந்திர உபாயம் விளக்கப்படல் வேண்டும்.

சேமிப்பின் அவசியம் வெறுமனே நிதி தொடர்பானதாக அமையாது. எமது பண்டைய கால மரபுகளினைப் பேணிக் காக்கும் வகையில் பண்டங்களைச் சேமிக்கவும், சரியான முறையில் பாதுகாக்கவும், வீண் விரயங்களை இயலுமான வரை குறைப்பதும் பண்டக் கொள்வனவுகளின் அவதானமும் என பல்வேறு செயற்பாடுகள் தரமான பண்ட நுகர்வை மேற்கொள்ள வழிவகுக்கும். இதேபோன்று சேவை நுகர்விலும், நேரத்தை மதிக்கவும், நேர முகாமைத்துவம் தவறுதலான சேவை நுகர்வை விலக்குதல் அவசியமானதும் தரமான சேவை நுகர்வை மேற்கொள்ளப் பழகிக் கொள்ளல் வேண்டும். நல்லவற்றைக் கேட்பது அளவான பேச்சு இனிமையான தெரிவு செய்யப்பட்ட மொழிப் பரிமாற்றம் என சமூகம் விரும்பும் செயல்களை மேற்கொள்ளும்போது வாழ்க்கைக் காலத்தை சேமிக்க முடிகின்றது.

இவ்வாறு வாழ்க்கைக் காலத்தை சேமிக்க முடியும்போது நம்பிக்கையுடன் உத்தரவாதமுள்ள நிதி நிறுவனங்களில் சேமிப்பை மேற்கொள்வதன் மூலம் மொத்தத் தேசிய ரீதியான நுகர்வையும் முதலீட்டு மட்டத்தையும் உயர்த்துவதன் மூலம் சமூக எழுச்சியை ஏற்படுத்தி நிலைத்து நிற்கக் கூடிய பொருளாதார அபிவிருத்தியை சமூகத்திற்கு ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

ஆறு அம்சத்திட்டத்தின் இலக்குகளை அடைவதில் கண்டுள்ள வெற்றிகள்

திரு.பொ.சுரேஸ்குமார்
தலைவர், பொதுக் கல்விச்சபை
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

சாதிக் கொடுமைகள், வாழ்வாதாரப் பிரச்சனைகள், கல்லாமை, உரிமை உணர்வின்மை, போட்டி பொறாமை, ஆதிக்க வர்க்கத்தினரின் அடாவடித்தனங்கள் போன்ற காரணிகளால் அடக்கி, ஒடுக்கி நசுக்கப்பட்டு வளர்ந்த மக்கள் சமூகத்தைத் தட்டியெழுப்பி விழிப்பூட்டி உரிமை உணர்வூட்டி சிந்தித்துச் செயற்படவைப்பதற்கான தலைமை அன்று எமக்கு இல்லை. நசுக்கப்பட்ட எம்மக்களை வாழவைக்க வேண்டுமென்று யாராவது சிந்திக்க முற்பட்டாலும் அதற்காக முன்னின்று வழிப்படுத்தக்கூடிய துணிவும், ஆளுமையும் தேவையல்லவா? அத்தகைய ஒரு தலைமை தோன்றும் வரை காத்திருப்பதற்கு எம்மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். உரிமை வேட்கையும், மக்கள் நம்பிக்கையும், முட்டுக்கட்டை போடாத குடும்பப்பின்புலம், தியாக சிந்தனை, பன்முக ஆளுமைத்திறன் ஆகிய பண்புகள், திறன்களைக் கொண்ட ஒருவரே அச்சூழலில் எமக்குத் தேவைப்பட்டது. அத்தகைய ஒரு பரிதாபகரமான சூழ்நிலையில் தான் பாடசாலை மாணவனான ஆர்.எம். நாகலிங்கம் 1947ஆம் ஆண்டில் தோன்றிப் படிப்படியாக எம்மக்கள் விடிவுக்கான ஒரு பெரும் தலைவனாக வளர்ச்சி கண்டார்.

அவர் படிப்படியாக மூலை முடுக்கெல்லாம் தேடித் தேடிச் சமூகப்பற்றும் விசுவாசமும் உரிமை உணர்வும் கொண்டவர்களை அடையாளம் கண்டு முன்னணித் தலைவர்கள் அணியொன்றை உருவாக்கி அவர்களுடைய ஒத்துழைப்புடன் தீவிரமாகவும் துணிச்சலுடனும் செயற்பட்டதன் விளைவே எம்மக்கள் சமூகம் இன்று உயர்ச்சி பெற்ற ஒரு சமூகமாகப் பரிணமிப்பதற்கான காரணம் என்பது எம்மக்கள் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய வரலாற்று உண்மையாகும்.

எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களினால் 1947ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டு இற்றைவரை 65 ஆண்டுகாலமாகப் பரிணாம வளர்ச்சி பெற்ற சமூக எழுச்சி இயக்கத்தின் வழி பயனாளிகள் மத்தியில் ஏற்பட்ட மலர்ச்சி பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சாதிக்கட்டமைப்பு முறையினால் ஒடுக்கப்பட்ட எம் சமூகமானது எழுச்சி, மலர்ச்சி, உயர்ச்சி அந்தஸ்து கௌரவம் பெற்ற சமூகமாகப் பரிணமிக்கச் செய்வதை முதன்மையான தொலைநோக்கமாகக் கொண்ட இச்சமூக எழுச்சி இயக்கமானது ஆரம்பகாலம் தொட்டு ஆறு அம்சத்திட்டம் ஒன்றின் அடிப்படையில் இலக்குகள் கொள்கைகளினை வரைந்து செயற்பட்டு வந்துள்ளது. இத்திட்டமானது 1980.12.25இல் ஆறு அம்சத்திட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. காலத்தினதும் சமூகத்தினதும் மாற்றங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவகையில் குறிப்பிட்ட ஆறு அம்சத்திட்டமானது தேவைப்பட்ட திருத்தங்களுடன்

அமுல்படுத்தப்பட்டு வருகிறது. ஆறு அம்சத்திட்டத்தில் அடையாளப்படுத்தப்பட்ட இலக்குகள் ஒவ்வொன்றும் எந்தளவிற்கு அடையப்பட்டுள்ளது என்ற முறையில் மதிப்பீடு செய்வதன் மூலம் தான் எம் சமூக மக்களின் வாழ்வியலில் 1947ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட மாற்றங்களும் மலர்ச்சியும் பற்றி மதிப்பிட்டுக் கூறமுடியும். 1947ஆம் ஆண்டிற்கு முந்திய காலப்பகுதியில் எப்படி வாழ்ந்தோம் என்றும் இப்போது எப்படி வாழமுடிகிறது என்பதன் அடிப்படையில் ஒப்பீடு செய்வது அவசியமாகிறது. ஆறு அம்சத் திட்டத்தை அளவு கோலாகக் கொள்வது பொருத்தமான அளவுமுறையாகும். நாம் அன்று வாழ்ந்த கீழ்நிலையிலிருந்தும் விடுபட்டு உயர்ச்சி பெறுவதை நோக்கமாகக் கொண்டதே குறிப்பிட்ட ஆறு அம்சத்திட்டம் என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

ஆறு அம்சத் திட்டத்தின் ஒவ்வொரு அம்சம் பற்றியும் அறிஞர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் இந்நூலில் பதிவாகியுள்ளன. அதனைக் கவனத்தில் கொண்டு கூறியது கூறுவதைத் தவிர்த்து இக்கட்டுரை ஆக்கப்பெற்றுள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆரம்பநிலை ஆறு அம்சத்திட்ட இலக்குகள்	திருத்தப்பட்ட ஆறு அம்சத் திட்ட இலக்குகள்
1. பயனாளிகளின் சமூகத்தை ஐக்கியப் படுத்தல்	1. சமாசத்தின் தலைமையின் கீழ் ஐக்கியத்தைப் பேணி திட்டமிட்ட முறையில் செயல்படல்.
2. பட்டினி கிடக்க நேரினும் படித்தல், படிக்கவைத்தல்.	2. கற்றோர் சமூகமாகப் பரிணமிக்கச் செய்யும் பொருட்டு பட்டினி கிடக்க நேரினும் படித்தல், படிக்கவைத்தல்
3. மரபுவழித் தொழில் முறையிலிருந்தும் பெயர்தல்	3. உயர் தொழிற்புலமை பெருக்கி வளமான தொழில் கொண்டு மரபுவழித் தொழில் விலங்கை ஒழித்தல்.
4. குடிமைத் தொழில் முறையை ஒழித்தல்	4. ஐந்தாவது குடிமை ஒழித்தல் இலக்கானது கீழேகுறிப்பிட்ட இலக்குடன் சேர்க்கப் பட்டுள்ளது. புதிய இலக்கு: நிதியத்தின் மூலம் அபிவிருத்திக்கான நிதிவளத்தை வழங்குதலும் சிக்கனச் சேமிப்புப் பழக்கத்தை வளர்த்தலும் ஒரு சமூக வங்கியாக நிதியத்தைப் பரிணமிக்கச் செய்தலும்.

5. ஏனைய சமூகக் கொடுமைகளை ஒழித்தல்	5. வறுமை முதலான சமூகக் கொடுமை களால் நலிவுற்றோருக்கு கைகொடுத்து அனைவரும் வளமாக வாழ உதவுதல்.
6. உயரிய ஒழுக்க கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்த்தல்	6. உயரிய ஒழுக்க கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்த்தல்

ஐக்கியத்தை வளர்த்தல்:

அன்று எம்மக்கள் பலதரப்பட்ட வேறுபாடுகள் காரணமாகவும் அறிவின்மை காரணமாகவும் மேல்வர்க்கத்தினரின் பிரித்தாளும் தந்திர உபாயங்களாலும் சிதறுண்டு சிறுசிறு குழுக்களாக வாழ்ந்த வரலாறும் எமக்கு உண்டு. தொழில், பொருளாதாரம், பிரதேசம், சமயம் ஆகிய வேறுபாடுகளால் பிரிந்து பிரிந்து வாழ்ந்துள்ளார்கள். அவ்வாறு காலங்காலமாக வாழ்ந்த மக்களை ஐக்கியப்படுத்துவதை அடிப்படை அத்தியாவசியத் தேவையாக உணர்ந்து கருத்துப் புரட்சி இயக்கத்தின் மூலம் விழிப்பூட்டி மனமாற்றம் பெறச் செய்து ஐக்கியப்படுத்த எடுத்த முயற்சிகள் பெருமளவு வெற்றியைத் தந்துள்ளது. யாழ்மாவட்டத்தில் வாழ்கின்ற எம்மக்கள் அனைவரையும் ஒரே சமூக உறவுகள் என்ற உணர்வுடன் ஐக்கியப்பட்டு திருமணங்கள் முதலான கருமங்கள் அனைத்திலும் வேறுபாடின்றிச் செயற்பட வழிபிறந்தது. தமிழர் தாயகமான வடகிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து எம் உறவுகளையும் ஒரே தலைமையின் கீழ் கொண்டுவந்து ஐக்கியப்படுத்தும் முயற்சி வீண் போகாது விரைவாக நிறைவு பெறும்.

மக்களை ஐக்கியப்படுத்துதல் என்னும் இலக்கானது சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினை தலைமை நிறுவனமாக ஏற்று அச்சமாசத்தின் நிறுவன ரீதியான தலைமையின் கீழ் அம்மக்களின் ஐக்கியத்தை வலுப்படுத்த வேண்டும் என்பதாகும். அவ்வாறு ஐக்கியப்பட்ட நிலை உருவாகும்பொழுது தான் அத்தலைமையின் கீழ் ஒன்றுபட்டுத் திட்டமிட்ட முறையில் செயற்பட முடியும்.

கிராம மட்டத்தில் கிராமக் கழகங்கள் வெவ்வேறு பெயரில் 24 கழகங்கள் யாழ்.மாவட்டத்துக்குள் அமைக்கப்பட்டன. அக்கழகங்களின் கூட்டிணைப்பின் மூலம் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் தாபிக்கப்பட்டது. கிராம மட்டத்தில் கழகங்களும் தேசிய மட்டத்தில் சமாசமும் நிறுவன ரீதியான தலைமையை வழங்கியதுடன் திட்டமிட்ட முறையில் ஆறு அம்சத் திட்டத்தை அவை அமுல்படுத்தி வந்துள்ளன. அத்துடன் மாணவ மன்றங்களும் துணை நிற்கின்றன. யுத்தச் சூழலால் ஏற்பட்ட இடம்பெயர்வுகள், அழிவுகள், அச்சுறுத்தல்கள் ஆகியவற்றால் பெரும்பாலான கிராம கழகங்கள் செயலிழந்து விட்டன. எனினும் பிராந்திய பொதுச்சபை, பிராந்திய முகாமைச்சபை, பிராந்திய கல்விச்சபை ஆகியவற்றை பிரதேச செயலர் பிரிவுகளில் அமைத்து சமாசத்தின் உச்ச அதிகாரம் கொண்ட மகாசபை மறுசீரமைக்கப்பட்டு நிறுவன ரீதியான தலைமை ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம்

ஜனநாயக நடைமுறையைப் பின்பற்றி ஆறு அம்சத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. யாழ் மாவட்டத்திற்கு வெளியிலும் குறிப்பாக கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா, கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்கும் நிறுவன ரீதியான தலைமையை வழங்கி அம்மாவட்டங்களிலுள்ள மக்களை சமாசத்தின் தலைமையின் கீழ் ஐக்கியப்படுத்துவதற்கான முயற்சி தொடர்கிறது.

பட்டினி கிடக்க நேரினும் படித்தல் படிக்க வைத்தல்

எமது எழுச்சி இயக்கத்தின் கல்விச் சிந்தனைகள் செயற்பாடுகள் பற்றிய பேராசிரியர் மு.கருணாநிதி அவர்களின் கட்டுரை இந்நூலில் இடம்பெற்றுள்ளதை கவனிக்கவும்.

எம் சமூக மாணவர்கள் 5ஆம் வகுப்புடன் தமது கல்வியை முடித்துக் கொண்டு தொழிலுக்கு அமர்த்தப்பட்ட சாபக்கேடான வரலாறு உண்டு. இவ்வரலாற்றை மாற்றியமைக்கும் பொருட்டு எடுக்கப்பட்ட தீவிர முயற்சியின் பயனாக கற்றோர் சமூகமாக எம் சமூகம் பரிணமிப்பதற்கான ஆரம்பத்தை நாம் இன்று காணமுடிகிறது. ஆரம்பத்தில் ஒவ்வொரு பிள்ளையும் குறைந்தபட்சம் 10ஆம் வகுப்புவரை (க.பொ.த சாதாரணதரம் வரை) படிக்க வேண்டும் என்றும் அடுத்த கட்ட இலக்காக எம் மாணவர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாக வேண்டும் என்றும் மூன்றாம் கட்டமாக பல்கலைக்கழகப் பட்டப்படிப்புடன் உயர்தொழிற்புலமைக் கல்வித் தகைமை பெறவேண்டும் என்றும் கல்வி இலக்குகள் காலத்துக்குக் காலம் உயர்த்தப்பட்டு நல்ல அறுவடைகளைப் பெற்று வருகிறோம். இன்றைய எமது கல்வி இலக்கானது ஒவ்வொரு குடும்பத்திலும் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் உருவாக வேண்டும் என்பதாகும். இலக்குகளைச் சொல்வதோடு நாம் நின்றுவிடுவதில்லை. அதற்கான ஊக்குவித்தல்கள் - கல்வி நன்கொடை, புலமைப்பரிசில் நன்கொடை, சாதனையாளர்களை கௌரவித்தல் ஆகியவற்றை வழங்கி இலக்குகளை அடையவும் உதவப்படுகிறது.

இம்முயற்சிகளின் பயனாக இளமாணிப் பட்டதாரிகள், முதுமாணிப்பட்டதாரிகள், கலாநிதிப் பட்டதாரிகள் எம்மத்தியில் உருவாகியுள்ளனர். தொழிற்புலமை தகைமை பெற்றவர்கள் கணக்காளர்கள், முகாமைக் கணக்காளர்கள், முகாமையாளர்கள், பொறியியலாளர்கள், வைத்தியக் கலாநிதிகள் போன்ற பலதரப்பட்ட துறைகளிலும் தகைமை பெற்றோரின் எண்ணிக்கையும் வருடாந்தம் படிப்படியாக வளர்ந்துவருவதைக் காண்கிறோம்.

கற்றோராக எம் சமூகம் பரிணமிக்க வேண்டுமென்ற எண்ணக்கரு இன்று பெற்றோர்கள் பிள்ளைகள் மத்தியில் மட்டுமல்லாமல் ஒட்டு மொத்தமாக முழுச் சமூகத்தினர் மத்தியிலும் வேரூன்றியுள்ளதைக் காணமுடிகின்றது. புலம்பெயர்ந்து வாழ்கின்ற எம்சமூக மக்கள் மத்தியில் கற்றோராக வேண்டுமென்ற முயற்சி எதுவித தூண்டுதலுமின்றி எல்லாமட்டங்களிலும் வேகமாகப் பரவிவருகிறது. ஆதியில் படித்தது போதும் நிறுத்து நிறுத்து என்று சொல்லி வேலைக்குப் போ போ என்று ஓலமிட்டவர்களின் வரிசையில் முன்னின்ற தாய்மார்கள் இன்று படிபடி என்று சொல்லிப் பிள்ளைகளுக்கு சகல வசதிகளையும் வழங்கி ஊக்கமூட்டி வருவதைக் காண்கின்றோம்.

சமுதாயத்தின் கல்வி மேம்பாட்டிற்கு நிதிமூலதனம் தொடர்ந்து வளர்க்கப்பட்டு வருவது ஒரு வரப்பிரசாதமாகும். பலவகைப்பட்ட கல்வி நன்கொடைத் திட்டதின் கீழ் கல்வி மூலதன

நிதிக்கு நன்கொடை வழங்குவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆரம்ப காலங்களில் தானும் தன் மனைவியும் தன் பிள்ளையும் தம் குடும்பமும் வளர்ந்தால் போதும் என்ற மனோபாவத்தை கொண்டிருந்த எம் சமூக மக்கள் மத்தியில் எம் சமூகம் ஒட்டு மொத்தமாக கல்வியால் உயர்ச்சி பெறவேண்டும் என்ற உன்னத நோக்கோடு நன்கொடை வழங்குகின்ற வளர்ச்சி நிலை ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியாகும். எம் சமூகத்துக்கு அப்பால் முழுத் தமிழ்ச் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்கும் உதவுகின்ற நிலை வளர்ந்து வருகின்றது.

உதாரணமாக ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். க.பொ.த சாதாரண தர வகுப்பிற்கான தகவல் தொழில்நுட்பம் பாடம் அரசாங்கத்தால் 2006 ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் தமிழ்மொழி மூலம் இப்பாடத்துக்கான எதுவித பாடநூலும் ஆரம்பகாலத்தில் வெளிவராத நிலையில் எமது எழுச்சி இயக்கத்தின் கல்விச் சபைத் தலைவரும் கணனிப் ஆசிரியருமான இ.சுகுமார் அவர்கள் அதற்கான பாடநூலை மூன்று பாகங்களாகப் பிரித்து 2006, 2007ஆண்டுகளில் வெளியிட்டு வைத்து அறிஞர்களின் பாராட்டைப் பெற்றுள்ளார். எமது எழுச்சி இயக்கம் நூல் வெளியீட்டு விழாக்களை ஏற்பாடு செய்து தகவல்தொழில்நுட்ப பாடத்தின் அவசியம் பற்றிய விழிப்பூட்டலைச் செய்தது மட்டுமல்லாமல் நான்கு இலட்சம் ரூபா வரையிலான நன்கொடைகளைத் திரட்டி கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2000 மாணவர்களுக்கு இலவசமாக அந்நூல்கள் வழங்கப்பட்டன.

தொழிற் பெயர்ச்சி

ஒரு சமூகமானது பரம்பரை பரம்பரையாக ஒரு குறித்த தொழிலையே செய்ய வேண்டுமென்ற கட்டாயத்தொழில் முறையை இல்லாதொழிப்பதை தொழிற் பெயர்ச்சித் திட்டம் இலக்காகக் கொண்டது. எமது எழுச்சி இயக்கத்தின் தொழிற் பெயர்ச்சி பற்றிய சிந்தனைகள் கோட்பாடுகள் செயற்பாடுகள் பற்றி கலாபூஷணம், சைவப்புலவர், முன்னாள் கல்லூரி அதிபர் சு.செல்லத்துரை அவர்கள் எழுதிய கட்டுரை இந்நூலில் இடம்பெற்றுள்ளது. தொழிற்பெயர்ச்சி இலக்கை அடையும் பொருட்டு பலமுனைகளிலும் முயற்சிகள் எடுக்கப்பட்டமையைக் காணமுடியும். பரம்பரை பரம்பரையாக மரபுவழித் தொழிலில் ஈடுபட்டுவந்தவர்கள் வீடுவீடாகச் சென்று தொழில் செய்யும் நிலையை மாற்றி தொழில் நிலையங்களை அமைத்து வியாபார முயற்சியாக மாற்றியமை முதல் படியான முக்கிய தொழிற்பெயர்ச்சிக்கான மாற்றமாகும். இது திருப்புமுனையின் ஆரம்பமாகும். தொழில் நிலையங்களை நேரக் கட்டுப்பாடு, சேவைக்கட்டண முறை, தொழிலாளர்களுக்கான சீருடைமுறை, தூய்மை பேணல் போன்ற வழிமுறைகளைக் கடைப்பிடித்தமை, தொழிற் தரத்தை மதிப்புறச் செய்ய எடுக்கப்பட்ட முயற்சியாகும். தொழில் நிலையங்கள் பல அழகுக்கலை நிலையங்களாக வளர்ச்சி கண்டு வருகின்றன. குளிரூட்டி வசதி, நவீன தொழிற்கருவிகளின் பாவனை, பயிற்றப்பட்ட தொழிலாளர்களின் சேவை ஆகியவற்றின் பிரயோகமும் அதிகரித்து வருகிறது. தொழிற்சங்க அமைப்புகளின் மூலம் தொழிலாளரின் தரமும் தொழிலாளர்களின் உரிமையும் பாதுகாக்கப்பட்டு சிறந்த முகாமை முறையும்

அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாற்றங்கள் தொழிற்பெயர்ச்சியை பூரணமாக்கி விட்டதாகக் கருத முடியாது. ஏனெனில் பரம்பரைத் தொழில் முறையின் கறை முற்றாக ஒழிக்கப்படாத நிலையில் எமது தொழிற்பெயர்ச்சி இலக்கு பூரணமாக அடையப்பட்டதாகக் கொள்ள முடியாது.

பரம்பரைத் தொழிலைச் செய்து வந்தவர்கள் புதிய தொழில் முறைக்கு மாறிச் செல்கின்ற நிலை எண்ணிக்கையளவில் அதிகரித்துச் செல்வதைக் காண்கிறோம். குறிப்பாக புலம்பெயர்ந்து சென்ற மக்கள் பெரும்பாலும் புதிய தொழில் முறையில் தங்களை ஈடுபடுத்தி வருவதைக் காண்கிறோம். தொழிற்பெயர்ச்சியைக் கட்டாயப்படுத்தி அமுல்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டு புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் ஐக்கியம் உண்டு. துர்அதிர்ஷ்டவசமாகப் பொருளாதார மேம்பாட்டை மட்டும் இலக்காகக் கொண்டு பரம்பரைத் தொழில் முறையில் ஈடுபடுபவர்களும் இருக்கத்தான் செய்வர். காலக்கிரமத்தில் அவர்கள் மத்தியில் நல்ல மனமாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் தொழில் மாற்றத்தை ஏற்படுத்தாவிடினும் அவர்களின் பிள்ளைகள் புதிய தொழில் முறைக்கு செல்ல வேண்டுமென்பதில் பிள்ளைகள் மட்டுமல்லாமல் பெற்றோர்களும் உறுதியாக உள்ளனர். கல்வித்தகைமை, தொழிற்கல்வித் தகைமை ஆகியவற்றின் வளர்ச்சி தொழிற்பெயர்ச்சி முயற்சியைத் துரிதப்படுத்தியுள்ளது. அன்று ஒரே குடும்பத்தின் உழைப்பாளிகள் ஒவ்வொருவரும் ஒரே தொழிலான பரம்பரைத் தொழிலைத்தான் செய்த நிலை பெரும்பாலும் மாறிவிட்டது. இன்று ஒரே குடும்பத்தில் வெவ்வேறு தொழில் செய்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. தொழில் சமத்துவமும் சமூக சமத்துவமும் வளர்ச்சி பெற இம்முறை உதவுகின்றது.

புதிய தொழில் முன்னேற்றம் வருமான முன்னேற்றம் என்பன காரணமாகப் பிற சமூக மக்களும் சிகை அலங்காரத் தொழிலில் ஈடுபட்டு வருவதைக் காணமுடியும். குறிப்பாகச் சிங்கள இன மக்கள் மத்தியில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. ஒரே சமூகத்துக்கான தொழில் என்ற நிலைமாறிவருவது ஒரு ஆரோக்கியமான சமூக மாற்றமாகும். ஒரு சமூகத்துக்கு ஒரு தொழில் என்கிற கட்டாயநிலை மாறி எவரும் எத்தொழிலையும் செய்வதற்கான மாற்றம் தீவிரப்படுத்தப்படுகிறபொழுது சாதிக் கட்டமைப்பு முறையின் அத்திவாரம் தகர்க்கப்படும். அப்பொழுதுதான் நாம் அனைவரும் ஒரே சமூகத்தவர் தமிழ்ச் சமூகத்தவர் என்ற நிலை உருவாகும்.

குடிமைத் தொழில் முறையை ஒழித்தல்

குடிமைத் தொழில் முறையை ஒழித்தல் தொடர்பான எழுச்சி இயக்கத்தின் சிந்தனைகள் கோட்பாடுகள் செயற்பாடுகள் பற்றிய கருத்துக்கள் கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களால் இந்நூலுக்கு வழங்கப்பட்ட தொழிற்பெயர்ச்சி பற்றிய கட்டுரையில் இடம்பெற்றுள்ளது.

சாதீயக் கொடுமைகளுக்கு ஆணிவேராகக் குடிமைத் தொழில்முறை இருந்து வந்துள்ளதை நாம் மறந்துவிட முடியாது. இம்முறையை ஒழிப்பதற்கு நாம் எடுத்துள்ள

முயற்சிகள் பல. தொழிலாளர் போராட்டங்களும் இன விடுதலைப் போராட்டமும் இடம்பெயர்வு நிகழ்வுகளும் கல்வித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியும் குடிமைத் தொழில் முறையை ஒழிப்பதற்கு வெற்றிகரமான முறையில் பங்களித்துள்ளன.

இவற்றின் விளைவாகச் சாதியத்தின் பெயரால் இடம்பெற்று வந்த பாகுபாடுகள் - சமத்துவமின்மை, மனித உரிமைப் பறிப்புகள் போன்ற இன்னோரன்ன கொடுமைகள் பெருமளவு ஒழிக்கப்பட்டது எனினும் எச்ச சொச்சங்கள் கறைகள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கிறது. சமூக மேம்பாட்டாளர்கள் தொடர்ந்தும் அக்கொடுமைகள் தலையெடுக்கா வண்ணம் போதியளவு விழிப்பூட்டல் நடவடிக்கைகளையும் தடுப்பு நடவடிக்கைகளையும் தொடர வேண்டிய அவசியமுண்டு.

அபிவிருத்திப் பணிகளுக்கான நிதிவளங்களை வழங்குதலும் சிக்கன சேமிப்புப் பழக்கத்தை வளர்த்தலும்.

இச்சிந்தனைகள் கோட்பாடுகள் தொழிற்பாடுகள் தொடர்பான தேசிய சேமிப்பு வங்கி பிராந்திய முகாமையாளர், திரு.அருளானந்தம் அவர்கள் வழங்கிய கட்டுரை இந்நூலில் இடம் பெற்றுள்ளது. எமது எழுச்சி இயக்கம் இருவகையான நிறுவனங்களை நிறுவி வளர்த்து வருகிறது. மக்கள் சமூகத்தின் மேம்பாட்டுப் பணிகளைத் திட்டமிட்ட முறையில் பயனாளி மக்களின் பங்களிப்புடன் முன்னெடுப்பதற்கு மக்கள் அமைப்பான சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் செயலாற்றி வருகிறது. இச்சமாசத்தின் மக்கள் மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதிவளத்தை வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் என்ற பெயரால் ஒரு சமூக வங்கி 1993ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு வளர்த்து வரப்படுகிறது. இந்நிறுவனத்தின் மூலம் பல்வகையான நன்கொடைகள் திரட்டப்பட்டு முதலீடு செய்யப்பட்டு அதன்மூலம் திரட்டப்படும் முதலீட்டு வட்டி வருமானம் அபிவிருத்திப் பணிகளுக்கு வழங்கப்படுகிறது. மூலதனத்தைப் பாதுகாத்து வளர்ப்பதோடு அபிவிருத்திப் பணிகளுக்கான நிதிவளத்தை வருமானத்தின் மூலம் பயன்படுத்துகின்ற முறையானது இந்நிதியத்தின் மூலதனத்தை விரைவாகவும் போதியளவும் வளர்ப்பதற்கான ஒரு முயற்சியாகும்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள மூன்று ஆண்டுகளுக்கான (2013-2015) அபிவிருத்தித் திட்டத்தில் நிதி மூலதனத்தை ஒருகோடி ரூபாவாக அதிகரிப்பதற்கான செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது சமூக மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதி மூலதனம் இன்றியமையாத காரணத்தாலும் நிதித் துஷ்பிரயோகங்கள் காரணத்தாலும் பல சமூக நிறுவனங்கள் மூடப் பட்ட வரலாறு உண்டு. எனவேதான் தனித்துவமான நிதிநிறுவனம் ஒன்றாக புனர்வாழ்வு கல்வி, அபிவிருத்தி நிதியம் 1993ஆம் ஆண்டு முதல் தாபித்து வளர்க்கப்படுகிறது. குறித்த சமாசமும் நிதியமும் ஒன்றுக்கொன்று அனுசரணையும், ஒத்துழைப்பும் வழங்கி வருகின்றன. சமூக மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுப்பதற்கு இருவகையான தனித்துவமான நிறுவன அமைப்பு முறையானது வேறெங்கும் காணமுடியாத ஒரு புதுமையான அமைப்பு முறையாகப் பார்க்கப்படுகிறது. இன்னொரு சிறப்பும் உண்டு. குறித்த நிதியமானது 1999ஆம் ஆண்டின் 52ஆம் இலக்கம் கொண்ட புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் சபைச்

சட்டத்தால் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாக உயரிய சட்ட அந்தஸ்தைப் பெற்றுள்ளது. இச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் குறித்த சமாசத்தையும் கூட்டிணைக்க முடியும் 1993ஆம் ஆண்டுமுதல் எடுக்கப்பட்ட விடாமுயற்சியால் கிடைத்த வெற்றியே இச்சட்டமாகும். முன்னாள் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு.சண்முகநாதன் அவர்கள் யாழ்.நாவலர் மண்டபத்தில் 2004ஆம் ஆண்டு நடைபெற்ற எமது வருடாந்த விழாவில் இச்சட்டம் பற்றிக் குறிப்பிடுகையில் யாழ் மாவட்டத்தில் வேறெந்த சமூக நிறுவனமும் இவ்வாறு தனித்துவமான பாராளுமன்றச் சட்டத்தைக் கொண்டிருக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

இந்த நிதியத்தை ஒரு சமூக வங்கியாகப் பரிணமிக்கச் செய்வதற்கான உத்தேசத் திட்டமும் மக்கள் சிக்கன சேமிப்பு பழக்கத்தை வளர்க்க வேண்டுமென்ற சிந்தனையும் வேறெந்த சமூக நிறுவனத்தினாலும் முன்னெடுக்கப்படாத முயற்சி அல்லவா? இவை முன்னோடி முயற்சிகள் அல்லவா?

வறுமை முதலான சமூகக் கொடுமைகளால் நலிவுற்றோருக்கு கைகொடுத்து அவர்களும் வளமாக வாழ உதவுதல்.

இவ்விடயம் தொடர்பான சிந்தனைகள் கோட்பாடுகள் செயற்பாடுகள் பற்றிப் பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கம் அவர்கள் வழங்கிய கட்டுரை இந்நூலில் இடம்பெற்றுள்ளது. எம் எழுச்சி இயக்கத்தின் ஆரம்ப காலம் தொட்டு இற்றைவரை ஆதரவற்ற தாய்மார்கள், தந்தையர்கள், பிள்ளைகள், உடல்வலு பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர்களுக்கு நிதி உதவி கொடுப்பனவுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இத்திட்டம் தொடர்ந்தும் செயற்படுத்துவதற்கான ஏற்பாடு எதிர்கால அபிவிருத்தித் திட்டத்தில் உண்டு. 2004ஆம் ஆண்டில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர நிவாரணத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது. 2009ஆம் ஆண்டு வன்னிப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரண நிதித் திடடமொன்று அமுல்படுத்தப்பட்டது. வன்னிப் போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் பொருட்டு நிதி ஊக்குவிப்பு திட்டமொன்று 2010ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது. போர்க்காலப் பகுதியில் காலத்துக்குக் காலம் இடம்பெயர்ந்த மக்களுக்கான அவசர உதவித் திடடங்களும் அமுல்படுத்தப்பட்டது. இவ்வாறு நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்கு எழுச்சி இயக்கம் கைகொடுத்து உதவுகின்ற ஒரு பண்பாட்டை மக்கள் மத்தியில் வளர்த்து அம்மக்களுக்கு உதவுகின்ற முயற்சிகள் தொடரப்படுவதையும் காணமுடிகிறது. எமது கல்வி ஊக்க உதவித்திட்டமானது பெரும்பாலும் நலிவுற்றவர்களுக்கும், சிறு உழைப்புள்ள குடும்பங்களுக்கும் செல்கின்றது.

உயரிய ஒழுக்க கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்த்தல்.

எம் எழுச்சி இயக்கத்தின் ஆறு அம்சத்திட்டத்தில் ஒரு பிரதான இலக்காக இது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் உயரிய ஒழுக்க பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கோடு இந்த இலக்கு

இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான சிந்தனைகள் கோட்பாடுகள் பற்றிய கட்டுரையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. இவ்விலக்கை அடைதற் பொருட்டு எடுக்கப்பட்ட முயற்சிகள் நல்ல பலனை அளித்திருப்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. சமய வாழ்வியல் முறையை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. எதிலும் நல்லதையே சிந்தித்து நல்லதையே சொல்லி, நல்லதையே செய்யவேண்டும் என்கிற பண்பை வளர்ப்பதில் போதிய கவனம் செலுத்தப்படுவதைக் காணமுடியும். சமய நிகழ்வுகள் சமூக நிகழ்வுகள், அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்திலும் உரிய பண்பாட்டு ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்றால் மிகையாகாது. நாம் தமிழர், எம் மொழி தமிழ், எமது பண்பாடு தமிழ்ப் பண்பாடு என்ற உணர்வுடனும், செயலுடனும் நாம் வாழ பழகிக் கொள்ளவேண்டும். நாம் எங்கே வாழ்ந்தாலும் இத்தகைய சிந்தனை வரும்பொழுதுதான் எம்மொழி, எம் பண்பாடு, எம் இனம் வாழ முடியும், பிற சந்ததிகளிலும் அவை வேரூன்றி வரமுடியும்.

பன்முகப் படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள்

எமது எழுச்சி இயக்கத்தின் பயனாளிகள் முதன்மைப் பயனாளிகள். சிறப்புப் பயனாளிகள், பொதுப்பயனாளிகள் என்று வரையறுத்து எம்சமூக மக்களினதும் எம் தமிழ் இனத்தினதும், எம் தேசத்தினதும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் சேவையாற்றி வருகிறோம். ஏனைய சமூக சமய மொழி கலை கலாசார பண்பாட்டுத்துறை சார்ந்த அபிவிருத்தி நிறுவனங்களுடனும் தொடர்பைப் பேணி பொது அபிவிருத்தித் திட்டங்களிலும் பங்காளியாக நினைத்து செயல்படுத்துவதையும் எமது அபிவிருத்தித் திட்டத்திலும் உள்ளடக்கியுள்ளோம்.

எமது பயனுள்ள சமூக மேம்பாட்டுத் திட்டங்களின் சாதனைகள் ஏனைய சமூக மக்களின் பாராட்டைப் பெற்றுவருகிறது. முன்மாதிரியான எமது செயற்றிட்டங்களைச் சமூகப்பணிகள் அறிஞர்கள் பாராட்டுகின்ற நிலை வளர்ந்துவருகிறது.

எமது நற்பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியும் ஊக்குவித்தும் வருகின்ற அறிஞர்கள், சமூகப்பெரியார்கள் பலரை இன்று நாம் காணமுடியும், இவை அனைத்தும் எமது எழுச்சி இயக்கத்தின் விளைவாக ஏற்பட்ட சமூக மாற்றம் அல்லவா?

எம்மக்கள் சமூகத்தின் மலர்ச்சிக்கு எமது எழுச்சி இயக்கத்தின் வகிபாகத்தின் முக்கியத்துவம்

திரு. கிருஷ்ணபிள்ளை கணேஷ்
MBA (Sri.Jaya.)
பணிப்பாளர்,
புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியம்
சந்தைப்படுத்தல் முகாமைத்துவ மதியுரைஞர்

சமூக சமத்துவ போராட்ட வரலாறும், நாவித சமூகமும்:

சமூக விடுதலை அவாவும் சமுதாய விழிப்புணர்வும் வேண்டி நிற்கும் ஒரு சமூகக் குழுமம், தூர நோக்கும் அர்ப்பணிப்பும் செயற்திறனும் மிக்க தலைமையின் கீழ் ஒன்றுபட்டு நிறுவனரீதியான ஒரு அமைப்பு முறையினூடு வழிநடாத்தப்படும் போது பெறப்படும் பிரதிபலன்கள் மிகவும் காத்திரமாக அமைந்து விடுகின்றன. இதன்வழி, இலங்கையின் வடபிரதேச நாவித சமூக மக்களின் சமூக எழுச்சியும், சமூக எழுச்சி இயக்கத்தின் தோற்றமும் முன்னெடுப்புகளும் வளர்ச்சியும் காலம் தழுவி நிற்பதைக் காண்கிறோம்.

ஈழத் தமிழர்களின் வரலாற்றுப் பாரம்பரியத்தில் நாவிதசமூக மக்களின் வரலாறும், வாழ்வியலும், வளர்ச்சிப் போக்கும் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அவர்களின் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் சமூக எழுச்சி இயக்கத்தின் வரலாறும் இது வரையில் தனித்துவமாகப் பதிவு செய்யப்படாமல் போய்விட்டது. இந்த சமூகக் குழுமத்தின் அன்றையதும் இன்றையதுமான படிநிலை வளர்ச்சிகளைச் சுருக்கமாகப் பதிவு செய்ய முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சாதி ரீதியான குடிசன மதிப்பீட்டு முறை தற்போது நடைமுறையில் இல்லாத போதும் அண்மைய பல்கலைக்கழக சமூக ஆய்வாளர்களின் மதிப்பீட்டின்படி 1980-90 காலப்பகுதியில் வடபிரதேச தமிழ் மக்களின் தொகையில் 18 சதவீதம் ஆனோர் ஒடுக்கப்பட்ட மக்கள் சமுதாயத்தைச் சார்ந்தோர் என அறியப்படுகிறது. இத்தொகையினரில் மூன்று சதவீதத்திற்கும் குறைவான சிறிய சாதிக் குழுமங்களில் ஒன்றாகவே நாவித சமூகத்தின் குடிப்பரம்பல் அண்ணளவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இருக்கு வேதத்தின் வழிவந்த வர்ணாச்சிரமத் தத்துவத்தின் படி சூத்திரர்களாக வகுக்கப்பட்டோரினுள்ளே பெரும்பான்மைச் சமூகமாக இருந்தோர் ஏனைய சிறுபான்மைக் குழுக்களின் மீது மேலாதிக்கம் செலுத்தும் கருத்தியலை நிலை நிறுவினர். பரம்பரைத் தொழில்களின் அடிப்படையில் சமூகப்பிரிவுகளை வகுத்து தமது அடிமை குடிமைகளாக பஞ்சமர் எனும் சத்-சூத்திர உட்பிரிவுச் சமூகக் கட்டமைப்பைத் தோற்றுவித்து வசதிப்படுத்திக் கொண்டனர். இது பற்றி பேராசிரியர். கா. சிவத்தம்பி அவர்கள் தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகையில், 'யாழ்ப்பாணத் தமிழர்களிடையே காணப்படுகின்ற இந்த சாதிய

உயர்கட்டமைப்புச் சித்தாந்தமானது காலம் காலமாக நம்பப்பட்ட வெற்றுப் புனைவுகளாலும் அதீத வரலாற்றுக் கற்பனைகளாலும் கட்டிக் காப்பாற்றப்பட்டு வருகிறது' எனப் பதிவு செய்கிறார்.

பல நூற்றாண்டுகளாக கல்வி, பொருளாதார, சமூக சமத்துவ நிலைகளில் பின்தள்ளப்பட்ட இந்த சமூகம் இலங்கையில் ஏற்பட்ட காலனித்துவ அரசியல் மாற்றங்களினூடு சிறிதுசிறிதாக விழிப்புணர்வு பெற்று விடுதலை வெளிச்சத்தைக் காணத் தொடங்கியது. டொனமூர் ஆணைக் குழுவினால் 1931ஆம் ஆண்டு இலங்கையின் அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்ட சர்வசன வாக்குரிமை ஒடுக்கப்பட்ட மக்களும் தமது அரசியல் உரிமையை பெற ஏதுவானது.

பஞ்சமர்கள் தம்மீதான அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களை 1920களில் ஆரம்பித்தனர் பாடசாலைகளில் ஏனைய மாணவர்களுடன் சமமாக இருக்கைகளில் அமர்ந்து படிக்கவும், உணவு உட்கொள்ளவும் சம உரிமை கோரி 1928ஆம் ஆண்டில் முதலாவது சமூக சமத்துவப் போராட்டம் நடைபெற்றது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமையை விரும்பாத சக்திகளின் எதிர் நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் பஞ்சமர்களினால் 1943ஆம் ஆண்டு வட இலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபை உருவாக்கப்பட்டது. ஆயினும் நாவித சமூகம் போன்ற சிறுசமூகக் குழுமங்களின் அபிலாஷைகளும் பிரதிநிதித்துவமும் தனித்துவமாகக் கவனத்தில் கொள்ளப்படாமல் விடுபட்டுப்போனது.

இதன் தொடர்ச்சியாக அடுத்த மூன்று தசாப்தங்களாக நிகழ்ந்த பல்வேறு சமூக அரசியல் போராட்டங்கள் மூலம் ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி, நிறுவனரீதியாக முன்னெடுக்கப்பட்டு பெரும் வெற்றிகளைச் சந்தித்தது. சாதிரீதியான பாரபட்சத்திற்கெதிரான தடுப்புச்சட்டம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு வழங்கும் வகையில் 1957ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி பொது இடங்களில் சாதிரீதியாகப் புறக்கணித்தல் குற்றமாக்கப்பட்டது. தொடர்ந்து அறுபதுகளில் அதிதீவிரமாக இடம் பெற்ற ஆலயப் பிரவேசப் போராட்டம், தேநீர்க் கடைப்பிரவேசப் போராட்டம் என்பன ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் இயக்கங்களினால் இடதுசாரிகளின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்ட போது நாவித சமூகத்தின் சமூக முன்னோடிகள் பலரும் இப்போராட்டங்களில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

சமூக எழுச்சி இயக்கத்தின் தோற்றமும், பின்னணியும்:

சிறுபான்மைத் தமிழ்ச் சமூகங்களினுள்ளேயே மிகச் சிறுபான்மையாக இருந்த நாவித சமூகத்தின் தனித்துவமான சமூகப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் நிறுவன ரீதியான ஒரு தலைமையின் அவசியம் பிற்காலத்தில் வெகுவாக உணரப்பட்டது. ஆங்காங்கே, சிறுசிறு குழுக்களாக யாழ் பிரதேசமெங்கும் சிதறி வாழ்ந்த இம்மக்கள் கூட்டத்தில் தனி நபர்களாகத் தமது சமூகத்தின் எழுச்சியை விரும்பி எதிர்பார்த்திருந்த முற்போக்கு சக்திகள் கூட்டிணைக்கப்படும் வாய்ப்பு இன்றி, செயற்பட முடியாதிருந்தனர். இந்த நிலையில்தான் தம்மைச் சுற்றிவாழும் தமது சமூக உறுப்பினர்களின் அவலங்களையும், அவசியங்களையும் தெரிந்து கொண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதுடன் அடுத்த இலக்குகளைத் தெரிவு

செய்து உரிய வழி காட்டுதலுடன் சேர்ந்து பயணிப்பதற்கு நம்பிக்கை தருவதாக எமது சமூக எழுச்சி இயக்கம் தோற்றம் பெற்றது.

தாம் வாழ்ந்த நிலம் சார்ந்தும், தொழில் ரீதியாகவும், பொருளாதார நலன் சார்ந்தும் இன்னொரு ஆதிக்க சமூகத்தை காலம் காலமாகச் சார்ந்து வாழ்ந்து கொண்டு தமக்கெதிரான அடக்குமுறைகளைத் தகர்த்து, சமூக முன்னேற்றத்திற்கான தடைக்கற்களை அகற்றி நவீன உலக மாற்றத்துடன் ஒன்றுபட்டு பயணப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தை இச்சமூகத்தின் முந்தைய தலைமுறையினர் உணர முடியாமல் போனது ஒன்றும் ஆச்சரியமான விடயமன்று. பரம்பரைத் தொழில் முறைமையின் காரணமாக வேலையில்லா நிலைமை என்றோ அல்லது பிறதொழில்கள் தேடவேண்டிய அவசியமோ இவர்களுக்கு இருந்ததில்லை. கல்வியின் அவசியம் உணரப்படாமலே, சுயதொழில் பழகுவதற்காக உயரம் எட்டாவிடினும் 'பெட்டியில்' ஏறிநின்று தொழில் பழகும் நிர்ப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட இச்சமூக இளையோரின் அன்றைய வரலாறு மிகத் துயரமானது.

இந்தப் பின்னணியில் எமது சமூகத்தின் எழுச்சித்தந்தை திரு. இ.மு. நாகலிங்கம் அவர்களின் சிந்தனையில் உருவான சமூக எழுச்சி இயக்கத்தின் தோற்றமும் அதன் இன்றைய வளர்ச்சியும் எமது சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும், மாற்றங்களும், முக்கியத்துவம் பெறுகின்றன. மிஷனரிகளின் வருகையால் பாடசாலை அனுமதி முறையிலும் கல்வி முறையிலும் ஏற்பட்ட மாற்றங்களும் இலவசக் கல்விமுறையினால் கிடைத்த நன்மைகளும் ஆரம்பகாலங்களில் இச்சமூகத்தில் கல்வி முன்னோடிகள் பலர் உருவாகக் காரணமானது திரு.இ.மு.நா. அவர்களின் தலைமையில் இவ்வாறான பல முன்னோடிகளின் கூட்டிணைவே சமூக எழுச்சி இயக்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பைத் தோற்றுவித்தது.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்:

1980ஆம் ஆண்டு மாவைபாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் வெள்ளிவிழா மகாநாட்டு மண்டபத்தில் எமது சமூக எழுச்சி இயக்கச் சிந்தனை திரு.இ.மு.நா அவர்களால் முன்மொழியப்பட்டது. நாவித சமூக மக்களின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் தடைகளாக இருக்கும் அடிப்படைப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் பொருட்டும் துரிதமான திட்டமிட்ட கல்வி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, சமூக- கலாசார வளர்ச்சி, உடல்-மனம், ஆத்மீக வளர்ச்சி ஆகியவற்றின் பொருட்டும், சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருட்டும் ஒரு பொதுவான நிறுவன அமைப்பு முறை இல்லாத குறையை நிவர்த்தி செய்வதற்காக கிராமங்கள் தோறும் சமூக முன்னேற்றக் கழகங்களையும், உச்சமட்டத்தில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தையும் கொண்டதாக இருக்க வேண்டுமென இவ்வமைப்பு பிரகடனப்படுத்தப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக 25-12-1980 அன்று கொழும்பு விவேகானந்த மண்டபத்தில் கூடிய சமூக உறுப்பினர்கள் எழுச்சி இயக்கத்தின் செயல்திட்டமாக 'ஆறு அம்சக்' கொள்கையை ஏகமனதாக அங்கீகரித்தனர். இந்த ஆறு அம்சங்களும் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டன.

1) நிறுவன மயப்பட்ட நிலமை

2) கல்வி அபிவிருத்தி

3) தொழில் வளர்ச்சியும், பொருளாதார அபிவிருத்தியும்

4) குடிமைத் தொழில் ஒழிப்பு

5) சமூக ஒருமைப்பாட்டை வளர்த்தல்

6) ஒழுக்கக் கட்டுப்பாட்டை வளர்த்தல்

கிராமங்கள் தோறும் ஆறு அம்சக்கொள்கையை விளக்குவதற்காக இருபத்தைந்திற்கும் மேற்பட்ட எழுச்சிக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. ஈற்றில் கிராமரீதியாக உருவாக்கப்பட்ட சமூக முன்னேற்றக் கழகங்களின் உச்சநிறுவனமான சமாசம் 15-04-1981 அன்று செல்வச் சந்நிதி முருகன் ஆலய வளாகத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அங்குரார்ப்பண மாநாட்டில் கூடிய ஐயாயிரத்திற்கும் அதிகமான எமது சமூக மக்கள் இக்கொள்கைத் திட்டத்தையும் நிறுவனத் தலைமையையும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

எமது சமூக எழுச்சி இயக்கத்தின் தந்தை திரு.இ.மு.நாகலிங்கம் அவர்கள் பின்வரும் விழுமியங்களின் வழியே இவ்வியக்கம் என்றென்றும் பயணிக்க வேண்டுமென்று விரும்பினார்.

1) நலிவுற்றோருக்கு உதவுதல்
2) இறைதொண்டு போல அர்ப்பணிப்புடனும், சேவை மனப்பான்மையுடனும் நிர்வாகத்தினர் பணியாற்றுதல்.
3) அரசியல் சார்பின்மை
4) அனைத்து பிற சமூக குழுமங்களுடனும் நல்லுறவை பேணுதல்.
5) சமூக சேவையாளர்களை, வாழும் காலத்திலேயே பாராட்டிக் கௌரவித்தல்.

இவ்வாறான நிர்வாகப் பெறுமானங்களின் அடிப்படையில் சமூக முன்னேற்ற கழகங்களின் சமாசமும், புனர்வாழ்வு, கல்வி, அபிவிருத்தி நிதியமும் தமது செயற்பாடுகளை இற்றைவரை மேற்கொண்டு வருவதே இச்சமூக இயக்கங்களின் நீண்ட வெற்றிப் பயணத்திற்கு காரணமாகும்.

ஆறம்சத்திட்டம் பற்றிய மதிப்பீடு:

எழுச்சி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று தசாப்தங்கள் கடந்து விட்ட நிலையில் 'ஆறம் சக்கோட்பாட்டின்' தாக்கங்களையும், விளைவுகளையும் மீளாய்வு செய்வதும் காலத்தின் கட்டாயமாகின்றது.

நிறுவனரீதியான தலைமை:

கூட்டுறவுத்தத்துவத்தின் அடிப்படையில் 1980-1981ஆம் ஆண்டுகாலப் பகுதியில் யாழ்மாவட்டத்தில் கிராம ரீதியாக சமூக முன்னேற்றக் கழகங்கள் உருவாக்கப்பட்டு அவற்றை ஒன்றிணைக்கும் தலைமை நிறுவனமாக சமூக முன்னேற்றக் கழகங்கள் சமாசம் தாபிக்கப்பட்டது. சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் நிறுவனக் கட்டமைப்பு, மகா சபை, பொது நிர்வாகசபை, தலைமை நிர்வாகசபை எனும் படி நிலைகளைக் கொண்டிருந்ததுடன், துணை அமைப்புகளாக கிராம ரீதியான மாணவர் மன்றங்களை ஒருமைப்படுத்துகின்ற வடபிரதேச மாணவர் ஒன்றியத்தையும், மாதர் ஒன்றியத்தையும், தொண்டர் சபையையும் கொண்டிருந்தது.

காலத்திற்குக் காலம் சமூகத்தின் தேவைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடவும் சமூக நிறுவனத்திற்கான சட்டரீதியான அரச அங்கீகாரத்தைப் பெறவும் உள்ளூர் அரசியல் தலைமைகளுடன் சமூகப் பிரச்சனைகளைக் கலந்துரையாடவும் நிறுவனரீதியான தலைமை, கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஆக்க பூர்வமாகப் பணியாற்றியுள்ளது. பல்கலைக்கழக சமூகத்திலும், கல்வி சமூகத்திலும் நீதித்துறைசார் அதிகாரிகளுடனான கலந்துரையாடல்களிலும் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கௌரவம் மிக்க அமைப்பாக விளங்கி வருகிறது. பிற்காலத்தில் சமாசத்தின் நிதித்தேவைகளும் சேவைகளும் விரிவானதன் விளைவாக புனர்வாழ்வு கல்வி , அபிவிருத்தி நிதியம், அடுத்த படி நிலையாக ஒரு சமூக வங்கியாக உருவாக்கம் பெற்றது. இது முகாமைப் பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள தர்மநிதி ஸ்தாபனமாக இது பணியாற்றி வருகிறது.

கல்வி அபிவிருத்தி

சமாசத்தின் கல்வி எழுச்சி இயக்கம் பெற்றோர்களிடமும் பிள்ளைகளிடமும் என இரு படிநிலை மனமாற்றங்கள் ஏற்படுத்தக் காரணமானது.'பட்டினி கிடந்தேனும் பத்தாம் வகுப்புவரை படிப்போம் படிக்க வைப்போம்,' என்ற கோஷத்தை முன்வைத்துத் தொடரப்பட்ட கல்வி எழுச்சிச் சிந்தனை இவ்விரு சாராரையும் குறித்த இலக்கை நோக்கி உந்தித் தள்ளியது. துணிவு, தன்னம்பிக்கை, வழிகாட்டல் என்ற மூன்று விடயங்கள் கல்வி ரீதியான சாதனைகளை நிகழ்த்த அன்றைய இளைய சமுதாயத்திற்கும் அவர்களின் பெற்றோருக்கும் அவசியமானது. இதற்கான பின்புலத்தை சமாசமும், புனர்வாழ்வு - கல்வி அபிவிருத்தி நிதியமும் வழங்கின. மாணவ சமுதாயம் சமூகத்தில் ஏற்கனவே வெற்றி பெற்ற ஏனைய சக மாணவர்களின் தொடர்புகளைப் பெற்றுக் கொள்ளவும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், ஏனைய கல்வி முன்னோடிகளின் வழிகாட்டலையும், ஆதரவையும் பெற்றுக் கொள்ளவும் ஏதுவானது. இத்தகைய பரஸ்பர தொடர்பாடல்களும், புரிதல்களும் தமது கல்வி முயற்சிகளைத் தொடர உற்சாக மூட்டுவதாய் அமைந்தன.

பொருளாதார முடையின் காரணமாக கல்வியைத் தொடர முடியாதோருக்கு ச.மு.க. சமாசத்தின் நிதி உதவித்திட்டங்கள் பெரிதும் துணை புரிகின்றன. எவரிடமும் தனிப்பட்ட முறையில் இரந்து நிற்காமல் சுயகௌரவத்துடன் தமது கல்வி முயற்சிகளை முன்னெடுக்க இன்றுவரை எமது நிறுவனம் இம் மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கிவருகின்றது. இவ்வாறான நடவடிக்கைகளினால் 1980களின் தொடக்கத்தில் விரல்விட்டு எண்ணக் கூடிய உயர் கல்வியாளர்களையும், பட்டதாரிகளையும் மாத்திரமே கொண்டிருந்த இச்சமூகம் இன்று வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், முகாமையாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கணனி நிபுணர்கள், தனியார் துறைசார் தொழில் நிபுணர்கள் என நூற்றுக்கணக்கான பல்வேறு தொழில் பரிமாணங்களில் பிரகாசிக்கும் கல்விச் சமூகத்தினை தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது.

தொழிற் பெயர்ச்சியும் பொருளாதார அபிவிருத்தியும்:

பரம்பரை பரம்பரையாக ஒரே தொழிலைச் செய்யப் பிறந்தோம் என்ற நிலையில் இருந்து விடுதலை பெற்றுப் பல்வேறு துறைகளிலும் தொழில் வாய்ப்புகளைப் பெற்று தொழில் பெயர்ச்சியையும் பொருளாதார அபிவிருத்தியையும் துரிதப்படுத்த எமது சமூக இயக்கம் பாடுபட்டது. தொடர்ச்சியான பிரச்சார நடவடிக்கைகளினால் ஆரம்பத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்புகள், கப்பல் துறையில் தொழில் வாய்ப்பு, பல்வேறு கைத்தொழில் முயற்சிகள், சிறுவியாபார ஸ்தாபனங்களை ஆரம்பித்தல் என சமூக உறுப்பினர்கள் பலர் முன்முயற்சிகளை மேற்கொண்டு வெற்றியும் பெற்றனர்.

வெற்றியாளர்களின் பலாபலன்கள் அவர்கள் சார்ந்த குடும்பங்களும், கிராமங்களும் செழிப்புறக் காரணமாக அமைந்தன. இவ்வாறு பொருளாதார பலத்தைப் பெருக்கிக் கொண்ட பலர் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகப் புலம் பெயரும் வாய்ப்புக் கிடைத்தபோது அவ்வாறு செல்லக் கூடிய பொருளாதார பலத்தைக் கொண்டோராய் வளம்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது. இன்றும் வடபகுதியிலும், தென்னிலங்கையிலும் சமூக உறுப்பினர்கள் பலர் திறமையான பல்துறைசார் வியாபார நிறுவனங்களை வெற்றிகரமாக நடாத்தி வருவதை கண்கூடாகக் காணமுடியும்.

மேலும் இவ்வாறு பல தொழில்களிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டோர், தமது தொழில் அனுபவங்களை புதியவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், அடுத்த தொழில் தலைமுறையினை உருவாக்கவும் உதவி வருகின்றனர்.

புத்தி ஜீவிகளாய் தொழில் புரிவோர், தாம் பெற்ற தொழில்சார் அனுபவங்களையும் தொடர்பு வலையமைப்புகளையும் பயன்படுத்தி தம்மைச் சார்ந்த ஏனைய சமூக உறுப்பினர்களின் மேம்பாட்டிற்கும் காரணிகளாய் விளங்குவதைக் காண முடிகிறது.

குடிமைத் தொழில் ஒழிப்பு

சமூகத்தின் சாபக்கேடாக விளங்கிய குடிமைத் தொழில் முறைமையை ஒழிப்பதில் பல சவால்களை சமூகத்தின் உள்ளேயும் வெளியேயும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இருப்பினும் தொடர்ச்சியான தீவிர பிரச்சார நடவடிக்கைகளும், தனிப்பட்ட கலந்துரையாடல் களும், முன்னெடுப்புகளும், அத்தொழில் செய்வோரிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தத் துணை புரிந்தது. கணிசமான தொகையினர் இம்முறைமையைக் கைவிட்டனர். புதிதாக குடிமைத் தொழிலில் ஈடுபட முனைந்தோர் தடுக்கப்பட்டனர். பின்னர் ஏற்பட்ட உள்ளூர் அரசியல் நிர்வாக சூழ்நிலைகளும் முழுமையாக இம் முறைமை ஒழிந்து போகக் காரணமானதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுதல் பொருத்தமானதாகும். பல நூற்றாண்டுகளாகக் குடிமைகளாகக் கருதப்பட்ட இச் சமூகக் குழுமம் இறுதியில் குடிமைத் தொழில் முறைமையிலிருந்து விடுதலை பெற்றமைக்கு எமது சமூக இயக்கத்தின் கோட்பாடுகளும் செயற்பாடுகளும் அடியெடுத்துக் கொடுத்தமை மிகவும் ஆழமாக பதிவு செய்யப்பட வேண்டியதாகும்.

மேலும் சுயதொழில் செய்வோர், தொழில்சார் நிர்வாக அடிப்படையில் தொழில் ஸ்தாபனங்களுக்குத் தமது வாடிக்கையாளர்களை வரவழைத்து, கட்டண அடிப்படையில்

சுய கௌரவத்துடன் சேவையாற்ற வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. இதன் பயனாய் குடிமைத் தொழில் முறைமையை கைவிட்டு அத்தொழிலில் ஈடுபட்ட சமூக உறுப்பினர்கள் பலர் தொழில் நிலையங்களை ஆரம்பித்தமையும் இங்கு சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும்.

சமூக ஒருமைப்பாட்டை வளர்த்தல்

சமூக மக்களின் ஒற்றுமையை வலுவாகப் பேணும் பொருட்டும், கிராம ரீதியாக சிறுசிறு குழுக்களாகச் சிதறி வாழும் மக்கள் மத்தியில் உள்ள உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனும் உட்பிரிவுகள், சமயப் பிரிவினைகள் தொழில் போட்டி பிரிவினைகள் என்பவற்றை நீக்கித் தொடர்பற்று இருக்கும் கிராமங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி ஒட்டுமொத்த சமூகத்தையும் ஒன்றாக அணி திரட்ட வேண்டும் என்பதே இக்கோட்பாடாகும்.

இந்தக் கோட்பாட்டின் அமுலாக்கத்தில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் உடனடி வெற்றி கண்டது. இதன் பயனாக சகல கிராமங்களும் தொடர்புபடுத்தப்பட்டு எதுவித ஏற்றத்தாழ்வுகளும் இன்றி திருமண உறவுகளும், சமய சமூக உறவுகளும் மேலோங்கி ஒருமித்த சமூகக் குழுமமாக எமது சமூகம் மாறியுள்ளது.

பேராசிரியர்.கா.சிவத்தம்பி அவர்கள் தமது சமூக ஆய்வுக்கட்டுரையொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். சமநிலை கொண்ட சாதிக்குழுமங்கள் ஒரு பெரும் சமூகச்சாதி வட்டமாக மாறுவதையும் சாதிமுறையின் உள்ளே காணப்பெற்ற 'பகுதிகள்' எனும் கூறு முன்னர் பெற்றிருந்த இடத்தினை இழந்து பெரும் குழுமங்களாக இயங்கிவருவதை காணலாம். அவரின் இந்த கருத்தியலுக்கு இன்னொரு உதாரணமாக எமது சமூக ஒருமைப்பாடும் விளங்குவதை காணலாம்.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பது போல சமூகத்தின் கூட்டிணைவு பரஸ்பரம் உறவுகளை வலுக்கச்செய்து, தொடர்பாடல்களை அதிகரித்து, அறிவு வளங்களை பகிர்ந்து மாறிவரும் சமூக, பொருளாதார, தொழில்நுட்ப, அரசியல் நிலமைகளை நமக்கு சாதகமாக்கி சமூகத்தின் துரித மேம்பாட்டிற்கு பயனளிப்பதை நிதர்சனமாக காணலாம்.

நிதி உதவித்திட்டங்களும், பயன்பாடும், பலாபலன்களும்

சமூக எழுச்சி இயக்கத்தின் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளும், நிதி முகாமைத்துவமும், நிதிச் சேவைகளும் ஆழ்ந்து மதிப்பீடு செய்யப்பட வேண்டியவை, சகல படிநிலைகளிலும் உள்ள ஒவ்வொரு சமூக உறுப்பினரையும் சமூக அபிவிருத்தியின் பங்காளிகளாக்கும் வகையில் உண்டியல் நிதி சேகரிப்புத்திட்டம் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. சுயதொழில் புரியும் தொழிலாளர்களும், முதலாளிகளும் நாளாந்த உழைப்பில் சிறுதொகையை வழங்கி உண்டியல் முறை மூலம் சமூக கல்வி நிதியத்தைத் தோற்றுவிக்க அடிகோலினர். பின்னர் அதிர்ஸ்டலாப சீட்டிழுப்பு மூலம் செல்வசந்நிதி அங்குரார்ப்பண மகாநாட்டில் ரூபா ஒரு இலட்சம் வரை சேகரிக்கப்பட்டது. இதனை ஆரம்ப முதலீடாகக் கொண்டு கொழும்பிலும், யாழ்குடாநாட்டிலும் வாழும் சமூக உறுப்பினர்களினதும், நலம் விரும்பிகளினதும், நன்கொடைகள் பெறப்பட்டன. வெளிநாடுகளில் தொழில் புரியும் சமூக உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகளும் நிதிப்பங்களிப்புச் செய்து ஊக்குவித்தனர்.

தொடர்ந்து மறைந்த அன்புள்ளங்களின் ஞாபகார்த்த நிதிக்கொடைத் திட்டம், திருமணநாள் நிதிக்கொடைத் திட்டம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டு நிதிவளம் விசாலிக்கப்பட்டது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் தேசிய வங்கிகளிலும் நிதி நிறுவனங்களிலும் நிலையான வைப்புகளில் முதலிடப்பட்டும், நம்பிக்கை முதலீட்டுப் பொருளாளர்கள் மூலம் முதலீடு செய்யப்பட்டும், பெறப்பட்ட வட்டி வருமானம் கல்விச் சேவைகளையும், நலிவுற்றோருக்கான உதவிகளை வழங்கவும், அவசர நிவாரண நடவடிக்கைகள் மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பின்வரும் கல்வி மற்றும் சமூகநல உதவி நன்கொடைத் திட்டங்களை செயற்படுத்த முதலீட்டு வருமானம் பயன்படுத்தப்படுகின்றது.

அ) கல்வி நிதி உதவித் திட்டங்கள்:

1) நலிவுற்ற பிள்ளைகளுக்கான நன்கொடைத்திட்டம்.
(க.பொ.த. சாதாரண தரம் வரை)

2) நலிவுற்ற பிள்ளைகளுக்கான நன்கொடைத்திட்டம்.
(க.பொ.த. உயர்தரம் வரை)

3) உயர்கல்விக்கான கல்வி உதவித்திட்டம்
(பல்கலைக்கழக கல்வி, பல்கலைக்கழக கல்லூரி கல்வி, வெளிவாரிப் பட்டப்படிப்பு, தொழில்சார் கல்வி, உயர் பட்டப் படிப்பு)

4) க.பொ.த. (உயர்தரம்/ சாதாரணதரம்), புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள், ஊக்குவிப்புகள்.

ஆ) சமூக நல உதவித்திட்டங்கள்

1) நலிவுற்ற தாய்மாருக்கான உதவி நன்கொடைத்திட்டம் (விதவைகள், உழைப்புச் சக்தியை இழந்த கணவரை உடையோர், வேறு உதவியின்றி வாழ்வோர்)

2) நலிவுற்ற வயோதிபர்களுக்கான உதவி நன்கொடைத்திட்டம். (அங்கவீனம், மனநோய், உடல்நலக்குறைவு, பொருளாதார உதவியின்றி தவிப்போர், சமூக சீர்திருத்த நடவடிக்கைகளுக்காக குடிமைத் தொழில் முறையைக் கைவிட்ட மையால் வருமானம் இழந்தோர்)

இடம் பெயர்ந்தோர்களுக்கும் இயற்கை அழிவுகளால் பாதிக்கப் பட்டோருக்குமான உதவி நன்கொடைத்திட்டம்.

அவசர நிவாரண உதவிகள் வழங்குதல். (உணவு, உடை, மருந்து வகைகள், பாடசாலை மாணவர்களுக்கு புத்தகங்கள் உபகரணங்கள் வழங்குதல்)

அரசினதும் தொண்டர் நிறுவனங்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்ள ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் வழங்குதல்.

இத்திட்டங்களின் பயனாளிகளின் தொகை படிப்படியாக அதிகரிக்க நிதிவளத்தைப் பெருக்க வேண்டிய அவசியமும் கட்டாயமானது. எழுச்சி இயக்கத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் தொண்டர்களாகவே ஊதியமின்றி சேவை அடிப்படையில் அர்ப்பணிப்புடன் இன்றுவரை பணியாற்றி வருகின்றனர். நிர்வாக செலவினங்களை இயன்றவரை தவிர்த்து, இறுக்கமான நிதிப் பாதுகாப்பினை உறுதி செய்யும், வகையில் எமது எழுச்சி இயக்கத்தின் நிதிக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

புனர்வாழ்வு– கல்வி அபிவிருத்தி நிதியம்

நிதிவளர்ச்சிச் செயற்பாடுகளின் அடுத்த படிநிலையாக திரு.இ.மு.நா. அவர்களின் சிந்தனையில் உருவாக்கம் பெற்ற சமூக வங்கியாம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் 04.06.1993 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. திரு.இ.மு.நா.அவர்களின் நிதி முகாமைத்துவ நிபுணத்துவம், பெருமதிப்புக்கும், சமூக நம்பிக்கைக்குமுரிய சீரிய தலைமைத்துவம், அரச அதிகாரிகள், அறிஞர் சமூகத்திலிருந்த செல்வாக்கு, பாராளுமன்ற உறுப்பினர்களுடனான தொடர்புகள் எனும் பெறுமதிமிக்க குணாதிசயங்கள் இவ் இமாலய முயற்சியை எத்தனையோ இடர்கள், தாமதங்களுக்கு மத்தியிலும் சாத்தியமாக்கியது. இலங்கைப் பாராளுமன்ற சட்டமூலம் வழியாகக் கூட்டிணைக்கப்பட்ட [Parliament of the Democratic Socialist Republic of Srilanka (Act.No.52 of 1999)Board of Directors of the Rehabiliation and Education Development Fund (Incorporation)] தர்மநிதி நிறுவனமாக இந்நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், பங்குநிதி முதலீட்டுத் தத்துவத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டு மிகக் கணிசமான நிதிப்பலத்தை தன்னகத்தே கொண்டு கடந்த 20 ஆண்டுகளில் அளப்பரிய சேவைகளை ஆற்றி வருவதை அனைவரும் அறிவர்.

பாராளுமன்ற சட்ட அந்தஸ்தை பெற்றுள்ள 'புனர்வாழ்வு-கல்வி அபிவிருத்தி நிதிய பணிப்பாளர் சபை'(Act No 52 of 1999) சட்டமூலம் பற்றி விரிவான மதிப்பீடு செய்த கூட்டுறவுத்துறை கல்வியியலாளரும், சிரேஷ்ட முகாமைத்துவ ஆலோசகருமான திரு. சி. கோணேஸ்வரன் அவர்கள் பின்வருமாறு பதிவு செய்கின்றார்:

"பொதுமக்களுக்கு சேவை செய்வதற்கு பல்வேறு சமூக அமைப்புக்கள் இன்று இயங்கி வருகின்ற பொழுதிலும் இவ்வெல்லா அமைப்புகளும் தனித்துவமான அந்தஸ்தை உடையனவல்ல.' பல சமூக நிறுவனங்கள் பொதுப் பொருளாதார சமூக நல முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டங்களின் கீழ் இயங்குகின்றன. பல அமைப்புகள் பல்வேறு சட்டங்களின் கீழ் பொதுநல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. ஆனால் இச்சட்டம் குறித்த மக்கள் சார்ந்த சமூகத்திற்கு உதவி நல்கக்கூடிய வகையில் தனித்துவமான சிறப்பம்சங்களைக் கொண்டு இயற்றப்பட்டிருந்தது, இச்சமூக நோக்கங்களை ஈடேற்ற முயற்சித்த ஏற்பாட்டாளர்களுக்கு கிடைத்த ஒரு வெற்றியென்றே கருத வேண்டும்."

புனர்வாழ்வு-கல்வி அபிவிருத்தி நிதிய நிர்வாக கட்டமைப்பு பின்வருமாறு தொழிற்படுகிறது:

1) நிதியத்தின் நன்கொடை பங்குகள் வாங்கிய பங்குதாரர்களை மட்டும் கொண்ட நிதியத்தின் பொதுச்சபை

2) பொதுச்சபையின் தீர்மானங்களுக்கமைவாக நிதியத்தின் நிர்வாகத் தொழிற்பாடுகளுக்கு பொறுப்பான 15 பேரைக் கொண்ட இயக்குனர் சபை.

2.1) நிரந்தர இயக்குனர் சபை அங்கத்தவர்கள்-ஐவர்

2.2) சமூக முன்னேற்ற கழகங்களினால் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் - இருவர்

2.3) நிதியத்தின் பங்குதாரர்களை கொண்ட பொதுச் சபையால் தெரிவு செய்யப்படுவோர்-எண்மர்

திரு.இ.மு.நா. தலைமையில் முகாமைத்துவ நிதிப்பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படும் இந்நிதியம் மேற்குறித்த பல விசேட நிதித் திட்டங்களை செயற்படுத்துவதுடன், காலத்துக்காலம் புதிய முதலீட்டு முயற்சிகளை மேற்கொண்டு வட்டி வருமானத்தை அதிகரிக்கும் பணிகளில் ஈடுபடுவதுடன் முதலுக்கு எதுவித பங்கமும் வராது பாதுகாத்து வருவதும் மிகவும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

எமது சமூக எழுச்சி இயக்கத்தின் நிர்வாகக் கட்டமைப்புகளான பிரதேசவாரியான ச.மு.கழகங்கள், ச.மு.க. சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் என்பன சமூக மேம்பாட்டிற்காகப் பாடுபடும் தொண்டு நிறுவனங்களின் வரலாற்றில் முன்மாதிரியாகக்(MODEL) கருதப்பட வேண்டியவை ஆகும். ஏனைய சமூக அமைப்புகளுக்கும் சமூகவியல் ஆர்வலர்களுக்கும் இம்முன்மாதிரி அமைப்பு பல முன்னுதாரணங்கள் சிறந்த தலைமைத்துவத்தின் வழியும், செயற்பாட்டின் வழியும் ஆய்ந்தறிவதற்கு களம் பரப்பியுள்ளது.

சமூக வளர்ச்சியில் இளைஞர் எழுச்சியும், மாணவர் சமூகத்தின் பங்களிப்பும்

1920 ஆம் ஆண்டில் பாடசாலைகளில் சக மாணவர்களுடன் சமத்துவமாக இருக்கைகளில் அமர்ந்து படிக்கவும் உணவு உட்கொள்ளவும் கோரி ஆரம்பிக்கப்பட்ட சமூகப்போராட்டத்தில் தொடங்கி, 1950 களின் தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டம், 1960 களின் ஆலய பிரவேச போராட்டம் என பல்வேறு சமூக சமத்துவத்திற்கான போராட்டங்கள் எமது சமூகத்தின் விடியலுக்கும் தூண்டுகோலாக அமைந்தன. 1970 களின் பிற்பகுதியில் தமிழ் தேசிய அரசியல், தமிழர்கள் அனைவரும் சாதி, மத, வகுப்பு பேதங்களை ஒதுக்கி விட்டு ஒன்றுபட வேண்டும் என்ற நிலையினை உருவாக்கியமையால் சமூக சமத்துவப் போராட்டங்கள் வலுவிழந்து போயின. ஆயினும் இன்றும், நீறுபூத்த நெருப்பாக சமூக அடக்கு முறைகளும், அவற்றுக்கு எதிரான உணர்வுகளும் கனன்று கொண்டிருப்பதையும் நாம் மறைத்து விடமுடியாது.

கடந்த சில தசாப்தங்களில் யாழ் சமூகத்தில் நிலவுகின்ற சாதிப்பாகுபாட்டு முறைமை, யுத்த சூழ்நிலைகள், இடப்பெயர்வுகள், புலம் பெயர்வுகள், உள்ளூர் அரசியல் நிர்வாக அழுத்தங்கள் காரணமாக, பல மாறுதல்களைச் சந்தித்திருந்த போதும் இன்னும் சமூக, கலாசார, பொருளாதார வாழ்வியலில் மறைமுகமாகவோ நேரடியாகவோ தாக்கம் புரிவதை அவதானிக்க முடிகிறது. இந்தப் பின்னணியில் நாவித சமூகத்து மாணவர்களின் கல்வி மேம்பாடும் இளைஞர் சமுதாயத்தின் முற்போக்கு சிந்தனைகளும் செயற்பாடுகளும் ஆராயப்பட வேண்டியதாகின்றன.

பாடசாலைகளில் கல்வி கற்கும் போது உள்ளேயும் வெளியேயும் புறக்கணிப்புகளுக்கும், பேதங்களுக்கும் உட்பட்டு கல்விச் செயற்பாடுகளில் முழுமையாகப் பிரகாசிக்க முடியாது போனோர் ஒருபுறம், தமது சாதி அடையாளங்களை மறைத்துத்தான் தமது இருப்பை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற மனோநிலையுடன் போராடுவோர் மறுபுறம் என பல்லாண்டுகளாக இச்சமூகத்தின் மாணவர் சமுதாயம் திணறியதென்பது வரலாறு.

மிஷனரிப் பாடசாலைகளின் ஆதரவும், சாதீயத்திற்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட பிறசமூகப் புத்திஜீவிகளின் ஆதரவும் ஆரம்பத்தில் பல கல்வித்துறை வெற்றியாளர்கள் இச் சமூகத்தில் தோன்ற வழி சமைத்தன. இவ்வாறு ஒவ்வொரு கிராமங்களிலும் ஆங்காங்கே தோன்றிய கல்வித் தகுதி பெற்ற சமூக முன்னோடிகள் உணர்வு பூர்வமாக அடுத்த தலைமுறையினரின் கல்வி வளர்ச்சியில் தனிப்பட்ட முறையில் பெரும் செல்வாக்குச் செலுத்தியும் வழி நடாத்தியும் தொடர்ச்சியான கல்விப் பரம்பரைகள் உருவாக உதவினர். ஆனால் எமது சமூக எழுச்சி இயக்கத்தின் தோற்றத்தின் பின்னர், இளைய சமுதாயத்தின் கல்வி விழிப்புணர்வும், சாதிக்க வேண்டும் என்ற ஆவலும் முழுமையாக சமூக மயப்படுத்தப்பட்டது.

இடதுசாரி சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டோர், தமிழ் தேசிய அரசியல் அவாக் கொண்டோர், கிராமரீதியாக இயங்கிய சனசமூக நிலையங்கள், கோவில்கள் போன்ற சமூக நிறுவனங்களின் நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், தனியாக சிறு கிராமங்களில் தலைமைத்துவமும் வழிகாட்டலும் வழங்கியோர் எனப் பலதரப்பினரும் ஒன்றுபட்டு சமூக எழுச்சிக்காகப் பாடுபட வழி பிறந்தது. இதன் பயனாக முற்போக்குச் சிந்தனை மிக்க இளைஞர் தலைமுறையின் ஆர்வமும், செயற்றிறனும் உழைப்பும் ஒருமித்து, சமூக விடுதலைக்காக அர்ப்பணிக்கப்பட வாய்ப்புக் கிட்டியது.

பழைய தலைமுறையினரிடையே சமூக விடுதலை விழிப்புணர்வு சிந்தனைகளை விதைக்கவும், சமகால அரசியல் சமூக விஞ்ஞான மாற்றங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தி மனமாற்றத்தை ஏற்படுத்தவும், மாணவ சமுதாயத்திடம் கல்விச் சாதனைகளின் அவசியத்தை உணர்த்தியும் அதனூடாக சமூக கௌரவத்தை மேம்படச் செய்து சமூகவிடுதலையைத் துரிதப்படுத்தவும், புரிதலை ஏற்படுத்தவும் அன்று முன்னோடிகளாக விளங்கிய இளைஞர் சமுதாயம் நிகழ்த்திய பிரசாரங்களும், செயல் திட்டங்களும் என்றென்றும் நினைவில் கொள்ளத்தக்கன.

தமது குடும்பம், தமது கிராமம் என குறுகிய எல்லைகளுக்குள் தம்மை சுருக்கிக் கொள்ளாது, தொடர்பற்றிருந்த ஏனைய கிராமங்களையும் அணுகி ஒற்றுமையையும், சமூக விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதில் அன்றைய இளைய தலைமுறையினர் அர்ப்பணிப்புடன் இயங்கினர். பரீட்சைகளுக்கு தயாராகும் மாணவர்களுக்கு உதவுவது, தொழிற் பெயர்ச்சியில் ஈடுபடுவோரை ஊக்குவிப்பது, குடிமைத் தொழில் ஒழிப்புப்பிரச்சாரம் போன்ற முற்போக்கு நடவடிக்கைகளில் விருப்புடன் தொண்டாற்றினர்.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினால் நடாத்தப்பட்ட கல்விப் போட்டிகளும், பேச்சு, கட்டுரை, பொது அறிவுப் போட்டிகளும், கைப்பணிப் போட்டிகளும், கண்காட்சியும், நாடகப்போட்டிகளும், கலைவிழாக்களும் பல திறமைசாலிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்து, ஊக்கமும் உற்சாகமும் அளித்தன. தமது ஆற்றல்களை புடம்போட்டு வளர்த்துக்

கொள்ளவும், தகுந்த வாய்ப்புகளின்றியிருந்தோர், தன்னம்பிக்கையுடன் தொழில்சார் திறனாளிகளாக மாறவும் வழிபிறந்தது.

பல்கலைக்கழக கல்வியின் பின் பட்டதாரிகளாக வெளியேறி சிறப்புத் தொழில்கள் புரிவோர் ஒருபுறம், பாடசாலைக்கல்வியின் பின் தொழில்சார் கற்கை நெறிகள் பயின்று சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெற்று உயர்ந்தோர் மறுபுறம் என இச் சமூகத்தின் இளைய சமுதாயத்தினர் கடந்த மூன்று தசாப்தங்களில் பெரு வெற்றிகளைப் பெற்றுள்ளனர். இத்தகைய வளர்ச்சிப் போக்கு அண்மைக்காலங்களில் மேலும் வேகம் பெறுவதை அவதானிக்கலாம். இலங்கையிலும், வெளிநாடுகளிலும் இவர்கள் தம் திறமைகள் மூலம் மென்மேலும் பிரகாசிப்பதைக்கண்டு சமூகம் பெருமிதம் கொள்கிறது.

சமூக எழுச்சி இயக்கச் சிந்தனையால் கவரப்பட்டு தம்மை ஈடுபடுத்திக் கொண்டோர் பலர் தமது மானுடநேயப் பரப்பினை விரிவுபடுத்தி பிற்காலத்தில் தமிழ் தேசிய அரசியலுக்கு பங்களித்திருந்தமையும் இங்கு பதிவு செய்யத்தக்கதாகும்.

எமது சமூக இயக்கத்தின் பிதாமகர் திரு.இ.மு.நாகலிங்கம் அவர்கள் காட்டிய எழுச்சிப்பாதையில் வீறுநடை போட்டு பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் சமூக மாறுதலுக்காகப் பெருந்தொண்டாற்றியுள்ள இந்நிறுவனம் எதிர்காலத்தில் மாறிவரும் அரசியல் சமூக நிலைமைகளுக்கு ஏற்ப புதிய வழிகளை தேர்ந்தெடுக்க கடமைப்பட்டுள்ளது.

இன்றுவரை சமூக ஒற்றுமையும், கட்டுக்கோப்பும் கலையாது தன்னிகரற்ற தலைமையின் கீழ் ஒன்றுபட்டுள்ள எமது சமூகம் வருங்காலத்திலும் தனது முன்னேற்றத்திற்கான அடுத்தத் படிநிலைகளை தெளிவாகவும், சரியாகவும் தெரிவு செய்து பயணிக்க அடுத்த தலைமுறையினர் முன்வருவர் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

References :

1. Dr. Sivathamby K, "Tamils of Srilanka"– An Ethnological Introduction- 1989

2. Kalinga Tudor Silva, P.P.Sivapragasam, Paramsothy Thanges, "Casteless or Caste – blind? Dynamics of concealed caste Discrimination, Social Exclusion and Protest in Srilanka, Colombo- Chennai, Kumaran Book House,2009

3. Koneswaran S, " Review of Parliament Act of Srilanka (No.52 of 1999) Board of Directors of the Rehabilitation and Education Development Fund (Incorporation)", 2000

4. Various Publications of Federation of Community Advancement Societies (FOCAS) and Rehabilation and Education Development Fund (REDEF), 1981-2012.

சமாசத்தினதும் நிதியத்தினதும் மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டம் (2013 – 2016)

திரு.வீ.குகநேசன்
பொதுச் செயலாளர்
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

2010 - 07 - 18ஆம் திகதியன்று மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்திலும் 2012 - 01 - 22ஆம் திகதியன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்திலும் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து நடாத்திய ஆண்டு விழாக்களில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் 22-03-2012ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற சமாசத்தின் மகாசபைக் கூட்டத்தில் எதிர்காலத்திற்கான மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டது.

அத்திட்டமே சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினதும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் மூன்று ஆண்டு அபிவிருத்தித் திட்டமாகப் (2013-2016) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டவை பின்வருமாறு

1.0 சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் முகாமைக் கட்டமைப்பு முறையை மறுசீரமைத்தலும் வலுப்படுத்தலும்

1.1 யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள சமாசத்தின் பிராந்திய சபைகளை வலுப்படுத்தல்

யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள மானிப்பாய் பிராந்திய சபை, நல்லூர் பிராந்திய சபை, தென்மராட்சி பிராந்திய சபை, வடமராட்சி பிராந்திய சபை, வலி கிழக்குப் பிராந்திய சபை, அத்துடன் கொழும்புப் பிராந்திய சபை ஆகிய ஆறு சபைகளையும் வலுப்படுத்திப் பிராந்திய மக்களின் பங்களிப்பைக் காத்திரமான முறையில் பெறும் பொருட்டு அவ்வப் பிராந்தியங்களில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்ட முதன்மை பயனாளிகள் ஒவ்வொருவரையும் அவ்வப் பிராந்திய சபைகளில் அங்கத்தவர்களாகச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். பிராந்திய மட்டத்திலான புதிய பிராந்திய பொதுச் சபையை அமைத்த பின் பிராந்தியங்களுக்கான முகாமைச் சபைகள் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு பிராந்திய முகாமைச் சபையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் சமாசத்தின் அதிஉயர் அதிகாரம் கொண்ட சமாசத்தின் மகாசபையின் அங்கத்தவர்களாக இருப்பார்கள்.

1.2 மானிப்பாய் பிராந்திய சபையை மீளமைத்தல்

மானிப்பாய் பிராந்திய சபையானது தீவுப்பகுதி உட்பட நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்டிருப்பதால் மீளக்குடியமர்த்தல் செயற்பாடுகளை மதிப்பீடு

செய்து பொருத்தமான பிரதேசங்களில் புதிய பிராந்திய பொதுச் சபையையும், புதிய பிராந்திய முகாமைச் சபையையும் அமைத்தல் வேண்டும்.

1.3 ஏனைய மாவட்டங்களுக்குச் சமாசத்தின் முகாமைக் கட்டமைப்பை விஸ்தரித்தல்

தற்பொழுது சமாசத்தினதும் நிதியத்தினதும் சேவைத் தொழிற்பாடுகள் கிளிநொச்சி மாவட்டம், வவுனியா மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், திருகோணமலை மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு வருவதால் அம்மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பிராந்திய சபையையும், முகாமைச் சபையையும் அமைத்துச் சமாசத்தின் மகாசபையில் அம்மாவட்டங்கள் பிரதிநிதித்துவம் பெறச் செய்ய வேண்டும்.

1.4 ஆயுட்கால அங்கத்தவர் பட்டியலைப் புதுப்பித்தல்

சமாசத்தின் மகாசபைக்கான கௌரவ ஆயுட்கால அங்கத்தவர் பட்டியல் புதுப்பிக்கப்படல் வேண்டும்.

1.5 சமாசத்தின் மகாசபையை மீளமைத்தல்

புதிய பிராந்திய முகாமைச்சபைகள் அமைக்கப்பட்டதும் சமாசத்தின் மகாசபையைக் கூட்டி சமாசத்தின் புதிய பொதுநிர்வாக சபையும் உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட வேண்டும்.

2.0 புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் முகாமைக் கட்டமைப்பை வலுப்படுத்தல்

2.1 புனர்வாழ்வுகல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கும் பலர் தற்பொழுது வெளிநாடுகளில் வசித்து வருவதால் அவர்களின் இடங்களுக்குப் பதிலாகப் புதியவர்களை நியமிப்பதற்கு அல்லது பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

3.0 நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையை அமைத்தல்

3.1 சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினதும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் தொழிற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் வழிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரம் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றை அமைக்க ஏற்பாடு செய்தல்.

3.2 நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் போது பின்பற்ற வேண்டிய விடயங்கள்

3.2.1. சமூகப்பற்றும், அர்ப்பணிப்பும், திறமையும், சமூக மதிப்பையும் பெற்றவர்களை அடையாளப்படுத்தி அவர்களை நிதியத்தின் சிறப்பு நன்கொடைப் பங்குதாரர்களாக்க வேண்டும். இதுவே நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையை அமைப்பதற்குச் செய்ய வேண்டிய ஆரம்பக்கட்ட வேலையாகும்.

3.2.2. சிறப்புப் பங்குதாரர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் பிரதேச பொதுச்சபை அமைக்கப்பட வேண்டும்.

3.2.3. பிரதேச பொதுச் சபைகளின் பிரதிநிதிகளை அங்கத்தவர்களாகக் கொண்டு சமாசத்திற்கும் நிதியத்திற்கும் பொதுவான நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்று அமைக்கப்பட வேண்டும்.

3.2.4. புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட ஐவர்களை நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் ஆயுட்கால அங்கத்தவராக இருக்க ஏற்பாடு செய்யலாம்.

3.2.5. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை 15 அங்கத்தவர்களுக்கு மேற்படாது இருக்க வேண்டும்.

3.2.6. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையை நிறுவுவதற்கான அமைப்பு குழு

சிறப்பு நன்கொடை மூலதனப் பங்குதாரர்களைச் சேர்த்தல் அப்பங்குதாரர்களைக் கொண்ட பிரதேச பொதுச் சபைகளை அமைத்தல். அப்பிரதேச சபைகளின் பிரதிநிதிகளை நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு தெரிவு செய்தல் ஆகிய பொறுப்புக்களை நிறைவு செய்வதற்குப் பொறுப்பாகப் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்படும் அமைப்புக்குழு பொறுப்பாக இருக்கும். அத்துடன் ஆலோசனைச் சபை ஒன்றும் நிதியத்தால் அமைக்கப்படும். நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட ''நடைமுறைப் பிரமாணங்களுக்கு'' அமைவாக மேற்கூறப்பட்ட அமைப்புக் குழுவும் ஆலோசனைக் குழுவும் செயற்பட வேண்டும்.

3.2.7. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கான அதிகாரங்கள்

அ. முதலீட்டுக்குழு ஒன்றை அல்லது இரண்டை அமைத்து நிதி முதலீட்டுத் தொழிற்பாடுகளைச் செய்ய அதிகாரமளித்தல்.

ஆ. நிலையான சொத்துக்களைக் கொள்வனவு, விற்பனை, மாற்றம் செய்வதற்கான அங்கீகாரம் அளித்தல்.

இ. வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கும் சிறப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அங்கீகாரம் அளித்தல்.

ஈ. சமாசத்தினதும், நிதியத்தினதும், செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள், ஆகியவற்றை எழுத்து மூலம் பெறுவதற்கும் சம்பந்தப்பட்டவர்களை நேரில் அழைத்து விளக்கங்களைப் பெறுவதற்கும் நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்கு அதிகாரம் இருக்கும்.

4.0 நிதிவளத்தைப் பெருக்குதல்

4.1 நிதிவளத்தைப் பெருக்குவதற்கான அவசியமும் தேவையும்

சமாசத்தின் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதித் தேவையானது குறைந்த பட்சம் இருபது இலட்சம் ரூபா அளவில் தேவைப்படுகிறது தற்பொழுது இருப்பிலுள்ள

மூலதனத்தின் மூலம் பெறக்கூடிய வருடாந்த முதலீட்டு வருமானம் அண்ணளவாக 6 லட்சம் ரூபாவிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பற்றாக்குறை நிதியை ஈடு செய்யும் பொருட்டு வருடாந்தம் விசேட நன்கொடைகளைத் திரட்டுகின்ற அவசர நிதி சேகரிப்பு முறையைத் தொடர்ந்தும் கையாளுவதிலுள்ள நிச்சயமற்ற தன்மையைத் தவிர்த்து நிரந்தரமான முறையில் வருடாந்தம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவையான நிதிவளத்தைப் பெற்றுக் கொள்ளும் வண்ணம் நிதியத்தின் முதலீட்டுக்கான மூலதனத் தொகையைக் குறைந்த பட்சம் ஒருகோடி ரூபாவால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 நிதிவளத்தைப் பெருக்குவதற்கான நிதிமூலங்கள்

அ. *சாதாரண நன்கொடைப்பங்கு மூலதனத்தை வளர்த்தல்*

ஒருவர் நிதியத்தில் அங்கத்துவம் பெறுவதற்குக் கொள்வனவு செய்ய வேண்டிய பங்குகளின் எண்ணிக்கை தற்பொழுது ஒரு பங்காக இருக்கின்றது இதனை ஒன்றிலிருந்து ஐந்தாக அதிகரிக்க வேண்டும்.

ஆ. *சாதாரண பங்குத் தொகையைச் செலுத்தல்*

தற்பொழுது இருக்கும் 5000/- ரூபா பெறுமதி கொண்ட நன்கொடை மூலதனப் பங்கைச் சாதாரண நன்கொடை மூலதனப் பங்கு என அழைக்கப்பட வேண்டும். தற்பொழுது நிதியத்தில் பங்குதாரராக இருப்பவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் 5 சாதாரண நன்கொடை மூலதனப் பங்குகளைக் கொள்வனவு செய்யும் பொருட்டு 25000/-ரூபாவை ஒரே முறையிலோ அல்லது தவணை முறையிலோ இரண்டு ஆண்டு காலத்திற்குள் மீதி வருமதியைச் செலுத்துவதற்கு வசதியளிக்கப்பட வேண்டும்.

இ. அத்துடன் புதிதாகச் சாதாரண நன்கொடை பங்குதாரர்களைச் சேர்க்கவும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஒரே முறையில் முழுப்பணத்தையும் செலுத்த முடியாதவர்கள் இரண்டு ஆண்டுக்குள் அதனைச் செலுத்த வசதியளிக்கப்பட வேண்டும்.

4.3 சிறப்பு நன்கொடை மூலதனம் பங்கு

முகாமைக் கட்டமைப்பில் புதிய அலகாக அமைக்கப்படவுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை அமைப்பில் அங்கத்துவம் பெற விரும்புபவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ஒருலட்சம் ரூபா பெறுமதியான சிறப்பு நன்கொடை மூலதனப் பங்கொன்றைக் கொள்வனவு செய்திருக்க வேண்டும். ஒரே முறையில் அப்பங்குதாரர்கள் முழுத் தொகையையும் செலுத்துவதன் மூலம் பற்றாக்குறை நிதித் தேவையை நிறைவேற்றும் நோக்கத்தை விரைவுபடுத்த முடியும் அவ்வாறு செய்ய முடியாதவர்கள் தவணைக் கட்டண முறையில் இரண்டு வருட காலத்திற்குள் செலுத்த ஏற்பாடு செய்யலாம். தவணைக் கட்டணமாக செலுத்த விரும்புபவர்கள் முதல் கட்டணமாக 25,000/- ரூபாவையும் மிகுதியை 5000/- இற்கு குறையாத தவணைக் கட்டணமாக 18 மாதத்திற்குள் செலுத்த ஏற்பாடு செய்யப்படலாம்.

4.4 சமாசத்தின் சந்தா முறை

இன்றுவரை சமாசத்தின் பிராந்திய பொதுச்சபை அங்கத்தவர்கள் எவரும் சந்தா செலுத்துவதற்குக் கடமைப்பாடு இல்லை எதிர்காலத்தில் சமாசத்தின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் வருடாந்தம் ரூபா 500/- வீதம் செலுத்துவதற்கு அல்லது ஆயுட்கால சந்தாவாக 5000/- ரூபா வீதம் செலுத்த ஏற்பாடு செய்யலாம்.

5.0 சமாசத்தினதும் நிதியத்தினதும் யாப்புகளை திருத்தி அமைத்தல்

இத்திட்டத்தில் கூறப்பட்டுள்ள செயல்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அவசியமான ஏற்பாடுகளை வரையறுத்து சமாசத்தினதும் நிதியத்தினதும் யாப்புகளை திருத்தியமைப்பதற்குத் தகுதியான யாப்புத் திருத்தக் குழுவை அமைத்து அவற்றின் மூலம் திருத்தங்களை மேற்கொள்ளுதல்.

6.0 முதன்மைப் பயனாளிகள் குடும்பங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுதல்

திட்டமிட்ட முறையில் அவசியமான தகவல்களைத் தொகுத்து வழங்கக்கூடிய முறையில் பிராந்திய ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் சமாசத்தின் முதன்மைப் பயனாளிகளின் குடும்பங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்குப் பொருத்தமான அமைப்பு முறையை ஏற்படுத்தி கால இலக்குகளோடு தகவல்களைத் திரட்டி வெளியிட ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

7.0 கல்வி அபிவிருத்தித் திட்டம்

7.1 கல்வி இலக்கு

சமாசத்தின் கல்வி அபிவிருத்திக்கான இலக்குகள் காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளன. ஆரம்பத்தில் முதன்மைப் பயனாளிகள் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் 10ஆம் வகுப்பு வரை (க.பொ.த சாதாரணம்) படித்தலாகும். இரண்டாவது கட்டமாகப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளை உருவாக்குவதாகும். மூன்றாவது கட்டமாகப் பல்கலைக்கழகப் பட்டத்தகமையுடன் தொழிற்புலமைத் தகைமையினையும் பெறுதலாகும். இவ்வாறு சமாசத்தின் கல்வி இலக்கு படிப்படியாக உயர்வடைந்தது. **கல்விக்கான எமது புதிய இலக்கானது** முதன்மைப் பயனாளிகள் வீடுதோறும் பட்டதாரிகளை உருவாக்க வேண்டும் என்பதாகும். எம்மக்கள் சமூகத்தாரை கற்றோர் சமூகமாகப் பரிணமிக்கச் செய்வதை தொலைநோக்காகக் கொள்ளவேண்டும்.

7.2 சமாசத்தின் பிராந்திய முகாமைச் சபைகளுக்குச் சமாந்தரமாக இயங்கி வரும் பிராந்திய கல்விச் சபைகளைச் சக்தி வாய்ந்த அமைப்பாக வளர்த்துப் பொதுக் கல்விச் சபையினூடாகப் பிராந்திய ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் வருடாந்தக் கல்வி அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தல்.

7.3 கல்வி அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டியவை

அ. தரம் 5ற்கான புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை போன்ற பரீட்சைகளுக்கு முன்னோடியான பரீட்சைகளைப் பொதுவான முறையில் வினாத்தாள்களைத் தயாரித்து பிராந்திய ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் பரீட்சைகளை நடாத்தி மாணவர்களை இறுதிப் பரீட்சைகளுக்குத் தயார்ப்படுத்தல்.

ஆ. முதன்மைப் பயனாளிகளின் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களின் ஆங்கில அறிவு மட்டத்தை உயர்த்துவதற்குப் பிராந்திய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் திட்டமிட்ட முறையில் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தல். அத்துடன் தமிழ்மொழியைத் தாய்மொழியாக வளர்ப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல்.

இ. கணனிக் கல்வித் தகைமையை வளர்த்தற் பொருட்டு வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.

ஈ. நிதியத்தின் அனுசரணையுடன் அமுல்படுத்தப்பட்டு வரும் வருடாந்த புலமைப்பரிசில் நன்கொடைத் திட்டங்களையும் வருடாந்த கல்வி ஊக்குவிப்பு நிதித் திட்டங்களையும் ஆதரவு தேவைப்படும் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்தையும் காலத்தின் தேவைக்கும் கிடைக்கக் கூடிய நிதிவளச் சக்திக்கும் ஏற்ற முறையில் மீள்மதிப்பீடு செய்து நிதி உதவித் திட்டங்களை மீள வரையறுத்து அமுல்படுத்தல்.

உ. வருடாந்தம் நடாத்தப்படும் கல்விப் போட்டிகளையும், இசை, நடன, நாடக போட்டிகளையும் தொடர்ந்தும் நடாத்தி பரிசில் வழங்கும் திட்டத்தை முன்னெடுத்தல்.

8.0 பண்ணிசை, யோகக் கலையை வளர்த்தல்

அ. பன்னிரு திருமுறைகளைப் பொருள் உணர்ந்து பண்ணிசையோடு ஓதுவதற்கான பயிற்சி மையங்களைப் பிராந்திய ரீதியாக அமைத்துச் சமாசத்தைச் சார்ந்த நுண்கலைத் துறையில் தொழிற்புலமை பெற்ற ஆசிரியர்களினது ஆதரவுடன் பயிற்சி நெறிகளை நடாத்துதல்.

ஆ. உடல், உள, ஆன்மீக வளர்ச்சியின் பொருட்டு யோகக்கலையை வளர்ப்பதற்கான வேலைத்திட்டத்தை வரைந்து அமுல்படுத்தல்.

9.0 கலை, கலாசாரத்துறைகளை மேம்படுத்தல்.

அ. தமிழர்களின் பாரம்பரியமான கலாசார பண்பாட்டு துறைகளை பேணி வளர்த்தற் பொருட்டு நடவடிக்கை எடுத்தல். இந்நோக்கத்தை அடைதல் பொருட்டு செயல்படுத்தக்கூடிய திட்டங்களை வரைந்து அமுல்படுத்தும் பொருட்டு சமாசத்தைச் சார்ந்த நுண்கலைத்துறைத் தகைமை பெற்ற ஆசிரியர்களின் தொழிற்புலமையைச் சமுதாய மேம்பாட்டிற்குப் பயன்படுத்தல்.

ஆ. கலை இலக்கியத்திற்கான களம் அமைத்தலும், சஞ்சிகை வெளியீடும்

மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், ஆர்வலர்கள் மத்தியில் இயல், இசை, நாடகத்துறையை வளர்த்தற் பொருட்டு கலை இலக்கியத்திற்கான களத்தை அமைத்துச் செயற்படல். இக்களத்தின் மூலம் குறைந்த பட்சம் வருடாந்தம் இரண்டு சஞ்சிகைகளைச் சுய நிதியுதவி முறையில் வெளியிட முயற்சி எடுத்தல்.

10.0 சமூகசீர்நெறிக் கொள்கையின் அமுலாக்கத்தை முன்னெடுத்தல்

சமூகசீர்நெறிக் கொள்கைத் திட்டத்தின் கீழ் முக்கிய இலக்காக நாம் கொண்டுள்ள குடிமைத் தொழில்முறை மீண்டும் தலை தூக்காது தடுத்தல் வண்ணமும் 18 வயதிற்குக் குறைந்த மாணவர்களின் படிப்பை நிறுத்தி வேலைக்கு அமர்த்துவதைத் தடுத்தல் பொருட்டும் பிராந்திய ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும், பெற்றோர்களையும் சம்பந்தப்பட்ட ஏனையோரையும் சந்தித்துக் குறிப்பிட்ட சமூகக் குறைபாடுகளை ஒழிப்பதற்கான முயற்சிகளைத் தொடருதல். அத்துடன் தொழிற்ப் பெயர்ச்சிக்கான ஊக்குவிப்பு முயற்சிகளைத் தொடருதல்.

11.0 காரியாலயங்களை அமைத்தல்

1. சமாசத்தின் அலுவல்களைத் திறம்படச் செய்வதற்கு யாழ்ப்பாணத்தில் ஒரு நிரந்தரமான காரியாலயத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2. சமூகஜோதி க. சுப்பிரமணியம் அவர்களால் வழங்கப்பட்ட கொழும்பில் அமைந்த ''மணிமஹாலை'' நிதியம் தனது காரியாலயமாக உபயோகித்து வருகின்றது. இக்காரியாலயத்தை கணனிச் சேவை உட்பட அனைத்து அத்தியாவசியச் சேவைகளை யும் வழங்கக்கூடியதாக அமைத்தல்.

12.0 ஏனைய மேம்பாட்டு நிறுவனங்களுடன் இணைந்து செயற்படல்

சமூக, கல்வி, மொழி, கலை, இலக்கிய மேம்பாட்டுக்கான ஏனைய நிறுவனங்களோடு இணைந்து பொதுநல வேலைத் திட்டங்களில் பங்குபற்றுதல்.

மேற்படி ''**மூன்றாண்டுத் திட்டத்தை**'' வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் சமூக இன, மொழிப், பற்றோடும், மிகுந்த அர்ப்பணிப்போடும் சேவையாற்ற முன்வர வேண்டும்'' எனப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்
பொதுநிர்வாக சபை, சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசம்
பணிப்பாளர் சபை, புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்
பொதுக் கல்விச் சபை, சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசம்
2013

நான்காம் பகுதி

எழுச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள், சான்றோர்கள், சாதனையாளர்கள், புலமைப்பரிசில் பெற்றோர்

விடயம் பக்கம்

1. எழுச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள்- ஓர் கண்ணோட்டம் 329

01. "சமூகஜோதி" திரு. நா. தங்கவடிவேல்

02."சமூகஜோதி" திரு. கதிரேசு நவரத்தினம்

03 "சமூகஜோதி" திரு. கந்தையா மாயாதிரவியம்

04."சமூகஜோதி" திரு. சின்னத்தம்பி செல்லத்துரை

05."சமூகஜோதி" திரு. எஸ்.வி.தம்பையா

06. "வித்தியா திலகம்" திரு. கிருஸ்ணபிள்ளை கணேஸ்

07."சமூகஜோதி" திரு. கதிரேசு சுப்பிரமணியம்

08."சமூகஜோதி" திரு. சீனிவாசகம் செல்லத்துரை

09."சமூகஜோதி" திரு. சபாபதி சின்னையா

10."சமூகஜோதி" திரு. சோதிமுத்து முருகேசு (அமரர்)

11. "சமூகப்பற்றாளர்' திருமதி யோகராஜா நாகரத்தினம் (அமரர்)

12. "சமூக பற்றாளர்' திரு. முத்தையா செல்லத்தம்பி

13. "சமூகப்பற்றாளார்" திரு. கந்தையா சிவஞானம்

14. "சமூகஜோதி" திரு. கணபதி மயில்வாகனம்

15. "சமூகஜோதி" திரு. கந்தையா நடேசன்

16. "சமூகப்பற்றாளர்" திருமதி புஸ்பராசமணி ஆனந்தராசா

17. திரு.செல்லத்துரை ஜெகதாசன்

18. "புரட்சிஜோதி" திரு. இராமு குணரத்தினம்

19. "சமூகஜோதி" திரு. சபாபதி ஆனந்தன்

20."சமூகப்பற்றாளர்" திரு. யேசுதாசன் காணிக்கைநாதன்

21. "சமூகப்பற்றாளர்" திரு. யோசப் பிரான்சிஸ் சேவியர்

22."மருத்துவஜோதி, வைத்தியகலாநிதி" வைரமுத்து கமலநாதன்

23.சமூகப்பற்றாளர் திரு. ச.அன்ரன் இராசநாயகம்

2. எழுச்சி இயக்கச் சான்றோர்கள் 357

3. அகவை எண்பதை வென்ற பண்பாளர் விருது பெற்றோர் 357

4. சாதனையாளர்கள்

1. சமூக ஜோதி விருது பெற்றோர் **358**

2. துறைசார் வித்தகர் விருது பெற்றோர் **359**

i. வித்தியாஜோதி
ii. மேலாண்மை வித்தகர்
iii. கமநல வித்தகர்
iv. கவிமணி
v. ஆற்றுகை வித்தகர்
vi. இலக்கியக் கலாமணி
vii. மருத்துவக் கலாமணி
viii. யோகக் கலாஜோதி
ix. சித்த மருத்துவ ஜோதி
x. ஆன்மீகச் செல்வன்
xi. வித்தியா திலகம்
xii. வைத்தியக் கலாஜோதி
xiii. கணனி வித்தக இளவல்
xiv. புகைப்பட கலாவித்தகர்
xv. சோதிடக் கலாஜோதி
xvi. இசைக் கலா வித்தகர்

3. சமூகப் பற்றாளர் விருது பெற்றோர் **360**

4. சமூக முன்னோடி விருது பெற்றோர் **361**


i. கல்விக்கதிர் விருது
ii. புரட்சிச் செம்மல் விருது
iii. சீர்நெறியாளர் விருது
iv. விழுமியச் செல்வர் விருது
v. புரட்சி ஜோதி விருது

5. தர்மக் கொடையாளிகளுக்கான விருது **362**

1. தர்மஜோதி விருது

6. தொண்டர் திலகம் விருது பெற்றோர் 363
7. பாராட்டுப் பெற்ற சமாதான நீதவான்கள் 364
8. பாராட்டு விருது வழங்குதல்
9. சமாசத்திற்கு நற்பணியாற்றிய பிரமுகர்களுக்கான விருது
10. புலமைப் பரிசில் பெற்றோர் 365
    1. தரம் ஐந்து புலமைப்பரிசில் பெற்றோர் 365
    2. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றோர் 369
    3. பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிற்கு தகைமை பெற்றோர் 370
    4. சமூகஜோதி எஸ்.வி.தம்பையா ஞாபகார்த்தப் புலமைப் பரிசில் பெற்றோர் 371
    5. தந்தையை இழந்த மாணவர்களின் கல்விக்கான புலமைப்பரிசில் பெற்றோர் 371
11. பாராட்டுப் பெற்ற கலாநிதிப் பட்டம் பெற்றோர் 372
12. பாராட்டுப் பெற்ற முதுமாணிப் பட்டம் பெற்றோர் 372
13. பாராட்டுப் பெற்ற இளமாணிப் பட்டம் பெற்றோர் 372
14. கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றோர் 377
15. உயர் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றோர் 378

"சமூகஜோதி" திரு நா. தங்கவடிவேல்



திரு.நா.தங்கவடிவேல் அவர்கள் அமரர்களான நாகமுத்து சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனாக 1927.05.02ஆம் திகதி சங்கத்தானை சாவகச்சேரியில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை சரசாலை கமலாசினி வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பின்னர் S.S.C வரையிலான கல்வியை யாழ் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரியிலும் மேற்கொண்டார். 1945ஆம் ஆண்டு இலங்கை தபால் திணைக் களத்தில் இணைந்து கொண்டு 1982ஆம் ஆண்டு வரை தபாலதிபர், சிரேஸ்ட தபாலதிபர், தலைமைத்தபாலதிபர் என உயர் பதவிகளை வகித்தார். இலங்கைத் தபாலதிபர்கள் தொழிற்சங்கத்தில் இணைந்து 1945ஆம் ஆண்டு அதன் உப செயலாளராகச் செயலாற்றினார். இவர் 1949ஆம் ஆண்டு நுணாவிலைச் சேர்ந்த நாகம்மாவைத் திருமணம் செய்து நவரத்தினம், குணமணி ஆகிய இரு பிள்ளைகளைப் பெற்று ஆளாக்கிய சிறந்த குடும்பத் தலைவராவார்.

1980.09.12இல் நடைபெற்ற மாவை மறுமலர்ச்சி மன்றத்தின் வெள்ளிவிழா மகாநாட்டில் சமூக எழுச்சி இயக்கத்தை ஆரம்பிப்பதற்கும், கொழும்பு விவேகானந்தாசபை மண்டபத்தில் நடைபெற்ற மகாநாட்டில் சமூக எழுச்சி இயக்கத்திற்கான ஆறு அம்சத் திட்டத்தைப் பிரகடனம் செய்வதற்கும், 1981 காலப் பகுதியில் கிராமங்கள் தோறும் ஆறு அம்சத் திட்டத்தை விளக்கி முதன்மைப் பயனாளிகள் அங்கீகாரத்தைப் பெறவும், 24 கிராமக் கழகங்களினை அமைப்பதற்கும், 1981.04.15இல் சமூக எழுச்சி இயக்கத்தின் தேசிய மகாநாட்டை தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் நடத்துவதற்கும், அம் மகாநாட்டில் சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தை ஆரம்பிப்பதற்கும், ஒரு முன்னணித் தலைவராக இருந்து வழங்கிய பங்களிப்புகள் மகத்தானவை.

தனது சொந்தக் கிராமமான சங்கத்தானைக் கிராமத்தின் மேம்பாட்டிற்கு கலைமகள் சமூக முன்னேற்றக் கழகத்தின் ஸ்தாபகத் தலைவராகவும், போசகராகவும் இருந்து வழங்கிய சேவையும், 1981-1989 வரை சமாசத்தின் பிரதித் தலைவராகவும், 1989-1998 வரை சமாசத்தின் தலைவராகவும், 1998 முதல் இன்று வரை சமாசத்தின் போசகராகவும் இருந்து சேவையாற்றிய பன்முக ஆளுமையும் அனுபவமும் ஆற்றலும் மிக்கவர். இவரது மகத்தான சேவையைப் பாராட்டி 2004.02.29 இல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் 23வது ஆண்டு வருடாந்த பரிசளிப்பு விழாவில் பொன்னாடை போர்த்தி, கிரீடம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். சமாசத்தின் மக்கள் மத்தியில் ஐக்கியம், ஒழுக்கம், கலாசாரம், பண்பாடு, என்பன தழைத்தோங்கும் வண்ணம் அவர்களின் சமூக வைபவங்கள் ஒவ்வொன்றிலும் தவறாது பங்குபற்றி வழிகாட்டியாக வாழ்ந்து வந்தவர். இவரது அர்ப்பணிப்பு, ஏற்றமிகு

சமூக கல்விப் பணிகளைப் பாராட்டி 2007.08.25இல் யாழ் நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் வெள்ளி விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமான புலமைப்பரிசில் பரிசளிப்பு விழாவில், சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து "சமூகஜோதி" விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

"சமூகஜோதி" திரு. கதிரேசு நவரத்தினம்

திரு.கதிரேசு நவரத்தினம் அவர்கள் அமரர்களான கதிரேசு முத்துப்பிள்ளை தம்பதிகளின் அருந்தவப் புதல்வனாக 1934.03.09ஆம் திகதியன்று அரியாலையில் பிறந்தார். இவர் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் தனது ஆரம்பக் கல்வியையும் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் S.S.C வரையான இடைநிலைக்கல்வியையும் மேற்கொண்டார்.



இவர் சிறந்த முறையில் தனது கல்வியை முடித்துக்கொண்டு 1953இல் கொழும்பு மருதானை தொழில்நுட்பக் கல்லூரியில் தனது தொழில்சார் கற்கை நெறியை வெற்றிகரமாக நிறைவு செய்து 1955ஆம் ஆண்டு படவரைஞராக அரசாங்க சேவையில் இணைந்து கொண்ட இவர் பல பதவி உயர்வுகளையும் பெற்றுக் கொண்டார். இவர் 1956ஆம் ஆண்டு அரியாலையைச் சேர்ந்த வீரகத்தி சரஸ்வதி அவர்களை திருமணம் செய்து மூன்று புத்திரர்களுக்கும் இரண்டு புத்திரிகளுக்கும் தந்தையாக இருந்தார். தனது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக அரும்பாடுபட்டு அதன் பலனாக அவர்களின் கல்வி ஆற்றல் வெளிப்பாடுகளைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

இவர் 1980இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் வெள்ளிவிழா மகாநாட்டில் உதயமான சமூகஎழுச்சி இயக்கத்தை வளர்ப்பதற்கும் கிராமமட்டத்தில் 24 சமூக முன்னேற்றக் கழகங்களினை ஆரம்பிப்பதற்கும் 1981இல் தொண்டமனாறு செல்வச் சன்நிதியில் சமூக எழுச்சி இயக்கத்தின் தேசிய மகாநாட்டை நடத்துவதற்கும் இத் தேசிய மகாநாட்டில் சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தை ஆரம்பிப்பதற்கும் 1982இல் தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் யாழ் மாவட்ட பாராளுமன்ற அங்கத்தவர்களு டனான ஒரு மகாநாட்டை நடத்துவதற்கும் கைப்பணிப் போட்டிகளை நடத்துவதற்கும் பரிசளிப்பு விழாக்களை நடத்துவதற்கும் சமாசத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவராக இருந்து வழங்கிய மேலான சேவை மகத்தானதாகும்.

1981 முதல் 1998 வரை சமாசத்தின் நிதிமுகாமைக்குப் பொறுப்பான பொருளாளராக இருந்து நிதி வளர்ச்சிக்கும் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் பெரும் பங்காற்றியுள்ளார். மேலும் இவரின் இல்லம் ஒரு சில ஆண்டுகள் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின்

உத்தியோகபூர்வ காரியாலயமாக செயற்பட்டு வந்தது. இவரது மகத்தான சேவைகளை மதித்து 2004.02.29 யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் 23ஆவது ஆண்டு வருடாந்த பரிசளிப்பு விழாவில் பொன்னாடை போர்த்தி கிரீடம் அணிவித்து வாழ்த்துப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அத்தோடு 1998 முதல் இறைவனடி சேரும் வரை (2007.06.04) சமாசத்தின் காப்பாளர் சபை அங்கத்தவராகவும் இருந்து வழங்கிய மகத்தான சேவையை கௌரவிக்கும் பொருட்டு அவரது சிவபதம் குறித்த 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து "சமூகஜோதி" விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

"சமூகஜோதி" திரு. கந்தையா மாயாதிரவியம்

திரு.க.மாயாதிரவியம் அவர்கள் அமரர்களான கந்தையா வள்ளியம்மை தம்பதியினருக்கு அருந்தவப் புதல்வராக 15.11.1938இல் யாழ் பண்ணாகம் பகுதியில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யாழ் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையிலும் சிறிது காலம் சாகிராக் கல்லூரியிலும் கற்று யாழ் விக்ரோரியாக் கல்லூரியில் எஸ்.எஸ்.சி பரீட்சையில் முதற்பிரிவில் சித்தியடைந்து 1958ஆம் ஆண்டு சிவில் பொறியியலாளர் கற்கை நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டு அதை வெற்றிகரமாக முடித்தபின் கல்ஓயா அபிவிருத்திச் சபையில் சிறிது காலம் தொழில்நுட்ப அதிகாரியாகவும், பின் சில ஆண்டுகள் காணி ஆணையாளர் திணைக்களத்தில் கமிஷனர் இலாகாவில் அபிவிருத்தி வேலைகள் அதிகாரியாகவும், கடமையாற்றினார். 1992ஆம் ஆண்டு அரசாங்க லீவு பெற்று பஹ்ரெய்ன் நாட்டிற்குச் சென்று பொறியியலாளராகக் கடமையாற்றினார். 1991இல் அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறி அதே ஆண்டில் இலங்கை வீடமைப்பு நிதிக் கூட்டுத்தாபனத்தில் பொறியியலாளராக 1996ஆம் ஆண்டு வரை பணிபுரிந்து அதே ஆண்டு கார்த்திகை மாதம் கனடாவிற்கு புலம்பெயர்ந்தார்.




இவர் 1964ஆம் ஆண்டு யாழ் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த சுபத்திராதேவி அவர்களை திருமணம் செய்து ஒரு புத்திரிக்கும் நாலு புத்திரர்களுக்கும் சிறந்த தந்தையாக விளங்குகிறார். தனது ஏகபுத்திரியை லண்டனில் வைத்திய கலாநிதியாகவும் புத்திரர்களை கணக்காளராகவும் பொறியியலாளராகவும் ஆக்கிய பெருமைக்கு உரியவர். 1980இல் நடைபெற்ற மாவை.பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் வெள்ளிவிழா மகாநாட்டில் உதயமான சமூக எழுச்சி இயக்கத்தில் இணைந்து அவ் இயக்கத்தில் ஒரு முன்னணித் தலைவராகி

அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். எழுச்சிக் கூட்டங்களை நடாத்தி மக்கள் மனதில் இடம் பிடித்தார். இவர் சமாசத்தின் பொதுச் செயலாளராக அப் பணியை அர்ப்பணிப்புடனும் கடமை கண்ணியத்துடனும் செய்தார். 1993ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் முகாமைப் பணிப்பாளராக அப்பணியை அவர் கனடா செல்லும் வரை அர்ப்பணிப்புடன் செய்தார். கனடா நாடு சென்றதும் தனது பொதுத்தொண்டை தொடர்வதில் பின் நிற்கவில்லை. அங்கேயுள்ள (Ontario Tamils Center) 2200 உறுப்பினர்களைக் கொண்ட ஒன்டாரியோ முதுதமிழர் மன்றத்தில் இணைந்து நிர்வாக சபை உறுப்பினராகவும், பொதுச் செயலாளராகவும், பத்திராதிபராகவும், உபதலைவர் போன்ற பல பதவிகளை வகித்தார்.

இவரது சேவையினை கௌரவித்து ஒன்டாரியோ அரசு 2003ஆம் ஆண்டு 2008ஆம் ஆண்டு 2013ஆம் ஆண்டு தொண்டர் சேவை விருது வழங்கிக் கௌரவித்தது. இவர் கனடா நாட்டிற்கு வழங்கிய பங்களிப்பை மதித்து கனேடிய அரசினால் 2ஆவது எலிசெபத் மகாராணியால் "Diamand Jubilee Medal" வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்தோடு சத்தியப்பிரமாண ஆணையாளர் நியமனமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரது ஏற்றமிகு சமூகப்பணிகளைப் பாராட்டி சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து 17.10.2010இல் மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற முப்பெரும் ஆண்டு விழாவில் "சமூகஜோதி விருது" வழங்கிக் கௌரவித்தது.

"சமூகஜோதி" திரு. சின்னத்தம்பி செல்லத்துரை

மாவிட்டபுரம் தெல்லிப்பழையூரில் விசுவர் சிதம்பரி சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதிகளுக்கு மகனாக 1938ஆம் ஆண்டு மார்கழிமாதம் முதலாம் திகதி பிறந்தார். இவர் மாவிட்டபுரம் வடக்கு அ.மி.த.க பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து கற்றார். இவர் மாவையூரைச் சேர்ந்த கந்தையா மாணிக்கம் தம்பதிகளின் புதல்வி பவளம் என்பவரை 1960ஆம் ஆண்டு திருமணம் செய்து 4 புதல்விகளையும் ஒரு புதல்வனையும் பெற்று அவர்களுக்கு கல்வியூட்டி சிறந்தமுறையில் வாழ வழிகாட்டியுள்ளார்.



1955ஆம் ஆண்டு மாவை பாரதி வாசிகசாலை ஆரம்பிப்பதில் இவரும் பிரதான முன்னோடியாக விளங்கியவர். தற்போது மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் என அழைக்கப்படும் இம் மன்றத்தில் பொருளாளராகவும், செயலாளராகவும், தலைவர் எனப் பல பதவிகளை வகித்து சிறந்த சமூகத் தொண்டனாக சேவையாற்றி வருதல் அனைவருக்கும் தெரிந்த விடயம். மாவை மறுமலர்ச்சி மன்றத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளி விழாவில் இவரது சேவையை

மதித்து 1981ஆம் ஆண்டு நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழாவில் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டு வாழ்த்துப் பத்திரம் வழங்கப்பட்ட பெருமைக்குரியவர்

அத்தோடு எழுச்சித்தந்தையின் வழியில் நின்று சமயப்பணி, சமூகப்பணி பொதுப்பணி என இவரது பணிகள் எம்மவர் மத்தியில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இவரது சமயப்பணியாக சிறு வயதிலிருந்து ஆலயத் தொண்டனாகவும் 1962ஆம் ஆண்டில் மாவை சித்திவிநாயகர் ஆலய பூசகராகவும் செயற்பட்டு 1969ஆம் ஆண்டில் சமயத்தீட்சை பெற்று இன்று வரை சமய ஆத்மீகப்பணியில் ஈடுபட்டு வருதல் குறிப்பிடத்தக்கது.மானிப்பாய் பிராந்திய சபையின் தலைவர் செயலாளராக இருந்து தற்போது போசகராகவும் இருந்து சேவையாற்றி வருதல் குறிப்பிடத்தக்கது.

2008இல் இருந்து இன்று வரை J/138 கிராம சேவையாளர் பிரிவில் அமைக்கப்பட்ட முதியோர் சபையின் செயலாளராக இன்றுவரை செயற்பட்டு முதியோர் நலன் காப்பதில் துடிப்புடன் செயற்பட்டு வருகின்றார். 2004ஆம் ஆண்டில் இருந்து இவரது இல்லத்தில் சமாசத்தின் கலந்துரையாடல்கள் நடைபெறுவதற்கும், ஆவணங்கள் பேணிப்பாதுகாப்பதற்கும் மனைவி பிள்ளைகளின் ஆதரவுடன் உபசரணை வழங்கியும் பல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருகிறார். இவரது சேவையைப் பாராட்டி 2010ஆம் ஆண்டு சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து நடாத்திய முப்பெரும் ஆண்டு விழாவில் "சமூகஜோதி" என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

1955 இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்து 1971இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம் என பெயர் மாற்றம் பெற்ற இந்நிறுவனத்தின் ஆரம்ப காலம் தொட்டு முன்னணிச் செயலாளராக,பொருளாளராக தலைவராகப் பதவிகள் வகித்துள்ளார் .சமூக சமத்துவ போராட்ட மன்றத்தால் முன்னெடுக்கப்பட்ட சமூக சமத்துவ போராட்டங்களின் வெற்றிக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

மாவைக் கந்தன் தண்ணீர்ப் பந்தல் சேவையை 1962ஆம் ஆண்டுமுதல் 1990ஆம் ஆண்டு வரை வெற்றிகரமாக வழங்குவதற்கும் மாவை விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் சொத்துக்களையும், நிர்வாகத்தையும், பொது உடமையாக்கும் முயற்சிகளுக்கு 15ஆண்டு காலம் தொடர்ச்சியாக முன்னணியில் நின்று உழைத்தவர்.

இடதுசாரி இயக்கங்கங்களின் செயற்பாடுகளில் துணிச்சலோடு ஈடுபட்டவர். சமாசத்தின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஆரம்பகாலம் தொட்டு பங்களிப்புச் செய்துள்ளார். 2003ஆம் ஆண்டு முதல் சமாசத்தின் செயற்பாடுகளில் தீவிரமாக முன்னின்று எழுச்சித் தந்தையின் வழிநடத்தலை ஏற்று பிரதம இணைப்பாளராக உயிர்த்துடிப்போடு சமாசம் இயங்குவதற்கும் பெரும் பங்காற்றியவர். 2004 இல் சுனாமி அனர்த்த அவசர நிவாரண நிதித் திட்டத்திலும், 2010 ஆண்டில் வன்னிப்போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவித்திட்டத்திலும் மிகுந்த அர்ப்பணிப்போடு ஈடுபட்டு அவற்றின் வெற்றிக்கு மிகுந்த பங்களிப்புச் செய்தவர்.

"சமூகஜோதி" திரு. எஸ்.வி.தம்பையா

எஸ்.வி.தம்பையா அவர்கள் வீரகத்தி சின்னாச்சி தம்பதிகளின் மூன்றாவது புதல்வராக 25.10.1932இல் உரும்பிராய் வடக்கில் பிறந்தார். இவர் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்தார். சிறுவயதில் இருந்தே இலக்கியத்துறையில் சிறந்த ஆர்வலராகவும், பேச்சாளராகவும், எழுத்தாளராக வும், விமர்சகராகவும் மக்கள் மனதில் இடம்பிடித்தார்.



இவர் 1951இல் வைரமுத்து செல்லம்மா தம்பதிகளின் புத்திரி நாகம்மாவை திருமணம் செய்து 5 பிள்ளைகளுக்குத் தந்தையாவார். திருமணத்தை தொடர்ந்து கொழும்பில் தொழிலகம் ஒன்றை ஸ்தாபித்து அதன் தொழில் அதிபராக விளங்கியவர். இத் தொழில் நிறுவனம் இவரது இலக்கியப் பணிக்கு தளமாக அமைந்தது. 1984இல் "கடலில் கலந்தது கண்ணீர்" எனும் சிறுகதை இலக்கிய நூலையும் 1997இல் "நினைவின் அலைகள்"எனும் சுயசரிதை நூலையும் வெளியிட்டு இலக்கியத்துறையில் வரலாற்றுப் பதிவாகினார்.

1980இல் மாவைபாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் வெள்ளி விழா மகாநாட்டில் உதயமான சமூக எழுச்சி இயக்கத்தை வளர்ப்பதற்கு கொழும்பு மகாநாட்டில் ஆறம்சத்திட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட போதும் கிராமம் கிராமமாக கழகங்கள் அமைத்து கருத்துப் புரட்சி எழுச்சி இயக்கம் நடாத்தியபோதும், தொண்டமனாறு செல்வச் சன்நிதி ஆலயத்தில் 1981இல் சமாசம் தாபிக்கப்பட்ட போதும்,இவரது காத்திரமான பங்களிப்பும் முன்னோடித் தலைவர்களில் ஒருவராக இருந்து வழங்கிய சேவையும் மேலானதாகும்.

அத்தோடு சமாசத்தின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் 1983ஆம் ஆண்டு மலேசியாவிற்கும், 1984-1995 ஜேர்மனிக்கும், 1998 கனடாவிற்கும் விஜயம் செய்து எமது பணிக்கு உரமூட்டவல்ல பிரச்சாரத்தையும், நிதி சேகரிப்பையும் செய்து புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம் தாபிப்பதற்கு உந்து சக்தியாக இருந்தார்.

2002இல் அவர் மறைந்தாலும் அவரின் நற்பணிகள் நினைவு கூரத்தக்கது. இவரது 31ஆம் நாள் சிரார்த்த தினத்தை முன்னிட்டு இவரது குடும்ப அங்கத்தவர்களோடு இணைந்து சமாசம் நிகழ்த்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வில் இவரது சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் வண்ணம் "சமூகஜோதி விருது" வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இவரது நீங்காத நினைவாக "சமூகஜோதி" எஸ்.வி.தம்பையா நினைவு வெளியீடு ஒன்றையும் சமாசமும் நிதியமும் இணைந்து வெளியிட்டு வைத்தன. அத்துடன் வருடாந்தம் எஸ்.வி.தம்பையா புலமைப்பரிசில் நன்கொடையும் வழங்கப்பட்டு வருகிறது. 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் முதன்மையான பெறுபேற்றைப் பெற்ற சமாசத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு அப் பரிசில் வழங்கப்படுகிறது. அத்துடன் அவரது குடும்பத்தினராலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இன்னொரு மாணவருக்கும் புலமைப்பரிசில் நன்கொடை வழங்கப்படுகிறது. இவருடைய ஏகபுதல்வன் திரு. த. ரவீந்திரன் தந்தை வழியில் நின்று சமாசத்திற்கு தனது பங்களிப்பை செய்து வருகின்றார்.

"வித்தியா திலகம்" திரு. கிருஸ்ணபிள்ளை கணேஸ்



இவர் நெல்லியடியில் கிருஸ்ணபிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியினருக்கு சிரேஸ்ட புதல்வனாக 1962.05.26ஆம் திகதி பிறந்தார். இவர் தனது கல்வியை நெல்லியடி மெதடிஸ்த மிசன் ஆரம்ப பாடசாலை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், மற்றும் க.பொ.த., உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தவர்.

1988ஆம் ஆண்டு ஜக்கிய இராச்சிய வியாபார நிறைவேற்று அதிகாரிகள் நிறுவனத்தின் Association of Business Executives (ABE-UK) வியாபார நிருவாக உயர் டிப்புளோமாப் பட்டத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. 1990ஆம் ஆண்டு ஜக்கிய இராச்சிய சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் Chartered Institute of Marketing (CIM-UK) சந்தைப்படுத்தல் டிப்ளோமாப் பட்டத்தையும், 1996ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்ற சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் வியாபார முகாமைத்துவத்திற்கான முதுமாணிப்பட்டத்தையும் Master of Business Administration MBA) பெற்றார்.

இவர் முகாமையியல், வணிகவியல், இயந்திரப்பொறியியல் சார்ந்த துறைகளில் உயரிய கல்வித் தகைமைகளைப் பெற்றதுடன் ஜேர்மன், சிங்கபூர், இந்தியா எனப் பல்வேறு நாடுகளில் தனது தொழில்சார் பயிற்சிநெறிகளை வெற்றிகரமாக நிறைவேற்றி கனரக இயந்திரத்துறை வர்த்தகத்தில் சிறந்த செயல் அனுபவத்தையும் பெற்று தனது தொழிற்புலமையை வளர்த்துக் கொண்டார். இவற்றின் பேறாக, இலங்கையிலுள்ள முன்னணி நிறுவனங்களில் சந்தைப்படுத்தல் முகாமையாளராக நீண்ட காலம் சேவையாற்றினார். இதன் பலனாக கனடாவிற்கு வதிவிட விசாப் பெற்று சந்தைப்படுத்தல் துறைசார் நிபுணராக கடமையாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

இவர் சங்கத்தானையில் இராசரட்ணம் - சின்னம்மா தம்பதிகளின் மகள் சுமதியைத் திருமணம் செய்து இல்லறவாழ்க்கையை இனிதே நடாத்தி தற்போது கனடாவில் வசித்து வருகிறார்.

இவர் சிறு மாணவனாக இருந்த காலம் தொட்டே சமூகப்பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார். சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினை 1981இல் ஸ்தாபித்த காலத்திலிருந்து இன்றுவரை தனது சேவையை வழங்கி வருகிறார். நலிவுற்ற மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் பணியாற்றி வருகிறார். 1993இல் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு ஒரு சிறந்த முன்னோடியாகவும், அத்தாபனத்தில் இயக்குனர் சபையில் நிதிக்குப் பொறுப்பான இயக்குனராகவும் பணியாற்றினார்.

இவர் சமாசத்தின் அமைப்பிற்கும், தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், சமாசத்தின் மாணவர் ஒன்றியம் காத்திரமான பங்களிப்பை வழங்குவதற்கும் அவ் ஒன்றியத்தின் தலைவராக இருந்து வழங்கிய பங்களிப்புக்கள் முக்கியமானதாகும். கல்வி மேம்பாட்டுப் பணிகளுக்கு இவரது அயராத பங்களிப்பு மிகச் சிறப்பானதாகும். உள்நாட்டு யுத்தத்தின் ஆரம்ப காலங்களில், இடம்பெயர்ந்த மக்களின் நலன்களுக்காக முன்னின்று உழைத்தவராவார். 1993இல் சமாசம் எதிர் நோக்கிய நிதிச்சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் பொருட்டு புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கும், அதன் நிதி முகாமைப் பணிப்பாளராகவும் ஆரம்ப காலம் தொட்டு கனடா செல்லும் வரை பணியாற்றி வந்தார். நிதிவளத்தைப் பாதுகாக்கவும், பெருக்கவும் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார். இவரது சமூக மேம்பாட்டுப் பணிகளையும், பல்கலைக்கழக முதுமாணிப் பட்டம் பெற்றதையும் முன்னிட்டு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் சிறப்பான பாராட்டு வைபவம் ஒன்று நடைபெற்றது.

இவர் கனடாவில் வாழ்ந்தாலும் சமூகப் பற்றுக்குன்றாது சமாசமும், நிதியமும் தொடர்ந்து சமூகத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்கு உதவவேண்டும் என்ற நோக்கில் ஆர்வம் குன்றாது செயற்பட்டு வருகின்றார்.

எழுச்சித் தந்தையினதும், எழுச்சி இயக்கத்தினதும், எழுச்சிச் சிந்தனைகள், கோட்பாடுகள், செயற்பாடுகள் ஆகியவற்றை ஆவணப்படுத்தும் வரலாற்று நூலான "எழுச்சிப் பாதை" எனும் நூலை வெளியிட்டு வைப்பதில் பல ஆண்டுகளாக சிந்தித்து செயற்பட்டு அம்முயற்சி வெற்றிபெற பெரும் பங்காற்றியுள்ளார்.

சமூக மேம்பாட்டின் பொருட்டு இவரது காத்திரமான பங்களிப்பையும், இவரது கல்வி, தொழிற்கல்வி, தொழில்நிலைகளையும் பாராட்டிக் கௌரவிக்கும் வண்ணம் 2013ஆம் ஆண்டு நடைபெறவுள்ள எமது பெருவிழாவில் இவருக்கு "வித்தியா திலகம்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளது.

"சமூகஜோதி" திரு. கதிரேசு சுப்பிரமணியம்

இளவாலைப்பதி கதிரேசு - வள்ளியம்மை தம்பதிகளின் ஏகபுத்திரனாக இவர் பிறந்தார். இவர் தனது பாடசாலைக் கல்வியை பின்தங்கிய சமூக, பொருளாதார சூழலால் இடைநிறுத்திக் கொண்டபோதிலும் தனது விடா முயற்சி மூலம் தமிழ் ஆங்கில மொழிகளில் தமது ஆற்றலை வளர்த்துக் கொண்டதுடன் பன்முக ஆளுமை கொண்ட முகாமைத்துவ அறிவையும், ஆற்றலையும் வளர்த்துக் கொண்டார். இவர் சாதாரண தொழிலாளி நிலையில் இருந்து

படிப்படியாக வர்த்தக நிறுவன அதிபராக உயர்ந்துள்ளார். அரசியல்வாதிகள், இலக்கியவாதிகள், சமயத்தலைவர்கள், சமூகப் பெரியார்கள், ஆன்மீகப் பெரியார்கள், எனப் பல தரப்பட்டவர்களுடன் நல்லுறவை வளர்த்து வருகிறார்.



கதிரேசு சுப்பிரமணியம் அவர்கள் இளவாலைப்பதி நாகம்மாவை திருமணம் செய்து இல்லற வாழ்க்கையில் 3ஆண் பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு சிறந்த கல்வியறிவு ஊட்டி சிறந்த தொழில் வாய்ப்பைப் பெற்று கனடாவில் வாழ்வதற்கு வழிகாட்டியவர்.

1980ஆம் ஆண்டு சமூகஎழுச்சி இயக்கம், 1981இல் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், 1993இல் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம், 2004இல் ஆழிப்பேரலை நிவாரணச் செயற்திட்டம், 2009இல் இடம்பெயர்ந்த வன்னி மக்களுக்கான இலவச நிவாரணச் செயற்திட்டம் ஆகியவற்றின் தோற்றத்திற்கும், அவற்றிற்கான தொழிற்பாட்டிற்கும் இவரது பங்களிப்பு முக்கியமானதாகும். இவ்வமைப்புகளின் முக்கிய முன்னணித் தலைவராக சேவையாற்றி வருவதுடன், அவற்றின் நிதி வளத்தைப் பெருக்க ஒரு நிதி ஊற்றாகவும் இருந்து வருகிறார். கொழும்பு காக்கைதீவு கரையோரப் பூங்கா முகாமைத்துவச் சங்கம் ஒன்றை அமைப்பதற்கு இவர் முன்னணியில் இருந்து சேவையாற்றியுள்ளார்.

இவர் தனக்கு சொந்தமான கொழும்பு 13 கதிரேசன் வீதியில் அமைந்த 24ஆம் இலக்க கட்டடத்தின் மேல்மாடிக்கு "மணிமகால்" எனப் பெயர் சூட்டி அதனை புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் காரியாலயம் இயங்குவதற்கும் பிற பொதுநலப் பாவனைக்கும் இலவசமாக 2010இல் வழங்கி தனது சமூகப்பணியின் உச்ச நிலையை வெளிப்படுத்தியுள்ளார். இவரது தந்தை யாரின் 31ஆம் நாள் ஆத்ம சாந்தி நிகழ்வில் 50இற்கு மேற்பட்ட க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு ஆசிரியர் சுகுமார் இயற்றிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நூலின் பிரதிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன் 10,000 ரூபாவை ஞாபகார்த்த நன்கொடையாகச் செலுத்தி அன்னாரின் பெயரால் நினைவுப் புலமைப்பரிசில் நிதியம் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

இவரின் சமூகப் பணிகளை முன்னிட்டு 2008.06.16இல் அரசினால் அகில இலங்கை சமாதான நீதவான் நியமனமும், கொழும்புத் தமிழ் மன்றத்தால் "சமூகஒளி விருதும்" 18.07.2010இல் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து "சமூகஜோதி" விருதும் வழங்கி கௌரவித்தனர். இவர் கனடாவிற்குச் செல்வதை முன்னிட்டு சிறப்பான பாராட்டு நிகழ்வும் நடைபெற்றது.

"சமூகஜோதி" திரு. சீனிவாசகம் செல்லத்துரை



உரும்பிராயில் சீனிவாசகம் செல்லாச்சி தம்பதிகளின் மூன்றாவது புதல்வனாகப் பிறந்தார்.இவர் தனது ஆரம்பக் கல்வியை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திலும் உயர்கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் கற்று S.S.C பின்பு H.S.C என உயர்கல்வி கற்றார்.

இவரது கல்வி அறிவு, முற்போக்குச் சிந்தனை, சேவை மனப் பாங்கு என்பன இவரை சமூகசேவையாளனாக வளர்த்தெடுத்தது. இவர்ஆரம்பத்தில் இருந்து பெரிய தொழிலதிபராகப் பணிபுரிந்தவர்.

இவர் 1969இல் உரும்பிராயைச் சேர்ந்த கமலா அவர்களை திருமணம் செய்து மூன்று பிள்ளைகளுக்கு தந்தையாவார். இவரது பிள்ளைகளும் சிறந்த முறையில் கல்வி கற்று லண்டனில் சிறப்பாக வாழ வழிகாட்டினார்.

இவருக்கு சிறுவயதில் இருந்து சமூக இலக்கியத்துறையில் அதிகநாட்டம் உண்டு. இந்த ஈடுபாடுதான் அவரை சமூகசேவையாளராக மாற்றியது எனலாம். இதன் விளைவாக 1980இல் மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் வெள்ளிவிழா மகாநாட்டில் உதயமான சமூக எழுச்சி இயக்கத்தை வளர்ப்பதற்கும், கொழும்பு மகாநாட்டில் ஆறம்சத்திட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட போதும், கிராமம் கிராமமாக கழகங்கள் அமைத்து கருத்துப்புரட்சியை நடாத்திய போதும், தொண்டமனாறு செல்வச் சன்நிதி ஆலயத்தில் 1981இல் சமாசம் ஆரம்பிக்கப்பட்ட போதும், முன்னோடித் தலைவரில் ஒருவராக இருந்து வழங்கிய சேவை மேலானதாகும்.

இவர் 1993இல் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கும், வளர்ப்பதற்கும் அந்நிதியப் பணிப்பாளராக பதவி வகித்து அதன் வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை வழங்கியுள்ளார். இவரது சேவைகளைப் பாராட்டி 2012ல் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து "சமூகஜோதி" விருது வழங்கிக் கௌரவித்தது குறிப்பிடத் தக்கது.

"சமூகஜோதி" திரு. சபாபதி சின்னையா

கோண்டாவிற்பதியில் சபாபதி- செல்லம்மா தம்பதியினருக்கு 01.10.1940இல் சின்னையா மகனாகப் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை கோண்டாவில் இந்து மகாவித்தியலயத்திலும் மேற்கல்வியை யா/யூனியன் கல்லூரியிலும் கற்று 1957ஆம் ஆண்டு S.S.C பரிட்சையில் சித்தியடைந்தார்.



1956இல் விவேகானந்தா சனசமூக நிலையத்தை ஆரம்பிக்க முயற்சி எடுத்து தொடர்ந்து இன்றுவரை அதனை வளர்க்க பெரும் எதிர்ப்புகளின் மத்தியிலும் வளர்ச்சியடையச் செய்தவர். சிறிய கொட்டிலாக இருந்த கோண்டாவில் ஞானவைரவர் ஆலயத்தை கிராம மக்களின் உதவியோடு பெருமளவு முதலீட்டில் பூரண அழகான கோவிலாக்கிய பெருமை இவரது தலைமையில் இடம்பெற்றது. அதன் மூலம் சமய மேம்பாட்டிற்கான சமய நிகழ்வுகள் ஒழுங்கு முறையாக நடைபெற வழிவகை செய்தார்.

திரு. வே.ச.சின்னையா அவர்கள் கோண்டாவிற்பதியில் கதிர்காமு தம்பதிகளின் மகள் தங்கரத்தினம் அவர்களை திருமணம் செய்து இல்லற வாழ்க்கையில் இணைந்து மோகனதாஸ், ரமேஸ்வரன், அகிலா என்ற பிள்ளைகளைப் பெற்றனர். பிள்ளைகள் கல்வி வாய்ப்பை பெற்று திருமணமாகி உயர் நிலையில் வாழ வழிகாட்டியுள்ளார். இவர் 1980 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் ஆரம்பித்த காலப்பகுதியில் எமது மக்களை சகல கிராமங்களிலும் ஒன்றிணைத்து ஒன்று சேர்க்கும் பணியில் சமூகமுன்னோடிகளுடன் இணைந்து கிராமம் கிராமமாக சென்று சமாசத்தின் செயற்திட்டங்களை எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். தொடர்ந்து சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தில் 1986 தொடக்கம் 2003 வரை பொதுச் செயலாளராகப் பதவிவகித்தார்.

இவரின் பொதுப் பணிகளைப் பார்க்கும்போது, கோண்டாவில் இந்து மகாவித்தியாலய அபிவிருத்திச் சபை உறுப்பினராக 1990 முதல் இன்றுவரை பதவி வகித்து வருகின்றார். நல்லூர் உ.அ.அ பிரிவிற்கு உட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளராக 1992 – 1994 வரை பதவி வகித்தவர். குறிப்பாக எமது சமூகத்திற்கும் தனது கிராமத்திற்குமான பொதுப் பணிகளில் இளவயதிலிருந்து இன்றுவரை எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும் சரியெனக் காணும் பட்சத்தில் அவற்றை செய்து முடிப்பதற்கு ஆவனசெய்தமை குறிப்பிடத்தக்கது. சமாசத்தின் பொதுச் செயலாளராக 1986ஆம் ஆண்டு முதல் 17 ஆண்டு காலம் சேவையாற்றி சமாசத்தின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்பு மகத்தானதாகும். தற்போது சமாசத்தின் போசகர் சபையில் அங்கத்தவராக இணைந்து பணியாற்றுதல் பாராட்டிற்குரியதாகும் இவரது அரிய சமூகப் பணிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் வண்ணம் 28.7.2013இல் நடைபெறவுள்ள பெருவிழாவில் இவருக்கு "சமூகஜோதி" விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

"சமூகஜோதி" அமரர் சோதிமுத்து முருகேசு



இவர் பண்டத்தரிப்புக் கிராமத்தில் 1933 ஆனி மாதம் 3ஆம் திகதி பிறந்தார். இவர் தனது கல்வியை S.S.C வகுப்புவரை கற்றார்.சிறந்த கல்வியறிவும், தொழிற்புலமையும் உடையவராவார். இவர் கட்டுவனைச் சேர்ந்த அரியமலரை தனது வாழ்க்கைத் துணையாக்கி சிறப்பாக வாழ்ந்தார்.

தனது கிராம அபிவிருத்தி, கிராமத்தின் ஒற்றுமை போன்ற விடயங்களில் அதிக அக்கறை கொண்டவர்.தொழிற் பெயர்ச்சி என்ற கொள்கைக்கு அமைவாக சிற்றூர்திச்சேவை, பல்பொருள் வாணிபம் போன்ற துறைகளில் ஈடுபட்டு சிறந்த தொழில் அதிபராக இருந்தார். தனது பிள்ளைகள் ஐவருக்கும் சிறந்த கல்வியறிவூட்டி அவர்களது தொழில் முயற்சிக்கு பேருதவியாக இருந்து வழிகாட்டினார். பண்டத்தரிப்புக் கிராமத்தைச் சேர்ந்த எம் சமூக உறவுகளை பலமான முறையில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் ஐக்கியப்படுத்தி அக்கிராம மேம்பாட்டிற்காக பண்டத்தரிப்பு சமூக முன்னேற்றக் கழகத்தை அமைத்து அதை வெற்றிகரமாகச் செயற்படுத்திய பெருமை இவருக்கு உண்டு.

1981ஆம் ஆண்டு சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசம் சன்னதி மகாநாட்டில் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னோடித் தலைவர்களுள் ஒருவராக இருந்துள்ளார். இவர் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகவும் பங்காளியாகவும் செயற்பட்டுள்ளார். பல ஆண்டுகளாக சமாசத்தின் நிர்வாகப் பொறுப்புகளில் நிதியத்தின் பணிப்பாளர்சபை உறுப்பினராகவும், சமாசத்தின் நிர்வாகியாகவும் ,போசகராகவும் செயலாற்றியுள்ளார்.

இவர் தனது பெயரால் நிதியத்திற்கு வழங்கிய சிறப்பு நன்கொடை 50,000ரூபாவும், அவர் உயிர் நீத்தபின் மறைந்த அன்பு நெஞ்சங்களின் பெயரால் ஸ்தாபிக்கப்பட்டு வரும் ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியங்களின் வரிசையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் சமாசம் ஆரம்பிக்கப்பட்ட 1980 முதல் அமரத்துவமடைந்த 01.08.2002 வரை 22 ஆண்டுகளாக ஒரு சிறந்த முன்னோடித் தலைவராக இருந்து சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்திற்கு வழங்கிய பங்களிப்பையும், 04.06.1993 முதல் அமரத்துவம் அடையும் வரை புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் மூலதன வளர்ச்சிக்கு வழங்கிய சிறந்த பங்களிப்பையும் நன்றியுணர்வோடு மதித்து இவரின் மறைவின் பின் சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசமும், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து "சமூகஜோதி" என்ற பட்டத்தை 29.02.2004இல் வழங்கிக் கௌரவித்தது.

"சமூகப்பற்றாளர்"
அமரர் திருமதி யோகராஜா நாகரத்தினம்

யாழ் நல்லூர்ப்பகுதியில் சுப்பையா சிதம்பரம் தம்பதியின ரின் புத்திரியாக 1918.07.10 இல் நாகரத்தினம் பிறந்தார். இவர் இளம் பிராயத்திலேயே துடிப்பு மிக்கதோர் சிறுமியாக விளங்கினார். ஆரம்பக் கல்வியை யாழ். நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலையிலும் உயர் கல்வியை யாழ் வேம்படி மகளீர் உயர்தரப் பாடசாலையிலும் பயின்று சிரேஸ்ட பாடசாலைச் சான்றிதழையும் பெற்றார். (S.S.C) கோப்பாய் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் தமிழ் ஆசிரியராகக் கடமையாற்றினார்.



முதற் பெண் ஆசிரியராக எம்மவர் மத்தியில் திகழ்ந்த நாகரத்தினம் அவர்கள் சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னம்மாவின் மகனான யோகராஜாவை திருமணம் செய்து கொண்டார். கடமையே கண்ணாகக் கொண்ட காவல்துறை உத்தியோகத்தரான யோகராஜா திருமணமாகி ஒரு வருடத்தில் கடமையில் இருந்தபோதே மாரடைப்பால் இம்மண்ணை விட்டுப் பிரிந்தார். இதன் பின் தனிமையில் இருந்த திருமதி யோகராஜா தனது கடமையில் மேலும் விழிப்பானார்.

யாழ் பரியோவான் கல்லூரியில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக இணைந்தவர் இறுதி மூச்சுவரை அப்பாடசாலைக்காகவே உழைத்தார். இவரது சமூகத் தொண்டு என்று பார்க்கும் போது தனக்கு பிள்ளைகள் இல்லாதபோதும் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பிள்ளையையும் தனது பிள்ளையாகவே நோக்கினார். வறுமை கல்விக்கு தடையாக இருக்கக்கூடாது சமூகத்தில் எந்த வேறுபாடும் இன்றி மாணவர்கள் அன்போடும் ஒற்றுமையோடும் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கில் வீட்டில் மாலை நேரத்தில் அனைத்து மாணவர்களையும் அழைத்து இலவசமாகக் கல்வி போதித்தவர். இவ்வாறாகக் கல்வி போதித்தலையே தனது நோக்கமும் தியாகமுமாகக் கொண்டவர்.

சமாசத்திற்கு இவரது பங்களிப்பு என்று பார்க்கும் போது திருவாளர் செல்லத்தம்பி தலைவராக இருந்த போது சமாசம் என்ற பெயரின்றி கழகம் என்ற பெயருடன் எமது இயக்கம் தமது சேவையை செய்தது. இக்கால கட்டத்தில் உபதலைவராக திருமதி யோகராஜா நாகரத்தினம் நல்லூர்க் கிராமத்தில் இருந்துள்ளார். இலவசக் கல்வியை போதித்தல் ஆங்கிலக் கல்வியை போதித்தல், வீட்டில் முடங்கிக் கிடந்த இளம் பெண்களுக்கு தையல் பயிற்சியளித்தல், போட்டிகள் நடாத்தி பரிசுகள் வழங்குதல், சுயதொழில் ஊக்குவிப்பு கைப்பணிகள் என்று எமது கழகத்தினூடாக எம் சமூகப் பிள்ளைகள் மட்டுமன்றி பிற சமூகப் பிள்ளைகளும் பயன் பெறும் வகையில் இந்தப் பணிகளை அர்ப்பணிப்புடன் செய்துள்ளார்.

இந்த வகையில் இவரும் 1994 ஆம் ஆண்டு இறக்கும் வரை தன் பணியில் தளராது பல கல்வியாளர்களின் வளர்ச்சிக்கு அத்திவாரம் இட்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. சமாசத்தின் மாதர் அணிக்கு மூத்த தலைவியாக இருந்து மாதர் சமூகத்தின் பங்களிப்பை வளர்த்துச் செல்வதற்கு இவரின் காத்திரமான பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

"சமூக பற்றாளர்' திரு. முத்தையா செல்லத்தம்பி

நல்லூர்ப்பதியில் 1929.5.17ஆம் திகதி முத்தையா கனகம்மா தம்பதிகளின் புத்திரனாக செல்லத்தம்பி பிறந்தார். இவர் தனது கல்வியை பரியோவான் கல்லூரியில் தொடர்ந்து சிறப்பான சித்திகளைப் பெற்றார். பின்னர் இலங்கையின் வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் பயின்று வைத்திய ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் பரீட்சையில் சித்தி பெற்று இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் பணியாற்றினார். ஏறத்தாழ 35 வருடங்களாக வைத்திய சேவைக்காக தன்னை அர்ப்பணித்தார்.



இவர் நல்லூரைச் சேர்ந்த பவளம் என்பவரை திருமணம் செய்து இல்லறவியலை நல்லறமாக வாழ்ந்து மூத்த மகள் அஜந்தாவை நீதிமன்றச் சுருக்கெழுத்தாளராகவும், இளைய மகள் சுகிர்தாவை ப.நோ.கூ. சங்கத்தின் எழுதுவினைஞராக்கி அவரைத் திருமணத்தின் பின் பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்பி வைத்தார்.

இவர் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின் பகுதி நேர ஆங்கில ஆசிரியராக 3 ஆண்டு கடமையாற்றினார். சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் சேவைகளில் தன்னை இணைத்து ஆயுட்கால உறுப்பினராகவும், உபதலைவராகவும், போசகராகவும், நல்லூர்ப் பிராந்திய நிர்வாகத்துடனும் இணைந்து செயலாற்றி ஆலோசனைகளையும் வழங்கி வந்தார். தனது சேவையை எம்முடன் மட்டுப்படுத்தாது நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளராகவும், உப தலைவராகவும், பணியாற்றினார். யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் நல்லூர் மத்திய கிளைச் செயலாளராகவும், நல்லூர் ஞான ஒளி மன்ற ஸ்தாபக உறுப்பினராகவும், தலைவராகவும், போசகராகவும், விளங்கி பல்வேறு சேவைகளிலும் தன்னை இணைத்துக் கொண்டார்.

இவரது சேவைகளை மதித்து இவரின் மறைவின் பின் சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து "சமூகஜோதி" என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இவருடைய மகள் அஜந்தா லோகேஸ்வரன் அண்மையில் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தில் ஒரு அங்கத்தவராக நியமனம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

"சமூகப்பற்றாளர்" திரு. கந்தையா சிவஞானம்

மாவிட்டபுரத்தைச் சொந்த இடமாகக் கொண்ட அமரர்களான கந்தையா, கனகம்மா தம்பதியினருக்கு 1953.11.16 ஆம் திகதியன்று மூத்த புதல்வனாக பிறந்தார். இவர் மாவிட்டபுரம் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்ததைத் தொடர்ந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், கொழும்பு இந்துக் கல்லூரியிலும் க.பொ.த உயர்தரம் வரை கற்றுள்ளார்.பொருட்கொள்வனவு விநியோகத்துவ டிப்ளோமாப் பட்டத்தை South -East Londan Technical College இல் பெற்றுள்ளார். இலங்கையில் ஹோட்டல் கணக்கியல் துறையிலும் இலண்டனில் இயந்திர தொழில்நுட்பத் துறையிலும் சேவையாற்றிய அனுபவம் பெற்றவர்.



1988 இல் நவரத்தினம் ரூபிகா அவர்களைத் திருமணம் செய்து கொண்டு கபிலிசா, லக்சன் ஆகிய இரு பிள்ளைகளுக்குப் பெற்றோரானார். கபிலிசா லண்டனில் இளமாணிப் பட்டத்தைப் பெற்று ஸ்பெயின் நாட்டில் பல் வைத்தியத் துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளார். லக்சன் மன்ஜெஸ்ரர் Manchester பல்கலைக் கழகத்தில் M.B.B.S பட்டப் படிப்பை மேற்கொண்டுள்ளார்.

திரு. சிவஞானம் அவர்கள் தனது தந்தையாரைப் பின்பற்றி தனது கிராமத்தின் சமய சமூக வளர்ச்சிக்கு தொண்டாற்றி வருகின்றார். மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ச்சியாகப் பங்காற்றி வருவதோடு 1980 ஆம் ஆண்டு முதல் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தை ஸ்தாபித்து வளர்ப்பதற்கும் 1993 இல் ஆரம்பிக்கப்பட்ட புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தை வளர்ப்பதற்கும் இவர் முன்னின்று உழைத்து வருகின்றார்.

2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்த நிவாரணத்திட்டம் 2009 ஆம் ஆண்டு வன்னி மக்களுக்கான அவசர நிவாரணத்திட்டம் அத்துடன் 2010 ஆம் ஆண்டு முதல் வன்னி மாணவர்களுக்கான கல்வி உதவித்திட்டம் ஆகியவற்றின் வெற்றிக்கு முன்னின்று உழைத்தார். எமது எழுச்சி இயக்கத்தினதும், எழுச்சித் தந்தை இ.மு.நாகலிங்கம் அவர்களினதும், எழுச்சிச் சிந்தனைகள், எழுச்சிக் கோட்பாடுகள் ஆகியவற்றை பதிவாக்கும் பொருட்டு "எழுச்சிப்பாதை" எனும் நூலை வெளியிடுவதற்கு பொறுப்பான பிரதம நூற்குழுவில் பொருளாளராக இருந்து அளப்பரிய பொறுப்பை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு மிகுந்த அர்ப்பணிப்போடு உழைத்து வருகின்றார்.

இவரது உயர்வான பணிகளை மதித்து 2010 இல் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து நடாத்திய முப்பெரும் ஆண்டு விழாவில் "சமூகப் பற்றாளர்" விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. 2013 இல்

"தர்மஜோதி" விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். சிறு வயதில் இருந்து சமூகப்பற்று, சமய, இன, மொழிப்பற்றோடு தனது சேவையை மட்டுமல்லாமல் தாராளமான நிதிக் கொடை மூலமும் பங்காற்றி ஒரு சமூக முன்னணித் தலைவராகப் பரிணமித்துள்ளார் எம் சமூக இயக்கத்தின் எதிர்காலம் இவர் போன்ற இளைய தலைவர்களின் தலைமையிலேயே தங்கியுள்ளது என்றால் மிகையாகாது.

"சமூகஜோதி" திரு.கணபதி மயில்வாகனம்

மாவையூரில் கணபதிக்கும் மாரிமுத்துவிற்கும் 1943.04.15இல் இவர் பிறந்தார். இவர் 1969-1971 வரை சேர் பொன்.இராமநாதன் கனிஸ்ட பல்கலைக் கழகத்தில் கல்வி கற்று Diploma in Book-keeping என்ற தகைமைச் சான்றிதழைப் பெற்றார்.

1976ஆம் ஆண்டு மே 14ஆல் மனோரஞ்சிதம் என்பவரை திருமணம் செய்து இல்லற வாழ்க்கையில் இணைந்து கொண்டார். தமது புத்திரியான கோபினா அவர்களுக்கு சிறந்த முறையில் கல்வி கற்பித்து ஆளாக்கியுள்ளார்.



தனது தொழிற்பயிற்சியுடன் கூடிய சமய சமூக பொதுப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தினார். அத்தோடு மாவை பாரதி சனசமூக நிலையத்துடனான மாவிட்டபுரம் இந்துமயான அபிவிருத்திக்கும் செயற்பட்டார். 1969-1990 காலப் பகுதியில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தில் இணைந்து இணைச் செயலாளராகவும், பொருளாளராகவும் செயற்பட்டார். காந்தி நிலையம், சிறுவர் இல்லத்தின் கௌரவ பொறுப்பாளராக இருந்து கடமையாற்றினார். எமது சமூக வளர்ச்சிக்கும் எழுச்சிக்குமான சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் பிரதான செயற்பாடுகளில் எழுச்சித் தந்தையின் வழி நின்று செயற்பட்டவர். 2004.01.14 – 2012.05.18 வரையுள்ள காலப் பகுதிகளில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் நிர்வாக சபையில் தலைமைப்பதவியைப் பெற்று சிறப்பாகச் செயற்பட்டார்.

இவரது சிறப்பான செயற்பாட்டை பாராட்டி 2012 ஆம் ஆண்டு சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து நடாத்திய முப்பெரும் ஆண்டு விழாவில் "சமூகஜோதி" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.சமாசத்தின் போசகர் சபையில் ஓர் அங்கத்தவராக இருந்து சமாசத்தின் செயற்பாடுகளுக்கு உதவுவதுடன் சமாசத்தைச் சார்ந்த முதன்மைப் பயனாளிகளின் இல்லங்கள் தோறும் நடாத்தப்படும் சமூகவைபவங்களில் பங்குபற்றி மக்கள் மத்தியில் எழுச்சிக் கருத்துக்களைத் தொடர்ந்தும் பரப்பி வருகிறார்.

"சமூகஜோதி" கந்தையா நடேசன்

வடமராட்சி மண்ணின் பருத்தித்துறைப் பகுதியில் புற்றளைக் கிராமத்தில் வாழ்ந்த கதிர்காமு கந்தையாவுக்கும் சின்னத்தம்பி சின்னம்மாவிற்கும் மூன்றாவது புத்திரனாக 23.03.1939ஆம் ஆண்டு பிறந்தார். நீர்கொழும்பில் "தங்கொட்டுவ" பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியைத் தொடங்கி S.S.C வரையான கல்வியைக் கற்றுத் தேர்ந்தார்.

1946 -1958 வரை கல்வி பயின்ற இவர் சிரேஸ்ட பாடசாலைச் சான்றிதழ் பெற்ற பின்னர் "விசேட சிங்களப் பயிற்சி ஆசிரியராக 1968-1969 காலத்தில் களுத்துறை, கட்டுகுருந்தை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியராக வெளியேறினார்.



இக்காலத்தில் சொக்கலிங்கம் பரஞ்சோதி தம்பதியினரின் ஏகபுத்திரியான வனிதாமணியை 1968.11.13ஆம் திகதி திருமணம் செய்து கிருசாந்தி, சுஜீவன் என்ற இரு பிள்ளைகளைப் பெற்று அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழியமைத்துக் கொடுத்தார்.

இவர் ஆசிரியச் சேவையில் 1966 -1992 வரை கடமையாற்றினார் இதன் பின்னர் இலங்கை அதிபர் தரம் 2இல் சித்தி பெற்று அதிபராக சிங்கள மகாவித்தியாலயம் யாழ்ப்பாணத்தில் 1995 வரை கடமையாற்றிய பின்னர் யாழ் சென்மேரிஸ் கல்லூரியில் 1995 தொடக்கம் ஓய்வு பெறும் காலம் வரை உப அதிபராகவும் இருந்து தனது கடமையைச் சிறப்பாகச் செய்துள்ளார்.இவரது மேலதிக சேவைகளாக பகுதி நேர விரிவுரையாளர் 1979 -1983 ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாயிலும் ஆரம்பக் கல்வி ஆசிரியர் கல்வித் தமிழ் பாடநெறி தயாரிப்புக்குழு அங்கத்தவர் - 1985- 1989 வரை தொலைக்கல்வி நிறுவகம் மகரகமவிலும் கடமை புரிந்துள்ளார். தற்போது ஓய்வின் பின்னரும் யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராக 2004 தொடக்கம் இன்றுவரை கடமையாற்றி வருகின்றார்.

இவரது பொதுச்சேவைகளைப் பொறுத்தவரை நல்லூர் சமூக முன்னேற்றக் கழகங்களின் ஆரம்பகால செயற்குழு உறுப்பினராகவும், ஆலோசகராகவும் சேவையாற்றி 2007 தொடக்கம் நல்லூர் பிராந்திய சபைத் தலைவராகவும் இன்றுவரை கடமையாற்றி வருகின்றார். இவர் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் J/ 107 இராசதானி நல்லூர் கிராமசேவையாளர் பிரிவு கிராமிய சிவில் பாதுகாப்புக்குழு தலைமைப் பதவியை பொறுப்பேற்று செயற்பட்டு வருகின்றார். இவரது சேவையைப் பாராட்டி 2012.01.22 இல் சமாசமும் நிதியமும் வழங்கிய "சமூகஜோதி" விருதினையும் பெற்றுள்ளார்.

"சமூகப்பற்றாளர்" திருமதி புஸ்பராசமணி ஆனந்தராசா



மீசாலைப்பதியில் சிதம்பரப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் மகளாக 1958ஆம் ஆண்டு மார்கழி 5ஆம் திகதி பிறந்த புஸ்பராசமணி அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை யா/மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் தரம் 1-11 வரை கற்றார். 1977இல் கலைப்பிரிவில் க.பொ.த உயர்தரக் கல்வியை யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கற்றார். 1979இல் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவானார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானம் என்ற பாடத்தைச் சிறப்புக் கற்கை நெறியாகத் தெரிவுசெய்து 1985இல் அரசியல் விஞ்ஞான சிறப்புப்பட்டதாரி என்ற பட்டச் சான்றிதழைப் பெற்றார்.

இவர் 1990ஆம் ஆண்டு சித்திரை 16ஆம் திகதி மல்லாகம் பதியில் வாழ்ந்த தம்பிமுத்து மகேஸ்வரியின் மகனான ஆனந்தராசாவை திருமணம் செய்து இல்லற வாழ்க்கையில் இணைந்து கொண்டார். இவரது பிள்ளைகளான சுஜீவன் மாயவரன், சிந்துஜன், யானுசன் ஆகிய நான்கு பிள்ளைகளும் தற்போது கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர் 1985இல் ஆசிரியராக தொழில் வாய்ப்புப் பெற்று இரத்தினபுரி மாவட்டத்தில் இறக்குவானை புனித பரியோவான் தமிழ் மகா வித்தியாலயத்தில் 3வருடங்கள் கடமையாற்றினார். 1988இல் இடமாற்றம் பெற்று யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 1999 வரை 10ஆண்டுகள் கடமையாற்றினார். 1997இல் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்து கொண்டார். 1999இல் யா/கட்டுவன்புலம் மகாவித்தியால யத்தில் ஆசிரியராக கடமையாற்றி தற்போது உபஅதிபராக சேவையாற்றி வருகிறார். ஆசிரியப்பணியோடு சமூகப்பணியிலும் தம்மை ஈடுபடுத்தி கொண்டவர். இவரது மாணவப்பருவத்தில் 1982 காலப் பகுதியில் சமூகமுன்னேற்ற கழகங்களின் சமாசத்தின் பிராந்திய மாணவர் மன்றங்கள் செயற்பட்ட காலமாகும். இக் காலப் பகுதியில் தென்மராட்சி பிராந்திய மாணவர் மன்றத்தின் செயலாளராகப் பதவியேற்று எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் இலவசமாக கற்றல் செயற்பாடுகளை படித்த மாணவர்கள் மூலம் நடாத்தி ஊக்கமளிக்கப்பட்டது.

எழுச்சித் தந்தை இ.மு.நாகலிங்கம் அவர்களின் வழிகாட்டலில் சமூகமுன்னேற்ற கழகங்களின் சமாசமும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து நடாத்தும் சமூகமுன்னேற்ற செயற்பாடுகளிலும் இணைந்து செயற்பட்டு வருகிறார். 2010இல் நடைபெற்ற முப்பெரும் ஆண்டு விழாவில் "சமூகப்பற்றாளர்" என்ற விருது இவருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. தற்போது மானிப்பாய் பிராந்திய சபையின் தலைவராகவும் சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் சிரேஸ்ட பிரதித் தலைவராகவும் செயற்பட்டுவருதல்

குறிப்பிடத்தக்கது.எமது சமூக எழுச்சி இயக்கத்தின் சமூகமேம்பாட்டுப் பணிகளுக்கு பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற மாதர் பலர் சிறப்பாக கல்விமேம்பாட்டிற்கு பங்காற்றி வருகின்றார்கள். அவ்வரிசையில் அவர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக இருந்து கல்விப் பணிப்பாளர் பதவி, பிராந்தியசபைத் தலைவர் பதவி, சிரேஸ்ட பிரதித் தலைவர் பதவி என்பவற்றை மிகுந்த அர்ப்பணிப்போடும் சமூகப் பற்றோடும் செய்து வருகின்றார். எமது சமூகஎழுச்சி இயக்கத்தின் 65ஆண்டுகால பரிணாம வளர்ச்சி வரலாற்றை ஆவணப்படுத்தும் நோக்குடன் "எழுச்சிப்பாதை" என்ற நூல் வெளிவருவதற்கு இரவு,பகல் பாராது சேவையாற்றி வருகின்றார். எழுச்சிஇயக்கத்தை தொடர்ந்தும் வளர்த்துச் செல்வதற்கான தலைமைப் பொறுப்பை வகிக்கக் கூடிய முதிர்ச்சியும் அனுபவமும் திறமையும் உண்டு என்பதை இவரின் செயற்பாடுகள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

திரு.செல்லத்துரை ஜெகதாசன்



இவர் மாவிட்டபுரத்தில் செல்லத்துரை செல்லக்கண்டு தம்பதிகளின் புதல்வனாக 1968.10.03இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த உயர்தரக் கல்வி வரையும் யா/யூனியன் கல்லூரியில் கற்றார். இவர் க.பொ.த உயர்தரத்தில் வணிகக் கல்வியை கற்று சிறந்த பெறுபேற்றையும் பெற்று 1989ல் யாழ் பல்கலைக் கழகத்திற்கு தெரிவானார். பல்கலைக் கழகத்தில் கற்கை நெறியைப்பூர்த்தி செய்து 1993இல் வியாபார நிர்வாகமாணி B.B.A என்ற பட்டச் சான்றிதழைப் பெற்றார்.

இவர் 24.01.2000ஆம் ஆண்டில் உரும்பிராயில் வாழ்ந்த வைத்திய கலாநிதி உமா என்பவரை திருமணம் செய்து இல்லற வாழ்க்கையில் சிறப்புடன் வாழ்ந்து லோஜிகா, சௌமியா என்ற இரு புதல்விகளைப் பெற்று பிள்ளைகளுக்கு சிறந்த முறையில் கல்வியறிவூட்டி வருகின்றனர்.இவர் 1998-2003 காலப் பகுதியில் விவசாய சேவைத் திணைக்களத்தில் Divisional officer ஆகவும், 2003-2011வரை புளோரன்ஸ் மெடிக் கிளினிக் என்ற தனியார் மருத்துவ நிலையத்தில் முகாமைப் பணிப்பாளராகவும் சேவையாற்றி தற்போது குடும்பத்துடன் இலண்டனில் வசித்து வருகிறார். அங்கும் Stafford Collegeஇல் கற்று சிறப்புக் கணக்கியல் டிப்புளோமா பட்டத்தைப் பெற்றுள்ளார்.

இவர் சிறுவயதிலிருந்தே மாவை விநாயகர் ஆலயம், மாவை அம்பாள் ஆலயத்திலும் மிகுந்த ஈடுபாடுள்ளவர். அத்தோடு மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தில் மாணவப் பருவத்திலிருந்து பணியாற்றி, மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி போதித்தும் வந்தார்.

அத்தோடு 1991இல் சமூக முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும், 1992 -1994 வரை மாணவர் ஒன்றியத்தின் தலைவராகவும் செயலாற்றியுள்ளார். 1996ல் இருந்து நிதியத்தின் பணிப்பாளராகவும், 2010வரை முகாமைப் பணிப்பாளராகவும் இருந்து எழுச்சித்தந்தை இ.மு.நாகலிங்கம் அவர்களின் ஆலோசனைக்கிணங்கச் செயற்பட்டு வருகிறார்.

இவர் தற்போது லண்டனில் வசித்து வந்தாலும் சமூக முன்னேற்றக் கழகங்களினதும், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் வளர்ச்சிக்கு தொடர்ந்து சேவையாற்றி வரும் இளம் தலைவர்களில் ஒருவராவார். எமது சமூக எழுச்சி இயக்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு செயற்திறனுடனும் சமூகப் பற்றுடனும் சேவை உணர்வோடும் தொண்டாற்றக்கூடிய இளைஞர்கள் வரிசையில் இவர் முக்கிய இடத்தை பெற்றிருப்பதை இவரது அன்று தொட்டு இன்று வரையுள்ள செயற்பாடுகள் எமக்கு உணர்த்துகின்றன. 2004இல் சுனாமி அவசர நிவாரணத் திட்டத்தை அகில இலங்கைரீதியாக அமுல்படுத்தவும், 2009ஆம் ஆண்டு போரினால் அனாதைகள் ஆக்கப்பட்ட வன்னி மக்களுக்கு அவசர நிவாரணத் திட்டத்தையும், 2011முதல் அமுல்படுத்தப்பட்டு வரும் வன்னி மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டுத் திட்டத்தையும் செயற்படுத்துவதற்கு கடமையுணர்வோடு அவர் வழங்கிய பங்களிப்பு முக்கியமானதாகும்.

"எழுச்சிப்பாதை" என்ற நூல் வெளிவருவதற்கு முக்கிய காரணகர்த்தாக்களில் ஒருவராக இருந்து முதன்மை நூற் குழுவின் செயலாளராக இருந்து வகித்த சிறப்பான பாகத்தை நாம் நன்றியுணர்வோடு பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

"புரட்சிஜோதி" திரு. இராமு குணரத்தினம்



இலங்கைத் திருநாட்டின் சென்னி என விளங்கும் யாழ் நகரில் வயலும் வயல் சூழ்ந்த மூளாய் எனும் அழகிய கிராமத்தில் இராமு தெய்வநாயகி தம்பதிகளின் மூத்த புதல்வனாக 1952ஆம் ஆண்டு பங்குனி மாதம் 23ஆம் திகதி இராமு குணரத்தினம் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் கற்றார். இவரது தந்தை மலேசியாவில் இருந்த போதிலும் அவரது வருமானம் குடும்பச் செலவினை ஈடுசெய்வதற்கு போதுமானதாக இல்லாததால் இவர் தனது கல்வியை இடைநிறுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சிறுவயதில் இவர் கைத்தொழிலைக் கற்று தனது குடும்பத்திற்கு உதவியாக இருந்தார். 1970 தொடக்கம் 1980 வரை கொழும்பில் தொழில் செய்தார். அதன் பின்னர் 1980 இல் சிங்கப்பூரில் National Panasonic (Japan) Company இல் Machine Operater ஆக வேலை வாய்ப்புக் கிடைத்து. 1984 வரை வேலை செய்தார். 1984ஆம் ஆண்டு மீண்டும் இலங்கைக்கு திரும்பி வந்த வேளை காரைநகர்

அழகாபுரியைச் சேர்ந்த தம்பிராசா தனலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வி பத்மலதாவைத் திருமணம் செய்து இல்லற வாழ்க்கையில் தாரகா, கார்த்திகாவுடன் ஹரிகாந்த், ஹரிசாந் என்னும் இரட்டைக் குழந்தைகளாய் இரட்டிப்புச் சந்தோசத்துடன் 4 பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். 1988ஆம் ஆண்டு தன் குடும்பத்துடன் கொழும்பு காக்கைதீவில் வீடு வாங்கி சிறப்பாக இன்று வரை வாழ்ந்து வருகின்றார். 1990 - 1993 வரை "Taj Music lodge & Restuarant - Singapore இன் உரிமையாளராக இருந்தார். அதில் ஏற்பட்ட தொழில் நட்டம் காரணமாக அத் தொழிலைக் கைவிட்டு வெளிநாட்டு முகவராகச் செயற்பட்டு பல நூற்றுக்கணக்கான எமது சமூக உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்கு உதவி செய்தார். அதன் பின்னர் சுயதொழில் ஆரம்பிக்க வேண்டும் என எண்ணி Ram Gunaa Cosmetic Center எனும் நிறுவனத்தை ஆரம்பித்து இன்றுவரை சிறப்பாக இயக்கி வருகின்றார்.

இவர் சமாசத்தின் ஆறு அம்சக் கொள்கைப் பிரகடனத்தால் ஈர்க்கப்பட்டு சமாசத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் இணைந்து செயற்பட்டு வந்துள்ளார். 1993 முதல் புனரவாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஆரம்பித்து வளர்ப்பதற்கு இவர் முன்னின்று உழைத்து வருகின்றார். நிதியத்தின் 50,000 ரூபா பெறுமதியான 10 பங்குகளை ஒரே முறையில் கொள்வனவு செய்து நிதியத்தின் மூலதன வளர்ச்சிக்கு ஆரம்பத்தில் முன்மாதிரியாகச் செயற்பட்டவர். இவர் ஆரம்பத்திலிருந்து நிதியத்தின் பணிப்பாளர் சபையில் ஒரு அங்கத்தவராக இருந்து பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு சமூகமளித்து அதன் செயற்பாடுகளுக்கு தன்னாலான பங்களிப்புக்களை வழங்கியுள்ளார். 2004 இல் அமுல்படுத்தப்பட்ட சுனாமி அனர்த்த அவசர நிவாரணத்திட்டத்திற்கு முன்னின்று உழைத்துள்ளார். வன்னிப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர நிவாரணத் திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கும் வன்னி மாணவர்களுக்கான கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் இவர் முன்னின்று உழைத்துள்ளார். விசேட அவசர நிவாரணத் திட்டங்களுக்கும் கல்வி நன்கொடை வழங்குவதற்கும் இவர் காருண்ய உள்ளத்தோடு நிதி நன்கொடை வழங்கியுள்ளார். 2012 இல் நடைபெற்ற முப்பெரும் ஆண்டு விழாவிற்கு சமூகமளித்திருந்த 1000 இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகளுக்கு மதியபோசன உணவு அனுசரணை வழங்கி ஆதரவளித்துள்ளார். கேட்ட பொழுதெல்லாம் மறுக்காமல் உதவுகின்ற அனைவரையும் கவர்ந்த அவரின் பண்பு மேலானதாகும். இவருக்கு 2013 ஆம் ஆண்டுப் பெருவிழாவில் "புரட்சி ஜோதி" விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். இவ்விருதானது எம் மக்கள் மரபுவழித் தொழிலில் இருந்து விடுபட்டு பெரும் எண்ணிக்கையில் தொழிற் பெயர்ச்சி அடைவதற்கு இவர் வழங்கிய மகத்தான சேவையை மதித்து இவ்விருது வழங்கப்படுகின்றது. குடிமைத் தொழில் ஒழிப்பு, மரபு வழித் தொழில் விலங்கை இல்லாது செய்வதற்கான முயற்சிகள் வெற்றிப் பாதையில் செல்வதை விரைவுபடுத்துகின்ற ஒரு பெரும் கைங்கரியத்தை இவர் செய்துள்ளார் என்று கூறலாம். இவர் சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் கொழும்புப் பிராந்தியப் பொதுச் சபையின் தலைவராக செயலாற்றி வருதல் குறிப்பிடத்தக்கதாகும்.

"சமூகஜோதி" திரு. சபாபதி ஆனந்தன்



சமூகஜோதி சபாபதி ஆனந்தன் அவர்கள் 1938 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 16 ஆம் திகதியன்று காலம் சென்ற சபாபதி வள்ளிப்பிள்ளை தம்பதியினருக்கு சிரேஸ்ட புதல்வனாக அராலி வடக்கில் பிறந்தவராவார். இவர் அராலி இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பூர்த்தி செய்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கில மொழியில் 2ஆம் நிலைக் கல்வியைப் பூர்த்தி செய்துள்ளார். தொடர்ந்து வர்த்தகத் துறையில் ஈடுபட்டு படிப்படியாகத் தையற் தொழிற்சாலையொன்றின் முதல்வராக பணிபுரிந்து பலர் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கு துணைபுரிந்துள்ளார். 1965 ஆம் ஆண்டில் இவர் அராலியைச் சேர்ந்த முருகேசு இராசம்மாவைத் திருமணம் செய்து 5 பிள்ளைகளைப் பெற்று சிறந்த குடும்பத் தலைவனாக வாழ்ந்துள்ளார். சிறு வயதிலிருந்தே சாதிக் கொடுமைக்கு எதிராகவும் இன ஒடுக்கு முறைக்கு எதிராகவும் தன்னையே உருக்கி உழைத்த பெருமை இவருக்குண்டு

சொந்தக் கிராமத்தின் வளர்ச்சி, சமூகங்களிடையே ஐக்கிய வளர்ச்சி, சமூகங்களிடையே எழுந்த பிரச்சனைகளை சுமூகமாகத் தீர்த்தல், ஆதரவற்ற பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவியளித்தல் போன்ற நற்பணிகளைச் செய்துள்ளார்

அராலி அறிவொளிக் கழகத்தின் தந்தையாக இருந்து அக்கிராம மக்களின் கல்வி, கலாசார வளர்ச்சிக்கு சிறந்த வழிகாட்டித் தலைவராகவும் வழிகாட்டி யுள்ளார். 1980இல் எம் சமூக மக்களுக்கான எழுச்சி இயக்கத்தை ஸ்தாபித்து வளர்த்து 1981இல் எம் மக்களுக்கான தலைமை நிறுவனமான சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தை ஸ்தாபிப்பதற்கும், 1993இல் சமூக வங்கியான புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கும் முன்னோடிப் பங்கினை வகித்துள்ளார்.

சமாசத்தினதும், நிதியத்தினதும் அரும்பணிகளுக்கு பெரும் உயர்வான சேவையை வழங்கியுள்ளார். புனர்வாழ்வு கல்வி அபிவிருத்திநிதியத்தின் பணிப்பாளர் சபையில் ஆரம்பகாலம் தொட்டு இன்று வரை பணிப்பாளர் சபை அங்கத்தவராக இருந்து வருகின்றார். எமது பணிப்பாளர் சபையில் முகாமைப் பணிப்பாளராக சேவையாற்றிய பெருமை இவருக்கு உண்டு. புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர் சபைச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு இவரது அயராத உழைப்பு பாராட்டுக்குரியதாகும்.

எம் மக்கள் வளர்ச்சி பெற்ற, உயர்ச்சி பெற்ற சமத்துவம் பெற்ற, சமூக அந்தஸ்துப் பெற்ற ஒரு சமூகமாக பரிணமிப்பதற்கு இவரது துணிச்சலான காத்திரமான பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாக இவருக்கு சமாசமும் நிதியமும் இணைந்து "சமூகஜோதி" விருது வழங்கிக் கௌரவித்துள்ளனர்.

"சமூகப்பற்றாளர்" திரு. யேசுதாசன் காணிக்கைநாதன்

நவாலியூரில் யேசுதாசன் திரேசம்மா தம்பதிகளின் மகனாக 30.12.1955 ஜேசுதாசன் காணிக்கைநாதன் மகனாகப் பிறந்தார். 1961-1970 வரை நவாலி சென்பீற்றர்ஸ். றோ.க.த பாடசாலையிலும் 1971-1972 வரை சென்ற் ஆன்ஸ் றோ.க.த பாடசாலையிலும் 1973-1977 வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கா.பொ.த. உயர் தரம் வரை கற்றார். இதனைத் தொடர்ந்து 1982ம் ஆண்டிலிருந்து உள்ளூராட்சித் திணைக்களத்தில் சிற்றூளிய ராக இணைந்து 1999ம் ஆண்டு உள்ளூராட்சிச் சேவையில் வருமான மேற்பார்வையாளராக பதவியுயர்த்தப்பட்டார். தொடர்ந்து சேவை யாற்றிய இவருக்கு 2005ஆம் ஆண்டு நடந்த பொது நிகழ்வின் போது வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினால் "சிறந்த உள்ளூராட்சிச் சேவையாளன்" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப் பட்டது. தற்போது வருமானப் பரிசோதகராக பதவியுயர்வு பெற்று கடமையாற்றி வருகிறார்.



இவர் 14.05.1987ஆம் ஆண்டு முல்லைத்தீவில் புதுக்குடி யிருப்பைப் சேர்ந்த செபமாலை மேரி யோசேப்பின் மகளான புஸ்பராணியை திருமணம் செய்து இல்லற வாழ்க்கையில் இணைந்து கொண்டார். இதன் பலனாக மேரி அல்பெற்றா, பிரியந்தினி ஆகிய இரு புதல்விகளைப் பெற்று கல்வியறிவூட்டி தற்போது உயர் கல்விபெற்று வருகின்றனர். இவ்வருடம் இவரது மூத்தபுதல்வி யாழ் பல்கலைக் கழகத்தில் இளமாணிப் பட்டப் படிப்பிற்கு அனுமதி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

2000ஆம் ஆண்டில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் உறுப்பினராக இணைந்து கொண்டார். 2004-2012 வரை சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் பிரதம செயலாளராகக் கடமையாற்றி தற்போது பிரதம இணைப்பாளராகவும் சமூக வளர்ச்சிக் கும், எழுச்சிக்கும் பணியாற்றி வருகிறார். எம் மக்கள் சமூகமானது ஏனைய சமூகக் குழுமம் மத்தியில் கல்வியால், தொழிலால், பொருளாதாரத்தால், ஐக்கியத்தால், ஒழுக்கத்தால், பண்பாட்டால் சமத்துவம் பெற்ற சமூகமாக உயர்ச்சி பெறவேண்டும் என்ற உயரிய இலக்கோடு சேவையாற்றி வருகின்றார்.

இவர் ஓர் கிறிஸ்தவனாய் இருந்து ஆலயப் பணிகளில் பல உதவிகளை ஆற்றி சமய மேம்பாட்டிற்காகவும் அதனோடு இணைந்த நவாலியில் உள்ள சென்பீற்றர்ஸ் சன சமூக நிலையத்தில் 2003-2007ஆம் ஆண்டுவரை செயலாளராக பதவி வகித்ததோடு நவாலிப் பிரதேசத்தில் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கத்திலும் யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலும் வலிகாமம் தென்மேற்கு ஊழியர் நலன்புரி சங்கத்திலும் இணைந்து" ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற மணிவாக்கிற்கு அமையப் பணி செய்து வருதல் குறிப்பிடத்தக்கது.

இவரது தந்தையார் விசக்கடி வைத்தியத் துறைக்கு வழங்கிய சிறப்பான பங்களிப்பை மதித்து எமது சமாசமும் நிதியமும் இணைந்து "சித்த மருத்துவஜோதி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

"சமூகப்பற்றாளர்" திரு. யோசப் பிரான்சிஸ் சேவியர்



ஹொறவப்பொத்தானையூரில் சவரிமுத்துயோசப், யோசப் அருளம்மாவுக்கும் 1955 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 29ஆம் திகதி யோசப்பிரான்சிஸ் சேவியர் மகனாகப் பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை 1960 ஆம் ஆண்டு திருகோணமலையில் உள்ள மேற்கு தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பித்து 1972 ஆம் ஆண்டு வரையும் கற்று க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றார் இவர் தனது பாடசாலைப் பருவத்தில் கலைமன்றம் சாரணர் அமைப்புக்களில் ஈடுபாடு கொண்டு செயற்பட்டார்.

இவர் 1982ம் ஆண்டு முதல் ஆவணி மாதம் 20ம் திகதி மரியகொறற்றி என்பவரைத் திருமணம் செய்து தனது இல்லற வாழ்க்கையை ஆரம்பித்து ஹரல்டினா என்ற புத்திரியையும் டியோனிஸ்கூரே, அஸ்ரோனிஸ் என்ற இரு புதல்வர்களையும் பெற்று சிறந்த கல்வியூட்டி பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக உழைத்து வருகின்றார்.

1988ம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சுகாதார பரிசோதகராக கடமையாற்றி வருகின்றார். இன்று தனது தொழிலில் பதவி உயர்வு பெற்று சேவையாற்றி வருதல் குறிப்பிடத்தக்கது அத்தோடு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கூட்டுறவு நலவிருத்தி சங்க அங்கத்தவராக 17 வருடமும் தலைவராக 1 வருடமும் ஸ்ரீலங்கா ஜனலஜய தொழில் சங்க அங்கத்தவராக 15 வருடமும் ஆலோசகராக 3 வருடமும் வேவையாற்றி 2010 ஆம் ஆண்டு 14 வருடங்கள் சத்திரசிகிச்சை அர்ப்பணிப்பு செயற்பாடுகளுக்காக வைத்திய நிபுணர்களிடமிருந்து விருது பெற்றுள்ளார்.

இவர் சமய மேம்பாட்டுப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திவரும் ஓர் சேவை யாளனாவார். ஆன்மீகம் சார்ந்த பிறரன்பு பணிக்காக திருகோணமலை லூர்து மாதா ஆலய செயலாளராக சிறுவயதில் இருந்து சேவையாற்றி தற்போது மானிப்பாயில் உள்ள புனித அன்னையார்ஆலயம், புனித வின்சண்டி போல் சபை செயலாளராகவும் இருந்து வருகின்றார்.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் சேவையில் 1995 இல் இணைந்து 1988 - 2011 வரை மானிப்பாய் பிராந்திய பொருளாளராகவும் 2012 இல் சமாசப் பொருளாளராகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருதல் குறிப்பிடத்தக்கது. தானும் தன்குடும்பமும் சமயமும் தன் கிராமமும் என்ற வட்டாரங்களைக் கடந்து தேசம் பரந்து வாழும் எம் சமூக உறவுகளின் ஐக்கியத்திற்கும் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் சமத்துவத்திற்கும் மிகுந்த அர்ப்பணிப்போடு சேவையாற்றி வருகின்ற சிறந்த முன்னணித் தொண்டராவார்.

அதற்கப்பால் தமிழினத்திற்கும் தேசத்திற்கும் பொது நன்மையில் அக்கறை கொண்டு செயற்படுகின்றவர். சமூகப்பற்றுக்கு இவர் ஒரு முன்னுதாரணமாக ஒரு செயற்பாட்டாளராக இருந்து வருகின்றார். இவரது அன்பு மகள் ஹரோல்டினாவையும் எமது சமூக மேம்பாட்டுப் பணிகளில் இணைத்து அவரது ஆங்கிலப் புலமையை பெற்று எம் மாணவ சமூகம் பயன் பெறுவதற்கும் திரு சேவியர் அவர்கள் உந்து சக்தியாக இருந்து வருகின்றார். இவரைப் பின்பற்றி ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளைச் சமய, சமூகப் பணிகளுக்குப் பயன்பட வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

"மருத்துவஜோதி", வைத்தியகலாநிதி வைரமுத்து கமலநாதன்



இவர் வைரமுத்து தங்கம்மா தம்பதியினருக்கு அருந்தவப் புதல்வனாக 1956.12.17ஆம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை யா/இந்துக் கல்லூரியிலும் கற்றார். க.பொ.த உயர் தரக் கல்வியில் உயிரியல் துறையில் 1973-1975 வரை கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்குத் தெரிவானார்.தொடர்ந்து 1976-1981 வரை மருத்துவத்துறைக்கான கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்து 1981இல் M.B.B.S பட்டதாரியாகப் பரிணமித்தார்.

மருத்துவத்துறையில் பட்டம் பெற்றதைத் தொடர்ந்து யாழ் அரசினர் வைத்தியசாலையில் வைத்திய கலாநிதியாகக் கடமையாற்றினார். பின்னர் சத்திரசிகிச்சைப் பிரிவில் Senior House Officer ஆகக் கடமையாற்றினார். 1983இல் ஏற்பட்ட மோதல்களினால் ஏற்பட்ட மன அழுத்தங்களால் புலம் பெயர்ந்து ஐக்கிய இராச்சியம் சென்றார்.

இவர் உரும்பிராயைச் சேர்ந்த மாலினியைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு சுபாங்கி, சாரு என்ற இரு புதல்விகள் உள்ளனர். மூத்த மகள் சுபாங்கி மருத்துவத்துறையில் கல்வி கற்று வருகிறார். இவரது துணைவியார் வைத்திய தாதியராக கடமையாற்றுகின்றார். இவர் ஐக்கிய இராச்சியத்தில் 1986இல் F.R.C.S சித்தி பெற்றார். இன்று Associate

Orthopedic Surgeon ஆக உயர் பதவி வகிக்கின்றார். இவர் சிறு வயதில் பல பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான போதும் தனது படிப்பை இடைநிறுத்த வேண்டிய சந்தர்ப்பங்களிலும் உயர் தொழிற் புலமை பெற்று உயர்நிலையில் உள்ளமை எமது சமூகத்தில் கல்வியின் விடிவை நோக்கி முன்னேறுபவர்களுக்கு ஒரு பாடமாகும்.

இவர் மனிதநேயம் படைத்த ஒரு உத்தமராவார். இவர் தனது குடும்பத்தின் மேம்பாட்டிற்காகவும், உறவினரின் மேம்பாட்டிற்காகவும், சமூக உறவினரின் மேம்பாட்டிற்காகவும் பெரிதும் உதவி வருகிறார். வயோதிப நிலையங்கள், அனாதைப் பிள்ளைகளின் இல்லங்கள், பல்வேறு சமூக நிறுவனங்களிற்கு நன்கொடை வழங்கி வந்துள்ளார். சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தைச் சேர்ந்த நலிவுற்ற மாணவர்களுக்கு நன்கொடை வழங்கி வந்துள்ளார். சமாசத்தின் வன்னி மாவட்ட அவசர உதவிப் பங்களிப்புக்கள் செய்துள்ளார். இவரது சேவை தொடர்ந்தும் சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்திற்கும் புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியத்திற்கும் கிடைத்து வருகின்றது.

இவர் மனித நேயப்பற்றோடும், ஆதரவற்றவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும், கல்வி மேம்பாட்டிற்கும் ஆற்றி வருகின்ற சேவைகளை நாம் ஒவ்வொருவரும் காருண்ய உணர்வோடு உணர்ந்து செயற்பட வேண்டிய தருணம் இது. வன்னிப் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர் சமூகத்திற்கு வருடாந்தம் 3 இலட்சம் வீதம் 10 ஆண்டு காலத்திற்கு நிதி ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை வகுத்து அதன் தலைவராக இருந்து இத் திட்டத்தை சமாசத்தினதும், நிதியத்தினதும் அனுசரணையுடன் செயற்படுத்தி வருகின்றார். காலம் சென்ற தனது தந்தையாரின் நினைவாகவும் அவரின் ஆத்மாவுக்கு புண்ணியம் சேர்க்கும் நோக்கோடும் மகப்பேற்று ஆதார நிதி உதவித் திட்டத்தையும் மரணச்சடங்குச் செலவுகளுக்கான ஆதார உதவித் திட்டத்தையும் குறிப்பாக வன்னி மாவட்டத்தில் இவர் தனது சொந்தப் பணத்தில் அமுல்படுத்தி வருகின்றார். சமாசத்தின் முகாமைக் கட்டமைப்பில் முக்கிய பங்காளியாக இணைந்து அதன் வளர்ச்சிக்கு முன்னணித் தலைவராக செயற்பட வேண்டும் என நாம் விடுத்த அழைப்பை ஏற்று நாடு பரந்த எமது சமூகப் பணிக்கு அவருடைய கல்விப் புலமை தொழிற்கல்விப்புலமை, தொழிற்புலமை தலைமைத்துவப்புலமை அனைத்திற்கும் மேலாக அவரது கருணையுள்ளம் என்பவற்றுடன் இச்சேவையை தொடர்ந்தும் செய்வாரென எதிர்பார்க்கின்றோம். இவரது ஏற்றமிகு மருத்துவப் பணிகளைப் பாராட்டி 18.07.2010 நடைபெற்ற சமூகஎழுச்சி இயக்கத்தினதும், சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசத்தினதும், புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியத்தினதும் கூட்டு வருடாந்த விழாவில் "மருத்துவ கலாஜோதி" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

சமூகப்பற்றாளர் ச.அன்ரன் இராசநாயகம் (கூடலூர் ச.அ.இராசநாயகம்)

இவர் தீவுப் பகுதியைச் சேர்ந்தச் சின்னமடு சரவணை (இப்பொழுது புளியங்கூடல்) என்னும் மிகவும் பின் தள்ளப்பட்ட குக் கிராமத்தில் திரு.சந்தியாப்பிள்ளை - திரேசம்மா ஆகியோருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை சின்னமடு றோ.க.த.க. பாடசாலையில் பயின்று மேற்கல்வியை வேலணை ம.ம. வித்தியாலயத்தில் S.S.C வரை கல்வி கற்றார். தனது மாணவப் பருவத்திலேயே சமூகப் பணிகளிலும், ஓவியம், கலைத் துறையிலும் தனது திறமையை வெளிப்படுத்தி வந்த இவருக்கு ச.மு.க. சமாசத்தின் தோற்றம், தான் சார்ந்த சமூகத்திற்கும் ஏனையோருக்கும் பொதுச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆசைக்கும், இலைமறை காயாக இருந்த அவரது திறமைகளை வெளிக்கொணரவும் நல்ல வாய்ப்பாகவும், ஒரு களமாகவும் அமைந்துவிட்டது.



ஏற்கனவே தான் ஆரம்பக் கல்வியைப் பெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக இருந்து தனது பொதுச் சேவையினை ஆரம்பித்த இவர் 1981இல் சமாச உறுப்பினராக இணைந்து தீவக அமைப்பாளராக செயற்பட்டு செல்வச் சன்னதியில் நடைபெற்ற மாபெரும் சமாச அங்குரார்ப்பண மகாநாட்டிற்கு எங்கும் நெற்கனி போன்று சிதறிக் கிடந்த சமூக உறுப்பினர்களை ஒன்று கூடலுக்கு அழைத்தபோது தனது அயராத உழைப்பினால் தரைப் போக்குவரத்து இல்லாது கடலால் சூழப்பட்ட 8 தீவுகளிலிருந்தும் எதுவித நவீன தொடர்பாடல் அற்ற நிலையிலும் தனது சொந்தப் பணத்தை செலவழித்து, தனது தீவக நண்பர்கள் ஜேசு டெனிஸ்ரன், திலீபன், இதயநாதன், அன்ரனித்தாஸ், வின்சன், ஞானப்பிரகாசம் (அமரர்) ஆகியோரது ஒத்துழைப்புடன் கிராமம், கிராமமாக எழுச்சிக் கூட்டங்களை நடாத்தி தனது சிறந்த பேச்சாற்றலால் சமாச கொள்கைகளையும், ஆறு அம்சத் திட்டத்தையும் விளக்கி உறுப்பினர்களை எழுச்சி பெறச் செய்ததோடு தீவகத்தில் இருந்து இரண்டு மினி பஸ்களில் உறுப்பினர்களை அழைத்து வந்து இருந்தார்.

தொடர்ந்து 8 கிராமங்களையும் உள்ளடக்கி ''இளங்கதிர் சமூக முன்னேற்றக் கழகம்'' ஒன்றை ஆரம்பித்து அதன் தலைவராகவும் செயலாளராகவும் பணியாற்றி கல்வி, கலை, சமூக எழுச்சியை ஏற்படுத்தியதோடு சமாச கூட்டங்கள், விழாக்கள், போட்டிகள் என்பவற்றில் உறுப்பினர்களை பங்குபற்ற வைத்ததோடு தீவகத்தை சார்ந்த 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் O/L, A/L, பல்கலைக் கழக மாணவர்கள், சமாச கௌரவிப்பையும், கொடுப்பனவுகளையும் பெறவும், விதவைப் பெண்கள் பலர் கொடுப்பனவு பெறவும் வழி அமைத்துக் கொடுத்தார்.

சமாச 6 அம்ச திட்டத்தில் முக்கிய அம்சமான குடிமைத் தொழிலை ஒழிப்பு நடவடிக்கையினை பகிரங்க சுவரொட்டிகள் வெளியிட்டு, அத்தொழிலை நிறுத்தினார். மேலும், மாபெரும் கலை விழா ஒன்றினை சமாச உயர் தலைவர்களையும், தீவக சமூக உறுப்பினர்களையும் ஒன்று கூட்டி, சரவணையில் ஆறு ஆடி உயர மேடை அமைத்து சகலரும் வியக்கும் வண்ணம் நாடகங்கள், மல்லாகம் நடராசாவின் உடற் பயிற்சி சாகசம் என பல்கலை நிகழ்வுகளை அரங்கேற்றினார்.

தொடர்ந்தும் சமாசத்திற்கு தனது பங்களிப்பை வழங்கி வருவதுடன் எழுத்துத் துறையிலும் தடம் பதித்து சிறு கதை, கவிதை என்பவற்றில் தமது முத்திரையை பதித்து வருகின்றார். இவரது ஆக்கங்கள் பல பத்திரிகைகள் மாத இதழ்களில் வெளி வருகின்றன. இவர் ஒரு அறிவிப்பாளரும் கூட. இவருடைய சமூகப் பணிக்கும், பேச்சாற்றலுக்கும், சமாசம் வழங்கிய 'சமூகப் பற்றாளர்' என்னும் விருதும், சமாசம் நடாத்திய பேச்சுப் போட்டி ஒன்றில் இரண்டாம் இடத்தைப் பெற்று பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களிடம் பரிசு பெற்றமையும் நல்ல சான்றுகளாகும்.

இவை தவிர தனது சமூகம் சார்ந்த தொழிற் சங்கம், தொழிற் சங்க சமாசம் போன்றவற்றிலும் தலைவர், செயலாளர் பதவிகளை வகித்து சமூகத்திற்கு அளப்பரிய சேவைகளை வழங்கி இருக்கின்றார். மொத்தமாக முப்பது ஆண்டுகளாக தனது பொதுப் பணிச் சேவையை இவரது துணைவியார் பிள்ளைகளின் பூரண ஆதரவோடு இன்றும் சமாசத்திற்கும், சமூகத்திற்கும் வழங்கி வருகின்றார். இவரது சேவை இன்னும் எமக்கு தேவை என வாழ்த்துவதோடு, இவர் நீடுழி வாழவும் பிரார்த்திக்கின்றோம்.

சான்றோர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மதியுரை அறிஞர்கள்



பேராசிரியர் சுப்பிரமணியம் மோகனதாஸ்
முன்னாள் துணைவேந்தர்-யாழ்.பல்கலைக் கழகம்
2010




உயர்திரு. உடுவை சி.தில்லைநடராஜா
முன்னாள் மேலதிகச் செயலாளர் - கல்வி அமைச்சு
2010



பேராசிரியர் சோ.சந்திரசேகரம்
முன்னாள் கல்விப்பீடாதிபதி கொழும்பு பல்கலைக்கழகம்
2013




பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா
முன்னாள் கல்விப்பீடாதிபதி யாழ் பல்கலைக்கழகம்
2013



கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை
முன்னாள் கல்லூரி அதிபர்
2013

அகவை 80ஐ வென்ற பண்பாளர் விருது பெற்றவர்கள்



சமூகஜோதி
நாகமுத்து தங்கவடிவேல்
சங்கத்தானை 2013



திரு. தாமு ஐயம்பிள்ளை
தம்பாலை 2013



திரு. சின்னத்தம்பி பரமு
மீசாலை 2013



திரு. தில்லையர் வேலாயுதம்
அளவெட்டி 2013



திரு. முருகேசு நடராசா
நல்லூர் 2013

சமூகஜோதி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட முன்னணித் தலைவர்கள்




திரு. எஸ். வி. தம்பையா
அச்செழு 2002




திரு. நாகமுத்து தங்கவடிவேல்
சங்கத்தானை 2007



திரு. கதிரேசு நவரத்தினம்
அரியாலை 2007



திரு. சபாபதி ஆனந்தன்
அராலி 2009



திரு. கந்தையா மாயாதிரவியம்
நாச்சிமார் கோவிலடி 2010



திரு. கதிரேசு. சுப்பிரமணியம்
இளவாலை 2010




திரு. சின்னத்தம்பி செல்லத்துரை
மாவிட்டபுரம் 2010



திரு. சீனிவாசகம் செல்லத்துரை
உரும்பிராய் 2012



திரு. கணபதி மயில்வாகனம்
மாவிட்டபுரம் 2012



திரு. கந்தையா நடேசன்
நல்லூர் 2012




திரு. சின்னத்தம்பி தம்பிராசா
காங்கேசன்துறை 2013



திரு. வேலுப்பிள்ளை சபாபதி சின்னையா
கோண்டாவில் 2013

துறைசார் வித்தகர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட தலைவர்கள்




இலக்கியக் கலாமாமணி
திரு. டொமினிக் ஜீவா
யாழ்ப்பாணம் 2010



மருத்துவக் கலா ஜோதி
Dr. வைரமுத்து கமலநாதன்
லண்டன் 2010




யோகக் கலா ஜோதி
திரு. வைரவி சண்முகம்
சங்கானை 2010



சித்தமருத்துவ ஜோதி
திரு. சின்னத்தம்பி ஜேசுதாசன்
நவாலி 2010



ஆன்மீகச் செல்வன்
திரு. இராசரத்தினம் சாந்தகுமார்
அராலி 2010



வித்தியா ஜோதி
திரு. சீனிவாசகம் பத்மநாதன்
கனடா 2012




மேலாண்மை வித்தகர்
திரு. டொமினிக் திலீபன்
மட்டக்குளி 2012



கமநல வித்தகர்
திரு. கணபதி வீரசிங்கம்
சங்கானை 2012



கவிமணி
திரு. தம்பிராசா பரமலிங்கம்
நாச்சிமார் கோவிலடி 2012



ஆற்றுகை வித்தகர்
திரு.சந்தியாபோசை அந்தோனிப்பிள்ளை
முள்ளியவளை 2012



வித்தியா திலகம்
திரு. கி கணேஸ்
கனடா 2013




வைத்திய கலாஜோதி
Dr. திருமதி உமா ஜெகதாசன்
லண்டன் 2013



புகைப்படக் கலாஜோதி
திரு. செல்வரத்தினம் சந்திரகுமார்
மானிப்பாய் 2013



கணனி வித்தக இளவல்
திரு. இராசதுரை சுகுமார்
